ஸ்ரீ

ஸ்ரீராமஜெயம்.

ஸ்ரீராமாயணவசனமாகிய

சப்தகாண்டங்களும், உத்தரகாண்டமும்

பீமகவிராயரவர்களாலியற்றிய

ஸ்ரீராமர் அஸ்வமேதயாகம்.

திரிசிரபுரம்-ம-௱-௱-ஸ்ரீ, தமிழ்த்தலைமைப்புலவராகிய

வி. கோவிந்தப்பிள்ளையவர்களால்

பொழிப்புரையாகச்செய்த

மகாவிந்தமாகிய உத்தரகாண்டமும்

அடங்கியிருக்கின்றன.

—0—

இஃது.

சென்னை.

சக்கரவர்த்தி அண்டுகம்பெனியாரால்

சக்கிரவர்த்தி அச்சுக்கூடத்தில்

பதிப்பிக்கப்பட்டது.

—

1914.

நெ. 13, நம்புலைபர் தெருவு—மதராஸ்.

சுந்தரகணேசர் துணை.

ஸ்ரீராமர் அஸ்வமேத அலங்கார அம்மானை.

அன்பர்காள் !

உலகில் வசித்துலாவும் மாந்தர்கள் பகவத் பக்தியானந்தமா யிருப்பதற்குத் தகுதியானவை ராமாயணமே சிறந்ததென்று பாகவதரனைவரும் புகழ்ந்துரைப்பதை சகலருங் கவனித்தவிஷயமேயென்றும், வசனரூபமா யிருந்தால் பெரியபுஸ்தகமா யிருப்பதால், வாசிப்பதற்கு சிரமமென்று கொஞ்சம் சித்து நிறுத்திவிடுவதும், மற்றவை கவனிப்பதற்கியலாமல் மறந்து விடுவதுமா யிருக்கிறார்கள். அவ்வ சிரேஷ்டமாகிய இராமாயணத்தை அலங்கார அம்மானையாக எழுதி அச்சிடவேணுமென்று அநேகர் கேட்டுக்கொண்ட விருப்பத்தின்படியே ஸ்ரீமத் நாராயணர் தேவர்கள் துயர்தீர்ப்பதற்கு இராமராகப்பிறந்து இராக்ஷதரை ஜெயித்து அஸ்வமேதயாகம் முடித்து வைகுந்தத்திற் சென்றவரையிலும் அலங்கார அம்மானையாக இலக்கிய வழுவின்றி வாசிப்பதற்கும் கேட்பதற்கும் இனிமையாக அலங்கார அம்மானையாக எழுதி அச்சிட்டிருக்கின்றோம். இதனை ஸ்திரீகளும் மனமகிழ்வாய் வாசிப்பதற்கிசைந்தவையாயிருக்கிறது. ஒவ்வொருவரும் வாங்கி வாசிப்பதற்காகவே மிகவும் குறைந்த விலையாய் விற்பனை செய்கிறோம், தேவையானவர்கள் அடியிற் குறிப்பித்த எமது விலாசத்திற் கெழுதி பெற்றுக்கொள்ளலாம்.

இதன் விலை அணா 6.

கமலநாதன்.

இந்நாவல் துப்பறியும் நாவல்களில் முதல்தரமானவைகளில் ஒன்று. இதில் இரத்தினமாலையைக் களவாடிய கள்ளரே, கோழித்திருடி கூடக்குலாவுவதுபோல் கள்ளரைக்கண்டு பிடிப்பதாய்க் கூறித் தங்களுக்குத் தக்க ஒரு துப்பறிபவனையும் அமர்த்திவைத்துக் களவுபோனவழியை யடியோடு மறைக்க முயல்வதோடு கதா நாயகனாகிய கமலநாதன்மேல் இக்குற்றத்தையும், தாங்கள் செய்த ஒரு குற்றத்தையும் சுமத்த சந்தர்ப்பச் சாக்ஷிய மனைத்தும் சரியாயுண்டாக்கி விடுவார்கள். கமலநாதன் தப்புவது அரிதாய் விடுகிறது. இப்படிப்பட்ட சமயத்தில் உண்மையான துப்பறிபவன் ஒருவன்தெய்வகெதியாய்த்தோன்றியாவற்றையும் கண்டுபிடிப்பது மிகவும் வியப்பாயிருக்கும். உண்மையைக்கண்டறிய அவன் ஏககாலத்தில் இரண்டு மூன்று பேரைப்போல் நடிப்பதும், அவன் காட்டும் சாமர்த்தியமும், தந்திரமும், வீரதீரமும் வாசிப்பவர்கள் மனதிற்கு மிக்க வியப்பையும் ஆனந்தத்தையும் தருவதோடு புத்தியை அதிகமாய் விசாலப்படுத்துமென்பது இந்த நாவலை வாசிப்போர்க்கு எளிதில் விளங்கும்.

இதில் இன்னொரு அதிசயமிருக்கிறது. இரத்னமாலை களவுபோனது உண்மையே ஆயினும், அது சொந்தக்காரின் கைவசத்தை விட்டு வெளியிற் செல்லவேயில்லை. இந்தஅதிசயமான இரகசியத்தைத் துப்பறிபவன் கண்டுபிடிப்பது மிக்க அதிசயம்—இந்த மர்மம் நாவலை வாசித்தால்தான் தெரியும். இந்த நாவல் ஆதிமுதல் முடிவுவரையில் மனதை முழுதும் கவர்ந்து கொள்ளக்கூடியது.

இது ஸ்ரீமான் ஆரணி-குப்புசாமி முதலியார் எழுதிய முதல்தரமான துப்பறியும் நாவல்தனிலொன்று. இது நல்ல கடிதத்தில் பிழையற அச்சிடப்பட்டிருக்கிறது.

இதன் விலை ரூபா 1—0—0. தபால் சார்ஜ் பிரத்தியேகம்.

நித்தியானந்தன்.

இது ஓர் இனிய துப்பறியும் நாவல் சூது, தந்திரம், துணிகரம், நாகரீகம் ஆகிய குணங்கள் நிறைந்த ஒரு துஷ்டன் தனக்குத்தக்க ஒருவனைத் துணையாய்க்கொண்டு ஒரு கன்னிகையை யவளுடைய ஆஸ்திக்காகக் களவாடிக்கொண்டுபோய் சிறைவைத்து விட்டு அவள் தந்தையாகிய செல்வவந்தனிடம் பணம்பறிக்க முயல்வது மிக்க வியப்பை யுண்டாக்கும். அதைக்கண்டு பிடித்து அத்துஷ்டரைத்தண்டனை யடையும்படி செய்யத் துப்பறியும் அழகானந்தன் என்ற வாலிபன் உபயோகிக்கும் தந்திரம் பொருந்திய வீர தீர சாமர்த்தியங்கள் மிக்க வியப்பையும் சந்தோஷத்தையும் உண்டாக்கும். இதைவாசிக்கத்துடங்கினால் நூல் முடியுமட்டும் புஸ்தகத்தைக் கீழே வைக்க மனம் வராது. இது யோசனை அறிவு இவற்றை விசாலமாக்கும் நாவல்களிலொன்று.

இதன்விலை அணா 5.

பெரிய கேட்லாக் வேண்டியவர்கள் அடியிற்கண்ட கம்பெனியாருக்கு எழுதி பெற்றுக்கொள்ளலாம்.

சக்கரவர்த்தி அண்டு கம்பெனி,
போஸ்டு பாக்ஸ் நெ. 198. மதராஸ்

ஸ்ரீ

ஸ்ரீராமஜெயம்.



ஸ்ரீராமரயணவசனம்.

பாலகாண்டம்.

நகரச்சிறப்பு.

நெடிய கடல்சூழ்ந்த இவ்வுலகத்தின் கண் மிகவும்சிறப்போடுகூடிய கோசலநாட்டையுடைய அயோத்தியாபுரியானது பூமிதேவிக்குத் திருமுக மண்டலம்போலவும், திலதம்போலவும், கண்போலவும், திருமங்கலம்போலவும், மார்பி லசையாநின்ற முத்தாரம்போலவும், மகாலட்சுமி வாசமாயிருக்கும் பொற்றாமரைக் கமலம்போலவும், உலகத்துக்கெல்லா மேலாகிய உலகம்போலவும், ஊழிகாலப் பிரளயத்தில் சகல சீவகோடிகளும்வந்து சேர்ந்திருக்கிறதற்கு ஒருவீடுபோலவும் பிரகாசித்துக்கொண்டு மிகுந்த உயர்ச்சியும் விஸ்தீரணம்பொருந்திய கோட்டையும் பாதாளமட்டும் ஆழ்ந்திருக்கிற அகழியும், அனேக மாடமாளிகை கூடகோபுரங்களுடனே கோடிசூரியப் பிரகாசம்போலே விளங்கிக்கொண்டு பலபல விதங்களான வஸ்துக்களும் நிறைந்திருக்கிற கடைவீதிகளும் சகலவேத சாஸ்திர பண்டிதரான பிராமணர்வீதிகளும் வீராதிவீரான ராஜவீதிகளும், குபேரனுக்குச் சமதையான வைசியவீதிகளும், அனேக சாம்பிராச்சியங்க ளுண்டான சூத்திர வீதிகளும், வித்தையாரம்ப ஸ்தானங்களும், ஆனைகளிருக்கிற கூடங்களும், குதிரைத்திரள்கள் கட்டியிருக்கிற பந்திகளும், நாடகசாலைகளினு முதலான சம்பிரம சிங்காரங்கள்நிறைந்து நாலுவேதங்கள்போல நாலுவாயிலுண்டாய் பிரகாசித்திருக்கும் அந்ததேவேந்திரனுடைய அமராவதியும், குபேரனுடைய அளகாபுரியும் இந்த அயோத்திமா நகரத்துக்குச் சமானமாகமாட்டாது என்றால் அந்தப்பட்டணத்துக்கு நிகரான பட்டணம் வேறே எங்கேயிருக்கின்றது உப்பரிகைகள் தோற்றும் அநேக வர்னமுள்ள கொடிகளும் பூரணக்கும்பங்களும், மகர தோரணங்களும் நிறைந்திருக்கும் வீடுகள்தோறும் மங்கள கீதங்களும் பேரிகை முதலான மேளவாத்தியங்களும், சின்னங்கள்பூரிகாள முதலான ஆர்ப்பு மிகுத்திருக்கும் பராபரவஸ்துவான ஸ்ரீமந்நாராயணமூர்த்தி துஷ்டநிக்கிரக சிஷ்டபரிபாலனத்தின்பொருட்டு ஸ்ரீராமர் மூர்த்தியாகவும், சீதாபிராட்டியாராகவும், திருவவதாரஞ் செய்தருளி மகாலட்சுமியுடன் அனேககாலங் கூடியிருந்து இராச்சிய பாரம் பண்ணிக்கொண்டிருந்த ஸ்தலம் இதுவானால் அதற்குச் சிங்காரமும் பெருமையும் மகிமையும் பிரமதேவனாலேயும் சொல்லக்கூடாத பிரதாபங்கொண்டிருக்கிற பட்டணத்தினுடைய சிங்காரத்தை புத்தியீனமான அடியேன் எவ்வளவு சொல்லப் போகிறேன். சுவர்க்கமத்திய பாதாளமென்னும் மூன்று லோகத்திலேயும் சமானமில்லாத சுந்தரத்தையுடைய நகரமாகவிருந்தது மேலும் முப்பத்து முக்கோடி தேவர்களும் நாற்பத்தெண்ணாயிரம் ரிஷிகளும் நித்தியஸ்நானஞ்செய்து தத்துவக்கியானத்தைப் பெறக்கருதவும் இவ்வுலகத்தாருக்கும் பெருமையும் அருமையும் நிறைந்த தாயைப்போ லிரட்சிக்குந்தன்மையைச் சகலவளங்களுடனுதவியும் பாபவிமோசன பவுத்திரமுடன் பிரகாசிக்குஞ்சரயுமாநதிவளைந்த கோசலதேசஞ்சூழ்ந்த அயோத்திமாநகரம்.

தசரதமகாராஜன் அரசியல்.

அந்த நகரத்தைச் சூரியன்முதல் பாம்பரையாய் ராச்சியபாரஞ்செய்துவந்த அரசருடைய வம்சத்தில் அயனென்னு மிராசனுடைய புத்திரன் இராஜாதிராசன் அவன் தன்செங்கோலினுடையபிரதாபம் ஈரேழுலகமும் சொல்லும்படியான கீர்த்தியுடைய தன்தருமரூபன் உலகத்திலுண்டான உயிர்களை தன்னுயிர்போல் பாதுகாக்கப்பட்டவன் புலியும் பசுவும் ஒருதுறையில் நீருருந்தவும் சிங்கமும் யானையும் கூடிவிளையாடவும், பூனையும் எலியும் ஒருமித்துலாவவும், மாதமும்மாரி பெய்யவும் முப்போகம் குடிகளிடத்தில் ஆறிலொரு கடமைகொண்டு மனுநீதி தவறாமல் செங்கோல் செலுத்தப்பட்ட மகானுபாவன் தசரதமகானுபாவன் தசரதமகாராஜாவென்னும் நாமதேயமுடையவன் தனது பத்தினிமார் மூவருடன் உத்தமமாய் உலகத்தை யாண்டுவருங்காலத்தில் வெற்றிமிகுந்த மன்னவனுக்குப்புத்திரனில்லாமையால் மெத்தவருத்தமுற்று ஆசாரியராகிய வசிஷ்டரை நோக்கியழுது அவர் பலரடியைத்தொழுது இரவிகுலம் பழுது படலாச்சே என்னொருவனுடன் போற்றுப்பேச்சே மலடனென்னும் போச்சே புத்திரப்பேருடையோர் மொழிய இழிவாச்சே என்னால் மகனில்லையென்றுசொல்லவும் மோக்ஷமில்லையென்ற வாக்கியத்தை வெல்லவும் தவம்பெறுப் பாவியானேனென்று வருந்துகையில்.

வசிஷ்ட மகாமுனியானவர் கியான திருஷ்டியினாலாராய்ந்து பிரம ருத்திராதிமுதலிய தேவர்கள் ராட்சதர்களுடைய துன்பத்தினால் சகிக்கமுடியாமல் மகாவிஷ்ணுவினுடன்சொல்ல அவர் அந்த இராட்சதரை நாமே சங்கரிக்கிறோம் நீங்க ளஞ்சவேண்டாம் பூலோகத்தில் அயோத்தியா புரியையாளும் தசரதமகாராசனுடைய பிள்ளையாக நாம்பிறப்போம் நீங்களெல்லோரும் வானரங்களாய்ப்பிறந்து அவ்விடம்வந்து சேருங்களென்று சொன்னதை தாமறிந்து சொல்லுகிறார்.

புத்திரகாமேட்டியாகஞ்செய்தல்.

கேளும் அரசனே இப்போது நீர் புத்திரகாமேட்டியாகஞ் செய்யவேண்டுமென்று கலைக்கோட்டு மகாரிஷியினால் மேற்படி யாகஞ்செய்தால் மகனைப் பெறலாமென்றுசொல்லிய வசிஷ்டர் வாய்மொழிப்படி யாகத்தைச்செய்து பூரணாகுதி கொடுக்குங் காலையில் ஒருபூதம்பொற்கிண்ணத்தில்பாற்சோறுகொண்டுவரக்கண்டு அதைவாங்கி அந்தபாயசத்தை சரிபாகமாகப்பகுந்து கௌசலைக்குப் பாதிகொடுத்து மற்ற பாதியை இரண்டாக்கி கைகேசிக்கொன்றும் மற்றபங்கையுமுதிர்ந்த சேஷத்தையும் சுமித்திரைக்குங் கொடுக்க அவர்கள் நமஸ்கரித்து வாங்கிப் புசித்துக் கர்ப்பவதிகளானார்கள்.

ஸ்ரீ ராமர் ஜெனனம்.

கௌசலை கர்ப்பத்தில் சித்திரைமாசத்தில் சுக்கிலபட்ச நவமிதிதியில் புனர்பூச நட்சத்திரத்தில் கற்கடகலக்கினத்தில் ஸ்ரீராமரும் கைகேசியினிடத்தில் பரதரும் சுமித்திரையினிடமாக இலட்சுமணர் சத்துருக்கருமாக சுபமுகூர்த்தத்தில்நான்குவேதங்களைப்போற் பிறந்த புத்திரரைக்கண்டு களித்து ஜாதகன்மமுதலிய சட்கருமங்களும் நடத்திச் சுக்கிலபட்ச சந்திரனைப்போல விர்த்தியடைந்து வளர்ந்து வருங்காலையில வசிஷ்ட மகாமுனியால் சகலசாஸ்திரங்களும் தனுர்வேதங்களும் ரதாரூடங்களும் யானையேற்றம் குதிரையேற்றம் முதலியவை கற்றுணர்ந்தும் சந்திசெய்தலும் கலகித்தலும் போர்க்குப்போதலும் போர்புரிகாலக் கெதிர்நோக்கலும் போதித்தலும் பலவான்களை யாசரித்தலும் முதலான சட்குணங்களும் விளங்கக்கண்டு தசரதமகாராசன் பரமானந்த முற்றிருக்குநாளையில் விசுவாமித்திரர்வந்து தசரதமகாராஜனைக்காண அவரெழுந்து நமஸ்கரிக்க கௌசிகர் இருகரத்தையுங்குவித்து இறப்பவர்போல எனக்கொருவரங் கொடுக்கவேண்டும் அஃதென்னெனில் இறைவனே என்னுடையயாகம் நிறைவேற என்னுடைய பிள்ளைகளில் நீலமேக சாமளவர்ணனாகிய ஸ்ரீராமனை அனுப்ப வேண்டுமென்று கேட்டார்.

அப்போ தசரதனானவன் உடல்பதறி உயிரை யெமன் கேட்கும்போது அவர்கள் அடையுந்துன்பம்போல் அயர்ந்து பூமியில் விழுந்து திருவடிகளிற்றொழுது சுவாமி? அறியாத குழந்தைதான் அவருடன் சண்டை செய்யுந் திறமை போதாது தனுர்வேத முதலிய மந்திரங்களிலும் சிறுதேர் கற்றுணர்ந்து யிருக்கிறான் தமது திருவடிக்கு அடிமையான் இருக்கும்போது என் சிறுவனால் ஆகத்தக்கதோ இராக்கதமாயையோ பெருஞ்சூது ஆதலின் நாயினேன் அவைகளை யழித்து நாசப்படுத்தி யாகத்தை நிறைவேற்றுவேன் இப்போதென்று சொன்னார். அதைக் கேட்ட விஸ்வாமித்திரன் மிகவுங் கோபித்து யெழுந்த தன்மையை சமீபத்தில் யிருந்த வசிஷ்டரானவர் அறிந்து அரசனைத் தேற்றி உன் குமாரனுக்கு இது நல்லகாலம் இவருடன் கூட்டி யனுப்புவதே இது நல்ல தருணம் இம் முனிவரால் சகல நன்மைக

ளும் ராமனடையவிருக்கிறார் இளையற்றகீர்த்தியு முமக்குண்டாகப்போகிறதென்று சொல்லிய வார்த்தையைத் தசரதன்கேட்டு கௌசிகரது பாதத்தைவணங்கி ஸ்ரீராமரையும் இலட்சுமணனையும் கையடை கொடுத்துக் காப்பதுன்கடனென்று விடுத்தார்.

ஸ்ரீராமரையும் இலட்சுமணனையுங் கௌசிகர்
அழைத்துக்கொண்டுபோகுதல்.

விசுவாமித்திரர் மகிழ்ந்து தசரதமகாராஜனைப் புகழ்ந்து பிள்ளைக ளிருவரையு மழைத்துக்கொண்டுபோய் இராட்சதமாயையும் அவர்கள் அக்கிரமத்தையுஞ்சொல்லி மந்திரார்த்தங்களு முபதேசித்து இருபக்கத்திலுங் காவல்வைத்து தனதுயாகத்தைச் செயளத்தனமுற்றிருந்தார்.

தாடகைவதை.

அந்தச்சமையத்தில் தாடகைவந்து மலைமாமுதலியவற்றுலெரிந்து யாகத்தையழிக்க அப்போதுராமரானவர் பெண்ணென்று நினைத்து நிதானிக்கஅதைக் கண்ட கௌசிகர் தருமசாஸ்திரஞ்சொல்ல ராமர்கேட்டு விண்ணின்றிழிய மேகம்போற்றுன்னென்று பூமியில் விழக்கணைதொடுத்து தாடகையைக் கொன்றார் உடனே அவர் பிள்ளைகள் சுவாகு மாரீச னிருவருஞ் சேனையுடன் வந்து வளைத்துக்கொண்டு கொடுமைசெய்தார்கள் அவர்கள் பேரிலுந் திவ்வியாஸ்திரங்களைத் தொடுத்து சுவாகுவையுங்கொன்று மாரீசனுடைய தலைக்குக் கணையைப்பிடித்தார் அதை மாரீசன் கண்டு மயங்கி மறைந்து கடலிலொளித்தான் உடனே விசுவாமித்திரர் யாகத்தை நிறைவேற்றினார்.

இவர்களிருவரையும் அழைத்துக்கொண்டு போம்போது வழியில் கருங்கல்லாய்க்கிடந்த உருவின்பேரில் இராமருடைய பாதத்தூள் பட்டமாத்திரத்தில் பெண்ணாய் வரக்கண்டு ஸ்ரீராமரானவர் இதென்னவென்று வினவ விசுவாமித்திரர் சொல்லுகிறார் கேளும் ஸ்ரீராமா இவ்வகலிகைகௌதமர் பாரியாள் இவளை இந்திரன்சேர ஆயிரங்கண்ணுற்றான் இவள் கல்லானாளென்று சொல்லக்கேட்டுக் கருணைகூர்ந்து அகலிகையை யழைத்துக்கொண்டுபோய் கௌதமரிடத்திலொப்பிவைத்தார்.

மிதுலாபுரி பிரவேசம்.

பின்புமிதுலாபுரிக்குச்சென்று சபாமண்டபத்திலிருந்த வேந்தர் யாவருங்களிக்க ஸ்ரீராமருடையகுலமுறைகளெல்லாஞ் சொல்லி இவரது கரத்தின் திரத்தைத் தாடகை சுவாகுபேரிற் கண்டேன் காலின் திரத்தைக் கௌதமர் பாரியாளாகிய அகலிகை யளவிற் கண்டேன் இன்று உன்னுடைய வில்லைக்காணவும் வந்தேனென்று விசுவாமித்திரர் சொன்னார் அந்தச் சொல்லைச் சகலருங்கேட்டு சந்தோஷமுற்றிருக்கச் சனகமகாராஜன் சொல்லுகிறான் அப்படியே நேரிமொகில் என்னுடைய தவப்பயன் என்று மகிழ்ந்து அறுபதினாயிரம் வில்வீரர்கள் வில்லை யெடுப்பித்துக்கொண்டுவந்து சபையிற் சேர்க்கவும் ஸ்ரீராமன் முகத்தை விசுவாமித்திரர் நாடவும் அப்போது ஸ்ரீராமரானவரெழுந்து வில்லையெடுத்து மளமளவென்று வளைத்து படீலென்று இரண்டு துண்டாய் ஒடித்துவிட்டார் அந்தவில்லின் ஓசையானது அண்டகடாகமு மதிர்ந்தது.

மிதுலாபுரிபிரவேசம்-முற்றிற்று.



சீதாகல்யாணம்.

அப்போது மங்களஸ்திரீகள் சோபனம் பாடவும் பாங்கிமார்கள் சீதையம்மனிடத்தோடவும் சீதாபிராட்டியாருக்கும் ஸ்ரீராமருக்கும் கல்யாணங் கைகூடவும் தசரதன் முதல் தாய்மார்களும்வந்து கொண்டாடவும் சகல ஜெனங்களும் தம்பிமார்களும் கலியாணச்சடங்கை நிறைவேற்றி விவாகம் செய்துகொண்டு சனகமகாராசனிடத்தில் விடைபெற்றுச் சதுரங்க சேனைகள்சூழ அயோத்தியை நோக்கி சகல ஆடம்பரங்களுடன் புறப்பட்டார்.

பரசுராமர் பங்கம்.

இப்படிச் சகல சம்பிரமங்களுடன் வரும்போது வழியில் பரசுராமர்வந்துதடுத்து சிற்சில வார்த்தைகளைப் பேசும்பொழுது ராமர் பயப்படாம லெதிர்நின்று அவரை ஓட்டிவிட்டு அவருடையவில்லை வருணனிடத்தி லொப்பிவைத்து அயோத்தியாபுரிவந்து நமஸ்கரிக்க எல்லோருக்கும் விஸ்வாமித்திரர் ஆசிர்வதித்து தனதிருப்பிடம் போய்விட்டார் சகலரும் அயோத்தியாபுரியில் மிகுந்த சந்தோஷத்துடனிருந்தார்கள்.

பாலகாண்டம்-முற்றிற்று.



இரண்டாவது

அயோத்தியாகாண்டம்.

அயோத்திமாநகரத்தில் ஸ்ரீராமர் இலட்சுமணர் பரதர் சத்துருக்கருடனும் தந்தை தாய்மார் முதலிய யாவருடன் சுகமாக வாழ்ந்து வரும்போது மணவாளச் கோலமுடைய பரதனும் சத்துருக்கனும் பாட்டனாகிய கேகயனிடத்திற்குப் போயிருக்கப் பட்டணத்திலிராகவரும் லட்சுமணனுமிருக்குநாளையில் ஒருநாள் தசரதசக்கிரவர்த்தியானவர் வசிஷ்டர் மந்திரிமார் முதலிய பெரியோர்களைப் பார்த்துச் சொல்லுகிறார் இதுவரையிலும் நான் சுமந்திருந்த இந்தபூமிபாரத்தை எனது ஜேஷ்டகுமாரனாகிய ராமனிடத்தில் ஒப்பிவைத்து யான் காட்டுக்குப்போய்த் தவஞ்செய்யக் கருதுகிறேனென அதைக்கேட்ட பெரியோர்களெல்லாஞ் சந்தோஷித்து பிரமானந்தமுற்று நல்லகாரியமென்றார்கள் உடனே முகூர்த்தநாள் நேமித்து சகல சாமக்கிரியையும் புண்ணிய தீர்த்தங்களுஞ்சேகரிக்கச்செய்து நாடுகரங்களெல்லாம் அலங்கரிக்கும்படி பறையறைவித்துப் பட்டணமியாவும் புகழ்கொண்டாட மறுநாள்காலமே ராமருக்குப் பட்டாபிஷேகமென்று விசேஷப்படுத்தி அன்றிராத்திரி யாவரும் தங்கள் தங்களிடத்திற்குச் சென்றார்கள்.

கூனிகைகேசியைக்கலைத்தல்.

அரசனும் அரண்மனைக்குப் போனான் சபையில் நடந்த சமாச்சாரமெல்லாங் கேட்டிருந்தமந்தாரையானவள் கேகயன் பாவையாகிய கைகேசியினிடத்திற்குச்சென்று அம்மா என்ன சும்மா யிருக்கிறாயென்று விளம்பி உன்புருஷனாகியதசரதமகாராஜன் கௌசலையின் பேச்சைக்கேட்டு அவளுடைய மனங்கோணாமல் ராமனுக்குப் பட்டங்கட்ட நாளைக்கே நாள்நியமித்துக்கொண்டார் நீயேதுந்தெரியாமல் நித்திரை போகின்றாயே யென்று சொல்ல அதை கைகேசிகேட்டு புளகமுற்று தன்கழுத்திலிருந்த முத்தாரத்தை கூனிக்கு எனாமாகக் கொடுத்தாள் கூனியானவள் அதை வாங்காமல் கடுகடுத்துச் சொல்லுகிறாள்.

ஆஆ இதென்ன அனியாயம் ராமனுக்குப் பட்டமானாலுன்பிள்ளை பரதன் அவனுக்கு ஊழியனாகவும் கௌசலா தேவிக்குப் பணிப்பெண்ணாகவும் உன் மருமகள் சீதைக்கு வேலைசெய்யவும் உன்தகப்பன் இராமனுக்குப் பகுதிகட்டவும் உன்னுடைய மக்கள்வந்தால் கௌசலையை நீவணங்கி அன்ன வஸ்திர முதலியவைகள் வாங்கிக்கொடுக்கவும் தன்னைப் பணிவாரைத் தான்பணிந்தேத்தவும் உன்னை நம்பியிருந்த நானலைந்துவாடவும் எதொரு சுதந்திரமு முனக்கில்லாமல் எல்லாம் மூத்தபெண்சாதி வசத்தி லொப்பி வைத்துப் பிண்டமுந் துண்டமுங் கண்டதன்றி வேறொன்று மில்லையென்று அரசன் உன்னையடக்கிவிட்டானேஐயையோ நீபிறந்தசிரும் உன்பேரும் உன் தந்தையினாரும் உன் இச்சையின்படி நீயனுபவித்த செல்வமும்போய் கௌசலை வீட்டுத் தாதிக்குத் தாதியாய்ப் போகக் காலம் நேரிட்டதே சூரியன்முன் சந்திரன்போலும் சந்திரன்முன் மின்னிற்பதுபோலுமொத்த பிள்ளையை ஸ்ரீராமபிரானுக்கு நிகராய்ச் சொல்லத்தகாதே பரதனோ மெத்த அறியாதவன் கள்ளங்கபடு சூதுவாது வஞ்சமொன்றுமறியாதவன் உன்னைப்போற் களங்கமற்றவன் அதெப்படியெனில் கலியாணப்பிள்ளையும் பெண்ணும் வீட்டிற்குவந்து பெரியோரைப் பணிந்து ஆசீர்வசனம் பெறுவதற்கு முன்னமே கௌசலை யுரைத்த தலைக்கணை மந்திரத்தை மனதிலே வைத்துக்கொண்டு வஞ்சக நினைப்புடன் வழியிற்றானே பாட்டன் வீட்டிற்குப் போய்வாவென்று சூட்டினையுடைய இராஜன் அனுப்பிவிட்டுப் பட்டணத்தை இந்த இராமனுக்குக் கட்ட நினைத்தான் கெட்டநினைப்பை பார்த்தையா இனிபேசுவதென்பதுவார்த்தையா இன்னம்உன்னுடைய மனதுக்குத் தெரியவில்லையா எனக்கு மறுமொழி சொல்லவா அழகிய சிங்காரவனத்தில் ஸ்ரீராமனானவனிருக்கச் சுமித்திரையினுடையபிள்ளையாகிய இலட்சுமணனானவனுங் கூடயிருக்க உன்பிள்ளையான பரதன்

கால் பிடித்துக் கொண்டிருக்க நேரிட்ட காலத்தைக்
குறித்து நான் யென்னசெய்வேனென்று மார்பி லடித்
துக்கொண்டு வாய்விட்டழுதாள்.

இந்த வார்த்தையைக்கேட்ட கைகேசி மெத்தவு
ம் வியாகூலமுற்று மதிமயங்கி நீசொன்ன வசனங்கள்
யெல்லாம் உண்மையே நானென்னசெய்வேன் எனக்
கொருபாயஞ் சொல்லுவாயாகில் அந்தப்படி நடப்பே
னென்று கைகேசிசொல்ல அதைக்கேட்டு கூனி சொ
ல்லுகின்றுள். அம்மா பூர்வத்தில் தசரத மகாராசன்
உனக்கு இரண்டுவரங் கொடுத்திருக்கிறாரல்லவா அத
ற்கு இது நல்லசமயம் வாய்த்தது சொன்ன சொற்ப
டிபேச அரசனிடத்தில் முன்கொடுத்த வரம் யிரண்
டையுந் தரவேண்டுமென்று நீகேட்டு பரதன் நாடாள
ஒருவரமும் இராமன் பட்டமும்நீக்கிக் காடாள ஒரு
வரமும் பெற்றுக்கொள்ளுவாயாகில் நமக்கெதிர் ஒரு
வருமில்லை சகலசெல்வமும் நம்முடையதே யென்று
மந்தாரை சொன்னுள். அவள்புத்தியைக் கைகேசி கே
ட்டு தலை மயிர்களெல்லாம் விரித்து புரளவும் வஸ்திர
ஞ்சோரவும் பரிமள கந்த புட்பமெல்லாம் பக்கத்தில்
சிதறியிருக்கவு மலங்கோலமாய்ப் படுத்துக்கொண்டி
ருந்தாள். அப்போது தசரதராசன் ஆசையுடன்வந்து
உன் குமாரனுக்குப் பட்டாபிஷேகம் நாளையென்று
சொல்லி பார்க்கும்போது மிகுந்த விசனத்துடன் புல
ம்ப தேவியையெடுத்து மார்போடணைத்து இந்தமனோ
துக்கம் உனக்கு வந்தவிதம் யாது உற்ற துரைப்பாய்
சிற்றிடை மயிலேயென்று வருந்திக்கேட்க அப்போது
கைகேசி யானவள் சிற்சில வசனங்களை வெடிப்பாக
வும் வெறுப்பாகவும் பேசி யெத்தனை வித சமாதான
ஞ் சொன்னபோதிலும் கேளாமல் யெனக்கு நீர் கொ
டுத்திருக்கும் இரண்டு வரங்களை இப்போது யெனக்
குத் தரவேண்டுமென்று கேட்ட தனது தேவியை
நோக்கி தசரதன் சொல்லுகிறுர். கேளும் பெண்ணே,
அன்றுசொன்ன வாக்கிய மழித்துப் பேசமாட்டேன்.
அப்படியே தந்தேன் பெற்றுக்கொள்ளும் எழுந்திரு,
முகத்தை யலங்கரித்துக்கொண்டு உன் பிள்ளையாகிய
ராமனுடைய பட்டாபி ஷேகத்துக்கு வாருமென்று
அழைத்தாரதைக்கேட்டு கைகேசி நகைத்து நீர்கொடு
த்த இரண்டு வரத்தில் ஒருவரம் பரதன் நாடாளவும்
ஒருவரம் ராமன்காடாளவும் வேண்டுமென்று சொன்
னுள். அந்தச்சொல்லானது இரும்பு நாராசம்போல
அரசனுடைய இரண்டுகாதுகளில் நுழைந்து வேடன்
கைபாணம் விட்டு வெருண்டு விழுந்த கிளைமான்போ
ல அரசன் பூமியில் விழுந்து மூர்ச்சை யடைந்து மறு
படி தேரியெழுந்து பெண்ணே கைகேசி எனக்கு உயி
ர்ப்பிச்சை நீர் தரவேண்டும். உன்மகன் பரதன் நாடா
ளட்டும் ராமன்மாத்திரம் வனத்திற்போகாம லிவிடத்
தில் யிருக்கட்டுமென்று எத்தனை விதத்திலும் சொல்
லியுங் கேளாமையால் முத்திரை மோதிரத்தைக் கழ
ட்டி கைகேசிக்கு முன்னெறிந்துவிட்டு அடா குழந்
தாய் ராமாராமாவென்று பூமியில்விழுந்து தன்னைமற
ந்தான் தசரதமகாராசன்.

கைகேசியின்சொற்படி இராமர் சீதாலட்சு
மண சமேதராய் வனமேகுதல்.

இவ்விடத்தி லிப்படியிருக்க மறுநாட்காலமே ச
பாமண்டபத்தில் வசிஷ்டர் முதலிய மந்திரி மார்களும்
மன்னவர்களும் வந்துநிறைந்து மங்கள வாத்திய முழ
ங்க இராமனுக்குப் பட்டாபிஷேக மென்று யாவரும்
உள்ளங்களிப்புட னிருக்குங்காலையில் அந்தப்புறத்தில்
நடந்தசங்கதிகள் யாவும் அறிந்துகொண்டு ராமன்
மனமகிழ்ச்சியுடன் தசரத சக்கிரவர்த்தியினிடத்துக்
குவரும்போது அந்தப்புர வாசலில் நிற்கிற கைகேசி
யைநோக்கித் தீர்க்கதெண்டனிட்டார். அதைக்கண்ட
தாயாகிய கைகேசியார் ராமனைப்பார்த்துச் சொல்லு
கிருள் ராமா உன்தந்தை சொல்லமாட்டார் நான்சொ
ல்லுகிறேன் கேள் நீ பதினன்குவருஷம் காட்டிற் றிரி
ந்துவரக்கடவை உன்தம்பி பரதன் இந்நாட்டை யாள
க்கடவதென்று உரைத்தாள். அந்த மொழியைக் கே
ட்டு மகிழ்ந்து அம்மணி யென் பாக்கியமே பாக்கியம்
யென்று அநேக முறையாகப் பணிந்து என்னரசன்
சொல்லாமற்போனுலும் தேவரீர் கட்டளையைத்தள்ளி
நடக்க வென்தரமோ தாயே நீர்சொல்லிய வாக்கியமே
வேதவாக்கிய சிலாக்கியமன்றி வேறில்லை இதுவே பிர
யாணமாய்ப் போய்வருகிறேனென்று வணங்கி அடிக்
கடி மண்மீதில் வீழ்ந்து தாழ்ந்து விடைபெற்றுக்
கொண்டு தந்தையிருக்கும் அந்தப் புறத்திற்குப் போ
காமல் தன் சொந்தக்கிரகத்துவந்து கேயூரமணிகுண்
டலகிரீடமுதலிய யாவுங் களைந்து சிற்றன்னையா லனு
ப்பப்பட்ட மரவுரியைத் தரித்துக்கொண்டு காடே கா
ணியாகூஷியாகபுறப்பட்டார். அப்போதவர்களெல்லாம்
புகழ்ந்து பாரிஜாத மலர்களைப் பொழிந்து எங்கள்
குறையை யகற்று மேந்தலேயென்று வாழ்த்தினர்கள்.
அக்காலையில் ராமர் பட்டாபிஷேகக் கோலம் நீங்கிச்
சடைமுடி மரவுரியுடன்வருந் தன்மையைக்கண்டு வசி
ஷ்டர்முதல் மன்னவர்களும் மற்றயாவர்களும் வாடிக்
கலங்கி ஏதொன்றும் தோன்றுமல் யேங்கி யிருந்தார்.
அப்போ ஸ்ரீராமரானவர் வசிஷ்டரை வணங்கி தாயா
கிய கௌசலையைத் தொழுது அந்தம்மாளும் அழுது
விடைதரநீங்கிச் சீதையி னிடத்திற்கு வரக்கண்டு கல
ங்கி கூடவரும்படியாகிய கொள்கையைத்தெரிந்தழை
த்துக்கொண்டு சுமித்திரையைக் கண்டிறைஞ்சி இவ்
வார்த்தைகளைச் சொல்லக்கேட்ட தம்பி லட்சுமணன்

கோபங்கொண்டதை மாற்றி அவனையும் அழைத்துக்கொண்டு தாங்கள் மூவரும்புறப்பட்டு அயோத்தியைவிட்டு நீங்கும்போது உயிரிழந்த வுடல்போலும் யாவரும் துயரங்கொள்ள அதைக்கண்ட கோதண்டராமனவர் யெல்லவர்களையும் நிறுத்தி விட்டு மூன்று யோசனைதூரஞ் சென்று கங்கையைக் கடந்து குகப்பெருமானுடைய உறவுகொண்டு அப்பால் சித்திரகூடம் போய்ச் சேர்ந்து சிவனடியார் திருமாலடியார் பெரியோர்கள் வந்து ஆசீர் வதிக்கவும் அவர்களுக்கு இம்மூவர்களும் வணங்கி உபசரித்துக் கொண்டு மிருந்தார்கள்.

தசரதமகாராஜன் சுவர்க்கமடைதல்.

இந்தச்செய்தியை மந்திரியாகிய சுமந்திரன் சொல்ல தசரதமகாராஜன் கேட்டு ஆ! ஆ! மகனே மகனே யென்று ஆவியகன்றார். உடனே வசிஷ்டர் திருமுகம் அனுப்பக்கண்டு பரதசத்துருக்க ளிரண்டுபேரும் அயோத்தியாபுரியில்வந்து அரண்மனையில்புகுந்து அரசனிறந்ததை யுணர்ந்து அண்ணன் அகன்றது தெரிந்து தாய்முகம்பார்க்க வயிறெரிந்து தந்தைக்குச் செய்யுங் கருமவிதிகளையெல்லாம் புரிந்து கைகேசியைநோக்கிப் பாவி இப்படியென்னைப் பழிக்காளாக்கி விட்டாயே யென்று கண்ணீர்சொரிந்து கௌசலை தாயைப்பரிந்து ஜபதபங்கள் அனேகம் புரிந்து இனிமேல் என் தமையனைப்பிரிந்து இகத்தில் இமைப்போதும் உயிர் வைத்திருக்கேனென்றிரைந்து என் அண்ணனைப்போல் நானுங் காட்டுக்குச் செல்கிறேனென்று விரைந்து தவவேடங்கொண்டு பரதன் புறப்பட்டான். தம்பி சத்துருக்கனும் அதுவேகோலங்கொண்டு புறப்பட்டான்.

பரதமகாராஜன் சத்துருக்கருடன் ராமரைக்காண யேகுதல்.

தாய்மார் மூவரும் வசிஷ்டர்முதலிய மந்திரி பிரதானிகளும்இரதகஜதுரகபதாதிகளும் நகரத்திலுள்ள ஜனங்களியாவரும் கடல் நெருங்கிவருவதுபோல் கலந்து சென்றார்கள் பரதராஜரானவர் கண்ணீராறுகப் பெருகும்படியாய்க் கங்கைக் கரைபோய்ச் சேர்ந்து குகனைக்கண்டு சில வார்த்தையாடி யோடத்தி லேறிச் சென்று சித்திரகூடம்போய் ராமரைக்கண்டு தாயைக் கண்ட சேயைப்போலும் பசுவைநோக்கிய கன்றைப் போலும் பரதன் கதறி முறையிட்டலறி தந்தையிறந்த சங்கதியைக் கூறி தாயாகிய சீதையம்மன் சரணங்களிற் பணிந்தான் அப்படிப்பணிந்த பரதனை வாரியெடுத்து மார்போடணைந்து மாமனிறந்த வகையுணர்ந்து கண்ணீர் மாரிபோற்பொழிய ராம லட்சமணரும் வெகுவாக விசனங்கொள்ளுங் காலையில் வசிஷ்டரும் மற்றுமுள்ள மகா முனிவர்களும் துயரம் நீங்கத் தருமஞ்சொல்லி ஸ்நானஞ் செய்வித்து அவரிடத்தில் நடக்கவேண்டிய கருமங்களெல்லா முடித்து பரதனைநோக்கி இராமர் சொல்லுகிறார் தம்பி மாதுர்வாக்கிய பரிபாலனஞ் செய்யும்படியாய் வனத்திற் பதினான்கு வருடங்கழித்து பதினைந்தாவது வருடமுதலில் தசமி நன்று வருகிறேன். அதுவரையிலும் தாய்மார்கள்மனதின்படி தவறாமல்நடந்து நீதிசெலுத்தி மந்திரியர் சேனாதியர் ஆசாரியர் யாவருமகிழத் துரைத்தனஞ் செய்யக்கடவையென்று கட்டளையிட்டார். அதற்கு பரதன் சீதா பிராமனுடைய திருவடிகளிற் பணிந்து தேவரீருடைய திருவடியுந் தாயாருடைய திருவடியுஞ் செல்லும் வனங்களிற் கல்லும்புல்லும் நீக்கிக்கொண்டு வருகிறேன் அல்லும் பகலும் விழித்துக் காவலிருக்கிறேன் சொல்லும் ஏவற்றொழில்களைச் செய்து வருகிறேன் அண்ணாவென்றலறியழ ராமரானவர் பரதனையெடுத்தணைத்து தாய் தந்தையர் வாக்கியம் தப்பிநடப்பது நமக்கு யோக்கிய மல்லவே தம்பி என்போலொத்த பிள்ளைபிறந்து மாதாபிதாவை வையகத்தார் பழிக்கச்செய்து நன்குபுரிவ தழகல்ல நமது குலமுறைக் கடுத்ததல்ல என்வார்த்தையை நீதள்ளிநடப்பது இயற்கையல்ல ஆகையால் பதினான்குவருடமும் பதினாலு நாளாய் நினைத்து அரசு செய்திருப்பையாகில் நான் பதினான்கு நாழிகையாகக் கழித்துவருவேனென்று சொன்னார்.

அந்த வாக்கியத்தைக்கேட்டு பரதன் முகம்வாடி ராமருடைய பாதுகையைநாடி கண்ணிலொத்திக்கொண்டு இதையாகிலுங் கருணைபுரிந்தால் சிங்காதனத்திலேற்றி இதை நான் பூசைபுரிந்து எப்போதும்நடந்துவரும் அரசாட்சியைத் தப்பாமலொப்பிவைத்து நானிப்போதிருக்குங் கோலத்துடன் தேவரீர் வருங்காலமெனக்குச் சொன்னபடி வராதிருந்தால் அக்கினியிலிறப்பேனென்று சொன்னார்.

அப்படிசொல்லிய தம்பிக்குப் பாதுகை மகுடஞ் சூட்டியனுப்ப விடைபெற்றுக்கொண்டு யாவரும் உயிர்நீங்கிய உடல்போலும் துன்பமுடன் திரும்பி அயோத்தியாபுரிக்குவந்தார். பரதமகாராஜன் நந்திக்கிராமத்தில் சிங்காதனமேற்படுத்த அதன்பேரில் பாதுகையையமைத்து நித்திய சமாச்சாரங்களும் சுமந்திரனாலுணர்ந்துக்கொண்டு சடைமுடி மரவுரியுடன் ராமமந்திரத்தைச்செபித்து சிந்தைதளராமல் தென்றிசையைநாடி இராமரைவிட்டுப் பிரிந்தநா ளெண்ணிக்கொண்டு பரதசத்துருக்கரிருவரும் தங்கள்பழியைக் கழித்துக்கொண்டு சும்மாயிருந்தார்கள்.

அயோத்தியாகாண்டம்-முற்றிற்று.



மூன்றுவது,

ஆரண்யகாண்டம்.

ஸ்ரீராமரானவர் பரதசத்துருக்கர் முதலியபேர்களுக்கு விடைகொடுத்த பிற்பாடு இவ்விடமிருந்தால் மறுபடியும் வருவார்களென்று நினைத்து ஸ்ரீராமர் முன்னும் சீதாதேவியார் மத்தியிலும் இலட்சுமணர்பின்னுமாக நடந்து மகானுக்களை நமஸ்கரித்து அவர்கள் ஆசீர்வாதம்பெற்று யாளி சிங்கமுதலிய மிருகங்கள் சஞ்சரிக்கும் வனங்களிற் சென்றார்கள்.

விராதன் வதை.

அப்போது வடவாமுகாக்கினி குடியிருக்கும் கண்களும் சடைமயிரும் திடகாத்திர தேகமுடைய விராதனென்னு மிராட்சதன்வந்து திடுக்கிடச் சீதாதேவியை யெடுத்துத் தோளிலேற்றிக்கொண்டு ஆகாயவீதியிற் செல்லும்போது தாயார்துயரமுற்று கூச்சலிட்டதைக்கண்ட ஸ்ரீராமரும்இலட்சுமணரும் பயப்படாதேயென்றுறுதிகூறித் திவ்யாஸ்திரங்களைத் தொடுக்கவும் அதைக்கண்ட விராதன் பூமியிலிறங்கி இவர்களிருவரையும் வாரியெடுக்கவும்தோளிலேற்றிக்கொண்டு வாளையுருவி யோங்கி வெட்டியகாலையில் இரண்டுபுஜமற்றுப் பூமியில் விழவும் ஸ்ரீராமரும் சீதையம்மனும் இளையபெருமாளும் நிலத்திற் றிடங்கொண்டிருக்கும் விராதனானவன் தேவவிமானத்துடன் அனேக வித்தியங்களைச் சொல்லிப் பணிந்து சென்றான் தேவர்கள் அடங்கா மகிட்சியுடன் புட்பமாரி பொழிந்தார்கள்.

ஸ்ரீராமர் தண்டகாவனஞ் சேர்தல்.

அப்பால் மூவரும் நெடுந்தூரஞ்சென்று பிரபஞ்சத்தின் வாழ்க்கை பொய்யென்றிகழ்ந்து மெய்யைநாடிக்கொண்டிருக்கும் சரபங்கருடைய ஆசிரமத்திற்கு வந்து அந்தமகாரிஷி முதலிய மாதவத்தினர்க்கு நமஸ்காரஞ்செய்து அவர்களாசிர்வசனமும்பெற்று தண்டகாவனத்தில்இராட்சதரால்வருந்த உத்தமரிஷிகளுடைய துன்பம்நீங்க அபயஸ்தங்கொடுக்க அப்போது அவ்விட மிருந்த அகஸ்தியர் சொல்லுகிறார் நீங்கள் போகும் வழியில் உனது தகப்பனாருக்கு மிகுந்தயிஷ்டனாகிய சடாயுயிருப்பார் அவரைக்கண்டால் உங்களுக்குத் தகுந்தயிடம்சொல்லுவாரென்றுரைக்க மூவரும் வந்து சடாயுவைக்கண்டு வார்த்தையாடி அவ்விடத்திலிருந்த கோதாவரி தீர்த்தந்தாண்டி பஞ்சவடிதீரத்தில் இலட்சுமணரால் கட்டப்பட்ட பர்னசாலையில் சிதாசமேதராய் ஸ்ரீராமர் எழுந்தருளியிருக்க இளையபெருமாள் கந்தமூல பழவர்க்கங் கொண்டுவந்து பசரித்துக் கொடுத்துத் தலைவாயலில் காத்திருந்தார்.

சூர்ப்பநகையை வின்னப்படுத்துதல்.

அப்படியிருக்க சூர்ப்பநகை யென்னும் இராட்சசியானவள் திரிகாலசஞ்சாரியாகவும் கானகங்களிற்றிரிந்தும் தவமுதலிய ஜெபங்களை யழித்துவரும் நாட்களில் ஒருநாள் ஸ்திரீராமமூர்த்தி சிதாசமேதராய் எழுந்தருளியிருக்கின்ற பஞ்சவடி தீர்த்தத்திற்கு வந்து ஸ்ரீகோதண்ட பாணியின் திவ்விய திருவுருவத்தைக்கண்டு தீராக்காமநோய்மேற்கொண்டு தியங்கி மயங்கி உயங்கி வியர்த்து களைத்து தளர்ந்து விழுந்து எழுந்து கொழுந்துவிட்டெரியும் கொடிய காமத்தால் வருந்தி தனது இராட்சத ரூபத்தை மறைத்து அரம்பாஸ்திரீகளைப்போல வேடந்தரித் தலங்காரத்துடன் அலங்க நடந்து குலுங்க நகைத்து ஆரியகுல வீரிபத்திலடைத்து வணங்கி ஒதுங்கி ஐயனே யான் செய்த

மாதவப்பலனுற்றேன் கைநிறைந்தபொன்னிலும் கண்ணிறைந்த கணவனே போதும் என்பதைப் பெற்றேன் என்று தனது மாயமோகினி நடத்தைகள் யாவற்றையும் பலவாறாகக் காணப்படுத்தினாள் இவைகளையெல்லாம் மாறாமற்கண்ட வீரகோதண்டபாணி அவளை நோக்கிச் சொல்லுகிறார்.

ஓ பெண்பாவாய் உன் எண்ணமெல்லாந் திண்ணமே ஆனால் எனக்கோர் மனைவியிருக்கிறாள் தருமவிருத்தமாக ஒரு உறையில் இரண்டுவாள் நிறையலாமோ உலகப்பழிப்புக் குடன்படலாமோ ஆகையால் அதோ இலட்சுமணனென்றிருக்கும் குமாரப்பருவமுள்ள பிள்ளைக்குத் தருமபத்தினிகள் இவ்விடத்திலில்லை அவனிடம் போய்ச் சேருவையாகில் உனக்குத் தக்கபடி செய்யத்தக்கவன் என்று வழிகாட்டினார் பழவினையுடையபாவி இளையவனிடத்தில் மேவி மோகத்துரியனைக் கூவி இருகாத்தையும் விரித்துத்தாவி பஞ்சபாணனால் என்னாவி பதைபதைக்குதே தாலிகட்டிக்கொண்டு பணிவிடைக்குத்தமம் செய்யும் என்மேற் பரிந்து உங்கள் பட்சத்தை வையும் என்று பற்பல விதத்தில் அவரை மயக்கம் பண்ணினாள் இளையபெருமாளானவர் அண்ணனிடத்திற் போய்ப் பேசிவந்த வண்மையும் இவள் அரக்கியே யல்லது வேறல்ல வென்னுந் தன்மையையும் அறிந்துகொண்டுபெருங்கோபத்துடன் தன் அரையிலிருக்கும் வாளைஉருவிக்கொண்டு அவள் தலையிலிருக்குஞ் சுருட்டை மயிரைப் பிடித்திழுத்துத் தள்ளிக்கொண்டு மலைக்குகைபோலொத்தமூக்கையும் கறுத்த மணியினையுடைய தனத்தையும் அறுத்துவிட்டார் அப்போது அவள் மனம் வெறுக்கவும் அண்டமும் நடுநடுங்க உறக்கவும் அபயமபயமென்று காருத்தனிடத்தி லோடிவந்து அலறி விழுந்து தேவரீரை யறியாமல் இளையவ னிப்படி செய்தான் ஆகிலும் பெரிதல்ல அடியேன்மீதில் ஏதோ தப்பிதமிருந்து தண்டித்தீர்கள் நான் சுதந்தரி யாய்விட்டேன் என்னை அங்கீகரிக்கவேண்டும் சுவாமிகரும்புக்குக் கணுவிருந்தாலுங் கசக்குமாவென்றுசொல்லி செந்நீர் பெருகிவோட திடுதிடுவெனச் சோவருவதை வேர்த்த முகத்தினை யுடையவளாய் இராமரைக்கண்டு உடைவாளையுருவ ஸ்ரீராமர் அரக்கியை நோக்கி நீ ஒடிப்பிழை இவ்விடத்திலிருந்தால் இன்னம்பிழைவருமென்றுசொல்ல அதை அவள் கேட்டு சப்தமேகம்போல் இரைந்து தனிவன மெல்லாங் நரிந்து புகையவும் தாரைதாரையாய் உதிரம் பெருகவும் தம்பி அறுத்த மூக்குமுலை கொண்டையையும் கைக்கொண்டு கரனிடத்திற் சென்றுங் கதறிப்பதறி கலங்கியழுவாள்.

கரதூஷணன் வதை.

அதைக்கண்ட கரனுடைய கண்களிரண்டுஞ் சிவந்து மெய்மறந்து பதினாலாயிரந் தேர்கூட்டமும் திரிசிரன் தூஷணன் மற்றுமுள்ள படைகளும் பயணப்படவும் சூர்ப்பநகை வழிகாட்டிவந்து காட்டில் வந்திருக்கும் ஸ்ரீராமமூர்த்தியைச் சூழ்ந்துகொண்டார் அப்போது ஸ்ரீராமரானவர் தம்பியை நோக்கிச் சொல்லுகிறார் தம்பி நீஜானகியை சற்றுநேரம் காத்திரு இந்தச் சேனைகளை இதோ எமலோகம் ஏற்றித் தூற்றிவிட்டு வருகிறேன் என்று விஜயகோதண்டத்தை யெடுத்துப் பிடித்து வளைத்து இழுத்து நாணி மாட்டி டங்காரஞ்செய்து ஓங்காரமிட்டு வந்தசேனையைத் திரிசிரன் தூஷணனையுங் கொன்றுவிட்டார் அதை கரன்கண்டு வாகைவிற்கொண்டு கையோயாமற் போர்செய்ய ஸ்ரீராமரானவர் அவன்வில்லைமுறித்துப் பல்லைக்கடித்து தலையைத்தறித்து ஒரு நிமிஷநேரத்தில் வனமெல்லாம் இரத்தமும் பிணமலைகளு மாகும்படிச் செய்துக்கொண்டு சீதை இலட்சுமணர் ஸ்ரீராமர் மூவரும் மகிழ்ந்திருந்தார்கள் இவைகளைக்கண்ட சூர்ப்பநகை நடுநடுங்கிப்பயந்து இனிநின்றால் நமதுதலையும்போம் இன்னொரு முலையும்போம் என்று இலங்கையில் ஓடி இரைந்துவாடி இராவணனைநாடி ஒப்பனை சொலலிப்பாடி இந்திரசித்தே என் அருமை மகனேயென்றுகூவி ஆவினைப்பிரிந்த கன்றுபோற்கதற ஓவென்றலறினாள் அவளைப்பார்த்து இராவணன் பதறினான் குதிரையிலும் கோபாக்கினிப்பொறிச்சிதறிப்பறக்க ஓங்கி அரைந்து அஷ்டமாநாக மஷ்டகெஜங்களும் அலைந்து அலைந்து உலைந்து பெருமூச்சு விடவும் ஆங்காரமிட்டெழுந்து அதட்டி ஆடி உன்னை அங்கயீனஞ் செய்தவன் அறனா அறியா ஈசனா மற்றியாரோ இவர்கள் மூவரும் கூடிச்செய்த வேலையோ கரன்முதலிய நமதுபடைகள் அவ்விடத்தில் இல்லையோ நான் பிழைத்த பிழைப்பு இன்று இப்படியாச்சே ஓசூர்ப்பநகா சீக்கிரஞ்சொல்லு சொல்லென்று கேட்டான்.

இராவணனுடன் சூர்ப்பநகை முறையிடல்.

அதைக்கேட்டு சூர்ப்பநகை சொல்லுகிறாள் ஓ அண்ணா தேவர்கள் முதலிய திரிமூர்த்திகளுமல்ல அயோத்தியையாளும் தசரதனுடைய பாலரான இராமன் இலட்சுமணனென்று இருவர் ஸ்ரீராமர் பெண்சாதி சீதையென்பவள் இவர்கள் மூவரும் ரிஷிவேஷத்துடன் பஞ்சவடியி லிருக்கக்கண்டேன் மலைமகளும் மற்ற அரம்பா ஸ்திரீகள்முதல் யாவரும் அந்தசீதையினுடைய அழகுக்கு நிகராகமாட்டார் அந்தம்மாளை வருணித்துச்சொல்ல ஆதிசேடனுக்கு நாவும்போதாது அப்பேர்ப்பட்ட நாயகியானவள் திக்கெல்லாம் ஜெயங்கொண்ட செல்வப் பிராணனாகிய தேவரீருக்கு கிடைத்திருந்தால் அதுவே லட்சுமிகரமென எண்ணி எப்படியாகிலுங் கொண்டுவந்து உன்னிடத்திற் சேர்த்துவிட வேண்டுமென்று நினைத்து மெள்ளவசப்

படித்தப்போனேன் அவ்விடத்தில் காவலிருந்த இளையவன் என்னைப்பிடித்து இப்படி அங்கயீனஞ்செய்து உன் தமையனிடத்தில் சொல்லிக்கொள்ளடியென்று அனுப்பினார்கள் நானழுது மூக்குமுதலியவற்றை யெடுத்துக்கொண்டு கரனிடத்திற் காட்டி முறையிட்டேன் அவன் கோபத்துடன் திரிசிரன் தூஷணன்முதலிய சேனைகளுடன் வந்து கொடிய யுத்தஞ்செய்தார்கள் அந்தராகவன் நொடியில் புழுதிபோல் மடியச்செய்து கெடிவீரப் பிரதாபனாகவு மிருக்கிறான் அவர்களிடத்திலிருக்கிற பெண்ணரசியைப் பெண்கள் பெருமாளை பெண்கள் மாணிக்கத்தை பேரெழிற் றிலகத்தை பெண்ணிற் பெருங்கதையை நீகண்டால் அண்ணா நானவ்விடத்திற்குப் போகத் தகாதென்று தேவரீருக்கு நன்றாய்த்தெரியும் நான் இப்படி அங்கயீனமாய்ப் போனாலும்போகட்டும் அந்த அணங்கரசியானவள் உன்னிடத்திலிருந்து ஒருநாள் பார்த்தாலும்போதும் அண்ணா நானின்னமும் என்னசொல்லப்போகிறேனென்றாள்.

இராவணன்தண்டகாவனம்வருதல்.

இப்படி சொல்லிய சூர்ப்பனகையின் வார்த்தையை இராவணன்கேட்டு அனலிற்காட்டிய மெழுகுபோலுருகி ஆசைமேலிட்டு ஐயோ சூர்ப்பனகா நீசொல்லிய பெண்ணை நினைத்தால் என்னுடலுருகுது ஊருங்கருகுது நல்லதாகட்டும் உன்னையிப்படி பங்கப்படுத்திய மனிதர்களை இன்னேரம் இவ்விடங் கொண்டுவருகிறேன் நீ இவ்விடத்திற்றானே யிருவென்று சொல்லி இலங்கையைவிட்டுப் புறப்பட்டு கோகரணம்வந்தான் அவ்விடத்தில் தாடகை சம்மாரகாலத்திலே ஸ்ரீராமருடைய பாணங்களுக்குத்தப்பி தபசுசெய்கிற மாரீசன்பக்கலிற்போய் நின்றான் அந்த மாரீசன்கண்டு திடுக்கென்றெழுந்து சாஷ்டாங்கமாக தெண்டனிட்டு இவ்வளவு தூரம் தயைசெய்ததைச் சொல்லவேண்டுமென்று கேட்க இராவணன் சொல்லுகிறான் தசரதகுமாரர்கள் இரண்டுபேருஞ்சீதாதேவியுங்காட்டிலிருக்கிறார்களாம் நமது சூர்ப்பநகையைக் கொண்டை மூக்குமுதல்அறுத்து கரதூஷணன் முதலிய பேர்களைக்கொன்று இருமாப் படைந்திருக்கின்றார்களாம் அந்த சீதை மெத்த அழகாயிருக்கிறாளாம் அவளை நான் கைப்பற்றும்படியாய் அந்த ஸ்ரீராம லட்சுமணாளிருவரும் சீதையைவிட்டுப் பிரிந்துபோகும்படியாகிய தந்திரங்களை நீ செய்யவேண்டும் இது உன்னைவிட மற்றொருவரால் நடக்கமாட்டாது என்னெண்ணமும் நிறைவேற மாட்டாது எனக்கு இந்தவுபகாரம் நீசெய்யவேண்டுமென்றுசொல்லவே மாரீசன் நடுங்கிச் சொல்லுகிறான் அவர்களுடைய திருட்டிக்கு நீ நிகரல்ல உன் பலத்தையும் உன் வரத்தையும் பெரிதாகவெண்ணியிருக்கிறாய் அவர்கள் பலத்துக்கு ஒருதிரணங்கூட சாப்பிடமாட்டாய் இதுவுமல்லாமல் உன்னைச் செயித்த பலசாலியாகிய வீரர்களையெல்லாம் ஒவ்வொரு கணையினாற் கொல்லத்தக்கவர்கள் வீராதிவீரர்கள் அவர்களை வஞ்சனைசெய்வதென்பது நடவாது ஒருவேளை வஞ்சனையினாற் பிரியச்செய்தாலும் உலகமாதாவாகிய வைதேகியை நீதொட்டெடுக்கமாட்டா யெடுத்துப்போனாலும் உனக்குத்தக்கபொருளல்ல நாய்க்கு முழுத்தேங்காய் அகப்பட்டாலென்னசெய்யும் அக்கிரமம் ஆரையும்விடாதுஎன்னும் பழமொழியைநீயுன்னிப்பார் பென்வார்த்தையைத்தள்ளி உன்னெண்ணப்படி செய்யத்துணிவையாகில் உன்புத்திராதிகளுடன் கொடையுந்தனங்களுந் தம்பிமார்களுடன் நீயுமெல்லா மிறந்துபோய்விடுவாய் இது முடியாதகாரியம் நீவிட்டுவிடுமென்று மாரீசன்சொல்ல இராவணனுக்குக் கோபம்வந்து கைலங்கிரியையும்பேர்த்த தோளுந்திக் கஜங்களைவென்ற மார்புடைய வென்னை அந்தஅற்பமனிதர்களுக்கு ஈடல்லவென்றுசொல்லப்போமா ஐம்பதுலட்சவருஷம் ஆயுசுண்டாய் சகலதேவதைகளையும் நான்செயித்தேனேயல்லாமல் யென்னை ஒருவரும் வென்றவர்களில்லை அப்படியிருக்க, அல்ப்பமனிதர்களுக்கு இளைத்தவனாக வாய்ப் புளித்ததோ மாங்காய்ப்புளித்ததோவென்று சொல்லிப்போட்டால் இப்போது என்படைகளுடன்வந்து அந்தசிதையை நான் கைப்பற்றிக்கொள்ளத் திறமிருந்தும் நாள் செல்லுமென்று யோசித்து நீயானல்துறையாய்க் கொடுப்பையென்று உன்னிடத்திற் சொன்னால் எனக்குப் புத்திசொல்லுகிறாயல்லவா நல்லதுஇப்போதும் நான் சொல்லியவண்ணங்கேட்டு உனக்குத்தெரிந்தமாயைகளெல்லாஞ்செய்து அந்தப்பெண்ணையெனக்குக்கிடைக்கச் செய்யாவிட்டால் உன்னை யென்கைவாளுக்கு இறையாக்குவேன் இந்த மண்ணுலகத்தைவிட்டுப் போக்குவேனென்று சிறவும் அதைக்கேட்ட மாரீசன்சொல்லுகிறான்.

ஓய் ராவணாகேளும் உம்முடையகையினாலிறந்தால் கொடிய நரகங்கிடைக்கும் தாசரதி கைக்கணையாலிறந்தால் சுவர்க்கங்கிடைக்கும் ஆனதால் உன்கையாலிறப்பதைவிட யெனக்கு அதுவேமேல் இதோ நான் போய் இறந்து இடம்பண்ணி வைக்கிறேன் சீக்கிரத்திற் குடும்பத்துடன் நீவந்து சேரக்கடவை யென்று சொல்லி பொற்பிரகாசமாகிய மானுருக்கொண்டான். அதை இராவணன் கண்டு மகிழ்ந்தான் அப்போதே அந்தமானானது ஸ்ரீராமருடைய பர்ணக சாலையிற்போய் சீதாதேவியார் கண்ணுக்கு யெதிரில் இத்தேசங்களிற்கிடையாத சிங்காரநிறத்துடன் திரிந்துவிளையாட சீதையம்மன் கண்டு அற்புதமடைந்து ஒருநாளும் நான் பார்த்தறியாத இந்தமானை பிடித்துக் கொடுமென்று மேல்விளையப்போகிற காரணங்கள் தெரியாமல் ஸ்ரீராமரைக் கேட்க இரகுபதியானவர் தம்பியைப் பர்ணகசாலைக்குக் காவலாக்கி வில்லும் அம்புங்கைக்

கொண்டு விரைவுடன்மானைத்தொடர்ந்து போகையில் தம்பியும் ரிஷிகளையும் ராக்கதர் மாயைகளையுஞ்சொல்லித்தடுக்கவும் அதைக்கேளாமல் மானானது சமீபத்திலடுக்க அந்த சந்தோஷத்தின் பேரில் நெடுந்தூரம் போயும் கையில் அகப்படுந்தன்மைபோல இளைத்தும் படுத்தும் ஸ்ரீராமர் வெட்டிப்பிடிக்க ஓடியும் இப்படி நூறுயோசனைதூரங் கொண்டுபோகையில் ஸ்ரீராமருக்குக் கைகால்களெல்லாம் வருந்தி மேலும் வெய்யலாற் கருகிப்போது இதுவுண்மையானமானல்ல தம்பிசொல்லியபடி மாயமானென்று எண்ணி வில்லிற்றொடுத்திருந்த பாணத்தைவிட்டார் அது ஓலட்சுமணாவென்று கூவி ராட்சதரூபத்துடன் பூமியில் விழுந்திறந்தான்.

இவைகளை ஸ்ரீராமர்கண்டு விசுவாமித்திரர் யாகத்தில் அடிப்பட்டு ஓடிப்போன மாரீசனிவன் ஏதோ ஒருவஞ்சனைசெய்யக் கருதிவந்தான இவன்கூவிய சப்தத்தால் பர்ணகசாலையில் ஒருவிந்தை யுண்டாயிருக்குமென்றுறுதி அதிகவிரைவுடன் ஐயன்நடந்துவருமுன்னமே சீதாபிராட்டியார் காதில் இலட்சுமணாவென்று கூவிய சப்தங்களைக்கேட்டு மைத்துனனை நோக்கி அரக்கராலே ஏதோர் அபாயம்வந்து உம்மைக் கூப்பிட்ட ஓசைகேட்டும் போகாமலும் பாராமலுமிருக்கலாமாவென்றுசொல்ல அதற்கு இலட்சுமணர் சொல்லுகிறார் அம்மாதாயே கேளும் அரக்கராலும் அரசராலும் ஆகாயவாசிகளாலும் மற்றெவர்களாலும் யெங்களண்ணனுக்கு அபாயம் ஒருக்காலும்வாராது இது மாறுபாடாகிய வஞ்சகம் மாயையேயன்றி வேறல்ல யெங்கள் அண்ணனுடைய கூந்தலல்ல இந்த பதினாலுலகமழிந்தாலும் யெங்களண்ணன் கலங்கத்தக்கவரல்ல நீ மயங்கவேண்டாம் இதோ வரப்போறாரென்று அநேக விதத்திற் றேறுதலை சொல்லியும் இதற்கு மனது ஒப்பாமல் சொல்லுகிறாள் செத்தவனுடைமை இருந்தவனுக்கு அடைக்கலமென்னும் பழமொழிபோலும் மைத்துனனிறந்தால் நமக்கென்ன கம்பள மெனக்காச்சுதென்பதுபோலும் மனந்தாளி யிருக்கின்றீரல்லவாவென்றுசொல்லி இளையபெருமாளானவர் இரண்டு காதுகளையுமூடி ஸ்ரீராமாராமாவென்று தோத்திரஞ் செய்துகொண்டு தாயேஉந்தனிஷ்டப்படி இதோபோய்வருகிறேன் நீபத்திரமாய்ப் பர்ணகசாலையில் இருமென்றுசொல்லிபலபலவிதமாயோசித்துஏங்கிநடந்தார்.

இராவணன் சீதையை யெடுத்தேகுதல்.

இவ்விடத்தில் சீதாதேவியார் ஸ்ரீராமரைக் குறித்து ஏங்கி பர்ணகசாலையில் தனிமையாகயிருக்குங்காலத்தில் இதுநல்ல சமயமென்று இராவணன் விருத்தாப்பிய வேடம்பூண்டு பர்ணகசாலையில் வரக்கண்டு ஜானகியம்மனவன் யெதிர் கொண்டோடி மகரிஷியென்று அர்க்கியபாத்தியமளித்து ஆசனங்கொடுத்து உபசரிக்கவும் மாறுவேஷக்காரன் ஆசனத்திருந்து நீ ஆர் இவ்விடத்தில் தனிமையாக யிருக்கவேண்டிய காரண மென்னவென்று கேட்க ஜானகியம்மன்சொல்லுகிறாள் ஐயா அயோத்தியாபுரியாளும் தசரதமகாராஜன் பாலர் ஸ்ரீராமலட்சுமணர் பிதுர்வாக்கிய பரிபாலனஞ்செய்ய பதினாலுவருடம் கானகம்வந்தார்கள் நான்கோதண்டபாணியின் தருமபத்தினியென்பெயர் சீதை நான் இவ்விடமிருக்கிறேன் அவர்கள் ஒருமானைத் தொடர்ந்துபோயிருக்கிறார்கள் இதோ வருவார்களென்றுசொல்ல அதைக்கேட்டு ஐயோ உம்மைப் போலொத்த சவுந்தரியவதிக்கு இந்தக்காட்டில் பச்சைக்குடிசையிலிருக்கவும் அற்பமனிதர்களுக்குஸ்திரீயாகி யெவ்வனகாலத்தை வீணாகிப் போக்கவுமென்று இன்னுஞ் சில கடுஞ்சொற்களைச் சொல்லக்கேட்டு இடிவிழுந்த அரவம்போலேங்கி இந்தப்பாவி அரக்கனென்று மதித்து சிலவசனங்களைப்புகல அப்போ மாயரூபத்தைவிட்டு தன் சுயரூபத்துடனிற்க சீதையம்மனைத்தூக்கித்தனதுதேரில்வைத்துஆகாயவீதியாய்ப் போகும்போது சிதை யம்மனானவள் இரதத்தில் விழுந்து புரண்டு ஓவென்றலறினாள்.

சடாயுயுத்தம்.

அந்தவோசைகேட்டு சடாயுவானவர்வந்து வளைத்து அனேகம் புத்திகளைச் சொல்லியும் அரக்கன்கேளாமல் தேரைநடத்த ஸ்ரீராமர்ஜெயமென்று ரெக்கையால்மோதி தேரைப்பொடியாகப் போர்புரியும்போது இராவணனுக்கு கோபம்வந்து வாளினால் இறகினைவெட்டி பூமியிற்றள்ளி புஜத்தின்மேல்ஜானகியைத்தூக்கி ஆகாய மார்க்கமாய்ப் போகையில் அம்மன் அழுது சடாயுவைக்கூவி சாமிவருமளவும் உயிருடனிருந்து என்செய்தியை புரைக்கவென்றுசொல்லி இறந்துபோகையில் ஓர்மலையினுச்சியிற்சிலபேர்கூடியிருக்கக்கண்டு தன்னாபரணங்களைச் சுழற்றி அழகிய கச்சிற்சுருட்டி அவ்விடத்திற்போட்டு என்னாண்டவன்வந்தால் கொடுங்களென்று அயர்ந்து சோர்ந்திருக்க இராவணன் இலங்காபுரிக்குவந்து அசோகவனத்தில் அம்மனைவைத்து அரக்கியர்களை காவல்வைத்து யென்வசப்படுத்துங்களென்றுசொல்லி இராவணன் தன்னரண்மனைக்குட்புகுந்து சந்தோஷமுற்றிருந்தான்.

ஸ்ரீராமலட்சுமணர் சீதை பிரிவினாலிரங்கல்.

இப்பால் தமயனை தேடிக்கொண்டுபோன தம்பிக்கு எதிர்வரும் ஸ்ரீராமருடைய பாதங்களில் சாஷ்டாங்கநமஸ்காரஞ்செய்யத் தம்பிசீதையை ஒண்டியாய்வி

ட்டுவந்த காரணமென்னவென்றுகேட்க அண்ணனுக்கு நடந்த செய்திகளும் தாயார் கூறிய கடுமொழியும் அதனால் நான் வந்துவிட்டதையுஞ் சொல்ல ஸ்ரீராமர் கேட்டு அந்தோ சீதையை யிழந்தோமென்று இரண்டுவீரர்களும் விரைவாக ஓடிவந்து சீதையைப் பார்க்க காணுதபடியால் பெருமூச்சுவிட்டு வியாகூலமுற்று தம்பி சீதையைப் பிரிந்தோமென்றேங்கி பூமியிற் சாய்ந்து விசாரத்துடன் ஸ்ரீராமர் மூர்ச்சைபோக லட்சுமணர் தமயனைத்தேற்றி தேவரீரே இப்படி விசனப்படலாமா அடியேனுக்கு உத்திரங்கொடுத்தால் எப்பேர்ப்பட்டவனுகிலும் அவனையு முடித்து எங்கள் தாயாரையுந் தேவரீரிடங்கொண்டுவந்து சேர்ப்பேனென்று தம்பிசொல்ல அந்தவாக்கியத்தைக்கேட்டு ஸ்ரீராமரானவர் பிரளயகால ருத்திரனைப்போற் கண்கள்சிவந்து சினங்கொண்டு தேவதைகளும் பார்த்திருந்தார்களல்லவா இந்த மூன்றுலோகத்தையு மாண்டுவிழச்செய்கிறேன் தம்பியென்று கோதண்டத்தைவளைத்துநாணேற்றினுர் அப்போது லட்சுமணர் சமீபித்து அண்ணு ஒருவன் செய்த பெரும்பழிக்கு உலகத்தைப் பாழாக்க நினைப்பது தருமமல்லவே என்தாயை யெடுத்துப் போன பாவியைக் அவனுவியைக்கொண்டுதேவரீர்தேவியைப் பண்டுபோலிருக்கச் செய்வது வீரம் என்று தம்பிசொல்ல அதை இரவிகுல புங்கவன்கேட்டு மனந்தேறி ஊழின்படி நடக்குமல்லாமல் வேறில்லையென்று சீதையைத்தேடி இருவரும்போகையில் அவ்விடத்தில் ஒருரதம்வந்து திரும்பிப்போயிருக்கும்வழியைப் பற்றிச் சிலதூரம்போகையில் இரகுதுணிந்து கிடக்கப்பட்ட சடாயுவைக்கண்டுவினவ இவனுலெடுத்துப் போனுனென்று பெயரைச்சொல்லி உடனே ஜடாயுவுக்குப் பிராணன் போய்விட்டது உடனேசிறியதந்தையென்று புலம்பித் தகனஞ்செய்து கருமக்கிரிகைகள் யாவுமுடித்துத் தென்திசையை நோக்கிச் சீதையைத் தேடி யிருவரும் வந்தார்கள்.

கவந்தன் வதை.

அப்படி வரும்வழியில் கவந்தனென்னும் இராட்சதன் ஒருயோசனைதூரம் கைகளை நீட்டி அதற்குள் ளகப்பட்ட ஜந்துகள் யாவையுந் தனக்குயிராக வாயிற்றள்ளிக்கொண்டு அநேகநாளாய்ப் பிழைத்திருக்கிறவன் அவன்கையில் அப்போது அவன் தன்வயிற்றிற்றள்ளிக்கொள்ள கொண்டுவருவதை இவர்களிருவருங் கண்டு வாளையுருவிக்கொண்டு கவந்தனுடைய புயத்தை வெட்டித் தள்ளினவுடனே அவன் தேவவிமானத்திலேறி இவர்களை வந்தித்துப் பூர்வத்தில்நான் வித்தியாதரன் பிரமதேவதா பத்தியினுல் இந்ததேகம்பெற்று வெகுநாளாய் துன்பமுற்றேன் தேவரீர் கிருபா நோக்கத்தினுற் சாபந்துலைந்து பரிசுத்தனுனேன் நீங்கள் சுகமாக வாழக்கடவீர்களென்று வாழ்த்தி வணங்கி சீதாதேவியாரைத் திருடிக்கொண்டு போனவன் இலங்கையிலிருக்கும் இராவணன் அவன்அநேகவரங்களையும் அநேகங்கோடி ஆயுளும் பெற்றவன் ஆகையால் இன்னுஞ் சிலதூரந் தெற்குநோக்கிச்செல்வீர்களாகில் பம்பாநதியொன்றிருக்கின்றது அவ்விடத்தில் கிட்கிந்தமென்றொரு நகரமிருக்கின்றது அந்த நகரத்தில் வாலி சுக்கிரீபனென்று அண்ணன் தம்பிகளிருக்கிறார்கள் அவர்களிலொருவருக்கொருவர் கொடியபகை நேரிட்டு சுக்கிரீபனென்பவன் குமுதனென்னப்பட்ட மலையிலிருக்கிறுன் அவனுக்கு மந்திரிமார்களவாயுதேவனுக்கும் அஞ்சனுதேவிக்கும் பிறந்த அனுமார் முதல் நால்வரிருக்கிறுர்கள் அவ்விடம் நீங்கள்போனுல் அவர்கள் உங்களுக்கு மிகுந்த நண்பராயேற்பட்டு எழுபத்திரண்டு வெள்ளம் வானரங்களுடனே சுக்கிரீபனும் படைத்துணையாகவந்து கடலைக்கடந்து இலங்கையை வளைத்து இராவணனைக்கொன்று வெற்றிபெறுவதற்கு உதவியாவார்கள் தேவரீர் என்தாயாகிய சீதையைக் கொண்டுவரலாம் சுவாமி யென்று வணங்கி வித்தியாதர லோகம்போய்ச்சேர்ந்தார் அதைக்கேட்டு லட்சுமணரிருவருஞ் சவரி ஆசிர்மத்திற்குப் போய் அன்றையதினம் அவளுடைய உபசாரத்தைக்கொண்டு அமுதுண்டு சவரிக்கு முத்திகொடுத்து அதன்பின்பு தெற்குநோக்கி நடந்தார்கள்.

ஆரணியகாண்டம்-முற்றிற்று.

ச-வது, கிட்கிந்தா காண்டம்.

அனுமார் ஸ்ரீராமர் லட்சுமணரிருவரும் கங்காநதிக்கரையில் வந்திறங்கி சீதாதேவியை நினைத்து விசாரப்படுங்காலையில் சுக்கிரீபன் அவர்களைக்கண்டு திகில்கொண்டு அனுமாரை அனுப்பிவைக்க அவருக்கு குட்சுமரூபமாய்வந்து விருட்சத்தினிழலிலிருக்கும் அவர்களுடைய திருவுருவத்தைப் பார்க்கும்போது ஸ்ரீராமர் அவரைக்கண்டு குண்டலதாரியாயிருக்கும் நீ யாரென்று வினவ வாயுவுக்கும் அஞ்சனுதேவிக்கும் பிறந்த அனுமாரென்று அடியினை வணங்கி நிற்கக்கண்டு ஸ்ரீராமர் தங்களுடைய வரலாற்றைத் தெரிவித்தவுடனே அனுமார் தன் விஸ்வரூபத்தைக்காண்பித்து சுக்கிரீபனையழைத்துவந்து சரணமடையச்செய்து இருவருக்கும் உறவுண்டாக்கி யாவரும்வணங்க ராமரை அழைத்துக்கொண்டு தாங்களிருக்குமலையிற்போய் அ

லங்காரச்சாலையில் எழுந்தருளச்செய்து சுக்கிரீபன் தன்னுடைய தமையனுக்குந் தனக்கும் பெண்சாதியினுல்நேரிட்ட பகையைச்சொன்னான் ஸ்ரீராமர்கேட்டு விசனமுற்று அந்த வாலியைக்கொன்று உனக்கு கிட்கிந்தையைப் பட்டங்கட்டி வைக்கிறேனென்று அபயஸ்தங்கொடுக்க சுக்கிரீபன் அதைப்பெற்று சுவாமி அடியேனுக்கு ஒருசந்தேகம் வாலியைக்கொல்வது உண்மையாகில் அந்தவாலியானவன் வருத்தத்திற் கொருதரம் எழுமரத்தை இழுத்துப் பார்த்து விட்டுவிடுகிறதும் துந்துபியெனும் ராட்சதன் எலும்பை நித்தியம் அசைத்து விடுகிறதுமாயிருக்கிறான் அவைகளை அவன் செய்யும் வலிமைக்குமேல்தேவரீருடையவலிமையைக் காட்டினால் என்மனம் திடங்கொள்ளுமென்று சுக்கிரீபன் சொல்ல அப்படியேநல்லதென்று ஸ்ரீராமரானவர் அந்த மாமரத்தினடிவாரத்திற் போய் நின்று மிதிக்கவே எழுகோணலாயிருந்தமரம் ஓரே ஒழுங்கில் வரக்கண்டு ஒரு பாணத்தால் எழுமரமும் உருவச்செய்து துந்துபியினெலும்பைத் தன கால்விரலாலுந்திவிட அதைக்கண்டு சுக்கிரீபனும் மற்ற யாவர்களும் புகழ்ந்து வணங்கி இவராலே வாலியை கொல்லப்படுமென்று நிட்சயங்கொண்டு சீதாதேவி சுழற்றியெறிந்துபோன நகை மூட்டையை ஸ்ரீராமருக்கு எதிரில் கொண்டுவந்து வைத்தான்.

ஸ்ரீராமர் சீதையினுடைய ஆபரணத்தைக்

காணுதல்.

அதை ஸ்ரீராமர் பிரித்து நகைகளைப்பார்த்து இது சீதையினுடைய ஆபரணமென்றறிந்து விசனப்படும்போது சுக்கிரீபனெழுந்து திருவடிகளில் விழுந்து விசனப்படவேண்டாம் என்னிடத்தில் எழுபத்திரண்டு வெள்ளம் வானரப்படைக ளிருக்கின்றது ஒருகொடிப்பொழுதினில் இலங்கையைக் கலங்கச்செய்து இராவணனைச் சாகவடித்துத் தாயாரையுங் கொண்டுவந்து திருவடிகளில் ஒப்பிவைக்கிறேனென்று சுக்கிரீபன் சொன்னான் அதை ஸ்ரீராமர் கேட்டு மகிட்சியடைந்து இப்போது நடக்கவேண்டிய காரியமென்னவென்று கேட்க வாலியைச் சங்கரிப்பதேயென்று சுக்கிரீபன் சொல்ல நல்லதென்று சுக்கிரீபனை வாலியினிடத்திற்சென்று போர்புரியும்படி அழைத்துக்கொண்டு வரக்கடவையென்றனுப்பித தானுந்தம்பியுங் குற்றுச்செடி மறைவில் கோதண்டபாணியாக நின்றார்.

ஸ்ரீராமர் பாணத்தால் வாலிகீழ்விழுதல்.

அக்காலத்தில் சுக்கிரீபன் வாலியில் அரண்மனைக்குப்போய் யுத்தத்திற்கு வாவென்று கூவுவதைவாலி கேட்டு புஜத்தைதட்டிக்கொண்டு யுத்தத்திற்குப் பயணப்பட்டுத் தம்பியின்பேரில் முனைந்துகொண்டு எழுந்து பதுங்கி தாவி மேவி கூவி இடம் வலம் சுழன்று கோடையிடிபோற் குத்திக் கரத்தினைப்பற்றி சுக்கிரீபனையடித்து உயிரைமூழ்த்திவிடவேண்டுமென்று நாடினான் அவனுடைய மனதைக்கண்டு சுக்கிரீபன்ஓடி ஸ்ரீராமருடைய திருவடிகளில் முடிசூடினான் அப்போது ஸ்ரீராமர் சொல்லுகிறார் நீங்களிருவருமொரேரூபமாயிருப்பதால் நீயென்றும் அவனென்றுந் தெரியாமையால் மயங்கியிருந்துவிட்டேன் இனியிப்படியிரேன் இதோ புஷ்பத்தைநீகழுத்தில் போட்டுக்கொண்டு இன்றையதினம் வாலியையழைத்து சண்டைசெய்எப்படியும் அவனைமாட்டிவிடுகிறேன் சந்தேகமில்லையென்று பூவைச்சூடியனுப்பினார் அதைப்பெற்றுசுக்கிரீபன்ஓடி அடாவாலி சண்டைக்குவாடாவென்று கூவியழைக்க அவனுக்குக் கோபம்பிறந்து யுத்தத்திற்குவருஞ்சமயத்தில் தாரையென்பவளோடிவந்துபுருஷனைததடுத்து நேற்றையதினம் உன்னாலடிபட்டபச்சைவுதிரங்காயாதிருக்குமுன்னமேவந்து சண்டைக்கு அழைக்கிறதை யோசிக்கவேண்டியதென்று ஸ்ரீராமர் இராவணசம்மாரஞ் செய்யும்பொருட்டு சுக்கிரீபனுக்கு அநுகூலமாக வந்திருப்பதையும் இன்னுஞ்சிலசிலமொழிகளைச்சொல்ல அதைக்கேட்டு வாலியானவன் சிலவசனங்களைப் புகன்று என்மயிரில் தொங்கிக்கொண்டிருந்த இராவணனை என்னைக்கொண்டு ஜெயித்துக்கொள்ளாமல் என்னாலடிபட்டு ஒதுங்கிக்கிடக்கும் அல்பனாகிய சுக்கிரீபனைக்கொண்டு இவன்பகையை முடித்துக்கொள்ளப் பட்டவனா என்னைஜெயிப்பவன் மேலுமந்த ராமனுக்கும் எனக்கும் எவ்விதபகையுமில்லை அப்படியிருக்க அவர்களையும் இந்த சுக்கிரீபனையும் முடித்துத்திரும்புவேன் நீபோவென்று அனுப்பிவைத்தசுக்ரீபனிடஞ் சமர்செய்யும்போது தாசரதியானவர் தனது கோதண்டத்தில் தரித்திருந்த பாணத்தை ஆகர்ண பரியந்தமிழுத்துவிட்டு வாலியின் கண்ணிற்படாமல் இருக்குங்காலையில் அந்தப் பாணமானது வாலியின் மார்பில் நுழையும்போது காலினாலுந் தன் வாலினாலும் பிடித்திழுத்துப் பார்ததான் அதில் ஸ்ரீராமனென்றுயெழுதியிருந்த முத்திரையை நோக்கி மூர்ச்சையாய் விழுந்துபோகவும் ஸ்ரீராமலட்சுமணர்வெளியில்வந்து வாலியினிடத்தில்நிற்க அப்போது சுக்கிரீபன் அங்கதன் அநுமார் தாரைமுதலியபேர்கள் வாலியின்பேரில் விழுந்து ஓவென்றழும்போது வாலிமூர்ச்சை தெளிந்தெழுந்து ஸ்ரீராமருடைய திருமுகததை ஏறநோக்கிச் சொல்லுகிறான்.

வாலி ஸ்ரீராமரை நிந்தித்தல்.

இதுவென்ன ஆச்சரியம் சூரியவம்சத்திற் பிறந்த இராஜனாகிய உனக்குச் சீதை போய்விடவே உன்னுடைய பொறுமையுஞ் சாந்தமும் புகழுஞ் சிவகாருண்யமும் பேரறிவுந் தருமமும் நற்குணமும். கூடப்போய்விட்டாலும் மேன்மக்களென்பதுங் கெட்டதே மனு விக்கியான முதலிய நீதி சாஸ்திரத்தையும் மறந்தையோ பாவம் பழிக்கஞ்சாதென்று துறந்தையே உனதளவில் நான் ஒரு குற்றமுஞ் செய்யாதிருக்க என்ன குற்றத்தைக்கண்டு இப்படி செய்தாய் ஒருரா

ட்சசன் உன்மனைவியையெடுத்துப்போயிருக்க மலையில் வாசமாயிருக்கும் குரங்கரசனைக் கொல்லும்படி வேத முறைமையிற் கூறியிருக்கின்றதோ சூரியவமிசத்தில் நீ பிள்ளையாகப்பிறந்து ரொம்பபாவத்தையும் நிறைத்து வைத்தாயே அப்பாராமா எனக்குப் பயந்து உள்ளிருந்த பஞ்சையாகிய சுக்ரீபன் வார்த்தையைக் கேட்டு பாரிய யோசனைசெய்யாமல் சிலகாரியஞ் செய்தாய் உனதுபத்தினியை எடுத்துப்போன இராவணனை வெல்லவேண்டுமென்று ஒருவார்த்தை சொன்னால் என்னுடைய வால்மயிர் அவனையும் அவனிலங்கையையும் கொண்டுவந்து வைக்குமே சீதாபிராட்டியாரை என் கோள் கொண்டுவந்து திருவடியிற் சேர்ப்பிக்குமே அப்படியிருக்க என்னை வஞ்சித்துமறைவிலிருந்துகணை விடும்படி உனக்கு எந்தஆசான் சொல்லிக்கொடுத்தான் என்ன விதியைக்கொண்டு என்தாய்வீரனே காலத்திற்குத் தகுந்தபுத்தி நேரிட்டதோ வென்று வெறுத்துக்கொள்ளும் வாலியை நோக்கி இளைய பெருமாள் சொல்லுகின்றார்.

தம்பிபெண்டு தான்பெற்ற பெண்ணென்று நினையாமல் அபகரித்த உன்னைக் கொல்லாமல் விட்டால் தருமவிருத்தமென்றும் எதிரில் நின்று அடித்தால் நீயிறங்கிவருவையாக ஓ சுக்கிரீபனுக்குக்கொடுத்த பட்டம் சொல்தப்பிப்போமென்றும் மறைந்திருக்கலானேனென்றுசொல்ல, அதைக்கேட்டு வாலிசொல்லுகிறான் கானகத்திலிருக்கு மிருகம் அதிலேயும் குரங்குஜாதி இவைகளுக்கு முறையுண்டோ நீங்கள்செய்த கருமத்தின் துறைகண்டோம் எதிரில் உங்களைநோக்கி சரணம்புகுந்தால் அனுக்கிரகம் செய்யக்கூடாதென்பது சூரியகுலநிறையோ ஆனாலும் பரதமகாராசன் தண்டிக்க வேண்டுமேயொழிய நீங்களார்சந்நியாசி உங்களுக்குப் பாணமேது வில்லேது அரசின்முறையைச் சார்ந்த சொல்லேது என்று கேட்கும்போது ஸ்ரீராமர் தம்பியைக் கையமர்த்தி வாலியைப்பார்த்துச்சொல்லுகிறார் உனக்கும்நமக்கும் ஏதொரு பகையுமில்லை நான் கேட்பார் பேச்சைக்கேட்டு மனைவியைப்பிரிந்திருந்த விசனத்தால் மற்றொருவனுக்கும் இப்படிதானே துன்பமிருக்குமென்று பாணப்பிரயோகஞ் செய்துவிட்டேன் மிஞ்சிப்போன காரியம் இப்பவும் நான்விட்டபாணத்தை வரவழைத்து உன்னையும் பிராணனுடன் பிழைக்கச்செய்கிறேன் உன்மனோபாவம் இப்போ தெரியவந்தது உனதம்பியும்நீயுஞ்சுகமாகவாழ்ந்திருங்களென்று சொல்ல வாலிசொல்லுகிறான்.

வாலி சுவர்க்கமடைதல்.

சுவாமி என்ஜாதியில் காயம்படக்கூடாது காயம் பட்டால் உயிருடனிருந்துவாழக்கூடாது திரிமூர்த்தியாகிய தேவரீர் அவதரித்து அசுரர்குலம் வேரறுக்க வந்திருக்குங்கடவுள் உம்முடையபாணத்தால் நானிறக்க எத்தனைநாள் தவஞ்செய்தால் எனக்குக் கிடைக்கும் இதன்றி தேவரீரைச் சில யிகழ்வாகப் பேசிவிட்டேன் அவைகளையெல்லாம்பொறுத்துத்தேவரீருடையதிருவடி எனக்குக் கட்டளையிடவேண்டியது என்தம்பி சுக்ரீபன் அறியாதவன் லவன்பேரில்காட்டிய கையை அவன்பேரில்காட்டாமல் கிட்கிந்தைக்கு அரசனாகப் பட்டங்கட்டி அங்கதனை இளவரசனாக்கி இரட்சிக்கவேண்டும் ஐயனே யென்று வாழ்த்தி சுக்ரீபனையும் அங்கதனையுமழைத்து ஸ்ரீராம மூர்த்திகையி லொப்பிவைத்து தன்பக்கத்திலிருந்து அழும் தாரையை நோக்கிபெண்ணேநான் அனேகஜன்மங்களிற்செய்ததபோபலத்தினால் வைகுந்தவாசகனாகிய ஸ்ரீகோதண்டபாணியின் திருவடிகளின் ஐக்கியமாகிறேன் நீ ஏதொன்றுக்கும் விசாரப்படவேண்டாம் எனக்குமோட்சங்கொடுத்ததெய்வம் உன்னை ரட்சிக்குமென்று சொல்லி அங்கதனையழைத்து அவன்கையில் தாரையையொப்பிவித்து சோலைமேகம்போற்பொழியுங்கண்ணீரைத்துடைத்து ஸ்ரீராமக் கடவுளைநோக்கி தேவரீருடைய பாணத்தை வரவழைத்துக்கொண்டு ஸ்ரீ வைகுந்தங் கட்டளையிடவேண்டுந் தேவதேவனேயென்று சிந்தையில்தியானம் செய்தாள். அப்படியே கிருபானோக்கஞ்செய்யவே தேவர்கள் பாரிஜாதபுஷ்பங்களை வாரியிறைக்க வாலிபோங்கதியடைந்தான் உடனே வானரவீரர் சுக்ரீபன்அனுமார் அங்கதன் தாரைமுதலிய கடன்கள் யாவும்செய்து ஸ்ரீராமர் திருவடிபணிந்தார்கள்.

சுக்ரீபனுக்குப் பட்டங்கட்டுதல்.

ஸ்ரீராமர் தன் தம்பியை யழைத்து கிட்கிந்தைக்குப்போய் வாலிசொன்னவண்ணம் சுக்ரீபனுக்குப்பட்டங்கட்டி அங்கதனுக்கு இளவரசு பட்டங்கட்டி தாரை உத்தரவின்வண்ணம் நடக்கும்படி திட்டஞ்செய்துவரக் கடவையென்று அனுப்ப இளையபெருமாள் அப்படியேசென்று சகலகெம்பீரத்துடன் பட்டங்கட்டிவைத்துவந்தார் இயாவர்களும்வந்து ஸ்ரீராமருடைய பாதங்களில் வணங்கினார் சுக்ரீபனும் வணங்கி சுவாமி வானரப்படைகளை அழைக்கத் தூதர்களை யனுப்பிவிட்டேன் வருவதுமழைக்காலம் ஆகையால்இதையொழித்து வெய்யிற்காலம் வருகிறவரைக்கும் தயைசெய்யவேண்டுமென்று சரணம்புக அப்படியே ஆகட்டுமென்றுசொல்லி நீயுங்கிட்கிந்தை போயிருக்கக் கடவதென்றார் நல்லதென்று நமஸ்கரித்து நடக்க ஸ்ரீராமலட்சுமணரும் பர்னகசாலை ஏற்படுத்திக்கொண்டு மலைச்சார்பிலிருந்து சிதையைக்குறித்து விசனமடைந்திருந்தார் சூரியபகவானும் மகாராசியில் வந்து பிரவேசித்தான். உடனே ஸ்ரீராமர் தம்பியைநோக்கி மழைக்கால் நீங்கி

னவுடனே வருகிறேனென்றுபோன சுக்ரீபன்வராமையால் அழைத்துவாவென் றனுப்பவும் இவரைக்கண்டவுடனே சுக்ரீபன்முதல் யாவரும் ஸ்ரீராமரிடம்ஓடிவந்துவணங்கி நான்குதிசையி லிருந்துவரும் வானரப்படைகளைச் சேகரித்தார்கள்.

சீதையம்மனைத்தேட அனுமார்முதலிய
வர்களை யனுப்புதல்.

அப்படியிருக்க ஆஞ்சனேயர்சொல்லுகிறார் சுவாமி! சேனைகள் கூடுமுன்னுகை எனது தாயாரிருக்கும் இடத்தை முன்னக்தெரிந்துகொள்ளவேண்டுமென்று சொல்ல, ஸ்ரீராமரும் சுக்ரீபனும் யோசித்து கிழக்கு வடக்கு மேற்கு இந்தமூன்றுதிசைகளும்போக வானரங்களை அனுப்பிவை தெற்குந்திசைக்கு அனுமார் அங்கதன்சாம்புவந்தன்முதலிய வானரவீரர்கள்அநேகம்பேரை அனுப்பிவைத்தார்கள் மற்றமூன்றுதிசைகளுக்கும்போன வானரங்கள் சீதையம்மனைத்தேடிக்காணாமல் ஒருமாதத்திற்குள் ஸ்ரீராமரிடம்வந்து தெரிவித்து வணங்கினின்றார்கள். தெட்சண திசையிற்போன அனுமார் முதலாகிய வீரர்கள் பற்பல விடங்களிலுந் தேடிக்கொண்டுபோகையில் மிகுந்தஇருளுடனே ஒரு பிலத்துவாரத்தைக்கொண்டு அதிலேவழிதெரியாமல் கால்களில் தடவிக்கொண்டுபோகையில் அங்குபிரகாசம்பொருந்திய ஒரு பட்டணம் காணப்பட்டது அதற்குள் புகுந்தோடிப்பார்க்கையில் விரித்தசடையும்சரிந்தசடையும் சரிந்தஉடையுமாய் யோகஞ் செய்தவர்களைப்போல அறைக்கண் பார்வையாய் மூடிக்கொண்டு தபசிலிருக்கிற சுயம்பிரபையென்கிறதெய்வப்பெண்ணை அனுமார்முதலாகிய பேர்களும் சீதாதேவியார்இவள் தானோ அல்லவோவென்று அனுமானங்கொண்டு அவ்விமானத்தில் நின்று ஸ்ரீராமமந்திரங் கேட்டவுடனே அந்த சுயம்பிரபைக்குயிட்ட சாபம்நீங்கி யனுமாரால் பிலத்துவாரத்தை விட்டு சகலமும் வெளியில்வந்து அனுமாரிடத்தில் விடைபெற்று தேவலோகமபோய்ச் சேர்ந்தாள் அதை யனுமார்முதலிய யாவருங்கண்டு சந்தோஷித்து அவிடம்விட்டு வெளிப்பட்டு தெற்கு நோக்கிச்சென்று பட்டணங்கள் நாடுகள் நகருகள் மலைகள் குகைகள் வனமுதலிய யாவுந்தேடி தென்சமுத்திரக்கரை வந்துசேர்ந்து மாலியவந்த மென்னும் கிரிமுதலிய இடங்களுந்தேடி தாயார் அகப்படாமையால் நாமென்னசெய்வோம் ஸ்ரீராமரிடத்திற் சென்று அம்மனைக்காணோமென்றுசொல்ல அதினும்புண்ணியசாலியாகிய சடாயுவை அப்படி மகேந்திரகிரி லோகமென்றபோல ஸ்ரீராம காரியத்தில் நாமும் பிராணனை விட்டுவிடுவோம் விட்டால்நற்கெதியடையலாமென்று அனுமார்முதலியவர்கள் பேசிக்கொண்டிருந்தார்கள்.

சம்பாதிவரலாறு.

அந்தவேளையில் விபீணர் அனுமார் அங்கதன் பின்பு வந்தார் முதலியபேரும் தாயாரிருக்கும அசோகவனம்வந்து செயங்கூறி சோபனம்பாடி தாயார்பாதங்களில் முடிசூட்டி ராமருடைய செயத்தைப் புகழ்ந்து சுவாமியின் உத்திரவின்படி தரிசனத்திற்கு எழுந்தருளவேண்டுமென்று இறைஞ்சி சொல்ல அந்தச்சொல்லை சீதாதேவியார் தேவாமிர்தம்போற் கேட்டு அவ்விடம் விட்டெழுந்து திரிசடையுடனே ராமர்பாதங்களில் தெண்டனிட்டுக் சமீபத்தில் நிற்க அதைக்கண்டு தேவதேவன் சீதையைப் பார்த்துச் சொலலுகிறார் ஒரு அரக்கன் தொட்டெடுத்துப்போய் பத்துமாதஞ் சிறையில் வைக்கவும் பிராணனுடனிருந்து நம்மிடத்திற்குவாவும் நாம் அங்கீகரிக்கவும் உலகம் பழிக்கவும் என்னுடல் நடுங்கி இலச்சைப்படவுமாகபிருதயங்களுக்கு உடன்பட்டு யுத்தஞ்செய்து உன்னை மீட்கலந்த நாங்களல்ல எங்கள் ஐயா சடாயுவைக்கொன்றபழியை முடித்துக்கொள்ளவந்து வெற்றிக்கொண்டோமேயன்றி மறுவில்லாச் சூரியகுலத்திற்கு வடுவுதேடிக்கொன்ளவந்த நாங்களல்ல ஆகையால் மாசற்றவன் இன்னும் வாகையைத்தெரிவித்தால் உன்னை ஒப்புக்கொள்ளலாகும் என்றுசொல்லிய இறைவன் மொழியைக்கேட்டு பக்கத்தில் ஒருவரும் ஒன்றுஞ்சொல்லா திருப்பதைப் பார்த்து அம்மன்சொல்லுகிறுள் சுவாமி அரக்கன் வஞ்சித்து என்னை அபகரித்தான் அவனும் புத்திரமித்திர களத்திராதிகளும் தேவரீருடைய கைபாணத்தில இறந்தபிற்பாடு சரீரத்தை விட்டுவிடுவது தருமம் ஆதலால் இப்போது அவன் இறக்கக்கண்டேன் இனிமேல் நான்பிறந்த குலத்திற்கும் பெருமையுண்டாகும்படியாய் அக்கினிப்பிரவேசமாகிறேன என்று நமஸ்கரித்துத் திரும்பி அங்கதன் அனுமார் சுக்ரீபன் விபீஷணன் இயாவர்களைப்பார்த்து அருள்புரிந்து இளையபெருமாளை நோக்கி என் வினைவசத்தால் உம்மை யிகழ்ந்துபேசினேன் அந்தக் குற்றத்தை மனதில்வைக்காமல் அக்கினி விரத்திடனைக் கொடுக்க வேண்டுமென்று கேட்க அண்ணனுடையமனது அறிந்த தம்பியானவர் ஒரு நொடிப்பொழுதில் அக்கினியை வளர்க்கவும் வைதேகியார் அந்த அக்கினியைப் பிரதட்சணம்பண்ணி எனது வர்க்கினும் மனத்தினும் சகாயத்தினும் குற்றங்களுண்டாயிருக்குமாகில் என் சரீரத்தைக் கொளுத்தி சாம்பலாகக்கடவதென்று இரவிகுலபுங்கவனை இதயத்திருல் சிந்தனைசெய்து அன்னமானது செந்தாமரைத் தடாகத்தில் இறங்குந்தன்மைபோல் அக்கினியில் பா

ய அந்த அக்கினி தேவன் நாயாரைக்கரத்திலேந்தி
ராமமூர்த்தியைவணங்கி சுவாமி உலகத்திலுள்ள இயா
வற்றையும் சுடுகின்ற என்னை இந்தகற்பின் சுவாலை சுடு
கின்றது என்றுவைத்து வணங்க மகாலட்சுமியைக்
கண்டு ராமரும் இலட்சுமணரும் மனமகிழ்ச்சி கொள்
ளவிசனப்பட்ட வானர வீரர்கள் முதலியபேரும் புள
காங்கிதங்கொள்ள பிரமதேவன் முதலிய தேவர்களும்
ரிஷீஸ்வரரும ராமசந்திரரைக் கண்டு அவர்களுடைய
வீரப்பிரதாபங்களை வாழ்த்திப்புகழ்ந்து நாயாருடை
ய கற்பையும் பதிவிரதாபத்தையும் தெரிவித்து பாத
தரிசனமும் செய்துவைத்து அயோத்தியா புரிக்குப்
போய் பட்டாபிஷேகம் பண்ணிக்கொண்டு சீதாலட்
சுமண பரதசத்துருக்கன் அனுமசமேத ஸ்ரீராமச்சந்
திர மூர்த்தியும் வாழக்கடவதென்று வாழ்த்தி உமக்கு
வேண்டியவரங்களைக் கேட்டால் தருகிறோமென்று
சொல்ல அதைக்கேட்டு ராமர்சொல்லுகிறார் என்னு
டனவந்த எழுபத்திரண்டு வெள்ளம் வானரப்படைக
ளும் பதினெட்டு படைத்தலைவர்களும் யாதொரு கு
றைவில்லாம லிருக்கவேண்டுமென்றுகேட்க அப்படி
யே அருள்புரிந்து வழிபாடு தங்கள் இடம்போய்ச்
சேர்ந்தார்கள் மாதலியும் திருத்தேரைக் கொண்டு
போனான் இப்பால் ராமர் ஜானகியைநோக்கி ஆலிங்க
னஞ் செய்துகொண்டு உன்னுடைய பதிவிரதா தரு
மம யாவருக்குந் தெரியும்படிச் செய்தேயல்லது வே
றல்லவென்று சந்தோஷித்து தானும்படைவீரர்களும்
சுகமகிழ்ந்திருந்தார்கள்.

ஸ்ரீராமர் முதலியவர்களும் இலங்கையைவிட்டு பரத்துவாசர் ஆசிரமம்வருதல்.

இப்படியிருக்க ஸ்ரீராமமூர்த்தியானவர் விபீஷ
ணரைப்பார்த்துச்சொல்லுகிறார் நாம் அயோத்தியை
விட்டு வனம்வரும்போது என் தம்பிபரதனுக்குப்பதி
னாலு வருஷஞ்சழித்து தசமினன்று வருகிறேனென்று
சொல்லி நான்வந்தபடியால நாம்சென்று அவனைப்
பார்க்கவேண்டியது என்றுசொல்ல உடனே விபீஷ
ணர் புஷ்பக விமானத்தைக் கொண்டுவந்து வைக்க
அதில் இயாவர்களு மேறிக்கொண்டு மந்திரத்தைச்
செபிக்க க்ஷணப்பொழுதில் இலங்கைப்பட்டண முழு
மையும் சுற்றிவர அப்போ ராமர் சீதையம்மனுக்கு
இலங்கையின் விநோதங்களைக் காண்பித்து திவிவணை
யைத்தாண்டி கிஷ்கிந்தைக்கு வந்து தாரைமுதலாகிய
வர்களை யழைத்துக்கொண்டு கம்பாநதி சடாயுயிறந்த
இடம் அகஸ்தியர் ஆசிர்மம் பஞ்சவடிதீரம் இயாவற்
றையும் காண்பித்து பரத்துவாசர் ஆசிரமத்தில் இற
ங்கிபோசனத்துக்கு ஒப்புக்கொண்டிருக்க ஸ்ரீராமர்
அனுமாரையனுப்பி குகப்பெருமானையும் பரத சத்து
ருக்கனையுங்கண்டு என்வருதலை சொல்லி வரக்கடவ
தென் றனுப்பினர்.



அனுமார் பரதமகாராஜனுக்கு ஸ்ரீராமர் வருதலை யுரைத்தல்.

அப்போது அனுமாரானவர் ஸ்ரீராமஜெயமென்
றந்தரத்திலெழும்பி கங்கைக்கரையில் வந்து ஓரிடத்
தில் பந்துக்களுடனிருந்து ராமனைக்காணேனென்று
கங்கையில் ஓடத்தை கவிழ்க்கப்போகிற குகப்பெரு
மானுக்கு ராமர் இதோ பரத்துவாசர் ஆசிர்மத்தில்
வந்தாரென்று சஞ்சீவிமருந்து உதையத்தைப்போல்
குகப்பெருமானை நிலைநிறுத்திவிட்டு நந்திக் கிராமத்
துக்கு வரும்போது கோசலைமுதலிய தாய்மார்களும்
பட்டணத்து சனங்களெல்லோரும் விசனப்பட அக்
கினியையவளர்த்தி பரதமகாராசன்மூன்றாவது சுற்றில்
விழப்போகுஞ் சமயத்தில்வந்தான் ராமன் என்று
வானத்திலிருந்து மழைபோற்குதித்து அக்கினியைய
வித்து அருள்மொழிகொடுத்து ராமர் அயோத்தி
நீங்கி ஆரணியஞ்சேர்ந்து சூர்ப்பநகையை மூக்குமுலை
யையறுத்து கரதூஷணரைக் காய்ந்து மாய மானைக்
கொன்று இராவணன் சீதையைக் கொண்டுபோய்க்
கிட்கிந்தைக்கு வந்து வாலியைக்கொன்று சுக்கிரீபனுக்
குப்பட்டந்தரித்து வானரவெள்ளங்களுடன் கடலைத்
திருவணைகட்டி இலங்கையிற்சென்று இராவணன் மு
தல்யாவரையுங்கொன்று சீதையம்மனுடன் பரத்து
வாசருடைய ஆசிர்மத்தில் வந்திருக்கிறார் நான் ராம
ரது தூதன் என்பெயரனுமான் என்று விளம்பி எழு
ந்து கிளம்பி ஆசிர்மத்திற்குவந்து ராமருக்குரைத்து
இயாவருடனும் சம்பந்தியிலிருந்து ராமருடைய பரி
கலம்வாங்கி புசித்துப்பின்பு ராமர் ரிஷிகள் முதலிய
பேர்களை நோக்கி உங்கள் ஆசிர்ம வசனத்தினாலும்
இந்த அனுமாருடைய பேருதவியாலும இராவணசங
காரம் செய்ததென்று புகழ்ந்து வாழ்த்த எல்லவரு
மகிழ்ந்து ஆசிர்வதித்தார்கள் அன்று அவ்விடத்தில
ருந்து மறுநாட்காலமே புட்பகத்தேறி நிலவி வருகை
யில் வந்த குகனை அழைத்துக்கொண்டு அயோத்தியா
புரிபட்டணம்வந்து சேர்ந்தாகள்.



ஸ்ரீராமஜெயம்.

ஸ்ரீராமர் பட்டாபிஷேகம்.

பரதன் சத்துருக்கன் மந்திரிமார்கள் பட்டினத்துச்சனங்கள் ஜனகன் முதலிய பேர்களும் கோசலதேசாதிபர் கேகயதேசாதிபர் முதலிய சகலதேசத்தரசர்களும் வந்துநெருங்கி வணங்க வதிஷ்டாதிமுதலிய மகாமுனிவர்களுக்கும் தாய்மார்களுக்கும் தானும் தம்பியுஞ் சீதையும் வணங்கிச் சகலசெய்திகளையும் சம்பிரமாகப் பேசியிருந்து எல்லோருக்கும் விடுதியமைத்து இயாவருமிக்க எழுபத்திரண்டு வெள்ளம் வானரச்சேனையும் படைத்தலைவர்களும் நிறைந்திருக்க எந்த லோகமும் இந்தலோகத்திற்கு ஈடில்லையென்று எவர்களும் புகழ ஸ்ரீமந்நாராயணனுடைய கர்ப்பம்போல நலம்பெற இருக்க வதிஷ்டர் முதலிய மகாமுனிவரும் தாய்மார் முதலிய தம்பிமார்களும் மந்திரிமார்களும் மண்டல முழுமையும் எண்டிசையாவரும் அண்டரும் இயாவரும் தொண்டர்கள் பலரும் கண்டுகளிக்க விண்முடிசூட்ட இன்றுநாள் நன்றெனா் வதிஷ்டர் தம்பியருடனே சடைமுடிகளைந்து அம்புவியாள அணிமுடி தரிக்க புண்ணிய தீர்த்தம் டரிதமாய் மூழ்கி மண்ணில் வேதியர் வாழ்த்தி அட்சதைகள் எண்ணிலாதளிக்க எவர்களுங்களிக்க மந்திர ஓமாக்கினி முதல் வளர்த்தி சுந்தரன்றன்னைத் துலங்க அணிய சீதா சமேத ஸ்ரீராமரெழுந்து சிங்காசனத்தில் ஜெயமுடனிருக்க என்கோன் வதிஷ்டர் எடுத்தணிமுடியை திங்கள் மும்மாரி சிர்பெற வழங்க வேதம்வாழ்க. தேவாலயர் தினந்தோறும் வாழ்க சத்தியமாக மன்னுயிரியாவரையும் நின்னுயிர்ப்போல் காத்தாட்சிக்கக் கடனெனக் கொன்றே மங்களவோசையழையன் முழங்க தருமந்தழைங்க தானம் ஓங்க வரிசையாய் அரசர் வரியிறைகொடுக்க மந்திரிமார்களும் மறுமுறை கூற பகைவரின்றித் தொலையிலாச் செல்வம் நாளுக்குநாள் அபிவிர்த்தியாக பானையோதியாம் பாவைசானகியும் பரத சத்துருக்னர் இலட்சுமணருடனே இயாவருங்களிக்க அயோத்தியை ஆண்டனன் காயாம்புவர்ணன் களங்கரகிதன் இரவி குலத்துங்கன் ஸ்ரீராமன் யென்றும் இச்சரித்திரத்தை இயம்பினோர் கேட்டோர் நிச்சயமாக நினைத்துக் துதித்தோர் எழுதினோர் ஒருவருக் கின்பமாய்ச் சொன்னோர் இயாவருங்களித்து இதத்தின்வாழ்வது பாதத்தினற்பயனும் பண்புடனடந்து ஐயன் திருவடி படைத்து வாழ்வாரே.

ஸ்ரீராமாயணவசனம் உயுத்தகாண்டத்துடன்
ஆறுகாண்டம் முற்றிற்று

ஸ்ரீ

ஸ்ரீராமஜெயம்.

ஸ்ரீராமாயண வசனமாகிய

ஏழாவது உத்தரகாண்டம்.

குபேரன் கதை.

பூலோகபீடத்தில் சுவர்க்கலோகம்போல் விளங்கும் அயோத்தியாபுரி பட்டணத்தில் தேவேந்திரன் சபையைப்பார்க்கிலும் அதிக சிங்காரம் பொருந்திய கொலுமண்டபத்தினடுவில் ஸ்ரீராமரானவர் ஸ்ரீமகாலட்சுமியாகிய சீதாதேவிசமேதராய் சிங்காதனத்தின் மேவி வசிஷ்டர் முதலான மகாரிஷிகளும் தேவேந்திரன் முதலான சகலதேவர்களும் வேதப்பிராமணர் முதலிய சகலரும் நிறைந்திருக்கவும் அங்க-வங்க-கலிங்க-காஸ்மீர-மகத-குந்த-மாளவ-சாளுவ-மச்சர-குற்ச-கேகய-கோசல-கௌளவி-கோவிதர்ப்ப-பண்டிய-பாஞ்சால-பற்பர-சிந்து-சௌராஷ்டிர-கொங்கண-நேபாள-மராட-விராட-கர்நாடக-முதலான தேசராஜாக்கள் வணங்கவும் பதினெட்டுவகை வாத்தியங்கள் முழங்கவும் இன்னம் அநேக சம்பிரமத்துடன் கொலுவாக யிருக்குஞ் சமயத்தில் ஸ்ரீராமர் சமதக்கினி முதலான மகா யோகிகளைப்பார்த்து தேவரீருடைய ஆச்சிரமங்களும் யாகசாலை முதலானதுகளும் சுகமோவென்றுகேட்டார் அப்படிகேட்ட ராமரைப் பார்த்து மகா சந்தோஷமடைந்து சொல்லத்தொடங்கினார்கள் கேட்பீர் ராகவரே சகல லோகங்களும் ரட்சிக்கும்படியாய் மிகவுபத்திரவந்தந் துஷ்டனான கும்பனிகும்பன் மகம்பன மகாதரன மகா பாரிசுவன் தூம்பிராட்சதன் விருபாட்சன் அதிகாயன் பிரகஸ்தன் கும்பகர்ணன் இன்ன முதலானவர்களும் சேனாதிபதிகளும் இராட்சதசேனையும் மூலபலமும் வசக்ரீவனும் யுத்தகளத்திலே மடிந்து வெற்றி பெற்று வாகைமாலை சூடிய விஜயகோதண்டபாணியாகிய தேவரீரும் இந்திரனை மாயாபாசத்தினாற் கட்டிச்சிறையில் வைத்த இந்திரசித்தை சங்கரித்து வெற்றி பெற்ற இலட்சுமணருமிருக்க எங்களுக்கு ஒரு குறையுண்டாகுமோ வென்றுசொல்லி வாழ்த்தினார்கள் அப்படிசொல்லிய ரிஷிகளைநோக்கி இராகவர் சொல்லுகிறார் தசக்கிரீவன் கும்பகர்ணன் இந்திரசித்து முதலியவர்களுடைய உற்பத்தியும் அவர்கள் பெற்ற வரமும் இராட்சதர்களுடைய உற்பத்திகாரணமும் நன்றாய்த் தெரிவிக்க வேண்டுமென்றுகேட்க ரிஷிகளெல்லாம் அகஸ்தியரைப் பார்த்து நீர் சொல்லுமென்று சொல்ல இராமரைப் பார்த்து அகஸ்திய முனிவர் சொல்லத்தொடங்கினார். பர்வதராச புத்திரியாகிய பார்வதா தேவியாரும் உன்மசத்தி யுண்டாகிய எல்லாருக்கும் தானே பின்னை

கேளும் இரகுநந்தனா ஸ்ரீமகாவிஷ்ணுவினுடைய நாபிக்கமலத்தினிலே அவதரித்த சதுர்முகப்பிரமதேவர் புத்திரராகிய புலஸ்திய பிரமாவானவர் திரணபிந்து மகாரிஷியின் புத்திரியாகிய குணவதியை மணம்புரிந்து விச்சிரவாவென்பவர் பரத்துவாசர் புத்திரியாகிய தேவவள்ளியென்னும் கன்னிகையை விவாகஞ்செய்து வைச்சிரவணனென்னும் புத்திரனைப்பெற்றார். அப்புத்திரன் பதினாறு வயதுக்குள் சகல கலைக்கியானங்களும் ஓதியுணர்ந்து தபோவனத்திற்சென்று பிரமதேவரை நோக்கித் தபஞ்செய்து திக்குப்பாலகருடன் தான் ஒரு திக்குப்பாலகனாகவும் நவநிதிக்கதிபதியாகவும் வரம்பெற்று நினைத்த இடங்களெங்கும் போய் மீண்டுவருவதால புஷ்பக விமானமும்பெற்று வைச்சிரவணனாகிய குபேரன் பிதாவாகிய விச்சிரவாவினிடம் வந்து அவரால் லங்கைசேர்ந்து சகலதேவர்கள் தன்னை வணங்கும்படியாய் செல்வச்சிறப்புடன் வாழ்ந்திருந்தான்.

அசுரர்கள் உற்பத்தியின் கதை.

கேளும் ராமரே பூர்வமொருக்காலம் பிரமதேவரானவர் பதினாலுலோகங்களையுமுண்டாக்கி சகலசீவகோடிகளையும்படைத்து அதில் அறிவுள்ள பிராணிகளைப்பார்த்து இந்த லோகங்களை ரட்சிப்பீரென்று பொதுபடச்சொன்னார். அதில் சிலபிராணிகள் யக்ஷசன் என்று சொன்னார். சிலபிராணிகள் யட்சரட்ச என்றுசொன்னார். அவர்கள் சொல்லியபடியே யக்ஷயென்றவர் யட்சர்களும் ரட்ச என்றவர் ராட்சதர்களுமாகக் கடவிரென்ன அந்தராட்சதரில் எதியென்றும் பரகதியென்றும் அண்ணன் தம்பிகளிருவரில் பரகதியென்னப்பட்ட மூத்தவன் தனக்கொருவரும் நிகரில்லையென்று மேம்பாடுடையவனாகயிருந்து யமனுடைய தங்கையாகிய பயையென்பவளை விவாகஞ் செய்து வித்யுற்கேசனென்னும் புத்திரனைப்பெற்றான். அப்புத்திரன் சாலகடங்கடையென்னும் கந்தருவப்பெண்ணை மணம்புரிந்து தங்களுக்கிஷ்டமான விடங்களில் சுகமாக போகம் அனுபவிக்க அவன் ஒரு குழந்தையைப்பெற்று பிறந்த இடத்திலே எறிந்துவிட்டு தன் கணவன்பின்னே தொடர்ந்துபோனாள். பரமசிவனும் பார்வதாதேவியாரும் உலாவிவரும்பொழுது பரமசிவன் அக்குழந்தையைப் பார்த்துக் கிருபைகூர்ந்து நிறைந்த ஆயுசும் யௌவன பருவமும் அழகும் பலமும் உண்டாகக்கடவதென்று அனுக்கிரகஞ்செய்தார்

யாகப்பிறக்கவும் அப்பிள்ளைக்கு பெற்றதாய்க்குள்ள
பருவமுண்டாக வேணுமென்று அருளிச்செய்தாள்
அப்படி யவர்கள் கொடுத்த வாத்தினுலே சகலசம்பத்
தும்பொருந்தி ஒரு பெரியநகாத்திலே தேவேந்திரனை
ப்போல சுதேசமென்னும் பெயர் வகித்து வீற்றிருந்
து தெய்வத்திரையென்னும் கந்தருவபபெண்ணைக் க
லியாணஞ்செய்து அவள் வயிற்றில்மாலியவான் சுமா
லியென்று மூவர் பிறந்து உலகத்திலுள்ள எல்லாப்பி
ராணிகளும் ஏங்கிப்பயந்து நடுங்கும்படிக்கு நாளுக்கு
நாள் செழிப்பாய் வளர்ந்து மகமேருவுக்கு வடபாரிச
த்திலிருக்கும் தபோவனத்தைச்சார்ந்து அசுரர் முத
லிய யாவரும் நடுக்கமுற அப்போ பிர்ம்மதேவர் பிரச
ன்னமாகி தேவர்கள் அரசர்கள் மூதலிய யாவராலுஞ்
செயிக்கப்படாத பலமும் குறைவில்லாத ஆயுசும் சக
ல அஸ்திரங்களும் இவைமுதலாகிய அஸ்திரங்களைக்
கொடுக்க அந்த வரங்களை இம்மூவரும் பெற்று தேவ
ர்கள் முதலிய யாவரையும் இடுக்கணஞ்செய்து விசுவ
கர்மாவையழைத்து தேவலோகத்திற்கு மதிகமானதா
ய் நாங்களிருக்க ஒருநகரமுண்டாக்க வேணுமென்று
சொல்லி பூருவத்தில் ஆதிசேடனுக்கும் வாயுபகவானு
ல் மகாமேரு சிரங்களில் என்று முறிபட்டு தெட்சண
சமுத்திரத்தில் விழுந்திருந்த சிகரத்தின்மீதில் மாட
மாளிகை கூடகோபுரங்களில் ஆஸ்தான மண்டபங்க
ள் புஷ்பதடாகங்கள் இன்னு மனேக விசித்திரமாக நி
ருமித்து இலங்காபுரியென்று பெயரிட்டார் விசுவகர்
மாவானவர்.

மாலியவான் கதை.

அந்த இலங்காபுரி பட்டணத்தில் மாலியவான்
சுமாலி மாலி யென்னப்பட்டவர்கள் மூன்றுலோகத்தி
லுள்ள யாவரும் தங்களுடையஆக்கினைப்பிரகாரம் ஏ
வல்கேட்டு நடக்கும்படி ராஜரீகஞ் செய்துக்கொண்டி
ருக்குங்காலத்தில் கந்தருவ குலத்திற் பிறந்த தரும
தை என்பவளுடைய புத்திரிகள் மூவரில் மூத்தவளா
கிய சுந்தரியென்பவளை மாலியவானும் அவளுக்கிளைய
கன்னிகை மாலிகை விவாகஞ்செய்துக்கொண்டு மகா
சந்தோஷமடைந்திருக்க மாலியவானுக்கு வச்சிரமுஷ்
டி விருபாட்சன் துன்முகன் பாபசித்தன் நியாயகோ
பன் மகதன் உன்மத்தன் என்று யேழுபேர் பிறந்தா
ர்கள் சுமாலிக்கும் கைகேசிக்கும் பிகிசியென்று இர
ண்டுபெண் பிறந்ததுகள் மாலிக்கு குரூரயுத்தன் நீல
ன் நிலயன் சம்பாதியென்று நாலுபேர் பிறந்தார்கள்
இப்படியாகப் புத்திரர்களைப்பெற்று தனக்கொருவரு
ம் நிகரில்லாமல் தேவேந்திரன் முதலிய சகலதேவர்க
ளையுந் துன்பப்படுத்தி குரூரசுண்டமான அதிகாரஞ்
செய்து வருங்காலத்தில் மூன்றுலோகத்திலுள்ள ரிஷி
கள்தேவர்கள்முதலியசகலரும் பரமசிவனிடத்திற்செ
ன்று வணங்கி மாலியவான் முதலான ராட்சதர்களா
ல் தாங்கள்படுந் துன்பங்களைச் சொல்லி முறையிட்
டார்கள் அப்போது பரமசிவன் பார்த்து அவர்களுக்
கு கொடுத்த வரமாகையால் நாமேயழிப்பது தருமம
ல்ல ஆகையால் மகாவிஷ்ணுவினிடம் நீங்கள் போய்ச்
சொன்னுல் அந்த ராட்சசர்களை சங்கரிப்பரென்று அ
னுக்கிரகஞ்செய்தார் அப்படியேபோய் ஸ்ரீமந்நாராய
ணமூர்த்தியைக்கண்டு நமஸ்கரித்து சுவாமி மாலியவா
ன் சுவாமி மாலியென்னும் மூவரும் அவர்களுடைய
புத்திரமித்திர வர்க்கங்களும் ராட்சத சேனைகளும் தி
ரிலோகத்தையும் அதஞ்செய்து எங்களையும் அதிகவ
ருத்தப்படுத்துகிறூர்களென்று முறையமிட அதைக்
கேட்டு நாமே அந்த துஷ்டாரகிய ராட்சதாளைச் சங்க
ரித்து ரட்சிக்கிறூமென்று சொல்ல அவ்வனுக்கிரகம்
பெற்று தங்களிருப்பிடம் போய்ச்சேர்ந்தார்கள் அப்
படியிருக்க இவையெல்லாம் உலகமெங்கும சஞ்சரித்
து சமாச்சாரங்களை விசாரிக்கும் சாரணர்கள் கேள்வி
ப்பட்டு சீக்கிரமாக இலங்கைக்குப்போய் தங்களுடை
ய அசுரராஜனுக்குச்சொல்ல அவ்வசனத்தைக்கேட்டு
மிகவுங்கோபங்கொண்டு அந்த தேவர்களை இட்சண
மே அதஞ்செய்யவென்று ரதகஜதுரக பதாதிகளாகிய
நால்வகைச் சேனைகளையுங்கூட்டி யுத்தகோலமாய்வர
அதைக்கண்டு தேவர்கள் அஞ்சி தேவதூதனுல் நாரா
யண மூர்த்தியானவர் பஞ்சாயுதபாணியாய் வஸ்துவா
பரணமுதலிய ஆபரணந்தரித்து கருடபகவான்தோளி
லேறி யந்தராட்சத சேனைகளிற் புகுந்து அனேகயுத்
தங்கள்புரிந்து கண்டதுண்டங்கள்செய்துசக்கரத்தை
விட்டுமாலியென்பவனுடையசிரசைக்கண்டிக்க அதை
மாலியவான் சுமாலி இருவரும் பார்த்து பயந்து இல
ங்கைக்கு வோடிப்போய் மிச்சமிருந்த ராட்சத சேனை
களைக் கூட்டிக்கொண்டு பாதாளலோகத்திற்குப் போ
ய் மறைந்துக்கொண்டிருந்தார்கள்.

அப்படி அந்தப் பாதாளலோகத்திலே அநேக
காலம் துன்பப்பட்டுக்கொண்டிருக்கும்நாளையில் ஒரு
நாள் மாலியவான் இருவருங்கூடி நாமெத்தனைகாலம்
இந்தத்துன்பத்திலிருப்போமென்றுலோசித்து மாலிய
வான் சொல்லுகிறுன் கேளாய் தம்பி நீபெற்ற கன்னி
களிருவரில் மூத்தப் பெண்ணுனவள் இந்த மூன்று
லோகத்திற்கும் ராசாக்களாயிருக்கத்தக்க புத்திரர்க்
குத் தாயாவதற்கும் பிரமதேவனுக்குச் சமானமான
ஒரு புருஷனுக்கு ஸ்திரீயாவதற்கும் ஏதுக்காயுள்ள
உத்தம லட்சணங்களைப் பொருந்தியிருக்கிறுள் ஆன
தால் இந்தப் பெண்ணினுலே நாமும்சுகப்படலாம் கு
லமும் விர்த்தியாகும் இப்படிசெய்வாயென்று தமயன்
சொல்லியதை உண்மையாகக்கொண்டுஅந்தயோசனை
முடியும் உபாயத்தை தேடினவனுகி தனதுபுத்திரியா
கிய வைதேகியை யழைத்துக்கொண்டு பாதாளலோக
த்தைவிட்டு பூலோகத்தில்சஞ்சரித்து வரும்பொழுது
இலங்கைப் பட்டணத்தில் ராசரீகஞ் செய்துக்கொண்
டிருக்கும்குபேரனுனவன் அனேகதேவர்களுடன்புஷ்

பகவிமானத்தின் மேலேறி கயிலாயகிரிக்குப் போனார் அதைக்கண்டு சுமாலியானவன் பொருமைபட்டுக் கேளாயம்மா நாங்கள் மூவரும் சகலசம்பத்துடன் ராசரீகஞ் செய்துக்கொண்டிருந்த எங்கள் காணியாட்சியாக லங்காபட்டணத்திலே இந்தக் குபேரனிருந்து ராசரீகம் பண்ணும்படியான காலம் நேரிட்டதே யென்று சொல்லிப் பின்னுமிந்தக் குபேரனுக்கு இவ்வளவு செல்வமுண்டானது இவன் பிதாவாகிய விச்சிரவாவென்பவருடைய மகிமையல்லது வேறில்லை ஆனதால் நீயும் அந்த விச்சிரவாவென்பவரிருக்கு மிடத்திற்குப்போய் அவருன்னை கூடும்படிக்கு உபாயஞ்செய்து புத்திரரைப் பெறுவையேயானால் அந்தப் புத்திரராலே நமக்குப் பகைவராயுள்ள இந்தக்குபேரன் முதலான தேவர்களையும்வென்று நாமும்லங்காபுரியில் வாழ்ந்திருக்கலாமென்று சொல்ல அப்படியே செய்கிறேனென்று விச்சிரவாவென்பவர் சாயங்காலம் சந்தியாவந்தனஞ்செய்யுஞ்சமயத்தில் அவருக்கெதிரில் கண்டோர்மயங்க அதிதியைப்போல அடுத்து கலசங்கள்போல் நெருங்கிய கொங்கைகளின்மேல் முக உத்தரீயத்தை அடிக்கடிவிலக்கி முடிகாட்டி மறைத்து புன்சிரிப்புடனே மயங்கிநின்றாள்.

விச்சிரவானவர் அவளைப்பார்த்து மோகங்கொண்டு நீயாரென்று கேட்க நான்யசுரேந்திரராகிய மாலியவான்றம்பி சுமாலியினுடைய புத்திரிஎன்பெயர் கைகேசி நான்வந்தகாரியம்தேவரீர் திருவுளத்திற்குதெரிந்திருக்குமென்று சுபமாகச்சொல்ல அதைக்கேட்டுபின்னும் அனேக மோகங்கொண்டு பெண்ணே நீ புத்திரார்த்தமாக வந்தாய் வந்தவேளைசந்தியாவந்தனமான மாலைப்பொழுதாகையால் நம்மோடு கூடிப்பெருகின்ற புத்திரர்கள் மிகவுந்துஷ்டர்களா யிருப்பார்களென்று சொல்ல கைகேசியானவள்சுவாமி உம்மைக்கூடி பெருகிற புத்திரர்கள் துஷ்டர்களாகப் பிறக்கலாமோவென்று உபசரித்துச் சொல்லியதைக்கேட்டு சந்தோஷப்பட்டு எல்லாருக்கும் இளையவனாகப் பிறக்கிறவன் சற்புத்திரனாக யிருப்பானென்றுசொல்லியபொழுதே அவளுடன் கூடியனுபவிக்குஞ்சமயத்தில் கருப்பமுண்டாகி பத்துதலைகளும் இருபது கைகளுமுடைய தசக்கிரீவன் பிறந்தான் பின்னுமப்படியே அனுபவிக்கும்பொழுது முன்போல கருப்பமுண்டாகி இருண்ட நீலகிரிபோலச் சரீரமும் நெருப்புப்போலச் சிகையும் யர்த்த சந்திரனைப்போல வர்க்கதங்களையுடைய கும்பகர்னன் பிறந்தான் அதன்பின்பு பருத்தமுலையும் அனேகஅவலட்சணங்களுடன் பொல்லாத பாவியாகிய சூர்ப்பநகை பிறந்தாள் அதன்பின்பு மனமகிழ்ந்து கூடிப்புணர்ந்தார்கள் அப்போ மூவருக்கு மிளையவனாய் நல்ல குணமுடையவனாய் கீர்த்திவானாய் புலஸ்தியருடைய குலமுதலியவைகள் தழைத்தோங்கும்படியாய் வச்சிரவாவென்னப்பட்ட பிதாவைப்போல சற்புத்திரனான விபீஷணன் பிறந்தான் அதன்பின்பு தசக்ரீபன் கும்பகர்னன் இருவரும் பிதாவினிடத்திலே சகலவேதசாஸ்திரங்களுமோதி தனுர்வேதவித்தை முதலிய யாவற்றினும் வல்லவர்களாய்மதோன்மத்தராய் அந்தப்பிரதேசத்திலுள்ள தபோதனர்களெல்லோரையும் உபத்திரவம் செய்துக்கொண்டிருந்தனர் விபீஷணனானவன் பிதாவுக்கு மனமகிழும்படிபணிவிடைசெய்து அவரால் கலகாஸ்திர சம்பன்னனாய் யோக்கியத்தோடு கூடியிருந்தனன் சூர்ப்பனகியானவள் அடங்காதகாமவிகாரத்தை யுடையவளாய் ரிஷிகள் முதலிய யாவரையும் பற்றியிழுத்து நடுங்கும்படி வலியப்புணர்ந்து இன்பமனுபவித்துக்கொண்டு திரிந்தனள் இப்படியிருக்குங்காலத்தில் இவர்களைப்பெற்ற கைகேசியானவள் தன்பிதாவாகிய சுமாலியென்பவன்குபேரனைக்கண்டு ஆச்சரியப்பட்டுத் தனக்குபோதித்தமனக்குறை தீரும்படிக்கு சமயம்பார்த்திருந்தவளாதலால் தன்னுடைய புத்திராகியதசக்ரீவன்முதல் மூவரையும்பார்த்துநீங்களொரு சிறப்புமில்லாமல் இந்தவனத்தில் இப்படி யிருக்க உங்களுக்கு தாயாதியாகிய குபேரனானவன் நவநிதிச்செல்வமும் எல்லாச்சிறப்பு முடையவனாகிய பரமசிவனுக்கு தோழனுமாகிய உங்கள் பாட்டன்மார் அரசுசெய்திருக்க இலங்கைமா நகரத்திலே தேவர்களெல்லோரும் தன்னை வணங்கும்படி ராஜரீகஞ் செய்துக்கொண்டிருக்கிறானல்லவா இந்த அனியாயத்துக்கென்ன செய்வேனென்றுதுக்கப்பட்டு அதிகமோகமுண்டாகும்படி சொன்னாள் அந்த வசனங்களை யெல்லாம் மூவருங் காதிற்கேட்டு மனங்கொதித்து உதடுமடித்துப் பல்லை நெறநெறவென்று கடித்து தாயே அந்தக் குபேரனுக்கு இத்தனை மேன்மைகள் உண்டாயிருப்பது அவன்செய்ததபோபலத்தினாலல்லவோ ஆகையால் நாங்களும் தவங்களைச்செய்து அவனினு மேலானமேன்மைகளைப் படைத்து உன்மனக்குறை தீரும்படிச் செய்கிறோமென்று அப்பொழுதே விடைபெற்று அந்தமூவருந்தபோவனத்திற்சேர்ந்து தவஞ்செய்யத்தொடங்கினார்கள்.

அவர்களில் கும்பகர்னனானவன் பிர்ம்மதேவரை நோக்கி பஞ்சாக்கினி மத்தியிலிருந்து ஆகாரம் நித்திரை யில்லாமல் பதினாயிரம்வருடம் தபசுசெய்தான் விபீஷணனானவன் ஊசியைநிறுத்தி அதின்மேல் ஒருகாற் பெருவிரலை யூன்றி மற்றொருகாலை மடித்து இரண்டு கைகளையும் நீட்டிக் குவித்து ஐயாயிர வருடம் மடித்திருந்த காலைநீட்டி யூன்றியக்காலை மடித்து முன்போல ஐயாயிரவருஷமும் ஆக பதினாயிரவருஷந் தபசுசெய்தான் மூத்தோனாகிய தசக்ரீவனானவன் யாக

சாலைநிருமித்து அக்கினியைமூட்டி வளர்த்தியந்த அக்கினியிலே ஆயிரம் வருடத்துக்கொரு சிரசாக ஒன்பதினாயிரம் வருஷத்தில் ஒன்பது சிரசுகளை யரிந்து ஆகுதிகொடுத்து பதினாயிரம் வருடத்தில் பத்தாவது சிரசையும் ஆகுதிகொடுக்க வாளினா லறியும்பொழுது அந்தட்சணமே பிரமதேவர் பிரத்தியட்சமாகி உனக்குவேண்டிய வரங்களைக் கேள் தருகிறோமென்ன தசக்கிரீவன் பிரமதேவரை நோக்கி மானிடரை ஒருபொருட்டாக எண்ணாமல் தேவர்கள் முதலா யுள்ளவரும் என்னுடைய ஆக்கினைப்பிரகாரம் ஏவல்கேட்டு நடக்கும்படிக்கு எல்லா வல்லமையு முண்டாக வேணுமென்று கேட்க அப்படியே கொடுத்தோமென்று அனுக்கிரகஞ்செய்து பின்புவிபீஷணருக்குப் பிரசன்னமாகி உனக்கு வேண்டிய வரங்களைக் கேட்பாயென்று கூற விபீஷணன் வணங்கி சுவாமி பாபகிர்த்தியங்க ளென்னால் செய்யப்படாம லிருக்கும்படியாகவும் தேவர்கள் முதலான யாவராலுஞ் செயிக்கப்படாத வெற்றி மேன்மை பொருந்தி யிருக்கவும் வேண்டுமென்று கேட்க அப்படியே வரங்கொடுத்து பிர்மதேவனானவர் விபீஷணன் வரங்கேட்ட விவேகத்தைப் பார்த்து நீ யெப்போதுஞ் சிரஞ்சீவியாயிருப்பாயென்று அனுக்கிரகஞ் செய்ய வரும்போது தேவர்கள்முதலிய சகலரும் நடுங்கி பிரமதேவரை நோக்கி சுவாமி? உமக்கு நாங்கள் செய்த அபராதமென்ன இளங்கன்றை கொடும்புலிக்கிரையாய்க் கொடுப்பதுபோல் கண்டகனாகிய கும்பகர்னனுக்கு வரங்கொடுத்து அவனால் எங்களையழியச் செய்வதிலும் சிருஷ்டித்த நீரேசொல்வது மிகவும்நல்லதென்று முறையிட்டு வேண்டினார்கள். அதை பிர்மதேவர்கண்டு அந்தக் கும்பகர்னனால் உங்களுக்கு ஒரு துன்பமுண்டாகாதபடிக்குச் செய்கிறோமென் றனுக்கிரகித்து தமது தேவியாகிய சரஸ்வதியைப் பார்த்து நாம் கும்பகர்னனுக்கு வாங்கொடுக்கும்பொழுது நீ அவனுடைய வாக்கிலிருந்து அவன்கேட்கும் வரம்பலியாமற்போகும்படி மாறுபடுத்தச் சொல்லிவிப்பாயென்றுகூறி கும்பகர்ணனுக்குப் பிரசன்னராகி உனக்கு வேண்டிய வரமென்னகேள் தருகிறோமென்றுசொல்ல அதற்கு கும்பகர்னன் நித்தியதத்துவந் தரவேண்டுமென்றுகேட்கிற வசனத்தை அவனாலறிந்த சாஸ்வதியம்மாள மாறுபடுத்தி நித்திரை தத்துவந் தரவேண்டுமென்று கேட்கச்செய்தாள் அப்படியே வரங்கொடுத்து சத்தியலோகத்திற்குப்போனா ரப்பொழுதே கும்பகர்னனுக்கு அறிவுமயங்கிய சோபநித்திரை தோன்ற அதுகண்டு இப்படி மாறுபாடு செய்தவர்கள் தேவர்களேயல்லது வேறில்லையென்று ஆலோசித்தவனாய் தமயனாகிய தசக்கிரீவனிடத்திலும் தம்பியாகிய விபீஷணனிடத்திலும் புலம்பிப் பரிதாபப்பட அவனுக்குதேறுதலைசொல்லி அவனுடன் அந்தமூவரும் முன்புதாங்கள் வாசஞ்செய்திருந்த வனத்திற் சேர்ந்தார்கள்.

இராவணன் லங்கையிற் சேருங்கதை.

இப்படியிருக்க தசக்ரீவன் முதலான மூவரும் தவஞ்செய்து பிரமதேவனிடத்தில் வரம்பெற்றிருக்கிற மேன்மைகளெல்லாந் தூதர்விசாரித்துவந்து பாதாளலோகத்தில் நெடுநாளாய் துன்பப் பட்டுக்கொண்டு ஒளித்திருக்கும் மாலியவான் சுமாலிமுதலிய ராட்சதர்களுடன்சொல்ல அவர்கள்கேட்டு மகா சந்தோஷத்தையடைந்து அந்தமூவரிருக்கும் வனத்திற்குவந்து அவர்களைக்கண்டுஉபசரித்துமனமகிழ்ந்திருந்தார்கள். அப்படியிருக்க சுமாலியானவன் தசக்கிரீவனைப் பார்த்து ஐயனே மகா விஷ்ணுவினாலே இன்றைய வரைக்கும் நாங்கள் படுந்துன்பங்களை அளவிட்டுச் சொல்ல முடியாது அன்றியும் குபேரனானவன் நம்முடைய லங்காபட்டணத்தை யாண்டுவருகிறான் அந்தக்குபேரனையும் உன்னையும் பெற்றபிதா ஒருவராகையாலும் இவனுனக்கு மூத்தவனாகையாலும் தானே யுடையவனென்றெண்ணி அந்த லங்காபட்டணத்தை உனக்குக் கொடுக்கமாட்டான் ஆகையால்எந்தவிதத்தினாலேயும் நீயந்த லங்காபட்டணத்தை உன்னுடையதாகச் செய்துகொள்ளாத வரையில் நீ தவஞ்செய்துபெற்ற வரத்தினாலுண்டாகிய சவுரியங்களெல்லாம் அப் பிரயோசனமாய்விடும் நமக்குச் சத்துருக்களான தேவர்களும் இகட்சிசெய்யும்படியான அபகீர்த்தியுண்டாமென்று அனேக துற்போதனைகளைச் சொல்ல அதைக்கேட்டு அப்பொழுதே பிரகஸ்தனைப்பார்த்து நீதூதாகப்போய் என்னுடைய அபிப்பிராயத்தைச்சொல்லி வருவாயென்றனுப்ப, அவனும் லங்காபட்டணத்திலிருக்கும் குபேரனிடத்திற் சென்று என்னுடைய தம்பியாகிய தசக்கிரீவன் தன்னுடைய பாட்டன்மார் முதலானோர் நெடுங்காலம் அரசுசெய்த இந்தலங்காபட்டணத்துக்குடையவனேயன்றி வேறொருவ ருண்டோவென்றும், என்னுடைய சினேகம்வேண்டி யிருக்குமாகில் இப்பொழுதே இந்தலங்கையைவிட்டு அப்புறத்தேபோக வேண்டுமென்றுஞ் சொன்னானென்றுசொல்ல அதுகேட்டு குபேரனானவன் காலதேசவர்த்தமானங்கள் மூன்றையும் ஆலோசித்து இந்தபட்டணம் தசக்ரீவனுடையதே அவன் மனதின்படியே செய்கிறேனென்று அப்பொழுதே தன்னுடைய பரிவாரங்களோடு புட்பக விமானத்தின் மீதேறி இமயகிரி பட்டணத்திற்சேர்ந்து தபசுசெய்து வாசகமாயிருந்தான். அதன்பின்பு தசக்கிரீவன் தன்பாட்டனாகிய மாலியவான் முதலானவர்களுடன் இலங்காபட்டணத்திற் பிரவேசித்து மந்திரி புரோகிதர் முதலானவர்களினால் பட்டாபிஷேகஞ்செய்துக்கொண்டு மகுடாதிபதியாய் சிங்காதனத்தில்மேவி இராசாதிகாரஞ் செய்துக்கொண்டிருந்தான்.

இராவணன் மணம்புரிகதை.

இப்படி யிருக்குங்காலத்தில் தசக்கிரீவனானவன் பித்துச் சிங்கலனென்னும் இராட்சதனுக்குத் தனது

தங்கையாகிய சூர்ப்பநகையை விவாகஞ்செய்துகொடு
த்து அதன்பின்பு தன்சேனைகளுடன் வேட்டையாட
வனத்திற்செல்லுகையில் மயனைக்கண்டு சிலவார்த்தை
களாடி அவன்குமாரத்தியான மண்டோதரியை விவா
கஞ்செய்துகொண்டு அந்த மயனால் கொடுக்கப்பட்ட
வேலாயுதத்தைப்பெற்று மண்டோதரியுடன் தேரிலே
றி சதுரங்கசேனைகள்சூழ லங்காபட்டணத்தில் பிர
வேசித்திருந்தான் அதன்பின்பு கும்பகர்னனுக்கு வச்
சிரச்சுவாலை யென்பவளையும் விபீஷணனுக்கு கந்தரு
வப்பெண்ணாகிய சரமை யென்பவளையும் விவாகஞ்செ
ய்வித்து அவர்களு மகிழ்ந்திருக்க தானு மண்டோதரி
சுகபோக மனுபவித்துக் கொண்டிருக்குங் காலத்தில்
மண்டோதரி கர்ப்பவதியாகி மேகநாதனென்னும் பிள்
ளையைப்பெற்றாள். அதன்பின்பு அனேகபிள்ளைகளும்
அட்சய குமாரனும் பிறந்தார்கள் கும்பகர்னனுக்கு
கும்பன் நிகும்பன் என்று இரண்டு புத்திரர்கள் பிறந்
தார்கள் இப்படியிருக்குங்காலத்தில்கும்பகர்னனுக்கு
நித்திரைவந்து ஒருமண்டபத்திற்போய் படுத்து நெடு
நாள் நித்திரை செய்துக்கொண்டிருந்தான்.

அளகாபுரியை யழித்தகதை.

சுவர்னம்போல் விளங்கும் இலங்கைப் பட்டண
த்தில்தசக்ரீபனும் தம்பிமார்புத்திரமித்திரர்முதலான
சம்பத்தினாலும் பிரமதேவர்கொடுத்த வரத்தின் செரு
க்கினாலும் மதோன்மத்தராய் புண்ணியபாவத்தையெ
ண்ணாமல் தேவர்கள் ரிஷிகள் எல்லோரையும் நிலைகெ
ட்டோடத் துரத்தி தேவலோகத்தை கொள்ளைகொ
ண்டு குரூரதண்டமான அதிகாரஞ் செய்துவருங்கால
த்தில் அளகாபுரியிலிராநின்ற குபேரனானவன் தசக்கி
ரீவன்செய்கிற கொடுமைகளைக்கேட்டு ஒருதூது தன்
னிடத்தில் சில நற்புத்திகளைச்சொல்லி யனுப்பினான்.
அந்ததூதன் தசக்ரீவனிடத்திற் சென்று குபேரன்
சொல்லியனுப்பிய நற்புத்திகளைக்கூறின னதைக்கே
ட்டு கண்கள் சிவந்து எவனோ குபேரனும் பித்தனாகிய
சித்தனுக்குத்தோழனும் அவன் தருமநியாயங்கள்சொ
ல்லி யனுப்பினானென்று பயமில்லாமல் என் சபையில்
வந்துசொல்லிய இவனுக்குவெகுமதியிதுதானென்று
கைவாளினாலே தூதன்தலையைவெட்டினான் பின்புதன்
னுடைய சேனாதிபதிகள் முதலானவர்களைப் பார்த்து
எனக்கு பயமுறுத்திச் சொல்லியனுப்பிய குபேரனுக்
கெதிரில் நான்சென்று என் மனக்குறையை முடித்து
பின்பு தவஞ்செய்து அதிகமேன்மையையும் பெறுவே
னாதலால் நீங்களும் சேனைகளும் அளகாபுரிக்குப் புற
படுங்களென்றுசொல்லி தானும் ரதமேறி சகல சைனி
யங்களுடன் அளகாபுரியையடுத்துவளைத்துக்கொண்
டானதுகண்டுபட்டணத்திலுள்ள காவலாளிகள்குபே
ரனிடத்திற்சொல்ல அவன்கோபங்கொண்டுதன துசே
னைகளுடனேவந்து பிரபல்மானயுத்தம்புரிந்துதசக்ரீவ
னால் அடிபட்டு குபேரன் மூர்ச்சித்தான் அப்பொழு
து தசக்ரீவன் வெற்றிபெற்றவனாய் அளகாபுரியைக்
கொள்ளையிட்டு குபேரனுடைய புட்பக விமானத்தை
ப்பற்றி சகலசைனியங்களுடன் அதின்மேலேறி அவ்
விடம்விட்டு ஈசான்ய திசையில் கைலாய கிரியை நாடி
சென்றான்.

இராவணன் கைலாயகிரியை யெடுத்தகதை.

மூன்றுலோகத்திலும்நிகரில்லாத ஐசுவரியம்சம்ப
த்தும் விஜயபராக்கிரமம் சௌரியங்களும் பொருந்தி
ய தசக்ரீவன் குபேரனைச்செயித்தோம் இனிமேல் நம
க்கு எதிரிகளொருவரு மில்லையென்கிற கெர்வத்தைய
டைந்தவனாகி புட்பகவிமானத்தின் மீதேறிக்கொண்டு
ஆகாயமார்க்கமாகச் செல்லுமளவில்கைலாயகிரிக்குச்
சமீபமாகவந்து தடைபட்டுநின்றது அதுகண்டுதசக்
ரீவன் இவ்விடத்தில் தடைபடவேண்டிய காரியமென்
னவென்று ஆலோசிக்கும்போதுநந்திகேசுவரர் அவ்வி
டத்தேதோன்றிச் சுக்ரீவனைப்பார்த்து இந்த கைலாய
கிரியின் எல்லைக்குட்பட எவரும்வாகனமேறிவரக்கட
ந்து ஆகையால் நீ உன்னுடைய வாகனத்தைத் திருப்
பிக்கொண்டு போமென்று சொல்ல அவன் நந்திதேவ
ரைப்பார்த்து ஒகுரங்கே நீயோடாசொல்லுகிறவனெ
ன்று சிலந்தைகள்பேசினனதுகேட்டு நந்திதேவருக்
குக் கோபம்வந்து அடா நீஎன்னைக் குரங்கேயென்று
கந்தைசெய்ததால் உன்னுடையபட்டணத்தையும் கு
ரங்குகளேநாசமாக்குமென்று சாபங்கொடுத்துப்போ
னார். அதையொருபொருட்டாய்எண்ணாமல்பேயனெ
ன்னமோ பிதற்றிப்போனானென நினைந்து என்னுடை
ய விமானத்தைத்தடுத்த இந்தமலையோடுவேரோடே
பிடுங்கி சின்னாபின்னப்படுத்துவேனென்று கோபத்து
டனே நிலத்திற் குதித்து பாதாளத்திற் புகுந்து தன்
னுடைய உ௰-கைகளாலும் அடியோடே பெயர்க்கும்
பொழுதில் அந்தமலையானது சற்றேயசைய அப்போ
சிவகணங்கள் யாவரும் நடுக்கமுறஉமையாளும் பயத்
தினாலே பரமசிவனைத் தழுவிக்கொண்டாள் அதைப்
பார்த்து பரமசிவன் தம்முடைய திருவடி பெரியவிரல்
நுனியையூன்றி சற்றே அமிழ்த்தினார் அந்தப்பாரத்தி
னால் கைலைமலையானது கீழேஅழுந்த தசக்ரீவன் சரீர
முழுதும் நெருங்குண்டு உ௰ கண்களும்பிதிர தோள்
களுநெரிய சற்றுமசையவொட்டாமல் கதறிக்கொண்
டு கிடக்கின்றதை நாரதர் பார்த்து ஒதசக்ரீவனே பர
மசிவனால் வயப்பட்ட துன்பம் அந்த சிவனாலே தீர்க்
கப்படுமல்லாமல் வேறொருவனால் தீர்க்கப்படாது இப்
பொழுது உன்னுடைய செயலுக்குத் தக்கதாக பரம
சிவனை நோக்கித் தோத்திரம் பண்ணுவாயாகில் இந்த
த் துன்பம் நீங்கிப் பிழைப்பாயென்று சொல்லிப்போ
னாரவர் சொல்லியபடி மனவுருதிகொண்டு நம்முடைய
பத்துதலைகளி லொருதலையும் இருபது கைகளில் ஒரு

கையுமறுத்து பாழாகப்பண்ணிக் கொண்டு மிகவும
அன்புடனே சாமகானம்பாடினன் அதை பரமசிவன
கேட்டு சந்தோஷப்பட்டு சுக்ரீபனையழைத்து நீ இந்த
ப்பாவததின கீழ் அகப்பட்டுக்கிடந்த காரணத்தினு
லே உனக்கு இன்று முதல் ராவணனென்னும் பெய
ருண்டாகக்கடவதென்று பெயர் கொடுத்து மூன்ற
ரைக்கோடி ஆயுசும் ஒரு வாளாயுதமும கொடுத்தார்
அப்படி வரம்பெற்று ராவணன புட்பகவிமானத்தின்
மேலேறிக்கொண்டு வரும்போது மகாவிஷ்ணுவான
வர் பிரமசந்நியாசி வேடங்கொண்டு ராவணனுக்கெதி
ரில்வர அவன கண்டு விமானத்தில் நின்று கீழிறங்கித்
துவந்து வணங்கினனப்போது உன்னுடைய விர்த்தா
ந்தங்களைச் சொல்லென்று வினவ அவன அவரைப்
பார்த்து தன்னுடைய பெருமையும் குபேரனைச் செயி
த்ததும கயிலாயகிரியைப் பேர்த்ததும விவரமாகச்
சொல்ல அதைக்கேட்டு நீயெத்தனை காலமிருந்தாலும்
உலகத்திறகு அபகாரமேயானதால குறையாயிருக்
கிற அரைக்கோடி ஆயுசும் பெறுயானுல எல்லாவுல
கத்திலும உன்னுடைய அதிகாரஞ் செல்லுமென்று
சொல்ல அதைக்கேட்டு சீக்கிரமாகக கைலாயகிரிக்கு
ப்போய ஜீவகாருண்யனுய் விளங்கப்படாநின்ற பரம
சிவனைநோக்கித் தோத்திரஞ்செய்து வணக்கத்துட
னிற்க பரமசிவன் பின்னும் நீ வந்தகாரணமென்ன
வென்று கேட்க அறைக்கோடி ஆயுசுங் கொடுக்க
வேண்டுமென்று சொன்னுன் பரமசிவன் கேட்டு ரா
வணா நீ கேட்டபடியே உனக்கு அறைக்கோடி ஆயு
சுங்கொடுத்தோம் மேலும் நீ எந்த காலத்திலாவது
அக்கிரமம் செய்வையேயானுல் அக்காலத்தில் நாம
கொடுத்தவரமும் ஆயுசும் நம்மைச்சேருமென்று திரு
வாய்மலர்ந்தருளினுர்.

வேதவதிக்கதை.

தசக்ரீவனனவன் பரமசிவனிடத்தில் வாளாயுத
மும் ஆயுசும் ராவணனென்னும் பெயரும படைத்த
வனகித் தனதுசேனைகளுடனே சகல தீவிகளிலுஞ்
சஞ்சரிக்குமளவில் ஒருநாள் இமயவனமெனனும் ஆர
ணியத்திற சேர்ந்தான் அவ்வனத்தில் ஒரு கன்னிகை
யானவள் தவசுசெய்துக் கொண்டிருந்தாள் அக்கன்
னியை ராவணன்கண்டு மோகங்கொண்டு நீயாரென்
றுகேட்க அவள் சொல்லுகிறுள் குசத்துவனென்று
சொல்லப்பட்ட பிராமணனுடைய புத்திரி அவ்ரோத
ப்பட்டவேத சொரூபத்தில் நான் பிறந்தால் யெனக்கு
வேதவதியென்று பெயர் எனது பிதாவை சம்புவெ
ன்னுப அசுரனனவன் வதைசெய்தபோனுன் நான்
மகாவிஷ்ணுவை நோக்கி தபசுசெய்கிறே னென்று
சொலத அதை இராவணன்கேட்டு தன்னுடைய குல
முறைமைகளும பராக்கிரமும் வாங்களைய பெற்றது
மாதிபோடந்த மாகச்சொலலி என்னை விவாகஞ் செ
ய்துக்கொள்ளென்று விஷ்ணுவைத் தூஷித்து வலி
மையாகக் கையைப்பிடிக்கப்போனுனப்பவுள கோப
ங்கொண்டு உன்னுடைய குலமும் செல்வமும் நீயுங்
கெடும்படிக்கு நானே பெண்ணுகப் பிறப்பேனென்று
சாபமிட்டு அக்கினியில் வீழ்ந்திறந்து போய் ஜனக
மகாராசாவின் யாக பூமியிற்பிறந்து சீதை யென்று
பெயர்வகித்து உமக்குப் பாரியாக வந்திருக்கிற இந்த
சீதாலட்சுமியென்று அகஸ்திய முனிவர் சொல்லக்
கேட்டு ஸ்ரீராமர் மகிழ்ந்து பின்னுமந்த ராவணனு
டைய சரித்திரங்களைச்சொல்லவேணுமென்று கேட்க
அகஸ்தியபகவான் சொல்லத்தொடங்கினுர.

மருத்துவராசன்கதை.

கேளும ஸ்ரீராமரே இராவணனனவன் வேதவ
தியிட்ட சாபத்தைப்பெற்றவனுய் புட்பகவிமானத்தி
லேறி அபயுரம்போம பொழுதில் இமயகிரிக்குப்பய
மான ஒருவனத்தில் மருத்துவ மகாராசனனவன சக
லமானதேவர்கள் ரிஷிகள் கூட்டத்துடனே யாகஞ்
செய்துக் கொண்டிருக்கிற கோஷ்டத்தைக் கேட்டு
இவ்வனத்தில் இப்படிப்பட்ட சத்தமேது இதையறிய
வேணுமென்று அவ்விடம் வந்தான் அவனைக்கண்டு
தேவர்கள் ரிஷிகள் எல்லோரும் பயந்து இந்திரன்
மயிலாகவும் யமன் காக்கையாகவும் வருணன் அன்
னமாகவும் குபேரன் ஓந்தியாகவும் மறறுள்ளவர் பல
பலரூபங்களையெடுத்து ஒளித்துப்போனுர்கள் யாகசா
லையில் மருத்துவராசன் பிராணயாகஞ் செய்துக்கொ
ண்டிருந்தான் அவனை ராவணன் பார்த்து நீயுத்தத்தி
ற்கு வருகிறையா அல்லது தோற்றேனென்று சொல்
லுகிறையா என்ன சொல்லுகிறுயென்றுன் அப்போ
மருத்துவராசன் யுத்தஞ் செய்யத் தொடங்குமளவில்
வசிஷ்டனுடன் யுத்தம்பண்ணி வெற்றிபெறுல் தா
னேசிலாக்கியம் இல்லாவிட்டாலில்லையோ யாகம்முடி
யாமற்போனுல் குலத்துக்கு நாசம் வருமே என்று
சொல்ல அதைக்கேட்டு முனபோலப் பிராணயாகம்
நிஷ்டைசெயதுக்கொண்டிருந்தான் அவனைப்பார்த்து
இராவணன் இகழ்ந்து பேசினுன் புன்புதேவர்கள்
ரிஷிகளெல்லாரும் யாகசாலை நோக்கி வரும்பொழு
தில் இந்திரன் ஒருமயிலைப்பார்த்து உன்னைப்போல
ரூபமெடுத்து நான்பிழைத்த படியினுலே யென்னைப்
போல உடலெல்லாம கண்களாகக்கடவதென்று வரங்
கொடுத்தான் எமன் ஒரு காக்கையைப்பார்த்து பிதி
ர்தேவதைகளுக்குப் புரீதியுண்டாகும்படி மனிதருக்

ருப் பலிகொடுக்கக் கடவையென்றும் சகல பிராணிகளிலும் அதிகமான ஆயுசுண்டாகக்கடவதென்று வரங் கொடுத்தால் குபேரன் ஒரு ஓந்தியைப்பார்த்து பல பல நிறமான ரூபமெடுக்கவு முடல் பச்சை நிறமாகவும் வரங்கொடுத்தான் அப்படியெல்லோரும் வந்து யாகத்தை நிறைவேற்றித் தங்களுடைய லோகங்களை சேர்ந்தார்கள் ராவணனும் தென்றிசையை நோக்கிச் சஞ்சரித்துக்கொண்டு வந்தானென்று சொல்லி பின்னும் ஸ்ரீராமருக்கு அகஸ்தியர் சொல்லுகின்றார்.

அரண்ணியன் கதை.

கேளும் ராகவரே அந்த ராவணன் தென்றிசையை நோக்கிவரும்போது அங்கங்குள்ள சகல ராசாக்களையும் அழித்து இந்த அயோத்தியாபுரி பட்டணத்திலே உம்முடைய குலத்திலே தபோ மகிமையும் கீர்த்தியும் பலமும் பொருந்தியிருக்கும் அரண்ணிய ராசனைப்பார்த்து நீ எனக்குத் தோற்றேனென்றுசொல்லுகிறையா அல்லது யுத்தம்பண்ண வருகிறையா சொல்லென்றுகேட்டான் அப்படியே யுத்தஞ் செய்வோமென்று இருதிறப் படைகளும் இவ்விருவரும் போர்புரியும்போது இராவணனென்பவன் தண்டாயுதத்தினாலே அரண்ய ராசனையடித்து மூர்ச்சையடையச் செய்து நீ யெனக்கு தோற்றதற்குச் சந்தேகமில்லையென்று சிரித்து நிந்தையாக இகழ்ந்துபேசினான் அதைக்கேட்டு போர்க்களத்தில் முதுகுகொடுத்து ஓடினவனல்லவோ உனக்குத் தோற்றவனப்படி யோடாமல் மூர்ச்சையடைந்தவேளையில் என்னையிகழ்ந்து நிந்தித்த படியினாலே யென்னுடைய குலம்பிறக்கும் ராமருடைய பாணத்தினால் உன்னுடைய பத்துதலைகளும் அறுபட்டு விழக்கடவதென்று சாபங் கொடுத்துப் போனார் அந்தசாபத்தை எவ்வளவுமெண்ணாமல் அவ்விடத்து நின்று நீங்கி வரும்போது எதிர்பட்ட ராசாக்களை யழித்த பெருமையினாலும் அகங்காரத்தை யழித்த பெருமையினாலும் அகங்காரத்தை யடைந்தவனாக வருமளவில் அந்த ராவணனுக்கெதிராக நாரதமாமுனிவர்வந்து ராவணனைப்பார்த்து உம்முடைய பலைசுவரிய பராக்கிரமங்களிலே கோடியிலொருபங்குக்கு சமானம் ஈடில்லாத மனிதரைக்கொன்று வெற்றிக்கொண்டதினால் என்ன புகழுண்டாகும் பின்னை யெப்படியென்றால் கூற்றுவன் முதலானவர்களை வென்றால் அதனால் பெருமையுண்டாகுமென்று மித்திரபேதஞ்செய்து கலகமுண்டாக்கி நாரதமுனிவர் போயினார் அந்தராவணனும் அவ்விடத்தில் நின்றும் ஆகாயமார்க்கமாக விமானத்தைச் செலுத்தி எமலோகத்தைத் தேடிப்போனானென்று சொல்லி பின்னும் ஸ்ரீராமர் கேட்க அகஸ்தியமுனிவர் சொல்லுவார்.

காலன் கதை.

கேளும் தசரதநந்தனா நாரதமுனிவர் ராவணனிடத்தில் வந்து, எமனிடத்தில் பகையுண்டாகும்படி செய்து சீக்கிரமாக எமனைக்கண்டு ராவணன் பிரமதேவனிடத்திலும் சிவனிடத்திலும் பெற்றவரத்தினால் குபேரனை செயித்து பூலோகத்திலுள்ள ராசர்களையு மழித்து வெற்றிகொண்டோம் தேவலோகத்தில் எமனை ஜெயித்து தேவமாரும் மற்றதேவர்கள் தன்னைவணங்குவார்களென்றெண்ணி உம்மைத்தேடி வருகிறானும அதையுமக்குச் சொல்லவந்தோமென்று சொல்லப் போனார் அந்தச்சமயத்தில் ராவணன் தனது பரிவார சேனைகளுடனே எமலோகத்திற் பிரவேசித்து வரும்பொழுது புண்ணியாத்துமாக்க சுவர்க்கலோகவாசிகளாய்ச் சுவர்மையான மண்டபங்களிலே வீற்றிருக்கப் பார்த்து ஆச்சரியமடைந்து அப்புறம்போம்பொழுது மகாபாவிகளகோரநரகங்களிலே காலினும் சரீரத்தினும் புழுக்கள்சொரிய நெடுங்காலமழுந்தி துன்பப்பட்டுக் கிடைப்பதைப் பார்த்து நீங்களெல்லோரும எமனுக்குப்பயப்படாமல் நரகத்தை விட்டுக் கரையேறிப்போவீர்களென்று உத்தரவு செய்தான் அவர்களுமதைகேட்டு நீங்கிப்போக அதுகண்ட காவலாளிகளெதிர்த்துப்போர்புரிய ராவணன் அக்காவலாளிகளை யறைத்து அவ்விடத்துநின்று மேற்சென்றான் அதுகண்டு எமனானவன் அளவில்லாத சேனைகளுடன் எதிர்த்து எழுநாள் ஓயாமல் யுத்தஞ்செய்து கடைசியில் ராவணனைக்கொல்லும்படி தனது காலதண்டத்தைக்கையிலெடுத்தான் அதை பிரமதேவர்கண்டு உலகழிந்துபோமென்றெண்ணி எமனுக்கெதிராகச் சென்று அவனோ கருமங்கெட்ட துஷ்டன் அன்றியும் பரமசிவனிடத்தில் அதிகவரங்களைப்பெற்றிருக்கிறான் ஆதலாலிவனை உம்முடைய தண்டமொன்றுஞ்செய்ய மாட்டாது தண்டத்தைப் பிரயோகம்பண்ணி அபசயப் படவேண்டாமென்று பிரமதேவர்சொல்ல அதைக்கேட்டு நன்மையென்று நினைத்து கையிலே ஆயுதமெடாமல் நின்றானதுகண்டு ராவணன் எமன் தோற்றுப்போனானென்று வெற்றிபேசிக்கொண்டு அப்புறஞ்சென்றான்.

வருணனைத்திறை கொண்டகதை.

அந்தராவணன் எமலோகத்தில் தருமராசனைச் ஜெயித்துவெற்றிகொண்டவனாய் அவ்விடத்தினின்று நீங்கி பாதாளலோகத்திலே செல்லுமளவில் போதவனென்று சொல்லப்பட்ட நகரத்தைக்கண்டு அதிலிருக்கும் வாசுகியைச்சினேகம்பண்ணிக் கொண்டு அவ்விடத்தைவிட்டு மணிமதியென்று சொல்லும் பட்டணத்துக்குள் போகும்பொழுதில் காலகேயன் நிவாதகவசன் முதலிய ராட்சர்கண்டு நீயார் நில்லென்று தடு

த்து ஒருவருக்கொருவர் யுத்தம்பண்ணி இரண்டுமாதம் போர்செய்துக்கொண்டிருந்தார்கள் அப்படியிருக்க அவர்களிடத்திற்கு பிரமதேவர்வந்து நீங்கள் இருவரும் வரங்களைபெற்ற பராக்கிரமசாலிகள் ஆகையாலொருவருக்கொருவர் உறவுகொண்டிருக்கும்படி சமாதானப்படுத்தினர் அதன்பிற்பாடு ராவணனவன் வருணனைச் ஜெயிக்கவேண்டுமென்றெண்ணி வருணலோகத்தைநாடி செல்லும்போது ராவணனவன் தனக்குமைத்துனனாகிய வித்தியுற்சிங்கவனை காலகேயர்களால் கொல்லும்படிசெய்து பின்பு வருணலோகத்திலே போகும்போது காமதேனுவை அதற்கு உபகாரஞ்செய் தனுப்பிவிட்டு வருணனுடைய நாலுபிள்ளைகளுடனெதிர்த்து பிரசண்ட யுத்தஞ்செய்து முதுகுகொடுத்தோடும்படி யடித்து அதிக வருத்தத்தையடைந்து வருணலோகத்தைவிட்டு லங்கையை நாடி புறப்பட்டான் அப்படி வரும்போது கந்தருவர் கன்னிகளும் பிராமணர் கன்னிகளாக விளையாடிக்கொண்டிருந்தார்கள் அவர்களெல்லாரையும் பிடித்து புஷ்பகவிமானத்திலேறிக்கொண்டுவர அவர்களைக் காக்கும்பொருட்டு வந்தவர்களையுங்கொன்று மிகவுஞ்சந்தோஷமாக லங்காபட்டணம் வந்துசேர்ந்து அக்கன்னியர்களைச் சிறைசெய்தனன்.

ஜனஸ்தான மேற்படுத்தியகதை.

அக்கன்னியர்களெல்லாம் புலம்பி இந்தப்பாவிக்குப் பெண்ணாலமாகவே சாவுவருகவெனச் சபித்தனர் அந்தராவணன் இச்சாபத்தை மதியாமல் அந்தப்புறத்தினுளிருக்கையில் சூர்ப்பனகை மார்பிலறைந்துக்கொண்டு கதறி அடாபாவி என்னைக்கைப்பெண்ணாக்கினையே இதோ உன்காலின் கீழ் உயிரை விடுகிறேனெனப்புலம்ப அவளைவளையெடுத்து என்செல்வத்தங்காய் இது தெய்வச்செயலால் நேர்ந்ததற்கு யாரென்னசெய்யலாம் விசனப்படாதேயென்று தண்டகாரண்யத்தில் ஜனஸ்தானமென வொருபட்டணமுண்டாக்கி கரதூஷணர் முதலிய சேனைகளைக்கூட்டி என் சகோதரியே இதோ உனக்குச் சகாயமாய்க் கரன்முதலிய சேனைகளை நியமித்திருக்கிறேன் அவர்களுடன் நீ போய் விரும்பியபடி செய்துகொண்டிருவென்று அனுப்பினன் அதுகேட்டு வெகும் படையோகரனையுங் கூட்டிக்கொண்டு ஜனஸ்தானஞ் சேர்ந்து வானவாசிகளை இம்சை செய்துக்கொண்டு உல்லாசமாயிருந்தனன்.

இராவணனவன் அளகாபுரி தெய்வலோகம் யமலோகம் வருணலோகம் என்று சொல்லப்பட்ட லோகங்களிற்போய் இலங்கைக்கு முன்னமே ராவணன் குமாரனாகிய மேகநாதனனவன் நிகும்பலையென்று சொல்லப்பட்ட வனத்திற்போய் சுக்கிரபகவான் முன்னிலையாய் பரமசிவனைக்குறித்து ஆறுயாகஞ்செய்து நிறைவேற்றி ஏழாவதுயாகஞ் செய்துக்கொண்டிருக்கும்போது ராவணன் வந்து குமாரனைக்கண்டு பரமசிவனிடத்திலே பெற்ற வரங்களைக் கேட்டு சந்தோஷத்துடன் யாகத்தை நிறைவேற்றி குமாரனையழைத்துக்கொண்டு லங்காபுரி பட்டணம் வந்துசேர்ந்தானிப்படி சிலநாள் சென்றபின்பு ஒருநாள் ராவணன் காமவிகாரமேற்பட்டு முன் கொண்டுவந்து வைத்த கன்னியர்களை அழைத்துவரச் சொல்லியதை விபீஷணனறிந்து இராவணனிடத்திற்போய் சில நீதிகளைச்சொல்லி சாந்தப்படுத்தி இன்னமொரு செய்தி சொல்லக்கேளுமண்ணா வென்னவென்றால் நீர் பட்டணத்தைவிட்டுப்போன பிற்பாடு மேகநாதன் யாகஞ்செய்துக்கொண்டிருந்தான் கும்பகர்ணனவன் நித்திரையிலிருந்தான் நான் ஜலத்திலே தபசு செய்திருந்தேன் அந்தச்சமயந்திய் மதுவென்னப்பட்ட அசுரன்வந்து சேனைகளையழித்து நமது சிறியதாயாராகிய கும்பநசியைவலிந்திற் பற்றிக்கொண்டு தனது பட்டணம் போனானென்று சொல்ல அவன்கேட்டு மனங்கொதித்தானையிப்பொழுதே வருகிறேனென்ன கும்பகர்ணன்முதல் சகலசேனைகளையுங் கூட்டிக்கொண்டு மதுவினுடையப் பட்டவன் நித்திரையிலிருந்தான் அவன்பாரியாளாகிய கும்பநசியானவள் ராவணனுடைய காலில்விழுந்து அழுதாள் அவனும் சிறியதாயையெடுத்து உபசரிக்க அவள்மங்கிலியப்பிச்சை கொடுவென்று சிலநீதிகளைச்சொல்ல ராவணன் மனமிரங்கி உன்னுடைய அபீஷ்டம் எனக்குஞ்சம்மதமே இனியொரு விகற்பமுமில்லையென்று மதுவென்பவனுடன் கலந்து விருந்துண்டு அன்றையதினம் அவ்விடத்தில் வாசமாயிருந்தான்.

அரம்பையின் கதை.

இராவணனவன் மறுநாளுதயத்திலே மதுவென்பவன் தன்னுடைய சேனையுடனே வரும்படியாகப் புறப்பட்டு தேவலோகத்தை நாடிப்போக நடுவழியில் ஓர் வனத்தைக்கண்டு அதில் சகலசேனையோடு இறங்கித் தானொருவனாகப்புறப்பட்டு அந்தவனத்திலுள்ள சிங்காரங்களைப் பார்த்துவரும்போது அழகெல்லாந் திரண்டு ஒருவடிவமாக விளங்கும் அதிரூபசௌந்தரியத்தையுடைய அரம்பையானவள் நளகூபரனிடம் நாடிச்சென்றனள் அவளைக்கண்டு மோகங்கொண்டு பலாத்காரமாய் மேல்விழுந்து புணர்ந்து அனுபவித்தான் அவள் மனங்கொதித்து அடாபாவியே நீ என்னுடைய பதிவிரதாதருமத்தைப் பறியப்போகிறாய் எந்தகாலத்திலாவது பதிவிரதைகளாயிருக்கிற ஸதிகளை நீ தொடுவாயானால் அவர்கள் சாபத்திலே எரிகிறதுபோல நீ யெரிந்துபோவாயென்று சாபங்கொடுத்து அவனைத் தப்பிக் கடந்து தனது நாயகனாகிய நளகூபரனிடத்திற்சென்று நடந்தசங்கதிகளைச்சொல்ல அவர் கேட்டு பாவியான ராவணனெக்காலத்திலாவது ஒருவருடைய ஸ்திரியைத் தீண்டுவானானால் அவனுடைய பத்துதலைகளும் ஏழுபிளவாக வெட்டப்படவதென்று சாபங்கொடுத்தான் இராவணனவன் அன்றிராத்திரி முழுதும் காமவிகாரத்தால் துன்பமுற்றிருந்தான்.

இந்திரன் கட்டுண்ட கதை.

இந்தப்பிரகாரம் அந்தவனத்திலே இராத்திரிமுழுதும் மோகவிகாரத்தினால் துன்பப்பட்டுக்கொண்டி

ருகிற ராவணனென்பவன் மறுநாளுதயகாலத்திலே சிக
னைதல்தளங்களும் சகலசேனைகளுடனே ஸ்வர்க்கலோகத்தை
நாடிப்போகும்பொழுதில் அந்தச்செய்தியை தேவேந்திர
னறிந்து பயந்து வைகுண்டத்துக்குப்போய் விஷ்ணு
வைக்கண்டு சுவாமி ராவணனென்பவன் வரத்தின்பலத்தி
னால் பூலோகத்தைப்பாழாக்கி எங்களையுந் துன்பப்படு
த்தி தேவலோகத்தை நாடி சேனைகளுடன் வருகிறான்
நாங்களென்னசெய்வோமென்று முதலானவர்களைச் சங்க
ரித்து எங்களை ரட்சிக்கிறதென்று உத்தரவு கொடு
த்தனுப்ப தேவேந்திரன் தம்முடைய அமராவதி பட்
டணத்திற்கு வருவதற்கு முன்னமே ராவணனுடைய
சேனைகள் ஸ்வர்க்கலோகமெங்கும்பரவி ஆவரித்தி
ருக்கிற சமயங்கேட்டு தேவர்களெல்லாருங்கூடி ராட்ச
தருடைய துன்பத்தினாலே உள்ளநாளளவும் உபத்
திரவப்படுவமோ ஆனாலுமிக்குடனே தேவர்களாவது
அசுரர்களாவது வெல்வதென்று இறப்பதென்று
இரண்டிலொன்றையின்றைக்கேயறியவேண்டுமென்று
ஒருவரொருமித்து வடவாக்கினிபோலக்கலந்து
கொடிய யுத்தஞ்செய்கையில் அந்தயுத்தத்தைப் பார்
க்க பிரமதேவர் அவ்விடம்வந்தவர் அவர்மகிழும்படி
தேவர்களெல்லோரும் அட்டகாசம்பண்ணி அஸ்திரங்
களைப் பிரயோகித்து ராட்சதசேனைகளைக்கண்டதுண்ட
மாக்கும்போது சுமாலியானவர் பானுகோபன் முத
லிய சேனாதிபதிகளுடன் நெருங்கி சூலம் வேல் முத
லிய ஆயுதங்களினால் தேவர்களைச்சின்னபின்னப் படு
த்த அதைச்சாவித்திரனென்னும் தேவசேனாதிபதியா
னவன்கண்டு மிக்ககோபங்கொண்டு சுமாலியைத்தடு
த்து அநேகபாணங்களினால் அவனுடையவில் தேர்மு
தலியதை அதனுசெய்து உடனே ஒரு தண்டாயுதத்
தையெடுத்து சுழட்டியெறிய அத்தண்டானது சுமா
லியினுடையசிரசை அறுத்துக்கொன்றது அதைமேக
நாதன்கண்டு தேவசேனையைமடக்கி நாசஞ்செய்யும்
போது தேவேந்திரன் குமாரனாகிய சயிந்தனென்பவ
னெதிர்த்துக்கொண்டுமேகநாதனிவனோவென்று அவ
னோவென்று சந்தேகிக்கும்படி கொடுமையாகிய யுத்த
ஞ்செய்கையில் சயிந்தன்சிலபாணங்களில் மேகநாதனுடைய
சாரதியையறுத்துத்தள்ளினன் சாரதி போனதைக்க
ண்டு அநேக பாணங்களினாலே சயந்தனுடைய மார்பு
முழுதும்நிறைத்தான அதனால் சயந்தன் மூர்ச்சையடை
ந்தான் அதுகண்டு அவன்பாட்டனாகியபுலோமனென்ன
ப்பட்டவன் எதிர்த்துயுத்தஞ்செய்ய சயிந்தன் மூர்ச்
சையடைந்த சங்கதி தேவேந்திரன்கேட்டு மிக்ககோப
ங்கொண்டு மாதலியை ரதங்கொண்டுவரச்சொல்லி யுத்
தசன்னத்தனாய் சகல சம்பிரமத்துடனே தேரேறியுத்த
களத்திற்பிரவேசிக்க மேகநாதன்கண்டு எதிர்த்து ஆ
காயமெங்கும் பாணமயமாக நிறையும்படி சரவருஷம்
பொழிந்து தேவர்களுடைய கண்ணினும் மனதிலும் ஞா
னதேவ காணும்படிக்கு வாயினாற்சொல்லி முடியாத
கொடிய யுத்தஞ்செய்யும் அளவில் கும்பகர்ணனென
வன் கண்கள்சிவந்து அண்டம்வெடிப்பட பூமிநடுங்க
அதிவிக்கிரமாகச்சென்று போர்க்களத்திற் புகுந்து
தண்டாயுதத்தினாலே யடித்து தேவர்களை நொருங்கி
மோதி சிதைத்துக்கொண்டு இப்படி பலவிதமான யுத்
தஞ்செய்தான அதுகண்டு தேவர்கள் அஸ்திரங்களி
னாற் ஜாடினர் அப்போராவணன் பிரளயகாலருத்திர
னைப்போலக்கோபங்கொண்டு அதிவேகமாகத்தேரை
முடுக்க வில்வளைத்து நாணேறிட்டு நெருப்புமழை பெ
ய்தாற்போல் பாணங்களை வருஷித்து சின்னபின்ன
மாய் வதைக்கும்போது தேவேந்திரன் பார்த்து மிக
வுங் கோபங்கொண்டு சாமரியாய் அஸ்திரங்களைப்
பொழியும்போது ராவணனுசாரதியை யெச்சரித்து
எதிரேநின்ற சேனையைபேதித்து உள்ளே போகும்
பொழுது அது கண்டு தேவேந்திரன் பிந்திம்போன
பொழுது ராவணனென்பவன் நூறுயோசனை தூரம
விஸ்தாரம் நிறைந்த தேவசேனையினுள்ள தேவரை
முடிக்கித்திரும்பி பாணங்களினாலே மடிக்கும்போது
தேவேந்திரனென்பவன் அநேக சேனைகளைக் கூட்டிக்
கொண்டு பலம்பொருந்திய ஐராவதத்தின் மேலேறிக்
கொண்டுவந்து ராட்சத சேனைகளைக் கண்ட துண்ட
மாக்கும்பொழுது மேகநாதன்கண்டு இவனை யுத்தஞ்
செய்து வெல்லக்கூடாது வஞ்சனையினாலே வெல்லவே
ண்டுமென்று கருதி உலகமெங்கும் அந்தகாரபட்
டிருளும்படி மாயைசெய்து மயங்கினபோது தே
வேந்திரன் முதல் சகலரும் சிந்தைகலங்கி மயங்கி நின்
றார்கள் அதுகண்டு மேகநாதன் பாசத்தினாலே தேவே
ந்திரனைக்கட்டி ராவணனுக்கு எதிர் கொண்டுபோய்
நிறுத்தி இந்த தேவேந்திரன் என் கையிலகப்பட்டான்
இனிமேல் நமக்கொரு பகையுமில்லையென் சொல்ல
அதுகேட்டு ராவணன் மிகச்சந்தோஷமாகி மகனைத்த
ழுவி உபசரித்துத்தானும் மேகநாதனுங் கட்டுப்பட்ட
இந்திரனும் கும்பகர்ணனும் சகல சைனியர்களும்
ஸ்வர்க்கலோகம்விட்டு லங்காபட்டணத்திற் பிரவேசி
த்து தேவேந்திரனைச் சிறையில வைத்து மிகவுஞ்சந்
தோஷத்தை படைத்திருந்தான் அப்படியிருக்கதேவர்
களெல்லோரும் பிரமதேவனிடஞ்சென்று முறையிட்
டார்கள் அதைகேட்டு தேவர்களையும் அழைத்துக்கொ
ண்டு லங்காபுரிக்கு வந்துராவணனைக்கண்டு ஆசீர்வா
தஞ்செய்து ராவணனை பார்த்து கேளும் சுகீவனே
உமக்குச்சமானமானவர் திரிலோகாதிபதியாகிய இந்
திரனைசெயித்து சிறையில் வைத்தான் யுத்தரணத்தி
னாலே மேகநாதனுமக்குமுன் முதல் இந்திரசித்தென்று
பெயர்விளங்கக்கடவதென்று சொல்லி இந்திரனை சிறை
விட்டு விடும்படி தயைசெய்யவேணுமென்றார் அத
ற்கு இராவணன் இந்தலோகமுள்ளளவும் அழியாமலி
ருக்கும் நித்தியதத்துவத்தை எனக்கு கொடுத்தீரே
யாகில் நீர்சொல்லியபடி நாம்விடுவேனென்றானதை
பிரமதேவர்கேட்டு ஈஸ்வரனைத்தவிர யெங்கும் மற்ற
யாருக்கும் நித்தியத்துவம் கிடையாது நம்மாலே
கொடுக்கப்படாத பிரயோசனத்தைக்கேட்கிறது தரு
மமல்லவென்று சொன்னார் அப்போது இந்திரசித்தனெ
ன்பவன் பிரம்மதேவரைப்பார்த்து நான் இனிமேற்செ
ய்யும் யாகத்திலுண்டாகிற ரதத்தின்மீதேறியுத்தஞ்

செய்யுங்காலத்திலே எனக்கு அந்திடம் வாராமலிருக்கவும் அந்தயாகத்துக்கு ஒருவிகாதமுமில்லாமல் நிறைவேறும்படியாக வரங்கொடுமென்று கேட்க அப்படியேகொடுத்தோமென்று அனுக்கிரகஞ்செய்தார் இந்திரசித்தனானவன் மிகவுஞ் சந்தோஷத்தையடைந்து சிறையிலிருக்கும் இந்திரனை வரவழைத்து பிரமதேவருக்கெதிரிலே விட்டான் அப்போது பிரமதேவர் இந்திரனைநோக்கி கேளாய் தேவராசனே முன்பு கௌதமர்கொடுத்த சாபத்தினாலே இப்படிப்பட்டதுன்பம் நேரிட்டது ஆனதால் விசனப்பட வேண்டாமென்று தேவேந்திரனுக்குச்சொல்லி இராவணனிடத்தில் உத்திரவுபெற்று தேவர்களுடன் தேவேந்திரனை சுவர்க்கலோகத்திலே போயிருக்கும்படியனுப்பி அந்தப் பிரம்மதேவர் நம்முடைய சத்தியலோகத்திற்போயினார்.

கார்த்தவீரியனாலே இராவணன் கட்டுண்டகதை.

இந்தப்பிரகாரம் அகஸ்திய மகா முனிவர் இராவணனுடைய திக்கு விஜயங்களெல்லாம் சொல்லக்கேட்டு ஸ்ரீராமர் மிகுந்த ஆச்சரியப்பட்டு அகஸ்தியரைப்பார்த்து அந்த இராவணனாலே அநேக ராசாக்கள் அழிந்துபோனாரென்று இந்திரன் கட்டுப்பட்டானென்றும் சொன்னீரே இந்த உலகத்திலே இராவணனுக்குமேலானவர் ஒருவருமில்லையோ அவன் ஒருவராலே அபஜயப்பட்டதில்லையோவென்று கேட்க அகஸ்தியர் ஸ்ரீராமரைப்பார்த்து சொல்லுகிறார் கேளும் ராகவா இந்த உலகமெல்லாம தனது ஆக்ஞைப்பிரகாரம் நடக்கும்படி அரசுசெலுத்திய கார்த்த வீரியார்ச்சுனனிடத்திலும் வாலியினிடத்திலும் இராவணன் கட்டுப்பட்டானென்று சொல்ல பின்னும் அதிசயத்தையடைந்தவராய் இராவணன் கட்டுப்பட்ட விதங்களை விவரித்துச்சொல்லுமென்று கேட்க அகஸ்திய பகவான் சொல்லுகிறார்.

கேளும் ரகுநந்தனா முன்னமொருகாலம் ஆயிரந்தோளகளையுடைய கார்த்த வீரியார்ச்சுனன் என்னப்பட்டவன் உலகத்தில் யாவரையும் வெற்றிகொண்டு இலங்காபுரிபட்டணத்தைச் சார்ந்து இராவணனென்பவனை யுத்தத்திற்கு வரச்சொல்லுங்களென்று சொல்லி இராவணனுடைய மந்திரிகள் கேட்டு நதிதீரத்துக்குப்போயிருக்கிறாரென்று சொல்ல அதுகேட்டு இராவணனைத் தேடிக்கொண்டு வரும்வழியில் விந்தைபருவதத்தைக்கண்டு அவ்விடத்திலிருந்தான் அவனுக்கு முன்போன இராவணன் அந்தப் பருவதத்தின் பக்கத்திற்செல்லும் நருமதையைக்கண்டு தீர்த்தமாடி மணலாலே சிவலிங்கம் வகுத்து பூசைசெய்திருக்குமளவில் அந்த நதிக்கு மேலாக நெடுந்தூரத்திலே கார்த்த வீரியார்ச்சுனன் அநேக ஸ்திரீகளுடன் ஜலக்கிரீடை செய்யத் தன்னுடைய கைகளினாலே அந்த நதியை யணையாகக்கட்டி ஜலத்தைப் பெருக்க அந்த ஜலமானது தேங்கி புரண்டு கரைகளையுடைந்து ஓடுகின்ற வெள்ளமானது இராவணன் பூசையை யழித்துப்போக அது கண்டு வெகுண்டு சுகசாரணரையழைத்து வெள்ளம் வரவேண்டிய காரணமென்ன அறிந்து வாருங்களென்றனுப்ப அவர்கள் அப்படியேபோய் கண்டுவந்து இராவணனைநோக்கி கார்த்த வீரியனால் வந்த வெள்ளமென்று சொல்லக்கேட்டு கடுங்கோபங் கொண்டு மந்திரிமார்களுடன் அதிவேகமாகப்போய் யுத்தத்திற் கழைத்து அவனுடைய மந்திரிமார்கள் முதலிய சேனைகளை நாசப்படுத்தும்போது இதைக் கார்த்த வீரியன் கேட்டு கடுங்கோபங்கொண்டு எதிர்த்து இராவணனுடைய சகல சேனைகளையும் சின்னாபின்னப்படுத்தி இராவணனுடனெதிர்த்துப் போர்புரியும்போது இராவணனானவன் ஒரு கதை யெடுத்து தன் பலமுழுதுங் கொண்டு கார்த்தவீரியன்மார்பிலடித்தான் அதற்கு எவ்வளவும் சலியாமல் நகைத்து அடா இராவணா என் பலத்தைப் பாரென்று கதையினால் ஓரடியடித்தான் அந்த அடிபொறுக்காமல் இடிவிழுந்த நாகம்போல செயலழிந்து நின்றான் அதைக் கார்த்த வீரியன் கண்டு இராவணனைத் தோளோடு தோள் சேர்த்து இறுகக்கட்டி நடத்திக்கொண்டு போகும்பொழுது பின்னுமெதிர்த்த மகோதரன் முதலிய சேனைகளைத் துரத்தியடித்து தன்னுடைய பட்டணம்போய் இராவணனை சிறையில் வைத்து சந்தோஷத்தை யடைந்திருந்தான் இச்செய்தியை விபீஷணன்கேட்டு விசனமடைந்து தன் பாட்டனாகிய புலஸ்தியரிடத்திற் சென்று சகலமுந்தெரிவிக்க அவருடனே புறப்பட்டு கார்த்த வீரியார்ச்சுனன் பட்டணம் வந்து அவனை நோக்கிச் சொல்லுகிறார் இராவணன் நெடுங்காலம் தபசுசெய்துபெற்ற பலத்தினால் இந்திரனைசெயித்த வெப்பமாகிய வஸ்திரத்தை உமக்கு குதிரை கொடுத்து சிறையிலும் அகப்படச் செய்த உமக்கு நிகரானவர் ஒருவருண்டோ ஆகையால் இராவணன்மேல் வைத்த கோபத்தை நீக்கி சிறைவிடும்படி தயைசெய்யவேணுமென்று சொல்லி புலஸ்தியரும் பிரம்மலோகம்போனார் இராவணனும் இலங்காபட்டணஞ் சேர்ந்திருந்தான்.

வாலியின்வாலில் இராவணன் கட்டுண்டகதை.

இந்தப்பிரகாரம் அகஸ்தியர் சொல்ல ஸ்ரீராமர் கேட்டு சந்தோஷப்பட்டு வாலியினிடத்திலுங் கட்டுப்பட்டதைச் சொல்லவேணுமென்று கேட்க அகஸ்தியர் சொல்லுகிறார் கேளும் சீதாலட்சுமியாளின் நாயகா அந்த இராவணன் கார்த்த வீரியனிடத்தில் முன்பு தான் பட்டபாட்டை எல்லாமறந்து அகங்காரத்தை

யடைந்து சகல சேனைகளுடன் புறப்பட்டு உலகத்திலெதிர்ப்பட்ட யாவரையும் நாசமாக்கிக் கொண்டு கிஷ்கிந்தாபட்டணத்துக்குப்போய் வாலியென்னப்பட்டவன் எவன் அவனெங்கேபோயிருக்கிறானென்று கேட்டான் அதற்கு வாலியினுடைய மனைவியான தாரையானவள் இராவணனைப்பார்த்து நீ வாலியைத்தேடுகிற காரியமென்னவென்று கேட்டாள் நான் வாலியுடன் யுத்தம்பண்ண வந்தேனென்றான் அதற்கவள் சொன்னாள் இராவணா நீ வாலியுடன் யுத்தஞ்செய்ய திறமுடையவனோ முன்பு உன்னைப்போல அறிவில்லாமல் வந்து யுத்தம்பண்ணி யிறந்துபோன துந்துமி முதலானவர்களுடைய எலும்பு குவித்துக் கிடக்கிற இந்த மலையைப் பார்த்த தில்லையோ ஆகையால் நீ போர்செய்யவேண்டுமாகில் உன்னுடைய எலும்பு மலையிற் சேருகிறது நிச்சயந்தான் அப்படியல்லவென்றால் வாலியானவன் தெற்கு சமுத்திர தீவுக்குப் போயிருக்கிறான் அவ்விடத்திற்குப் போனால் காண்பாயென்று சொன்னாள் அப்படியே இராவணன் தன்னுடைய மந்திரிமார்கள் முதலானவர்களுடனே அவ்விடத்தில் நின்று நீங்கிப் புறப்பட்டு தெற்குசமுத்திரத்தீவு சேர்ந்தான் அப்பொழுது அங்கே முன்னம் ஒரு காலம் முப்பத்து முக்கோடி தேவர்களும் ஒரு பக்கமும் தானொருபக்கமாக நின்று திருப்பாற்கடலைக் கடைந்த தேவர்களுக்கு அமிர்தங்கொடுத்த பராக்கிரமம் பொருந்திய வாலியானவன் சிவபூசை முகத்திலே கண்மூடிக்கொண்டு வேதத்தியானம்பண்ணிக்கொண்டிருக்கிற வாலியைக் கண்டு இந்த சமயத்திலே இவனைப்பிடித்துக்கட்டலாமென்று நினைத்து தன்னுடன் கூடவந்த எல்லோரையும் தூரத்தி படுத்திருக்கிற வாலியைக் கண்டு காணாதவன்போலிருந்தான் அந்தச் சமயத்தில் இராவணன் வாலிக்குப்பின்னே வந்து ஒரே பாய்ச்சலாகப் பாய்ந்து இருபது கைகளினாலும் கட்டிப்பிடித்தான் அப்படிப் பிடிக்க இராவணனை வாலியானவன் ஒரு கையினாலே பொறுக்கி கக்கத்துக்குள்ளிருக்கி நெருக்கித் தன்னுடைய வால்நுனியிலே ஒரு மணியாகக் கட்டிவிட்டு சிவபூசை குறையுஞ்செய்து அந்த வாலியானவன் ஒரே பாய்ச்சலாக முப்பத்து மூவாயிரம் யோசனை தூரங்கடந்து மேற்கடற்றீவுக்குப்போய் அவ்விடத்திலும் சிவபூசை முடித்து அங்கிருக்கும் வடக்குகடல் வரைக்கும் கடல்முதல் கிழக்குக்கடல் வரைக்கும் பாய்ந்து அங்கங்கு சிவார்ச்சனைசெய்து பின்னுமொரு பாய்ச்சலாகப் பாய்ந்து கிஷ்கிந்தாபுரிபட்டணம்வந்து சேர்ந்தான் அப்போது அவன் பாரியாகிய தாரையானவள் வாலியைப்பார்த்து உம்முடைய வாலிலே கட்டப்பட்டு சாமுழுவது நொறுக்கி மிகவுந்துன்பத்துடனே பயந்து கிடக்கும் இவன் எவனென்று கேட்டாள் அதற்கு அவளைப்பார்த்து இன்றைக்கு பத்து தலைபூச்சியப்பட்டது இதை நீ பார்க்கும்படி கொண்டுவந்தேனென்றுசொல்ல அவள் உமது வல்லமைக்கு இவனொரு லட்சியமோ ஆனால் தயவுசெய்து விடவேணுமென்று வேண்டிக்கொண்டாள் அப்படியே செய்கிறேனென்று கட்டவிழ்த்துவிட்டு இராவணனைப்பார்த்து யுத்தம்பண்ண இச்சையுண்டானால் இப்போதே செய்யென்று சொல்ல இராவணன் வாலியைப்பார்த்து நானோ உம்முடன் யுத்தம்பண்ணத் தக்கவனல்ல நீர் என்னை வேறுபாடாக நினையாமல் சிநேகிதனாகக்கொள்ளவேணுமென்று தாழ்ந்துசொல்ல அப்படியே சம்மதித்து தன்னுடைய கிரகத்துக்கு அழைத்துக்கொண்டுபோய் போசனஞ் செய்வித்து நீ எனக்கு முதன்மையான தோழன் என்றுசொல்லி அனுப்பிக்க இராவணனும் வாலியினிடத்தில் உத்திரவுபெற்றுக்கொண்டு தன் இலங்காபட்டணம் வந்து சேர்ந்திருந்தான்.

அனுமந்தன் கதை

இந்தப்பிரகாரம் வாலியினுடைய பல பராக்கிரம முதலான மேன்மைகளையும் இராவணனுடைய உற்பத்தி முதற்கொண்டு வாலியினுடைய வாலிலே கட்டுப்பட்டதுவரைக்குமுள்ள சரித்திரங்களையெல்லாஞ்சொல்லக்கேட்டு ஸ்ரீராமர் மிகவுஞ்சந்தோஷத்தையடைந்தவராய் அகஸ்திய பகவானை நோக்கி முன்பு தான் வனவாசஞ் செய்து வரும்போது சுக்கிரீவனுக்கும் எனக்கும் சிநேகஞ் செய்வித்து பெரிதான சமுத்திரத்தைத்தாண்டியும் அப்பொழுது எதிர்ப்பட்ட சாயாக்கிரகணியுடைய குடலைப்பிடுங்கி அவளைவதைத்தும் அசோகவனத்தை அழித்தும் சம்புமாலிமுதலானவர்களை வதைத்தும் இலங்காபட்டணத்தைக் கொளுத்தியும் சீதையினுடைய பிராணனை இரட்சித்தும் முன்பு எனது இடத்திற்குவந்து என்னுடைய சோகத்தைத் தீர்த்தும் சமுத்திரத்தில் சுலபமான அணைகட்டுவித்தும் பிரம்மாஸ்திரத்தினாலே கட்டுப்பட்டு மூர்ச்சையடைந்திருக்கும் பொழுதில் வடக்கே வெகுதூரத்திலிருந்து சஞ்சீவிமலையைப் பேர்த்தெடுத்துவந்து சகலரையும் இரட்சித்தும் இன்னம் அனேகவித காரியங்களாலே எனக்குபகாரஞ் செய்யாதவனாய் தான் நினைத்தபடிக்கு ரூபங்கொள்ளத்தக்க சித்திவல்லமை முதலாயுள்ள சிலாக்கியகுணமெல்லாம்பெற்று விளங்கும இந்த அனுமானுடைய உற்பத்தியும் சரித்திரமும் விபரமாகச் சொல்ல வேணுமென்று கேட்க அகஸ்தியபகவான் சொல்லுகிறார்.

கேளும் தசரதநந்தனா முன்னமொருகாலம் வாயுபகவானிடத்திலிருந்த ருத்திர வீரியத்தினால் அஞ்சனாதேவி கெர்ப்பத்தில் சாமளவர்ணம் இரத்தினகுண்டலம் தவள எக்கியோபவீதம் நீண்டகைகள் அகண்டமாபுருக்களுடன் அனுமான் பிறந்தவுடனே மாதாவை வணங்கி எனக்கு மிகவும் பசியாயிருக்கிறது

இந்தப்பசி தீரத்தக்க பதார்த்தங்க ளென்னவென்று கேட்க அதற்கவள் வனங்களிலும் சிவந்து பழுத்திருக்கும் மதுரமாகிய பழங்களென்றுசொல்லித் தன் மகனுடைய பசியாற்ற வேண்டிய கனிகள் கொண்டுவர வனத்துக்குப்போனாள் தாய் வருவதற்கு முன்னமே அனுமாருக்கு கொடுமையானபசியுண்டாகி பரிதாபப்பட்டுக் கொண்டிருக்கிற சமயத்தில் உதைய காலத்திற் சூரியனுதித்தான் அந்த சூரியபிம்பத்தைக்கண்டு தனக்குச் சொல்லிய சிவந்தகனிவகைகளில் இதுவுமொரு கனிதானென்று நினைத்து சூரியன்மேற்பாய்ந்தான் அதைத் தேவர்கள் கண்டு நமது சத்துருக்களாகிய இராட்சதர்கள் இந்த அனுமானால் என்னதுன்பத்தை யடைவார்களோவென்று ஆச்சரியத்தையடைந்தார்கள் பிதாவாகிய வாயுபகவான்கண்டு சூரியகிரணங்கள் குளிர்ந்திருக்கக் கடவதென்று வரங்கொடுத்தபடிக்குபாய்ந்து கவ்விக்கொண்டிருக்கும் அனுமானுடைய பராக்கிரமத்தைக் கண்டு பயந்து தேவேந்திரனிடத்திற்குப்போய் சுவாமி சந்திரசூரியமண்டலங்களைப்பற்ற வெனக்கு முன்னம் வரங்கொடுத்திருக்க இப்பொழுது வேறொருவரம் பற்றும்படி நேரிட்ட காரணமென்ன நான்செய்தகுற்றமென்னமோவென்று முறையிட்டு கூறினனதுகேட்டுத் தேவேந்திரன் கோபத்துடனே ஐராவதத்தின்மேலேறிக்கொண்டு அதிகவேகமாகப்போய் நீ சூரியனைப்பிடியென்று இராகுவையேவினான் அதையனுமான்கண்டு இராகுவின்மேலேபாய அவன நடுங்கி உளறிக்கொண்டோடி தேவேந்திரன் காலடியில் விழுந்து புலம்பினனதுகண்டு தேவேந்திரன் மிகக்கோபத்துடனே ஐராவதயானையைப் பிரசண்டவேகமாகவே நடத்தி அனுமார்மீதில் சீறிவரும்பொழுது ஐராவதயானைமுகத்தில் சிவப்பாய் விளங்கும் சிந்தூரப்பொட்டு வட்டத்தை இதுவுமொரு கனிதானோவென் றெண்ணி அனுமார் ஐராவதயானையின் மத்தகத்திலே பாயுமளவில் தேவேந்திரன் கண்டு தன்னுடைய வச்சிராயுதத்தினாலே அடித்தான அந்தயடியினாலே அனுமார் மூர்ச்சையடைந்து பூமியில் விழுந்தார் அதை வாயுபகவான்கண்டு கோபித்து லோகமெங்கும வாயுசஞ்சார மில்லாதபடிசெய்து தனது புத்திரனாகிய அனுமாரை யெடுத்துக்கொண்டு இயமகிரியைச் சேர்ந்து ஒரு குகையில் பிரவேசித்திருந்தான்.

அப்பொழுது உலகமெங்கும் வாயுவியக்கமில்லாதபடியினால் எண்பத்துநான்கு நூறாயிரம் யோனிபேதங்களாயுள்ள சகலபிராணிகளும் வயறுவிம்மி துன்பப்படுகிற சமயத்தில் தேவர்முதலானவர்கள்போய் பிரமதேவரிடத்திற் சொல்ல அவர் வாயுபகவான் இருக்குமிடம்வந்து தேறுதலைச்சொல்லி மூர்ச்சித்துகிடக்கும் அனுமாரையெழுப்பி தம்முடன்வந்த தேவர்களை நோக்கி இந்த அனுமாருக்கு வரங்கொடுப்பீரென்று அருள்செய்ய அப்படியே இந்திரர்முதல் அஷ்டதிக்குபாலகரும் தங்கள் தங்களுடைய ஆயுதங்களினால் மரணமடையா திருக்கவும் விசுவகர்மா எந்த ஆயுதத்தினாலும் சாவில்லாமல் வரங்களைக்கொடுக்க அதன் பின்பு பிரமதேவர் தம்முடைய பிரமகண்டத்தினாலே நாசப்படாமலிருக்கக் கடவதென்று சிரஞ்சீவியாகவும் வரங்களைக்கொடுத்து பிரமாஸ்திரபயநிவாரண மந்திரோபதேசஞ்செய்து வாயுபகவானை நோக்கி உன் புத்திரன் இராவணனுடைய இலங்காபட்டணத்தை யெரித்தழித்து இராக்ஷசர் குலத்தைவேரறுத்து ஸ்ரீராமனுக்குபசரித்து அவருடைய அனுங்கிரகத்தினாலே பிரமபதத்தை யடையக் கடவதென்று அனுக்கிரகித்து தங்கள் லோகத்தைச் சேர்ந்தார்கள்.

இப்படி சமஸ்ததேவர்களிடத்திலும் பெற்ற வரத்தினுடைய மகிமையினாலே தனக்கு நிகரொருவருமில்லையென்று அகங்கார கர்வத்தை யடைந்தவனாய் மதோன்மத்தனாய் மகாரிஷிகளிருக்கும் ஆசிரமங்களிலும் யாகசாலைகளிலும்புகுந்து பாலியசேட்டையால் ஓமயாககாரியங்களுக்கு விகாதஞ்செய்து திரியுங்காலத்தில் ஒருநாள் முனிவர்களெல்லோரும் அனுமார் செய்கிற துஷ்டசெய்கைகளைச் சகிக்கமுடியாமல் மிகவுங் கோபங்கொண்டு எல்லோரு மொருவர்க்காகத் தன்னுடைய பராக்கிரமந் தனக்குத் தெரியாமற்போகக் கடவதென்று சாபஞ்செய்தார்கள் அந்த சாபத்தினாலே அனுமார் தன்னுடைய அகங்காரமும் கோபமுமடங்கி சாத்தை யடைந்தவனாகி நாமிந்த மகாரிஷிகளுக்கு அபசாரத்தைச் செய்தவனானோமென்றுவெட்கத்தையடைந்தவனானான தன்பின்புமதங்கமாமுனிவருடைய ஆசிரமத்தையடைந்து அவ்விடத்திலிருக்கும் சுக்கிரீவனைப் பிராணசிநேகிதனாகத் தோழமை கொண்டு மதங்கமா முனிவரைக் கண்டு வணங்கி அனுமதிபெற்று வேதவேதாங்கமுதலான சகல சாஸ்திரங்களு மோதியுணர்ந்து பின்பு சூரியபகவானிடத்துக்குப்போய் எனக்கு நவ்வியகாரணம் போதிக்கவேணுமென்றுகேட்க அதற்கவர் நாமே வயிறுக்கும் இந்த இரதமானது ஒரு சுவாசகாலத்திற்கு இருபத்தோராயிரத் தறுநூறுயோசனை தூரம் வேகமாகச் சதாகாலமும் சஞ்சரித்துக் கொண்டிருப்பதால் ஓரிடத்திலிருந்து பாடஞ் சொல்வதற்கு சாவகாசமில்லையே இப்படியிருக்கு மென்னிடத்தில் கற்றுக் கொள்வதற்கு வல்லமை யுண்டாகில ஓதுவிக்கிறோமென்றுசொல்ல அதற்கனுமான் சூரியபகவானைப்பார்த்து தேவரீருடைய அனுக்கிரகத்தினாலே இந்தவிதத்தைக் கற்றுக்கொள்வதற்கு எனக்கு வல்லமையுண்டாயிருக்குமென்று சொல்லி உடன்பட்டுக் குருவினிடத்தில் எதிரிருந்து பாடங்கேட்பதுபோல சூரியனுக் கெதிர்முகமாகவே அந்தரவேகத்துக்குப் பின்னிடாமல் ஆகாசமார்க்கத்திற் பாய்ந்தபடியால ஆறுதினத்திலே அந்த நவ்வியாகரணமுழுதும் கற்றுக் கொண்டான் அன்றியும் தயாளம் சாந்தம் சத்தியம் ஞானம் நிகருவநுணம் பிரயத்தினம் செய்த

காரியங்களை விகாதப்படாதபடி முடிக்கும் வல்லமை
நம்பினோர்களைப் பாதுகாக்கும் மனோபிடமுதலான
வைகளில் இவனுக்குச சமானமானவர்கள் ஒருவரு
மில்லை இவனாலே தேவர்களெல்லாம் சவுக்கியத்தை
யடைவார்கள் இன்னுமளவில்லாத மேன்மைபொரு
ந்திய இந்த அனுமானானவன் உம்முடைய திருவடிப்
பணிவிடையைவிரும்பி உம்மைவிட்டு நீங்காதிருப்பா
னுகில் உம்முடையகுணத்துக்கும் கீர்த்திக்கும் சமா
னமுண்டோவென்று இப்படி அனுமானுடைய சரி
த்திரங்களெல்லாம்ஸ்ரீராமருக்குதெரியச்சொன்னார்.

வாலி சுக்ரீபர் உற்பத்தி கதை.

அதுகேட்டு ஸ்ரீராமர் மிகவும் களிப்படைந்து வா
லிசுக்ரீபருடைய உற்பத்தியும்தேவேந்திரன் சூரியன்
அவர்களுக்குப் பிதாவானகாரணமுந் தெரியச்சொ
ல்ல வேணுமென்று கேட்க அகஸ்தியர் சொல்லுகி
ன்றார்.

கேளும் ஸ்ரீராமச்சந்திரா பூருவமொருகாலம் நா
ன்தவஞ்செய்யுமிடத்திற்கு நாரதர் வந்தார் அவரை
வாலி சுக்ரீபர் எந்த ஸ்திரீயினிடத்திற் பிறந்தார்க
ளென்று நான் கேட்க அவர் சொன்னதைச் சொ
ல்லுகிறேன் கேளுமென்று சொல்லுகிறார் மகாமேரு
வின் மத்தியசிகரத்தில் பிரமதேவரானவர் தரகை
யோக நிட்டையிலிருக்கும்போது அவருடைய நேத்
திரங்களிலிருந்து ஜலத்துளிவர அதைத்தமது கரத்
திலேந்திநோக்கும்போது மகா சூரத்தன்மையுடைய
ருட்சவிருஜனெனும்பிருஷவானரம்பிறந்தது அதை
ப்பார்த்து சந்தோஷமடைந்து நீ இந்தபருவதத்தின்
வனங்களில் சஞ்சரித்து கனிவற்கமுதலியதைப் புசி
த்திருவென்று ஆக்யாபித்தார் அதேபிரகாரம் அந்த
வனங்களிலுள்ள புஷ்பங்களை யெடுத்து வந்து பிதா
வாகிய பிரம்மதேவரைப்பூசித்து கனிவர்க்கமுதலிய
தைப் புசித்து அவ்வனத்தில் சஞ்சரித்திருக்கும்
போது அவ்விடத்தில் மகா சிறப்போடுங்கூடிய ஒரு
பொய்கையைக்கண்டு அதிலிறங்கி ஸ்நானபானமுத
லிய நேமநிஷ்டைகளை முடித்துக் கரையேறியக்குள
த்தை பார்க்கும்போது அக்குளத்தில் தன்னுடைய
சாயைதோன்ற அச்சாயை வேறொரு குரங்கென்று
நினைத்து வானரபுத்தியிலதைப்பிடிக்கக்கருதி தடா
கத்திற் குதித்துத் தடவிக்காணுமல் படியேறி நின்ற
வுடனே அத்தடாகத்தின்மகிமையினாலே ஆண்ரூபம்
போய் பெண்ரூபமாகி அவ்வனத்தில் சஞ்சரிக்கும்

போது பிரமதேவரிடம் வந்திருந்துபோகும் தேவேந்
திரனுடைய வீரியமானது வெளிப்பட்டு அந்த ஸ்திரீ
யினுடைய சிரசில் விழுந்து வாலினிட நிற்க வாலியு
ற்பத்தியானான் அப்போதே சூரியனுடைய வீரியமா
னது ஸ்கலிதமாகி அவளுடைய கண்டத்தில் விழு
ந்து கண்டத்தினிடமாக நிற்க சுக்ரீபன் பிறந்தான்
இதைத் தேவேந்திரன் கண்டு மகிழ்ந்து வாலிகழுத்
திற்போட்டு தன் தேவலோகத்தில் சேர்ந்தான் சூரி
யன் மகிழ்ந்து கண்டத்தினிடமாக நிற்கப்பிறந்தமை
யால் சுக்ரீபனென்றும் பெயர்கொடுத்தனுப்ப மச்ச
கிவிருத்தியடையக்கடவதென்று சொல்லி அஸ்தமா
னத்திற்குப்போய் விட்டான் இப்படியிருக்க மறுநா
ட்காலமே அவளுடைய ஸ்திரீயும்நீங்கிமுன்போலப்
புருஷரூபம் வந்தவுடன கணடு ஆச்சரியமடைந்து
தனது குமாரர்க ளிருவரையு மழைத்துக் கொண்டு
பிரமதேவரிடம் வந்து நமஸ்கரித்து வணங்கி நடந்த
சங்கதிகளைச் சொல்லி பிரமதேவர் தனது குமாரனை
யும் பேரப்பிள்ளைக ளிருவரையுங் கண்டு மகிழ்ந்து
நீவானரப்புத்தியினாலே செய்தகாரியம் ஆகிலும் பெ
ரிதல்ல நீ இந்த குழந்தைகளை அழைத்துக்கொண்டு
கிஷ்கிந்தாபட்டணத்திற்குப்போய் வானரர்களுக்கு
அரசனாக வாலிக்குப் பட்டங்கட்டி சுக்ரீபனை இளவ
ரசாக்கி நீங்கள் சுகித்திருங்களென்று சொல்ல அவ்
வுத்திரவைப்பெற்று ருட்சவிருஜனென்னும் வானர
ன்சொல்லுகிறான் சுவாமி அத்தடாகத்தில்முழுகின
வுடன் ஸதிரீயாக வேண்டிய காரணமும் மறுதினம்
பழையபடி புருஷனாகவேண்டியகாரணமும் தெரிய
ச்சொல்ல வேண்டுமென்று கேட்க பிரமதேவர் சொ
ல்லுகின்றார்.

அப்படி முன்னமொருகாலம் பார்வதிதேவியார்
தனது தோழிகளுடன் அக்குளத்தில் விளையாடிக்
கொண்டிருக்கும்போது இராக்ஷதாள் ஸ்திரீரூபங்
கொண்டு அவர்களும் அக்குளத்தில்வந்து விளையாடு
வதைப்பார்த்து பார்வதி தேவியார் அறிந்து இன்று
முதல் இக்குளத்தில எவர்கள் வந்து முழுகினாலும்
ஸ்திரீயாகப் போகக்கடவதென்று சாபமிட்டுப் போ
யினார் அப்படியிருகக நான் ஒரு நாள் பார்வதிதேவி
யாரை அச்சாபத்தை நிவர்த்தி செய்யும்படி கேட்
டேன ஆனால் ஒருநாள்மாத்திரம் ஸ்திரீரூபமாய்மறு
நாள் முன்போல ஆண்ரூபமாகக்கடவதென்று வரந்
கொடுத்தார் அதனால் நீமுழுகினவுடனே பெண்ரூப
மாயும்மறுநாள் எப்போதும்போல ஆண்ரூபமாயினை
யென்றுபிரமதேவர்சொல்லி மூவரையும் கிஷ்கிந்தை

க்கு அனுப்பிவைத்தார் அப்படியேகிஷ்கிந்தைக்கு வந்து வானரவரசனாக வாலிக்கு பட்டந்தரித்து சுக்ரீபன் இளவரசாகவும் இராச்சியபாரஞ்செய்துவந்தார்அதன்பிறகு நடந்த சங்கதிகளெல்லாம் தங்களுக்குந்தெரிந்ததேயொழிய வேறில்லையென்று அகஸ்தியர்சொல்ல ஸ்ரீராமர்கேட்டு அடங்காமகிழ்ச்சி கொண்டிருக்க இப்பொழுது அவ்விடத்திலுள்ள எங்களுக்கு நித்திய நியாகாரித்தியங்க ளநேகமிருந்தாலும் சதாகாலமும் உம்மைவிட்டுப் பிரிந்திருப்பதற்கு மனங்கொள்ளவில்லையென்று சொல்ல அதுகேட்டு ஸ்ரீராகவர்உங்களுடைய தபோமகிமையினலல்லவோ எங்களுடைய ராஜரீகமும் லோகபரிபாலனமு முண்டாச்சு ஆனதால் நீங்கள் நாடோறும் சகலநியமங்கள் தவராமல் நித்திநைமித்தியமான சத்கருமானுஷடானங்கள்வழுவாமல் நடத்திவருவதே யுங்களுடையபாரம் உங்களுடைய ஆசிரமங்களுக் கெழுந்தருளலா மென்றுபசரித்து வணங்கி பின்சென்றனுப்பிவைக்க அகஸ்தியபகவான்முதாலான மகாரிஷிகளெல்லாரும் ஆனந்த சந்தோஷத்தை யடைந்தவர்களுமாய் ஸ்ரீராமனுக்கு அநேகமான ஆசீர்மத்தைச்சேர்ந்திருந்தார்கள்அதன்பிற்பாடு ஸ்ரீராமச்சந்திர தவப்பெருமான் விருந்தார்கள் அதன்பின்பு தனது குமாரனாகிய சனக மகாராசருக்கு அருமையுள்ள வஸ்திராபரணமுதலானவைகளுங்கொடுத்து உபசரித்தனுப்பிவிட்டுசகலதேசராசாக்களும் பூஷணாதிகள் கொடுத்து அவரவர்களுக்குக் தக்கமரியாதைசெய்து விடைதந்துஅளவில்லாத பிராமணர்களுங் கனேகங்கோடி திரவியம் தானங்கொடுத்து சுக்கிரீவனுக்கு இரத்தினமாலையும்அங்கதனுக்கு வைடூரியமாலையும் அனுமாருக்கு முத்துமாலையும் விபீஷணனுக்கு தன்னுடைய தேவபூசையாகிய மூலதனமும் மயிந்தன்-துவிதன்-சாம்புவந்தன்-சுசேஷணன் ரிஷபன்முதலான வானரவீரர்களுக்கு விதவிதமாயுள்ள வஸ்திரபூஷணங்களுங் கொடுத்தனுப்பிவிக்க அங்கச் சுக்ரீபன்முதலான வெல்லோர்களும் மகாசந்தோஷத்துடனே தாங்கள் வாசஞ்செய்புமிடங்களிற் சேர்ந்திருந்தார்கள் பிறகு முப்பத்து முக்கோடிதேவர்கள் வாழ்த்த அயோத்திமாநகரில் ;பரதசத்துருக்க லட்சுமண சீதாசமேதராய் ஸ்ரீராமமூர்த்தியானவர் சகலவிபவத்துடன் அரசுசெலுத்திவந்தார்

அப்படி வானரவீரர்முதலியசகலருக்கும் விடைகொடுத்தனுப்பி உலகத்திலுள்ள வெல்லோருஞ்சந்தோஷத்தையடைந்து வாழ்ந்திருக்கும்படி மனுநீதிதவறாமல் செங்கோல்செலுத்தி ராச்சியபரிபாலனஞ்செய்துக்கொண்டுவரும் நாளில் சிலகாலஞ்சென்றபின்பு ஒருநாள் மிகுந்த விசித்திரமாய் அமைக்கப்பட்ட நந்தவனத்திலுமேற்பட்டதா யிராநின்ற பிருந்தாவனத்திற்சென்று மனையாட்டியாகிய சீதாதேவியுடன் ஸ்ரீராமமூர்த்தியானவர் வேடிக்கையான பல கதைகளைப்பேசிக் கொஞ்சிக் குலாவிக்கொண்டிருந்து கடைசியில் என்னுயிர்க்குயிராகிய காதலியாகிய ஜனகன்பெற்ற இரத்தினமே நீ வயிறுவாய்த்திருப்பது எனக்குச்சர்வக்களிப்பைத்தருகின்றது இப்போது உனக்குஎன்ன வேண்டுவதுயாது விரும்புகின்றனை உண்மையாக எனக்குச்சொல்லென்று ஸ்ரீராமமூர்த்தியானவர்மிகுந்தமனக்களிப்புடன் கேட்க அதைஅந்த ஜானகிபிராட்டியார்கேட்டு அதிகசந்தோஷத்தையடைந்து புன்னகையுடன் ஸ்ரீராமரைப்பார்த்துச் சொல்லுகிறாள்சுவாமிதயைதாக்ஷண்ய தைரியசவுரியாதி சகல கல்யாணகுண பூர்ணரான பர்த்தாவாகிய தேவரீரைப் பெற்றிருக்கிற அடியாளுக்கு விரும்பத்தக்க தேதுமில்லை ஆயினும் சுவாமியே இங்ஙனம் வியமிப்புபதினல்ஒன்றுவேண்டுகிறேன் அதென்னவெனில் உன்னமொருதரம் கங்கைக்கரையிலுள்ள முனிவர்கள் ஆச்சிரமங்களிற் சென்று அவர்கள் திருவடிக்கீழ்க்குற்றேவல்செய்துகொண்டு அவ்விடத்தினழகைப்பார்த்துஅநுபவிக்கவேண்டு மென்னும் விருப்பமிருக்கிறதென்று சீதாதேவியார்விண்ணப்பஞ்செய்தாள் அதற்குஅந்தஇராசசிகாமணியான ஸ்ரீராமமூர்த்தியானவர் அப்படியே ஆகட்டுமென்றருளிச்செய்துபிறகுசபாமண்டபத்தில்தம்பிமார்களுடன் அரசாட்சிசெய்துக்கொண்டிருந்தார்.

இந்த உத்தரகாண்டத்தில் இராவணன் கும்பகர்னன் விபீஷணன் இந்திரசித்துமுதலாகிய அசுரர்களுடைய உற்பத்தியும் அவர்கள் தவஞ்செய்து பெற்றவரங்களையும் ராவணனுடைய திக்குவிஜயம் அனுமாருடைய உற்பத்தியும் ;வாலிசுக்ரீபருடைய உற்பத்திமுதலாகியதுகளுஞ்சொன்னோம்இனிமேல்சீதையம்மன் வனமேகுதலும் குசலவர்களுற்பத்தியும் ஸ்ரீராமர் அஸ்வமேதயாகஞ் செய்யக் குதிரையை விடுதலும் அங்கங்கேயெதிர்த்த •ராசாக்களைவெல்லுதலும் குசலவர்களுடைய யுத்தமும் அஸ்வமேதயாகமும் மகாவிரதமும் இவைமுதலானவைகளை இனி கூறப்படும்

ஸ்ரீராமாயணவசனம் உயுத்தகாண்டம்

முற்றிற்று

பெயர் பக்கம்

பாலகாண்டம்

அயோத்தியாகாண்டம்

ஆரணியகாண்டம்.


கிஷ்கிந்தாகாண்டம்

சுந்தரகாண்டம்

யுத்தகாண்டம்

உத்தரகாண்டம்


ஸ்ரீராமாயணத்தின் அட்டவணை முற்றிற்று.



ஸ்ரீராமர்அஸ்வமேதயாகமண்டபம்.

ஸ்ரீ

ஸ்ரீராமஜெயம்



ஸ்ரீராமர் அஸ்வமேதயாகம்.

உத்தரகாண்டம்

காப்பு

அறுசீர்க்கழிநெடிலாசிரிய விருத்தம்

நாடியபொருள்கைகூடும் ஞானமும்புகழுமுண்டாம்
வீடியர்வழிபதாக்கும் வேதிபன்கமலநோக்கும்
நீடியவரக்கர்சேனை நீறுபட்டழிபவானை
சூடியசிலைபிராமன் றோள்வலிகூறுவோர்க்கே

கதையின் வரலாறு

என்பது ஸ்ரீமத்ராமாயண காவியாகிய ராவண சம்மாரம்முடிந்தவுடனே ராமரானவர் அஸ்வமேதயாகஞ்செய்யும்படியாய் வினைத்து வசிஷ்டர் திருவாக்கின்படி அஸ்வத்தை மந்திராபூதிகளினாற் பூசைபுரிந்து திக்குவிஜயஞ் செய்யும்படியாய்குதிரையின்பின்னால் சத்துருக்கமகாராசனையும் சேனாசமுத்திரங்களையும் கூட்டியனுப்பினர்

அப்போது அந்த அஸ்வமானது காடுகள்மேடுகள்வனங்கள் வனாந்திரங்கள் ஊர்கள், இவைகளையெல்லாங்கடந்து வரும்வழிகளில் குதிரையைப்பிடித்துக்கட்டிய இராசாக்களையெல்லாஞ் சத்துருக்கமகாராசன் தனது அஸ்திரங்களினாற் சின்னப்படஅடித்து புறமுதுகாட்டி யோடும்படிச்செய்துவிராவேசத்துடன் வரும்போது அஸ்வமானது வால்மீகமகாரிஷி ஆசிர்மத்திலிருக்கும் சானகியம்மன் இளையகுமாரனாகிய லவனானவன் அந்த அஸ்வத்தைப் பிடித்துக்கட்டி குதிரையின் பின்னேவந்தவிராட்சதரையும் கொன்றுசிங்கத்தைப்போல கர்ஜித்துநின்றான் அதைக்கண்ட சத்துருக்கமகாராஜன் லவனோடெதிர்த்துகைப்பிடியாகப்பிடித்து தனது தேரிற்கட்டினான

அவனைக்கண்ட அவ்வனத்துப்பெண்கள் சீதையினிடத்திற்கு ஓடிவந்து அம்மா உன்னிளையகுமாரன்யாகத்திற்குவிட்ட குதிரையைப் பிடித்துக்கட்டிகுதிரையின் பின்னேவந்த சேனைகளையெல்லாங்கொன்றான் அந்தச்சேனைகளுக்கு எஜமானாகவந்த ராசன்லவனைப்பிடித்துக்கொண்டு போகிறான் அம்மணியென்றார்கள் அதைக்கேட்ட ஜானகியம்மன் அடித்துமோதி பூமியில்விழுந்து ஐயோமகனேலவகுமாராவென்று புலம்புகிற சப்தத்தைக் குசலவன் கேட்டு ஓடிவந்து ஏனழுகிறாயம்மா ! வென்றுகேட்கஅப்பாமகனே ஆரோ ஒருராசன் உன்தம்பியைப்பிடித்துக்கொண்டுபோகிறானாம் நீபோய் அவனை செயித்து தம்பியை மீட்டுக்கொண்டுவருவாய் மகனேஎன்று ராமருடையபிரசண்டகோதண்டமும்

அஸ்திரங்களுக் கொடுத்தனுப்ப குசலவன் அப்படியேசென்று சேனைகளை யெல்லாங்கொன்று சூரசேனனையும் வீரசேனனையும் மூர்ச்சையடையச்செய்து பின்பு சந்தனமகாராசன்சாத்மீதரானைக்கொன்று சத்ருக்னமகாராசனோடெதிர்த்து அவனையும்பாதனையும் தோற்ப்பையடையச்செய்து லவனைக்கட்டவிழ்த்துவிட லவனும்வில்வளைத்து யெதிரத்தானைதகண்ட அநுமார் அங்கதன்மட்சயந்தனுமான்முதல்யாவருங்குசலனைக்கண்டு அக்கினியைக்கண்ட சருகுபோலும் அறயெகருடனைக்கண்ட அரவங்கள்போலுமாகி அல்லோலகல்லோலப்பட்டு அஸ்திரசஸ்திரங்கள்முறிபட்டு அரக்கருடன் வானரர்களும் குசலவர்களிடத்திற் பட்டங்கட்டவில்லாலடிப்பட்டு வெட்கங்கெட்டு விடாய்பட்டு விருதுகெட்டு வித்தைகெட்டு வெற்றியடையாமல் புத்திகெட்டுத் தடுமாறி இராமருடைய இராமருடைய திருவடியைக்கோரி அவரிடஞ்சென்று அருகாமையில்நின்று இச்செய்தியைக் கூறினார்கள்


அதனைக்கேட்ட ராமர் கோபமீறி தேரேறி சாரதியைத்துறகண்கள்சிவப்பேறி சித்தமிகநொந்து யுத்தகளம்வந்து மாண்டவர்களையும் மற்றவர்களையும்பார்த்து நல்லதென்று மனதிலெண்ணி வில்லெக்குணத்தொனிபண்ணி அட்டகாசஞ்செய்து குசலவர்களைப்பார்த்து அவர்களோடெதிர்த்து அவர்கள்தீரத்தைக்கண்டுமெதித்து புத்திரரென்ற வாஞ்சையினாற்பொய்ப்போரினைக்கொண்டு போராடி இராமர் பாதர் சத்ருக்கர்மீளாமல்மாளவே குசலவர்களும் அவர்களுடைய ஆபரணமும் முடிவிருதுக்கொடியு மெடுத்துக்கொண்டு அநுமார் ஜாம்புவந்தர அஸ்வமேதக் குதிரையுடனுந்தங்களிருப்பிடமாகிய வால்மீகர்வனம் வந்தார்கள் இதனை ஞானதிபம்மன்கண்டு தர்மதகளைக் கொன்று வந்தார்களென்று பயங்கொண்டு வால்மீகருக்குக்கூற வால்மீகர் வாயுசகாயனுல் கமண்டலத்திலிருந்த அமிர்தத்தினுல இராமலட்சமணர் பாதர்சத்துருக்கர்முதலிய யாவரையும் எழுப்பினார் அக்காலையில் தேவர்கள் புஷ்பமாரிவருஷித்தார்கள் சகலரிஷிகளும்புடைசூழ முப்பத்துமுக்கோடி தேவர்களுடன் நாற்பத்தெண்ணாயிர ரிஷிகள்சூழவும் பரமேசுவரர் பார்வதியுடன வருகவும் அன்னவாகனத்தின்மீது பிரமதேவனைவர் மேல, சிவசுப்பிரமணியர் வள்ளியம்மை தெய்வானையுடன் பட்சியின்மீதுவந்து உலாவவும் வெள்ளையானையின்மீதில இந்திராசன்வந்துபொருந்தவுங் கண்ணுவர் சமதக்கினி கலைக்கோட்டுமெகாரிஷி வசிஷ்டர் துருவாசர் முதலான தபோதனர்கள்வந்துபோற்றவும் ஸ்ரீராமலட்சமணசத்ருக்னருக்களுடன் அவ்வனத்திற் கொலுவிருந்தார் அத்தருணத்தில வால்மீகமகாரிஷியும்நாரதரும் இராமரைப்பார்த்து ஓ ராமமூர்த்தியே ஸ்ரீ! உம்முடைய பெண்சாதிபிள்ளைகளைச் சுகமாய் அழைத்துக்கொண்டு அயோத்தியாபுரிக்குப் போமென்றுகூற இராமர் மௌனமாயிருந்தார் பின்னும்வால்மீகர் ஞானதிபம்மன் தனதுஆசிரமம் வந்ததுமுதல் பிள்ளைகள் உற்பத்தியானது வரையில் விரிவாகச்சொல்லியும் வேறுமொழி கூறாமலிருந்தார்

அதனைக்கண்டுணர்ந்த ஞானதிபம்மனவன் முன்போல மறுபடியும் அக்கினியைவளர்த்தி அதில் இருபிள்ளைகளோடு குதித்து மாசுமறுவில்லாமல் தேஜசுபொருந்திய இருபிள்ளைகளோடு நீங்கிவிளையாடிவெளியில் வந்ததைக்கண்ட தேவர்கள்முதல் யாவரும் ஆனந்தங்கொண்டு சிலர் வாழ்த்தவும் பலர்போற்றவுமிருக்கையில் ராமபிரானவர் தேவர்களிடத்திலும் முனிவர்களிடத்திலும் விடைபெற்றுக்கொண்டு சீதாபிராட்டியுடன் லட்சுமணர் பரதர்சத்துருக்கர் லவன் குசலவனோடுதேரேறி யாவரும்புடைசூழ சேனைகள்தாழ அஸ்வமேதக் குதிரையுடன் அயோத்தியாபுரிபட்டணஞ்சென்று வசிஷ்டர் திருவாக்கின்படி அஸ்வமேதயாகத்தை சிறைவேற்றி தேவர்களுக்கு அவிர்ப்பாகங் கொடுத்து அனேக தானதருமங்களைச் செய்துபின்பு சில நாள் பொறுத்து அயோத்தியாபுரியை குசலவர்களுக்குப் பட்டங்கட்டிவித்து தம்பிமார்களாகிய லட்சுமணர் பாதர்சத்துருக்கர்மூன்றுபேர்களுடனும்ராமரானவர்வைகுந்தஞ்சேர்ந்ததாகப் பிரசங்கத்தை நாரதர் வால்மீகருக்கு அருளிச்செய்ய வால்மீகர் குசலவர்களுக்கு ஸ்நானபான நேமநிஷ்டைகள் செய்துகொள்ளச்சொல்லி பின்பு அஸ்வமேதயாகமண்டபத்தில் தெர்ப்பாசனத்தின்பேரில் உட்காரவைத்துக்கொண்டு ஒருவர்பேரில் சுவாசம் விடாமலும் வாயில் தாம்பூலம் போடாமலும் அட்டங்கால் போடாமலும்பத்திவிசுவாசத்துடனே ராமாயணம்ஆதிமுதல்ஸ்ரீராமர்வைகுந்தம்போன வரையில் மேற்படி குசலவர்களுக்கு அருளிச்செய்ததுக்கதையைப் படித்தவர்களும் ஸ்ரீராமருடைய கிருபாகடாக்ஷத்தினுல் சகல பாக்கியங்களும் சம்பத்தும் அஷ்டஐஸ்வரியமும் தீர்க்காயுசும் புத்திரசந்தானமும் மென்மேலும்பெருகவுண்டாகி மிக வாழ்வார்கள் என்றவாறு

கதையின் வரலாறு முற்றிற்று

ஸ்ரீ

ஸ்ரீராமஜெயம்



ஸ்ரீராமர் அஸ்வமேதயாகம்.

உத்தரகாண்டம்

காப்பு

கையிலாழி எடுத்தருள்கண்ணனை
மையுலாம்விழி மங்கையர்பாகனை
உய்யவந்துத யஞ்செய்தபானுவை
வையமுண்டசெ வாயனைவாழ்த்துவாம்.

என்பது

என்னுண்டவராய் விளங்கப்பட்டவால்மீகர்சொல்லிய இராமாயணத்தில் பாலகாண்டம், அயோத்தியாகாண்டம், ஆரண்யகாண்டம், கிஷ்கிந்தாகாண்டம், சுந்தரகாண்டம், யுத்தகாண்டம், உத்தரகாண்டமென்று விளங்கிய ஏழுகாண்டத்திலிப்போது சொல்லப்பட்ட உத்தரகாண்டத்தினுடைய கதாப்பிரசங்கம் வால்மீகர்சுலோகப்படி பீமகவிராயரானவர் தமிழிலே அர்த்தசாரம் பண்ணிக்கொண்டு வருகிறார் இராமாவென்றால் பாவம்போம்ராமாவேன்றால் ஜென்மசாபல்யமாகும்ராமாவென்றால் ஆபத்து நீங்கும் இப்படிச் சொல்லப்பட்ட உத்தராமாயணப் பிரசங்கத்தில் பிழைபொருட்குற்றங்களிருந்தாலும் வித்வாமிசர்களாயிருக்கப்பட்ட பெரியவாள் அங்கீகரிக்கக் கடவதென்று விநாயகபூசைசெய்து உத்தரராமாயணத்தில் குசலவர்களுடைய கதாப் பிரசங்கங்களைச்சொல்லிக்கொண்டுவருவது எப்படியென்றால்

ஸ்ரீராமர் அரசிருத்தல்

இராமச்சந்திர சுவாமியானவர் இராவணசம்மாரஞ்செய்து சீதாபிராட்டியுடனே பட்டாபிஷேகராயிருக்கையில் சதகண்ட ராவணனென்றுஞ் சகஸ்திரகண்டராவணனென்றுஞ் சொல்லப்பட்ட இரண்டு ராக்ஷதர்கள் பன்னீராயிரம்வெள்ளஞ்சேனையுடனேவந்து யுத்தஞ்செய்து சீதாதேவியால்இறந்துபோன பிற்பாடு அயோத்தியில் வந்து ராச்சியபாரஞ் செய்துக்கொண்டிருக்கும் நாளையில் ஒருநாட்காலமே எழுந்துகாலைக்கடன்களை தீர்த்துக்கொண்டு போசனமருந்தி ஆடையாபரணங்களணிந்து கிரீடம்பூண்டு கையில்கோதண்டத்தைப் பிடித்துக்கொண்டு ஆசாரவாசலிலே வந்தார்அப்போது ஆயிரங்கன்னிமார்கள் வந்து ஆலாத்தியேந்த தம்பிமார் புடைசூழ பொற்பிரம்புக்காரர் பராமரிபண்ண டமாரபேரிகை வாத்தியங்கள் முழங்கும்படியாய் சபாமண்டபம் வருகிறபோது படைத்தலைவர் சேனாதிபதிகளும் எதிரேவந்து பணிந்துநிற்கச்சகலமானபேரையும் ஆசீர்வதித்து சபாமண்டபத்தில்உட்கார்ந்தார் பரதர் சட்சமணர் சத்துருக்கர் ஒவ்வொருபடி தாழ்ந்துட்கார்ந்தார் கட்டியக்காரர் கட்டியங்கூற கவிவாணர் புகழ மேனகைஅரம்பை ஊர்வசிநிலோர்த்தமைக்குச் சரியான மாதர்கள் நடனம்புரிய ஊர்கணக்கப் பிள்ளைகள் க

ணக்கை ஒப்பிவிக்க ஊர்காக்குந்தலையாரிகள் அ
யோத்தியில நடக்கப்பட்ட சமாச்சாரங்களை அன்
றைக்கன்றுடம் வந்துசொல்ல ஊர்பெரிதனக்கார
ர்தினந்தினஞ் காணிக்கை கப்பத்துடனே எதிர்
கொண்டுவந்து ராமமூர்த்தியை வணங்க அதில ச
மர்மச்சத்தர் சமாகலொன்றுந சொல்லப்பட்ட நா
ல்வகைச் சேனைகளுடனுமே நிறைந்து கொலுவாயி
ருக்கையில் ராசாக்களுஞ் சேனாபதிகளும் தள
வாய்களுஞ் பிரதானிகளும்ஊரிலுள்ளபெரியோ
ர்களும் வந்துவணங்க ராமரானவர் அவரவர்களை
ஆசிர்வதித்து உட்காரும்படியாய் உத்தரவு கொடு
க்கஅவரவர்களும் ஒருபுறம் உட்கார்ந்தார்கள்

இப்படியாக ராமமூர்த்தியானவர் நிறைந்தகொ
லுவாய் வெகு ஆடம்பரங்களுடனே தேவேந்திர
ன்கொலுவைப்போல சகல தேசத்தராசர்களும் வ
ணங்கராமபிரானும் அவர்களுக்குத்தரவு நடத்திக்
கொண்டுராசரீதிமுறைமை தப்பாமல் ராசரீகம் ப
ண்ணுங்காலையில்திங்கள் மும்மாரிபெய்ய யாதொ
ன்றுங் குறையில்லாமல் சமபாகார் கேழ்வரகு மு
தலிய நவதானியங்களும் விளையும் அதில் ஒன்பது
பங்கு குடிகளுக்கு வாரங்கொடுத்து ஒருபங்கு தா
னதருமங்கள் செய்துக்கொண்டு செபதப ஓமம்வி
ரதம்புரிந்து தேவர்களும் ரிஷிகளும்வாழ்த்த ஒரு
வரும்நிகரில்லாமல்அயோத்தியாபுரிபட்டணத்தை
அரசாட்சி செய்துவருகிற நாளில் ஓர்நாள்சூரியன்
அஸ்தமித்தவுடனே சகலருக்கும் விடைகொடுத்து
ராமர் லட்சுமணர்பரதர் சத்துருக்கருடனே சபா
மண்டபம்விட்டு அரண்மனை சென்றுமாலை செபத
பங்களைமுடித்துக்கொண்டு போசனமருந்திபள்ளி
யறைபோய் பள்ளிகொண்டார்கள் சகலவுயிர்ப்பி
ராணிகளும் அயமடங்கின பிற்பாடு ஊர்காவற்
காக்குந் தலையாரிகள் இராத்திரி பதினைந்து நாழி
கைக்குமேல் தடிதழுக்கை யெடுத்துக்கொண்டு எ
ழுசுற்றுக் கோட்டையுஞ்சுற்றி பட்டணத்திலுள்ளு
ழைந்து பிர்மக்ஷத்திரிய வைசிய சூத்திரரென்கிற
நான்குசாதி வீதிகளுங் கஸ்தூசுத்தி வருகிறபோது
அந்தவீதிகளெங்கும் சந்தோஷ மங்களகாமாக ஆனந்
தவைபோகத்துடன் இருக்கிறதுகண்டு வீதிதோ
றுந்தப்பாமல் அந்தந்த சென்றுவீடுகள்தோறும்
பார்த்துக்கொண்டு வருகிறபோது ஒருவீட்டில் ஒ
ருவண்ணான் தன்பெண்சாதியை யடித்தான் அப்பெ
ண்சாதியானவள் பிணங்கி அண்டைவீட்டிற் போ
யிருந்தாள்மாமியார்தனும்போய் அழைத்தார்க
ள் அதற்கந்தவண்ணாத்திமருமகள்சொல்லுகிறாள் நீ
ங்களென்னை அழைக்கிறீர்கள் நான்வருகிறேன் ம
றுபடியும் என்னையடிப்பான் நானல்லவோபடவே
ண்டும் எனக்காக நீங்கள்தொந்திரவு படவேண்

டாம் என்புருஷன் வந்தழைத்தால்தான் வருவே
னென்றாள் அதுகேட்டு அவர்களும் உண்மைதா
னென்று வந்துவிட்டார்கள்

அப்போது அந்தவண்ணானவன் தன்றொழிலை
யெல்லாஞ்செய்து வீட்டிற்குவந்து போசனஞ்செ
ய்துதாம்பூலமருந்தி வாசலிற் பாயைப்போட்டுப்
படுத்துக்கொண்டான் அந்தருணத்தில் அவன்தா
யார்அவனைப்பார்த்து அடா தம்பி உன்பெண்சாதி
சண்டைபோட்டு மூன்றுநாளாய் அயல்வீட்டிற்
போயிருக்கின்றாளே அவளைச் சமாதானப்படுத்தி
நாளைகாலமே அழைத்துவா தம்பியென்றாள் அது
கேட்டு வண்ணானுக்கு கண்சிவந்து அதிகோபங்
கொண்டெழுந்து தாயாரைப்பார்த்து அடியம்மா
பயித்தியம்பிடித்தவளே நானென்ன மூன்றுநாளா
ய்தன்வீட்டைவிட்டு அண்டைவீட்டுக்குப்போயிரு
க்கிற பெண்சாதியைக் கூப்பிடுவேனோ அந்தராம
ன்பெண்சாதியான சீதையைராவணனிடத்தில்பத்
துமாதம் வைத்துவிட்டு குரங்குசேனைகளைக் கூட்
டிக்கொண்டு ராவணனுடனே சண்டைபண்ணிரா
வணனைக்கொன்று சீதையையழைத்துவந்து சிம்
மாசனத்தின்பேரில் உட்காரவைத்து பட்டமுந்த
ரித்து பட்டாபிஷேகராய் ராசரீகம்பண்ணுகிறான்
மூன்றுநாள் அப்புறம்போயிருந்தவளை யழைத்து
வீட்டில் வைத்துக்கொள்வேனேயானால் என்சாதி
க்கினம்வந்துவிடும் என்வீட்டில்நமதினத்தார் நகை
க்கமாட்டார்களா என்குலம் அந்தஇராமன்குலத்
தைப்போலல்ல வீடுவிட்டுப்போனவளை இனிநான
ழைக்கிறதில்லையென்றான் அதற்குவண்ணான்தாயா
னவள்மறுவார்த்தைசொல்லாமல் மௌனமாயிருந்
துவிட்டாள் இவைகளெல்லாம் பதுங்கியிருந்து ந
ன்றாய்க்கேட்ட தலையாரிகள் இதற்கென்ன செய்
வோம் ராமருடனே எப்படி வாய்திறந்து சொல்
வோம் சொன்னால் என்னமாய் முடியுமோ சொல்
லாவிட்டாலும் ராமத்துரோகம் விடாது அவனை
வெட்டித்தள்ளிவிந்து போடுவோமானால் ராமத்
துரோகம் விடாதே லட்சுமணர் கேட்டாரேயானா
ல்ஒரேபாணத்தினாலெய்துபோடுவாரோ பரதர்சத்
துருக்கர் கேட்பாரேயானால் வாளுக்கிரையாக்கி
விடுவாரே மகாபதிவிரதா சிரோன்மணியாகிய சீ
தை கேட்பாளேயானால் சாம்பலாக எரித்துபோ
கசாபங்கொடுப்பாளே நாம்ராமருடைய அரசில்
சொல்லப்போகாதே என்னவென்றுதான் மனம்
வந்துஇராமருடனேபோய் கூசாமற்சொல்லுவோ
ம்சொன்னாலவு மழிந்துபோமே லோகமாதாவா
னசீதாலட்சுமிபேரிலே குற்றஞ்சொல்லத்தகுமோ
லோகத்தையெல்லாம்ஈன்றெடுத்தமாதாவாச்சுதே
ரசகனை வண்ணான் புத்தியில்லாமற்சொன்னசொ

ல்லை நாம்எப்படி சொல்லுவோம் என்னசெய்வோம் ராமாராமாவென்று தலைமேற் கையைவைத்து கன்றிழந்த பசுப்போற்கதறிக்கொண்டு வருகிறபோது பொழுதுவிடிய ஐந்துநாழிகையில் ஸ்ரீராமர்எழுந்திருந்து காலப்பிரவிர்த்திதீர்க்கவெளியிலே வந்தார் அதுகண்டு தலையாரிகளும் நமஸ்கரித்துநின்றார்கள் ஸ்ரீராமமூர்த்தி திடுக்கிட்டுமனதுகலங்கி அழுதுக்கொண்டுவந்த காரியமென்ன மலைகலங்கினாலும் உங்கள் மனதுகலங்காதே யார்தான் உங்களையடித்தவர்கள் அசுரரோ எவரானாலும்சரி எமலோக மேத்திவிடுகிறேன் சீக்கிரஞ்சொல்லுங்களென்று ஸ்ரீராமமூர்த்தியானவர் கேட்டார்

அதுகேட்டுத்தலையாரிகள் சொல்லுகிறார்கள் ஐயாகுருநாதா நாங்கள்சொல்லப்பயப்படுகிறோமென்றார்கள் அதற்கு ஸ்ரீராமமூர்த்தியானவர் வாருந்தலையாரிகளே மழை காற்று இடிநெருப்பு என்கிற இந்நான்குக்கும் பயப்படுவீர்களே யல்லாமல்மற்றபடி அசுரர் தேவர் எமன் இவர்களுக்கு என்கைபாணமிருக்கச்சே நீங்கள் பயப்பட்டுவந்த காரணமென்ன பயப்படாமல் மனதைத் தைரியப் படுத்திக்கொண்டு சஞ்சலமில்லாமற் சொல்லுங்களென்றார் ஸ்ரீராமமூர்த்தியானவர் அப்போது தலையாரிகள்மனதைத் தயிரியப்படுத்திக்கொண்டு ஸ்ரீராமரைக்கொண்டாடி அவரைப்பார்த்து ஐயாஜனார்த்தனா தங்களுத்தாரப்படிக்குத் தினந்தோறும் பட்டணத்தில் நகர்சோதனை பார்த்துக்கொண்டுவருவோம் உத்தமமான விசேஷமாயிருக்கும் நாள்தோறும் அறிக்கையிட்டுப் போவோம் இன்றிராத்திரிபதினைந்து நாழிகைக்குமேல் அயோத்தியாபுரி பட்டணத்திலுள்ள வீதிகள்வீடுதோறும் பார்த்துக்கொண்டு கடைசியில் வண்ணார்வீதி வருகிறபோது புருஷனுடனேசண்டைபண்ணி அண்டைவீட்டில் மூன்றுநாளாய்ப்போயிருக்கிறாள் நாளைகாலமே அவளைச்சமாதானப்படுத்தி அழைத்துவாவென்று மாதாவானவள்சொல்ல அதுகேட்டு பிள்ளையான வண்ணான் அம்மாபயித்தியம் பிடித்தவளே அந்தராமன் பெண்சாதியை ராவணன்எடுத்துக்கொண்டுபோய் பத்துமாதம்வரையில் வைத்திருந்தான் அதன்பிற்பாடு ராமன் குரங்கு சேனைகளைக் கூட்டிக்கொண்டுபோய் அந்தராவணனையும்ராட்சதர்களையுங்கொன்று சீதையையழைத்துக்கொண்டுவந்து பட்டாபிஷேகமுந்தரித்து சிம்மாசனத்தில்வைத்துக்கொண்டுராசரீகம்பண்ணுகிறான் அப்படிஎன்வாசற்படிவிட்டு அயல்வீடேறி மூன்றுநாளாகப்போயிருப்பவளை நானழைத்துக் கொண்டுவீட்டில் வைத்துக்கொள்வேனேயாகில் என்குலத்தார் என்வீட்டில் கைநனைக்கமாட்டார்கள் அந்த ராமன்குலத்தைப்போல என்குலமென்று எண்ணாதே அப்படியல்லவென்றழைத்தாலும் நம்முடைய குலத்தார்நம்மையேசுவார்கள் அந்த ராமனைப்போல் என்னையுமெண்ணாதே போபோ பயித்தியக்காரியென்று வண்ணான்சொல்ல வாய்வாராமல்சும்மாயிருந்து விட்டாள் அதுசமாச்சாரந்தங்களுக்குச்சொல்லாமற்போனோமேயானால் எங்களுக்கு இராமத்துரோக மல்லவோவென்று தலையாரிகள் கூறினார்கள்

அதுகேட்டு ஸ்ரீராமமூர்த்தி தலையையசைத்துதுஞ்சிரிப்புக்கொண்டு தலையாரிகளைப்பார்த்துச்சொல்லுகிறார் தலையாரிகளே யதனால் அவன்மீதுகுற்றமென்னயிருக்கிறது உலைவாயைமூடினாலும்ஊர்வாயைமூடப்போகாதென்று சொல்லித் தலையாரிகளையனுப்பிவிட்டுத் தான்காலப்பிவர்த்தம்போய் காலலம்பிக்கொண்டு தந்தசுத்திபண்ணி அனுஷ்டானங்களை முடித்துஅரண்மனையில்வந்து போசனமருந்தி கற்பூரதாம்பூலமெடுத்துக்கொண்டுலோகமாதாவான சீதையம்மனுடனே முகங்கோணாமல் சரசல்லாபமாய்ப்பேசிவிளையாடிக்கொண்டு சற்றுநேரமிருந்து ஆடையாபரணந்தரித்து கிரீடம்பூண்டு அம்புறாப்பொதி முதுகிற்றரித்து கையிற்கோதண்டத்தைப் பிடித்து ஆபிரங்கன்னிமார் புடைசூழ வெற்றிசங்கு குறிக்கசின்னமூதக்கினக்குடைகவிகசாமரம் மயில்விசிறிபோட வேசியர்கள்நடனம்புரிய கட்டியக்காரர் கட்டியங்கூறபுலவர்கள் புகழ மத்தளம் புள்ளாங்குழல் ருத்திரவீணை சங்கீத மேளவாத்தியங்கள் முழங்கஸ்ரீராமரானவர் அரண்மனையைவிட்டு வெளியே புறப்பட்டார்

அப்போது லட்சுமணனும் பரதர் சத்துருக்கனும்ஆடையாபரணம்பூண்டு கிரீடமணிந்து அம்புறாப்பொதியுஞ் சாத்தி தனுசைக் கையிலே பிடித்துக்கொண்டுராமரை வந்து நமஸ்கரிக்க இராமமூர்த்தியும் அவர்களையெடுத்து ஆசிர்வாதஞ்செய்தார் பிறகுமந்திரிமார்கள் சேனாதிபதிகள் களங்கள்படைத்தலைவர்கள் எதிர்கொண்டு சேவிக்க சகலருக்கும் ஆசிர்வாதம் புரிந்துசபாமண்டபம் வந்து முப்பத்திரண்டு சிங்கங்கள் தாங்கப்பட்ட இந்திரசிம்மாசனத்தில் ஸ்ரீராமரானவர் வீற்றிருந்தார் பரதலட்சுமணர்சத்துருக்கனும் ஒவ்வொருபடிகாழ உட்கார்ந்தார்கள் சேனாதிபதியானசுசேனனும் படைத்தலைவர் சேனாதிபதிகள் நால்வகைச் சேனைத்திரளும்வந்து ஸ்ரீராமரைச்சேவிக்க அவரும் அவர்களுக்கு ஆசிர்வதித்து உட்கார்ந்தார்கள் இப்படியிறைந்தசொலுவாக சுவர்க்க ராசனைப்போல ராமர்தம்பிமார்களுடனே மந்திராலோசனைகளும்ராசநீதிதிட்டங்களும் பேசிக் கொண் டிருக்கையில் குரி

வனஸ்தமானதுகண்டு ராமமூர்த்தியானவர் மந்திரிபிரதானி நால்வகைச்சேனை பரிவாரங்களுக்கும் விடைகொடுத்து சபாமண்டபம் விட்டு தம்பிமார்களுடன் கூடப்புறப்பட்டு முப்பத்திரண்டு மேளவாத்தியங்களுமுழங்க அரண்மனைவந்துசந்தியானுஷ்டான முடித்துக்கொண்டுபோசனமருந்தி சீதையம்மனுடனே சற்றுநேரம் பேசிக் கொண்டிருந்து ஒருவருக்குந்தெரியாமல் கருப்புக்கம்பளி ஒன்றைப்போர்த்துக்கொண்டு கரத்தில் ஒருகோலைப் பிடித்து வண்ணாவீதியாக வருகிறபோது அப்பெண்ணுக்குத் தாய்தகப்பனார் பத்துவண்ணாரைக்கூட்டி புருஷனை யழைத்துக்கேட்கிறபோது தலைவாரிகள்கூறியபடியே சொன்னான் இராமமூர்த்தியும் ஒன்று மறியாதவரைப்போல்கேட்டுக்கொண்டிருந்தார் அப்போதந்தவண்ணானும் ஒரேபிடியாய் அயல்வீடுபோன பெண்சாதி வேண்டாமென்று தீர்ப்புச் செய்துவிட்டான்

அதுகேட்டு இராமபிரான் மூக்கின்மீது விரலைவைத்து இரசகனை வண்ணானுக்கு நாம் ஈடாகாமற்போய்விட்டோமென்று மனம்வெட்கித் தன்னரண்மனைவந்து வேஷத்தை மாற்றிக் கிரீடந்தரித்து புஜகீர்த்தியணிந்து ஆடையாபரணந்தரித்துக் கையிற்கோதண்டத்தைப் பிடித்து ஒண்டியாய்ப் புறப்பட்டுக் கொலு மண்டபம் வருகையில் அப்போதந்தக் கொலுமண்டபம் எப்படியிருந்ததென்றால் தங்கத்தைச்சேறுசெய்து நவரத்தினத்தாலே கற்களழுத்தி பவழத்தினாற்புதுக்கிவைத்து அபரஞ்சி தங்கத்தினால் கால்கள் நிறுத்திதங்கப்பாளத்தினாற் சித்திரங்களெழுதி அந்தப்பலகையில் நவரத்தினத்தினாற் சித்திரங்களெழுதி அந்த மண்டபங்களில்நிலைகண்ணாடிகள் கட்டி நவரத்தினராந்தல்வைத்து அந்த நவரத்தின ராந்தல் விளக்கேற்றி ரத்தினத்தோரணங்கள் கட்டிமண்டபத்தினுள்ளே மாவுகல்பாப்பி முத்து நவரத்தினத்தாலே கோலங்களிட்டு ரத்தினக்கம்பளங்கள் விஸ்தாரமாய்ப்பரப்பிஅதன்மீது ரத்தினசிம்மாசனம் அமைந்திருக்கின்றது அந்தசிம்மாசனத்தில் வந்துட்கார்ந்து ஆடாசேவகனையென்றார் அப்போது பதினாயிரஞ்சேவகரோடிவந்து சுவாமியை நமஸ்கரித்து கைகட்டி வாய்புதைத்து நின்றார்கள் அதுகண்டு ராமமூர்த்தி சேவகர்யாவரையு மனுப்பிவிட்டு ஒருசேவகனை யழைத்து பரதலட்சுமணர் சத்துருக்கனும் இந்தமூன்று பேரையும் உன்தமையன் அழைத்துக்கொண்டுவரச்சொன்னானென்று சந்நிதியிற்போய்அழைத்துவாவென்றார் அப்படியே யந்தச்சேவகன் வாயுவேகம ஆனோவேகமாயோடி பரதர் லட்சுமணர் சத்துருக்கனை நமஸ்கரித்துச் சொல்லுகிறான் சுவாமியானவர் உங்களை அதிசீக்கிரமழைத்துக்கொண்டு வரச்சொன்னார் பின்னையொரு சமாச்சாரமும் இல்லையென்றான் சேவகனானவன் அதுகேட்டு தம்பிமார் மூவரும் வஸ்திரந்தரிக்கநேரமில்லாமல்கோதண்டத்தைக் கையிற்பிடித்துக்கொண்டு ஓட்டமும் நடையுமாகவந்து சுவாமியை நமஸ்கரித்து நின்றார்கள் அப்படி நமஸ்கரித்த தம்பிமார்களுக்கு ஆசீர்வதித்துதம்பிமாரைப்பார்த்து வாருந்தம்பி மார்களே நம்முடைய வம்சத்திலில்லாத நடத்தை நாம்நடந்தபடியினாலே சீதையினால் நமக்குஅபகீர்த்திவந்து நேர்ந்தது இராவணன் சீதையைப் பத்துமாதம்அசோகவனத்தில் வைத்தும் நாம்போய் அவனைச்சங்கரித்து சீதையையழைத்துவந்து பட்டாபிஷேகமாய்ப் பட்டணத்தில் வைத்துக்கொண்டபடியினாலே அபகீர்த்திவந்தது அவளை அவ்விடத்திற்றானே விட்டு வந்தோமேயானால் நமக்கு அபகீர்த்தி வரமாட்டாது அதெப்படியென்றால் இப்போது நகர்சோதனைக்குப் போயிருந்தேன் அவ்விடத்திலான சமாச்சாரமென்றால்புருஷனும் பெண்சாதியுஞ்சண்டைபண்ணி பெண்சாதியானவள்அயல்வீடுபோயிருந்தாள் அவள்புருஷனுக்குத்தாயானவள் பிள்ளையைப்பார்த்து அடா தம்பி உன்பெண்சாதியினங்கிக்கொண்டு அன்கூடவீட்டில் மூன்று நாளாய்ப் போயிருக்கின்றாளே அவளைச் சமாதானப் படுத்தி அழைத்துக்கொண்டுவாவென்று சொன்னாள் அதுகேட்டுபிள்ளையானவன் அடியம்மாபோபோபயித்தியம்பிடித்தவளே அந்தராமன்பெண்சாதியை இராவணன்கையில்பத்துமாதம் ஒப்பித்துப்போட்டு அதற்குபிற்பாடு குரங்குசேனைகளைக் கூட்டிக்கொண்டுராவணனைக்கொன்றுசீதையையழைத்துவந்து பட்டமுந்தரித்துராச்சியமுமாளுகிறான் அந்தராமன்குலத்தைப்போல என்குலத்தை யெண்ணாதேயுன்வாசற்படிவிட்டுமூன்றுநாள் அயல்வீட்டிற்போயிருந்தவளை நான்போயழைத்தேனேயானால்என் குலத்தாரெல்லோருமென்னை ஏசுவார்கள் அப்படி அயல்வீடுபோனபெண்சாதிஎனக்குஅக்கறையில்லையென்று தீர்ப்புக்கொடுத்துவிட்டான்ரசகனென்ற வண்ணானானவன் ஆனபடியினாலேசீதையைஇப்போதுதானே கொண்டுபோய் வனத்தில் விட்டுவந்தால்உத்தமமாய்க் காணுகிறதென்றார் ஸ்ரீராமமூர்த்தியானவர் அவ்வார்த்தையைக்கேட்ட தம்பிமார் மூவரும் இடிவிழுந்த சாய்ந்தமாம்போல் ஒன்றுஞ்சொல்லாமல் நின்றுவிட்டார்கள் அத்தருணத்தில் ஸ்ரீராமமூர்த்தியானவர் தன்னுடைய தம்பியாகிய லட்சுமணனைப்பார்த்துச்சொல்லுகிறார் லட்சுமணா இக்ஷணமே ஆலசியமில்லாமல் சீதையை இரதத்திலேற்றிக் காடாந்தகாரமானபுலி - சிங்கம்-பாளி

கண்டபோரண்டம் புலிகள் சஞ்சரிக்கப்பட்ட வனத்திற்கொண்டுபோய் விட்டுவாவென்று திருவுளம்பற்ற லட்சுமணர் காதிலே சயத்தைக் காய்ச்சி விட்டதைப்போல பிரமைகொண்டு வாருமண்ணாவே முன்னாலே இராவணசம்மாரமுடிந்த பிற்பாடு என்னம்மனியாகிய ஜானகியின் பேரில் சந்தேகமாய்ச் சொல்ல அப்போது அக்கினியைவளர்த்தி முழுகிவருகையில் அக்கினியில் நம்முடைய தகப்பனாராகிய தசரதர்வந்து பழுதில்லையென்று சொல்லியிருக்க இப்போது வண்ணான் சொன்னதினால் ஆகவேண்டிய தென்ன நீருபூத்த நெருப்புக்கு கலக்கமுண்டோவென்றுகூறி லட்சுமணரானவர் பின் வாங்கினார் அதனைக் கேட்ட ஸ்ரீராமர் பரதனைப் பார்த்து வாராய் தம்பி பரதா நீயாகிலும் ஜானகியை ரதத்திலேற்றிக்கொண்டுபோய் வனத்தில விட்டுவாவென்று சொல்லுகையில் பரதர் ஸ்ரீராமமூர்த்தியை நோக்கி கேளீரண்ணாவே தங்களுக்குத் தெரியாதயோசனை அடியேன் என்னசொல்லப் போகிறேன் அந்த ஜானகியம்மன் அக்கினிக்கொழுந்தென்று யாவருக்குந் தெரியவரும் தேவரீருக்குந்தெரியவரும ஆனபடியினாலேயே உலகமாதாவாகிய இலட்சுமியம்மன்பேரில் பழுது சொல்லப்போமோவென்று பரதர் பின்னிடைந்தார். பிறகு ஸ்ரீராமமூர்த்தி சத்துருக்கனைப்பார்த்து வாராய் தம்பி சத்துருக்கா நீயாகிலும் சீதையை ரதத்திலேற்றிக்கொண்டுபோய் யானை-தோண்டான்-நரிகள்வாழப்பட்ட ஆரணியத்தில் விட்டுவாவென்று கூறச் சத்துருக்கர்மனது வெகுவாய் நொந்து ஆயாசப்பட்டு சர்வலோக ரக்ஷகராகிய சுவாமியே சகலமுந் தெரிந்து நிறைந்த மனத்தை யுடைய உமக்கு ரசகனான வண்ணான் பகர்ந்த வார்த்தையை பெரிதாயெண்ணினீர் நமது தந்தை மொழிக்கும் அதிகமான குருவாகிய வதிஷ்டரைப்பார்க்கிலும் வண்ணான் சொல்லைச்சிலாக்கியமாக நினைத்து சீதையம்மனை வனத்துக்கனுப்புதல் தகுமோவென்று சத்துருக்கரானவர் கூறிச் சற்றிடைந்தார்.

அப்போது ஸ்ரீராமமூர்த்தி ஆயாசமாய் வெகுதுயரத்துடனே தம்பிமாரைப் பார்த்துச் சொல்லுகிறார் தம்பி லட்சுமணா பரதசத்துருக்கா உங்களை நான் சகோதரனென்றும் எனக்கு வந்த ஆபத்தைத் தீர்ப்பீர்களென்றும் நினைத்தேன் அதுமாறி பங்காளியண்ணன் தம்பியைப்போல் பார்த்துக் கொண்டு என்விசேஷத்தைத்தள்ளிப்போட்டீர்கள் இனி இப்பிராணனைவைத்திருந்தும் உங்கள் முகத்தில் முழிப்பதைப் பார்க்கிலும் இறப்பதே நலமென்று மந்திரவாளையுருவி கையிற்பிடித்துக்கொண்டு தம்பிமார்களே நீங்களினி என்முகத்தின முன்பு நிற்கவேண்டாம் அப்பாற்போய் விடுங்களென்று மந்திரவாளைக் கழுத்தின் பேரில் வைத்தார். அதைக் கண்ட பரதர் லட்சுமணர் சத்துருக்கர் ஓ ஓ மோசம் வந்ததென்று ஓடிவந்து கழுத்தின்மீதுவைத்த மந்திரவாளைக் கெட்டியாய்ப் பிடித்துக்கொண்டு லட்சுமணரானவர் சொல்லுகிறார். சுவாமி கொண்டபெண்சாதிக்கு உயிரைமாய்த்தால் தேவர்கள் நகைக்க மாட்டார்களா நமது வமிசத்தில் அடாத குற்றத்தைச் சீதையம்மன்பேரிற் சொல்லி வனத்திற் கனுப்பி விடலாமா அப்படியே தேவரீருடைய மனதிற்குகந்தபடி கொண்டுபோய்விடுத்து வருகிறேனென்று ஸ்ரீராமமூர்த்தி பாதத்தில லட்சுமணர் விழுந்து நமஸ்கரிக்க சுவாமியானவர் கோபந்தணிந்து மந்திரவாளை உரையிற்போட்டுவிட்டார் பரதர் சத்துருக்கரும் நமஸ்கரித்து நின்றார்கள் அக்காலையில் சுவாமியானவர் லட்சுமணரைப் பார்த்து வாருந்தம்பி லட்சுமணா முன்னாள் சீதையானவள் வனம்பார்க்க வேண்டுமென்று சொல்லியிருந்தாள் ஆனபடியினாலே சீதையை இரதத்திலேற்றிக் கொண்டுபோய் ஆரண்ணியத்தில் விட்டுவாவென்றார் லட்சுமணர் சுவாமியைப்பணிந்து கொலுவைவிட்டுப் புறப்பட்டது எப்படி யென்றால் ஐயோ தெய்வமே இப்பாதகத்திற்கு ஆளாகினேன் இராமசுவாமியுடன் நான்பிறந்ததோஷம் என்னைப்பற்றிக்கொண்டது ஜானகியை அழைத்தால் அவளென்னசாபமிடுவாளோ அண்ணா பரதா தம்பி சத்துருக்கா நீங்கள் நல்ல பூசாபலம்பண்ணினீர்கள் முன்னாலே மாரீசனானவன் மானாகவரவும் ஜானகியம்மன் கண்டு அதைப் பிடித்துதரச் சொலலி என் தமயனைக் கேட்டுக் கொண்டதும் அவர் என்னை சிதையண்டையில் காவல்வைத்து மான்பின்போகவும் அந்தமான் அகப்படாமல் போகவே இராமபாணத்தினாலதைக்கொல்லவும் மானாகயிருந்த மாரீசன் லட்சுமணாவென்று கூச்சலிட்டிறந்துபோகவும் அந்த சத்தம் ஜானகியம்மன் கேட்டு லட்சுமணா உன் தமையனுக் கென்னமோ ஆபத்துவந்தாற்போல காணுகின்றது ஆனபடியினாலே லட்சுமணாவென்று கூப்பிட்டார் ஓடுமென்று ஜானகியம்மன் சொல்ல என்ன சொன்னாலுங் கேளாமலிருக்க பின்னுமந்த ஜானகியம்மனானவள கூறியது தமையனிறந்தால் தமையன் பெண்சாதி தம்பிக்குரியவளென்று காத்துக்கொண்டிருக்கின்றாய்போல் காணுகின்றது பரதன் உன்னுடனே சொல்லியனுப்பியிருந்தார் இனிநான் உனக்கு சொந்தமல்லவோவென்று ஜான

றிசொல்லவும் அப்பாவமான விசேஷத்தை என் காதில் கேட்கவும் ஜானகியம்மனைவிட்டு என் தமையனண்டைக்குப்போகவும் தமையனானவர் என்மீது கோதித்துக்கொண்டு ஜானகியம்மனிருந்த பர்ணகசாலையைவந்து பார்க்கும்போது இராவணன் ஜானகியை எடுத்துக்கொண்டுபோய் அசோகவனத்தில் வைக்கவும் அதனாலே இராவணன் கும்பகர்ணன் இந்திரசித்துடனே போராடி அவன் கையம்பினால் சரீரத்தில் உயிர்ச்சதை யுண்டோ இல்லையோ வென்று அடிபட்டு கொந்து அவனையுங்கொன்று அவனாற்பட்டகாயம் இன்னமும் ஆறாமலிருக்க இப்போது சீதையம்மனை வனத்துக்கு வாருமம்மாவென் றழைத்தால் என்னசொல்லுவாளோ ஸ்ரீராமபத்திரா ஸ்ரீராமச்சந்திரா என்ன செய்வேன் உமது கண்களுக்கு நேராக நான்தானே அகப்பட்டுக்கொண்டேன் என்னைப்போல் இன்னமிரண்டு தம்பிமார்களிருக்க வில்லையா அரி அரி நான் முன்செய்த தீவினையோ இப்போது உம்முடனே கூடப்பிறந்த தோஷமே உலகத்தில் யாவரும் படையாத தமையனை நான் படைத்தபாவமோ இவ்வினைக்கென்செய்வேன் தெய்வமேயென்று புலம்பிக்கொண்டு சீதையம்மனிருக்கும் அரண்மனை வந்து ஏழுகட்டு வாசற்படியுந்தாண்டி எட்டாங்கட்டில் நுழைந்துபோகிறபோது சீதையம்மனானவள் எப்படி யிருக்கிறாளென்றால் பொன்னூஞ்சலிலே பஞ்சணை மெத்தையின்பேரில் பள்ளிகொண்டிருந்த லக்ஷங்கன்னியர்கள் தாலாட்ட நவரத்தின குத்துவிளக்குகளெரிய நிர்த்தனமாதர் நடனம்புரிய சங்கீதவாத்தியமுழங்க சர்வாடம்பரத்துடன் இருக்கையில் லட்சுமணர்சரேலென்று வந்துவிட்டார் அரண்மனை வாசற்படி காக்கப்பட்ட பெண்கள் கண்டு ஓடிவந்து ஜானகியம்மனைசேவித்து அம்மணி இளையபெருமாளாகிய லட்சுமணர் வருகிறாரென்று சொல்லவே ஜானகியம்மனெழுந்து ஆடல்பாடல்களை நிறுத்தி ஊஞ்சலை விட்டிறங்கி நின்றாள்.

அப்போது லட்சுமணர் சீதையம்மன் பாதாரவிந்தத்தில் தன்னுடைய கிரீடம் படிம்படியாகத் தீர்க்கதெண்டஞ் சமர்ப்பித்தார் எப்படிக் கொத்த தென்றால் பிரமதேவர் தேவேந்திரன் முப்பத்துமுக்கோடி தேவர்கள் நாற்பத்தெண்ணாயிரம் ரிஷிகள் ஏகாதச ருத்திரான் சித்தர் கின்னரர் கிம்புருடர் கருடகாந்தருவர் சித்தவித்தியாதரர் அஷ்டதிக்குப்பாலகர் அஷ்டவசுக்கள் வணங்கப்பட்டது சகல புவனங்களையும் கெர்ப்பத்தில் வைத்திருக்கப்பட்டதை ஸ்ரீமந்நாராயணருடைய மார்பிலே உரைகின்றது அப்படி வந்து நமஸ்கரித்த லட்சுமணரையெடுத்து ஆசிர்வதித்து சீதையம்மனானவள் சொல்லுகிறாள். வாராய் தம்பி லட்சுமணா இந்நேரத்தில் என்னகாரியமாய்வந்தீர் சொல்லுமென்றுகேட்க லட்சுமணர் தன்னுடைய துயரமெல்லாம் அடக்கி திடப்படுத்திக் கொண்டு சொல்லுகிறார்.

என்னம்மணியான சீதாகேளும் நீ முன்னாலே சுவாமியுடன் வனம்பார்க்க வேண்டுமென்று சொல்லியிருந்தாயாம் சுவாமியானவர் இப்போது செலவு கொடுத்தார் குளிர்ச்சியான காலமாயிருக்கின்றது போய்வருவோம் வாருமம்மாவென்று லட்சுமணரழைக்க ஜானகியம்மன் தனக்கு ஆபத்துவருவது தெரியாமல் மனதில் மகா சந்தோஷமாகி தம்பி லட்சுமணா நான் ஒருநாள் சுவாமியுடன் வனம்பார்க்கவேண்டுமென்று சொல்லியிருந்தது மெய்தான் இப்போது சுவாமிக்கு மனது வந்தது நான்செய்த பாக்கியமெனவெழுந்து எங்கள் மாமிமாரிடத்தில் செலவு வாங்கிக்கொண்டு வருகிறேன் சீக்கிரத்தில் இரதத்தை சிங்காரித்துவாரும் தம்பியென்று சீதையம்மன் சொல்லி லட்சங்கன்னியர்கள் புடைசூழ முத்துப்பல்லக்கேறி மாமிமார்களிடஞ் சென்று பல்லக்கை விட்டிறிந்து தண்டை சிலம்பு பாதச்சருள் கொலுசுகள் சப்திக்க அரண்மனைக்குள் வந்து கௌசலை கைகேசி சுமித்திரை மூன்றுமாமியாருக்கும் பூசைகள்செய்து நமஸ்கரித்தாள்.

அப்படி வணங்கிய ஜானகியம்மனை வாரியெடுத்து வாழ்த்தி மார்போடணைத்து முத்தமிட்டு ஒரு பொற்பீடங்கொடுத்து உட்காரச்சொல்லி அம்மூன்றுமாமிமார்களுஞ் சொல்லுகிறார். அடியம்மா சீதா இந்நேரத்தில என்னகாரியமாகவந்தாய் அப்படிப்பட்ட அவசரமுண்டோ ஒரு தாதியுடன் சொல்லியனுப்பப்போகாதோ அவ்வளவு அந்தரங்கவிசேஷமுண்டானால் சொல்லுமம்மாவென்று கேட்க ஜானகியம்மன் சொல்லுகிறாள் அம்மா நான் வனம்பார்க்க வேண்டுமென்று சுவாமியுடனே சொல்லியிருந்தேன் இப்போதுசுவாமிக்கு சித்தமிரங்கிச் செலவுகொடுத்தார் நான்போய்வனம்பார்த்து வருகிறேனம்மாவென மாமியார் நீதான் எவ்வாறு போவாய் இப்போது காடு வனந்தான பார்க்கப்போமா ஆறுமாதபிண்டம் கெர்ப்பத்தில் நிற்கச்சே ஆறுதான் கடக்கப்போகுமா வாசற்படிதாண்டி வெளியில்வரப்போமா சரீரம் அதிராதோ ரதத்திலேறினால் கெர்ப்பங்கலங்காதோ நீபோகிறது எங்கள்மனங் கலக்கமாகக் காணுகிறது நீபோகவேண்டாம் கெர்ப்பமதிர்ந்து சரீரம்நோகும் என்வார்த்தையைத் தடுக்காதே உன்னரண்மனை போயிரும

ம்மாவென்று கௌசலையம்மன் சொல்ல அதுகேட்டு சிதையம்மன் மூன்று மாமிமாரையும் பார்த்து அம்மா யெனக்கு வனம்பார்க்க பிரமையா யிருக்கிறது சுவாமிவார்த்தைக்கு மறுவார்த்தை யுரைத்தால் ராமத்துரோகம் வந்து சேரும் அவருக்கு சித்தமிரங்கி தம்பியாகிய லட்சுமணரையுங் கூட்டி அனுப்பினார் அவரும் ஆசாரத்தில் வந்திருக்கிறார் நானிங்கே உங்களுத்தரவு கேட்க வந்து விட்டேன் அதிசிக்கிரம் நீங்களும் மனங்களித்து விடைகொடுங்க ளென்று ஜானகியம்மன் மூன்று மாமியாரையும் வணங்கினாள் அதற்கு கவுசலை கைகேசி சுமித்திரையும்சொல்லுகிறார்கள அமமா சிதா ராமர் வனம்போகச் சொன்னாரென்றும் லட்சுமணர் காத்திருக்கிறாரென்றும் மனங்கூசாமல சந்தோஷமாக எங்களைச் செலவுகேட்க வந்தாயல்லவா நீ கெர்ப்பசிகாமணியாயிருக்கையில் இந்தராத்திரி காலங்களில் இரதமேறிநடந்தால் உன் சரீரம் அதிருமன்றி கெர்ப்பவாதை யுண்டாகும் அப்படியலலவென்று ராமன் வார்த்தை தள்ளாமற் போனாலும் வனங்களில் சஞ்சரிக்கப்பட்ட கரடி புலி சிங்கங்களைக் கண்டால் உனக்குப் பயத்தினாலே பிண்டமும கலங்கும் நீ வனம்பார்க்கப் போவதுஎங்கள் மனதிற்குச் சம்மதமில்லை நாங்கள் சொலலப்பட்ட வார்த்தை உன் கருத்திற்குத் தெரியவராதென்று சொலல அதுகேட்டு லட்சுமியான சிதாதேவியம்மன் திடுக்கிட்டுக் கவுசலை கைகேசி சுமித்திராதேவியைப் பார்த்துச் சொல்லுகிறாள் என்மாமிமாரே கேளுங்கள் நீங்கள் சொன்னதெல்லாம் மெய்தான் இப்போது நான் காடுவனம்பார்க்கத் தகாது தான் அந்த ரகுநந்தனருடைய திருவாக்குக் கெதிர் வாக்குச் சொல்வேனேயானால் நாகம் வந்து சம்பவிகரும் அப்படி அடியாளுக்கு வாரதபடி மனமிரங்கி செலவுதரவேண்டும் அம்மாவென்று மூன்றுமாமியாரையுமபார்த்துச் சொல்ல அதற்குக் கவுசலை கைகேசி சுமித்திரை மூவரும் ஜானகியை நோக்கி அமமாசிதா நீகாடு வனமபார்க்கப் போகவேண்டா மென்று கூறவில்லை கெர்ப்பவதியானபடியால் இவ்வளவு தூரம் சொன்னோம் உன்மனதிற்கு ஆயாசம் வேண்டாம் ராமன் மொழியைத் தள்ளாமல் ஆரண்யத்தில் நீநாட்படனில்லாமல் சனுதியில்வந்து சேரென்றுமூன்றுமாமிகளும் உத்தரவு கொடுக்கவே ஜானகியம்மன் மூவரிடத்திலும் செலவு பெற்றுக்கொண்டு முத்துப்பல்லக்கிலேறி ஊர்மளாதேவி சிசுகோதை மாண்டவி இம்மூன்று தங்கையர் அரண்மனைக்குப்போய் அவர்களிடத்திலும் உத்தரவுபெற்றுக்கொண்டுவருகையில் லட்சுமணரானவர் அச்சுக்கு எண்ணெயிட்டு மச்சுக்குவர்ணந்தீர்த்து குத்துக்கால்கொடுங்கை குடைகொடிச் சிலைகளிட்டு சிங்கம் யாளி தூக்கிக்கட்டிடால்துவசம் பறக்கத்தக்க நான்கு குதிரைபூட்டிமகாவேடிக்கையுடனே ரதத்தை சிங்காரித்து ஒயிகையிற் சவுக்கையேந்தினார்.

சீதாபிராட்டியார் தேர் ஏறுதல்.

சிதையம்மனும் பல்லக்கை விட்டிறங்கி அரண்மனைக்குள் நுழைந்து ஆடையாபரணங்களணிந்து தாமபூலந்தரித்துத் தனக்குவேண்டிய இஷ்டமான பண்டங்களையுந் தாதிகளால் எடுப்பித்துக்கொண்டு லக்ஷங்கன்னிமார்கள் புடைசூழ மத்தளம் ருத்திரவீணை சங்கீத வாத்தியங்கள் தாம்தாமென்று முழங்கரதத்தின் மீது வந்தேறினாள் உலகமாதாவாய் விளங்கப்பட்ட சிதையம்மனனவள்.

இலட்சுமணரும் சீதாபிராட்டியாரும் தேர் ஏறி வனம்போகுதல்.

அதுகேட்டு இலட்சுமணரும் அளவற்றதுயரத்துடனே சவுக்கினால்சடாலென்று குதிரையின்மீது தட்டிவிட்டார் அந்தச்சத்தங் கேட்டமாத்திரத்திற்குதிரைகளானது நடக்கும்போது அச்சுகுலுங்க மச்சுசையடால்துவசம் பறக்க கருடக்கொடி சாய்ந்தாடரதத்திற் கட்டிய மணிகளெல்லாம் கணகணவென்று அடிபட பூமியானது கிடுகிடென்ன மகா சிங்காரத்துடனே ரதமானது போகையில் அதைக்கண்டு தேவர்களெல்லாந் துயரமானார்கள் ரதம் நடக்கிறஅதிர்ச்சியினாலே அயோத்தியாபுரி வீதியிலிருக்கப்பட்ட பிராமணஸ்திரீகளுஞ் சூத்திர ஸ்திரீகளும்புருஷர்களுமெழுந்து கதவைத்திறந்து வீதியில்வந்து வேடிக்கைபார்ப்பவரும் அந்தரங்கமேறி பார்ப்பவரும்மேடைமெத்தைகளேறிப் பார்ப்பவரும் இன்னம் அந்த ரதம்போகிறது எப்படியிருக்கிறதென்றால் அயோத்தியில் வாழப்பட்ட இராசலட்சுமி அந்நகரை விட்டுப் பிரியமாட்டாமல் தானும் சிதையம்மனுடன் கூட வனஞ் சென்று பார்க்கப் போகிறவளைப் போலவும் சகலமானவர்கள் கண்களுக்குங் காணப்படுகிறதாம் அப்போது ஜானகியம்மனவள் மனக்கலக்கமில்லாமல் மகா சந்தோஷமாய் பிரமக்ஷத்திரிய வைசிய சூத்திரரென்று சொல்லப்பட்ட நாலுவீதியுங் கடந்து கோட்டைவாசற்படிக்குள் நுழைந்துஎழுவாசற்படியும் விட்டு மெத்தையைத்தாண்டிவருகிறபோது ரதமானது குலுங்க அச்சாணி கழன்று முறிந்தது லட்சுமணரும் சிதையம்மனும் திட்டென்று பூமியில் லகுவாய் குதித்துவிட்டார்கள்.

அப்படி ருதித்தமாத்திரத்தில் ரதமானதுபுரண்டு கீழே விழுந்துவிட்டது அதைப் பார்க்கத்தேவர்கள் மனஸ்தாப மடைந்தார்கள் இலட்சுமணரும் விசனமடைந்து இதென்ன லட்சுமியானவள் அச்சு முறிந்து ஆணிகழண்டு பூமியில்விழக்காரணமென்ன இதென்ன காலக்கேடோ இந்த அயோத்தி நகருக் கென்ன வனர்த்தமோ தெரியவிலலையென்று மனதிலெண்ணிக்கொண்டு கிரந்தனுகச் சிதையம்மனை ரதத்தண்டை நிறுத்திவிட்டுத் தாம அயோத்திக்குள் நுழைந்து ரதசாலையிற் போய்வேறொரு அச்சியெடுத்து வந்து ரதத்திற்பூட்டி ஆணிபிடித்து நான்கு குதிரையும் இந்தரதத்திற்கட்டி ஏறும்மாவென்ன அது கேட்டு ஜானகியம்மன் சொல்லுகிறாள் தம்பிலட்சுமணா ஒரு காலத்திலும்அழிவில்லாதரதம் இன்றையதினம்அச்சியானது முறிந்து பூமியில்விழக் காரணமென்னநான் வனம்பார்க்கப் போகையில் இப்படிப்பட்ட அவசகுனங்கள் எனக்குநேரிட்டது என் மாமிமார்களாகிய கவுசலை கைகேசி சுமித்திரையிவர்கள் கூறியவசனம் முன்னுக்கு வந்தது ஆனபடியினாலே அயோத்திக்கு ரதத்தைத் திருப்புமென்று ஜானகியானவள் சொல்ல அதுகேட்டு லட்சுமணர்சொல்லுகிறார் வாருமம்மாசிதா எப்போதும் ரதத்தின் பேரிலேறினால் விநாயகர் பூசைசெய்து ஏறுகிறது இப்போது சூரியன் அஸ்தமித்து இரண்டரைஜாம மாயிற்றுஇதோ விநாயகர்பூசைசெய்தேன் ரதத்தின்மீது ஏறுமம்மாவெனவே சிதையம்மன் தயிரியமாய வந்து ஏறினாள் அந்தநுவாயில் அதிவேகமாய் லட்சுமணரானவர் இரதத்தை நடத்தவே அந்தரதமானது அயோத்தியாபுரி கோட்டையைவிட்டு ஐந்துநாழிகை வழிதூரம் வரையில் வந்துவிட்டது.

சிதாபிராட்டி வழியில் சகுனங் காணல்.

அதுகேட்டு சிதையம்மன் நிலவிலே குளிர்ந்தநேரத்தில் இலட்சுமணருடனே வெகு சந்தோஷ வார்த்தையாடி இராமரைத் துதித்துக்கொண்டு மனச்சஞ்சலமில்லாமல் போகும்போது ஒருநாயும்நரியும் லட்சுமணருடைய ரதத்திற்கு முன்வந்து நாய் அழ நரி ஊளையிடக்கண்ட லட்சுமணரானவர் இதென்ன நமது ரதத்தின்முன்னே நாயும் நரியும் அழவேண்டியதென்னவென்று சிந்தித்து நாள்பட கலகம் வருமென்றறிந்தும் அறியாதவரைப்போல ரதத்தை அதிக வேகமாய் நடத்தினார் சிதையம்மனானவள் தம்பிலட்சுமணா நமதுரதத்தின் முன்பாக நாயும் நரியும்வந்து அழுததைப் பார்க்கவில்லையோ ரதத்தை நிறுத்தும் என்றாள் லட்சுமணரானவர் வாராயம்மா சிதாய்இப்படிக்கெல்லாம் துயரப்படவேண்டாம் இப்போது நாமிருப்பதற்கும் அயோத்தியாபுரிக்குங் காதவழிக்கு மேலாச்சுது இது நமது ஊரைசசேர்ந்த காடாகையால் சகுனம் பார்க்க வேண்டியதில்லைசும்மாவாரும் அம்மாவென்று ரதத்தைமெள்ள நடத்துகிறபோது அம்மன் மெய்தானென்று லட்சமணருடன் சந்தோஷமாய்ப் பேசிக்கொண்டுபோகுந் தருணத்தில் ஒரு இருண்ட தோப்பானது தோன்றியது அத்தோப்பில் ஒரு ஆந்தையானது சிறல் சிறினது லட்சுமணர் இதென்ன விபரீதமான வார்த்தை சொல்லுகின்றது என்னமாய் முடியுமோ எதாய் விளையுமோ ஐயாசிதைதா னிருந்துபோவாளோ தெரியவிலலையென்று சித்தம்நொந்துமெத்த வருத்தம்வந்து கர்த்தனே கமலக்கண்ணனே அரிஅரியென்று எரியும் நெருப்பில உருக்கிய மெழுகு போலாகி ரதத்தைச் செலுத்துகையில் அம்மையானவள் தம்பிலட்சுமணா ஆந்தை சிறல் சிறினது கேழ்க்கவில்லையோ நில்லென்றாள அதற்கு லட்சுமணர் அம்மணி நீயேன் சகுனம்பார்க்கிறாய் காடானபடியினாலே கண்ட பட்சிகளெல்லாம காகூவென்று கூச்சலிடும் இதெல்லாம் தெரிந்தவர்கள் பாராட்டுவார்களோ சும்மா வாருமமமாவென்று ரதத்தை நடத்தவே அதுவும் மெய்தானென்று சிதையம்மனுக்கு வருத்தமுந் தீர்ந்து நடக்குங் காலத்தில ரதமானது அயோத்தியாபுரி பட்டணத்தைவிட்டு ஊர்நாடுகடந்து வெகுதூரம் வந்து விட்டது அப்படி வருகிறபோது காடு செடிமலைபர்வதங்களெல்லாம் கிடுகிடென்று அதிரும்படியாய் வருகையில் அக்காட்டில் ஓர் வேடுவச்சி ஒற்றைக்குரலிட்டு அழுதுக் கொண்டு ரதத்திற்கெதிர வருகிறதைக்கண்ட லட்சுமணரானவர் மெத்தவுந் திகிலடைந்துசிறகற்ற பட்சிபோலுந் தீயிற்பட்ட புழுப்போலும்தியங்கிமயங்கி ஐயனே வைகுந்தத்தில் வாழும்மெய்யனேசங்கு சக்கரக்கையனே இந்தச்சிதையம்மனாலே அயோத்தியாபுரிக்கு என்ன அனர்த்தமுண்டாகிறதோ தெரியவில்லையென்று சித்தத்திலெண்ணிசெடியடர்ந்தநாட்டைநண்ணி ரதத்தை வேகமாய் நடத்தினார்

அப்போது சிதையம்மனானவள அரவின்வாயிலகப்பட்ட தேரையைப்போலும் ஆலையிலிட்ட கரும்புபோலும்நைந்து சிந்தைநொந்து சொல்லுகிறாள் தம்பிலட்சுமணா பார்த்தையோ ஒரு வேடச்சியானவள் தலைமீது கையைவைத்து ஒற்றைக்குரலிட்டுஅழுதுக்கொண்டு வந்தாளே அவளையுங் கண்ணுற் காணவில்லையோ இந்தச் சகுனங்களாகாதென்பது மனதிற்றோணவிலலையோ ஆஆ அரிஅரி நான் வனம்பார்க்க வந்தது போதும்போதும் மூத்தோர்சொல் வார்த்தையமிர்தம என்கிற மாமிமார்கள் வார்த்தையைத் தடுத்து வந்ததற்கு வழியிற்காணுஞ் சகுனமேசாட்சியாகத் தோன்றுகின்றதே ஆகையினால் ரதத்தை அயோத்திக்குத் திருப்புமென்றாள் அதுகேட்டுலட்சுமணர் பயந்து வாருமம்மாதாயே துக்கமுள்ளபேர்கள் அழாமலிருப்பார்களாதுதிமிகுந்தவா தொழாமலிருப்பார்களா நாம் இதுகளெல்லாம் பார்க்கவேண்டியதில்லை ஸ்ரீராமர் செலவுகொடுத்த சகுனமே பெரிது அந்த சகுனத்திற்குமுன்பு இந்தச சகுனமெல்லாம் பெரிதல்ல நீ சஞ்சலப்படாமல் சும்மாவாருமம்மாவென்று சொன்னார் அதுகேடடு சானகியம்மன மனதுதேறி சந்தோஷவார்த்தைகளுடன் அதிவேகமாய் ரதத்தை நடத்திக்கொண்டு பாலைவனம் சேர்ந்தார்கள்.

அந்தப் பாலைவனத்திற்கும் அயோத்தியாபுரி பட்டணத்திற்கும் நூறுகாதமாம் இன்னம் பொழுதுவிடிகிறதற்கு ஜாமபரியந்த மிருக்கிறது அப்போதுரதமானது ஆறுகள்மடுவுகள் குட்டைகள்கடந்து அப்பாலை வனத்தில் நடுவே போகும்போது நான்கு குதிரைகளுக்கும் கால்கள் ஓய்ந்து ஓடமாட்டாமல்திகைத்து நின்றுவிட்டது அதுகண்டு இலட்சுமணரானவர் நான்கு குதிரைகளையும் அதட்டினார் அந்தக்குதிரையானது ஒன்றோடொன்று ஊடுதாக்கிச்சிக்குப்பட்டதைக்கண்டு சீதையம்மனானவள் நாம் வனம்பார்க்கப் போகிறது குதிரைகளுக்கு மனமில்லை ஒதுங்கி நிற்கவேண்டிய காரணமென்ன குதிரைகளைசிக்குவாங்கி ரதத்தை அயோத்திக்குத் திருப்புமென்றாள் வாவாராய் அம்மா சீதாய் காடு விழுதுகொடி பள்ளமானதாலும் இராகுகாலமானபடியினாலும் குதிரைகளவேசாரிக் கொடிவிழுதில் கால்கள் சிக்குப்பட்டு நடக்கமாட்டாமல் திகைத்துவிட்டன அதனால் ஆகவேண்டிய சகுனமென்ன இதோ சிக்குவாங்கி ரதத்தை நடத்துகிறேன் சும்மாவாரும் அம்மாவென்று சிக்குப்பட்ட குதிரைகளைத் தடவி தட்டிக்கொடுத்து ரதத்திலேறி அந்தப் பாலைவனத்தையுங்கடந்து அப்பாற்செல்லுகையில் காடு செடியில்லாமல் ஏகவெளியாய் ஓர் மைதானங்கண்டு அம்மைதானத்தில் ரதமானது அதிகவேகமாய் வருகையில் ஒரு சர்ப்பமானது ரதத்திற்குறுக்கே யோடிற்று ஓடவே லட்சுமணர் கண்டு ஐயோ இந்தச் சீதையம்மனாலே நமக்கு என்னசாபம் வந்து நேரிடுமோ எத்தனை யென்று தான் சொல்லுவோம் எவ்வளவுதான் மனந்தாளுவோமென்று சிந்தைவாடி ஒன்றுஞ் சொல்லாமல் ரதத்தை விரைவாய் நடத்தவே அப்பால்சீதையானவள் தம்பி லட்சுமணா பாம்பு குறுக்காகப்பாய்ந்ததே நீபார்க்கவில்லையோ என்னபாபமோ எவரிட்டசாபமோ தெரியாது நான் வனம்பார்க்க வேண்டுமென்று சுவாமியுடன் கூறியதும் போதும் அவரின்றைக்குச் செலவு கொடுத்ததும் போதும் ரதத்தைத் திருப்புமென்னவே வாராய்த் தாயே நாமிருவரும் ரதத்திலேறி நடக்கிற அதிர்ச்சியினாலே பூமியிலுள்ள சீவராசிகளும் வெளிப்பட்டு வருகின்றது இதொரு சகுனமோ இச்சகுனங்களை யோசிக்க வேண்டிய தில்லையென்று சந்தோஷவார்த்தைகளைச் சொல்லிக்கொண்டு நடத்துகையில பொழுது நிலந்தெளிந்து வருவதைக்கண்ட சீதையம்மனானவள் மனந்தேறி விசனமாறி ராயநாமத்தைக்கோறி ரதம்போகிற வேகத்தை லட்சுமணருடனே சொல்லிக்கொண்டு செல்லுகையில் அந்தவேளையிலே ஒரு ஆலமரமானது சொள்ளைவிழுந்து டோங்கா யிருந்தது அந்த டோங்கிலிருந்து ஒரு கோட்டானானது வெளிப்பட்டு கூச்சலிடவே லட்சுமணர்கண்டு மிகவுந் திகிற்பட்டு ரதத்தை நடத்துகையில் சீதையம்மனானவள் தம்பி லட்சுமணா கோட்டான் கூவினதை கேழ்க்க வில்லையோ ரதம போகும் வேகத்தில் உன்னுடைய காது கேளாமற் போச்சுதோ நான் வனம் பார்க்கவந்த பிர்மை எனக்குப் போதும் போதும் கோட்டான் சகுனம் பொல்லாதது இத்தனை சகுனத்திலும் கோட்டான் சகுனம் நான்சோதித்திருக்கிறேன் இந்த சகுனம் கண்டு அடியெடுத்துவைக்கப்போகாது தம்பி லட்சுமணா சுவாமிக்குத்தான் என்னமோ பாதருக்குத்தான் என்னமோ வலதுபுஜமுந் துடிக்கிறது முன்னாலே இராவணன் என்னைப் பர்னகசாலையோடே தூக்கி ரதத்தில் வைத்துக்கொண்டு போகிறபோது கண்ட சகுனமெல்லாம் இப்போது கண்டேன் ஆனபடியினாலே என் வார்த்தையைத் தள்ளாமல் இரதத்தைத் திருப்புமென்று ஜானகியானவள் சொல்லவே லட்சுமணரானவர் கேட்டு வாராயம்மா சீதா ஆருக்காவது ஆபத்து வந்தாலும் என் தமையன் தம்பிமாருக்கு யாதொரு துன்பமுந் துயரமும் வரமாட்டாது நீ முன்பும் இப்படிதான் மானைப் பிடித்துக் கொடுக்கச் சொல்லி என் தமையனை மானின்பின்னே லனுப்பிவிட்டு என்னையுந் தூஷணித்து துரத்திவிட்டாய் என் வார்த்தையைக் கேளாமனு மிருந்தாய் உன்னாலே நாங்கள் வெகுவாகக் கஸ்தியடைந்தோம் இன்னம் அந்தப் புண்ணானது ஆறவில்லை அதெல்லாம் உனக்குத் தெரிந்தும் இப்போது நான் சொல்லிவருகிறதும் உனக்குத் தெரியவரும் அப்படி என் தம்பிமார் தமையனுக்கு இக்கட்டு வருவது ஒருக்காலுமில்லை அல்லது வருவதில் இந்த உலகந்தானேது அந்த உம்பருலகந்தானேது நீயறியாயோ அப்படிக்கிருக்க அந்தச் சகுனமெல்லாம் உனக்கு ஆர்தானீடு தேவேந்திராதி தேவர்கள்தானீடோ உலகந்தானீடோ சர்வசம்மாரம் பண்ணப்பட்ட சங்கரன்றானீடோ சர்வலோகத்தையுஞ் சிருஷ்டிக்கப்பட்ட சதுர்முகன்றானீடோ சமஸ்தமும் ஒரு குடசியில் வைத்த ஸ்ரீமந்நாராயணர்தானீடோ எவர்கள் தான் உனக்குச் சமானமென்று பயப்படுகிறாய் இவ்வுலகத்தை கவிழ்க்க வேண்டுமென்றாலும் கவிழ்ப்பாய் காக்க வேண்டிய தானாலுங் காப்பாய் அப்படிப்பட்ட லட்சுமியான உனக்கு இச்சகுனமெல்லாம் என்னத்திற்கு இந்த லோகநடத்தையைவிட்டுவிடு என்னை பயப்படுத்தாதே சும்மாவாரும் அம்மாவென்று லட்சுமணர் சொல்ல அம்மொழியை சீதையம்மன் கேட்கவே உடனே அம்மனுக்குப் பூர்வக்கியானம் பிறந்து இனி நடக்கப்போகிறதெல்லாந்தெரிந்து சந்தோஷமானாள் அதற்குள் அப்பூர்வக்கியானம் மாறிவிட்டது அப்போது அம்மனுக்கு கனவு கண்டதுபோலாயிற்று.

அப்போது லட்சுமணரைப் பார்த்து சொல்லுகிறாள் தம்பி லட்சுமணா இப்போது சொல்லிவருந்தருணத்தில் நானொரு சொற்பனங் கண்டேன் அதனையுன்னுடன் கூறும்படியாய் வாயெடுத்தேன உடனே மறந்து விட்டேன் இனி இரதத்தை நடத்தென்றாள் அப்படி நடத்துகையில் பொழுது விடிந்தது பட்டி

கள் யாவும் காகாவென்று கூச்சலிட்டு வெளியே புறப்பட்டதுகள் அக்காலையில் லட்சுமணரும் ஓயாமல் ரதத்தை அதிகவேகமாய்க் காட்டுசெடி மேடுபள்ளங்களொன்றும் தோன்றாமல் நடத்தவே அந்தரதத்திற் கட்டிய மணிகள் கலகலவென்று அடிபட்டு கும்பகலசங்கள் குத்துக்கால்கள் குலுங்க ரதத்திற் குள்ளே சீதையம்மன் உட்கார்ந்திருக்கிற நவரத்தின உஞ்சல் ணைசய அந்த உஞ்சலில் அம்மனானவள் சாய்ந்தாகிறபோது சரீரம் புளகிதமாய் மகா சந்தோஷவார்த்தையோடு லட்சுமணருடனே நடக்கிறபோது சுக்கலாதேவி குமாரனான சூரியபகவானும் நம்மிட வம்சத்திற்பிறக்க மகாலட்சுமியான சீதையம்மனானவளைப்பார்க்கப் போகிறவளை நாமும்போய் பார்க்கவேணுமென்று புறப்பட்டவரைப்போல ஒற்றை உருளையுண்ட ரதத்தின்மேலேறி அருணன் சாரதியன்ன இமயகிரி பருவதத்தில் உதயமானார் அப்போது அந்த வெட்டார வெளியில் ஒரு தோப்பானது தோன்றிற்று அவ்விடத்தில் ரதத்தை லட்சுமணர் நிறுத்தினார் அப்போது சீதையம்மனும் நவரத்தின உஞ்சலைவிட்டு ஆடைகுலுங்க வாபரணமசைய பாதச்சிலம்பு கண்டைச்சருள கொஞ்ச மார்பிலணிந்த மாணிக்கமாலை முத்துமாலை மோகனமாலைகளும் சோதிக்கப் பிரகாசமாயசைய காதிலிட்ட அஸ்தகடக மின்ன இரண்டு காதிலும் இரண்டு சூரியனைப் பிடித்து வைத்ததுபோல கம்மல் ஜிமிக்கைகள் ஒளிவீசரத்தின மூக்குத்தி மின்ன முப்பத்திரண்டு சூரியனைப்பிடித்து ஒருபளிங்குமாமண்டபத்திலடைத்து ஒருபலகணியைத்திறந்தால் எவ்வளவுசோதி விளங்குமோ அவ்வளவுபிரகாசத்துடனே எழுந்து ரதத்தை விட்டிறங்கி அந்தத் தடாகத்தில் *தந்தசுத்திசெய்து அபரஞ்சிதப்பட்டுடுத்தி கேசமிஷ்டை முடித்துக்கொண்டுவந்த பலகார கச்சாய வர்க்கங்களை லட்சுமணரும் தாமுமருந்தி தாகசாந்திசெய்து கையலம்பி மரத்தடியில் வந்து கற்பூரதாம்பூல மருந்தி சந்தோஷவார்த்தைகளாடி சற்றுநேரம் இளைப்பாறினார்கள் அக்கருணத்தில் சூரியபகவானானவர் தன்னுடைய முப்பத்திரண்டு கிரணங்களையும் விசிறி குடைபிடித்துக்கொண்டு லட்சுமி தரிசனத்தைப் பார்க்க வந்தவரைப்போல ஒருமார்பொழுது வந்துவிட்டார் அக்காலையில் லட்சுமணரானவர் அம்மா சீதாய வெய்யலேறுகிறதற்கு முன்னே போவோம் வாவென்றெழுந்து நான்கு குதிரைகளையும் அவிழ்த்து இரதத்தில் கட்டி காதத்திற் சவுக்கைப் பிடித்து ரதமேறி முன்தட்டு உட்கார்ந்தார்.

சீதையம்மனும் ரதமேறி நவரத்தின உஞ்சலில்வந்துட்கார்ந்தாள் உடனே இலட்சுமணர் குதிரைகளை சவுக்கினாற் அடிக்குமாத்திரத்தில் வாயுவேகத்திலு மனோவேகமாய் நடக்கையில் அம்மனானவள் தாங்களிருந்த விடத்தை எட்டிப்பார்த்தாள் கண்ணிற்கெட்டினதூரம் ரதமானது வருகையில் வலியனான ஒரு கருங்குருவி ரதத்திற்குமுன வலமாகப் போகக்கண்ட அம்மனானவள் லட்சுமணரை நோக்கி ஓ தம்பீ வலியனிப்போது வலமாச்சுது சுவாமிக்குத்தான் ஒன்றுமில்லாவிட்டாலும் கௌசலை கைகேசி சுமித்திரை யிவர்களுக்கு இயாதோ எதுதோ தெரியாதென்று மனவாட்டமாய்ச்செல்லுகையில் அம்மணி முன்னமே சொன்னேனே லோகநடத்தையைவிட்டுவிடென்று இன்னமுஞ் சகுனமாமென்ன அம்மனானவள் மௌனமாயிருந்தாள் லட்சுமணரும் என்னாதும் எண்ணி இருதயங் குன்னி சுவாமியினுடைய திருநாமத்தைத் தியானம் பண்ணி ரதத்தை மகாவேகமாய்ச் செலுத்துகையில் ஒரு விச்சுளியானது வலத்திலிருந்து இடப்பக்கம் பாய்ந்தது அதையும் பார்த்து விசாரமிட்டு மிகவுந்துயரப்பட்டுச் செல்லுகையில் கருடன் ஒன்று இடதுபக்கமிருந்து வலதுபக்கமாகச் சென்றது செல்லவே இலட்சுமணரானவர் ஐயோ இந்த சீதையம்மனுக்கு என்ன காலகதி வந்ததோவென்று துயரத்திலாழ்ந்து துரிதமாய் ரதத்தைத் தூண்டுகையில் சீதையம்மனானவள் அக்கருடன் போனதைக்கண்டு கண்களில் நீர்பெருகி உள்ளமுருகி ஓகோ நம்முடைய அயோத்திக்கு என்னதுன்பமோ அல்லது சுவாமிக்குத்தான்யாதோவென்று வாதையுற்று வேதனையடைந்து போகையில் ஒற்றைப்பார்ப்பான் எதிராக வந்தான் அவனைக்கண்டு லட்சுமணர் லவணசமுத்திர தீர்த்தத்தில் மூழ்கி எழுந்திருந்தால் கண்கள் சிவப்பேறுமோ அவ்வாறு கண்களானது செம்மானம்போற் சிவக்க காதிரண்டிலும் புகைகளெழும்ப பிராமணன் திடுக்கிடும் படியாய் கண்ணையுருட்டிப் பார்த்தார் அதுகண்டு அவருடையகோபந் தணியும் படியாய்ச் சொல்லுகிறாள் தம்பி லட்சுமணா அவனோ ஏழைப்பிராம்மணன் புத்தியில்லாதவன் சாஸ்திரமறுத்தவன் வேதமில்லாதவன் ஆனபடியினாலே அவன் போகட்டுமென்று சொல்ல ஆதியநாகம் அமர்ந்ததுபோலச்சினந்தணிந்து லட்சுமணரானவர் இரதத்தை விடுகையில் அவ்விடத்தில் ஒரு காட்டுப் பூனையானது ரதத்திற்கு இடது புறமாய்க் குறுக்கே வருகிறதைக் கண்ட இருவரும் எல்லாச் சகுனத்திற்கும் பூனைச்சகுனம் பொல்லாதென்று பெரியோர் சொல்லுவார்களே ஐயோ வென்று அழுது ஆண்டவனைத்தொழுது அகம வேர்த்து முகம் வேர்த்து வாராய் தம்பி லட்சுமணா பூனை குறுக்கிட்டது நீபார்க்கவில்லையோ வென்றாள் அதுகேட்டு லட்சுமணர் சொல்லுகிறார் இது காடாயிருப்பதினால் இதுகள் குறுக்கு நெடுக்கு ஓடும் இவைகளைப் பாராதேயென்று தைரியஞ்சொல்லி லட்சுமணர் பின்னும் வேகமாய் ரதத்தை விட்டார்.

அக்கருணத்தில் புள்ளிமான் ஒன்று துள்ளி எதிராக வருவதைக் கண்ட அம்மனானவள் தம்பி லட்சு

தும் எங்கள் வார்த்தையுங்கேளாமல் மந்திரவாளையுருவி தன் பிராணனைவிட்டுக் கொள்ளுகிறேனென்று கழுத்தின்மீதுவைத்துக்கொண்டார் அதுகண்டு நாங்கள் பயந்து சுவாமிக்குநமஸ்கரித்து உன்னையழைத்துக் கொண்டு வனத்திலவிட்டு வருகிறோமென்றவிற்பாடு சுவாமிக்குச்சித்தமிரங்கி வாளையுறையிற்போட்டு என்னையழைத்து முன்னாலே நம்முடனே சீதை சொன்னது வனம்பார்க்க வேணுமென்று சொல்லியிருந்தாள் அந்த அடையாளஞ்சொல்லி ஜானகியை ரதத்திலேற்றிக்கொண்டு ஆரணியத்தில் ஒரு க்ஷணப்பொழுதிலேவிட்டு வாருந்தம்பியென்று சொன்னார் அவ்வாறேதானும் அவர்சொல்லைத்தள்ளாமல அழைத்துக்கொண்டு வனத்துக்கு வந்தேனம்மா வென்றார் அம்மொழியைக்கேட்ட சீதையம்மனானவள் மனது கலங்கி பாயற்றமரக்கலம்போலும் வேடன் வலையிற்பட்ட மான்போலும் நிலைகலங்கி ஐயோ தம்பி லட்சுமணா என்னை இந்த ஆரணியத்தில் வஞ்சனைசெய்து ஒண்டியாய்விட்டுப்போகவந்தீர் நான்செய்த பாவமிதுவோ ஸ்ரீராமமூர்த்தியேயென்று அடியற்றவிருக்ஷம்போல் ஆவென்று வாயைத் திறந்து அலறியழுது மூர்ச்சையாய் விட்டாள்.

அதுகண்டு லட்சுமணரும் சீதையினுடைய அகோரத்தைப் பார்க்க வொட்டாமல் கோடுகோடென்று அழுது கடகடவென்று பூமியில் புரண்டு மூர்ச்சையானார் இவர்களிருவரும் அப்படியழுத சப்தமானதை அவ்வனத்திலுள்ள பட்சிகள் மிருகசாதிகளெல்லாங்கேட்டு இன்று நமக்கு நல்ல இரை யகப்பட்டதென்று வெளியிற் புறப்பட்டு மூர்ச்சையா யிருக்கின்ற லட்சுமணர் முகத்தையும் லட்சுமியாகிய ஜானகியம்மன் முகத்தையும் எறப்பார்த்து விராடரூபமா யிருக்கப்பட்டவர்களென்றுதெரிந்துக்கொண்டு அப்புறம்போய் நின்றுவிட்டது இதற்குள் சீதையம்மனானவள் மூர்ச்சை தெளிந்து எழுந்திருந்து லட்சுமணரைப் பார்க்கையில் அவர் மூர்ச்சையடைந்திருக்க அவர்குணத்திற்கு மெச்சித் தன்னுடைய திருக்கரத்தினால் அவருடையமுகத்தைத்தடவிக்கொடுத்தாள் அமிர்தம் பொழியப்பட்ட அஸ்தமானது லட்சுமணர்பேரில் படவே மூர்ச்சை தெளிந்து எழுந்திருந்து சீதையம்மனை நமஸ்கரித்து வாராயம்மா சீதா நீ இந்தவனத்தில்தானே வாசம்பண்ணிக்கொண்டிருப்பாயேயானால் நான் சுவாமிக்கு மனது திருப்தியாகும்படி பிரிய வசனங்களைச் சொல்லி மறுபடியும் வந்து உன்னை அழைத்துக்கொண்டு அயோத்திக்குப் போகிறேன் சஞ்சலப்படாமலிரும் அம்மாவென்று லட்சுமணர் சொல்ல சீதையம்மனானவள கிளியைப்போல வாயைத்திறந்து எழுந்து ஸ்ரீராமரைத் தொழுது தம்பிலட்சுமணா நான் கெர்ப்பசிகாமணியாயிருக்கிற இந்தவேளையில ரசகனை வணானன்பேரில் போக்குக்காட்டி என்பேரில்குற்றஞ்சுமத்தி ஸ்ரீராமர் என்னை வஞ்சனைக்குமோசஞ் செய்து இப்பேர்ப்பட்ட ஆரணியமான கானகத்தில் விட்டுவரச் சொன்னாரல்லவோ தம்பி லட்சுமணா நான் பழுது சொல்லவில்லை என்னுடைய கெர்ப்பத்தைப்பாரென்று காண்பித்தாள் அதைக்கண்ட லட்சுமணர் ஸ்ரீராமர் இந்தப்பாவமான சொல்லைக் கேட்க மாட்டேனென்று கண்ணையுங் காதையுமூடிக்கொண்டார் அதுகண்டு அம்மனானவள் லட்சுமணருடைய புத்திக்கு மெச்சி உள்ளம் பொங்கவும் மேனுக்கு துக்கமாய் இந்தக்காட்டிலே கரடி புலி சிங்கம் காட்டானை யாளி கண்டபேரண்டம் அதிகமாயிருக்கின்றதே என்னைப் பட்சித்துப்போடுமே அயோத்தியாபுரி பட்டணத்திற்கு அருகாமையாய் விட்டுப்போமென்று மிகவும் இரக்கத்துடனே கேட்கையில் இலட்சுமணர் சொல்லுகின்றார்.

வாராயம்மா சீதா நீ இனிதுயரப்பட்டதினால் ஆகவேண்டிய காரணமென்ன எனக்குச் செலவுகொடுத்தால் அயோத்தியாபுரிக்குப்போய்வருகிறேனென்று கூற சீதையம்மனானவள் தம்பி என்னை ரதத்திலேற்றிக்கொண்டுபோய் மனிதசஞ்சாரஞ் செய்யப்பட்ட ஊர் கிராமத்தில் விட்டுப்போவீரானால் நான் பிழைப்பேன் இல்லாவிட்டால் இப்போதே உமதுமுகத்தின்முன்பாக என்ஜீவனை மாய்த்துக்கொள்ளுகிறேன் பாருமென்று அழுது சொல்லவே அதற்கு லட்சுமணர் என்னம்மணியான சீதாகேளும் ஸ்ரீராமர் சொன்னபடியே உன்னை இந்தவனத்தில் விடாமல் மனிதர்கள் சஞ்சரிக்கப்பட்ட விடத்திலே விடுவேனேயானால் உனக்கும் எனக்கும் இராமத்துரோகமல்லவோ அது வீணபோகாது நரகம் வந்து சித்திக்குமாகையால் நான்போய் சுவாமிக்கு விண்ணப்பஞ் செய்கிறேன் எனக்குச் செலவு கொடுத்து அனுப்புமம்மாவென்று சொல்லுகையில் அம்மனானவள் அழுதுபுலம்பி இரதத்தைவிட்டுக் கிழிறங்கி தம்பி லட்சுமணா உன் தமையனுக்கு என்பேரிற்சந்தேகந்தோன்றினால அவ்விடத்திற்றானே வாளினாலே என்னை ஒரேவெட்டாக வெட்டிப் போடுகிறது தானே நான் மோக்ஷமடைவேனே அதை விட்டு இப்படி பென்னை குதுபணனி வணானன்மீது வழிகாட்டி என்பேரில் குற்றஞ்சுமத்தி நான் கொப்பவதியென்றும்பாராமல் துஷ்டமிருகங்கள் சஞ்சரிக்கப்பட்ட இருண்ட காட்டில் என்னை விட்டுவரச் சொன்னாரல்லவோ அவரே நன்றுகவாழட்டும் என்மாமிமார் மூன்றுபேருக்கும் உன் தமையனுக்கும் ஆயிரம் நமஸ்காரம் பண்ணினேனென்று விண்ணப்பஞ்சொல்லும் என் தங்கையார் மூவருக்கும் என்னுசிர்வாதஞ் சொல்லவேண்டியது என்னுடைய மைத்துனன்மார் பரதர் சத்துருக்கருக்கும் உமக்கும் அநேக ஆசீர்வாதஞ் செய்தேன தம்பிலட்சுமணா இதோ நீ போனவுடனே கரடி புலி சிங்கம் காட்டானை இதுகளோதானது என்னைப் பட்சித்துப் போடும் இனிமேல்நான் உங்களையெல்லாம் பார்க்கப்

மரை புள்ளிமான் எதிராக வருவதைக் கண்டாயோ வென்ருள் அம்மனி எத்தனைவிதத்திற் சொன்னாலும் நீ அடிக்கடித் தொந்தரவு செய்கிருய் இதுகளெல்லாம சகுனமல்ல சும்மா வாருமம்மாவென்று லட்சுமணர்கூற அம்மனுனவள் முன்னும் இப்படிதான் லட்சுமணர் வார்த்தையை அங்கீகாரம்பண்ணமல் வெகு அவஸ்தைப்பட்டோமல்லவா ஆனபடியினலே இலட்சுமணர் மனதிற்கு ஆயாசம் வருவதுபோற் காணுமென்று வாய்மூடிக்கொண்டு சும்மாயிருந்துவிட்டாள் லட்சுமணரானவர் ரதத்தை நடத்துங்காலையில் ஒரு செம்போத்தானது இடபாரிசமிருந்து குறுக்கே பாய்ந்தது அதுகண்டு லட்சுமணரானவர் மனதிலெண்ணிக் கொள்ளுகிருர் இதைக்கண்டு அப்பால் போகலாமோ ஐயோ சீதையம்மன் நம்மை என்னபாடுபடுத்துவாளோ என்ன சாபம் கொடுமோ என்னசெய்வேன் ஸ்ரீராமாவென்று தியானம்பண்ணிக்கொண்டு தேரைநடத்துகையில் சரஸ்வதியாறு குறுக்கே நின்றுவிட்டது அதுகண்டு லட்சுமணர் ரதத்தைவிட்டு பூமியிற் குதித்தார் சீதையம்மனும் கீழேயிறங்கினள் அந்த சரஸ்வதியாற்றின பெருக்கமானது சமுத்திரம்போற் கோவென்ற சத்தமாய் அலைமோத நுரைகள் ததும்ப நீச்சலில் கொள்ளாமல ஆழமாயிருக்கிறதை சீதையம்மன்கண்டு கலங்கி நிற்கையில் லட்சுமணர் ஓடக்காரனைக் காணமல்ஓடமாத்திரமிருக்கக்கண்டு ரதத்தைவிட்டு அவ்வோடத்தில் வைத்து முன்பாகத் தோன்றி சீதையம்மனுக்குக் கைகொடுத்து ஓடத்திலேற்றி லோகமாதாவான சீதையம்மனை நவரத்தின உஞ்சலிலுட்காரவைத்து தன்கையில் ஓடந்தள்ளுகிற கோலையெடுத்து பூமியிலூன்றி ஓடந்தள்ளினர்.

அவராரென்றால் பல்லாயிரக்கோடி அண்டத்தையும் சிரசத்தில்வைத்து ரட்சிக்கப்படாநின்ற ஸ்ரீமந்நாராயணனாலே விளங்காநின்ற அந்த ஆதிசேடன் லட்சுமணராயவதரித்து லட்சுமியான ஜானகியம்மனுக்கு ஓடந்தள்ளவே அம்மனுனவள் நல்ல வசனத்தினலே அவர்மனதைச் சந்தோஷப்படுத்தி தம்பி லட்சுமணு முன்னாலே சுவாமியும் நாமும் அயோத்தியைவிட்டுத் தண்டகாரணியவனம்போகிறபோது குகன்விடுத்த வோடமும் நீ விட்டப்பட்டஓடத்துக்கு முன் சரியாகா தென்பதைக்கேட்டு லட்சுமணர்மிகவும் சந்தோஷமாய் ஓடத்தைவிட்டிறங்கி ஜானகியம்மனை இரண்டுகையினலும் ஏந்திக் கொண்டுவந்து பூமியில்விட்டவே சீதையம்மனும் அந்த ஆற்றுமணலிலுட்கார்ந்து சற்றுநேரம் விளையாடிக் கொண்டிருந்தார்கள் அப்போது லட்சுமணர் ஓடத்திலேறி ரதத்தை யெடுத்துவந்து பூமியிலிறக்கினர்.

அந்த சரஸ்வதியாற்றுக்கும் அயோத்திமாநகருக்கும் சுமார்-காதவழிதூரமாம் எவ்வளவு நாழிகைபாக்குதென்றால் ஒன்பதுநாழிகை வேளையாக்குதாம் அந்தச்சமயத்திலேறியுட்கார்ந்து குதிரைகளைப்பூட்டி ரதத்தை நடத்தவே ரதமானது மகாவேகத்துடன் வருகிறபோது அவ்வனம் எப்படிக் கொத்ததென்றால் சுறுமையாதிடமாம் அப்பேற்பட்ட வனத்திற் காட்டானை காடிபுலிசிங்கம் யாளி கண்டபேரண்டம் சக்கிரவாளப் பட்சிகள் சஞ்சரிக்கப் பட்டயிடத்தில் ரதத்தைக் கொண்டுவந்து நிறுத்தினர் நிறுத்தவே ஜானகியம்மன் பார்த்து தம்பிலட்சுமணு இந்தஅகாதமானகாட்டில்ரதத்தை ஏன்நிறுத்திவிட்டாய் இன்னம் தேரைநடத்தென்று சொன்ன வார்த்தையைக் கேட்ட லட்சுமணர் மனதுபொங்கி கண்ணீர்தாரையாய்ப் பெருக அழுது கருவிவிம்மிவிம்மிக்கொண்டு தொடங்கினர்

வாராய் அம்மா சீதா ஸ்ரீராமர் சொன்ன வசனத்தை மனக்குனிந்து நான் எவ்வாறு கூறுவேனம்மா என்று முகம் கோணி அகம் நாணி துயரத்துடனே நிற்கின்ற லட்சுமணரைப்பார்த்து சீதையம்மன் மனதுகலங்கி தம்பி லட்சுமணு நீயேன் விசனப்படுகிருய் உமது துக்கத்தை யடக்கி மனதைத் திடப்படுத்திக் கொள்ளென்று மிகவும் தைரியவசனமாகக்கேட்கையில் லட்சுமணரானவர் சொல்லுகிருர் கேளாயம்மா தாயே என் தமையனுன ஸ்ரீராமர் இந்த ஆரணியமானவனத்திலே உன்னைக் கொண்டுபோய் விட்டுவரும்படியாய்க் கட்டளையிட்டார் நானும் அவர்சொல்லைக்கடவாமல் இந்தவனத்திறகொண்டுவந்துவிட்டேன் அதேதென்றால் என் தமையனுன இராமபத்திரசுவாமியானவர் நேற்றிரவு நகர்சோதனைக்குப் போயிருந்தார் அவ்விடத்தில் ஒரு வண்ணானுனவன் பெண்சாதியுடனே சண்டையிட்டுத் திட்டியடித்தானும் அதற்கவள் பிணங்கி மூன்றுநாளாய் அயல்வீட்டிற்போயிருந்தாள் அதற்கு அந்த வண்ணான் தாயானவள் அவனைப்பார்த்து அடாதம்பி உன் பெண்சாதி பிணங்கி மூன்றுநாளாய் அயல்வீட்டிறபோயிருக்கிருளே நீபோய் சமாதானம்பண்ணி அவளையழைத்துக்கொண்டு வாவென்று தாயார் சொல்ல அதற்கந்த ரசகனுனவண்ணான் சொல்லுகிறுன் தாயே இராமன்பெண்சாதியை இராவணன் எடுத்துக் கொண்டு போய் பத்துமாதம் வைத்திருக்கவும் அதன் பிறகு குரங்குசேனைகளை இராமன் கூட்டிக்கொண்டுபோய் அந்த ராட்சதனைக் கொன்று சீதையை மீட்டுக்கொண்டுவந்து பட்டணமும் ஆளுகிறுன் அவன் குலம்போல் என் குலமென்று பாராதே என்வாசற்படிவிட்டு மூன்றுநாளாய் அயல்விட்டுபோயிருக்கிற பெண்சாதியை அழைத்துவந்தேனேயானால் என் குலத்திற்கு ஈனம் வருமென்று தள்ளிப்போட்டான் ஆனபடியினலே என் தமையனுனவர் பரதசத்துருக்கனையும் என்னையுமழைத்து இந்த சமாச்சாரத்தைச் சொல்லி என்னைவனத்தில் விட்டுவரச் சொன்னர் நாங்கள் மறுத்

போகிறதில்லையென்று சிறகறுந்தபட்சிபோலவும்
சீதா லஷ்சுமியானவள் அழுது ஐயோதெய்வமே
அனாதியாகினேன் திக்கற்றபாவியானேன் ஸ்ரீராம
ருடைய கிருபையிப்படி யிருந்ததேயென்று மன
முருகி கண்ணீரானது தாரை தாரையாகப்பெருகி
த்தம்பிலட்சுமணரே நீர்போய்வாருமென்றுசொ
ல்லி பூமியில்விழுந்து மூர்ச்சையடைந்தாள்.

அதனை லட்சுமணர்பார்த்து அயோத்திக்குப்
போகமனதுவாராமல் அழுதுக்கொண்டு அசைவற்
ற சித்திரம்போலநிற்கையில் சீதையம்மனானவள்
மூர்ச்சை தெளிந்தெழுந்துட்கார்ந்துநான்பூமியிற்
பெண்ணாகப்பிறந்து உன்தமையனுக்கு மாலையிட்
டநாள்முதற்கொண்டுகாடுவனமே சஞ்சரித்ததே
யல்லாமல் ஒருநாளாகிலுஞ் சுகத்தை யனுபவித்
தவளல்ல என்விதிப்பய னிப்படியிருக்க அந்த ரா
மர்தான் னென்னசெய்வார் நீர்தான் என்னசெய்
வீர் அந்தசனகனைவண்ணான் தானென்ன பண்ணு
வான்என்தலையெழுத்தைத்தள்ளஎன்னாற்ரமோசக
ல சராசரங்களையும் உயிர்பிராணிகளையும் ண்டுப
ண்ணினபிரமதேவனைத்தான்விட்டுவிட் டதோயா
ரையும்விடாதுஇப்பவோ இன்னஞ்சற்றுநாழிகை
யோவென்றிருக்கிறது என்னுடைய காயமானது
ஆனபடியினால் நீர்போய் எ ன்னைப்பற்றி ஸ்ரீராம
ரது திருப்பாதத்தில் ஒருவிண்ணப்பம்பண்ணவே
ண்டியது அதென்ன வென்றால் என்பேரைநினைத்
து எள்ளும்தண்ணீரும் இறைத்துப்போடச்சொ
ல்லும் போய்வாருமென்று சஞ்சலவார்த்தையா
கச் சொன்னதைக்கேட்டலட்சுமணரானவர்சொ
ல்லுகிறா வாராயம்மா இப்படிக்கெல்லாம்விசனப்
படலாமோ கரடிபுலிசிங்கம் காட்டானைஉன்னை
யென்னசெய்யும் நெருப்பில் ஈமொய்க்குமோஅப்
படியிருக்கஉன்னருகில் யாதாவது நெருங்குமோ
இந்த வனத்திற்றானேராமஸ்மரணை பண்ணிக்கொ
ண்டிருப்பாயேயானால் ஒருகாலத்திலும்உனக்குத்
துன்பம்வரமாட்டாது இந்தலோக நடத்தையும்
விட்டு அடியேனுக்குச் சந்தோஷமாய்செலவுகொ
டுத்தால் நான் அயோத்திக்குச்சென்று சுவாமிக்
கு தெரியப்படுத்தி உன்னையழைத்துக் கொண்டு
போகிறேனென்று சீதையம்மனிடஞ் செலவுபெற்
றுக்கொண்டு லட்சுமணரானவர் தேரேறிரதத்
தை அயோத்தியாபுரிக்குத்திருப்பி சரஸ்வதியாற்
றருகில்வந்து ரதத்தை ஓரிடத்திலேற்றி தாமும்
யேறி ஓடத்தை லட்சுமணர் தள்ளிக்கொண்டு
போய்அக்கரைவிட்டு ரதத்தையெடுத்து பூமியில்
நிறுத்தினார் அப்போது என்னேரவேளையாயிற்
றென்றால் சூரியன் உதயமாய் பதினெட்டு நாழி
கைநேரமாச்சுதாம் அந்தச்சமயத்தில் லட்சமண
ரானவர் என்னயோசனை செய்கிறாரென்றால்நான்
சீதையம்மனிடத்தில் யிருக்கும்போதே கரடிபுலி
சிங்கம் காட்டானைகள் செடி மறைவிற் காத்துக்
கொண்டிருந்ததே இன்னேரம் ஜானகியம்மனைக்
கொன்றனவோ பசிதீரத்தின்றனவோஎன்னமோ
வென்று லட்சுமணர்சரஸ்வதியாற்றிலிறங்கி ஸ்நா
னஞ்செய்து ரதமேறி அயோத்தியாபுரிக்கு நடந்
தார்.

இப்பாற்சீதையம்மன் கண்ணுக்கெட்டினது
ரம்பார்த்து ரதமறையவே கோவென்ற சத்தத்து
டனேஅழுதுபுலம்பி பூமியின்மீது மோதிவிழுந்து
அலறியெழுந்திருந்துஎன்னைக்கைவிட்டாயேஇனி
யென்முன்கிட்டாயோ தம்பி லட்சுமணாவென்று
கூவிமூர்ச்சையடைந்தாள் அத்தருணத்தில் அவ்
வனத்திலிருக்கப்பட்ட பட்சிகள் கரடி புலிசிங்கம்
காட்டானைகள்வந்து காவலாயிருக்கையில் சற்று
நேரத்துக்குள் மூர்ச்சைதெளிந்து அம்மனெழுந்
திருந்து பார்க்கையில் அவைகளெல்லாம் அப்புறம்
விலங்கிப்போயின அதுகண்டு ஜானகியம்மனா
வள் எப்படி துக்கப்படுகிறாளென்றால் ஐயோலட்
சுமணா என்னை இப்படி அநியாயமாய ஆரணிய
மானவனத்திலே விட்டுமோசம்பண்ணலாமா நா
ன்உலகத்திலேயாரும்படைக்காத அழகைப்படை
த்தேனோ ராமராமாஉமமை என்னவஞ்சனைசெய்
திருந்தாலும் இப்படியிருண்ட காட்டிலேவிட்டுக்
கொல்லலாமோநான்கெர்ப்பவதியாயிருப்பதுதெ
ரிந்தும் மோசம் சூது வஞ்சனைபண்ணி மனிதர்
சஞ்சரியாத காட்டிலேவிட்டுகாட்டானைபுலிகரடி
சிங்கங்கள் இவைகள்கையிற்காட்டிக்கொடுக்கலா
மோவென்று புலம்புகிறதைக்கண்டு பட்சிகளொ
ருபுறமும் விளங்குகளொருபுறமிருந்தழவும் இந்த
மண்டலமுழுதும் அந்த விண்டல முழுதும் துக்க
முறவும் பூமிதேவி ஆகாயவாணி முதல்யாவரும்
அம்மனுக்ககாகப் புலம்பிக்கொண்டிருந்தார்கள்.



வால்மீகரிஷிவருதல்.

விருத்தம்.

திருவுரைகமண்டலங்கொண்
டெண்பவைகரத்திற்கொண்டு
பருமணிருத்திராட்சம்
பஞ்சகரெங்குந்துன்ன
அருந்தவமுனிவரென்றே
அறையும்வால்மீகர்தாமும்
கருணையாஞ்சீதைபக்கல்
கடிதியேவருகுவாரே.

வசனம்.

அந்தச்சமயத்தில் வால்மீக மகாரிஷியானவர்பாதத்தில் பாதக்குறடு துன்னவும் காவிவேஷ்டியிடையிற்றரித்து சபாமண்டலதாரியாய் அரிகோவிந்தா நமோநாராயணா வென்று ஸ்ரீமந்நாராயணனைத் துதிசெய்துக்கொண்டுவருகையில் ஜானகியம்மனானவள் தம்பிலட்சுமணா உன்தமையனான ஸ்ரீராமர்சொற்படியேகொண்டு வந்து இருளோங்கியவனத்தில் விட்டுப்போகலாமோ நான் கண்ட அவசகுனமெல்லாம் எனக்கேபலித்ததையோ ஸ்ரீராமா எனனைவஞ்சனை பண்ணலாகுமா நான் என்னசெய்தேன்எனக்குபயமாயிருக்கிறதே ஒய்யாருசுக்தனுராமாராமாவென்று அழுகிறசத்தமானைகைவால்மீகர் கேட்டு எதடா இந்த அத்வானகாட்டிலேராமனென்கிற சத்தங்கேட்கிறதென்று கிட்டவந்து பார்த்தார்பார்க்கையில் அந்த அம்மனுடையதேஜஸ் எப்படி யிருந்ததென்றால்வைகுண்டத்தில் வாசமாயிருக்கப்பட்ட ஸ்ரீமந்நாராயணருடைய திருமார்பிலுறைகின்ற மகாலட்சுமியைப்போலவிருக்கின்றதென்று வால்மீகர் தியானதிருஷ்டியினால் அறிந்து அந்தமகாலட்சுமி தானென்றுமனதிலெண்ணிசந்தோஷமாகத்துதிபண்ணி இன்றைக்குயெனதுதவமீடேறிற்று ஆனந்தசாகரத்தில் முழுகினவனைப்போலஓஅம்மாநீயார் மனிதர்சஞ்சரியாத இடத்திலவந்து இப்படிப்பட்ட துக்கமுந்துயரத்துடனபிரலாபித்து அழவேண்டிய காரணமென்ன உன்னைப்பார்த்தால் இராஜஸ்திரீயைப்போற் காணுகின்றதே உன்வரலாற்றை சொல்லம்மாவென்றுகேட்க ஜானகியம்மனெழுந்து நமஸ்காரஞ்செய்து சொல்லுகிறாள் ஐயா அயோத்தியாபுரி பட்டணத்தையாளப்பட்ட தசரதமகாராசனுடையகுமாரர் ஸ்ரீராமபத்திரருடைய தேவிஎன்பேர் ஜானகியென்றாள் அதற்குவால்மீகரானவர் வாராயம்மாஜானகி ஸ்ரீராமருடை பட்டபுதேவியாயிருந்தும்அயோத்தியைவிட்டு இந்தவனத்தில்வந்து அழவேண்டியது யாதுகாரணமென்று கேட்டார்.



ஜானகிதன் வளப்பங்களை வால்மீகரிடத்தில்கூறல்

துட்டவிராவணனென்னைச்சிறையிலவைத்த
தோஷத்தாலவன்குலத்தைசுட்டிலங்கை
பட்டணத்தைவிபீஷணர்க்குநல்கினும்
பரிவுடன்றீயினிற்குளித்துபலரும்போற்ற
இட்டமுடனயோத்திவந்து வாழுநாளிற்
றேயத்திலேவிதஞ்செய்கிறார்களென்றே
தொட்டமுடிராமரென்னைவனத்தில்விட்டார்
சுவாமியுனைகண்டே னென்றுயர்விண்டேனே

வசனம்

வாருமையா தபோநிதியே தசரதமகாராசாவுக்குப்பிள்ளையில்லாமல் கலைக்கோட்டு மகாரிஷியினால் யாகம்வளர்ப்பித்து பிண்டப்பிரசாதங்களினாலே ஸ்ரீராமர் லட்சுமணர் பரதசத்துருக்கர் என்னும் நான்குபிள்ளைகள் பிறந்தார்கள் அக்காலையில் விசுவாமித்திரர்வந்து ஸ்ரீராமலட்சுமணரையழைத்துக்கொண்டுபோய் விசுவாமித்திரருடைய யாகத்தையழித்த தாடகை சுபாவைக்கொன்று அகலிகைக்குமோட்சங்கொடுத்துஜனகமகாராசாவைத்திருந்த வில்லையொடித்து என்னையும்விவாகஞ்செய்து பரசுராமன்கர்வத்தையடக்கி அயோத்தியிலவந்து தாய் சொல்லினாலே ஸ்ரீராமலட்சுமணரும் நானும் பதினான்குவருஷம் வனத்திலே வாசஞ்செய்தபின்புகங்கைக்கரைதாண்டி குகனுடைய ஆசிற்மத்திற் சிலநாளிருந்து அவரிடத்திற் செலவுபெற்றுக்கொண்டு, நந்திக்கிராமம்வந்துசேர்ந்தோம்,

அக்காலத்தில்தசரதர் இறந்துபோனாரென்று பரதசத்துருக்கர் வந்துசொல்ல சுவாமியும் லட்சுமணரும்நானுங்கேட்டு துயரப்பட்டு பரதருக்குச் சுவாமி திருவடிலைக்கொடுத்து பரதசத்துருக்க

னை யனுப்பிவிட்டு அத்திரமகாமுனியாசிரமத்திற்
சிலநாளிருந்து அவ்விடத்திலுஞ் செலவு பெற்றுக்
கொண்டு பாத்துவாசர் ஆசிரமஞ்சேர்ந்து சிலநா
ளங்கிருந்து அவரிடத்திலும்விடைபெற்றுபஞ்சவடி
தீர்த்தத்தில் சடாயுபன்னசாலையில் வந்துசேர்ந்
தோம் லங்கையையாளப்பட்ட ராவணனிட தங்
கையான சூர்ப்பநகைவந்து ஸ்ரீராமலட்சுமணரை
தேடி யதோ தகம்பண்ணினுள் இலட்சுமணர் அந்
தசூர்ப்பநகையை மூன்றுக்கினையுஞ்செய்து துர
த்திவிட்டார் சூர்ப்பநகையானவள் இலங்கைக்குப்
போய் அவள் தமையனான ராவணனைக்கண்டு அவ
னிடத்தில்தான் பட்ட அவஸ்தைகளைச்சொல்லி
பங்கம பண்ணினதையுங்காட்டி மாரீசனைப்போல்
மானுகரூபங்கொண்டனுப்ப அம்மானைக்கண்டுநா
ன்ராமரைப்பிடித்துக் கொடுக்கச்சொன்னேன் அ
வரும் என்சொற்பிரகாரம் மான்பின்செல்ல அது
அசப்படாமல் ஓடுவதைப்பார்த்துராமபாணத்தா
ல் கொன்றுபோட்டார் மானுகவிருந்த மாரீசன்
உயிர்விடும்போதுலட்சுமணுவென்று சத்தமிட்டி
றந்தான் அந்தச்சத்தம் நான்கேட்டு என்மைத்து
னனை லட்சுமணரைப்பார்த்து தூரிக்கொண்டு
தமையனிடத்திற்குஅவரையனுப்பிவிட்டேன் அந்
தசமயத்தில் ராவணன்வந்து நானிருந்தபன்னக
சாலையோடுபேர்த்தெடுத்துக்கொண்டுபோம்போ
துநான் அழுகிறசத்தம் ஜடாயுபகவான்கேட்டுஓடி
வந்து குறுக்கேபாய்ந்து ராவணனை மயக்கெதிர்
த்து அவனுடைய வாளாயுதத்தினுலே சிறநான
தறுபட்டு உயிரைவிட்டார்

அப்பால் ராவணனனவன் ரதத்தைநடத்தி
லவணசமுத்திரத்தின மத்தியிலிருக்கின்ற லங்கா
புரிபட்டணத்திற் கொண்டுபோய்கிருத்திப்பன்ன
கசாலையோடெடுத்து பூமியிலிருக்கித்திரிசடையை
க்காவலாகவைத்து என்னைப்பத்திரமாய் பார்த்து
க்கொள்ளசொல்லித்தான் ரதத்தைநடத்திக்கொ
ண்டுகோட்டைக்குள் நுழைந்துவிட்டான் அதன்
பின்பு சுவாமியும்லட்சுமணரும் என்னைவந்துபார்
த்துக்காணுமல் தேடிக்கொண்டுவரும்போது அசு
முகியைக்கொன்று விராதனுக்கு மோட்சத்தைத்
தந்து கவந்தனைமாய்த்து சவரிக்குமோட்சமளித்
து அனுமாரைக்கண்டு சுக்ரீவனை ஆதரணைசெய்
து வாலிக்குமோட்சங்கொடுத்து சுக்ரீவனுக்குப்
பட்டங்கட்டி அனுமாரால் நானிருக்குமிடத்தைக்
கண்டுபிடித்து எழுபத்திரண்டுவெள்ளம் வானர
சேனையைக்கூட்டிக்கொண்டு நளனுலே சமுத்திர
மடைந்து ராவணன்கும்பகர்னன் இந்திரசித்து
அதிகாயன் கும்பநிகும்பன் இவர்களைக்கொன்று
இரண்டாயிரவெள்ளம்ராட்சதர்களையும் நாசப்படு
த்தி விபிஷணர்க்குப் பட்டங்கட்டிஎன்னையும்சிறை
மீட்டு நானும் அக்கினியில்மூழ்கிஅயோத்தியாபுரி
பட்டணம்வந்து பட்டாபிஷேகந்தரித்து பட்ட
மும் ஆளுகிறநாளில் ராவணனுக்கு உதபலமாய்வ
ந்த சதகண்டராவணனையும் சகஸ்திரகண்ட ராவ
ணனையும் அவர்கள்சேனசமுத்திரமான பதினுயி
ரம்வெள்ளராட்சதர்களையும்கொன்றுமகாமாயன்
சலவர்தன் இரண்டுபேருக்கும் பட்டந்தரித்து அ
யோத்திக்குவந்து சிகரில்லாதபட்டமும் ஆண்டுக்
கொண்டிருந்தோம்.

அப்படியிருக்கையில் அப்போது சகனை
ஒருவண்ணன்பேரில் போகதுக்காட்டி என்மீது
குற்றஞ்செலுத்திகெர்ப்பதியென்றும்பாராமல்தம
பியாகியலட்சுமணரைவிட்டு என்னையிந்த அத்து
வான காட்டிலேவிட்டுவரச்சொன்னுரென்று இப்
போது என்மைத்துனர் ராமலட்சுமணர் என்னை
காட்டிலே விடுவிட்டுப்போகிருர் நானென்ன
செய்வேன் ஐயாவே ஐயாவென்று ஜானகியம்மன்
சொல்ல வால்மீகரிஷியானவர்கேட்டு மிகவுமவரு
த்தமடைந்து சொல்லுகிறுர் வாருமம்மாசீதாய்
நானிந்த வனத்திலிருக்கப்பட்ட வால்மீகரிஷி எ
ன்னுடைய வனமிதுதான் பயப்படாமல் நம்மு
டைய ஆசிரமத்தில்வந்திரு எத்தனைகாலமிருந்தா
லும் என்புத்திரியைப்போல ஒரே சிராய்ப்பார்க்
கிறேன் உன்வயிற்றிற்பிறக்கிற பிள்ளைக்கும்புத்தி
வித்தை கற்பித்துவருகிறேன் வாருமம்மாவென
றழைத்தார் ஐயாநான்கெர்ப்பவதியாச்சுதேபோ
து காலமாயிறதே எனக்குப் பெண்துக்கில்லையே
நானெப்படி வருவேனென்று ஜானகியம்மன்கூற
வால்மீகர்சொல்லுகிறுர் சேளாயம்மா அப்படி உ
னக்குப்போதுகாலம்வரும்போது நான் தெய்வ
ப்பெண்களை யழைப்பிக்கிறேன் மேலும்பெற்றபெ
ண்ணைப்பார்க்கிலும்எனமணங்கதிகமாய்பாவித்து
பாதுகார்ப்பேன் ஒன்றுக்கும் சஞ்சலப்படவேண்
டாம் வாருமம்மாவென்று மகாபிரியவசனத்தோ
டுவால்மீகரிஷியழைக்குந்தருணத்தில் ஜானகியம்
மனெழுந்து ஐயாநீரே எனக்குத்தாயுந்தகப்பன்
குருதெய்வமல்லாமல்வேறில்லை யென்றுசொல்லி
ஆடைகுலுங்க ஆபரணங்களசைய ஒட்டியாணமி
ன்ன ரத்தினமூக்குத்தி இலங்க முத்துமாலை மோ
கனமாலை மார்பிலசையவால்மீகர் பின்னுல்நடக்
கும் நடத்தையைப்பார்த்து அந்தவனத்திலுள்ள
அன்னங்கள் மயில்கள் பலபட்சிகளும் வெட்கிவே
டிக்கைபார்த்துக்கொண்டிருந்ததுகள் அதன்பின்
னும் அவ்வனமானதெப்படியிருந்ததென்றால் ஆ
ச்சா அகிலசந்தனம் தேக்கு புன்னைவன்னி காட்
டுவாழைபலாவெங்கிற விருட்சங்கள் உலகமாதா
வான மகாலட்சுமியென்று கூறப்பட்டஜானகியம்
மாள் வருகிறுளென்று பூவும்பிஞ்சுகளும் காய்த்
தும் பூத்தும் பழித்தும்இருபக்கங்களிலும்நின்று

சேவிப்பதுபோலக் காணப்பட்டது மேலும் மல்லிகை முல்லை சம்பங்கி மருவும் மருக்கொழுந்து ஆம்பல் செவ்வாம்பல் முதலிய இன்னம்பலவித புஷ்பச்செடிகளும் சர்வலோக தயாபரியாகிய ஜானகியம்மன் வருகிறாளென்று மலர் முகமலர்ந்து மொக்குகள்மலர்ந்து குளிர்ச்சியாயின காற்றுடனவாசனை பரிமளித்திருந்தன இவ்வாறாக அவ்வனத்தின் விநோதங்களைப்பார்த்துமகாகளிப்புடன் ஜானகியம்மன் வால்மீகர் ஆசிரமம் வந்துசேர்ந்தாள் அப்போது சூரியன் உதயமாகி இருட்டைத்து காறிகையாயிற்று.

சீதையம்மன்வால்மீகராசிரமஞ்சேர்தல்.

விருத்தம்,

நம்மிட ஆசிரமத்தில்நங்கைமாரனேகருண்டு செம்மையாயவர்செய்வார் சீருடனிருப்பாயம்மா, இம்மையில் வேணபாக்கிய மீட்சணமடைப்பிப்பேனுன், செம்மையா யாசிரமத்தில் சீக்கிரம் போவோம்வாராய்.

வசனம்.

இப்படி ஜானகியம்மன்வால்மீகருடையஆசிரமம்வந்து சேர்ந்தபோது அம்மனுக்குக்காதுவிடாய்ப்பட்டு முகமெல்லாமுத்துமுத்தாய் குருவேர்வைகள்பரவ அதனை வால்மீகர்கண்டு காமதேனுவையழைத்து ஓ காமதேனுவே சீதாலட்சுமியினை நதபோதுவந்து தனக்கு இஷ்டமானபதார்த்தத்தைகொடுவென்று உத்தரவுகொடுக்க அவ்வாறே காமதேனுவும் அம்மனிடத்தில் வந்துநிற்க அம்மனெழுந்துகைகாலலம்பி ஜெபதபங்களைமுடித்துக்கொண்டு வந்துட்கார்ந்தாள் காமதேனுனதுதலைவாழையிலையை விரித்து பஞ்சகச்சாயத்துடனே அமுதுபரிமாற சந்தோஷமாய்பொசித்து தாகசாந்திசெய்து கைகாலலம்பி ஆசிரமத்தில்வந்துட்கார்ந்து காமதேனுவால் சந்தம்கஸ்தூரி பரிமளாதிகளுமணிந்து கற்பூரதாம்பூலமருந்தி வால்மீகருடனே ஸ்ரீராமருடையபிரதாபங்களைப் பேசிக்கொண்டிருக்கையில் சீதாபிராட்டியானவள் வால்மீகருடைய ஆசிரமம் வந்திருக்கிறாளென்றுகேள்விப்பட்டு ரிஷிகளும் தபோதனர்களுமவந்து அம்மனுடைய தெரிசனையைக்கண்டு தபம்நிறைவேறித் தங்கள் தங்கள் ஆசிரமம்போய் சேர்ந்தார்கள்அப்போது சூரியனும் அஸ்தமானார்சந்திரனுந்தனது முப்பத்திரண்டு கிரணங்களுடனே விளங்கினார் அக்காலையில் வால்மீகரெழுந்து நேமநிஷ்டைகளை முடித்துக்கொண்டு பன்னகசாலையில்வந்து சீதையம்மன் மனவிசனந்தீரத்தக்ககாரணங்களைச்சொல்லிக்கொண்டிருந்தார்.

லட்சுமணர் சுவாமிக்குச் சீதைசேதிகூறல்.

விருத்தம்.

என்னென்று சொல்வேனண்ணா என்மனம் பதைக்குதிப்போ, அன்னமாஞ்சீதையாளை அடவியில்விட்டபோது, தன்விதிதன்னைநொந்து சாமிக்கோர்சரணமென்று, என்னையே போகுமென்று எங்கியே புலபுகின்றார்.

வசனம்.

ஜானகியம்மனானவள் அவ்விடத்திலிப்படியிருக்கையில் லட்சுமணரானவர் சீதையம்மனை நினைத்துகண்களில் நீர்சொரிய மகாதுயரத்துடனே அழுதுக்கொண்டு அயோத்தியாபுரிபட்டணத்திலுள் நுழைகிறபோது அப்பட்டணம் எப்படியிருந்ததென்றால் பிரமக்ஷத்திரியவைசிய சூத்திரரென்று கூறப்பட்ட நான்குஜாதி வீதிகளும் பாழடைந்து லட்சுமிகரம்போய்ச் சந்தடியில்லாமலிருப்பதைக்கண்டு துயரங்கொண்டு அரண்மனைவாசற்படியில் ரதத்தைவிட்டிறங்கி ஆசாரவாசற்கு வந்து ஸ்ரீராமரைக்கண்டு நமஸ்கரித்து நீர்சொன்னபடியே ஜானகியம்மனைக்கொண்டுபோய் வனத்தில்விடுவித்துவந்தேன் இந்நேரமிருகங்கள்வாயிற்போட்டுக்கொண்டதோ யென்னமோ தெரியவராது தேவரீர்கையில் எள்ளுநீரும் இறைத்துப்போடச்சொன்னாள் இதுவுமல்லாமல்உமக்குஆயிரநமஸ்காரஞ் சொல்லச்சொன்னாளென்றுசொல்லிப்பிறகு தாய்மார்களிடத்திலும் வந்துசொல்லி தன்னரண்மனை போய்ச்சேர்ந்து சயனித்துகொண்டார்.

ஸ்ரீராமர்சீதையின்பிரிவைநினைத்துவிசனப்படுதல்

அதுகண்டு ஸ்ரீராமமூர்த்தி சீதையை நினைத்துசீதாவென்று துயரமுற்றுதன்னுள்தாமேசொல்லிக்கொள்ளுகிறார் ஜனகராசனுடைய திருக்கண்ணே என்காதலியாகிய பெண்ணே அந்தரசனகனவண்ணான் சொல்லிய வார்த்தையினால் தப்பிவிட்டேனே அவ்விடத்தில் கரடிபுலிசிங்கம் காட்டானை பக்ஷித்துப்போட்டதோ என்னமோ தெரியாதே இனியாதுசெய்துவேனென்று அழுது புலம்பிமூர்ச்சையடைந்து சற்றுநேரம் பொறுத்தெழுந்தும் மறுபடியும் சீதா சீதாவென்று மனமானது அனலிட்டமெழுகுபோலுருகிய ஸ்ரீராமர் அயர்ந்து நித்திரைபோய்விட்டார் பின்பு கவுசலை கைகேசி சுமித்திரை ஊர்மளாதேவி சுதோதை மாண்டவிமுதலான சகலருங்கேட்டுக் கோவென்றொருவர்க்கொருவர் கூடிக்கொண்டழுகிற சத்தம்பரதர்சத்துருக்கமகாராசாகேட்டு துக்கசாகரத்திலாழ்ந்தினவர்போல துயரம்பெருகிவாயைத்திறந்துகதறி மனம்பதறி அழுதார்கள் அந்த சத்தம் அயோத்தியாபுரி பட்டணத்திலிருக்கப்பட்டபந்து வர்த்தகர்கள்மந்திரிப்பிரதானிகள் இன்

ஊள்ளயாவருங்கேட்டு ஓடிவந்து ஸ்ரீராமமூர்த்தியினுடைய அரண்மனைக்குள்ளேபுகுந்து கோவென்றசத்தமாயழுகிறபோது ராமமூர்த்தியும் நித்திரைநீங்கினாப்போது சகலரும்ராமரையும் சத்துருக்கரையுங்கட்டிக் கழுவிதுயராமுற்றார்கள் சூரியனும்உதயமானார் ஸ்ரீராமமூர்த்தியும்ஸ்நானம்பண்ணி நேமநிஷ்டைகளை முடித்துக்கொண்டு அரண்மனை வந்து பரதரையழைத்து செங்கோல் முத்திரைகையில்கொடுத்துநீதிமுறைதவறாமல்பட்டணத்தையாளுமென்றுதிட்டப்படுத்திதான்சீதைபோனநாள்முதற்கொண்டு விசனமடைந்து ஆயாசத்திலிருந்துவிட்டார்.

பரதசத்துருக்கரும்பட்டணத்தில்வந்துநடக்கப்பட்ட அதிசயங்களை அன்றைக்கன்றுடை மாச்சாரஞ்சொல்ல மந்திரிபிரதானிகளும் பெரியோர்களும் ஊரிலுள்ளபேர்களும்வந்து கண்டுகொண்டுபோவார்கள் இலட்சுமணர்மாத்திரந் தமையன்முகத்தில் முழிக்கப்போகாதென்று அரண்மனையிலிருந்துவிட்டார் ராமூர்த்தியும் லட்சுமணர் என்னமாயிருக்கிறாரென் கேளாமல்சீதைபிரிந்தவருத்தத்தினால் மறந்துவிட்டார் அக்காலையிற்கவுசலை கைகேசிசுமுத்திரை மூன்றுதாய்மாரும் ஸ்ரீராமரிடம்வருகிறபோது ஸ்ரீராமமூர்த்தியெதிர்போய் நமஸ்கரித்துநின்றனர் அந்த மூன்றுதாய்மார்களும்அப்பனே எங்கள்குமாரரத்தினமே உன்தேவியானசீதாக்கினியென்னகுற்றம் பண்ணினாளென்று காடிபுலிசிங்கம்காட்டானைவாழும் காட்டிலனுப்பிவிட்டால கர்ப்பவதியென்றும் பாராமல் மிருகங்களுக்கோ இரையாக்கிவிட்டாய் அவள்செய்த குற்றத்தை தெரியச்சொல்லென்று அம்மூவரும் கேட்க ஸ்ரீராமர்சொல்லுகிறார் வாருமம்மாதாய்மார்களேநான்ஜானகியை விவாகம்பண்ணினநாள் முதற்கொண்டு அவதூறுக்குஇடமானேன் அதேதென்றால் ஒருவண்ணானுக்கிருந்தபுத்திகூட எனக்கில்லாமற்போயிற்று ஆனபடியினால் வனத்திற்கனுப்பிவிட்டேனென்றார் அதற்கு கவுசலை கைகேசி சுமித்திரையென்னு மூன்று தாய்மார்களுஞ் சொல்லுகிறார்கள்எனனையனே ஸ்ரீராமபத்திரா அந்தசீதாதேவியைக் கறித்துஉங்களையர்வந்து பழுதில்லையென்றுபகர்ந்து சீதை அக்கினியிறகுதித்தெழுந்தும் அக்கினிதேவன்குற்றமில்லை என்னவும் ஈஸ்பரர்வந்து சொல்லவும் பிரமதேவர்வந்துசொல்லியும் தேவரிஷிகள் வந்துகூறியும் உனக்கு நம்பிக்கையில்லாமல் போசசுதேமேலும் நமது குலகுருவாகிய வசிஷ்டர்வந்துபழுதில்லையென்றுசொல்லியிருக்க இப்போது வண்ணான் என்னதான் சொன்னான் விபரமாய்ச் சொல்லென்றுகேழ்க்க ராமா சொல்லுகிறார் ஒருநாள் நகர்சோதனைபோயிருந்தேன் அவ்விடத்தில்வண்ணானொருவன்பெண்சாதியுடன்சண்டைபண்ணிஅன்றான்முதல்மூன்றுநாளாய் அயல்வீடுபோயிருந்தாள் அந்ததருவாயில் அவன் தாய்வந்து அப்பா உன்பெண்சாதி மூன்றுநாளாய்அயல்வீடுபோயிருக்கிறாளே அவளைச்சமாதானப்படுத்தி அழைத்துக்கொண்டு வாவென்று சொல்ல அதுகேட்டுவண்ணான் சொன்னது ராமன்பெண்சாதியைராவணனெடுத்துக்கொண்டுபோய்பத்துமாதம்வைத்துக்கொண்டிருந்தான்.

பிற்பாடு ராமர்குரங்கு சேனைகளைக்கூட்டிக்கொண்டுபோய் ராவணனைக்கொன்று சீதையைமீட்டு வந்துபட்டாபிஷேகத்தில்வைத்து பட்டமேக்கரித்தாற்சி மாளுகிறார் அதுபோல்என்வீடுவிட்டு மூன்றுநாள் அயல்வீடுபோயிருப்பவளை அழைத்துவந்து வீட்டில்வைத்தேனேயானால் என்குலத்தார் என்வீட்டிற்சை நுழைக்கமாட்டார்கள் அந்தராமன் குலத்தைப்போல் என்குலத்தைப்பாரானேளன்வீட்டைவிட்டயல்வீடுபோயிருப்பவளை நானழைக்கமாட்டேனென்று தீர்ப்புகொடுத்தான் அந்தயீனகுலம்படைத்தவண்ணான்பழிக்கப்பெறெடுத்தேன் ஆனபடியினாலே ஜானகியை கெர்ப்பவதியென்றுபாராமல் வனத்திற்கனுப்பி விட்டேனென்றார் அதுகேட்டு தாய்மார்மூவரும் பதிலுத்தரவுசொல்லவாய்வராமல சற்றுநேரம்சும்மாயிருந்து பிரதிசொல்லுகிறார் ஐயோமகனே இந்த அயோத்திமாநகருக்கு என்ன அனர்த்தகாலம் வருகிறதோ தெரியாது அதனால் மகாலட்சுமியான சீதையம்மன்பிரிந்து வனத்திற்குப்போய்விட்டதும் அன்றுமுதல் தம்பிலட்சுமணன் உன்னைவிட்டுப்பிரிந்ததும் நீ கொலுமண்டபத்திற்குப் போகாமல்நின்றுவிட்டதும் என்னகாரணமோ லட்சுமியான சீதைவனம்போகவே அயோத்திமாநகரிலிருக்கப்பட்டகொலுமண்டபமும் ஆசாரமண்டபமும் சபாமண்டபமும்அரண்மனைவீடுகளும்மேடைமெத்தைகளும்நான்குவர்ணச்சாதிகளும் பாழடைந்துலட்சுமிகரமில்லாமல் மாதமும்மாரிபொழிப்பட்டமழையுமட்டிட்டுவிளைவுகளுமில்லாமல் குடிகள்மனம்நொந்திருக்கிறார்கள் மேலும்உங்கள்முன்னோராகிய பகீரதன் அரிசந்திரலோகிதன் இரணியன் இவர்களெல்லோரும் பட்டபுஸ்திரீவார்த்தைக்குப் பதில்வார்த்தைசொல்லாமல்சத்தியந்தவறாமல் சக்கரத்தினுடைய ஆக்கினைப்பிரகாரம் அதிசிரேஷ்டராய்புருஷன்சொல் பெண்சாதிதள்ளாமலும் பயபக்திபூஷ்ணமாகராஜநீதிமுறைமைதவறாமலகுடிகள்மனம்நோகாமல் திங்கள்மும்மாரிபொழிய அமோகமாய விளையகுடிகளுஞ்சாப்பிட்டு தபேட்சையாய் வாழ்ந்திருந்தார்கள்.

புலியும்எருதும் ஒருதுறையில்தண்ணீர்குடிக்
கும்ஆனையும்சிங்கமும் ஒன்றாய்க்கூடியிருக்கும் கீரி
யும்சர்ப்பமும் சேர்ந்துவிளையாடும் இவ்வாறாகச்
சக்கரத்தினுடைய ஆக்கினைப்படியாக நடக்கும் அஷ்
டலட்சுமிகளும் இந்த அயோத்தியில் வாசம்பண்
ணுவார்கள் இப்போது அயோத்தியாபுரிபட்டணத்
துலட்சுமியான சீதையம்மன்வனம்போனபடியினு
லே இன்னமென்ன அனர்த்தம் வந்துவிளையுமோ
தெரியவாராதென் மனஞ்சலித்து கண்ணீருதிர்த்து
அழுதுக்கொண்டு போய்விட்டார்கள் அப்போது
ஸ்ரீராமர்தாய்மார்சொன்னவிசேஷமெல்லாங் கே
ட்டு சீதையைத்தீர்க்கனுப்பிவிட்டதுயரம்ஒருபக்க
மும் லட்சுமணர் தன்னிடத்திற்கு வாராமலிருக்கி
றதுன்பமும் ஒருபக்கமும் தாய்மார்மூவர்கள்சலி
த்துக்கொண்டுபோனசங்கடம் ஒருபுறமும் பட்ட
ணமபாதவிக்கிறவேதனையொருபக்கமும் இப்படி
பலவாறாய் சஞ்சலத்திலாழ்ந்திருக்கையில் ஜனங்
களுக்கு சவுக்கியமும் முகத்தெளிவுமான லட்சு
மிகரம்போய்விட்டது மண்மாரிபொழிந்தது மே
டைமெத்தைகோபுரம்மண்டபம்அரண்மனைஆஸ்
தானங்கள்மாடமாளிகை கூடகோபுரங்கள் காற்
றுமழையாலே வடிபட்டிருந்து மனிதருடன் மனி
தர்மோதிக்கொள்ளவும் அவனைக்கொட்டாய்இடி
ந்தனமாடுகள்அதுதிரைகள்மிதமில்லாமல் விபரீத
காலம்போல்பிறந்துவிட்டவே அவைகளை நாய்நரி
கழுகுகூளிகள் பிடுங்கிதின்றுபசியாறின இப்படி
அயோத்தியாபுரிபட்டணமெங்கும்அழுகிறசத்தம்
பரதர்கேள்விப்பட்டு சத்துருக்கருடனேசொல்வ
திதென்ன விபரீதம்பிறந்தது நம்முடையதமைய
ன் நமக்குசெங்கோல் முத்திரை கொடுத்தநாள்
முதற்கொண்டு இதுவரைக்கும்மழைகளில்லாமல்
குடிகள்நொந்து மண்மாரிபொழிந்து பெருங்காற்
றடித்து மேடைமெத்தைகளிடிந்து ஆனைகுதிரை
பரிவாரங்கள்மாண்டு பிணநாற்றங்களெழும்பவீதி
களும்பாழடைந்துபோயிற்று நானென்ன குறை
செய்தேன் இது ஆரிட்டசாபம் என்ராச்சியத்துக்
குஅழிவுவந்ததுபோற்காண்கிறது யாரை அநீத
ஞ்செய்தேன் எவரைவதைத்தேன் நானென்னபா
வம்பண்ணினேன் நம்பிலட்சுமணருங்கொலுமண்
டபம் வருகிறதில்லைநமதுதமயனிடத்திற்குப்போ
கிறதில்லை நம்மிருவரையும் காட்டிக்கொடுத்துச்
சாமியும் அரண்மனைவிட்டு வெளியிற்புறப்படுகிற
தில்லையென்று பரதர்விசனப்பட்டமுகையில் சத்
துருக்கர் சொல்லுகிறார்.

வாரும் அன்றுவே நமதுதமயன்தேவிமகா
லட்சுமியானஜானகியம்மன் அயோத்தியைவிட்டு
என்றைக்கு வனம்போனாளோ அன்றேஅஷ்டலட்
சுமிகளுங்கூடநடந்தார்கள் அந்தலட்சுமியான சீ
தைமனம் நொந்து என்னசாபமிட்டாளோ அந்த
சாபமிட்டபடிவிளைந்ததுமுன்னாலே அந்த ராவணன்
ஏகசக்கிராதிபதியாய்ஆயிரத்தெட்டண்டம் ௨௨௪
புவனம் ஈரேழுபதினாலுலோகம் சத்தசாகரத்திற்
குராசனாகித் தேவேந்திரனைப்பிடித்து விலங்கிற்
போட்டு மகாரிஷிகளை தவத்தைக்கெடுத்தவெட்டா
மலும் சாம்பசிவன் கேட்டவரங்கொடுக்கவும்விஷ்
ணுதனவரிசெலுத்தவும் பிரமதேவர்பஞ்சாங்
கஞ்சொல்லவும் ரிஷிகள் தேவர்கள் மச்சம்பிடித்
துவந்துபோடவும் வருணன் சாணந்தெளிக்கவும்
முத்தப்பெருக்கவும் சூரியன்லங்கையைப்பார்த்து
பத்துயோசனை தூரம்விலகிப்போகவும் சந்திரன்
குளிர்ச்சியாய் லங்கைக்குள்வந்துகாயவும் ஒருவரு
நதனக்கெதிரியில்லாமல் யாவரும்வணங்கும்படி
யாய் வாழ்ந்தராவணன் ஜானகியம்மனைப்பன்னக
சாலையோடேயெடுத்துக்கொண்டுபோய் அசோக
வனத்தில் வைக்கவும் அப்போது அவளழுதகண்
ணீரினால் இலங்காபுரிபட்டணம் ஏழுநாள் தீப்பற்
றியெரியவும் ராவணன் கும்பகர்ணன் இந்திரசித்
து அதிகாயன் கும்பநிகும்பன்இவர்களுக்குண்டா
கிய பந்துவர்க்கங்களும் குமாரவர்க்கங்களும்சிநே
கித வர்க்கங்களும் ஆனை குதிரை சேனைபரிவாரங்
களும் அடியோடே போனார்கள் அப்படி யிருக்க
இப்போது சீதாலட்சுமி வனம்போகவே அவளழு
கிற கண்ணீர் விருதாவாகப்போகாமல் மண்மாரி
பொழிந்துமண்காற்றடித்து ஆனைகுதிரை, பரிவா
ரங்களுமாண்டது இன்னம் என்னமாய் முடியு
மோ யாதாய்வந்து விளையுமோ யாதாய்வந்து
விளையுமோ அன்றுவே யென்றான் சத்துருக்க
னானவன் அதுகேட்டுபரதாழ்வார்மிகவும் ஆயாச
மடைந்து என்னசெய்வேன் ராமாராமாவென்று
ராமஸ்துதிபண்ணி மனதைத்திடப்படுத்திக்கொ
ண்டிருக்கையில் சத்துருக்கர்பரதருடையவுத்தர
வினால் களஞ்சியத்தைத்திறந்து ஊரிலுள்ளகுடிக
ளுக்கும் ஏழைபரதேசிகளுக்கும் தானியங்களை
அபரியாய்வாரிகொடுத்து பட்டணங்காபராயில்
லாமல் துரைத்தனம் பண்ணிககொண்டிருந்ததை
ஸ்ரீராமமூர்த்தியும்கேட்டு மகாவிசாரசித்தரால் சீ
தையைப்பிரிந்ததுயரத்தினுல்ஒன்றுஞ்சொல்லாம
லிருந்து விட்டார் லட்சுமணரும் இதுகளெல்லா
ஞ்சீதாதேவியின் மகத்துவமென்று மனதிலெண்
ணிகொண்டு துக்கசாகரத்திலாழ்ந்திருந்தார் அது
கண்டு மந்திரியானசுமந்திரரும் ஸ்ரீராமமூர்த்திய
ண்டையில்வந்து நமஸ்கரித்து தசரதருக்குபட்ட
னாகிய சக்கரவர்த்திகளுடைய பிரதாபங்களைச்
சொல்லிக்கொண்டிருந்தார்.

அயோத்தியாபுரிபட்டணம் இவ்வாறாகயிருக்
கையில் வால்மீகமகாரிஷி ஆசிரமத்தில் சீதையம்
மன்யாதொரு குறைவிலலாமல் காயதேனுவால்
தனக்கு சகலவைபவமும் நடக்கச்சுகித்திருக்கை
யில் வால்மீகரானவர் தடாகத்திற்குச்சென்று ஸ்

நானஞ்செய்துநேமநிஷ்டைகள் முடித்துக்கொண்டுஎழுதர்ப்பைப் புல்லைக்கிள்ளி பூமியில்வைத்து மந்திராவாகனஞ்செய்து எழுபெண்களையுமழைத்தார் இந்த எழுமாதர்களும் தட்சணமெழுந்து வால்மீகர்ஆசிர்வாதஞ் செய்துசொல்லுகிறார் ஓவனத்துப் பெண்களே! நீங்கள்நமது ஆசிரமத்திலிருக்கும் மகாலட்சுமியாகிய சீதையம்மனுக்கு ஊழியஞ்செய்துக்கொண்டு இடைவிடாமல்காத்துக் கொண்டிருங்களென்று அனுப்பவே அம்மாதர்களெழுவரும் தட்சணம் அம்மனண்டையில் வணங்கிகைகூப்பிநின்றார்கள் அவர்களைஜானகியம்மன் பார்த்து நீங்கள்யாரென்றுகேட்க அப்பெண்கள் அம்மா நாங்கள் வால்மீகர் நிஷ்டையில் உற்பவித்தவர்கள் அவர் எங்களை உனக்கு ஊழியஞ்செய்யும்படியாய் அனுப்பிவைத்தார் எங்கள்பேர்வனத்துப்பெண்கள் திரேகமே உனதுபணிவிடையைச்செய்யஉமபத்தியாகையால்யாதுந் தடையில்லாமற் செய்துக்கொண்டால் அதனால்எங்களுக்குகீர்த்தியுண்டாய்நற்போடைவோமென்று சந்துஷ்டியோடு கூறிய அவ்வெழுவர்களால் சகலஊழியங்களுஞ் செய்யப்பெற்ற ஜானகியம்மன் வால்மீகரையழைத்து எனக்குப்பள்ளிக்கொள்ள நவரத்தினஊஞ்சல் நியமித்து தரச்சொல்லிக் கேட்க வால்மீகர் அவ்வாறேநவரத்தினவூஞ்சலில சீதையம்மனவள் சயனித்துக்கொள்ள வனத்துப்பெண்கள் எழுவரும் ஊஞ்சலாட்டுவது எப்படியிருந்ததென்றால்அயோத்தியாபுரியில் இலட்சகன்னியர்கள் நவரத்தினமான ஊஞ்சலில் திண்டுதலையணிபோட்டுசாய்ந்து பள்ளிகொள்ளத தாதியர்கள்தாலாட்ட மத்தளம் ருத்திரவீணைமுழங்கக் கட்டியக்காரர் கட்டியங்கூறநிர்த்தனப்புரிய இப்படிசகல ஆடம்பரங்களுடனிருக்கிறது போலுமிருந்ததாம் அதுவுமன்றி வண்டுகள் கீதம்பாடவும் அன்னங்கள் குயில்கள் மயில்கள் நாட்டியம்பண்ணவுமரிஷிகள் தபோதனர்கள் வந்து வணங்கவும் நினைத்தபோது காமதேனுவந்து பசியாற்றவும்சீதையம்மனுந்தன்னுடைய விசனமெல்லாந் தீர்ந்து அயோத்தியிலிருந்தசுகத்திலும் பதின்மடங்கதிகமாய சுகத்தையனுபவித்துக்கொண்டிருந்தாள்.



சீதையம்மன் புத்திரனைப்பெற்றது.

விருத்தம்.

செந்திருவாள்சீதை சிறுவனைப்பயின்றுளென்று
துந்துமிவாத்தியங்கள் துலங்கவெக்காளமூத
இந்திரமற்றுதேவ ரிஷிகளும்பார்த்திருக்க (லாம்
வந்துவால்மீகர்தானும் வழங்குவார்வேணதெல்

வசனம்.

இப்படியிருக்கிறநாளில் சீதையம்மனுக்குப் போதுகாலம்வந்து கெர்ப்பவேதனைப்படுகையில்ஆகாசவாணிபூமிதேவிசப்தகன்னிகளும் ரிஷிஸ்திரீகளும வந்துஜானகியம்மனுக்குகைகொடுத்தாதரிக்க பத்துமாதமுஞ்சென்று பூசநட்சத்திரம் கடகலக்கினத்தில் ஒருபுத்திரனைப்பெற்றாள் அப்புத்திரனெப்படியிருந்தானென்றால் நீலமேகரூபமும் அகண்டமார்பும நீண்டகரமும் ஆலிலைபோல்வயிறும் இளவாழைத்தண்டுபோல் தொடையும்அமர்ந்த பாதமும் ஸ்ரீராமருக்குநிகராய் வார்ப்பிடம்வார்த்துவைத்ததுபோலிருந்ததாம் மேலும் இப்பிள்ளையைப்பார்த்தால் ஸ்ரீராமனைப்பார்க்கவேண்டியதில்லையாம் அதுகண்டு சீதையம்மன் மகாசந்தோஷமாகி தன்மனதிலுள்ள விசனமெல்லாம் நீங்கிப் பிள்ளையைப்பார்த்து மனதிலடங்காத ஆனந்தசந்தோஷமாயிருந்தாள்.

அப்போது வால்மீகர் சகலருக்கும் கற்பூரதாம்பூலங்கொடுத்தனுப்பி பிள்ளைபிறந்தலக்கினம் நட்சத்திரம் வாரங்களுபார்த்து சந்தோஷமாகி இந்தப்பிள்ளைக்குடத்துவயதிற்குமேல் சிவன்விஷ்ணுபிர்மா தேவேந்திரன்தேவர்கள்ராட்சதாள்யாவரும் நிகரில்லையென்றுஜாதகமெழுதி சீதையம்மனுக்கு வாசித்துக்காண்பிக்க அம்மனுங் காதுகுளிரக்கேட்டு வால்மீகரைப் பார்த்துசொல்லுகிறாள் ஐயாவால்மீகரே பிள்ளையின் சாமார்த்தியஞ்சொன்னீரேயல்லாமல் பிள்ளைக்குவயது எவ்வளவென்றும் விவாகமெத்தனை வயதிலாகுமென்றும் பட்டாபிஷேகம் எவ்வளவுபிராயத்தில் நடக்குமென்றும் பிள்ளையானவன் தாய்தகப்பனுக்கு கருமஞ் செய்வானென்றுஞ் சொல்லாமற்போனீரே அதனை நன்றாய்த்தெரியும்படி சொல்லவேண்டுமென்று ஜானகியம்மன்கேட்டருளினள், அப்போது வால்மீகர் சொல்லுகிறார் வாருமம்மாசீதாய்இந்தநாள்முப்பதுஞ்சேர்ந்தால் ஒருமாதம்இப்படிப்பட்டமாதம் பனிரண்டானால் தேவர்களுக்கு ஒருவருஷம் இப்படிப்பட்ட வருஷம் எண்பதுகாலந்தான் அப்போது உன்பிள்ளைக்குவயது சரியாய்போகும் இப்பேர்ப்பட்டவருஷம் பத்தொன்பதானல் உமக்குகருமஞ்செய்வான் முப்பதானல் அ:சாட்சிசெய்வானென்றார் அதுகேட்டு ஜானகியம்மன் அளவில்லாத சந்தோஷமடைந்து சீர

ய்பூரித்து பிள்ளையை சீராட்டிவளர்த்துவருங் காலையில் வால்மீகரானவர் அம்மனைப்பார்த்து பிள்ளைபிறந்தமூன்றுநாள் கையால என்ன பேரிடலாமோசொல்லென்று கேழ்க்க ஜானகியம்மன் கூறுகின்றாள் வாருமையாவால்மீகரே இந்தப்பிள்ளைக்கு இருபதாமபாட்டனாகிய குசமகாராசா அவருடைய நாமதேயத்தை சாற்றுமென்று கூறவே இவனுஞ்சம்மதித்து இன்றையதினம் பன்னிரண்டு நாழிகைக்குமேல நாள்நன்றாயிருக்கின்றது இந்தச்சுபமுகூர்த்தத்தில் நாமகரணம்வைக்கவேண்டும் ஆகையால்வனத்துப்பெண்களையழைப்பீர் ஓமத்துக்குவேண்டியசந்தனபுஷ்பம் சமித்துமுதல்கருவித்துக்கொள்ளென்றுதிட்டஞ்செய்ய அவ்வாறே வனத்துப்பெண்களை சாமக்கிரிகைகள் கொண்டுவரும்படியனுப்பிவிட்டு ஜானகியம்மன் தன்பிள்ளையை வால்மீகர்பக்கத்தில்வளர்த்தி அவரைப்பார்த்துக்கொள்ளச்சொல்லித் தடாகத்திற்சென்றாள் அப்போதுவால்மீகரும் ஜெபத்திலிருந்துவிட்டார் அந்தச்சமயத்தில் பிள்ளைக்குபசியெடுத்து காகூவென்றழவே இதைத்தஞ் சீதையம்மன்கேட்டு ஓடிவந்துபார்க்கையில் வால்மீகர் கண்ணைமூடிக்கொண்டு ஜெபத்திலிருக்கவே அழுகிறபிள்ளையையெடுத்து இடுப்பில்வைத்துக்கொண்டு தடாகத்திற்குப்போய்விட்டாள்.

சற்றுநேரம் பொறுத்துவால்மீகர் ஜெபத்தைவிட்டு கண்ணைத்திறந்து பார்க்கையில் விளையாடிக்கொண்டிருந்தபிள்ளையைக் காணமையால் காடிபுலிசிங்கமெடுத்துவாயிற்போட்டுக்கொண்டதோ என்னமோயிதற்கென்னசெய்வோம்சீதையம்மன்தன்பிள்ளையெங்கே யென்றுகேட்டால் நாமென்னசொல்லுவோம் அம்மன்பிள்ளைமீதில அபேட்சையாயிருக்கறபடியினாலே நம்மைசபிப்பாளென்று சிக்கிரம்ஒருதர்ப்பை புல்லைகிள்ளி பூமியில்வைத்து மந்திரோபதேசஞ்செய்து சீதாலட்சுமியின் பிள்ளைபோலுருவுண்டாகி உயிர்கொடுத்து சிருஷ்டித்துவைத்தார் சீதையம்மனும்ஸ்நானம்பண்ணிபிள்ளையைத்தூக்கி இடுப்பில்வைத்து ஜலங்காட்டி ஒருகையிலெடுத்துக் கொண்டுபன்னசாலைக்குவந்து இடுப்பிலிருந்தபிள்ளையை தொட்டிலில்வளர்த்தி ஜலத்தைபூமியிலிறக்கி ஆசிரமம்வருகையில் வால்மீகர்சிருஷ்டித்த பிள்ளையானது காகூவென்றழும்போது அண்டையில்வந்துபார்த்த ஆச்சரியப்பட்டு ஐயாவால்மீகரே இதேது எனபிள்ளையைப்போலிருக்கிறதேசொல்லுமென்று ஜானகியம்மன்கேட்க வால்மீகரானவர் அம்மா அதுவும் உன்பிள்ளைதான் எடுத்துவளர்த்துக் கொள்ளென்று கூறவே சீதையம்மன் சந்தோஷமாயெடுத்துமார்போடணைத்து முத்தமிட்டுக்கொஞ்சிக் குலாவிக்கொண்டிருக்கையில் வனத்துப்பெண்கள் ஓமத்துக்குவேண்டிய சாமக்கிரியைகளனைத்தையுங்கொண்டு வந்தார்கள்.

வால்மீகரானவர் பன்னிரண்டு நாழிகைக்குமேல் ஓமம்வளர்த்தி விநாயகர்பூசைசெய்துநவக்கிரகப்பரிதி பண்ணிமுத்தபிள்ளைக்கு குசலனென்றும் இளையபிள்ளைக்கு லவனென்றும்நாமகரணமிட்டு இரண்டுபிள்ளைகளையுமெடுத்து ஆசிர்வாதஞ்செய்து சீதையம்மன் கையிற்கொடுத்தார் அம்மனுமவள் இரண்டுபிள்ளையும்வாங்கிமுத்தமிட்டுத்தன்னுடைய பன்னசாலையிற்கொண்டுபோய்வைத்துக்கொண்டு நாளொருமேனியும் பொழுதொருவண்ணமுமாய் வளர்த்துக்கொண்டுவருகையில் மழலைசொற்களை மாதாவான சீதையம்மன்கேட்டு மனமகிழ்ந்து இப்பிள்ளைகளுடனேதானுங்கொஞ்சிக்குலாவி இனியில்லாத ஆபரணங்களைப் பூட்டி அழகானதுஜொலிக்கும்படியாய் விழிக்குமைதீட்டி வாஞ்சையாகவசனித்து வருகிறநாளில்பிள்ளைக்கு ஐந்துவயதாகிக் கலவிக்குபருவகாலமென்று வால்மீகர் இவ்விரண்டு பிள்ளைகளையும் அழைத்து நல்லசுபமுகூர்த்தத்தில் ஆடையாபரணங்கள் அலங்கரித்துவிநாயகஸ்துதிசெய்து ஹரிஓம்நமோநாராயணாவென்கிற திவ்விய அக்ஷரத்தைக் சொல்லிக்கொடுத்தார் அவ்வாறேபிள்ளைகளும் வாசித்துவர ஆறும்வயதில்நாலுவேதம் ஆறுசாஸ்திரம்பதினெண்புராணம் சகலகலைக்கு காரியங்களுங்கற்று ஏழாம்வயதில் சிலம்பங்கற்று எட்டாம்பிராயத்தில் தனுர்வேத சாஸ்திரங்களெல்லாங்கற்பித்துக்கொடுத்து ஒன்பதாம் பிராயத்தில்காமவேக சரவேகமும்பார்த்து குசலவனுக்கு நிகாரியாப்பிரமாதிகள் முதல்யாவும் ஈடல்லவென்று அழைத்து வந்து சீதையம்மனிடத்தில் தனுர்வேதபரிட்சைகளுங்காணபித்தார் சீதையம்மனும் பார்த்து ராமர் லட்சுமணர் பரதசத்துருக்கருங் குசலவனுக்குநிகரிலலையென்று மனமகிழ் பிள்ளைகளுக்கு தானநந்தவித்தைகளுங்கற்பித்துக்கொடுத்தாள் பிள்ளைகளுந் தாஷ்டீகமாய்வளர்ந்து ஸ்ரீராமர் லட்சுமணரைப்போல இணைபிரியாமல் வால்மீகர்வனத்திற் காமதேனுவும் சகலவுபசாரனையும்பெற்றுக்கொண்டு அயோத்தியிலும் எண்மடங்குஜாஸதியாய்அந்தவனத்தில்திங்கள்மும்மாரிசொரிய காடுசெடிகள் தழைத்துசெழிக்கும்படியாய் ஜானகியம்மனுக்கு குசலவன் லவனென்றும் பிள்ளைகளிருவரும் சுகமாயிருந்தார்கள்.

வசிஷ்டர் அயோதிக்குவருதல்.

இப்படியிருக்குங்காலத்தில் வசிஷ்டரானவர்இதுசமயமறிந்து ஆ ஆ குடிகெட்டுப்போச்சுதென்று ஜடாயுமண்டலதாரியாய் கரத்திற்கமண்டலமேந்தி காவிவேஷ்டிதரித்து காலில் பாதக்குறடணிந்து சிலசிஷ்யக்கூட்டங்களுடனே அயோத்திக்

குப்புறப்பட்டு லட்சுமணரிடம்வரவேலட்சுமணரானவர் எழுந்திருந்து எதிர்சென்று அழைத்துவந்து அர்க்கியபாததியங்கொடுத்து பூசைசெய்து ஆசனமளித்து உட்காரவைத்துதோத்திரம்பண்ணிஇளையபெருமாளாகிய இலட்சுமணருக்குவதிஷ்டர் ஆசீர்வசித்துச்சொல்லுகின்றார் வாருய்இலட்சுமணரே இவ்விடத்திலநடந்தசமாச்சாரமென்ன அதைத்தெரியச் சொல்லென வதிஷ்டர்கேட்க லட்சுமணர்சொல்லுகிறார் கேளுமையாமுனிநாதனே ஸ்ரீராமபத்திரனவர் ஒருநாள் நகர்சோதனைக்குப் போயிருந்தார் அவ்விடத்திலவண்ணான் தன்பெண்சாதியையடித்தான் அவள்பிணங்கிமூன்றுநாளாய் அயல்வீடு போயிருக்கிறாள் அவளைச்சமாதானப்படுத்தியழைத்துவாவென்றுதாயானவளசொல்ல அதுகேட்டுவண்ணான்சொன்னது ஸ்ரீராமருடைய தேவியைராவணன் எடுத்துக்கொண்டுபோய்பத்துமாதமவைத்திருந்தான் அதன்பிறகுராமன்சேனையைக்கூட்டிக்கொண்டுபோய் ராவணன்முதல் ராட்சதர்களையெல்லாஞ்செயித்துச்சீதையை அயோத்திக்கு அழைத்துவந்துபட்டாபிஷேகந்தரிது ராச்சியம் ஆளுகிறான் அந்தராமன்குலத்தைப் போல் என்குலத்தைப்பாராதேவீடுவிட்டு மூன்றுநாளாய் அயல்வீடு போயிருப்பவளைநான் அழைத்து வீட்டிலவைப்பேனேயானால் என்குலத்தார் என்வீட்டில் கைநனைக்கமாட்டார்கள் என்குலத்திற்கு ஈனம்வந்துவிடும் அப்படியேவீடுவிட்டுஅயல்வீடுபோனவளை நான் அழைக்கிறதில்லையென்று தீர்ப்புக்கொடுத்தான்.

அச்சொல்லைக்கேட்ட என்தமையன்எங்களையழைத்து அதனைச்சொல்லிச் சீதையைக்காட்டில் விட்டுவரச்சொன்னார் அப்போது நாங்களறிந்த நீதி மார்க்கங்களைச் சொல்லியுங்கேளாமல் வாளையுருவி கழுத்தின்பேரில்வைத்துக்கொண்டு பிராணத்தியாகம்பண்ணிக்கொள்ளுவேனென்றார் நாங்கள்பயந்துஉனதுமனதின்படியேஜானகியைவனத்தில்விட்டு வருகிறோமென்றுசொன்னபிற்பாடு வாளையுறையிற்போட்டார் பின்பு ஜானகியம்மனை ரதத்திலேற்றிக்கொண்டுபோய்நான்கானகத்தில்விட்டுவந்து என்தமையனுக்குச்சமாச்சாரஞ்சொல்லி அன்றுமுதல்இன்றையவரைக்கும் என்தமையனிடம்நான் போகிறதில்லை அவரும் என்னைநினைக்கிறதில்லை பரதசத்துருக்கர் இராஜரீகம்பண்ணிக்கொண்டிருக்கிறார்கள் சீதாலட்சுமி இறந்தார்களோ இருக்கிறார்களோதெரியவாரதென்றுலட்சுமணர்கூற வதிஷ்டர்ஞானதிருஷ்டியினாற்பார்த்து சீதாலட்சுமி சுகமாகப்பிள்ளையைப்பெற்றுவால்மீகராசிரமத்தி லிருக்கிறார்களென்றுதெரிந்து வாரும்லட்சுமணரே சீதையை மிருகங்கள்பட்சித்துபோட்டதென்று உன்மனதில் நினையாதே மேல்வருஷம் பிள்ளையுந்தாயுமாய்வரப்போகிறார்கள் நீ விசனப்படவேண்டாமென்றார் லட்சுமணர்கேட்டுவிசனமெல்லாந்தீர்ந்துசந்தோஷமானார் அப்போதுவதிஷ்டர்வாராய் லட்சுமணரே உனதுதமையனவர் சீதைபிரிந்த சோகத்தினாலே உன்னையும் நினையாமல்கொலுமுகம்வாராமல இருக்கிறார் நீ இந்தவேளை ஸ்ரீராமரைப்போய்கண்டுசொலலென்றுஉத்தரவுகொடுத்து வசிஷடரானவர்தம்முடைய ஆசிரமமெழுந்தருளினார். அந்தட்சணமேலட்சுமணரானவர்தேரேறி ஸ்ரீராமரிருக்கும் ஆசாரவாசல்வந்துரதம்விட்டிறிங்கி அரண்மனைக்குள்நுழைந்துஸ்ரீராமரைக்கண்டுநமஸ்கரிக்கவேஸ்ரீராமருந்தம்பியைக்கண்டமாத்திரத்தில்தமதுயரத்தையெல்லாஞ்சொல்லியாற்றினார் பின்பு ஸ்ரீராமரும்லட்சுமணரும் சந்தோஷமாகப் போசனமருந்தி தாம்பூலமருந்து கொலுமுகம்வந்தார்கள் வரவேபரதசத்துருக்கரெழுந்து வணங்கினார்கள் சேனாதிபதி படைத்தலைவர்கள் கட்டியருங்கட்டியங்கூறினார்கள் அப்போது வதிஷ்டமகாமுனிவர் அச்சபைக்குச் சிலரிஷிகூட்டங்களுடன் எழுந்தருளிவந்தார் அது கண்டு ஸ்ரீராமர் தம்பிமாருடன் எழுந்திருந்துபயபக்திவிசுவாசத்துடன் பூசைசெய்து அழைத்துவந்துபொற்பீடம்வைத்து அதிலஎழுந்தருளச்செய்து அவரால் ஆசீர்வாதம் பெற்றபின்பு ராமமூர்த்திசொல்லுகின்றார்

ஐயா குலகுருவாகியவதிஷ்டரே சீதையைப் பாணிக்கிரகணம பண்ணினநாள்முதல்அவளாலுக்கிடமானேன்அதேதென்றால் சீதையைராவணன் எடுத்துப்போகவும் அதனால்அவனுடைய அண்ணன்தம்பிமாமன்மைத்துனன் பிள்ளைகள் பேரன்மார்பந்துவர்க்கம்சிநேகிதர் இரண்டாயிரம்வெள்ளம்ராட்சதப்படையுடன் அவனும் இராமபாணத்துக்கிரையானார்கள்மேலும் அவனுக்குச்சகாயமாகசதகண்டராவணனும் சகஸ்திரகண்டராவணனும்பதினாயிரம்வெள்ளம்ராட்சதர்களுடன்வந்தயுத்தஞ்செய்து அவர்களும்மாண்டார்கள் ராவணன் கும்பகானன்லேசானவர்களல்ல மூன்றுகோடி சிவாலிங்கம்வைத்து பூசைசெய்தவர்கள் அதுவுமன்றிமாந்தா மிஷ்டசளாயிருக்கபபட்ட அதிகாயன் கும்பநிகும்பன் பவாணனென்றுசொல்லப்பட்ட அரிபக்தர்களையுங்கொன்றேன் அந்தகோரத்தை வாயினாற்சொல்லக்கூடாது இந்தசீதையினாலேவெகு பாவத்தைக் கட்டிக்கொண்டேன் ஆதலால் என்னராச்சியம் என்னபிழைப்பு என்னசுகம் இனி இந்தராச்சியத்தைவேண்டேன் இதைதம்பிமார்வசத்தில்ஒப்பிவைத்து நான்பவுத்திரனாக மரவுரிதரித்துக்கொண்டு காட்டிற்குச்சென்று தவம்புரிந்து பாவத்தைப்போக் கடித்துக் கொள்ளவேண்டும் எனக்குச்செலவுதந்தருளுமென்றுஸ்ரீராமரானவர் கேட்க வதிஷ்டர்சொல்லுகிறார்.

ஓய்ராமசந்திரா காணுமக்கு இத்தனைவிதமாய்ப்பாவமில்லையென்று சொன்னாலுங்கேட்கவில்லையே ராசாக்களுக்குக்கடுந் துஷ்டநிக்கிரகசிஷ்டபரிபாலன ராசதர்மமென்று சொன்னாலும் உமக்குதெளிவும்பிறக்கவில்லை ஆசையால் நீர் அஸ்வமேதயாகம் பண்ணிதேவர்களுக்குதிருப்திசெய்து ராவண கும்பகர்ணனென்னும் ராட்சதர்களுக்கு மோட்சத்தைக்கொடுத்துஉம்முடைய பாவத்தைப்போக்கடித்துக் கொள்ளுமென்றுசொல்ல அதுகேட்டு இராமபத்திரர்சந்தோஷமாய்வசிஷ்டமகாமுனியைப்பார்த்துச்சொல்லுகிறார் ஓய்சுவாமிஅந்தயாகம்பண்ணுகிற விதமெப்படியெனக்குத்தெரியப்படச்சொல்லுமென்றுகேட்க வசிஷ்டரானவர் கூறுகின்றார் கேளும்ஸ்ரீராமபத்திரரே அஸ்வமேதயாகம்பண்ணுகிற விதமெப்படியென்றால் யாகத்திற்குரித்தான அஸ்வமானது சரீரம்வெண்மையாகவும் கழுத்துகுங்குமநிறமாகவும் வலதுகாதுமஞ்சள்நிறமாகவும் இடதுகாது பச்சைநிறமாகவும் உதடுபவழம்போலும் வயிறுகருப்புமாயிருக்கவேண்டும் இப்படிக்கொத்தலட்சணமுள்ள அஸ்வத்தைக்கொண்டுவந்து அதைஸ்நானஞ்செய்துவைத்துஉம்முடைய விரப்பிரதாப சவுரியத்தை ஒருபொற்பட்டயத்திலெழுதி அந்தப்பட்டயத்தை அஸ்வத்தினுடைய நெற்றியிற் கட்டி வருஷம்பூமிபிரதட்சணஞ் செய்துவைத்து அங்கங்கே அந்த அஸ்வத்தைப்பிடித்துக் கட்டியெதிர்த்தராஜாக்களையெல்லாம் செயம்பண்ணிகுதிரையை விடுவித்துக்கொண்டு யாககுண்டத்திலே அக்கினிதேவனைநிறுத்தி மந்திரபூர்வகத்துடனேஎசகியம்வளர்த்தி அந்தக்கினியத்தில் அஸ்வத்தை ஆவாகனம்பண்ணி பிறகு தேவர்களுக்கெல்லாம்அவிர்ப்பாகங் கொடுத்துயாவரும்அனேகுதிரை கூ-தேர்-எ-காலாள்-கூ-ஸ்திரீகள் ஒருபாரத்தங்கம் இதுவிதமாய்த்தானங்கொடுத்து அந்தஅஸ்வமேதபலனை அனுபவிக்கவேண்டும் அப்படியினாலே உன்னுடையதம்பியும் எக்கியவஸ்திரங்களைக் கட்டிக்கொண்டு யாகதீட்சையில் நிற்கவேண்டுமென்றுவசிஷ்டர்சொன்னார் அதுகேட்டு ராமமூர்த்திசிந்தாக்கிராந்தராய் விசாரப்பட்டு வசிஷ்டரைப்பார்த்து ஓய்சுவாமிசீதையைவனத்திற்கனுப்பிவிட்டேன் இத்தனைநாள் சீதையிறந்து போயிருப்பவள்போலகாண்கிறது என்னசெய்வேனென்று ராமர்கூற வசிஷ்டர் சொல்லுகிறார் வாரும்ராமச்சந்திரரே லட்சுமியில்லாவிட்டால் யாகத்திற்குப்பின்னம் வருமென்று அதுகேட்டுராமர் மிஞ்சிப்போனகாரியத்திற்குஎன்னசெய்யலாம் தங்கத்தினாற் சீதையைப்போலவார்ப்படம்வார்த்து யாகதீட்சை செய்யலாமோவென்றுகேட்க வசிஷ்டர்சொல்லுகிறார் வாரும்ராமரேபௌர்ணமி இன்னம் ஒருமாதமிருக்கின்றது இதற்குள் யாகத்திற்குவேண்டிய முஸ்தீப்புகளெல்லாஞ்சேகரித்து வைத்துக்கொள் சித்திராப்பருவம் நவமிவருகவுடனே என்னைநினைத்தால் நான் வருகிறேனென்று சொல்லிராமரிடத்தில் செலவுபெற்றுக்கொண்டுவசிஷ்டர்போய்விட்டார்.

இப்பால் ஸ்ரீராமமூர்த்தியானவர் தம்பிமார்களுடன்யோசனைசெய்து வாராய்தம்பிமார்களே நாமசெய்யப்போகிற அஸ்வமேதயாகத்திற்கு அனுமாரில்லாவிட்டால்முடியாது ஆகையால் அனுமாரை யழைத்துவரச்சொல்லுங்களென்று ஆக்கியாபிக்க அவ்வாறேசத்துருக்கனும் ஒருதூதனையழைத்துக் கிஷ்கிந்தாபுரிபட்டணஞ்சென்று அனுமாரைக்கண்டுசுவாமியாரழைத்துவரச் சொன்னாரென்றுசொல்லிச் சீக்கிரமாயழைத்துவா வென்றனுப்ப அந்ததூதனும் வாய்வேகமாய்ப்புறப்பட்டு பட்டணஞ் சென்று அனுமாரைக்கண்டுஐயாராம மூர்த்திதங்களை அழைத்துவரச் சொன்னாரென்று கூற அனுமாரானவர் ஸ்ரீராம மூர்த்தியென்று சொல்லக்கேட்கவே உடனேபுறப்பட்டு அதிவேகமாய் அயோத்தியாபுரிபட்டணம் வந்துராமபத்திரசுவாமியைக்கண்டு பயபக்திவிசுவாசத்துடன் நமஸ்கரித்தார் அப்படிநமஸ்கரித்த அனுமாரை வாழ்த்தி சுவாமிசொல்லுகிறார் ஓய்அனுமந்தா நாம்அஸ்வமேதயாகஞ் செய்யப்போகிறோம்ஆகையால் நாளையதினங்காலமேபுறப்பட்டு கிஷ்கிந்தைக்குப்போய்சுக்ரீபனுக்கும் அங்கனுக்கும்சொல்லி அவருடையசேனாசைனியங்களுடன்வரச்சொல்லி அப்பால் இலங்காபுரிபட்டணத்திற்குப்போய்விபீஷணனைக்கண்டுதண்டுதளத்துடன் வரும்படியாய் உத்திரவுசெய்து மந்திராபுரிபட்டணஞ் சென்று மகாமாயனைவரும்படியாய் அறிக்கையிட்டு இரத்தினபுரத்திற்குச்சென்றுசலவந்தனையுங்கண்டுசொல்லிசீக்கிரம்வாவென்று திருவாய்மலர்ந்தருளினார் அனுமாரும்மகாபாக்கியமென்று பரதலட்சுமணசத்துருக்கருடன்வசனித்துக்கொண்டிருக்கையில் சீதாலட்சுமிபோனசமாச்சாரங்கேட்டு அனுமாரானவர் மனஸ்தாபப்பட்டுக் கொண்டிருந்தார் சூரியனுமஸ்தமானான்.



அனுமார் அஸ்வமேதயாகத்தை

அரசர்களுக்கு அறிக்கையிடச்சொல்லல்.

மறுநாட்காலமே அனுமாரானவர் சந்தியானுஷ்டான செபதபங்களைச்செய்து போசனமுட்கொண்டுவாய்வேகமனோவேகமாய் புறப்பட்டுக் கிஷ்கிந்தாபுரிபட்டணத்திற்குவந்து சுக்கிரீபன் அங்கதனுக்கும் தண்டுகளத்துடன் அயோத்தியாபுரிக்குவரும்படியாய் அறிக்கைகூறி அவ்விடம்விட்டுப்புறப்பட்டு மயேந்திரகிரிபருவதம் வந்துசேர்ந்து அப்பருவதத்தின் உச்சியிலே ஓங்கி நிதானித்துக்கொண்டு ராமாவென்றவுடன் எழும்பிவிட்டார் அனுமார் இப்படிஎழும்பும்போது அந்தபர்வதமான துஐந்நூறுயோசனைதாழ்ந்து பிறதுபந்துபோல மேலெழும்பியதாம் அனுமார் உதைத்தெழும்பினது அப்பால் இரண்டுகரமுங்கூப்பிக்கொண்டு ராமபாணமவிட்டதுபோல் எங்குந்தங்காமல்வருகிறபோது பவழமால் கிரியைக்கண்டு சந்தோஷமடைந்து அவ்விடம்வந்துகுதித்தார் குதிக்கவே அந்தப்பர்வமானதுதொடங்கி ஐப்பதுயோசனைபூமியிற்றாழ்ந்து பர்வதங்குலுங்கி யதிரத்தலைப்பட்டது அதனால்லோகமெல்லாம் செவிடுபட்டு ஆகாயந்துலுங்கிற்றுலங்கையுந்திடுக்கிட்டது மேலுமந்தப்பர்வதத்திலிருந்தமிருகங்களெல்லாம் வலசைவாங்கிக்கொண்டது அப்பால் அப்பவழகிரியை விட்டுப்புறப்பட்டு அதிவேகமாய் இலங்கைக்குள்நுழைந்துசபாமண்டபத்தில்வரும்போது அனுமார்வருதலைக்கேள்விப்பட்டு விபீஷணர்மந்திரிபிரதானிகளுடனே எழுந்திருந்து எதிர்வந்து அனுமாரைத்தழுவி ஆலிங்கனம்பண்ணி அழைத்து ஆசனங்கொடுத்து வீற்றிருக்கச்செய்கையில் அனுமார்விபீஷணரைப்பார்த்து ஐயாவிபீஷணரே ராமமூர்த்தி அஸ்வமேதயாகமபண்ணப்போகிறார் ஆகையால்நீர்உமது சேனைசைனியங்களைக்கூட்டிக்கொண்டு சனுதியாய்போவென்றுவுத்தரவுசெய்து அசோகவனத்தை நோக்கித்திரும்பவே விபீஷணரானவர்பார்த்து ஐயாஅனுமாரே இவ்வளவு ஆயாசத்துடனும் இளைப்புடனும் எங்கேபோகிறீர்கள் இருங்கள் தாகசாந்திபண்ணும் போஜனமுட்கொள்ளும் அப்பாலெங்கேயாவது போமென்று கூறுகையில் அனுமார் சொல்லுகிறார்.

ஐயா விபீஷணரே? நானெங்கும்போக வில்லைபாதள அரைக்குப்போய் தேவசுந்தரனுக்குச் சொல்லிவிட்டு வருகிறேனென்றுபுகல அனுமாருக்கு விடைகொடுத்து விபீஷணரானவர் காலசித்தனைப்பார்த்து ஓய்காலசித்தனே ராமர்அஸ்வமேதயாகம் பண்ணப்போகுறும் நாம்போகவேணும் தண்டுகளங்களும் பயணப்படுத்தென்றி உத்தரவு செய்ய அவனும்அவ்வாறே நிட்டப்படுத்தினன் இப்பால் அனுமாரானவர் பாதாளஅரைக்குப்புகுந்து தேவசுந்திரனைக்கண்டு அஸ்வமேதயாகத்திற்கு அவனைசேனைசமுத்திரங்களுடன்வரச்செய்து அசோகவனத்தில்வந்து கோட்டைக்குள் நுழைந்துசபாமண்டபஞ்சேர்ந்தார் அகதநணத்தில் விபீஷணர் மந்திரிபிரதானிகளுக்கு விடைகொடுத்தனுப்பிவிட்டு அனுமாருடன்கூடி அரண்மனைக்குள் நுழைந்து மேமஷ்டைகள் செய்துபோசனமருந்தி கந்தகதகபகஸ்தூரிகளணிந்து கற்பூரதாம்பூலந்தின்று சற்றுநேரஞ் சந்தோஷவார்த்தைகளைப் பேசிக்கொண்டிருந்தார்கள்சூரியனுமஉதயமானர் அப்போது அனுமாரானவர்விபீஷணரிடத்திற்செலவு பெற்றுக்கொண்டு லங்காபுரிபட்டணத்தின் கோவில் வாசற்படியால்நுழைந்துவெள்ளியங்கிரிபர்வதத்தின் உச்சியிலேறிஇருகரத்தையுங் கூப்பிஒக்கியுத்தரனித்துராமாவென்றவுடனே எழும்பிசண்டமாருதம் வீசியதுபோல் எங்குந்தங்காமல் ஆறுசமுத்திரந் தாண்டி அப்பால்சமுத்திரக்கரைஓரமாயிருக்கப்பட்ட சுவேலைபர்வதத்தில்வந்துகுதித்தார் குதிக்கவே அச்சபர்வதமானது நெக்குவிட்டதில்வாழும் பட்சிமிருகங்களும் கசிந்துபிராணனைவிட்டதுக ளதுவுமன்றிச் சக்ரபுரிபட்டணமுழுதுமதிர்ந்து அதிலுள்ள சீவராசிகளுந் திடுக்கிட்டு பிதிர்கலங்கினர்கள் அக்காலையில்அனுமாரும்சுவேலைபர்வதத்தைவிட்டு தாழவிறங்கிச் சக்ராபுரிபட்டணத்திலுள்நுழைந்து வருகிறதைக் கேள்விப்பட்டமகாமாயனனவன் மந்திரிபிரதானிகளுடன் எதிர்கொண்டுவந்தழைத்ததுபோல பொற்பீடமளித்துஉட்காரச்செய்துசொல்லுகிறர் ஐயா அனுமாரே சுவாமி லட்சுமணர்பரதர்சத்துருக்கர் சுகமோவென்றுகேழ்க்க அனுமார்கூறுகிறார் ஓய் மகாமாயனே சுவாமிஅவர்தம்பிமார்களும் உமது அனுக்கிரகத்தினலே சுகமாயிருக்கிறர்கள் குறைவில்லைஇப்போது ராமபத்திரசுவாமியானவர் அஸ்வமேதயாகஞ் செய்யப்போகிறர் அதுகாரியமாக உம்மிடத்திற்கு வந்தோம் நீஜனுதியாய்தண்டுகளத்தைக் கொண்டு அயோத்திக்குப்போய்ச் சேருமென்றுகூறி அன்றையதினம் சகலமரியாதைகளுடன் அங்கிருந்து மறுநாள்காலைமகாமாயனிடத்திற் செலவுபெற்றுக்கொண்டு சுவேலைபர்வதத்துச்சியிலேறி உத்தாணித்து ராமாவென்றெழும்பினர்.

அதெப்படியிருந்ததென்றால் கருடனுரகசர்ப்பத்தை எவ்வாறுரைந்துபோகுமோ அவ்வாறளங்குப்பிகரில்லாமல் சமுத்திரமத்தியிலிருக்கப்பட்ட

பலம்வான் பலியிலே வந்தசேனித்தார் அந்தபர்வத
தன்னுண்ணி பூமிகச்சு ருய-யோசனை தாழ்ந்து
போய்விட்டதாம் அப்போதனுமாரானவர் பர்வ
தத்தைவிட்டிறங்கி ரத்தினபுரம்வருதலைத்து து
தவர்களாற் கேள்விப்பட்ட சலவசந்தனனவன்
மந்திரி பிரதானிகளுடன் எதிர்கொண்டுவந்தழை
த்துப்போய்சோடசவுபசாரத்துடன் ஆசனங்கொ
டுத்துவீற்றிருக்கச்செய்ய அநுமார்சொல்லுகிறார்.

ஓய் சலவசந்தனே கேளும் இராமபத்திரசுவா
மியானவர் அஸ்வமேதயாகஞ் செய்யப்போகிறார்
அதுகாரியத்திற்கு உன்னுடைய தண்டுகளத்தைக்
கூட்டிக்கொண்டு சகாயமாய்வரச்சொன்னார்போ
வென்று சொல்லச்சலவசந்தன் மகாபாக்கியமெ
ன்று இராமருடைய க்ஷேமங்களைக்குறித்து இரு
வரும்பேசிக்கொண்டிருக்கையில சூரியனும அஸ்
தமானார் அப்போது சலவசந்தன் மந்திரிபிரதா
னிகளுடன் படைத்தலைவர்களுக்குவிடைகொடுத்
தனுப்பிவிட்டு அநுமாரை அழைத்துக்கொண்டு
அரண்மனைக்குச்சென்று நேமநிஷ்டைகளைச்செய்
து பண்டுபலாதிகளுடன் அன்னம்புசித்து சந்த
கதம்ப கஸ்தூரிகளை மெய்யிலணிந்து தாம்பூலம்
போட்டுக்கொண்டு ஆடல்பாடலில் சங்கீதவினோ
தகேளிக்கைகளைப் பார்த்திருந்தார்கள்,



சுக்ரீபர் அயோத்திக்கு வருதல்.

இப்படியிருக்க கிஷ்கிந்தாபுரி பட்டணத்தில்
சுக்கிரீபனானவன் அநுமார்வந்து சொன்னவுடனே
நிருபவாகதரங்களுக்கு ஓலையெழுதி அனுப்பிவை
க்க அந்தப்படியே அவர்களும் ஓலையைப்பார்த்தமா
ழிலைகு இருபத்துநாலுபடைத்தலைவர்களும் எழு
பத்திரண்டு வெள்ளஞ்சேனைகளும கிஷ்கிந்தாபுரி
பட்டணம் வந்துசேர்ந்தார்கள் அப்போது சுக்ரீ
பனானவன் நீலனையழைத்து தண்டுசேனைவசப்படுத்
தென்று உத்தாரவுகொடுத்தார் அந்தபடியே நீலன்
வானரசேனையெல்லாம் பவுஞ்சிட்டு நித்திரன்

அக்காலையிலசுக்ரீபனும் அங்கதனும்பட்டணத்தை
மந்திரி வசம்ஒப்பிவைத்து கிரீடமணிந்து ஆடை
யாபரணந்தரித்து பட்டாவையிடுப்பிற்கட்டி அவ
ரவர் ஸ்திரீகளுடனே வாகனம்பல்லக்குதண்டிகை
யிலேறவும்தாரையானவள்மூடுபல்லக்கிலேறி ஆயி
ரங் கன்னியர்கள்புடை சூழவும்ஜெயபேரியானது
தாம்தாமென்று முழங்கவும்கொடிச்சீலைபறக்கவும்
சேனாசைனியங்களுடன்புறப்பட்டுவருகையில்கரு
ந்தூளானது எழும்பவுமகாடுமலைகள்கிடுகிடுடென்
று அதிரவும் அட்டகாசஞ்செய்து அடிபெயர்த்து
வைக்கிறபோது பூமிதேவியலற ஆதிசேஷன் புஜ
மாற்ற சேனைகளுடன் புறப்பட்டான்.



விபீஷணர் அயோத்திக்குவருதல்

இவர்களிப்படி யிருக்கையில் இலங்கையில்
விபீஷணர் நீலாட்சதன்முதலான தூதுவர்களைய
னுப்பிபுஷ்பவிமானத்தை யெடுத்துவரச்சொன்னா
ர்அப்படியேகொண்டுவந்தார்கள் அத்தருணத்தில்
பத்து வெள்ளயானையும்இருபதுவெள்ளந்தேரும்
நாற்பது வெள்ளம்புரவியும் எண்பதுவெள்ளங்கா
லாளகளும் இன்னம்பலம்பொருந்திய ராட்சதர்க
ளும் அறுபத்தையாயிரங்கோரபடைத் தலைவர்க
ளும் ஏகோபித்து புட்பகவிமானத்திலேறினார்கள்
விபீஷணரும் சனமாவிகையுடனே சிங்காரித்துக்
கொண்டு லட்சங்கன்னியர்கள் புடைசூழத் தன்
மகளானதிரிசடையும் பாட்டனான மாலியவானை
யும் ஐயாயிரங்கோடிராசமன்னரையும் காலசித்த
னையுங்கூட்டிக்கொண்டு புஷ்பகவிமானத்திலேறி
லங்காபுரியின் அரசைமந்திரிவசத்தி லொப்பிவை
த்து விமானத்திற்கு மந்திரோபதேசஞ்செய்யவே
கேசரிமார்க்க மெழும்பிவிமானமானது லவணசமு
த்திரத்தாண்டி ஆகாயமார்க்கமாகவந்து தண்ட
காரணிய வனஞ்சேர்ந்தது.

தேவசுந்திரன் அயோத்திக்குவருதல்.

இப்பால் தேவசுந்திரனென்பவன் படைத்தலைவனை சுந்தரராட்சதனைப்பார்த்து ஓய்சுந்தரராட்சதனே ஸ்ரீராமர் அஸ்வமேதயாகஞ் செய்யப் போகிறாராம் நாமும் போகவேண்டும் நமமுடைய பாளையத்தைப் பயணப்படுத்தென்றுசொல்லி தன்னுடைய அரண்மனைசென்றான் பின்புசுந்தரராட்சதன் தண்டுகளை வெளிப்படுத்தினான் அதெப்படி என்றால் கன்னமதம் கரடமதம் கபோலமதமென்றுஞ்சொல்லப்பட்ட யானைகளானது கன்னங்கரேலென்று கருமலை ருவத்திற்கு கால் கை முளைத்துவந்ததுபோல் யானைகள்பேரில் சவுடாலும் அம்பாரிகளும்வைத்து இராசமன்னரும் ரணவரிசைபூண்டு முப்பத்திரண்டுவித ஆயுதங்களும்எடுத்துக்கொண்டு கையிற்றநுசேந்தி யானையின்பேரி லேறிக்கொண்டு புறப்பட்டார்கள் அதெவ்வளவென்றால் மூன்றுவெள்ளம் யானைகளாம் அதின்பின்னே ரதங்களானது அச்சுயெண்ணையிட்டு மச்சுக்குவர்ணந்தீர்த்து சிம்படால் சிம்பதுஜம்பறக்க நான்குகுதிரைகள் பூட்டியும் இழுக்கப்பட்ட ரதத்தின்மீது ராஜமன்னரும் முப்பத்திரண்டாயுதமுஸ்திப்புகளுடனே தனுசைக்கையிற் பிடித்துக்கொண்டு புறப்பட்டார்கள்.

அதெவ்வளவென்றால் ஒருவெள்ளம் ரதங்களால் அதன் பின்னாற்சூரியன் ரதத்திற்கட்டியிழுக்கப்பட்ட புரவிகளுக்குச்சமானமான புரவிகளின்மீது கல்லணைவைத்துக்கொண்டு கத்திகேடயம்பிடித்து யேறி புறப்பட்டார்கள் அதெவ்வளவென்றால் பன்னிரண்டு வெள்ளங் குதிரைகளாம் அதன்பின் காலபிலமான ராட்சதாள் புறப்பட்டார்கள் அவர்களெப்படிப்பட்ட பலவான்களென்றால் ஒவ்வொரு ராட்சதனுக்கு இந்திரலோகமும் போதாது அப்பேர்ப்பட்ட பலசாலிகளான ராட்சதாள் அவர்கள்கையில் ஈட்டி எறியீட்டி குந்தம்வாள் சூலம்சத்தி சக்கரம்வேல் இடியீட்டி முதலியதும்பிடித்துத் தயாரானார்கள் அப்போது தேவேந்திரனும் கிரீடம்பூண்டு ஆடையாபரணந்தரித்து முதுகில் அம்புறுப்பொதியுங்கட்டி பட்டணத்தை மந்திரிவசங்கொடுத்து நானாவித வாத்தியமுழக்கத்துடனும் சேனைகளுடனும் யானைகுதிரைகளுடனும் ரதமேறிப்புறப்பட்டதெப்படியென்றால ஈசலானது பெரும்போக்கு புறப்பட்டாலெப்படியோ அப்படியாக அசோகவனத்துவழியாய் யாவரும்வந்து லவணசமுத்திரந்தாண்டி யானைகள்முன்னுந்தேவர்கள்பின்னும் குதிரைகளும் அதன்பின் கால்பலங்களும் அப்படியாகப் புறப்பட்டு மைதானம்பார்த்து பவுஞ்சிட்டுக் கூடாரங்களடித்து தண்டிறங்கினார்கள் அப்போது சூரியன் அஸ்தமானான்.

மகாமாயன் அயோத்திக்குவருதல்.

அப்போது மகாமாயனென்பவன் வாயுகோபனையழைத்து சொல்லுகிறான் ஓவாயுகோபா ஸ்ரீராமர் அஸ்வமேதயாகஞ் செய்யப்போகிறாரும் நாமும்போகவேண்டும் நம்முடைய சேனைகளை பிரயாணப்படுத்தென்று உத்தரவுசெய்து அரண்மனைக்குப் போனான் வாயுகோபனுஞ் சேனைகளை வெளிப்படுத்தினான் அதெப்படியென்றால் கன்னமதம் கடமதம் கபோலமதம்மென்றுஞ் சொல்லப்பட்ட யானைகளானது கன்னங்கரேலென்று கருமையாநின்ற யானைகள்பேரிலே அம்பாரி சவுடால்கள்வைத்து யானைகள்கையில் இரும்பு சங்கிலியைக்கொடுத்து இராசமன்னரும் ஆடையாபரணந்தரித்து ரணவரிசைகள்பூண்டு கையில்வில்லேந்தி முப்பத்திரண்டு ஆயுதங்களும்பிடித்து யானையின்பேரிலேறிப் புறப்பட்டார் அதெவ்வளவென்றால் பதினேழுவெள்ளமாம் அதன்பின் ரதங்களின் அச்சுக்கு எண்ணையிட்டு மச்சுக்கு வர்ணந்தீர்த்து குடைகொடிச் சிலைகட்டி டால்துபசம் பறக்க நாலுகுதிரைகள்பூட்டியும் எட்டுகுதிரைகள் பூட்டியும் பிசாசி பூதங்களால் இழுக்கப்பட்ட ரதத்திலே ராசமன்னர்கள் கையில் மகமேருவைப்போல வில்லைப்பிடித்து புறப்பட்டார்கள் அதெவ்வளவென்றால் முப்பத் . நான்கு வெள்ளமாம் அதன்பின்னாற் சூரியனிரதத்திற்கட்டியிராநின்ற புரவிகளுக்குச் சமானமான குதிரைகள் பேரில் கல்லணைவைத்து இருப்புச்சீராதரித்து கத்திகேடயமெடுத்து ஏறி புறப்பட்டார்கள் அதெவ்வளவென்றால் அறுபத்தெட்டு வெள்ளமாம் அதின்பின் கால்பிலமான ராட்சதாள் ஈட்டி எறியீட்டி கரிகைவாங்கு வளை தடிசக்கரம் இருப்புலக்கை கண்டகோடாலி சூலம் வேல்கத்தி இப்படிசொல்லப்பட்ட முப்பத்திரண்டாயுதங்களும் கட்டிக்கொண்டுபுறப்பட்டார்கள் அவர்களோ அண்டத்தை கையிற்பிடித்து பந்தாடபபட்டவர்கள் வெகுயுத்தங்களிற் கைதனடவர்கள் .அவர்களுக்கு திரிமூர்த்திகளுமீடல்ல இப்போது அஸ்வமேதயாக யுத்தம்வந்ததென்றுகேட்டு மகாசந்தோஷத்துடனே அட்டகாசங்களும் வீரப்பிரதாபங்களும் பேசிக்கொண்டு பறப்பட்டார்கள் அதெவ்வளவென்றால் நூற்றுமுப்பத்தாறுவெள்ளமாம் அந்தருணத்தில் மகாமாயனென்பவன்கிரீடம்பூண்டு வச்சிரகவசமணிந்து ஆடையாபரணந்தரித்து மந்திரிபிரதானிகள்சூழ தன்னுடைய தேவிகளையும் அழைத்துக் கொண்டு ரதத்தில்வந்தேறினான் அவன் ஏறவே ஜயபேரிவெண்கலபேரி அடித்தார்கள் எக்காளைசின்னம் தவண்டைமல்லாரி குடைமுழா தம்பட்டம்மத்தளம் வருத்திரவீணை தாம்தாமென்று முழங்கச்செய்தார்கள் அப்போது நூற்றுமுப்பத்தினாலாயிரங் கோடி படைத்தலைவரும் வாயுகோபனும்ரதமேறி மகரகொடி பிடித்து புறப்பட்டவர் ள் இப்படியாக சகல அ

டம்பார்த்தவுடனே ஆகாயமார்க்கத்திலெழும்பி ஆறுசமுத்திரந்தாண்டி லவணசமுத்திரக்கரையோரமாய் தண்டுவிட்டிறங்கினார்கள்.



சலவசந்தன் அயோத்திக்கு வருதல்.

இவ்விடத்தில் இப்படியிருக்க அனுமாரானவர் போனபிற்பாடு சலவசந்தனென்பவன் சேனாதிபதியான பஞ்சகண்டனையழைத்து ஓய் பஞ்சகண்டனே ஆதிபராபரஸ்வரூபராக விளங்கப்பட்ட ராமமூர்த்தி அஸ்வமேதயாகம் பண்ணப்போறாராம் ஆனபடியினால் நாம் போகவேண்டும் நம்முடைய தண்டுதளங்களைப் பயணப்படுத்தென்று திட்டப்படுத்தினான் தன்னரண்மனைக்குச்சென்றான் அப்போது பஞ்சகண்டனானவன் தண்டைவெளிப்படுத்தி யானையின் மீது அம்பாரிவைத்து ராசமன்னர்கள் முப்பத்திரண்டு ஆயுதங்களுங்கொண்டு கையில்வில்லெடுத்து யானையின் மீதேறிப் புறப்பட்டார்கள் அதெவ்வளவென்றால் பதின்மூன்றுவெள்ளமாம் அதன்பின் ரதங்களானது குடைகொடிச்சிலைகளால் அலங்கரித்து டால்துவஜம்பறக்க அநேகங்குதிரைகள் பூட்டியும் இருபத்தாறுவெள்ளம் ரதம்புறப்பட்டதாம் வாய்வேகத்திலுமிஞ்சின வேகமாயிருக்கப்பட்ட குதிரையின் மீதேறிப் புறப்பட்டார்கள் அதெவ்வளவென்றால் ஐந்துவெள்ளமாம் அதன்பின்னும் காலபிலமான ராட்சதாள் ஈட்டி எரிவீட்டி சரிகை வாங்குவளைதடி சக்கரம்குந்தம்பாசம் இருப்புலக்கை தண்டாயுதம் சத்திவேடயம் என்று சொல்லப்பட்ட முப்பத்திரண்டு ஆயுதங்களுங் கட்டிக்கொண்டு புறப்பட்டார்கள் சலவசந்தனும் இரத்தினகிரீடம் பூண்டு அடையாபரணங்கள் தரித்துப் பட்டணத்தை மந்திரிவசப்படுத்தி ஸ்திரீபுத்ராளும் இரதத்திலேறியாவரையுங் கட்டிக்கொண்டு ஜெயபேரிகைபேரியடித்து புறப்படுகையில் அண்டகடாகங்கிடுகிடென்று நடுக்கத்தக்கதாக கோட்டையைவிட்டு சமுத்திரக்கரைவந்து யானைதேர் பரிகளுடன் ஆகாயத்திலெழும்பி ஆறுசமுத்திரந் தாண்டிவருகையில் ஏழாவதுசமுத்திரத்தில் யானைகளானது நீந்திநடப்பதால் அச்சமுத்திரம் சோரகச்சுழம்பியது அக்கரையேறிகூடாரம்போட்டிறங்கினார்கள் சூரியனும் அஸ்தமானன் அப்போதவ்விடத்தில் தேவசந்தான் பாளையமும் ஒன்றாய்க்கூடிக்கொண்டு சமுத்திரக்கரையில நூறுயோசனை விஸ்தாரம் பாளையமிறங்கி ஒருவர்க்கொருவர் வினவி சந்தோஷ வார்த்தைகளைப் பேசிக்கொண்டிருந்தார்கள் இப்படியிருக்கையிற் பொழுதுவிடிந்து சூரியபகவானும் உதயகிரிபர்வதத்தில் உதயமாகவே மூன்றுதண்டுகளும் ஒன்றாய்ச்சேர்ந்து நடக்கிறபோது பூமியானது கிடுகிடென்றுநடுங்கியது அஷ்டதிக்குப் பாலகர் பயப்பட்டார்கள் அஷ்டகுலபர்வதங்களும் நடுக்கமுற்றது அண்டகடாகங்கள் குலுங்கிற்று தேவர்கள் திகிற்கொண்டார்கள் காட்டில்வாழுங் கரடி புலிசிங்கம் யாளியென்று சொல்லுமிருகங்கள் பாரிவேட்டை விட்டாற்போல காட்டைவிட்டு ஓடிப்போச்சுதுகள் இப்படிசகலரும் நடுக்கும்படியாகதண்டகாரணியவனம்வந்துவிட்டது தண்டுவருகிறதற்கு இடமில்லாமல் காடுசெடிமலை குன்றுகள்சகலமும் வெட்டிநிரவி பத்துயோசனை விஸ்தீரணம் அகலமாக வழியுண்டாக்கி கங்குகரைகாணாமல் சேனைகளானது வருகிறதை தண்டகாவனத்து ரிஷிகளெல்லாம் கண்டு தண்டுகமண்டலம ஆசனங்களைச்சுருட்டிக்கொண்டு மற்றொரு வனம் ஓடினார்கள்

இப்படியிருக்க அனுமாரானவர் கந்தாபுரிபட்டணம்போய் தன்னுடையபாளையமெல்லாம் தயார்படுத்தி தன்பிள்ளையான மட்சயந்த அனுமானை அயோத்தியாபுரி பட்டணம்வர வுத்தரவுசெய்து கங்கைக்கரைக்குவந்து குகனை தன்னுடனேவரசொல்லிஆக்கியாபித்து குகனிடத்திற் செலவுபெற்றுக்கொண்டு அனுமார் அயோத்தியாபுரிபட்டணம்வந்து ஸ்ரீராமரை கண்டு நமஸ்கரித்து சுவாமி தேவரீர் உத்தரவுசெய்தபிரகாரம் சமுத்திரந்தாண்டி சகலரையுஞ் சேனைகளுடன்வரும்படி உத்தரவுசெய்துவந்தேன் அவர்களுமிப்போதின்னஞ்சற்றுநாழிகைக்குள்வரபோகிறார்களென்றுஅனுமார்சொல்லராமமூர்த்தியும் அனுமாருடையவேகத்திற்குமெச்சிராசகாரியங்களைகுறித்துபேசிகொண்டிருக்கையில் தண்டுகளானதுகோவென்றுபிரசண்டவாய்வுசப்திப்பதுபோல கருந்தூள்செந்தூளெழும்பக் கண்ணுக்கெட்டாததூரம் பரவிகொண்டுவருகிறபோது பட்டணத்துஜெனங்களானது கண்டுவெலவெலத்தோடிபோகிறவர்கள்சொல்லிகொண்

டுபோகிறார்களென்றால் நமதுஅயோத்தியாபுரிபட்டணத்திற்குஎன்னமோஅழிவுகாலஞ்சம்பவித்ததுபோலிருக்கின்றது சும்மாயிருக்கிறராட்சதர்களையெல்லாங்கூட்டிக்கொண்டுபோய் ராட்சதர்சேனையெல்லாங்கொன்றுபோட்டான் அவர்கள் கண்குத்திப்பாம்புபோலச்சமயம்பார்த்து வந்துவிட்டார்கள் ஓடிப்போவோமென்பாரும் ஒளிப்போமென்பாரும் ஐயோ சீதாலட்சுமி என்றுவனம்போனாளோ அன்றேபோய்விட்டது ராமனவாழ்வென்பாரும் சிலஸ்திரீகள் அடியோடேயிப்படி அழிவுகாலம் வருகிறதற்குத்தானோ முன்னமேமண்மாரிபொழிந்து பெருகாற்றடித்தது இனியிந்தப்பட்டணத்திலிருக்கப்போகாதென்றுஒருத்திக்கொருத்தி சொல்லிக்கொள்ளவும் அடியம்மா ராமர் என்னமோ அஸ்வமேதயாகம் பண்ணப்போகிறார் அதற்குச்சேனை வருகிறதென்பாரும் அடிபோடி பயித்தியக்காரி சீதையில்லாமல் அஸ்வமேதயாகம் பண்ணினால் உடனே ஈனம்வரு மென்பாரும் அடிதங்கைஇன்னம்ஒருநாழிகைக்குள்எல்லாந்தெரியவருமென்பாரும் சிலமாதர்கள் அடிதங்கையே ராமன் என்னகையிலாகாதவரோ அதவா தம்பிலட்சுமணருக்கு இதுவெல்லாம் ஒருநிகராவென்பாரும் அடிபோ பரதர்என்னலேசானவரோசத்துருக்கரென்னஅற்பமானவரோ அவர்களுக்கு ஆர்தான்யீடென்பாரும் அடியம்மா அனுமாரென்னப்பட்ட ஒருகுரங்குஅவர்களிடத்திலிருக்கிறமட்டும்அவர்களுக்கென்னசங்கையிருக்கிறதெனபாரும் அம்மா சீதையில்லாமல் யாகம்நிறைவேற மாட்டாதென்பாரும்அடிதங்கைராமர்லட்சுமணர்சிறுபோதில் தாய்சொற்றள்ளாமல் வனத்திற்குப்போய் வனத்துரிஷிகளுக்கு அபயஸ்தங்கள் கொடுத்துராவணராட்சசரையெல்லாம்கொன்று விபீஷணர்க்குப்பட்டங்கட்டி பேர்பெற்றஎன்பாரும் சில மாதர்கள் அடிமசசி இப்போதும் அந்தத்தளங்கொண்டுதான்யாகம்பண்ணி ராசக்களையெல்லாஞ்செயித்து ஒருகுடையின் கிழாகக் காத்திருக்கிறாரென்பாரும் இப்படிப்பட்டணமாதியந்தமுஞ்சொல்லிக்கொண்டிருக்கச்சே ராமலட்சுமணருங்கேட்டு அனுமாரைப்பார்த்து சொல்லுகிறார்.

ஒப் அனுமாரே இவ்வளவு ஆடம்பரத்துடன் உலகநடுங்கும்படியாய் வருகிறவன்யாரென்றுகேட்க அனுமாரானவர் சபாமண்டபம்விட்டுவெளியேவந்து விஸ்வரூபங்கொண்டு எட்டிப்பார்த்தார் அப்போது ஆர் வருகிறாரென்றால் முன்னே சுக்ரீபனும் அங்கதனுமதங்கள் தண்டுடனே வருகிறதைக்கண்டு விஸ்வரூபத்தை விட்டுசபாமண்டபம்வந்துசுவாமியைநமஸ்கரித்து சொல்லுகிறார்.

ஓய்நாதனே கிருபைக்கடலே சுக்ரீபனும் அங்கதனும்வருகிறார்களென்றார் அதுகேட்டுராமபத்திரசுவாமி சந்தோஷமாய் பரதரையுஞ் சுமந்திரனையும் பார்த்துச்சொல்லுகிறார் பரதாழ்வாரே மந்திரிசுமந்திரரே நீங்கள்சிலதுசேனைகளைகூட்டிக்கொண்டுபோய் சுக்ரிபராசனையும் அங்கதனையுந்தழுவி அழைத்துக்கொண்டுவாருங்களென்றுஉத்திரவுபண்ணினார் அந்தப்படியே பரதாழ்வாருஞ்சுமந்திரரும் எழுந்துசேனைகளைகூட்டிக்கொண்டு டமாரபேரிகைமுழங்க எதிர்சென்றார்.

அப்போதுவானரப்படையானது தெற்கேகோபுரவாசற்படியாய் கோட்டைக்குவெளியில் நின்றுவிட்டதாம் அக்காலையில்சுக்ரீவனும்அங்கதனும் இருபத்துநான்குபடைத் தலைவருஞ்சூழ காணிக்கைகப்பணங்களுடன்வந்து ஒருவர்க்கொருவர்தழுவி ஆலிங்கனம் பண்ணிக்கொண்டு பட்டணத்திற்குள் வரும்போதுபட்டணத்து ஜனங்கள் இவன்றானே எழுபத்திரண்டுவெள்ளம் வானரருக்கும் ராஜாவான சுக்ரீபனென்றும் அங்கதனென்பவரும் கூடிக்கொண்டுபோகிறதை பார்த்ததுபோலும் எழுகோபுரவாசற்படியுந்தாண்டி பட்டணத்துக்குவருகிறபோது பிராமணக்ஷத்திரிய வைசியசூத்திரரென்றும் சொல்லப்பட்ட நான்குவர்ணசாதி வீதிகளும்பாழடைந்து லட்சுமிவனம்போன சமாச்சாரம் பரதர்சுமந்திரர்சொல்ல சுக்ரீபர்கேள்விப்பட்டு வெகுமனஸ்தாபமாய்நான்குவீதியுங்கடந்து சபாமண்டபம்வந்து ஸ்ரீராமபத்திர சுவாமியர்பாதத்தில் தன்னுடையபட்டத்து கிரீடம்படநமஸ்கரித்து சுக்ரீபனுமவன் அப்படிவந்து நமஸ்கரித்தசுக்ரீபனை வாரியெடுத்துமாரோடணைத்து ஆசீர்வதித்தார் அவர்ஆரென்றால் பல்லாயிரங்கோடி அண்டத்தையுங்கெர்ப்பத்தில் வைத்துரட்சிக்கப்பட்டநின்ற ஆதிகர்த்தாவாகிய மகாவிஷ்ணுவே ஸ்ரீராமனாகவும் அவதரித்தாராம்பின்பு லட்சுமணரைசேவிக்கலட்சுமணருஞ் சுக்ரீவனுக்கு ஆசீர்வதித்துஉட்காரச்செலவுகொடுத்தார்

அப்போது அங்கதனும்இருபத்துநான்குபடைத்தலைவருங் கொண்டுவந்தகாணிக்கைகப்பங்களையெல்லாம்நிறுத்திப்போட்டு சுவாமியைவந்துநமஸ்கரித்தார்கள் அப்படிநமஸ்கரித்த அங்கதனுக்கும் இருபத்துநான்குபடைத்தலைவருக்கும் ஆசீர்வதித்தார் அவர்களும் எழுந்திருந்து லட்சுமணரைசேவிக்க லட்சுமணரும் ஆசீர்வதித்து உட்காரச்செலவுதந்தார் அ

காலையில் சுக்ரீபன்சொல்லுகிறான் ஓய்நாதனே கிருபைக்கடலே தங்களுடைய கருணாகடாட்சம் அடியார்கள்பேரிலிருக்கிறவரைக்கும் நாங்களனைவரும் சுகமென்றார்கள் அதுகேட்டுராமமூர்த்திசந்தோஷமாய் பேசிக்கொண்டிருந்தார் அந்தசமயத்தில் தாரையுஞ் சுக்ரீபனுடையபெண்டுகளும் அங்கதன்பெண்டுகளும் இரண்டுலட்சம் கன்னியர்கள் பல்லக்குதண்டிகை விட்டிறங்கி அரண்மனைக்குள் நுழைந்துகவுசலைகைகேசிசுமித்திரை இவர்கள் மூன்றுபேருக்கு நமஸ்கரித்தார்கள் அவர்கட்கு ஆசீர்வதித்துஉட்காரச்சொல்லி ஆசனம்போட்டு சந்தோஷம் பேசிக்கொண்டிருந்து அவர்களுக்குவிடுதிகொடுக்க அவ்விடுதியில் அவர்களும்போயிருந்தார்கள்.

இப்படியிருக்க விபீஷணானவர் வடக்குகோபுரவாசற்படியாய் புட்பகவிமானத்தை விட்டிறங்கி புற்றிலிருந்த ஈசலானதுபெரும்போக்குபுறப்பட்டாலெப்படியோ அப்படியாக விமானத்திற்குள்ளிருந்து ஆனைகளானது கன்னங்கரேலென்று கருமலைபோல பேரிகைசவுடால்களுடனே புறப்பட்டது அதின்பேரில் ராசமன்னரும்வில்லை கையிற்பிடித்துமுப்பத்திரண்டுவிதஆயுதசவரட்சணைகளுடன்புறப்பட்டுஅயோத்தியாபுரிபட்டணத்திடுக்கிட்டு வருகிறபோது இருந்த ஆரவாரசத்தத்தைக்கேட்ட ராமபத்திரசுவாமி அனுமாரைப்பார்த்துச் சொல்லுகிறார்.

ஓய் அனுமாரே இப்படி அதிகஆரவாரத்துடன் பூமிகிடுக்கும்படியாய் வருகிறவர் ஆரென்றுகேட்க அனுமாரெழுந்திருந்து சுவாமிலங்காபதியான விபீஷணர்வருகிறாரென்றார் அதுகேட்டு ராமமூர்த்தி கூறுகிறார் தம்பிபரத லட்சுமணசத்துருக்கா நீங்கள் நமதுசபையிலுள்ளமந்திரிபிரதானிகளையுங்கூட்டிக்கொண்டு ஊர்வசிதிலோத்தமை ரம்பை மேனகைஇவர்களுக்குச்சமதையான பெண்கள் நாட்டியம்புரிய ஏழுகோபுரவாசற் படியுங்கடக்கவருகிறதை விபீஷணரும் மாலியவானுங்கண்டு ரதத்தைவிட்டிழிந்துகாணிக்கைகப்பங்களுடன் மந்திரிபிரதானிகள்சூழ ஆடல்பாடல்பார்த்துக்கொண்டு மேளசங்கீதத்துடன் புறப்பட்டு எதிர்கொண்டுவந்து ஒருவர்க்கொருவர் தழுவிவினவிக்கொண்டார்கள் சேனாதிபதியான காலசித்தனும் லோட்சதனும்வந்து பரதர்லட்சுமணருக்குநமஸ்காரஞ்செய்ய பரதலட்சுமணர் சத்துருக்கரும் ஆசிர்வதித்தார் சேனாசமுத்திரங்களெல்லாங் கோட்டைக்குவெளியிலே நிறுத்திப்போட்டு கிழக்குகோபுரவாசற்படியுங்கடந்து பட்டணத்துக்குள் வருகிறபோதுபட்டணத்திலுள்ள ஜெனங்கள் விபீஷணரையும் மாலியவானையும் பார்த்து ஒருவர்க்கொருவர் சொல்லிக்கொள்ளுகிறார்கள் இவர்தானே ராவணனிடதம்பியான விபீஷணன்நல்லகுணசாலி இவராலேதான் ஸ்ரீராமராவணசம்மாரம்பண்ணி இவருக்குமுடிசூட்டினது இவர்தானே விபீஷணர் இவரில்லாவிட்டால் அன்றேராமலட்சுமணர் இறந்துபோய்விடுவார்களென்பாரும் இந்த விபீஷணன்சச்சரவுசெய்து ஸ்ரீராமர்கூடசேர்ந்துக்கொண்டு தமையன்குடியைக் கெடுத்தானும் அவன்முகத்தில் முழிக்கப்போகாதென்பாரும் அப்போது சீதையம்மனை ராவணனெடுத்துக்கொண்டுபோய் அசோகவனத்தில் வைத்தானும் அதுகண்டுராவணன்சகோதரனாகும்பகர்னன்மீது தூறிக்கொண்டானும் பிறகுவிபீஷணர் தமையனுக்குச் சீதையம்மனை விடச்சொல்லிபார்த்தார் ராவணன்கேளாமல் வாளை யுருவிக்கொண்டு வெட்டவந்தானும் அந்தவாளுக்குபயந்து தம்பியான விபீஷணன் ராமரண்டை வந்துசேர்ந்தான் ராமரும்தன்னுடைய பகையாளியின் என்றுப்பாராமல் அவனுக்கு அழிவில்லாதசிரஞ்சீவியுங்கொடுத்துராவணனையுங்கொன்று பட்டமுந்தரித்தார் இந்தவிபீஷணர்தான் சுவாமிக்குவுகந்த பிள்ளையென்பாரும் அப்படியல்ல தமையனைகண்டவுடன் சரியாய் நடந்துகொள்ளுவான் அப்படி ராவணனிடத்தில் துற்புத்தியில்லவிட்டால்தமையன் பேரிற் கோட்சொல்லிகொன்றதற்கு லட்சுமணா சேர்க்கமாட்டார் அந்த லட்சுமணர் ராமனுக்கு ஹரிஹரப்பிரமாதிகளுமீடல்ல தமையன் மனதிற்குச் சந்தோஷமானால் தம்பிலட்சுமணனுக்கு சந்தோஷமாகுமே பாரும் அல்ல இந்த விபீஷணர் ராட்சச வம்சமாயிருக்கிறார் ராசவடிவாய்காண்கிறது இவருடைய அழகுக்கும் மன்மதனுமீடல்ல இவர் பராக்கிரமமும் இவர் வில்லின் சிக்காணியும் அம்புராப் பொதியும் ரத்தின கிரீடமும் தேவேந்திரனுக்கும் வராதென்பாரும் இப்படியாகச் சொல்லிக் கொள்ளும் நாலுவர்ண சாதிகளுடைய வீதிகளுங் கடந்து ஸ்ரீராம

ரிருக்குஞ் சபாமண்டபம்வந்து அவர்பாதத்தில் தன்னுடையரத்தினகிரீடம்படத் தாழ்ந்துசேவித்தார் அப்படியேவந்துசேவித்த விபீஷணரை யெடுத்தாசீர்வதித்துபொற்பீடம்போட்டு உட்காரவைத்தார்மாலியவானும் சேனாபதியும் மந்திரிபிரதானிகள் சகலருகொண்டு சபாமண்டபத்தில் நடந்துவருகையில் ஸ்ரீராமர் விபீஷணரைப்பார்த்து இவரார் மகாபெரியவராயிருக்கிறாரென்றுகேழ்க்க விபீஷணர் சொல்லுகின்றார்

கேளும்நாரதனே இவர்தான் எங்கள்பாட்டனாகியமாலியவான் என்தமையனை இராவணனுக்குச்சீதையம்மனை விட்டுவிடும்படி வெகுபுத்திகளைசொல்லி உம்மையுக்கொண்டாடினவர் இவர்தானென்றுசொல்ல ஸ்ரீராமர்கேட்டுசிம்மாசனம்விட்டுக் கீழிறங்கிமாலியவானுக்கெதிர் வரவே அந்தமாலியவானைராமர்கிருபைகூர்ந்து வாரியெடுத்து ஆசீர்வதித்து ஓர்ஆசனங்கொடுத்து உட்காரவைத்து அவர்களுடைய சுபேட்சசங்கதிகளைப் பேசிக்கொண்டிருந்தார் அப்போது விபீஷணனிடபட்டபுதேவியான சனமாளிகையும் மகளானதிரிசடையம்மனும் இரண்டுலட்சங்கன்னியர்கள்புடைசூழகவுசலை கைகேசி சுமித்திரை இவர்கள் மூன்றுபேரையுஞ்சேவிக்கஅவர்களையும்ஆசீர்வதித்து பீடம்போட்டு உட்காரவைத்து சற்றுநேரம் பேசிக்கொண்டிருந்து அவர்களுக்குத்தக்கவிதிளமைத்துசாலசம்பிரமத்துடனடப்பித்தார்கள்.

அப்படியிருக்கையில் மகாமாயனனவன் தன்னுடையபரிவாரமானயானைதேர்பரிசேனைகளானதண்டுதளங்களுடனே தண்டகாரணியவனத்தைவிட்டுப்புறப்பட்டுக் கங்கைக்கரையிறங்கிப் போகையிற் யானைகளானது தும்பிக்கைகளை உயரத்தூக்கிக்கொண்டுநடந்தது அதன்பின்வரும்யானைகள்ஜலங்களைக்குடித்துபுரவிகளுந்தாகவிடாய்தீர்ந்துநடந்ததுகள் அதன்பின் வருங் குதிரைகளுக்கு சலமில்லாமற்சேறாடி குழப்பிவித்து கால்பலமான இராட்சதர்கள்நடக்கிறபோது காய்ந்து உலர்ந்துதும்புதூளுமாய்க்கருந்தூளுஞ் செந்தூளுமெழும்பும்படியாய் ஆரவாரித்துஅட்டகாசஞ்செய்து இரைச்சலிட்டுவருவதை ஸ்ரீராமர்கண்டு ஓய் அனுமாரே இப்போதுவருகிறவர் யாரென்றுகேட்க அனுமார்சொல்லுகிறார் ஓசுவாமி இப்போதுமகாமாயன்வருகிறதுபோலகாண்கின்றதென்றார் அதுகேட்டு ஸ்ரீராமர்தம்பியாகிய சத்துருக்கனைப்பார்த்து தம்பிசத்துருக்கா நீபடைத்தலைவரையுஞ் சேனைகளையுங் கூட்டிக்கொண்டுவாவென்றார்அவ்வாறேசத்துருக்கர் சொல்லுகையில்மகாமாயன் தெற்குகோபுரவாசற்படியிற் பாளயங்களை நிறுத்திவிட்டுமந்திரி பிரதானிகள்படைத்தலைவர் சூழக்காணிக்கைகப்பங்களுடனே எதிர்கொண்டுவந்து சத்துருக்கனைக் கண்டு ஒருவர்க்கொருவர் தழுவி வினவிக்கொண்டு சத்துருக்கர்மகாமாயனைப்பார்த்து ஒருவர்க்கொருவர் பேசிக்கொள்ளுகிறார்கள்.

அண்ணே இவனைப்பார்த்தாற் பயமாயிருக்கின்றது இவனுடையகோரப்பல்லுங் கையிற்பிடித்திருக்கிறவில்லும்பாரென்றான் மற்றொருவன்கூறுகின்றான் அப்பாயிவன்முகத்திலிருக்கிறமீசைகளும்இவனுடைய புஜபலபராக்கிரமமும் பார்க்கவேயாவருக்கும் உதரதும்மனப்பதாதுமாமென்றான் வேறொருவன்கண்டு பயங்கொண்டு ஐயா இவன்கையோ கயிலேயக்கிரியைத்தாக்குமாப்போற் காலேற்கும்கண்ணோ விண்ணைமருட்டும்புசமோ பதினாயிரமலையைப் புரட்டுமென்றுசொல்லிக்கொள்ளும்படியாய் வீதிகளைக்கடந்து சபாமண்டபம்வந்துஸ்ரீராமரைநமஸ்கரித்தான்அப்படிநமஸ்கரித்தமகாமாயனுக்குப் பலவாசிகள் கூறினபின்பு மகாமாயனனவன்பரதலட்சுமணரைச்சேவிக்க அவர்களும் ஆசீர்வதித்தபிறகுமாலியவானையும் விபீஷணரையுங்கண்டுநமஸ்கரித்தான்அப்படிநமஸ்கரித்தமகாமாயனுக்கு இவர்களும் ஆசீர்வதித்துவுட்காரசெலவுகொடுத்தார்கள் அப்போது ஸ்ரீராமர் ஓய்மகாமாயனே நீங்களனைவரும் க்ஷேமமாவென்றார் ஓநாதனேகிருபைக்கடலேதங்களுடைய அனுக்கிரகம்அடியேன்பேரிலிருக்கிறமட்டுக்கும் அடியேன் க்ஷேமமேதவிர குறையொன்றுமில்லையென்றான் அப்போது மகாமாயனிடபட்டபுதேவியான மதனாஞ்சினியென்னப்பட்டவள் ஆயிரங்கன்னியர்கள் சூழமுத்துப்பல்லக்கிலேறிகவுசலைகைகேசி சுமித்திரைமாரிருக்கும்அரண்மனையைநுழைந்து அந்தமூன்றுபேருக்குநமஸ்கரிக்க அவர்களுக்கு விடுதிகள்கொடுத்து சகல சம்பிரமத்துடன் நடப்பித்துக் கொண்டுவந்தார்கள்.

அப்படியிருக்கையில் சலவசந்தனனவன் தன்னுடையயானைசேனை பரிவாரங்களுடன்யானைகள்முன்னடக்க அதன்பின்ரதங்கள்நடக்கஅதன்பின்புகுதிரைகளும் அதன்பின் கால்பலமானசேனைகளும் நடக்கிறபோதுபூமியானது கிடுகிடுவென்றுநடுங்க ஆதிசேடன் புஜமாற்ற அஷ்டகுலபர்வதங்களுமதிர ஆரவாரத்துடனே இராட்சதாள்தண்டானது வருகிறபோது ஸ்ரீராமர்அனுமாரைப்பார்த்துஅதோவருகிறவன்யாரென்றுகேட்க அனுமார்சொல்லுகிறார் ஓநாதனே இ

ன்னுஞ்சலவசந்தன்வரவில்லை இவ்வளவு ஆரவாரத்து
டன் வருகிறவன் சலவசந்தனேயல்லாமல் மற்றொரு
வருமல்லவென்று அனுமார்சொல்ல அதுகேட்டு ஸ்ரீ
ராமர் தம்பிசத்துருக்கர் நேமந்திரிபிரதானிகளு
டன் சேனைகளைகூட்டிக்கொண்டெதிர்கொண்டுசென்
றுசலவசந்தனை அழைத்துவாவென்றுகூறுகையில் ச
த்துருக்கர் அவ்வாறேசர்வாடம்பரத்துடன் சலவச
ந்தன்கண்டு சட்டென்று ரதத்தைவிட்டுக் கீழேகுதி
த்து சாஷ்டாங்கதெண்டனுஞ் சமர்ப்பிக்கச் சத்துருக்க
ரானவர்தழுவி ஆசீர்வாதஞ்செய்தழைத்துவருகையி
ல் சேனாசமுத்திரங்களைக்கோட்டைவெளியில் நிறுத்
திவிட்டு படைத்தலைவனையுஞ்சகண்டனையுஞ் சேனா
திபதிகள் தளவாய்களுமும் மடியாய்க்காணிக்கை கப்
பங்களுடன் பட்டணத்துசனங்கள் சலவசந்தனைப்பா
ர்த்து சொல்லிக்கொள்ளுகிறார்களிவனைப்பார்த்தா
ல் இராட்சதனைப் போற்காண்கின்றது சிறியவயது
போலுந்தோன்றுகின்றது இவனுடைய அகோரதந்த
ங்களைப்பார்த்தால்சந்திரனை இருபிளவாய்ப் பிளந்து
இரண்டுகடைவாயிலும் வைத்ததுபோலுமிருக்கின்ற
தென்று சொல்லிக்கொள்ளுகையில்சலவசந்தனானவ
ன் ஸ்ரீராமமூர்த்தியைக்கண்டுவணங்கினான் அப்படிவ
ணங்கிய சலவசந்தனையெடுத்து வாயாரவாழ்த்தினார்
பிறகுசலவசந்தனானவன் பாதலட்சுமணரையுஞ்சேவி
த்தான்அவர்களும் ஆசீர்வாதஞ்செய்து ஆசனங்கொ
டுத்து அதன்மீதுட்கார்ந்தான் அப்போதுராமமூர்த்தி
யானவர் ஓய்சலவசந்தனே நீரும் உம்முடைய சேனா
சமஸ்தங்களுங்க்ஷேமமோவென்றார்சலவசந்தன்சொல்லு
கிறான் உங்களுடைய அனுக்கிரகம் அடியேனுக்கிருக்
கிறமட்டுக்கும் ஒருகுறைவுமில்லையென்றான்.

அப்படியிருக்கையில் சலவசந்தனுடைய பட்ட
புத்தேவியான திருமாலியும் நாலுதாதியர்கள்புடைசூ
ழ முத்துப்பல்லக்கிலேறி கைகேசிசுமித்திரை அரண்ம
னைக்குச்சென்று அவர்களடிவணங்கி நமஸ்கரித்தாள்
அவர்களித்திருமாலிக்கு ஆசீர்வதித்து நகுபீடம்
போட்டு உடகாரவைத்து வந்தவர்களுக்கெல்லாம் வி
ருந்தும் விடுக்க அதில்சகல வைபவத்துட னிருந்தார்
கள் அப்படியிருக்கதேவசுந்தரனானவன் யானைதே
ர்பரிகள் அணியாகவும் சேர்ப்பத்தைந்து வெள்ளம் ரா
ட்சதசேனைகளுடனும்இருபத்துநாலாயிரங்கோடிவா
னரசேனைகட்டத்தோடுகூடிக் கங்கைக்கரையில்வந்து
விட்டான்அப்படியாகத்தானேவந்ததேவசுந்தரமகா
ராசனைமட்சயந்தனுமானுங்கண்டு ரதத்தைவிட்டிழிந்து
வெதிர்கொண்டுவந்து அழைத்துப்போய் தழுவின
விகொண்டு இருவர்தண்டுகளையும் ஒன்றுப்கூட்டி
சங்கீதமேளவாத்தியங்கள் தாம்தமென்று முழங்கபூ
மியதிர அஷ்டகுலபர்வதங்களும் நடுங்கவானரர்களும்
ராட்சதர்களும் ஒன்றுப்கூடி ஆரவாரத்துடனே வ
ருகிறபோது எங்குமிடங்கயிடமில்லாமல் நாலுமூலை
கோபுரவாசற்படியும்போய்ப்பார்த்தார்கள் இவ்விட
முழுமையும் ஆனையும்குதிரையும்ரதமும்வானரர்களும்
எங்குமடமாரபேரிகைமேளவாத்தியங்களுங்கொடை
களும் அவுதாக்களுங்கூடாரங்களுமாடல்பாடல்களு
ம் கூச்சல்களும் கோபுரவாசற்படிகளுக்கெதிர்புறமா
கக்கொஞ்சமுச்சுத்தவெளிச்சமாய்க்கண்டது அதுகண்
டுதேவசுந்தரன் மட்சயந்த அனுமாரைக்கண்டுதளத்
தைவிட்டுக்காணிக்கைகப்பங்களுடனே நாற்பத்துநா
லாயிரங்கோடி சேனாதிபதிகள்சூழ எழுகோபுரவாசற்
படியுங்கடந்துகோட்டைக்குள் நுழைந்துமகாஆரவா
ரத்துடனே வருகிறபோதுசபாமண்டபச்சபையிலுள்
ள ஸ்ரீராமர்பாதலட்சுமணர் சத்துருக்கர் விபீஷணர்
மாவீயவான் சுக்ரீபன் அங்கதன்மந்திரியான சுமந்தி
ரன்சகலருங்கேட்டு அவர்களார்வருகிறவர்களென்று
மனதிலேயெண்ணினார்கள் அப்போது ஸ்ரீராமர் ஓஅ
னுமாரே இப்போதுவருகிறவர்களாரென்றுகேட்க்க
வே அனுமார்கூறுகிறார் சுவாமிவானரசிரேஷ்டர் ரா
க்ஷதசிரேஷ்டர் எல்லாரும் வந்துநிறைந்திருக்கின்றார்க
ள் தேவசுந்தரன் மாத்திரம்வரவில்லை அவன்றான்வரு
கின்றதுபோற்காணுதென்றார் அதுகேட்டுஸ்ரீராமமூ
ர்த்தியானவர் தம்பிசத்துருக்கனைப்பார்த்துச் சொல்
லுகின்றார் நீகிலதுசேனைகளைக் கூட்டிக்கொண்டுபோ
ய்மரியாதைசெய்து அழைத்துக்கொண்டுவாவென்று
த்தரவுசெய்தார் அப்படிபேசத்துருக்கர் மந்திரிசுமந்
திரனையுஞ்சேனைகளையுங் கூட்டிக்கொண்டுமேளதாள
சங்கீதத்துடன்எதிர்கொண்டுபோய்சுவேதேவசுந்தர
னும் மட்சயந்த அனுமாரும் நமஸ்கரித்தார்கள் அப்
படிநமஸ்கரித்த தேவசுந்தரனுக்கும் மட்சயந்த அனு
மாருக்கும் ஆசீர்வாதஞ்செய்து அழைத்துக்கொண்
டுவருகிறபோது தேவசுந்தரனையும் மட்சயந்த அனு
மானையும்ஸ்ரீராமமூர்த்திகண்டு ஓஅனுமாரோராட்சத
ரூபனும்வானரரூபனுமாக வருகிறார்களேஇவர்களார்
சொல்லென்றுகேட்கையில் அனுமார்சொல்லுகிறார்.

சுவாமி அதோராட்சத சிரேஷ்டனாய் வருகிற
வன்பாதாளலோகத்தைப்பரிபாலனம்பண்ணப்பட்ட
மயிலிராவணனுடைய மருமகனானதேவசுந்தரன்வா
னரரூபமாய்வருகிறவன் அடியேனுடைய குமாரன்ம
ட்சயந்த அனுமானென்னப்பட்டவன் இருவரும்வரு

திருவென்றுசொன்னார் அதுகேட்டுராமலட்சுமணர்ச
ந்தோஷப்பட்டு ஓய் அனுமாரே நீர்நித்தியத்தவ
பிரமச்சரியாயிருக்கிற உமக்கு புத்திரனேது எனக்குத்
தெரியச்சொல்லவேண்டுமென்று ராமமூர்த்திகேட்க
அனுமார்சொல்லத்தொடங்கினார்.



இராமருக்குஅனுமார் மட்சயந்தனுடைய

வரலாறுகூறல்.

ஐயாஜகநாதனே அடியேன் சீதலட்சுமி யம்மனை
த்தேடிக்கொண்டு சமுத்திரந்தாண்டுகையில்அடியே
னுடைய சுக்கிலங்கலிதமாய்ச் சமுத்திரத்தில் விழுந்
த்து அதையொரு மச்சமானது விழுங்கிற்று அந்த
நாழிகைக்குரிஷிபிண்டம் இராத்தங்காமல் மட்சயந்
தன் பிறந்தான்பிறந்தமாத்திரத்தில் சமுத்திரக்கரை
யோரமாகத் தத்தளித்துக் கொண்டிருந்தான் அப்
படியிருக்கையில் மயில்ராவணன் வேட்டைக்குப் பா
தாளத்தைவிட்டு வெளியேவந்து சமுத்திரந்தாண்டி
வேட்டையாடி மறுபடியுஞ்சமுத்திரந்தாண்டி வரு
கிறபோது ஜலத்திலேதத்தளித்துக்கொண்டிருக்கிற
மட்சயந்தனைக்கண்டு வெகுஆசையன்புடன் எடுத்து
வளர்த்தான் அப்படியிருக்க அடியேன் சீதாலட்சுமி
யைக்கண்டு சமுத்திரந்தாண்டி தங்களுக்குவந்துசொ
ல்லத் தாங்களும் இளையபெருமாளுமாக எழுபது
வெள்ளம்வானரருடனே சமுத்திரத்தையடைத்து
லங்கைக்குப்போய் ராவணனைக்கண்டு கும்பகர்னன்
இந்திரசித்து அதிகாயன் மூவரையுங்கொன்ற பிறகு
ராவணனவன் யோசனைசெய்து பாதாளலோகத்தி
லிருக்கப்பட்ட மயில்ராவணனையும் அவன்தம்பிமார்
மூன்றுபேரையுமழைத்து தங்களையும் இளையபெரு
மாளையும் பாதாள லோகத்திற் கொண்டுபோக உத்
தரவுபண்ணினான் அந்தசமாச்சாரந் திரிசடையம்ம
னால் விபீஷணரறிந்து உமக்கும் இளையபெருமாளுக்
கும் அடியேனுக்குஞ் சொல்ல வாலினாலேசத்தில்லா
மல்கோட்டைகட்டிக்கட்டி பத்திரமாய் காத்துக்
கொண்டிருக்க விபீஷணர்மந்திரபூமியிலே ஒரு
பெட்டிசெய்து அந்தபெட்டியில் தாங்களும் இளைய
பெருமாளும் பள்ளிகொள்ள அந்தசமயத்தில் மயில்
ராவணன் விபீஷணரைப்போலவுருவெடுத்து இந்த
க்கோட்டைக்கு வழியெப்படியென்றுகேட்டான்அந்
தமர்மம் அடியேனுக்குத்தெரியாமல் ஒருகாலேவாங்
கினேன் அந்தக்கால்வழியாய் நுழைந்து தங்களுக்கு
ம் இளையபெருமாளுக்குஞ் சொக்குபொடியைதூவி
பெட்டியுடனேயெடுத்துப் பாதாளலோகம் போய்
விட்டான்.

உடனேவிபீஷணர் கோட்டையின்மேலே வானர
யுருவிக்கையில் பிடித்துக்கொண்டு வந்துவிட்டார்அ
ப்படிவந்தவிபீஷணரை இப்போதுதான் உள்நுழைந்
தீரே எந்தவழியாக எதிரே வந்தீரென்று கேட்டே
ன் அப்போது விபீஷணர்சொன்னது நான்வரவில்லை
யேமோசம்போனீரே அனுமாரேயென்றுகேட்டார்
அப்படிகேட்டவிபீஷணரும் அடியேனும் வந்துபார்
த்தோம் உம்மையும் இளையபெருமாளையுங்காணோமல
மோசம்வந்ததென்று விபீஷணருஞ்சொன்ன வழியை
ப்பிடித்துக்கொண்டு பாதாளம் வரைக்கும் போனே
ன் அவனிடத்திற்சமாச்சாரம் ஒன்றுமகப்படாமல்
தண்ணீர்துறையில் வந்திருந்தேன் அந்துறையில்
மயில்ராவணன் தங்கையானவள் அழுதுக்கொண்டு
வர அம்மா நீ அழுவேண்டியதென்னவென்று கேட்
டேன் அதற்கந்தம்மாள் நான் மயில்ராவணன் தங்
கையெனக்கொரு புத்திரன்பிறந்தான் அதற்காக என்
தமையன் சோதிடரையழைத்து பிள்ளைபிறந்த லக்
கினத்தைப் பார்த்தபோது அவர்கள் சொன்னது
நல்லம்மானுக்கு ஆகாது பத்துவயதிற் பட்டாபி
ஷேகஞ்செய்து இந்தபட்டணத்தையாளுவானென்றுசொ
ன்னார்கள் அதுமுதல் இதுவரையில் என்னையுமென்புரு
ஷனையும் என் பிள்ளையையும் விலங்குபூட்டிவைத்திரு
ந்தான் இப்போது ஆரோஇரண்டுபேரைபெட்டியுடன்
கொண்டுவந்து காவற்படுத்தியிருக்கிறான் அதுவன்றி
இன்று என் கால்விலங்கை விடுத்து என்கையிற் குட
த்தைகொடுத்துதண்ணீர்கொண்டுவரச்சொன்னான்
பிள்ளைக்கும் அந்தஇரண்டு மானிடர்களுக்கும்ஸ்நா
னம்பண்ணிவைத்து காளிகாதேவிக்கு பலிகொடுக்க
இருக்கிறான் அதனால் அழுதுகொண்டு வந்தேனென்
றாள்.

அதனைக்கேட்டு அடியேன்சொன்னது அம்மா இங்கேவாரும் என்னையிந்தகுடத்திற்றான் சந்தடிபண்ணாமல் வைத்துக்கொண்டு போவாயேயானால் உன்னுடைய மயில்ராவணனையுங்கொன்று உன்பிள்ளைக்குப்பட்டங்கட்டி வைக்கிறேனென்று சொன்னேன் அதுகேட்டு அக்கன்மாறும் அடியேனை குடத்திலே வைத்துக்கொண்டு கோட்டைவாசற்படியில் நுழைகிறபோது கோட்டைகாவற்காரர்கள் அதைக்கண்டு குடத்தை யிறக்கச்சொன்னார்ன் அப்போது அடியேன்கிளம்பி அங்கிருந்த காவற்காரரையெல்லாங்கொன்று அப்பாற்போகும்போது மட்சயத்துனுமான் எதிர்த்தான் அவனுடன்யுத்தம்பண்ணிப் பார்த்தேன் அவனுடைய குலங்கோத்திரத்தைக் கேழ்க்கிறபோது அடியேனுடைய குமாரனாய்விளங்கினன் மேலுமடியேன் அவனுக்குத் தந்தையென்றறியாமற் சண்டைசெய்தபாவந்தீர காசிக்குப்போய்ஸ்நானம்பண்ணிப் பாவத்தைத்துலைக்க சந்தாபுரிபட்டணஞ்சேறென்றனிப்பிவிட்டு மயில்ராவணனையும் அவன் தம்பிமார்களையுங் கொன்று தேவசுந்திரனுக்குப் பட்டங்கட்டிவைத்துப் பெட்டியை யெடுத்துக்கொண்டு லங்கைக்குவந்தேனென்று அனுமார்சொன்னார்.

அப்போது ராமலட்சுமணர்கேட்டு அதிக சந்தோஷமாகி விபீஷணரைப்பார்த்துநீ விபீஷணரே இப்படி நடந்தசமாச்சாரம் இதுவரையில் எங்களுக்குச்சொல்லாம லிருந்துவிட்டீர்கள் யாதென்றால் முன் அநாலமுந்தெரிந்த பெரியோர்கள் தங்கள்பெருமையுந்தாங்கள்செய்த உபகாரத்தையுஞ் சொல்லிக்கொள்ளமாட்டார்களென்று ராமமூர்த்தியும் லட்சுமணருஞ்சொல்லுகையில் அனுமாரும் விபீஷ்ணருமெழுந்து சுவாமியை நமஸ்கரித்துசுவாமி இதொரு காரியமோவென்று சொல்லாமலிருந்து விட்டோம் இப்போதுதருணம் வாய்த்தபடியால்சொல்லவேண்டியதாயிற்று அடியார்கள்செய்த அபசாரத்தைபொருத்தருளவேண்டுமென்று அடிவணங்கித்தெண்டனிட்டார்கள் அதுகேட்டுசுவாமியும் லட்சுமணரும் பூரித்துமனங்களித்தார்கள் அச்சமயத்தில்தேவ சுந்தரனும் மட்சயந்த அனுமாரும்வந்துசுவாமியின்பாதாரவிந்தத்தைநிந்தவணங்கினார்கள் அவர்களுக்குச் சுவாமியானவர் ஆசீர்வதித்துஉட்காரும்படி உத்தரவுகொடுக்க அவர்களுமிருந்தார்கள் அப்படியிருக்கையில் தேவசுந்தரன்பட்டபுதேவியும் முத்துப்பல்லக்கிலேறி நூதகன்னியர்சூழ கவுசலை கைகேசி சுமித்திரையம்மன் விடுதிக்குப்போய் மூன்றுபேரையுஞ் சேவிக்க அவர்களும் வாழ்த்தி வசனித்துக்கொண்டிருந்து அவர்களுக்கு விடுதிகளமைத்து சம்பிரமத்துடனடத்திக்கொண்டு வந்தார்கள்.



இராமரிடங் குகன்வருதல்.

இப்பாற்குகனானவன் தன்னுடையபதினோக்குரோணி சேனைகளைக் கூட்டிக்கொண்டு டமாரபேரிகைசங்கீத மேளவாத்தியங்கள் முழங்கப் புறப்பட்டு வருகிறபோது கண்காணுத சேனைகளைக்கண்டு ஆச்சரியப்பட்டு தாங்களிருக்கிறதற் கிடமில்லாமல் நாலுகோபுரவாசற்படியும் போய்ப்பார்த்தார்கள் போகயிடமில்லாமல் தென்கோபுர வாசற்படியாய் பார்க்கையில் கொஞ்சமிடமிருக்கக்கண்டு அவ்விடத்திற் றண்டுவிட்டிறங்கிக் குகனுஞ்சிலசேனாபதிகள்சூழக்கோபுரவாசற்படிக்குள் நுழைந்து பிர்மக்ஷத்திரியவைசியசூத்திரென்று சொல்லப்பட்ட நான்குவர்ணஜாதிவீதிகளுங்கடந்து சபாமண்டபம்வந்து ராமமூர்த்தியைச்சேவிக்க அவரும் குகனையெடுத்து மார்போடணைத்து ஆசீர்வாதஞ்செய்யக் குகனும் பரதலட்சுமணர் சத்துருக்கரென்கிற மூவருக்கும் நமஸ்காரம் பண்ணி அவர்களுங்குகனுக்குஆசீர்வதித்து ஒருபீடத்தின்பேரில் உட்காரச் செலவுகொடுக்க குகனுஞ் சந்துஷ்டியா யிருந்தான்பின்புகுகனுடைய தேவியும் சில கன்னியர்கள் சூழும் படியாய்முத்துபல்லக்கிலேறி கவுசலை கைகேசி சுமித்திரை இருக்கிற பாண்மனைக்குப் போய் அவர்களுக்குச் சாஷடாங்கமாக விழுந்து தெண்டஞ் செய்ய அவர்களும் ஆசீர்வதித்து

ஸ்ரீராமர் சுக்ரீபரையும் விபீஷணரையுங் கேட்டுக்கொள்ளல்.

அப்படியிருக்க ஸ்ரீராமபத்திர சுவாமியார் சிம்மாசனத்திற்சகல சிரேஷ்டரும் வானரசிரேஷ்டரும் படைத்தலைவர்களும் சேனாபதிகளும் ; தண்டுதளங்களோடும் மந்திரிப்பிரதானிகளுடன் முத்துக்குடை ரத்னக்குடை கவிய ஆலவட்டம் தாலவட்டம்சாமரங்கள் சுருட்டிகள் மயிர்க்குச்சுசொரிய இந்திரன் கொலுவைப்போற் கட்டியக்காரர் கட்டியங்கூற பாடகர்புகழ தேவதாசிகளுக்குச் சரியானபெண்கள் மிட எக்காளம் சின்னமத்தளம் ருத்திரவீணை சங்கீதமேள வாத்தியங்கள்முழங்க நிறைந்த கொலுவாயிருக்க அப்போது சுக்ரீபமகாராசனையும் இலங்காதிபதியான விபீஷணரையும் ஸ்ரீராமமூர்த்திபார்த்துச் சொல்லுகிறார்.

நீங்கள் முன்னாலெங்களுக்காக அவஸ்தைப்பட்டு ராவணசம்மாரம்பண்ணி சீதைசிரையும் விடுவித்து எனக்கிந்த அயோத்தியாபுரிப்பட்டஞ் சூட்டிவைத்தீர்கள் அதுபோல் இப்போது அஸ்வமேதக் குதிரையின்பின்னால் போய் எதிர்த்த ராசாக்களைச் சங்கரித்து என்கையினால் யாகத்தை நிறைவேற்றி வைக்கவேணும் அதற்காக நீங்கள் சரீர சகாயம் படவேணுமென்றார் அதுகேட்டு சுக்ரீபரும் விபீஷணரும் சுவாமியைப்பார்த்துச் சொல்லுகிறார்கள்.

ஓசுவாமி அடியார்களாலாவதொன்றுமில்லை எல்லாக்காரியமும் பலாபலமும் தேவரீருடைய மகிமையேயல்லாமல் வேறொன்றுமில்லையென்ன ஸ்ரீராமர் சந்தோஷமாய் சுமந்திரரை யழைத்து ஐம்பத்தாறு தேசத்தார்க்கும் ஓலையெழுதியனுப்பராசாக்களெல்லோரும் வரும்படி திட்டஞ்செய்யுமென்றார்.

சுமந்திரர் ஐம்பத்தாறுதேசத் தரசற்கு நிருபமனுப்புதல்.

அப்போது சுமந்திரரும் ஓலையெழுதி தூதுவரிங்கொடுத்தனுப்ப அவர்கள் ஓலையை எடுத்துக்கொண்டு வாயுவேக மனோவேகமாய்ப் புறப்பட்டு ஐம்பத்தாறு தேசத்துராசாக்கள் கையிலுங்கொடுக்கஅவர்கள் வாசித்துப்பார்த்து உடனே புறப்பட்டார்கள் அவர்களாரென்றால் கொங்கணராசன் முப்பதக்ரோணி யானை தேர் பரி சேனைகளுடனே காணிக்கைகப்பங்கொண்டு புறப்படவே கோசலமகாராசாவும்இருபத்தைந் தக்குரோணி யானைதேர் பரிவாரங்களுடன் காணிக்கை கப்பங் கொண்டு புறப்பட்டார் புறப்படவே கேரளதேசத்தை யாளப்பட்ட கேரளமகாராசாவும் கலிங்கதேசத்தை யாளப்பட்ட கலிங்கமகாராசாவும் மாளவதேசத்தை யாளப்பட்ட மருத்துவமகாராசனும் உக்கிரசேன மகாராசனும் சிந்துதேசத்திறைவனாகிய சிந்துமகாராசனும் காம்போதிமகாராசனும் விக்கிரவதேசத்து வேந்தனாகிய விரவிக்கிரமகாராசனும் ஒட்டியதேசத்தரசனாகிய ஒட்டியமகாராசனும் கந்தரதேசத்தையாளப்பட்ட வீரவர்மமகாராசனும் இன்னஞ்சொல்லப்பட்ட ஐம்பத்தாறுதேசத்தரசரும் ஓலைகண்ட நாழிகைக்கு அவர்களுடைய யானை தேர்பரி காணிக்கை கப்பங்களுடனே கொடிச்சிலைகளுடனும் விருதுகள் பிடித்துக்கொண்டு எக்காளம் சின்னம் வெங்கலமுரசு சாமபேரிகைகள் முழங்க வடகிழக்கு வடமேற்கு என்கிற அஷ்டதிக்கிலுமிருந்து ராசாக்கள் மகுடமாந்தாதிகள் அதிரதர் சமரதர் அர்த்தரதரென்று சொல்லப்பட்ட ராசாக்களும் வெள்ளைக்குடை வெண்சாமரம் செகப்புக்குடை செகப்புக்கொடி கறுப்புக்குடை கறுப்புதுஜம் பச்சைக்குடை பச்சைக்கொடி நீலக்கொடி மஞ்சட்குடை மஞ்சட்கொடி பறக்க தாங்களே புறப்படவே பூமியானது கிடுகிடென்று நடுங்கவும் ஆதிசேஷன் புஜமாற்றவும் அஷ்டகுலபர்வதங்கள் நடுங்கவும் ஆற்பரித்து அயோத்தியாபுரிபட்டணத்து நாலுமூலையும் கோபுரவாசற்படியும் வந்து பார்த்தாரகளாம் அப்படிவந்தசேனைகளும் ராசாக்களும் கருமலைப்பர்வதங்களைப் போலிருக்கப்பட்ட ராட்சதர்களையும் வானரக் கூட்டங்களையும் சேனாதிபதிகளையும் கண்டு தளகர்த்தர்களையும் பார்த்து ஒருவருக்கொருவர் சொல்லிக்கொள்ளுகிறார்கள்.

ஓராசாக்களே இவர்களார் இவர்களைப் பார்த்தால் கருமலைப் பர்வதங்களைப் போலிருக்கிறார்களிவர்களென்ன மனிதப்பிறப்போ இவர்கள்முகத்தைப்பார்த்தால் மகமேருபர்வதத்தின் சிகரம்போலிருக்கின்றது இவர்கள்மூக்கிலே இருபதுயானைகள் புகுந்துவரும்போல் காணுகின்றது இவர்களுடைய வாயைப்பார்த்தால் ஆகாயம்பூமியைப்போலுந் தோற்றுது மீசைகளைப்பார்த்தால் மணலில்முளைத்த கோரைப்புல்லைப்போற் றட்டுபடுது அந்தமீசை ஒவ்வொருமயிரிற் பத்துயானைகளை கட்டி தொங்கவிடலாம் அதுவுமன்றி கண்களைப்பார்த்தால் யமுனாநதி கரைபோலுமிருக்கின்றது கோரை பற்களைப்பார்த்தால் சந்திரனைப் பிளந்து இருபக்கத்து கடைவாயிலும்

வைத்ததுபோலு மிருக்கின்றது இவர்கள் கிரீடத்தைப் பார்த்தால் கைலாயபர்வதத்தின் உச்சியிலிருக்குஞ் சிகரம்போலு மிருக்கின்றது மார்பிலணிந்த பதக்கங்களைப் பார்த்தால் அறுபத்தநாலு சூரியனைப்பிடித்து மார்பி லணிந்ததுபோலும் விளங்குகின்ற இப்படி ரூபம்படைத்த ராட்சதர்களை ராமமூர்த்தி எப்படி செயம்பண்ணினாரோ இவர்களைப் பார்க்கும்போதே கெற்பங்கலங்குகிறதே கையில்பிடித்திருக்கிற வில்லை பார்த்தால் அண்டத்தை வில்லாகபிடித்தது போலுந்தோற்றுதே இவர்கள் சாமர்த்தியமென்ன கொஞ்சமா யிருக்குமோ இப்பேர்ப்பட்ட ராட்சதர் தசாதனுன ராவணேஸ்வரன் ஏசாகோசமாயிருப்பானே அவனை ஆயிரத்தெட்டண்டம் இருநூற்றிருபத்துநான்கு புவனத்தையும் ஆண்டவனுக்குதே அவனை இவரென்னமாய்க் கொன்றார் இவர் பரப்பிரமானபடியினாலே தசரதமக ராசன் வயிற்றில் ஸ்ரீ ராமராகப்பிறந்து ராவணராட்சதாளையுங் கொன்றார் நம்முடையவம்சம் இருபத்தொரு தலைமுறையிலும் ராட்சதாளை நாமறியமாட்டோம் ராமமூர்த்தியாலே இப்போது கண்டோமென்று பலவாறுக பேசிக்கொண்டு கீழ்கோபுர வாசற்படியாக நுழைந்து நாலுவீதிகளுங்கடந்து சபாமண்டபம் வருகிறபோது ராமமூர்த்திகேட்டு பாத சத்துருக்கருடன் சேனைகளையுங் கூட்டியனுப்பிவைத்தார் அவர்களெதிர்கொண்டுவரவே ஐம்பத்தாறு தேசத்துராசாக்களும் பரதசத்துருக்கரும் நமஸ்காரம்பண்ண யிாவர்களு மரியாதைசெய்து அழைத்துக் கொண்டு சபாமண்டபம் வந்தாகள் அப்போது ஸ்ரீராமர் சிம்மாசனம்விட்டெழுந்துநின்றார் அ போதுநின்றராமர்பாதத்திலே ஐம்பத்தாறுதேசததாசர்களுஞ் சேவித்தார்கள் அவர்களுக்கு ஆசிர்வதித்து உட்காருமபடியாய் செலவு கொடுக்க அவர்களுஞ் சந்தோஷமாயுட்கார்ந் திருந்தார்கள்

அப்போது ஸ்ரீராம மூர்த்தியானவர் ஓய்ராசாக்களே கேளுங்கள் ராமர் ராவண ராட்சதர்களைக் கொன்றபாவந்தலைய அஸ்வத்தின்பின்னால் நீங்களுஞ்சென்று எதிர்த்தராசாக்களை சங்கரித்தகையினால் அஸ்வமேதயாகம் பண்ணிவைக்கவேணுமென்றார்

அதுகேட்டு ஐம்பத்தாறு தேசத்தரசர்களும் சுவாமி தங்களுடைய கருணைகடாட்ச மடியார்கள் பேரிலிருக்கிறவரையில் உம்முடையயாகத்திற்கு குறைவுவருகிறதில்லை அப்படியே குதிரையின் பின்னுகசென்று பூமிபிரதட்சணம்வந்து உமதுகையில் யாகம்பண்ணிவைக்கிறோமென்றார்களப்போது ஸ்ரீராமரும் மகாசந்தோஷமாய்வந்த மகாராசனையழைத்து அவரவர்கொண்டுவந்த காணிக்கை கப்பங்களையெல்லாம் ராட்சதர்களைவிட்டு உக்கிராணக்களத்திற் கொண்டுபோய் சேர்க்கச்சொன்னார் அப்படியே பத்தக்ரோணி ராட்சதாளை யழைப்பித்து எடுக்கமாளாமற் கொண்டுபோய் ராமலட்சுமணு ளென்னப் பட்டணக்களஞ்சியமண்டப மெப்படி யிருக்கிறதென்றால் முத்துகளொருபக்கமும் நீலோற்பல மொருபக்கமும் மரகதமொருபக்கமும் கோமேதக மொருபக்கமும் இப்படி நவரத்னங்கள் ராசிராசியாய் மலைபோற்குவித்திருந்ததாம் அத்தருணத்தில் சூரியனஸ்தமானுன்.

பின்புராமர்சொற்படி பரதமகாராசன் தண்டுதளங்களுக்கும் வானர வீரர்களுக்கும் ராட்சதகூட்டங்களுக்கும் ஐம்பத்தாறுதேசத் தரசர்களுக்கும் இன்னம்வந்திருக்கப்பட்டவர்களுக்கும் பஞ்சகச்சாயங்களுடனே பறிமாறி சந்தனபுஷ்ப தாம்பூலங்களும் நடப்பித் தாடல்பாடல் வினோத வேடிக்கையுடனே அன்றிரவைப் போக்கிவைத்தார்.

ஸ்ரீராமர் அயோத்தியில் வந்திருந்து தண்டு தளங்களுக்கு வேண்டியவைகளைக் கொடுக்கும்படி பரதருக்கு ஆக்ஞாபித்தல்.

மறுநாள் ஸ்ரீராமர்காலைக்கடனைமுடித்து நியமநிஷ்டைமுடித்து தம்பிமார்களுடன் ராட்சதவீரர்களும்சூழ சேனுபதிகள் படைத்தலைவர்கள் தாழவும் கட்டியக்காரர் கட்டியங்கூறவும் கனந்துரைபவர்களிப்போலவும் கணிகையர் நடனமாடவும் கலைவல்லோர்கள்பாடவும் கொலுமண்டபம்வந்து பரதரை யழைத்து இன்றுமுதற்கொண்டு நம்முடையபட்டணத்தில்வந்திருக்கப்பட்ட தண்டுதளங்களுக்கு என்னென்னதேவை யிருக்கின்றதோ அந்தவஸ்துக்களையெல்லாம் கொடுக்கும்படி நம்முடைய வர்த்தகருக்கு உத்திரவுசெய்து அவ்வர்த்தகர் முன்னடி யென்னகேட்கிறாரோ அதைத்தடையில்லாமற் கொடுத்து வர்த்த ர் தண்டு தளங்களிற் பயமில்லாமல் வரவும் போகவும் சாக்கு சாமான்கள் கொடுக்கவும் வழிகளுண்டாக்கி பட்டணங் காபரா வில்லாம லிருக்கவும் ராமபாணமுடைய பெருமை ராட்சதர்களுக்கும்வானரங்களுக்குந் தெரியப் படுத்தி வர்த்தகரிடம் வாஞ்சையாய்ப் பேசவும் வியாபாரஞ் செய்யவும் அந்த தண்டுகளின் சேனுபதிக்கு அறிக்கை செய்து ஒருவரோ டொருவர் கூச்சல் போடாமலும் சண்டைசச்சரவுகள் செய்யாம லிருககவும் திட்டஞ் செய்யென்று சொல்ல பின்பு அனுமாரை யழைத்து ஓய் அனுமாரே நீரும் அடிக்கடி போய்ப்

பார்த்துக் கொண்டு வாருமென்று ஆக்கியாபிக்க அப்படியே அனுமாருஞ்சென்று அவர்களுக்குஸ்ரீராமபிரானுடைய ஆக்கினையைச்சொல்லி அழிக்கப்படுத்திவர்த்தகரையழைத்துவெவ்வொருவருக்குபதினைவிரம்விழுக்காடு பொன்னளித்து சரக்குகள் சாமான் கொடுக்கும்படி பாறைசாற்றி வைத்தார்கள்

ஸ்ரீராமர் அயோத்தினய அலங்கிர்தஞ்

செய்யச் சொல்லல்

அதன்பின்பு ஸ்ரீராமர்சுமந்திரரையழைத்துநம்முடைய பட்டணமுழுதும் அலங்கிர்தஞ் செய்யுபடபறைசாற்றிவையுமென்று ஆக்யாபிக்க அவ்வாறேசுமந்திரரும் சாம்புவந்தரை யழைத்து வெள்ளையின்மீதேறிப்போய்நம்முடையபட்டணமாதியந்தமும்அலங்காரஞ்செய்யும்படிபறைசாற்றிவாருமென்னஅப்படியேசாம்புவந்தர்பறைசாற்றஅதனைஅயோத்தியாபுரிசனம் கேள்விபட்டு இரவுமுப்பது நாழிகைக்கு பந்தங்களேற்றிக்கொண்டுவீதிகளெல்லாம்பச்சைப்பந்தற் களிட்டு சாந்துசவ்வாதுகளினால்திண்ணைகளைமெழுகி சாந்தால்கோலங்களிட்டு வாழைகமுகுகள்நாட்டி பச்சைதோரணம் மாணிக்கத்தோரணங்கள்கட்டிவீதிதோறும் பந்நீருகள்தெளித்துவீட்டிற்குவீடுபதுமைகள் கட்டி கற்பூரதீபங்களேத்திவைகுந்தம்போல பட்டணத்தை சிங்காரித்தார்கள்

ஸ்ரீராமமூர்த்தி கொலுவு



ஸ்ரீராமரவர் காலஜெபதபங்களை முடித்துக் கொண்டுபோசனமருந்திகிரீடந்தரித்து ஆடையாபரணம்பூண்டுமுதுகில்அம்புறாப்பொதியும்கட்டிகையிற்றனுசுபிடித்து கற்பூரதாம்பூலங்களணிந்து லட்சங்கன்னியர்கள் புடைசூழ மத்தளருத்திரவீணைமேளதாள சங்கிதங்கள் முழங்கவும் முன்கட்டு வாசற்படியுந்தாண்டி ஆசார வாசலில்வந்தார் முப்பத்திரண்டு விருதுகளும் பிடித்து நவரத்ன குடைகள்கவியஆலவட்டம்பரிமாற மயிற்குச்செறிய சங்குகுறிக்க திருச்சின்னம் பணிமாற கட்டியக்காரர் கட்டியங்கூறபொற்பிரம்புக்காரர் வெள்ளிப்பிரம்புக்காரர் பராமரிபண்ண மின்னார்கள் நிர்த்தனம்புரிய சபாமண்டபம் வருகிறபோது சுக்ரீபன் அனுமார் அங்கதன் சாம்புவந்தர் இருபத்தாறு படைத்தலைவரும் வந்துசுவாமிக்கு தண்டஞ்சமர்ப்பிக்க அவர்களுக்கு ஆசிர்வதித்தார் அப்போது பரதலட்சுமணர் சத்துருக்கர்வந்து அடிபணிய அவர்களும்வாழி கூறியபின்பு ஐம்பத்தாறு தேசத்தரசர்களும் அடிபணிய அவர்களுக்கும் ஆசிர்வதித்து சபாமண்டபத்தில் வீற்றிருந்தார் தம்பிமர்களும் ஒருபடிதாழ வுட்கார்ந்தார்கள் ராசமன்னர்களும் உட்கார்ந்தார்கள் விபீஷணாதியர்கள் மகாமாயன் சலவசந்தன் தேவசுந்திரன்குகன் படைத் தலைவர்களும் சேனாதிபதிகளும் வந்துவணங்கி ஸ்ரீராமபிரானால் ஆசிர்வாதம்பெற்று உட்கார்ந்தார்கள் இப்படி தேவேந்திரன் கொலுவில் பதின்மடங்கதிகமாக ஸ்ரீராமமூர்த்தியானவர் நிறைந்த கொலுவா யிருந்தார்.

வதிஷ்டர்வருதல் விருத்தம்.

கரத்தினிற்றண்டுகொண்டு காவிவேஷ்டியுந்தரித்து, திருத்தமாய்தற்பைபுல்லுஞ் ஜெபமாலையொருகையேந்தி, அருத்தியாய் ரவிகுலத்திற் கண்ணலாம்ராமர்முன்பு, வருத்தமிவ் வதிஷ்டர்தாமு மகிழ்வுடன் தோன்றினாரே.

வசனம்.

அப்படியிருக்கிறபோது சித்ராபர்வம் வந்துவிட்டதென்று வதிஷ்டமகாமுனிவர் சிலரிஷிகூட்டங்களுடனெழுந்து அயோத்தி வருகையில் அயோத்தியலங்கிர்தமும் அயோத்தியைச் சுற்றி யானை குதிரை தண்டு தளங்கள் வானரக்கூட்டம் எள்ளுவிழுந்தால் எடுக்கவிடமில்லாமல நிறைந்திருப்பதை வதிஷ்டர்பார்த்து ஆச்சரியங்கொண்டு ராமனுடைய பாக்கியமே பாக்கியமென்று மனதில் வியப்புற்று அம்முனிவர் வரும்போது வானரகூட்டங்களும் ராட்சதவீரர்களும் ராசகூட்டங்களும் பார்த்து ராமமூர்த்தியினுடைய குருவாகிய வதிஷ்டமாமுனிவர் வருகிறாரென்று எழுந்து கைகுவித்து நின்றார்கள் அவர்

ளுக்கெல்லாம் ஆசிர்வதித்து சபாமண்டபம் வரு கையில் ஸ்ரீராமமூர்த்தியானவர் கொலுவிருக்குஞ் சர்வத்திராளுடனும் எழுந்தெதிர்சென்று அழைத்து வந்து அர்க்கியபாத்திரங் கொடுத்து ஆசனத்தில் அவரை வீற்றிருக்கச்செய்து யாவரும்நமஸ்கரித்தார்கள் அவர்களுக்கு ஆசிர்வாதஞ் செய்து உட்கார செலவுகொடுத்து வசிஷ்டமகாமுனிவர் கூறுகிறார்.

யாகமண்டபம் நியமித்து அஸ்வத்தைவிடுதல்.

விருத்தம்.

வள்ளலாமுனியரைந்த வாய்மையைக்கேட்டுராமர்
உள்ளதோர்குதிரையெல்லாமுடனவர்வந்துபார்த்து
வெள்ளையாமிட்சணத்தில் விரமுமுள்ளதாகத்
தெள்ளியயாகத்திற்கு தேசியைக்கொண்டுவந்தார்.

வசனம்.

வாரும் ஸ்ரீராமபத்திரா சித்திராபர்வம் நவமிவந்துவிட்டது இப்போதுமுகூர்த்தம் நன்றாயிருக்கிறது யாககுண்டம்வெட்டுபவனும் யாகத்துக்கு வேண்டிய முஸ்தீப்பெல்லாம் அழைப்பிக்கவேண்டும் சுருதியாய் அஸ்வத்தையும் அழைப்பியுமென்றார்அதுகேட்டு ராமபத்திரரும் அனுமாரையழைத்து ஓய் அனுமாரே நம்முடைய குருசுவாமி உத்திரவுசெய்த பிரகாரம் யாகமண்டபமுஞ் சிங்காரித்து யாகமுஸ்தீப்பும் அஸ்வமும் யாககுண்டமுங்கட்டி தயார் செய்யென்று உரைக்க அனுமார்பாக்கியமென்று நளனையழைத்து ஆக்யாபித்து உடனே நீலனையழைத்து அஸ்வத்தைக் கொண்டுவ வென்றுரைக்க அவ்வாறே அவர்கள் யாகமண்டபம் சோடித்து சாமக்கிரியை முதலானதும் கொண்டுவந்துநிறுத்தி அனுமாருக்குச் சொல்ல அனுமாரும்ராமரும் வசிஷ்டமுனிவருக்குபசா அந்தவசிஷ்டராவைர் சிலரிஷிக்கூட்டங்களுடன் எழுந்திருந்தார்.

அவருடன் ஸ்ரீராமமூர்த்தி பரதலட்சுமணர் சத்துருக்கர் அனுமார் விபீஷணர் மாலியவான் மகாமாயன் சலவசந்தன் தேவசுந்தரன் காலசித்தன் வாலுகோபன் நீலாட்சதன் சுதன் பஞ்சகண்டன் சுதாட்சதன் சுக்ரீபன் அங்கதன் நீலன் குமுதன் சாம்பன் தேசபரக்கன் மாதுவாசி அகம்பன் திப்பசாதன் துன்முகன் சூரசேனன்என்றசொல்லப்பட்ட சகலமானபேரும் சபாமண்டபம்போய் உட்கார்ந்தார்கள்.

அப்போவசிஷ்டருத்தாரப்படி அஸ்வமேதகுதிரையை கங்காதீர்த்தத்தில் ஸ்நானம்பண்ணிவைத்து ஸ்ரீராமரும் தங்கச்சிலையாற்செய்துசீதையம்மனையுங் குளிப்பாட்டிபட்டபாணமுடித்து அத்திபலகையின் மீதுஉட்கார்ந்துவசிஷ்டரும் மந்திரஸ்தாபனஞ்செய்து யாக குண்டத்தில் அக்கினிதேவனைநிறுத்தி அந்த அக்கினி குண்டத்தில சமுத்துகளையும் நெய்களையுஞ் சொரிந்து வசிஷ்டரும் ராமரும் தங்கசிலைக்கு யாக தீட்சைகொடுத்து அதன்றகு அஸ்வதித்திற்குநவரத்தினாபரணங்கள்தருவித்து கந்தபுஷ்பதாம்பூலம்நைவேத்தியங்களினால் அஸ்வத்திற்குபூசைபண்ணி மந்திரஸ்தாயனஞ் செய்து தன்னுடையபிரதாப சவுரியத்தைஒருதங்கப்பட்டத்தில் எழுதி குதிரைநெற்றியிற்கட்டி ஐம்பத்தாறுதேசத்து ராசாக்கள்விருதுகளையெல்லாம் அசுவத்தின்நாலுகால்களிலுங்கட்டி யாக குண்டத்தை மூன்றுதரம் பிரதட்சணம் பண்ணிவைத்து சகலதேவமந்திரங்களும்ஆவாகனம்பண்ணிமேளவாத்தியங்களும்தாம்தாமென்று முழங்கும்படியாய் அயோத்தியாபுரி பட்டணத்தைபிரதட்சணம்பண்ணிவெத்து குதிரைவிடுத்து அறுபதினாயிரம் பிராமணருக்கு ஆனை ம குதிரை ம சேவகர்ஸ்திரீகள்மு நபுறுஞன்றுக்கு ௱ பாரந்தங்கம் இவ்விதமாகக்கொடுத்தபின்பு சொல்லுகிறார்.



ஸ்ரீராமர் சத்துருக்கருக்கு விடைகொடுத்தல்

விருத்தம்

தம்பிசத்துருக்காநீதான் சதுரங்கசேனையோடு
செம்மையாயயோத்தியோசை சிறந்திடசென்றேயிந்த
அம்புவிராலுதிக்கும் அஸ்வத்தையதியப்பண்ணி
சம்பிரமதாகயிங்கு சலுதியில்வருவாயே.

வசனம்

தம்பிசத்துருக்காபிரசாட்சியமிகவுமாகவொட்டாமற்சீக்கிரமாகதிக்குவிஜயஞ்செய் துசனுதியில்வரவேணுமென்றுசொல்லவேவாரும்அண்ணாவேஉம்முடையமனதின்படிசனுதியில்வருகிறேன்செலவுகொடுமென்றார்இப்போதுராமமூர்த்தியானவர் ஒசலவசந்தனேமகாமாயனேநீங்களுவ திரையின்பின்சென்று எதிர்த்தராசாக்களை வென்றுவரவேண்டுமென்று விடைகொடுத்து சேனநிபதியான காலசித்தனையும் படைத்தலைவனான நீலாட்சதனையு அழைத்து நம்முடைய சேனைகளில் நல்லவீரராயிருக்கப்பட்ட ஐம்பதுவெள்ளம் ராட்சதர்களுடன்நீஙகளும்போய்வாருங்களென்று அவர்களுக் கட்டளையிட்டு அதன்பின்பு இருபதினுபிரம் அக்ரோணி சேனைகளுக்கும்அதிகார





கர்த்தனை சூரசேனமகாராசனைப் பார்த்து ஓய்சூரசேனனே நமது தேசத்தில் வந்திருக்கப்பட்ட ஐம்பத்தாறுதேசத்து ராசாக்களையும்அவர்கள்சேனைசைநியங்களுடன்கூட்டிக்கொண்டு அஸ்வத்தின் பின்போ எதிர்த்தராசாக்களை சங்கரித் துதிக்குவிஜயம்பண்ணிவாருமென்றார்

சத்துருக்ன சேனசைனியங்களைகூட்டிக்கொண்டு

குதிரையுடன் புறப்படுதல்

விருத்தம்,

தண்ணுறுமன்னரேயிக்கதிருள துரகந்தன்னை
வண்ணமாயலங்கரித்துவளர்ப்பட்டங்கட்டிவைத்தே
மன்னுறுவீரசூரன் மன்னவரெவரானாலும்
திண்ணுறமிதைபிடித்தார்சயம்பெறசண்டைசெய்வீ

வசனம்,

இப்படியாக ராமபத்திரசுவாமியாரனுமதிபெற்றுகாலசித்தனெனவன் யாகசுண்டமண்டபம் கோட்டைக்குவெளியில்வந்து ராட்சததண்டிற்புகுந்துநீலாட்சதனைக் கூட்டிக்கொண்டு தண்டைவெளிப்படுத்தினர் எப்படி யென்றால் கன்னமதம் கரடமதமென்றும்மதங்களைப்பொழிந்துகொண்டு மேகங்களானதுகன்னங்கரேலென்றுவந் தசூழ்ந்தா லெப்படியோஅப்படியாகஆனைகளின்பேரில் அம்பாரிசவுடால்கள்வைத்துஅதிகவீரபராக்கிரமமுள்ள ராட்சதர்கள் புறப்பட்டார்கள் அதன்பின்னல் எட்டுகுதிரை பதினறுகுதிரை முப்பத்திரண்டுகுதிரை பூட்டியும் யானைகள்பூட்டியும் புலியாளிபூட்டியுமிருக்கப்பட்ட ரதத்தின்பேரில் ராசமன்னர்கள அஸ்திரசஸ்திரங்களை ஏற்றிக்கொண்டு புறப்பட்டார்கள் அதன்பின்பு சூரியன்ரதத்திற்கட்டிய புரவிகளுக்குசமானமானபுரவிகளின்மீதில் இராட்சதாள்பட்டாயுருவிகையிற்பிடித்துக்கொண்டுபுறப்பட்டார்கள் அதன்பின்கால்பிலமானஇராட்சதாளோ வென்றால் பரட்டந்தலையும் சுருட்டயிருள்ளவர்களால் முகத்திலே அக்கினி குடியாயிருக்கும் கண்களோடு நெருப்புபொறி பறக் கும்மூக்கினிலே கோபமானது குதிகொள்ளும் மீசைகளோஎந்நேரமும்படபடவென்று துடிக்கும் பற்களோயாமல் நறநறவென்றுகடிப்பார்கள்கைகளோ எந்நேரமும் காட்டைதுழாவிக்கொண்டிருக்கும்கால்களோ எதுவேளையும் நடந்துக்கொண்டிருக்கும் அவர்கள் குணமோ பசித்தபோது தாய்தந்தையானலும்பாருமற்கொன்று வாயிற்போட்டுகொள்வார்கள் அவர்கள் கைகுத்துக்கோ இந்திரபர்வதம்எமபரவதமானலும் தும்புதூளாய் விபூதிபடலமாய்ப் போய்விடும் அவர்களுடைய பலமோ ஆயிரத்தைந்நூறுசிபம்பம்பலமபடைத்தராய் அப்பேர்ப்பட்ட ருக்ஷதாள் நூற்றுக்கொன்ருய் பொருந்தி இருபத்துநாலுவெள்ளம்ராட்சதாள்கத்திகேடயம் இருப்புலக்கைவலைதடிசக்கரம்குந்தம்வேல்கதையிப்படி சொல்லப்பட்ட ஆயுதங்களெடுத்துக்கொண்டுப்புறப்பட்டார்.

அதல்லாமல்சூரசேனனும் உக்கிரசேனனும்சபாமண்டபத்தைவிட்டு புறப்படவேஈலாயிரம்அக்ரோணி ரதங்களும்பதினயிரமக்ரோணிகுதிரைகளும்முப்பத்திராயிரமக்ரோணிகாலாட்களும்புறப்படவே அது

கண்டு குகனும் மகாதயந்தஅனுமானுமாதமேறிப்புற
ப்பட்டார்கள் அப்போது அஸ்வமேத குதிரையானது
தன்னிச்சயாய் வடக்குமுகம்நோக்கி போகிறபோது
குதிரைநிஷ்டார்ந்தகவிடத்திலும்மசாந்திகள்பண்ணி
வைத்துதானதருமங்கள்செய்துபின்னுங்குதிரைதன
னிச்சையாய்நடந்துபடித்துக்கொண்டால்அங்கே தன்
டிறங்கி அவ்விடங்களிற்கோவிற்கட்டியுகுளங்கள்வெ
ட்டியும்பிரதட்சணமாய்சத்துருக்கமகாராசாகுதிரை
யின்பின்னேவர அப்போதுகுதிரையானது அயோத்தி
யைவிட்டு காடுசெடி மலைகுன்று ஆறுகழிகுளம்கிரா
மம்காடுசிமைஇவைகளைக்கடந்துநடக்கிறபோது கண்
டராசாக்களெல்லாங் குதிரைக்கு கைகூப்பிகும்பிட
இந்தப்படியாய்மதனுபுரி பட்டணத்தின்சமீபம்போய்
ஒருமரத்தின்கீழ் பச்சென்றிருக்கிறபுல்லைக்கண்டுமே
ய்ந்துக்கொண்டிருந்தது

வீரசேனமகாராசன் குதிரையைப்பிடித்தல்.

விருத்தம்.

சிறாந்கிடுத்த சுவேதவாம்புரவிசெறியுருண்வ
னமெலாங்கடந்து பூதலமதிக்குமட்சயன்றந்தபுத்திர
ன்வீரசேனன்கோலேதஞ்செலுத்திமதனுபுரியென்னு
முலகில் நகரத்னதச்சார்ந்து போதவர்வாவிக்கறைம
ருக்குற்றே புற்களை மேய்ந்திருந்தனனே

வசனம்,

அந்தப்பட்டணத்தையாளப்பட்மட்சயந்தமகா
ராசாவின் குமாரன் வீமராசனென்பவன் அவனே அரி
பக்தன் சத்தியவாசன்மகா வீரபராக்கிரமன் அவன்கை
வில்லுக்கு அரியரப் பிரமாதிகளும்நிகரல்லமகாவரப்
பிரசாதி அவன்வித்தைபுத்திஸ்ரீமன்நாராயணரேயறிய
வேணும் அவன்கையிற்குதிரைபிடிபட்டதேயானால்
திரிமூர்த்திகளாலும் விடுவிக்கக்கூடாதென்றுதேவர்
கள் பேசிக்கொண்டுசத்துருக்கனுடையயுத்தம்பார்ப்
போமென்று அந்தரத்தில்வந்துநின்றார்கள் அப்படியி
ருக்கவீரசேனமகாராசன் ஸ்ரீலோலகாமாந்தகாரகை
கன்னியாஸ்திரிகளுடனேகோட்டை விட்டுநந்தவனம்
வந்துஜலக்கிரீடைசெய்துவருகிறபோது அஸ்வமேத
குதிரையைக்கண்டு சந்தோஷமாய் தன்னருல்வந்து
நெற்றியிற் கட்டியிருக்கப்பட்டதைவாசித்துப்பார்த்
து அதிலெழுதியது தென்னவென்றால் சூரியவம்சத்து
ராசாவாக சூரியனைப்போற் றுலங்காநின்ற பிரதாப
சவுரியமுள்ளவ ஆயிரத்தெட்டமும் இருநூற்றிரு
பதினுலுபுவனமுப்சத்தசாகரமும்சரேமுபதினுலல
கத்தையும்ஏகசக்ராதிபதியாய்ஆளப்பட்டராவணேஸ்
வரனை செயித்ததசரதகுமாரனுனராமபத்திரசுவாமி
விட்ட குதிரையின்பின்னேவருகிற மேட்டானமேட்
டியான சத்துருபயங்கர தனுவேதசாஸ்திரரணரங்க
சூரன்சத்துருக்கன் வருகின்றான் அச்சத்துருக்கன்
செயிக்கந்தக்க சாமார்த்தியமுள்ள பேரிருந்தால்இந்
தகுதிரையைபிடித்துக்கட்டி யுத்தஞ்செய்சாமார்த்தி
யமில்லாதவர்கள் குதிரைக்குத்தெண்டனிட்டுகாணி
க்கை கப்பங்கொண்டுவந்து சத்துருக்கனைவணங்கி
பிழைக்கலாமென்றெழுதியிருந்தது

இதைவீரசேன மகாராசன்பார்த்துகுஞ்சிரிப்பு
கொண்டுதலையையசைத்துசொல்லுகிறான்ஐயா ஸ்ரீரா
மன் புத்தியில்லாமற்கர்வித்தானேகையாலாகாதசில
ராட்சதாளைக்கொன்றேமென்றுதன்பெருமையைதா
னேசுத்தவீராதிவீரன்ரணரங்கசூரனுனசத்துருக்கன்
வருகிறானென்று எழுதிவிட்டான் நம்மையெல்லாம்
பெண்களாக்கினுன் அவன்தானே மீசையுள்ளவன்
ஸ்திரீகளைகண்டவன் அவனுடைய சவுரியத்திராணி
யைப்பார்ப்போமென்று பற்களைநறநறவென்றுகடித்
து சேவகரைபார்த்துகுதிரைபிடித்துதன்பட்டணங்
கொண்டுபோகச்சொல்லி அங்கிருந்தபடி தன்சேனை
களுக்கெல்லாந்தளகர்த்தனுனசுவேதனையழைத்து
ரதகஜதுரகபதாதிகளை தயார்பண்ணென்றுத்தரவு
செய்ய வந்தப்படியே சுவேதனுந்தண்டைவெளிப்
படுத்தினுன் கன்மதகபோலமத கரடமத மென்று
மும்மதங்களும் பொழியப்பட்ட அயிராவதத்திற்கு
சமானமானயானைகள்பேரிலேராசாக்கள்ளேறிக்கொ
ண்டு கையில்விற்பிடித்து மாவுத்தனை எகசரித்துஜம்
பதக்குரோணியானைகளநடத்தினார்கள் அதன்பின்னே
மேகமண்டலத்தையளாவிக்கொண்டிருக்கிறரதங்கள்
மீது சுத்தவீரரானராசாக்களேறி அஸ்திராயுதங்களை
மிதமில்லாமலேற்றிக்கொண்டு சாரதியை எச்சரித்து
ரதத்தைதாண்டினார்கள் அதெவ்வளவென்றால் யிரு
நூறக்ரோணிபாம்அதன்பின்கால்பிலமானசேனைகள்
கையில் ஆயுத அஸ்திரங்களெடுத்துகொண்டு புறப்
பட்டார்கள் அதெவ்வளவென்றால் நானூறக்ரோணி
சேனைகளாம் தளகர்த்தரானஇருபத்தைந்துராசமன்
னரும்புறப்பட்டார்கள் இதைசங்கதியைமட்சயந்தன்
கேள்விப்பட்டு அனகசேபாமுண்டாகி ஆளிக்கொடி
பறக்கு படிரதமேறிப்புறப்பட்டான் அவன புறப்
படவே பன்னீராம் மந்திரிகளும்ரதமேறிப்ரதான
மானுர்கள் ஒருபந்தியாய்போசனப்பட்ட பதினுயிர

ரசமன்னருந் துணையாகவந்தார்கள் அந்தச் சமயத்தில் முப்பத்திரண்டு மேளவாத்தியங்களும் தாம்தாமென்று முழங்கவும் கோட்டைக்குவெளியிலே நல்லயிடமு வெளியைப்பார்த்து தண்டுகள் பவுஞ்சிட்டு நிறுத்தி ரணபேரிகை கொண்டடித்தார்களாம் அதெப்படி யடித்தார்களென்றால் ரணம் பிணம் கணம் புணம் அணம் ளம்ஸினம் என்றடிபடுதாம் அதுகேட்டு சகலருந் திகைக்கிட்டார்கள் அந்தசத்தம் வீரசேனமகாராசன்கேட்டு மனச்சஞ்சலப் படாமல் ஒருக்ஷணத்தில் ரணவரிசை பூண்டு வில்லைக்கையிலெடுத்து ரதமேறி தண்டுக்குமுன்னாகவந்து வில்லைக் குணத்தொனிபண்ணினான்



வீரசேனமகாராசன் நீலாட்சதனைவெட்டுதல்

அப்போது குதிரையின்பின்னேபோன ராட்சதாள் குதிரைபிடிபட்டு போயிற்றென்று சேனாதிபதியான நீலாட்சதனுக்குச்சொல்ல அதுகேட்டு நீலாட்சதன் கோபக்குரோதமாய் அதிவேகமாய் ரதத்தை நடத்தி வீரசேனனைப் பார்த்து ஓய்ராசனே கேளும் ராமமூர்த்திவிட்ட அஸ்வமேத குதிரையை ஏன்பிடித்தாய் என்னுடையபாணஸ் திரத்துக்கு இரையாகாமல் காணிக்கை கடபங்கொண்டு வந்து சத்துருக்கமகாராசனை வணங்கினாலாயிற்று இல்லாவிட்டால் ஒரேபாணத்திலே உன்னையும் உன்சேனைகளையுங் கொன்று பட்டணத்தைக் கொள்ளைவிடுவிப்பேன் அப்படிவரவொட்டாமல நடந்துக்கொள்ளென்றான் நீலாட்சதன் அதைக்கேட்ட வீரசேனமகாராசனுக்கு கண்களிரண்டும் நெருப்புப்பொறி பறக்க காதுகளிரண்டும் புகைகளெழும்ப மீசைகள் துடிக்க பற்கள் நெறநெறவென்று கடித்துச்சொல்லுகிறான் அடாராட்சதப்பட்டிமகனே அச்சமயமில்லாமல் என்னவசனஞ் சொன்னாய் சத்துருக்கனுக்கு வணங்கா விட்டால் என்னையும் என்சேனைகளையும் ஓரோபாணத்தால் வென்று என்பட்டணத் தையுங் கொள்ளையிட வல்லவனோ இதோ உன்னை என்னுடைய வாளாயுதத்தினால் ஒரேவீசாகவெட்டுகிறேன் பாரென்று வெட்டித்தள்ளினான் அத்தோடே நீலாட்சதன் எமலோகம் போய்ச்சேர்ந்தான்.

முதல்நாள்யுத்தம்

அதுகண்டு பதினாயிரம் ராட்சதாளும் வீரசேனமகாராசாவை வளைத்துக்கொண்டுயுத்தம்பண்ணினார்கள் அப்படிவந்து யுத்தம்பண்ணின ராட்சதர்களையெல்லாம் ஒவ்வொருவருக்கு நான்குபாணம் விட்டு எமலோகமனுப்பிவிட்டான் அதிலொருராட்சதன் தப்பித்துக்கொண்டு ஓட்டமாகஓடி வெகுதூரம் வருகின்ற தண்டுக்கு அதிபதியான காலசித்தனைக்கண்டு நமஸ்கரித்து சொல்லுகிறான் ஐயா காலசித்தனேகேளும் மதனாபுரி பட்டணத்தை யாளப்பட்ட மட்சயந்தமகாராசன் குமாரன் வீரசேனமகாராசன் நம்முடையகுதிரையைப பிடித்துக் கட்டி சேனாதிபதியான நீலாட்சதனையும் பதினாயிரம் ராட்சதாளையுங் கொன்றுவிட்டான் நான்மாத்திரம் தப்பிப்பிழைத்தோடி வந்தேனென்றான் அதுகேட்டு காலசித்தனானவன் சத்துருக்கமகாராசா வினிடம் வந்து ராட்சதன் சொன்ன வசனமெல்லாஞ் சொன்னான் அதுகேட்டு சத்துருக்க மகாராசனானவன் வெகுகோபதீப்தனாய் கண்கள்சிவந்து பல்லைநறநறவென்று கடித்து உக்கிரமாக ரதத்தைநடத்தவே யானைதேர் பரிசேனைகளும் அதிவேகமாய் நடந்து வருகிறபோது பூமியானது திடுதிடென்ற திராதிசேஷநெளிய அஷ்டகுலபர்வதங்களும் கலங்க அஷ்டதிக்குமதிர ஆர்பரித்துமதனாபுரிபட்டணத்து மத்தியில் வெட்டாப்பரவெளியிற் பாளையம் வந்திறங்கியது அப்போது சூரசேனனானவன் ஜெனங்களை சீக்கிரமாக வளைத்தான் எப்படியென்றால் ராட்சதாளுடைய யானை தேர்பரி சேனைகளை உள்சுத்தாக நிறுத்தி ராட்சதர்களையும் படைத்தலைவர் சேனாதிபதிகளையும் எட்டுதிக்குபதினாறுகோணமாய் திரும்பி பிரித்துவைத்து ராட்சதர்களுடைய யானைசேனைகளை யெல்லாம் ராட்சதாளுக்கு சுற்றிலும் நிறுத்தி ஐம்பத்தாறுதேசத்து ராசாக்களையும் சக்கிரவியூகத்துக்கிரண வாசிகளைப்போல, பதினாறு திக்கிலும் நிறுத்தி சத்துருக்க மகாராசனைவுள்ளணியிலே வைத்து உக்கிரசேனனையும் மட்சயந்தஅனுமானையும நடுவணியிலே வைத்து தசன்முன்னணியில்நின்று சலவசந்தனையும் முன்னணியில் நிறுத்தினான் அப்போது ரணபேரிகையடைந்தார்கள் அதெப்படி பட்டதென்றால் ஜெய ஜெயவென்றடி பட்டதாம் அதுகண்டு சேனைகளியாவருஞ் சந்தோஷ மானார்கள்.



வீரசேனனுக்கும் சூரசேனனுக்கும் யுத்தம்.

கலிவிருத்தம்

அந்தவண்ணனருட்சூரசேனனும்
வெந்தழற்கணையேந்திவிரைவினில்
விந்தைசேர்சூரசேனனைமேவியே
முந்துபோரின்முனைகொண்டுநின்றனர்.

வசனம்.

அப்போது சூரசேனனனவன் ரதத்தைநடத்தி வீரசேனன் முன்னுக்கு கொண்டுபோய் வீரசேனனைப்பார்த்து ஒருவசனஞ் சொல்லுகிறான் அடாவீரசேனா நீயோஎங்கள்முன் நிற்கிறவன் வீண்சண்டை பண்ணவேண்டாம் குதிரையைக் கொண்டு வந்துவிட்டு சத்துருக்கராசனை வணங்கி பிழைக்கிறதே நலமென்று அதைக்கேட்டு வீரசேனன் அதிககோபமாகி சூரசேனனைப் பார்த்துச் சொல்லுகிறான் அடா சூரசேனா பேருக்கென்று நேராகவந்தால் வீரமுடைய யாவருக்கும் அதிவீரசூரகெம்பீரர் உங்களுமிஞ்சின சுத்தவீரர் இந்த என்பூமியிலுங்கிடையாதே இதோ ஒருக்ஷணநேரத்தில் உங்களுடைய நாமங்கள் வெளிப்படுத்திவைக்கிறேன் நில்லுநில்லுமென்று வில்லைக்குணத்தொனி செய்து பாணங்களைப் பிரயோகம்பண்ணி வருகிறபோது சூரசேனனனவன் களையாமல் இளையாமல் ரோஷத்துவேஷனாய் வில்நாணி பிகிந்து அஸ்திரங்களை யறுத்தெரிந்து பத்துபாணம் விட்டு வீரசேனனுடைய மார்பிலணிந்த கவசத்தையும் பொடியாக்கிவிட்டான் அந்தவிற்குணத்தொனி சத்தங் கேட்டு இருதிறவர் சேனைகளும் கலந்து யுத்தம்பண்ணினர்கள் அதுகண்டு வீரசேன மகாராசனுக்கு பொல்லாக் கடுங்கோபமுண்டாகி மீசைகள் படபடவென்று துடிக்க தன்னுடையதேரை அதிவேகமாக கொண்டுவந்து முன்பாகநிறுத்து அடாசூரசேனா ஏன்தலைகீழாய் விழுகிறாய் பொறுபொறு என்று முன்னின்று போராடமாட்டுவாயோ வென்று கெர்ச்சித்து தன்னுடைய வில்லிலே அதிகதீட்சண்யமான பாணங்களை எடுத்து சந்தித்து பிரயோகம்பண்ணி சூரசேனன் நேராகவெய்தான் அந்தபாணங்களில் சூரசேனன் அடிபட்டு மிகவும்நொந்து ஆயாசமுற்று தன்னுடைய வில்லிலே விடுபட்டு குபீலென்று நெருப்புகளைவாரியிறைத்துக் கொண்டு எரிபுகைகளுடன் சடசடவெனத் தொனிகளுடன் அதிவேகமாய்வந்து சூரசேனனுடையவில்லை யிரண்டுதுண்டா யொடித்து அவன் மார்பிலிருந்த கவசங்களையும் பொடியாக்கி ரதசாரதி குதிரைகளுடனே அதம்பண்ணிவிட்டது அதுகண்டு சூரசேனன் உக்கிராகாரத்துடன் வேறொரு தேரேறி வில்லைவளைத்து நாணெறிட்டு மிகவுங்கூர்மையா யிருக்கப்பட்ட பாணத்தைவிட்டான் அந்தபாணம் வில்லிருந்து விடுபட்டு வீரசேனன்தேரை சுக்கல்சுக்கலாய்ப் பேர்தெரிந்து சாரதி குதிரைகளையுங் கொன்றுபிடித்து வில்நாணையை திடீலென்று அறுத்துப்போயிற்று அதுகண்டு வீரசேனன் மறுதேரேறி வில்வளைத்து அக்கினியாஸ்திரத் விடுக்க அதுவில்லிருந்து விடுபட்டு வடவாமுகாக்கினிபோல தகத்தகாயமாய் எரிந்துகொண்டு வேகத்துடன் வருகிறதை சூரசேனன்கண்டு ஒருவருணாஸ்திரத்தைசந்தித்துவிட்டான அந்தவருணாஸ்திர மானது வில்லைவிட்டு வெளிப்பட்டு சப்தமேகங்களும் ஒன்றாய்கூடி இடிமின்னல் குமறலுடனே வருஷித்தாலெவ்வாறோ அவ்வாறு அக்கினியாஸ்திரத்தின் பேரிற்பொழிந்து அவித்துப் போய்விட்டது அதுகண்டு வீரசேனன் பர்வதாஸதிரத்தை எடுத்து வில்லிற்சந்தித்து மந்திராபூதியுடன் அபிமந்திரித்துப் பிரயோகம் பண்ணிவிட்டான் அந்தபர்வதாஸ்திர மானது வில்லிலிருந்துவிடுபட்டு அநேகபர்வதங்களாய் ரூபமுண்டாகிவருகிறதை சூரசேனன்கண்டு முன்னந்தனக்கு தேவேந்திரன்கொடுத்த வச்சிராயுதத்தை எடுத்து விட்டுவிட்டான் அந்தவச்சிராயுதமானது புறப்பட்டு வருகிறவேகத்தில் மலைகுகைகளெல்லா மறுத்துவிட்டு தேவேந்திரனிடம்போய்ச் சேர்ந்தது அதுகண்டு வீரசேனன் மிகவும் உக்கிராகாரனாகசிவசுப்பிரமணியர்கையில் வரம்பெற்ற வேலையெடுத்து அபிமந்திரித்துவிட்டு விட்டான் அந்தவேலானது அண்டபகிரண்டங்களும் குலுங்கதென்மனம் பாடிக்கொண்டு ஓடிப்போனர் அப்படி திகிதிகென் றெரிந்துகொண்டு வருகிறவேலின் பேரிற் சூரசேனனனவன் அதிகதிவ்வியாஸ்திரங்களை ஒன்றின்மேலொன்றாக வில்லிற்சந்தித்து பிரயோகப்படுத்தினான் அனல்களையெல்லாம் வேலானது அறுத்துப்போட்டு சூரசேனனுடைய மார்பில்வந்து தாக்கி முதுகிலுருவிப் போய்விட்டது அப்போது சூரசேனனனவன் அடியற்ற வாழைமரம்போல தேரின் பேரிற் சாய்ந்தான்.



வீரசேனனுக்கும் சூரசேனனுக்கும் யுத்தம்.


கலிவிருத்தம்.

வீரசேனன் விடுத்தவைவேலினாற்
சூரசேனன் துடித்துபல்சோர்ந்தவன்
கோரவாளிகொண் டெங்கணும்பெய்யவன்
வாரங்கண்டு சூரசேனன்நடந்தனன்.

வசனம்.

அதுகண்டு வீரசேனன் சந்தோஷமாய் தேரை நடத்திச் சேனைகள்பேரில் பாணங்களைவிட்டுக்கொல்லுகிறபோது உக்கிரசேனனானவன் ரதத்தை வீரசேனன்முன்பாகக் கொண்டுவந்து நிறுத்தி வில்லைவளைத்துப் பாணங்களைக் கொண்டுவந்து பெய்யவே வீரசேன மகாராசன காலாக்கினிக்குச் சமதையான மூன்றுதிவ்யாஸ்திரங்களைச் சந்தித்துப் பிரயோகம் பண்ணினான் அந்தமூன்று திவ்யாஸ்திரமும் உக்கிரசேனன்காலாக்கினிருத்திரனைப்போற் காய்ந்து ஒன்பதுநாராசபாணத்தை பிரயோகித்தான் அபபோது சேனைகளானது எப்படிவிழுந்ததென்றால் கால்வேறு தலைவேறு கைவேறு முண்டம்வேறு துண்டம்வேறு இப்படியாகவிழுவதைக்கண்ட சலவசந்தன் தேரைச் சேனைகள் பேரிற்றுரத்தி பாணங்களைவிட்டு சின்னபின்னமாய்க் கெல்லுகிற போது சேனைகளானது சலவந்தனைக்கண்டு முன்னின்று உயுத்தபண்ணமாட்டாமல் பார்க்கப்பயங்கரமாய்த் தட்டுக்கெட்டுத்தடுமாறிச் சேனைகள் ஓடத்தலைபட்டது அப்போது சேனாதிபதியான சுவேதன் ஓடுகிறசேனைகளையெலலாம் நிறுத்தி சலவந்தனை வளைத்துக்கொண்டு பாணங்களைப்பூட்டி யெய்கிறபோதுசலவந்தனானவன்பத்து பாணம்விட்டு சுவேதன்விட்டபாணங்களையெல்லாம் அறுத்துப்போட்டு சுவேதனையும் சல்லடைக்கண்களாகத் துளைத்துவிட்டான் அத்தருணத்தில்மட்சயந்தமகாராசன் நாம் இனிசும்மாயிருக்கபோகாதென்று சேனைகளின்பேரில் தென்பாரிசமாய் ரதத்தை நடத்தினார் ரதத்தைநடத்தவே யிருபத்தைந்து லட்சம் படைத்தலைவருஞ் சேனாதிபதிகளும் சேனைக்குக் கிழ்பாரிசமாகத் தேரைநடத்தினார்கள் அவர்கள் புறப்படவேபதினாயிர மந்திரிகளும்மேற்பாரிசமாய் இரதத்தைநடத்திச் சக்கிரயூகமாக யிருக்கப்பட்ட சேனைகள்பேரிலேநாலு மூலை எட்டுதிக்கு பதினாறு கோணமாய் வளைத்து இருதிரவர்படைகளும்ராசாக்களுமுனைந்து யுத்தம்பண்ணிக் கொண்டிருக்கையில் வீரசேனனானவன் மிஞ்சி உக்கிர சேனனுடைய கையில் வில்லைக்கண்டித்தான் அதைப்பார்த்து உக்கிர சேனன் ஒருதண்டாயுதத்தை யெடுத்துக்கிறுகிறென்று சுழட்டி இரதத்தைப் பார்த்து ஒருதெப்பலானது விட்டான் அந்தத்தெப்பல் இரதத்தின்மேலேபரிற்படவே ரதமானது அச்சுவேறு ஆணிவேறு கும்பகலசம்வேறு குத்துகால்வேறு கொடுங்கைவேறு சட்டம் வேறு குதிரைவேறு சாரதிவேறாகத் தூசுதூசாய்ப் போய் விட்டதுகள்

அதனைப்பார்த்து வீரசேனன் லகுவாய் குதித்துத் தானும் ஒருதெண்டாயுதமெடுத்து முன்கந்து பின்கந்துமுப்பத்திரண்டு கந்தும் பாய்ந்தும் உக்கிரசேனனுடைய தெண்டாயுதத்தைப்பார்த்துஒருஅடி விட்டான் அதையவன் தட்டுவிட்டு இடசாரிவலசாரியாக கந்துபாய்ந்து வீரசேனனுடைய சிரசைப்பார்த்து அடித்தான் அதையவன் தட்டிவிட்டு தண்டாயுதத்தைச்சுழட்டி உக்கிரசேனன் உடம் பிற்றாக்கினான் அதற்கவன்மிகவும் நொந்து ஆயாசப்பட்டு தெண்டாயுதத்தைச்சுழட்டி வீரசேனனுடைய புசத்தைப் பார்த்து ஓரடியானது அடிவானமுங்குமுறி நுனிவானமுங்கறுத்து பேரிடிவிழுந்தால் எவ்வண்ணமாகவிருக்குமோ அவ்வண்ணமந்த வீரசேனன் புஜத்தின் பேரில் விழுந்தது ம் அப்படி தெண்டா யுதத்தினாற் கண்டித்த உக்கிரசேனனைப்பார்த்து பல்லை நறநறவென்றுகடித்து கடுங்கோபமுண்டாகி தெண்டாயுதத்தைச்சுழட்டி மூச்சுவிடாமல் மகாராசன்பேரில் சாடுகிற போது உக்கிரசேனனானவன் வீரசேனமகாராசனுக்குப்பின்வாங்காமல் தன்னுடைய தெண்டாயுதத்தினால் தட்டிவிட்டு வீரசேனமகாராசன் மார்பைப்பார்த்து சிவ்வென்று ஆகாயமார்க்கமாக் கிளம்பிவந்து மார்பிலே ஒருஉதைவிட்டான் அவ்வுதை அவன்தட்டிப் பிடித்து மார்போடு சாத்திக்கொண்டு தனதுடையபலத்தை யெல்லாம் முன்கையிலே வைத்து தெண்டாயுதத்தினாலேமார்பிற்றாக்கினா னதனால் அவன்மார்புதிறந்து உதிரவெள்ளம்பெருகிச் சிவனை விட்டான் அப்போதுவீரசேனன் அவனை விட்டு எழுந்து வேறொருரதத்திலேறி வெற்றிகையெடுத்துப்பம்பம்மென்று ஊதினான் அதுகண்டுஅவனுடைய சேனைகளெல்லாஞ் சந்தோஷமானார்கள் தண்டுகள் மிகவும் விசன மடைந்தார்கள் சூரியனும் அஸ்தமானான்.



இரண்டாநாள் வீரசேனனுக்கும்.
சலவசந்தனுக்கும்யுத்தம்.

விருத்தம்.

செங்கநேர் வீரசேனனும் மூக்ரசேனனைமுடித்துபா சறை பட்டங்கியே வென்றுபோதைப்போக்கிதடவ ரைபொன் இரதமேறி துங்கமாங்கணைகள்மாரிபோற் சொரியந்நாகதர் யாவரும்வெருண்டு மங்குவினேர் கள் சலவனைக் கூடவந்தமர் செயநின்றான்.

மறுநாள் வீரசேனனனவன் சத்துருக்க மகா ராசருடைய தண்டுக்குள்ளே இரதத்தைநடத்தினன் அக்காலையில் சலவசந்தன் மகாஉக்கிர காரனாய் அனேக பாணங்களைவிட்டு சுவேதனது சரீரத்தை சல்லடைக் கண்களாகத் துளைத்து ஒருநாராசம் விட்டு சேனாதிபதியான சுவேதனுடைய சிரசையறு த்து தள்ளிப் போட்டுசேனைகள் பெரிற் கவிந்து இர தத்தை சக்கிராகாரமாய் திருப்பிபாணங்களைமிதமில் லாமல் விட்டு கொல்லுகிறபோது கால்பலமான சே னைகள் சின்னாபின்னமாய் ஓடிபொளிக்கத் தலைபட வே சலவந்தமகாராசன இரதத்தை நடத்திவீரசேன மகாராசனை சக்கிராயுதத்தினுள்ளே போகவொட் டாமல் வளைத்துக்கொண்டு சரங்களை ஒய்ழிச்சலில் லாமலும் விட்டு வீரசேனனை அப்புறமிப்புறம்அசை யவொட்டாமலும் வில்லையெடுத்தப பாணங்களைப் பூட்டவொட்டாமலும் சாரதி இரதத்தைநடத்தவொ ட்டாமலும் பாணங்களால் அடிக்கிறபோது வீரசே னமகாராசன் மிகவும்நொந்து மெத்தவும் ஆயாசப் பட்டுசற்று நேரம் இரதத்திற்சாய்ந்து தெளிந்து வில்லையெடுத்துகிறுந்நிச் சாங்கோபசாங்கமாய்ச் சர மாரிபொழிவதுபோல்பாணசரங்களாலேசலவசந்தன் பாணத்தையறுத்து அவனுடைய ரதத்தை முன்னு க்குவரவொட்டாமலும் செய்தான் சலவசந்தமகரா சன் இடியை போலப பத்துபாணம்பூட்டிவிட்டான் அப்பாணமானது புறப்பட்டு வீரசேன மகாராசன் விடப்பட்ட அஸ்திரங்களையெல்லா மருத்துப் போ ட்டு வீரசேனனுடையரதம் சாரதிகுதிரைகளுடன் பொடிப்பொடியாய் தும்சம்செய்துவிட்டது அதனு லே வீரசேனன் வெருவிலேகுதித்து மறுதேரிலேறி னன் அந்ததேரையும் சலவந்தமகாராசன் மூன்றுபா ணம்விட்டு வுடைத்தெறிந்து போட்டான் இப்படி அறுபதாத சலவசந்த மகாராசனாலேஉடைந்துபோ ய்விட்டது அதுகண்டுவீரசேனன் ஏதடாஇருட்சதன் பொல்லாதவனாயிருக்கிறான் இவனைநேரிலே யுத்தம் பண்ணி செயிக்கவேண்டுமென்றுமறுதேரிலேறி வில் லையெடுத்து நிறுத்திக் குணத்தொனி ண்ணி யுகாந் தகாலத்தில் சப்தமேகங்களும் ஒன்றாய்க்கூடி இடிமி ன்னல்குமுறலுடனே மழைபொழிந்தாலெப்படியோ அப்படி சரவருஷங்களை ஒய்ழிச்சலில்லாமற் பொ ழிகிறபோது சலவசந்தமகாராசன் நூறுதிவ்யாஸ் திரங்கள் விட்டுவீரசேனன்விடப்பட்ட அஸ்திரங்களை யெல்லாம் கண்டித்து அவனுடையமார்பில் க சத் தையும் பொடியாக்கி வில்லினுடைய நாணியையறு த்து வீரசேனனை நோகச்செய்தான் அதுகண்டு வீர சேனன் ஒரு அக்கினியாஸ்திரத்தை யெடுத்துப் பிர யோகம்பண்ணினன் அதுவில்லில்விடுபட்டு சடசடெ ன்கின்ற தொனியுடனே நெருப்புகளை வாரியிறைத் துக்கொண்டு தகத்தகாயமாக காடுசெடிகளெல்லாம் பற்றியெறிய வடவாமுகாக்கினியைப போலும்வரு கிறபோது சலவசந்தனனவன் ஒருவருணாஸ்திரத்தை யெடுத்து அபிமந்திரித்துப்பிரயோகம் பண்ணி விட் டான் அந்தபாணமும் வில்லிலிருந்துவிடுபட்டு வரு கிறபோது சப்தமேகங்களும் ஒன்றாய்க்கூடி சமுத் திரத்து நீரையெல்லாம் வாரிக் கொட்டினதுபோல் அக்கினியாஸ்திரமும் நீறுழமாயுருகிப்பலனுங்குன்றி அடிபட்டுவிழுந்துபோயின அதுகண்டு வீரசேனன் உக்கிரகாரனாகிப் பிர்ம்மாஸ்திரத்தையெடுத்து விபூ திமந்திரங்களுடன் பூசைசெய்து விட்டுவிட்டான்.

இந்தப்பிர்மாஸ்திரமும்வில்லிற்விடுபட்டுகாலக் கோட்டிவிஷம்போலும்நெருப்புகளை வாரியிறைத்து கொண்டு அதிவேகத்துடன்வருகிறபோதுசலவசந்த மகாராசனும் தானும் ஒருபிர்மாஸ்திரத்தையெடுத் துவில்லிற்றொடுத்துமந்திரூந்கொடுத்து ஆவாகன த்துடவேவிட்டுவிட்டார்அந்தப்பிர்மாஸ்திரமும் வில் லில்விடுபட்டு ஒன்றோடொன்று ஊடுதாக்கி யுத்தம் பண்ணிஇருக்கிற பிர்ம்மாஸ்திரமும் மல்லு கட்டி

அடித்தும் உதைத்துக்குத்தியும்வெட்டியும் கட்டியுமெரித்தும்இப்படியாகவெகுநேரம்போராடி கடைசியிலேஇரண்டுமுறிந்து பூமியிலேவிழுந்து விட்டதுகள் அதுவீரசேனமகாராசன்முன்னாலே ஸ்ரீமந்நாராயணநிடத்திலேதவசுசெய்து வரம்பெற்றநாராயணாஸ்திரத்தைக்கையிலெடுத்தான் அப்போதுதேவர்களெல்லாமொருஅண்டம் ஓடிப்போனார்கள்அந்தநாராயணாஸ்திரத்தைவீரசேனனானவன் அபிமந்திரித்துவில்லிற் சந்தித்துப்பிரயோகம்பண்ணிவிட்டான்அஸ்திரம்அண்டபிண்டம் ஆயிரத்தெட்டண்டமுநடுங்கநெருப்புகளை வாரியிறைத்துக்கொண்டு ஆகாயபூமியும் ஒன்றாய் ஆவென்றுவாயைத்திறந்துகொண்டு வருகிறபோது சலவசந்தன்கண்டு தன்னுடைய நாராயணாஸ்திரத்தை யெடுத்து வில்லிற்சந்தித்துப் பிரயோகம் பண்ணினான் அதுவும் வடவாமுகாக்கினியைப்போல்நெருப்புகளைக் குபீல்குபீலென்றுவர்துபாய்ந்தது ஒன்றுடகொன்று யுத்தம்பண்ணி சலவசந்தன்விட்ட நாராயணாஸ்திரத்தை கமளீகரம் பண்ணிப்போட்டு சலவசந்தனையும் அவன்ரதம் சாரதிகளுடனேயும் பஸ்மீகரமா யெரித்துப்போட்டது அப்போதயுத்தம்பண்ணிக்கொண்டிருந்த ருட்சதர்கண்டு ஆயுதஅஸ்திரங்களை கையிலெடாமலும் சிரசின்பேரிற்கைகுவித்து ஸ்ரீமகாநாராயணா நமோவென்று தோத்திரம் பண்ணுகையில் அந்தநாராயண அஸ்திரமானது சகலரையும் பார்த்துக் கொண்டுவந்து சத்துருக்கமகாராசனுக்கு வலமபுரி இடம்புரியாக நமஸ்காரஞ்செய்து அம்புறுப்பொதியில்வந்து சேர்ந்தது.

மகாமாயன் யுத்தம்.

விருத்தம்.



பட்டயம்பரிசுகத்தி பரிவாயுசில்லைகள்பாணம்
திட்டனவெடுத்துக்கொண்டு செருடன்கவசம்பூண்டு
மட்டரச்சென்றவீரசேனனைக் கொல்வேனென்று
கிட்டியேமாயன்வந்து திரிகணைதொடுத்தானன்றே,

வசனம்.

அதுகண்டு மகாமாயன் சிந்தாக்கிரந்தனுடைய ரதத்தைவேகமாகநடத்தி வீரசேனனைப் பார்த்து வில்லையெடுத்து நிறுத்திச் சாககோபசாங்கமாய் அஸ்திரங்களை விட்டு வீரசேனனுடையரதத்தைமுன்னுக்கு வரவொட்டாமல் பாணங்களாலே சாடுகிறபோது வீரசேனன்கண்டு எதடா அந்தராட்சதனிலும்இவனைப்பார்த்தால் மகாபலவானைபோற் காண்கின்றதுஇவன்ரூபத்தை பார்க்கச்சேதானே பயங்கரமாயிருக்கின்றது இவன்வில் மகாமேருபர்வதம்போ லிருக்கின்றது இவன்கோபத்திற்கு ஹரிஹராப்பிரமாதிகளும் நின்று நிர்வாகம்பண்ண மாட்டார்கள்போற் றோன்றுகிறது இவனை நம்முடைய பாணங்களினாலேகொல்லக்கூடாமையாகத் தோற்றுகின்றது ஆகையால் இவனுக்குத்தக்க தேவாஸ்திரங்களை விட்டுத்தான் கொல்லவேண்டுமென்று மனதைத்திடப்படுத்திக் கொண்டு வில்லைவளைத்து தனக்குமுன்னாலே தேவேந்திராதி தேவர்கொடுத்த திவ்யாஸ்திரங்களையெடுத்து வில்லிற்சந்தித்து மகாமாயன்விடப்பட்ட அஸ்திரங்களையெல்லா மறுக்கத்தலைப்பட்டான் அதுகண்டு மகாமாயன் மகாகோபத்துடனே நாகநாராசபாணத்தையெடுத்து வில்லிற்சந்தித்துவிட்டான் விடவேஅதுநாகசற்பம்போல் ஒன்றின்மேலொன்றுடிக் கொண்டு வருகிறபோது வீரசேனன்கண்டு நாகதிவ்வியாஸ்திரம் விட்டு அறுத்தெறிந்தான் அதுபோலவே மகாமாயன் நாககாளியாஸ்திரமெடுத்து வில்லிற்றொடுத்துப் பிரயோகம்பண்ணினான் அந்தநாககாளியாஸ்திரமும் காலகோடிவிஷம்போலச் சீறிக்கொண்டு அதிகவேகத்துடனேவருகையில் வீரசேனன்கண்டு நாககாளியாஸ்திரத்திற்கும் நாக அரத்தசக்திரபாணம்விட்டு அறுத்துத்தள்ளினான் அதுகண்டு தமையன்பல்லைக்கடித்துமுன்னாலே தனக்குஆதிசேஷன்கொடுத்த நாராசபாணத்தையெடுத்து வில்லில்வைத்து மந்திரபூதிகளுடனே பூசைகள்செய்துவிடுத்தான் அக்காலையில்தேவர்கண்டு வீரசேனனிறந்தான்இறந்தானென்று பார்த்துக்கொண் டிருக்கிறபோது அந்தநாமபாணமும் வில்லில்விடுபட்டுவிஷங்களைக்கக்க அந்தவிஷங்களானது பூமியில்விழுந்து அதிலுள்ளபுல்லுபூண்டு மறமட்டைகள் ரதங்கள் சேனைகளெல்லாம்பத்திஎரிய அக்கினி அண்டபகிரண்டமும் சுவாலைகள்வீசசுடசுடவென்கிற தொனிகளுடனேயும் விஷங்களைவாரி நாலுமூலையும் வீசிக்கொண்டு புறப்படவேஅதுபார்த்துச்சகலரும் யுத்தம்பண்ணுகிறதைவிட்டு வேடிக்கைப்பார்த்துக் கொண்டிருந்தார்கள் அப்படியிருக்கவீரசேனனானவன் முன்னாள்தனக்கு இந்திரனளித்த கருடாஸ்திரத்தை யெடுத்துவிட்டான் அந்த அஸ்திரமானதுபுறப்பட்டு மகாமேருகிரிபர்வதம்போலரூபமுண்டாகிசிறகுகளை அடித்துக்கொண்டும்மகாவேகமாய்வந்து அண்டபகிரண்டங்களுந்திடுக்கிடவாற்பரித்து கியாவென்று அட்டகாசம் பண்ணியது அந்தசப்தமானது நாகபாசங்கேட்டு இடிச

ப்தங்கேட்ட நாகம்போல் நிஜிற்பாய்ந்து அந்தவே
ளையில் கருடாஸ்திரமானது லருவுபாஞ்சி அந்தநாக
பாசத்தை சிரசாலடித்து மூக்கிஞற்குத்திப் பொசித்
துப்போட்டது அதுகண்டசகலரும் ஆச்சரியப்பட்டு
யுத்தம்பண்ணிக் கொண்டிருந்தார்கள்,

அப்படியிருக்க மகாமாயனுனவன் அதுடக்கி
த்துடனே கையிலேசூலம் பிடித்துக்கொண்டு புறப்
பட்டார்கள் அவர்களைக்கண்டு வீரசேனன் இதென்
னமாய்கையாயிருக்கின்றது ருத்திரர்களாவது நம்மு
டனேயுத்தஞ் செய்வதேயென்று சற்றுநேரம்யோச
னைசெய்து தன்னுடைய அம்புறுப்பொதியில் கையை
த்து ஒருமகா உக்ரவீரசத்தியையெடுத்து பூசைசை
வேத்தியங்கள் கொடுத்துவிட்டு விட்டானென்றுவெ
ருநிவிரத்தோடுவந்து திவ்வியாஸ்திரத்தைக் கமளிகா
ம்பண்ணிவிட்டுப்போய்விட்டது அப்போதுமகாமா
யன் ஏதடா ஒருமானிடவன் நம்மையெல்லாம் கொ
ல்லவந்த எமனைப்போற் காண்கின்றது நாம்விடப்ப
ட்ட அஸ்திரத்திற்குமுன்னே திரிமூர்த்திகளும் நில்
லார்களே இதனைச் செயிக்காவிட்டால் தேவர்கள்
கண்டால் நகைப்பார்களே நம்மோடொத்த ராட்ச
தர்களும் கைகொட்டிப் பரிகாசம்பண்ணுவார்களே
இவனைமாய்கையினுல் கொல்லுவோமென்றெண்ணி
னுலும் ஒருமானிடவன்முன்னுக்கு யுத்தம் பண்ண
மாட்டாமல் மாய்கையிற் ருதுபண்ணி கொன்றுனெ
ன்றுசகலரும்நம்மை மதியார்களே இதற்கென்னசெ
ய்வோமென்றுயோசித்து முன்பு இவன் வில்லைக்கண்
டித்துப் பின்புகோபதண்டாயுத மெடுத்துக் கொல்
லவேணுமென்றுதிடங்கொண்டுசாரதியையெச்சரித்து
ரதத்தைச் சக்கிராகாரமாய்த் திருப்பி வில்லைநிறுத்
திச் சாங்கோபசாங்கமாக பாணங்களை ஒய்வொழிச்ச
லில்லாமல் யுகாந்தகாலத்திலே சத்தமேகமும் ஒன்
ஒன்றுய்க்கூடி இடிமின்னல குமுறலுடனே மழை
பொழிந்தாலெப்படியோ அப்படிபோலச்சந்துகளில்
லாமல் ஒருஜாமபரியந்தம்மூச்சுவிடாமல் ஒரேமூச்
சாய் பாணமெடுப்பதும் வில்லிற்றெடுப்பதும் ஒருவ
ருக்குந்தெரியாமல் வீரசேனன் வில்லெடுக்க ஒட்டா
மலுந் தேரை அப்புறமிப்புறமசைய ஒட்டாமலும்
திக்குமுக்காடும்படியாய்ப் பாணங்களைவிட்டு அடிக்
கிறபோது வீரசேனனுனவன் அனேக திவ்வியாஸ்தி
ரங்கள்விட்டு அறுத்துக்கொண்டிருந்தான்.

அப்போது மகாமாயனுனவன்கோபதெண்டா
யுதமெடுத்துக்கொண் டோடியுமவந்து கிறுக்றுவெ
னசுழட்டி ரதத்தைப்பாக்கடித்தான் அந்தஅடிபடவே
ரதமானது அச்சுவேறு ஆணிவேறு மச்சுவேறுகும்
பகலசம்வேறு குத்துக்கால்வேறு தஜம்வேறுடால்
வேறுகொடைவேறுகவுடைத்து போட்டானதுகன்
டவீரசேனன்லகுவாய் தப்பித்துக்கொண்டு மறுதேரி
லேறினுன் அந்த தேரையு முடைத்துப்போட்டான்
இப்படி ராட்சதாள் மிகுசியகாலாக்கினி ருத்திரரை
ப்போற்சீறி எழும்பிய சேனைகள்பேரில் விழுந்தயா
னைதேர்பரி சேனைகளெல்லாம் கோபதெண்டாயுதங்
கொண்டு ஜாடுகிறபோது யானைப்பிணமும் குதிரை
ப்பிணமும் ராசிராசியாய் ஒவ்வொருவருக்கு பத்து
லட்சம் இருபதுலட்சம் இந்தபடியாகக கொல்லத்
தலைப்பட்டான்.

அப்போது சேனுதிபதிகளான இருபத்தைந்து
லட்சம்ராசாக்கள் ரதத்தைதிருப்பிக்கொண்டு ஓடுகி
றசேனையெல்லாம்ஓடவொட்டாமல்அடிக்கிறபோது
மகாமாயனுனவன் தெண்டாயுதத்தினுலே விலக்கிவி
ட்டுஅத்தெண்டாயுதத்தை கிறுகிறென்றுசுழட்டி இ
ருபத்தைந்துலட்ச சேனுதிபதிகளுடைய ரதத்தைப்
பார்த்துவிட்டுவிட்டான் அந்தக்கோபதெண்டாயுதம்
ஒருகுழவியும் ரதங்களொருமிளகாயும் பூமியொரு
அம்மியுமாக அரைபட்டசாந்ததுபோல அந்த இரு
பத்தைந்துலட்சம் சேனுதிபதிகளையும் மகாமாயன்
அரைத்துஎமலோகஞ்சின்னுபின்னமாகச்சிதறியோ
டிப போனுர்கள.

அதுகண்டு வீரசேனன்சற்றிளேட்பாறி ரதத்தி
லேறிசாரதியையெச்சரித்துரதத்தை மகாமாயன்முன்
னுக்கு நடத்தி அனைவரும் ஒருமுகமாய்த்திரும்பி
மகாமாயன்பேரில் சரமாய்ப்பொழிந்தான் வீரசேன
னுடைய ரததலைதப்பார்த்துக் கையைமுடக்கி ஒரு
குத்து விட்டான் அந்தக்குத்திஞல் சுக்கற்சுக்கலாய்
ப்பொடிப்பொடியாய்விடவேவீரசேனன் மறுதேரே
றிவில்லைக்குணத்தொனிபண்ணி தொடைதட்டிவுறு
கின்றுன் நிற்கவே மகாமாயன்பார்த்து ஏதடாமா
னிடவனே மகாபலவானுகவிருக்கின்றுன் அனேக
ஞ்சண்டைகளிற் கைகண்டவன்போற்காண்கின்றது
ஆனபடியால் நம்முடனே இரண்டுநாளாய் இரவும்
பகலுமாய்ப் போருடுகிறுன் இவன்மகாசமர்த்தனெ
ன்றுமெச்சி வீரசேனு இதோபார் உன்னுடைய ரதத்
தையும் ஒரேகுத்திஞல் எமலோகங் குடியேற்றிவை
க்கிறேன பாரடா வீரசேனுவென்றுமறுபடியுங்கை
யைமுறுக்கிக்கையில் தன்பலமெல்லாம்வைத்து ஓடி
வருகிறபோது வீரசேனன்கண்டு சிந்தாக்கிரந்தனுய்
விசனப்பட்டு மறுபடியுந் தைரியப்படுத்திகொண்டுவி
ல்லைவளைத்துபார்த்துஎய்திடவே மகாமாயன்கண்டு
அந்தபாணத்தின்பேரிற் குத்திஞன் அந்தகுத்தின்மீதி
ற்படவே நொறுக்கி வந்தவழிபோனவழிதெரியாமற்
போய்விட்டது

கொண்டு வில்லிலவளைத்துப்பார்த்துகண்டங்கதநிரிபாணம்பூட்டி கையைப் பார்த்து எய்துவிடவே மகாமாயன்கண்டு அந்தப்பாணத்தின்பேரிற்குத்தினன் அந்தக்குத்தின்மீதிற்படவேநொறுங்குவந்தவழி போனவழி தெரியாமற் போய்விட்டது.

இப்பால் வீரசேனனுக்கு கண்கள்சிவந்து கடுங்கோபமாகினூறுதிவ்யாஸ்திரம்விட்டுமகாமாயனுடையச்சரீரமெல்லாஞ் சல்லடைக்கண்களாகத் துளைசெய்ய வேகமா மாயன்சிறிகோபமீறி தேரேறிவில்லையெடுத்துமிறுத்தி அனேக அஸ்திரங்களைவிட்டு வீரசேனன்சரீரத்தை துளைசெய்து சாரதி குதிரைகளைக் கொல்லவே வீரசேனன்பார்த்து சற்றுயோசித்து நல்லதென்று கனைத்துக்கதம்பி அடாமகாமாயா ஆகட்டுமென்று வேறொருரதமேறி காளிகாதேவிகையில் வரம்பெற்றசத்தியையெடுத்து வில்லிற்றொடுத்து பூசைநைவேத்தியங் கொடுத்து மகாமாயன் கண்டத்துக்கு லக்குபார்த்துவிட்டான் அந்தசத்தியானது அண்டரண்டங்குலுங்க அக்கினியைவாரி யிரைத்துக்கொடு வருகிற சத்தியின்பேரில்மிகுகமில்லாமல் அஸ்திரங்களைவிட்டு அடிக்கிறபோதுமிகுதியான பாணாஸ்திரங்களை யெல்லா மறுத்துக்கொண்டு மகாமாயனிட நெஞ்சுக்குழியிற் பட்டுருகிபோகவே அடியற்றுசாய்ந்தவனைப்போலத்தேரின்பேரில்விழுந்து ஸ்ரீராமாவென்றுகூவி மகாமாயன்ஆவியைவிட்டான் அந்தரவாசிகளாகிய தேவர்கள் மகாமாயனிறந்தானென்று விசனமுற யாவருங் கூடாரஞ் சேர்ந்தார்கள்.

மூன்றுநாள் யுத்தம்.

மறுநாள்வீரசேனன் வெற்றிச்சங்கையெடுத்துபம்பம் பென்று ஊதினன் அதனைக்கேட்ட ராட்சதர்களெல்லாம் திடுக்கிட்டு மெய்கலங்கினர்கள் வீரசேனனவன்ரதத்தை முடுக்கிக்கொண்டு சக்ரயூகத்திற்குள்ளேநுழைந்து பாணங்களை மிதமில்லாமற் சேனைகளின் மீதுவிட்டு கண்டதுண்டமாகக் கண்டிக்கிறபோது சத்துருக்கமகாராசன்வீரசேனனைக் கொல்லுகிறேனென்று புறப்பட்டான் அக்காலையில் காலசித்தனனவன் ரதத்தைநடத்திச் சத்துருக்கமகாராசனைச் சேவித்து சொல்லுகிறன் ஐயாதேவரீர் இந்தராசனை ஒருபொருட்டா யெண்ணியுத்தத்திற்குபோகவேணுமோ அடியேன்சென்று அந்தவீரசேனனை எமலோகத்திற்குக் குடியேற்றி வைக்கிறேன் பாருமென்று காலசித்தன்கூறவே சத்துருக்கமாராசன் குஞ்சிரிப்புகொண்டு ஓய்காலசித்தனேகேளும் இப்போது ஐந்துதுரைகள் விழுந்து போயிருக்கிறர்கள் ஆனபடியினலே வீரசேனன் மகாபலவான் போற்காண்கிறது ஜாக்கிறதையாயிருந்துபோருடி அவனைக்கொல்லவல்லமையுண்டோ சொல்லென்று சத்துருக்கமகாராசன்கேட்க காலசித்தன்கூறுகிறன் சத்துருக்கமகாராசரே நீரிப்படி பரியாசமான வார்த்தைகளைச் சொல்லவேண்டாம் அடியேனுடைய சவுரியம் மும்மூர்த்திகளுக்குத் தெரிந்திருக்கும் சகல உயிர்களையுங் கொண்டுபோகிற காலனவன் என்கையில் எத்தனைதரமோ அகப்பட்டு அடியும்பட்டு மிகவும்வணங்கினன் ஆனபடியினல்என்பேரால் எமலோகத்திற் கொடியும்பறக்கின்றதுநீர்சலவசந்தன் மகாமாயன்போலென்னை யெண்ணவேண்டாம் இந்தமானிடன் எனக்கொருபெரிசாய் சொல்லவேண்டாம் இதோ ஒருக்ஷணநேரத்துக்குள்ளே அவனையுமவனுடைய சேனைகளையும் என்பாணாஸ்திரத்திற்கு இரைகொடுத்து தேவரீர்பாதம்வந்துசேருகிறேன் பாருமென்று இடிமுழங்குஞ் சத்தம்போல காலசித்தனனவன் உதட்டியாய்ச் சொல்லவே சத்துருக்கரானவர் ஓய்காலசித்தனே வரும்காலம் தேசகாலம் நிகழ்காலமறிந்து யுத்தம்பண்ணி செயிக்கவேண்டும் அதுபோல் வருவது நான்சொன்னேன் நீயேன்கோபித்துக் கொள்ளுகிறய் நீபோயுத்தஞ்செய்து சமாதானமாகச் சத்துருக்கரானவர் பதரவே காலசித்தனனவன் வீரசிங்கந்திரும்பினல் எத்தனைஉக்கிரமாகத் திரும்புமோ அத்தனைவுக்கிரமாகத்திரும்பி வில்லிலவளைத்துப் பாணங்களை விபரீதமாக வீரசேனன்பேரில் எய்கிறபோது அவன்கண்டுவருகிற அஸ்திரங்களையெல்லாம் அறுத்துப்போட்டு காலசித்தன் முன்னுக்குரதத்தை நடத்தி அடாராட்சதா நீயேன் தலைகீழாய்விழுகிறய் உன்னிலும் பராக்கிரமசாலிகளெல்லாம் உனக்குமுன்னமே இறந்துபோனர்கள் அவர்கள் போனவழியைஉனக்குக்ஷணநேரத்திற்காண்பிக்கிறேன் சற்றுநேரம் சாக்கிரதையாயிருந்துபோருடென்று வீரயேனன சொன்னன்.



காலசித்தன்யுத்தம்-விருத்தம்.

கோலமாமதகரிகளுந் துரகமுங்கொடிய
ஆலகாலம்போலார்த்தனவணி நிகழ்தேர்மேற்
காலசித்தனுமேறிவெங்கனலெழவிரித்து
காலமெங்கணுமார்த்திடு நாணொலிசெய்தான்.

வசனம்.

அம்மொழியைக்கேட்டகாலசித்தனானவன் புண்ணிற்வேலாயுதம் புகுந்தார்போற்சீறி அடா வீரசேனா கையிலாகாத சிலராட்சதரைக் கொன்றோமென்று கர்வித்து விசேஷத்தையிஞ்சாதே இதோ ஒருநொடிக்குள் உன்னையும் உன்சேனைகளையும் எமபுரத்தில் ஏற்றிவிடுகிறேன் பாரடாவென்று கையிற்பிக்காநின்ற வில்லுமுகத்திற்கு நேராய்ப்பிடித்து பாணத்தைப்பூட்டிப் பிரயோகம்பண்ணினான் அந்தபாணமானது புறப்பட்டு அதிவேகமாய் வீரசேனனிட மார்பில்வந்து சுருக்கு சுருக்கென்று தைத்தது அதனால் வீரசேனன் மிகவும் நொந்துகாலசித்தனைப் பார்த்து வில்லையெடுத்து நிறுத்தி நூறுதிவ்யாஸ்திரம் விட்டறுத்துப் போட்டான் அதுபோனதே வீரசேனன் வெகுநேரம் கோபாக்கினியுடனேஐம்பது நாராசமெடுத்து ஸிவ்ஸிவ்வென்று விடுத்தான் இதைகாலசித்தன் இருபத்தைந் நாராசம் விட்டறுத்தான் அந்தப்பாணம்போகவே வீரசேனன் பின்னும் நூறுதிவ்யாஸ்திரமெடுத்துப் பிரயோகம்பண்ணினனதற்குகாலசித்தன் ஐம்பது காளியாஸ்திரமெடுத்து உடனே அதைக்கொய்யவே வீரசேனன் மகாஉக்கிரத்துடனேவில்லுமுகத்திற்கு நேராய்ப்பிடித்து சலவருஷம் போல்சொரிந்தான். அதற்குக்காலசித்தனானவன் வருகிறபாணங்களைஎல்லாம்அறுத்துத் துஞ்சப்படுத்தி பத்துதிவ்யாஸ்திரங்களைஎய்து வீரசைன்யங்களையடித்து வெற்றிச்சங்கையெடுத்து வாயில் வைத்தூதினான் அதனையறிந்த சத்துருக்கமகாராசனும ராட்சதக்கூட்டங்களுஞ்சந்தோஷமானார் இதுதான்சமயமென்று காலசித்தனானவன் எமனைப்போலே உக்கிரம்விடாமற் சேனைகளின்பேரில் ரதத்தைநடத்தி அஸ்திரங்களினால் சக்கை சக்கையாய் கொல்லுகிறபோது சேனைகளானது காலசித்தன்முன்னின்று யுத்தம்பண்ணமாட்டாமற் கையெடுத்துக்கும்பிடுவாருமகாலில்விழுந்து காப்பாற்றுமென்று வெதும்புவாரும் உமது புண்ணியத்தினாலே யெங்கள் பெண்சாதி பிள்ளைகளுடனேசேர்ந்து பிழைக்கப்போகிறோம் உயிர்பிச்சை தந்திடுமென்பாரும் இந்தச் சேவகத்தைவிட்டு விடுகிறோமென்பாரும் ஐயா உமது வில்லுக்கோர்சரணம் பாணத்துக்கோர்சரணம் உமது கைக்கொருசரணம் மென்பாரும் இப்படி பலவிதமாய்ச் சொல்லிக்கொண்டு சேனைகள் ஓடுகிறபோது காலசித்தனானவன் ஆயுதம் பிடித்தவர்களையெல்லாம் கொன்று ஆயுதம்போட்டுவிட்டு சரணமடைந்தபேரையெல்லாம் துரத்திவிட்டு ரதத்தைச் சக்கிரகாரமாய் திருப்பிக்கொண்டு வருகிறபோது வீரசேனனானவன் ஆயாசந்தெளிந்து ரதத்தை காலசித்தன் முன்னுக்குத்தூரத்தி அடாகாலசித்தனே என்தலைகீழாய்விழுகிறாய் இதோ உன்னை க்ஷணநேரத்தில் எமலோகங்குடியேற்றிவைக்கிறேன் ஜாக்கிரதையாயிருந்து போராடென்றுசொல்லவே காலசித்தனானவன அதனைக்கேட்டுச் சொல்லுகிறான்.


அடா வீரசேனா காட்டிலிருக்கிற யானையானது ஆண்சிங்கத்தின்வீரந்தெரியாமல் ஆனையானதுமதோமஸ்தினால் தும்பிக்கையை தூக்கிச்சிங்கங்கழுத்தில்மாட்டியிழுத்தாற் சிங்கமானது மேல்விழுந் தடித்திடாதோ அப்படிபோல் ஸ்ரீராமமூர்த்திவிட்ட புரவியை நீபிடித்துக்கட்டினபடியினாலே இப்போது உன்னையும் உன்சேனைகளையுங் கொன்று உன் பட்டணத்தையுங் கொள்ளைகொண்டுபோக வல்லவனானேன் ஆகையால் உன்னால் சாமார்த்தியமுண்டானால் என்னைச்செயித்து சக்ரயூகத்தணியில் நுழைஎன்று காலசித்தன்சொல்ல அதுகேட்டுவீரசேனமகாராசன் மகாகுரூரத்துடனே அடாராட்சதா நீவாயால்வரிசைகெடாதே இதோ என்கைபாணத்தினால் எமலோகம் உன்னைச்சேர்க்கிறேன் சற்றேபொறுத்திரென்று வில்லிற்சந்தித்துவிட்டான் அந்தப்பாணமோ விலலைவிட்டு வேகமாகவந்து காலசித்தன்வில்லையுங் கண்டித்து மார்பிலணிந்த கவசத்தையும் பொடியாக்கிவிட்டது அதுகண்டுகாலசித்தன் பூமியிற்குதித்தோடி வருகிற காலையில் வீரசேனமகாராசன் பத்து திவ்யாஸ்திரம்விட்டு வாளாயுதத்தைத் துளாக்கவே காலசித்தனானவன் முன்னுக்குவைத்த காலைபின்னுக்கு வாங்காமல் ஓடிவருங்காலத்தில் வீரசேனன்கண்டு ஒரு அக்கினியாஸ்திரத்தைப் பிரயோகம்பண்ணினான் அந்தப்பாணம் தகத்தகாயமாய் எரிந்துகொண்டு மகாவுக்கிரத்துடன் வருவதை காலசித்தன்கண்டு வருகிற அக்கினியாஸ்திரத்தைப்பிடித்து முறுக்கித் தண்ணீர்பிக்கிழிந்து வீரசேனன் மார்பைப் பார்த்து விட்டெறிந்தான் அதுகண்டு ஒருபாணம்விட்டறுத்துப்போட்டு ஒருகத்தியெடுத்து மந்திராபூதிகள்செய்யும்போது காலசித்தன்பார்த்து!சிவ்வென்று பாய்ந்து வீரசேனன்கையிலிருக்கிற கத்தியைபிடுங்கி மளுக்கென் றொடித்தெறிந்து மார்பைப்பார்த்து ஓரறைகொடுத்தான்.

அந்தஅறையை அவன்தப்பித்துக்கொண்டு ரதத்திலிருந்தபடியே காலசித்தன் மார்பைப்பார்த்து தபாலென்று ஒரு உதைவிட்டான் அவ்வுதையை அவன்சட்டைபண்ணாமல் தேரிலிருந்து வீரசேனனை எட்டிக்கையைப்பிடித்து கரகரவென்றுசுழட்டி ஆகாயமார்க்கம்விட்டெறியவே வீரசேனன்மேகமண்டலந்தாண்டி சூரியமண்டலமாய்ப்போய் சூரியன்காந்தியிற் காய்ந்து பூமியில்விழுந்து இரத்தங்களை கக்கிக்கொண்டு சாவுக்குச்சரியான மூர்ச்சையடைந்தான் அதுகண்டு

பார்த்த காலசித்தனானவன் சந்தோஷமாகி வெற்றிச்சங்கெடுத்து ஊதவே இராட்சதாளும் ராசாக்களும் சத்துருக்கமகாராசனும் வியப்படைந்தார்கள் சூரியனும் அஸ்தமானார்.

நாலாநாள்யுத்தம்.

அப்பால் வியாசனமகாராசன்மூர்ச்சையாகவேபதினாயிரங்குமாரர்களுங்கண்டு ரதத்தைநடத்திகாலசித்தமகாராசனை வளைத்துக்கொண்டு பாணசரங்களை விட்டடிக்கிறபோது காலசித்தனானவன் வச்சிரகோபதண்டாயுதத்தை யெடுத்து தன்மேல்வருகிற அஸ்திரங்களையெல்லாம் அடித்து நெருங்கிக்கொண்டு சற்றுநேரம் அவர்களுடனே போராடி வச்சிரகோபதெண்டாயுதத்தைச்சுழட்டி இரதத்தைப்பார்த்து ஓரடிவிட்டான் அவ்வடியினாலே அச்சுவேறு ஆணிவேறு கும்பகலசம் வேறு பலகைவேறு துஜம்வேறு கொடைவேறுகுதிரைவேறுசாரதிவேறாக காலசித்தமகாராசனானவன் செய்யவேஉதிரவெள்ளமானது காவேரியாறுபோல்ஓடத்தலைப்பட்டது அக்காலையிற் பன்னீராயிரம்மந்திரிமார்களும்ராசாக்களுடனேயுத்தம்பண்ணுகிறதைவிட்டுரதத்தைநடத்திக்காலசித்தமகாராசனை நாலுபக்கமுஞ்சுற்றிவளைத்துக்கொண்டுவாய்வாஸ்திரம் அக்கினியாஸ்திரம் வருணாஸ்திரம்மேகாஸ்திரம் காளியாஸ்திரம்அர்த்தசந்திராஸ்திரமென்றுசொல்லப்பட்டஅஸ்திரங்களை ஒவ்வொருவன்மீதிற்கணக்குமிதமில்லாமல்சாங்கோபசாங்கமாய் மாரிபொழிவதுபோலவே விட்டுகாலசித்தமகாராசனைக் கைகாலாட வொட்டாமலும் இரதத்தைநடத்தவொட்டாமலும் அடிக்கிறபோது காலசித்தமகாராசனானவன் தலையையசைத்துகுஞ்சிரிப்புகொண்டு வில்லையெடுத்துநிறுத்தி அனேகஅஸ்திரங்களைவிட்டறுத்துப்போட்டு நபுரொன்றுக்கு ஐம்பதுபாணத்தையெய்தான் அப்படிகாலசித்த மகாராசனானவன்விட்டபாணம் இரதத்திற்கிரண்டுபாணம் குதிரைக்கொருபாணம் இப்படி பன்னீராயிரம்மந்திரிகளையஸ்திரங்களைவிட்டு எமலோகத்திற்குப்போகும்படியான வழிகாட்டினான் பன்னீராயிரம்ரதத்திற்கட்டிய குதிரைகளுமிறந்து உதிரவெள்ளமான தகானாறுபோலோடவேகாலசித்த மகாராசனானவன் வெற்றிச்சங்கெடுத்துபம்பம்மென்றூதவே சத்துருக்கனும்இராட்சதக்கூட்டங்களும்மகா சாமர்த்தியவீரனென்று மெச்சிப்புகழ்ந்தார்கள்.



வீரவிக்கிரம பாண்டியனுக்கும் மட்சயந்த மகாராசனுக்கும் யுத்தம்.

வசனம்.

பின்னுங்காலசித்த மகாராசனானவன் ரணபிரணமாயிவர்கள்மீது ரதத்தைவிட்டு வேறி மெறித்துக்கொண்டு யானைசேனைபரிவாரங்களிற்புகுந்துவாசாமகோசரமாகிய பாணங்களை விட்டுக்கொல்ல யானைதேர்பரிசேனைகளும் முன்னிட்டவாக்கிலேநின்று யுத்தம்பண்ணும்படியாய்க்காலசித்தன்ஒருவன் அவன்பேரில்அவ்வளவு சேனைகள்கவிந்து கொண்டிருக்கிறபோது வீரசேனமகாராசன் சக்ரவியூகத்தணியில்நுழைந்து இரண்டாமணியில் காலசித்தனாலே இறந்தானென்றும்மட்சயந்தமகாராசன்கேட்டு சிந்தாக்கிராந்தனாய்விசாரப்பட்டுசற்றுநேரம் பொறுத்து மனதை தைரியப்படுத்திக்கொண்டு வில்லைவளைத்துச்சாங்கோபசாங்கமாய்ப் பாணங்களைவிட்டு இராசமன்னர்களையும் இராட்சதர்களையுங் கொல்லுகிறபோதுவீரவிக்கிரமபாண்டியன்கண்டு காலாக்கினிருத்திரனைப்போல்எரிந்துவிழுந்து இரதத்தைநடத்திஉக்கிராகாரனாய் வில்லைநிறுத்திப் பாணங்களைவிட்டுமட்சயந்தமகாராசனானவன் அஸ்திரசஸ்திரங்களையறுத்து நல்லகூர்மையோடுங்கூடியிராகின்றபத்துநாராசமெடுத்து வில்லிற்றொடுத்துவிட்டான் அதுகண்டு மட்சயந்தமகாராசன் பதினெந்துநாராசபாணத்தையெய்யவே அடாவீரவிக்கிரபாண்டியன்விட்ட பத்துநாராசங்களையும்அறுத்துத்தள்ளிவிட்டது அதுபோகவீரவிக்கிரமபாண்டியன் கோபதிப்தனாய் நூறுதிவ்வியாஸ்திரமெடுத்துப் பிரயோகம்பண்ணவே மட்சயந்தன் கண்டு ஐம்பது திவ்வியாஸ்திரங்களை எடுத்துவிடவே அப்பாணமானது வருகிற திவ்வியாஸ்திரங்களை யெல்லாம் பொடியாக்கி விட்டன.

அதன்பின்புமட்சயந்தமகாராசன்வேலாயுதத்தை யெடுத்து மந்திரபூசிதங்கொடுத்திடவே அண்டபிண்டபுவன சராசரங்களெல்லாம் நடுங்கத்தக்கதாகதிருகிருவென் றெறிந்துக்கொண்டுவருகிறபோதுஉக்கிரசேனன்அனேகதிவ்யாஸ்திரங்களை விடவும் அதுகளையெல்லாம் வேலாயுதமானது தடுத்துக்கொண்டுவந்துவீரவிக்கிரபாண்டியனுடைய மார்பிலேபட்டு முதுகிலுருவிப்போய்விட்டன அதினலேவீரவிக்கிரமபாண்டியன் அடியற்றவிளவாழைமரஞ் சாய்ந்தாலெப்படியோ அப்படியாக உயிரைவிட்டான்.

வீரவிக்கிரமபாண்டியன் விழவே மட்சயந்தமகாருசன் பின்னும்வோடாமல் ரதத்தைநடத்திவெற்றிசங்குபூரித்துவில்லைநிறுத்தி அனேகமான திவ்யாஸ்திரங்களையெடுத்துசேனைகளின்பேரிற்பிரயோகம்பண்ணுகையில் அதுகாககசற்பம்போற்சீறிக்கொண்டு ராட்சதக்கூட்டங்களிலும் இருசமன்னர் கூட்டங்களிலும்பாய்ந்து விழுந்துகொல்லும்போது ராட்சதர்களும் இருசர்களும்தலைவேறுகிலைவேறு அடிவேறு முடிவேறுஎலும்புகள்வேறாய் விழுந்ததைக்கண்டு மனந்தாளாமல் சலிக்கச்சம்ராசமான்வதோதிபதிகளானயாவரும்ரதத்தை விட்டுக்கொண்டு கிழக்கு தெற்கு மேற்கு வடக்கிந்த நான்குபக்கமும்நால்வரும்நின்று கோடிமகாகோடிசங்கம் மகாசங்கம்அற்புதம் மகாஅற்தபும் பத்மம்மகாபத்மம்கிருவம் மகாகிருவம்அக்ரோணி மகாஅக்ரோணிசஞ்சலம்மகாசஞ்சலம்வெள்ளம் மகாவெள்ளம் சமுத்திரம் மகாசமுத்திரமென்று புகாந்தகாலத்திற்சத்தமேகமும் கூடி மின்னல் குமுறலுடனே சலவருஷம்பொழிந்தாலெப்படியோஅப்படியாகப் பாணங்களைமிதமில்லாமல் சரமாரியாக பாணங்களைவிடுகிறபோது மகாருசாவானவர் நான்குதிக்கிலும் விட்ட பாணுஸ்திரங்களைவிட்டு அதுகளை சங்கரித்தபின்பு பெருக்கிரண்டு பாணம்விட்டுநால்வர்மார்பிலு மணிந்தகவசங்களையறுத்துப்போட்டார் அப்போதுஅந்நால்வருங்கடுங்கோபங்கொண்டு நூறுதிவ்வியாஸ்திரங்களை மட்சமகாருசன் மீதிலெய்யவே அவ்வரசன் அதிக சினங்கொண்டுமனம்வின்டுஎதிர்பாய்ந்து நூறுதிவ்யாஸ்திரமெடுத்து நான்குதிக்கிலும் வரப்பட்ட அஸ்திரங்களையெல்லாஞ் சிந்திக்கவதைசெய்து நாலைந்து இருபதுபாணங்கள்விட்டுரதம்சாரதிகுதிரை துவசத்தையும் அறவெட்டினுன் அதுகண்டு நான்குஇருசரும் இரதத்தை விட்டுபூமியிற்குதித்து கதைகேடயம்தெண்டாயுதமெடுத்துச் சுழட்டிக்கொண்டு ஓடிவருகிறபோது மட்சயந்தமகாருசன் அந்த நால்வரும் நான்கு அர்த்தசந்திரபாணம் விட்டு சிரசைகண்டிக்கவே அவர்களும் இராமா இராமாவென்று முறையிட்டுத்தரையில்மாண்டார்கள் அப்போது மட்சயந்தமகாராசன் வெற்றிச்சங்கையெடுத்துபம்பமென்றுஊதினன்.

ஐந்தாநாள் யுத்தம்.

மறுநாள் சத்துருக்கமகாராசன் பல்லைநெறநெறவென்றுகடித்துஇரதத்தைநடத்திவில்லைகுணத்தொனிபண்ணினர் அச்சத்தங் காலசித்தன்கேட்டு ஏதடா சங்கத்தொனிசத்தமும் விற்குனிசத்தமுங் கேழ்க்கின்றன சக்கிராயுதத்தொனிவந்ததுபோலுங்காணப்படுகின்றன இருசாக்கள் கோஷ்டமும்இருட்சதாள் கோஷ்டமுங் கேழ்க்கின்றனநாமும்சநுநியாய்ப்போகவேணுமென்று இரதத்தைதிருப்பிக்கொண்டுதென்மேற்குமுகமாய் நின்றுஉயுத்தம்பண்ணுகிற சத்துருக்கமகாருசனைவணங்கி காலசித்தனுனவன் சொல்லுகிறன்.

ஐயா சத்துருக்கமகாருசனேகேளும்நீ அந்தராசனையொருபெரிதாயெண்ணியுத்தம்பண்ணுகிறீர் தேவரீர் உயுத்தத்தைநிறுத்தி அடியேனுக்குச் செலவுகொடுத்தால் இந்தட்சணம் அந்தமட்சயந்தனை காலனூருக்கனுப்பிவைக்கிறேனென்றுசபதங்கூறிநிற்கவே சத்துருக்கமகாராசனுனவர்சொல்லுகிறர் வாருங்காலசித்தனேநீமகாசாமார்த்திய னென்பதற்கு சமுசயமில்லை இந்தருசனை ஒருபொருட்டாயெண்ணி உம்மையழைத்துயுத்தத்துக்கனுப்புகிறதோஅதுநன்றல்ல வீணகருசாக்களுமிருந்துஇருபத்தைந்துலட்சம்சேனைபதிகளும் படைத்தலைவனுகசுவேதனிருந்தும் யானைசேனைகுதிரைகள்வெகுவாகமாண்டும்ஒருவனிருக்கிறன்சகலருமடிந்தார்கள்நம்முடைய பாளையங்களின்மேல்மகாமாயன்சலவசந்தன்சூரசேனன் உக்கிரசேனன்நீலாட்சதன்வீரவிக்கிரபாண்டிய மகாராசன் காம்போதி மகாருசனென்று சொல்லப்பட்டதுரைகளிறந்துபோனர்கள் மற்றதண்டுதளம் சேனசமுத்திரமுங்கூடவில்லுமேலுமிந்த இருசனவன்நம்மையென்செய்தான் இப்பவும்நம்முடையஅஸ்வத்தைக்கொண்டுவந்துவிட்டு நம்மைசரணம்அடைந்தானேயானல்நாமவனைரட்சித்துக்கொள்ளலாம் ஆகையால் நீபோய் அந்தருசனை சமாதானப்படுத்தியழைத்துக்கொண்டு வாவென்று சத்துருக்க மகாருசர் சொல்ல அப்படியேருசனுடைய வயிற்றில் மூன்றுதம்பிமாருடன்கூடி அவதரித்துத் தாடகையைச்சங்கரித்துமோட்சங்கொடுத்து வணக்கப்படாதவில்லையொடித்துசீதாலட்சுமியைப் பாணிக்கிரகணம்பண்ணி பரசுராமனைபங்கப்படுத்திஅயோத்தியாபுரியில்வந்துதாயார் சொற்படிபதினுன்குவருஷகாலமாகவனவாசஞ்செய்து சீதையம்மனையும் இளையபெருமாளாகிய இலட்சுமணரையும் கூட்டிக்கொண்டு தண்டகாரணியம் வருகிறபோது

ரிஷிகளும் கும்பகர்லன் முதலானவர்கள் உபத்திரவம் பொறுத்துமுடியவில்லையென்று அபயமிட ராமபத்திரும் ரிஷிகளெல்லாருக்கும் ராவணசம்மாரமுடிப்பிக்கிறேமென்று அபயஸ்தங்கொடுத்து அகமுகியைக்கொன்று விராதனுக்குமோட்சங்கொடுத்து சடாயுவைக்கண்டு பஞ்சவடிதீரத்தில்வந்து சூர்ப்பநகையைப் பங்கப்படுத்தி காதூஷணனைக் கொன்று சீதையம்மனையிழந்து மாரீசனைக்கொன்று ஜடாயுக்கு மோட்சங்கொடுத்து அநுமாரைக்கண்டு சுக்ரீபனைச்சிநேகஞ்செய்துமும்மூர்த்திகளாலுஞ் செயிக்கப்படாத வாலியைக்கொன்று சுக்ரீவனுக்குப் பட்டங்கட்டி எழுபத்திரண்டு வெள்ளம்வானராளைத்தண்டுகூட்டி சீதையம்மனிருக்குமிடந்தெரிந்து தடங்கடலடைந்து இலங்காபுரிபட்டணம்வந்துருவணகும்பகர்ணன் இந்திரசிந்து அதிகாயன்முதல் இரண்டாயிரவெள்ளம் ராட்சதாளையுங்கொன்று விபிஷணருக்குப் பட்டங்கட்டி சீதையம்மனை சிறைமீட்டு அயோத்திக்குவந்து பட்டாபிஷேகராய் பட்டம் ஆண்டுகொண்டிருக்கிற நாளையில்ருவணனுக்கு உகபலருய் வந்த சதகண்ட ருவணனையுஞ் சகஸ்திரகண்ட ருவணனையும் பதிமூவாயிரம் வெள்ளம் ருட்சதாளையுங் கொன்று மகாமாயன் சலவசந்தனென்கிற இருவருக்கும் பட்டங்கட்டி அயோத்தியில்வந்து அஸ்வமேதயாகம்பண்ணவேண்டி குதிரையைவிட்டு அந்தக்குதிரையின்பின்ஐம்பதுவெள்ளம்ருட்சதாளையும் அறுபதினுயிரம் அக்ரோணிசேனைகளையும் மகாமாயன் சலவசந்தன்முதல் ஐம்பத்தாறுதேசத்து ராசாக்களையுங்கூட்டி இவர்களுக்கெல்லாமதிபதியாய் ஸ்ரீராமருடைய தம்பியாகிய சத்துருக்கமகாருசனை ராசாவாகவனுப்பி என்னைச் சேனைகளுக்குகெல்லாஞ் சேனுபதியாக அனுப்பிவைத்தனர்.

அவர்விட்டகுதிரையை உமதுகுமாரனுகியவீரசேனமகாருசன்பிடித்துக்கட்டி குதிரையின்பினகாவலாக வந்தநீலாட்சதனையும் பதினையாயிரம ராட்சதாளையுங் கொன்றுசகலரையும்பறிகொடுத்து தானுமிறந்தார் இப்போது ஒண்டியாய்நீர் யுத்தம்பண்ணுகிறீர் அதுதருமமல்லவென்று சத்துருக்கமகாருசா என்னையழைத்துஉமக்குப் பிரியவசனஞ்சொல்லி சமாதானப்படுத்தி அழைத்துக் கொண்டு வரச்சொன்னுர் நீர்மனச்சஞ்சலமில்லாமல்வருவீரோயாகில் இறந்தவர்களெல்லாமெழுப்பிதருவார் நீயுஞ்சத்துருக்கமகாராசனைவணங்கிபிழைக்கிறதேகாரியமென்ருன் காலசித்தனுனவன்.

மட்சயந்தமகாருசன் சமாதானப்பட்டு சத்துருக்கமகாராசனிடம்வருதல்.

அதுகேட்டுமட்சயந்தமகாருசன் சொல்லுகிறன் வாருங்காலசித்தனேருசர்களாய்ப் பூமியிற்பிறந்தயுந்தம்வந்தபோதாணக்களத்திற் பின்னையிறந்தாவென்னும் விசனப்படலாமோ எத்தனைகாலமாயுகவைத்திருந்தாலு மொருநாளைக்கிறப்பதேநிச்சயம் உாலுக்குட்புகுந்துஉலக்கைக்குப்பயந்தாற்றீருமோ முன்வைத்தகாலைபின்வைத்தால் அபகீர்த்தியல்லவோ அப்படியொருவனைவணங்கிப் பிழைப்பதைப் பார்க்கிலும் மிறந்தால்கீர்த்தியுண்டாகுமென்றுமட்சயந்தமகாருசன்கூறவேகாலசித்தனுனவன் பின்னுஞ்சொல்லுகிறுன் ஓய்மட்சயந்தமகாராசனே சேளுஞ் சாகாமலிருந்தவர்கள் ஆர் தானிருக்கிறுர்கள் பராபரவஸ்துஒருவர் தவிரமற்றவர்களெல்லா மிறந்துபிறப்பார்களல்லாமல் இந்தபூமியில் சாஸ்விதகாலமாய் வாழப்போகிறவர்களார் அப்படிக்கொத்த சூரபத்மாசுரன இரண்டாயிரஞ்சதுர்யுக மிருச்சியபரிபாலனம் பண்ணினபின்சுப்பிரமணியருடைய வேலாயுதத்தினுலே அவனுஞ்செத்தான் சகலவரமும்பெற்ற ருவணேஸ்வரன் கும்பகர்ணன் முதலானவர்களும் ஸ்ரீராமபாணத்தாலிறந்தார்கள் நீரிப்போ ருமமூர்த்தியின்தம்பியாகிய சத்துருக்கமகாருசனைச்சேர்ந்து வாழ்கிறதே காரியமென்ருன் அதற்கு மட்சயந்தமகாருசனுஞ் சம்மதித்து ஸ்ரீமந்நாராயணரே ருமனுகபிறந்து அஸ்வமேதயாகஞ் செய்யும்படிவிட்ட குதிரையை நமதுகுமாரன் பிடித்துக்கட்டினதால் இவ்வளவு துன்பம வந்ததுவு மன்றி யாவரு மிறந்தார்கள் ஆகையால் நாம் சத்துருக்கரை வணங்கிச் சமாதானப் பட்டோமேயாகில் சேனைகள் யாவரையு மெழுப்பிக்கொள்ளலாம் ஸ்ரீமந்நாராயணராய் விளங்கா நின்ற பரப்பிர்மமே ராமனுகவந் தவதரித்த சுவாமியுங் கண்ணுறக்கண்டு சேவித்து பாவத்தை யொழித்து மோட்சத்திற் கேதுவான வழிதேடி சாயுச்சியபதவியடையலாமென்றுநினைத்து காலசித்தனைக் கூட்டிக




கொண்டோதத்தைவிட்டிழிந்து இருவருஞ்சத்துருக்கமகாராசனுக்கெதிரில்வருகிறபோது அவ்வரசன் கண்டு சக்ரோவித்தாரதத்தைவிட்டிறங்கினானுமெதிர்சென்று ஒருவர்க்கொருவர் தழுவிவினவிக்கொண்டு சத்துருக்கமகாராசன் சக்கிராயுதத்தணிக்குள்ளே நின்றுக்கொண்டு மட்சயந்தமகாராசனைப் பார்த்து சத்துருக்கர் விசனப்பட்டு விணித்சேனைகள் மடிந்துபோயிற்று இதற்கென்னசெய்வோமென்றுவிசனப்படுகையில்மட்சயந்தமகாராசன் சத்துருக்கனைப்பார்த்துச்சொல்லுகிறான் கேளுஞ்சத்துருக்கமகாராசரே இப்போது என்குமாரனிறந்ததற்குஞ் சேனைகள் மடிந்ததற்கும்நான்விசனப்படவில்லை ஸ்ரீமந்நாராயணரேருமமூர்த்தியாகஅவதரித்தபோதே அவரைப்பணிந்துதாழவென்னபாக்கியம்பெற்றேன் மலரைப்பணிந்தமாத்திரத்திலேஎங்கள் இருபத்தொரு தலைமுறையும்முத்தியாகிய மோட்சம் பெறுவார்கள்உம்மாலெங்கள் சூரியவம்சமீடேறிற்று நாங்கள்செய்விரதமும் புண்ணியமும்பின்றுபலித்தது அப்படிப்பட்ட மகாபுருஷனவிட்ட குதிரையென்று அடியேன்களுக்குத் தெரியாமல் குதிரையைப்பிடித்துக்கட்டியுத்தஞ்செய்த பிழையைப்பொறுத்தருளவேண்டுமென்று மக்ஷயந்தமகாராசாவேண்டிக்கொள்ளவேசத்துருக்கமகாராசர் சந்தோஷமுற்றுச்சொல்லுகிறார் ஓமக்ஷயந்த மகாராசரே ராசர்களாகப் பிறந்தவர்களுக்கு ராஜநீதிமுறைமை தவறாமலும் யுத்தம்பண்ணுகிறபோதுபுறமுதுகுகாட்டிஓடாமலும் துஷ்டநிக்கிரகசிஷ்டபரிபாலனந் தவறாமல்பண்ணவும் அபயமென வந்தவனைக்கொலைவரைக்காக்கவு மிவைகளல்லவோ ராஜநீதிமுறைமை இதைவிடமற்று வேறொன்றுமில்லை அரியப்பிரமாதிகள் வந்தெதிர்த்தாலும் போராடிக்கீர்த்திபெறவேணும் யல்லாமலிவனால் குற்றமொன்றுமில்லை இறந்த சேனைகளெழுந்திருக்க வேணுமே இதற்கு யோசனை எப்படிசொல்லுமென்றுகேட்க மக்ஷயந்தமகாராசனசந்தோஷமாய்ச் சத்துருக்கமகாராசனைப்பார்த்துச்சொல்லுகிறார் கேளுஞ்சத்துருக்கமகாராசனே எங்களுக்குப் பிரசன்னமா யிருக்கப்பட்ட ரணபத்திரகாளிகாதேவிக்குப்பூசைசெய்து நம்முடையபடையிலிறந்தவர்களையெழுப்பிக்கொண்டுவருகிறேனென்றுநீர்சந்தோஷபடவேண்டுமென்றுசொல்லி விடைபெற்றுக்கொண்டு காளியம்மனாலயம்வந்து சந்நிதியுட்புகுந்து தோத்திரம்புரியமக்ஷயந்தமகாராசன்கண்டு ஆனந்தங்கொண்டு வணங்கிதாயே எங்களிருதிறப்படையிலும் யுத்தத்தில் மாண்டவர்களையெழுப்பித் தரவேண்டுமென்று தோத்திரம்புரிய காளிகாதேவியானவள் ஓமக்ஷயந்தமகாராசனே பயப்படாதே உன்மனதின்படி இதோநான்பேய்களெழுப்பிவருகிறேனென்று திருவாக்களித்தாளக்களம்வந்து இருதிறப்படைகளிலு மிறந்தசேனைகள்பேரிற்பஞ்சாட்சரம்பட்டமாத்திரத்திலேயானைசேனைபரியாவுமுயிர்பெற்றெழுந்தார்கள் வீரசேனமகாராசனும் நித்திரைசெய்தெழுந்தவன்போல் எழுந்தான் மகாமாயன் சலவசந்தன் சூரசேனன் உக்கிரசேனன் சுவேதன்நீலாக்ஷதன்முதல்யாவருமெழுந்தார்கள்.

அப்போது இருதிறவர்படையும் மக்ஷயந்தமகாராசனுங் காளிகாதேவி சந்நிதியைவிட்டு ரணக்களம்வருகையில்தகப்பனைக்கண்டு வீரசேனனெழுந்து எதிர்சென்று நமஸ்கரித்த பிள்ளையை யெடுத்துமார்போடு அணைத்துவாழ்த்திஅப்பாவீரசேனா உன்னால்பராபரவஸ்துவாய் விளங்காநின்ற ஸ்ரீராமமூர்த்தியின்தம்பியாகிய சத்துருக்கமகாராசாது சேர்வையைக் கண்டேன் நானசெய்தபாக்கியமும்பலித்ததுசகலபாவமும்விமோசனமாகிச் சாயுச்யபதவியுமுண்டாயிற்றுமகனேயென்றான்மட்சயந்தமகாராசனனவன் அதுகேட்டு புத்திரனாகிய வீரசேனனும் வியப்புற்று சத்துருக்கமகாராசனுடையதண்டுதளங்களையும் வீரபராக்கிரமவேந்தர்களையுமிராட்சதக்கூட்டங்களையும் வானரசேனைகளையு மதனுபுரிபட்டண மழைத்துக்கொண்டுபோய் அவர்களுக்குத்தக்கபடிவிருந்துகள்முதலான வேடிக்கைகள்செய்துவைத்து ஐந்துநாள் வரைக்கும் பட்டணமிருந்து ஆறுனாள் சத்துருக்க மகாராசருக்கு ஆடையாபரணமுங் குதிரைபதினாயிரம் ஸ்ரீகள்ஐந்நூறு ஆயிரம்பாரந்திரவியமும இவற்றுண்டானசேனைகளும் யானைகளும் ரதங்களும் வெகுமதியாகக் கொடுத்து அஸ்வமேதக்குதிரைக்குப் பூசைகள்செய்து பட்டணத்தைமந்திரிவசமொப்புவித்துமட்சயந்தமகாராசனும் குமாரனுகியவீரசேனனும் தங்கள் தண்டு தளங்களுடன் சத்துருக்கனுடைய தண்டியில்வந்து சேர்ந்தார்கள்.

அப்போது சத்துருக்கமகாராசன் சூரசேனன்உக்கிரசேனன் காலசித்தன சகலரும்ரதமேறிவாத்தியத்தொனிகள்முழங்க குதிரையைவிட்டுமதன்பின்புலீலாட்சதனையும் பதினையாயிராக்ஷதாளையும் மற்றதுரைகளும் தகைள்தங்களுடைய வாகனங்களில்மீதேறிக்கொண்டு கொடைகள்கொடிகள்பிடிக்க ஆலவட்டம் தாலவட்டம்வீச ராட்சதப்படைகள் வானரக்கூட்டங்களும் கொக்கிக்க சதருக்கமகாராசனு மண்ணதிர விண்ணதிர புறப்படுகையிலே அவ்வமானதுதனவிச்சையாய்ச்சென்றுபோறப்போது வாராணபுரியென்றொருபட்டணமுண்டு அந்தப்பட்டணத்திற்கு சௌபுகாபுரமென்று பேர்விளங்கு மந்தப்பட்டணத்தை யாளப்பட்டசோமகாசமகாராசனுடையகுமாரனான ஆண்ணியமகாராச

ன்னுக்குறோணி சேனையுடன் காட்டகத்தில்வேட்டை
க்குப்போய்வேட்டைகளாடி வாரணுபுரிபட்டணத்திற்
கருகாமையில்வருகிற அஸ்வத்தைக்கண்டுசந்தோஷங்
கொண்டுபத்துசேவகரைவிட்டுஅஸ்வத்தை பிடித்துவ
ரச்சொல்லி அனுப்ப அப்படியே சேவகர்களுங்குதிரை
யைப்பிடித்துக்கொண்டுவந்து அரண்ணியமகாராசன்
முன்னேவிட்டார்கள்விடவே அந்தஅஸ்வத்தினுடைய
நெற்றியி லெழுதிக்கட்டியிருக்கிற பட்டத்தைஅரசரா
சன் வாசித்துப்பார்த்து குஞ்சிரிப்புகொண்டு தலையை
யசைத்துசொல்லுகிறான் ஆஆ இந்தவிசயத்தைகப்போ
லுண்டோநானேளுராலென்ன மொருக்ஷணநேரத்தில்அவ
ர்கள்சவுரியத்தைவெளிப்படுத்துகிறேனபாரென்றுபல
லைநறநறவென்றுகடித்து நூறுசேவகரையழைத்து எ
ணதசப்பனுக்குக் காட்டி தண்டைப் பயணப் படுத்தியு
த்தத்திற்குவரச்சொல்லுங்கள் வென்றான்.



அரண்ணிய மகாராசன் அஸ்வத்தைப்

பிடித்துக்கட்டல் விருத்தம்.

ஏமவாம்பரிமால்வரைத் தடங்கட்கு
சோமகாசன்வாழ்வாரணுபுரியதின்றேப
ராமனுனவன்கமஞ்செய் நல்முடன்விடுத்த
நமமறிந்தனன் வளபுதல்வனும்நெருங்கி
குதிரைபினெற்றிலுற்றதோர் பட்டத்தைக்குறித்து
மதியிலாதிவன்வீரனென் றனுப்பியவண்ணம
வீதிமாலீசனுமெதிர்கினும் விடுவனேனென்றம்
பதியிறபுரவியைப்பதலமே செய்தனனரண்யன்.

வசனம்,

அந்தப்படியேசேவகருங் குதிரையைப்பிடித்துக்
கொண்டுபட்டணத்திற்குப்போகுங்காலையிற் குதிரை
யினபின்வருகிறஇராட்சதாளுங்குதிரையைக் காணு
மென்று அரண்ணியமகாராசனிடபாளையந்தேடிக்கா
ணுமல் அஸ்வத்தின்கழுத்தைப்பிடித்துகொண்டுபோ
கிறபோது அரண்ணியமகாராசன் கண்டு அடா இராட்
சதபட்டிமக்களே எங்கயிருந்தளவிடம்போகிறீர்கள்
என்பாளையத்திலுள்ளேவந்தகாரணமென்னசொல்லு
ங்களென்றுகேட்டஇராட்சதாள்நகைத்து ஓய்அயோ
த்தியாபுரிபட்டணத்தையாளப்பட்ட ஸ்ரீராமமூர்த்தி
விட்டஅஸ்வமேதகுதிரையைக்காணுமல்தேடிக்கொ
ண்டுவருகிறோம் இவ்விடம்வந்ததைக் காணீர்களோ
வென்ன இராட்சதனகேட்கஅரண்ணியமகாராசன்கே
ட்டுராட்சதாளைப்பார்த்து அடாராட்சதர்களே அந்த
ராமன் அஸ்வமேதயாகம்பண்ணினுல்அவனைச்சார்ந்த
வனைபிரதட்சணம் வரவேணுமே யல்லாமல் என்னு
டையபட்டணத்திற்குள் அவனகுதிரைவரலாமோ அ
வன்தானேனாரூான் அவனைவிடபலவான்எந்தபூமியி
லுங்கிடையாதோ நான்பிடித்துக்கட்டின குதிரையை
ஹரிஹரப்பிரம்மாதிகள்வந்தாலும்விடுவிக்கக்கூடுமோ
நீங்கள்போய்உங்களுக்குராசனுகிய சத்துருக்கனுடன்
வாரணுபுரிபட்டணத்தையாளப்பட்டசோமகாசமகா
ராசாவினமூத்தக்குமாரன்அரண்யமகாராசன நீங்கள்
விட்டகுதிரையைப் பிடித்துக்கட்டிப்போட்டான்உன்
னுல்சாமார்த்தியமுண்டானுல் தண்டுடன்வந்துயுத்த
ஞ்செய்து எங்களனைவரையுஞ்செயித்துக்குதிரையை
விடுவித்துக்கொள்ளசாமார்த்தியமில்லாவிட்டால்சத்
துருக்கனைவந்துவணங்கச்சொல்லும் அப்படிவணங்கா
விட்டால்தான்வந்தவழியைப்பார்த்துக்கொண்டுதன்
தண்டுடனே போகச்சொல்லும் இந்தமூன்றுவிதத்தி
ல்எதுநலமாயிருக்கிறதோ அப்படிசெய்யச்சொல்லுங்
களென்றான் அதுகேட்டு ராட்சதாள்மிகுந்த கோபங்
கொண்டு அரண்ணியமகாராசனைப்பார்த்துசொல்லுகி
றார்கள்ஓய்அரண்ணியமகாராசனேஎன்னவசனஞ்சொ
ன்னீர்அந்தசத்துருக்கமகாராசனைவந்துவணங்க சொ
ன்னீரோஅவரைஆரென்றுஉமதுமனதில்நினைக்கிறீர்அ
வரையறியரோ அறியமாட்டீரோ அண்டமாயிரத்தெ
ட்டும்ஆளப்பட்டதேவேந்திரனைப்பிடித்து விலங்கிட்டு
ச்சிறையில்வைத்துஆயிரத்தெட்டண்டத்தையுமாண்
டராவணேஸ்வரனையும் அவன்சேனைகளையுங்கொன்று
தேவேந்திராதிதேவர்கள்இக்கட்டையொழித்து விபி
ஷணருக்குப்பட்டங்கட்டிராவணனுக்கு உதவியாய் வ
ந்தசகஸ்ரகண்டராவணனகுமாரனுகிய சலவசந்தனுக்கு
ப்பட்டங்கட்டி அயோத்தியாபுரிபட்டணத்தில் வந்து
அஸ்வமேதயாகம இயற்றவேண்டி அஸ்வத்தை விட்
டார்.

அவர்விடப்பட்டகுதிரையைத் திரிமூர்த்திகளும்
பிடித்துக்கட்டார்கள் இந்தச்செய்தியைசத்துருக்கா

சன்கேட்பாரேயானால்உம்மையும் உம்முடைய சேனை
யையும் உதவியாய்வரப்பட்ட ராசாக்களையும் வாளுல
கம்போய்ச்சேரப் பண்ணுவார் மேலும் ராட்சதசிரேஷ்
டர்களாகிய மகாமாயன் சலவசந்தன் சேனாபதியாகியநீ
லாட்சதனும்ராட்சதாளும் ராசகூட்டங்களும்குதிரை
பிடிபட்டசேதி கேட்பார்களேயானால் உம்மையும் உம
துசேனைகளையும் ஒருகைகுத்தினாற்குத்தி உதிரத்தை
பானம்பண்ணுவார்கள் ஸ்ரீராமமூர்த்திகேட்பாரேயா
னால்அவ்விடத்திலிருந்தபடியே இராமபாணத்தையே
வி யமலோகமனுப்பிவிடுவார் நீரெங்கேயொளித்தாலும்
இராமபாணம்விடாது இதெங்களுக்குநன்றாய்த்தெரி
யவரும்அப்படிவாராமல் அஸ்வத்தைவிட்டுசத்துருக்க
மகாராசனைவணங்கிப்பிழைப்பதேதகுதியென்றுசொன்
னார்கள்.

அம்மொழியைக்கேட்ட அரண்ணிய மகாராசன்
நகைபுரிந்துஅடாராட்சதர்களே பனங்காட்டில்இருக்
கின்றநரியானது சலசலப்புக்கஞ்சுமோவென்றுப்போ
லஅந்தஅயோத்தியாபுரிபட்டணத்தையாளப்பட்டத
சரதமகாராசன் சாமர்த்தியங்க ணாங்களறிந்திருப்போ
ம்மேலும்அந்ததசரதன்பெற்றபிள்ளைகளே நீங்களேமெ
ச்சவேணும அப்படிப்பட்ட சாமார்த்தியம் மிருந்தால்
என்னையும் என்குமாரனையும்என்தகப்பனையுஞ் சேனை
களையுஞ்செயித்துஉங்கள் அஸ்வத்தைவிடுவித்துக்கொ
ண்டு போங்கள் பார்ப்போமென்றான் அதுகேட்டுஇரா
ட்சதர்கள் கெர்வங்கொண்டுகிட்டநெருங்கிஆயுதஅஸ்
திரங்களையெடுத்துவீசியெறியும்போது அரண்ணியம
காராசன்கண்டு வில்லைவளைத்து அநேகதிவ்வியாஸ்திர
ங்களைச்சந்தித்துவிட்டுஆயுதஅஸ்திரங்களைஅறுத்துவி
டவேஇராட்சதர்கள் கூடி எதிரிட்டி சூரிகை பாங்கு
லைதடிசக்கரம் இருப்புலக்கைதண்டாயுதமுதலாகிய
ஆயுதங்களினால் ஐயாயிரம்ராட்சதர்களும் ஒன்றாய்க்
கூடிசமாரியாய் விடுகிறபோது அரண்ணியராசனும்
அநேகதிவ்வியாஸ்திரங்களை விட்டு அறுத்துப்போட்டு
ஐயாயிரம்ராட்சதாளுக்கும ஒவ்வொன்றுக்கு நாலுபா
ணம்விட்டுக்கொல்லுகிறபோது அதில்ஒருவன் தப்பிப்
பிழைத்தோடிப்போய் சேனாபதியான நீலாங்கதனைக
ண்டுஇச்சங்கதியைக்கூறவே அந்தநீலாட்சதன் மிகவும்
வெகுண்டுபதினாயிரம்இராட்சதாளைகூட்டிக்கொண்டுவ
ருகிறபோது அரண்ணியமகாராசன் தன்னுடைய சேனை
களைப்பவுஞ்சிட்டுநிறுத்தித் தான்முன்னின்றுவில்லைவ
ளைத்துஅக்கணம்பிடிக்குமுனைந்திவ்வியாஸ்திரத்தை யெ
டுத்துவில்லிற்றொடுக்கையில் ராட்சதவெள்ளமானது
வந்துவிட்டதுஅதுகண்டு சேனைகள்யெல்லாம்பின்வா
ங்கிஓடத்தலைப்பட்டாரப்போது அரணியராசன்ஓடுகிற
வர்களையெல்லாம்ஓடவொட்டாமல்நிறுத்தி ரதத்தை
நடத்திமேல்வந்துவிழுகிறராட்சசப்படைகளையெல்லா
ம்யெதிரிலேவரவொட்டாமல்பாணங்களினாலே அடித்
துகொல்லுகிறபோது இருட்சதாள்பின்வாங்காமல்சே
னைகள்பேரில்விழுந்து ஈட்டிகுந்தம் பாசம் சூலம்கதை
இருப்புலக்கை இதுகளால்குத்தியும்இடித்தும்கடித்து
ம்அகம்பண்ணுகிறபோது கால்பலங்களெல்லாஞ் சின்
னபின்னமாக யிறந்துவிட்டது அதுகண்டு அரண்ணி
யமகாராசன் இருட்சதாள்பேரிலேமுனைந்து திவ்வியா
ஸ்திரங்களைவிட்டுக் கொல்லுகிறபோது நீலாட்சதனக
ண்டு அதிககோபாக்குனியுடன் இரதத்தைநடத்தியில்
லைவளைத்து நாயகாராசபாணங்களை விடவே இப்பாண
மானது நாகசற்பம போற்சீறிக்கொண்டு வருகிறதை
அரண்ணிய மகாராசன் பார்த்து நாயுதிவ்வியாஸ்திர
மெடுத்து வில்லிற் சந்தித்து பிரயோகம் பண்ணினான்
அந்த அஸ்திரமானது புறப்பட்டு நாயகாராசபாணத்
தையும் அறுத்துத்தள்ளவே நீலாடசதனானவன் தட்ச
ணம் ஒரு அக்கினி யாஸ்திரமெடுத்து அபிமந்திரித்து
விட்டான அது அக்கினிப்பொறிகளை வாரியிறைதது
க்கொண்டு வடவா முகாக்கினிபோல திருதிகென்றெ
ரிந்துக்கொண்டு புறப்பட்டது அரண்ணியனும் ஒருவ
ருணாஸ்திரத்தை யெடுத்து மந்திரத்தையோதி விடுத்
தான அந்த அஸ்திரம் சப்தமேகங்கள் கூடினாலெப்ப
படியோ அப்படி இடிமின்னல் குமறலுடனே குடங்
கொண்டுசொரிவதுபோல் அக்கினியாஸ்திரத்தின பே
ரிற்சொரிகிறபோது அக்கினியாஸ்திரமானது அவிந்து
போய்விட்டது.

அதனைப்பார்த்துநீலாட்சதன்கருவிமீசையையுரு
வி ஆஆஇவனு எனனுடையபாணத்தை யறுக்கிறவனை
பார்ப்போம்மென்று ஐந்துசிங்கமுகாஸ்திரமானதுபுற
ப்பட்டு அரண்ணியமகாராசனுடைய கவசத்தையறு
த்துசரீரத்தையும் சல்லடைக் கண்களாக துளைத்துவி
ட்டது அதற்குஅரண்ணியமகாராசன்சற்றுமஞ்சாமல்
அநேகதிவ்யாஸ்திரங்களைவிட்டு நீலாட்சதன் சிரசைச
ல்லடைக்கண்களாகத் துளைத்து ஐந்துபாணம்விட்டுஅ
வனேறிவந்த ரதக்குதிரைகளுடன பொடிப்பொடியா
யறுத்துவிட்டான் அதுகண்டு நீலாட்சதனைபற்களைநெ
றநெறவென்று கடித்து பவுஞ்சியில கையைவைத்து
வாளையெடுத்துஅரண்ணியமகாராசனைவெட்டவேணு
மென்றுஓடிவருகிறதைகண்டு அரண்ணிய மகாராசன
ஒருஅர்த்தசந்திரபாண மெடுதது வில்லினிடமாகச்சந்
தித்து கையிறபிடித்து வாளாயுததனதத் துண்டாக்
கிவிடவேநீலாட்சதனும் ஒருதெண்டாயுதத்தையெடு
த்துச்சுழற்றி அரண்ணியமகாராசனேறிவந்தஇரதத
தினபேரி லடித்தான் அந்த அடியானது படவேரத
மானது சக்கை சக்கையாய் பிளந்து விட்டது அது
போகவே அரண்ணிய மகாராசனானவன் மறுதேரி
லேறி வில்லெடுத்து முன்னமே நீலாட்சதனதேரை
யுடைத்துவிட் டவனையும் கைகாலாட ஒட்டாமற்

செய்தானிப்படி பத்து ரதம் வரைக்கும் நாள்நாளாய்ப் போகவே அரண்யராசனுக்கு வேறாத மில்லாதபடியினால் பாதசாரியாய்ப் புறப்பட்டான் இதுதான்சமயம் இவனை கொல்லுகிறதற்கென்று அரண்யமகாராசன் பாணங்களை ஒப்ழிச்சலில்லாமல் விடுகிறபோது நீலாட்சதன் அப்பாணங்களையெல்லாம் எட்டிப்பிடித்து ஓடித்தெறிந்துபோட்டு இனியிருந்தால் உயிர்சேதம் வருமென்றறிந்து உயிர்தப்பியிருந்த ராட்சதர்களைக் கூட்டிக்கொண்டு மாய்கையாய் ஆகாயமார்க்கத்தி லெழும்பி சத்துருக்கமகாராசனிட தண்டில்வந்துவிட்டான் சூரியபகவானும் அஸ்தமானாராதகண்டு அரண்யமகாராசன் எதடாருகூதன் மோசம்பண்ணிஓடிப்போய்விட்டான் இவ்வளவுதிர்வாகசாலியோ நம்மைசெயிக்கப் போகிறவர்கள் அதுவெளிச்சந்தான் எதிர்நின்று யுத்தம்பண்ணாமற் புறமுதுகுகொடுத்து ஓடிப்போகும் வீரர்களோ அஸ்வமேதயாகம்பண்ணப்போகிறவர்கள் அதுவும்பலந்தான் மேலும் இருட்டுக்காலமாயிற்று இனியுத்தம்நடவாது நாளையதினம்பார்த்துக் கொள்ளலாமென்று ரதத்தை நடத்திக்கொண்டு வாரணாபுரிக்குச் சேனைகளுடன் போகையில் சேகவருங்குதிரையைக்கொண்டுபோய் லாயத்திற் கட்டிப்போட்டு சோமகாராசன்குமாரவர்க்கங்களுடனும் மந்திரிபிரதானிநால்வகைச்சேனையுடனும் ஆலோசனைசெய்துகொண்டிருக்கையில் அரண்யமகாராசன் கொலுமண்டபஞ்சென்று தன்தந்தையாகிய சோமகாசமகாராசனுக்கு இந்தச் சங்கதிகளைச்சவிஸ்தாரமாகச் சொன்னான்



சோமகாசராசன் கொலுவிருந்து
மந்திராலோசனை செய்கிறது.

விருத்தம்

துய்யவந்தணரமைச்சரு மமைச்சருஞ்சூழ
செய்பசோமனுந்திருந்து சிங்காதனத்திருந்து
வையமாந்திடராமனால் வருபெருஞ்சமர்க்குச்
செப்வதென்னென மந்திராலோசனைசெய்வான்

வசனம்

இதுகளைக்கேட்ட சோமகாசராசன் சந்தோஷித்துச் சொல்லுகிறான் ஓய் மந்திரி பிரதானிகளே ராவணன் கும்பகர்ணாதிகள் அற்பசொற்பரல்ல இவர்களோ திரிலோகத்தையும் ஆண்டவர்கள் அவர்களைக்கொல்ல திரிமூர்த்திகளாலு முடியாது அப்பேர்கொத்தவர்களைக் கொன்று ராட்சதரை அடிமைபடுத்திக்கொண்ட ஸ்ரீராமனுக்கு எவ்வளவுபலமிருக்கவேண்டும் அவர்விட்டகுதிரையைப் பிடித்துக்கட்ட யுத்தம்புரிந்து வெற்றியடைய நமக்குத்திறமுண்டோ யுத்தத்திற்குவருகிறவர்களோ நம்மைப்போன்ற ராசர்களுமல்லாமல் ராட்சதக் கூட்டங்களும் மிச்சமாயிருக்கிற படியால் நம்முடைய சேனைகள் அவர்கள்முன்னின்று யுத்தம்பண்ணமாட்டார்கள் அந்தராட்சதர்களேர மாய்கையினால் மிஞ்சினவர்கள் அந்தமாய்கையறிந்து செயிக்கத்தக்கவர்கள் ஆரிருக்கின்றார்கள் மேலும் அவர்களுடைய பலத்திற்கும் நம்முடையபல மனுவாக முடியு மாகையால் யுத்தம்பண்ணுகிற தொழிலைவிட்டுச்சமாதானமாவதொன்று அல்லது நம்முடைய யானைதேர் பரிசேனைகளைக் கூட்டிக்கொண்டு கோட்டைக்கு வெளியிற்சென்று ஒருவர்க்கொருவர் போர்புரிந்துதீர்த்திபடைவதொன்று அதுவுமன்றி நமதுபட்டணத்திற் குள்ளிருந்தபடியே கொஞ்சமாய்ச் சேனைகளைக் கூட்டிக்கொண்டு யுத்தம்பண்ணுவதொன்று இம்மூன்றில் எதுயுக்தமாக உங்களுக்குத் தோன்றுகிறதோ அதைச்சொல்லுங்களென்று கேட்கையில் நூறுவாசனென்னப்பட்ட மந்திரிகூறுகிறான் ஐயாசோமகாசாராசனே கேளும் ஸ்ரீராமபிரான்விட்ட அஸ்வமேதக்குதிரையை உமது மூத்தகுமாரனாகிய அரண்ணியமகாராசன் பிடித்துக்கட்டி ராட்சதாளுடன் யுத்தம்பண்ணி ராட்சதாளையுங்கொன்று குதிரையும்பிடித்து தந்தபின்பு அப்போது சமாதானமென்றால் சண்டைசெய்யப் பயந்து சரண மடைந்தார்களென்று நம்மைப்போலிருக்கும் ராசர்களும் கைகொட்டிகொக்கலிபுரிந்து நகைப்பார்கள் மேலும் புலிக்குப்பயந்த சிங்கம்போலும் எலிக்குப்பயந்த பூனைப்போலும் யானைக்குப்பயந்த ஆண்சிங்கம்போலும் சேனைக்குபயந்த திறவானைப்போலும் நம்முடைய இரையான தூக்ஷவசைசொல்லுவார்கள் அதுவாவீரம் அவ்வார்த்தையை விட்டுவிடும் அடியேன்பகருவதைகேளும் அண்ணலே திரிமூர்த்திகளையுஞ் செயிக்கத்தகுந்த வீரத்துவமும் சூரத்துவமுள்ள இளையகுமாரன் சூரதமகாராசனிருக்கையிற் பயமென்ன செயமடைவோமேதவிர அபசெயமடையமாட்டோம் மேலும்ராக்ஷதரை வெல்லவுங்கொல்லவும் எட்டுதிக்கிலும் நமதுபேர்சொல்ல தேவர்கள் திரங்களுண்டு ராவணாதிகளைக்கொன்ற ராமபி

ராஜும் சுரதராசன்கிட்டுக்கு நிகராகார் அவர்களைவலிய
வந்துநம்மைவணங்குவார்கள் இதுவுமல்லாமல் முன்னால்
உம்மையெதிரிட்டிக்கொண்டிருந்த பரசுராமன் சுரதராசனு
டைய யுத்தத்திற்கு மகிழ்ந்து அனேகதிவ்வியாஸ்திரங்க
ளுங் கொடுத்து ஆசீர்வதித்துப் போயிருக்கிறர் அப்ப
டிக்கொத்த அஸ்திரங்களிருக்கையில் இப்போது பின்
வாங்குவானேன் அதுவுமல்லாமல் உம்முடையயுத்தத்திற்
கு மெய்மகிழ்ந்து கைகப்பிரமணியர் கொடுத்த வேலாயு
தமிருக்கும்போது குறையென்ன அரண்யராசன்சுவேல
மகாராஜனிருவர்கள் பின்பலமிருக்கத் தாழ்வுண்டோதை
யாலாகாத நீலராக்ஷதாளைக் கொன்றேறுமென்று கெர்வத்தி
னால் நம்மையெல்லாம் பெண்களாக்கி அவனே ஆண்பிள்
ளைசிங்கம் மற்றவர்களெல்லாம் வீரியமில்லாதவர்களென்று
தன் பிரதாபசவுரியத்தை எழுதி குதிரைநெற்றியிற்கட்டி
அதைவிட்டு அதன்பின் சத்துருக்களையும் ராக்ஷதாளை
யுங்கூட்டி அனுப்பினான் அப்படியனுப்பின இராமனு
டையதீரத்தையும் அந்தசத்துருக்கனுடையதிறத்தையும்
ராக்ஷதாள்செய்கிறயுத்தத்தையும் பார்ப்போமென்று நாம்
பட்டணத்திலிருந்தபடியே கொஞ்சமாகச் சேனையனுப்பி
யுத்தஞ்செய்து செயிக்கவேணுமேயல்லாமல் ஒருமிக்ககூ
ட்டி போர்புரிந்தால் ராக்ஷதாள் மிஞ்சி சேனைகளுஞ்சின்ன
பின்னமாய் நாலுமூலையும் ஓடுவார்கள் அப்போது நமக்கு
த் தொந்தரவாகும் ஆகையால் காலைகாலமே யுத்தத்திற்
கு புறப்படுகிறபேரைப் புறப்படச்சொல்லுமென்றான் நு
ண்மதிமந்திரியானவன் அதுகேட்டு அச்சபையிலுள்ள ச
கலருமனக்கலக்கந்தீர்ந்து சந்தோஷமானார்கள்.

அந்தவேளையில் சுவேலமகாராசன் தகப்பனாகிய
சோமகாசமகாராசனைப்பார்த்துச் சொல்லுகிறான் கேளும்
பிதாவே அடியேனுக்கு காலையுத்தத்தில் யுத்தம்செய்ய
செலைகொடுத்திரேயானால் நான்சென்று சத்துருக்கனு
டைய தண்டுசேனைகளை முறியஅடித்து சங்கரித்துக்கூற
வே சோமகாசமகாராசன்பார்த்து அப்பா அடாகுவேலா
நீறுபிள்ளையாயிற்றே உன்னையெப்படி ராக்ஷதாள் தண்டு
க்குள் அனுப்புகிறது போகவேண்டாமென்றாலும் உன்ம
னதிற்குக் கோபமாயிருக்கும்அவர்களோ ராக்ஷதாள்மாயை
யினாற்பிறந்தவர்கள் அவர்களை வெல்லவல்லமையுண்டோ
சொல்லென்றகேட்க பிதாவே என்னவசனஞ்சொன்னீர்
க்ஷத்திரியராய்ப் பிறந்தவர்கள் ராசாக்கள் சண்டையென்றும்
பார்ப்பார்களா அதிசீக்கிரமா சிறுபிள்ளைகள் யுத்தத்திற்
கு பின்வாங்குகிற பெரியோர்கள் முனைகிறதோ நாளைய
தினம் சத்துருக்கன் தண்டிலே தெரியவரும் எத்தனைகா
லம் உயிரோடேயிருக்கிறதிருந்தாலும் ஒருநாளைக்கிறப்பதே
நிச்சயம் இதற்கு சந்தேகப்படவேண்டாம் நாளைகாலமே
யுத்தத்திற்குப் போகிறேனென்றான்

அதுகேட்டு சோமகாசமகாராசனும் விசனந்தீர்ந்து
சந்தோஷமடைந்து சேனாபதியானவர் என்னைப்பார்த்து
ஒப்வர்று நூறக்ரோணிசேனைகளையும் இருநூறலக்ஷமக்
ரோணி ரதங்களும் நூறுலக்ஷமக்ரோணி குதிரைகளும்
இருநூறலக்ஷமக்ரோணி காலாலிலங்களுந் தயார்படுத்திப்
பிரயாணஞ் செய்யென்றார் அப்படியே பவர்னனுஞ்சென்
று சேனைகளை வெளிப்படுத்தினான் அதெப்படியென்றால்
கன்னமதங்கபோலமதங் காடமதமென்றுசொல்லப்பட்ட
மும்மதங்களும் பொழியாநின்ற யானைகள் குதிரைகள் மீ
து அம்பாரிசன்வைத்து ராசமன்னர்களும் விலம்புகளும்
ஏந்திகொண்டு மாவுத்தனை பெச்சரித்து ஆனைகளை எத்தி
டபுறப்பட்டார்கள் அப்போது முப்பத்திரண்டு மேளவா
த்தியங்களும் தாம்தாமென்று முழங்கச்செய்தார்கள் அது
கேட்டு சோமகாசமகாராசன் சகலருக்கும் விடைகொடுத்
து தானுங்குமாரவர்க்கங்களுடனே அரண்மனைக்குப்
போனார்

இப்பால் நீலாக்ஷதனும் சிலராக்ஷதர்களும் ரணக்கள
த்திற் பின்முதுகுகாட்டி ஓடிசேனாபதியான காலசித்தனு
டனே நடந்தசவிஸ்தாரமெல்லாம் புகலக்கேட்டு காலசித்த
ன் சத்துருக்கமகாராசன்சண்டையிற்போய்ஐயா சத்துரு
க்கமகாராசனே நமதுகுதிரை வாரணாபுரிபட்டணத்தை
யாளப்பட்ட சோமகாசமகாராசன் குமாரன் அரண்ணிய
மகாராஜாவானவன் பிடித்துக்கட்டி அதின் பின்போனரா
க்ஷதாளையுங் கொன்று நீலாட்சதனைப்பின்முதுகுகாட்டி
யோட அடித்துதுரத்திவிட்டானென்றும் கூறியதைக்கே
ட்ட சத்துருக்கமகாராசன் சினந்துமிகவுங் கடுகடுத்து வா
ரும் காலசித்தனே என்கையூரல் தீரயுத்தம்பண்ணின பே
ரைக்காணேன் விருதாவிலே நம்முடைய குதிரையைபிடி
த்துக்கட்டி மாண்டுபோனார்கள் ஆனபடியினால் நம்முடை
யதண்டு குதிரைபெல்லாம் வாரணாபுரி பட்டணத்தின்பே
ரில் நடத்தென்றான் அதுகேட்டு காலசித்தனும் வாரணா
புரியின் தெற்குமேற்குமுகமாய் வெட்டாரவெளியில் பா
ளையமிறங்கவுஞ்சிட்டு நிறுத்தினார்கள் அக்காலையில சத்
துருக்கரானவர் மட்சயந்தமகாராசனே நாம்விட்டகுதி
ரையை இந்தராஜகுமாரன் பிடித்துக்கட்டி சிறிதாரட்ச
தாளைகொன்றுபோட்டு பட்டணம்போனான் அவனைஇப்
போது வெளிப்படுத்திவைக்க என்னயோசனை சொல்லு
மென்றகேட்கமட்சயந்தமகாராஜன் சொல்லுகிறான்

வாருமையா சத்துருக்கமகாராசனே இந்தப்பட்ட
ணத்தையாளப்பட்ட சோமகாசமகாராசனுடைய கு
மாரனை அரண்ணியமகாராசனென்று சுரதமகாராசனெ
ன்றும் சுவேலமகாராசனென்றும் மூன்றுகுமாரர்களிருக்
கிறார்கள் அவர்களோ ஒருவரைப் பார்க்கிலும் ஒருவர்சா
மார்த்தியமுள்ள ராசாக்கள் சத்தியவாசகர் அரிபக்தசிரே
ஷ்டர்கள் வரப்பிரசாதிகள் இவரிலேசுரத மகாராசன் ம
காபலவான் வரப்பிரசாதி சிலன்கையில்வாங்கி பராக்ரம

னே மெச்சபுத்தனுமெய்து கீர்த்திபெற்றவன் பராக்கிரமசாலியானவன் அவனுந்தண்டைக்குவருவான் அவன் வில்லுக்குநிகரானவில் இந்த தண்டிவில்லை ஆகையால் அவர்களுடனே யுத்தம்பண்ணாமற் சமாதானமாய் குதிரையைவிடுவித்துக் கொள்ளலாம் இல்லையென்றால் நமக்காக அரியபிரமாதிகள் வந்தாலும் போர்புரிந்து செயிக்கமாட்டார்களென்றான் அதுகேட்டு சத்துருக்கமகாராசன் கோபங்கொண்டு ஓ மட்சபங்கமகாராசனே ராசர்களாய்ப் பிறந்தவர்கள் சாகபயாதிப்படி எல்லாருஞ்சொல்லலாமோ சிவன்கைவில்லானாலுமென்ன விஷ்ணுவின் நாராயணாஸ்திரமானாலுமென்ன என்கையில் ராமபாணமிருக்க எந்தபாணங் கெலிக்கப்போகுதோ பார்ப்போமென்று சத்துருக்கமகாராசனைப்பார்த்து காலசித்தன் சொல்லுகிறான் கேளுமையா சத்துருக்கரே ரணமுகத்தில் முதுகிட்டோடாமலிறந்தார் கீர்த்தியுண்டு அதைதொட்டு இந்த ராஜனை ஒருபொருளாக யெண்ணி சமாதானஞ் செய்து குதிரையை விடுவித்துக் கொள்ளுகிறதாக நம்மைவணங்குபவரை அப்படிவாராமல் யுத்தம்பண்ணிசெயித்து குதிரையை விடுவித்துக்கொள்ளுகிறதே காரியமென்றான் அந்தச்சமையத்தில் வாரணபுரி பட்டணத்திற் பயணபேரி யறைவித்தார்கள்.

இரண்டாம் நாள்யுத்தம்

அந்தச்சத்தங்கேட்ட சத்துருக்கமகாராசன் சேனாபதியான சூரசேனனையும் உக்கிரசேனனையும் பார்த்துச் சொல்லுகிறார் வாருஞ் சேனாதிபதிகளே வாரணபுரிபட்டணத்தில் பயணபேரிசத்த மடிபடுது நமதுசேனைகளையெல்லாம் பவுஞ்சிட்டு நிறுத்தி யுத்தத்திற்கு ஆரம்பஞ் செய்யுமென்று உத்திரவுசெய்தா னப்படியே சேனாதிபதிகளும் ஆனைகளொருபக்கம் ரதங்களொருபக்கம் குதிரைகளொருபககம் நிறுத்திவீரசேனராசர்கள் அந்தயிடங்களிலே தாங்கள் முன்னாகநின்று வில்லைவளைத்து நாணிபிகிந்தார்கள் அக்காலையில் மகாமாயன் சலவசந்தன் படைத்தலைவர் சேனாதிபதிகளும் யுத்தசன்னதராய் சேனைகளுக்குமுன்னின்று வில்லை எடுத்து வளைத்து நாணிபிகிந்தார் சத்துருக்க மகாராஜனும் மக்ஷபங்கதமகாராசனும் வீரசேனனும் நடு அணியில் நின்றார்கள் அப்போது இரணபேரியானது பம்பம்மென்று முழக்கினார்கள் சூரியனும் உதையமாக ஐந்துநாழிகையிருக்கின்றது அந்தசமயத்தில் தூதுவர்களோடி சுவேல மகாராசனைக்கண்டுசேவித்துச் சொல்லுகிறார்கள் ஐயாராஜாதிராஜரே சுவேலமகாராஜனே கேளும் ராஜர்களுடையதண்டும் ராட்சதாளுடையதண்டும் நமதுபட்டணத்திற் சருகாமையாய்வந்து இரங்கிவிட்டுதென்றான் அதுகேட்டு சுவேலைமகாராசன் ஸ்நானஞ்செபதபங்களை முடித்துக்கொண்டு போசனமருந்தி கைகாலலம்பிக் கந்தகஸ்தூரி பரிமளாதிகளணிந்து கற்பூரதாம்பூலந்தரித்து தன்னுடைதேவியினிடத்திற் செலவுபெற்றுக்கொண்டு கிரீடந்தரித்து கவசங்களுமணிந்து முதுகில் அப்புறாபொதியுங் கட்டி கையிற்றவுகம் பிடித்துக்கொண்டு அரண்மனைவாசற்படியைவிட்டு ஆடல்பாடல் சங்கீதத்துடன் வருகிறபோது சாரதியானவர் ரதத்தைச் சிங்காரித்துக்கொண்டு நிறுத்தினன் அந்த ரதத்தின்பேரில் சுவேலமகாராசன் ஆயுதங்கள் முஸ்தீப்புகளாக படைகள்சூழ வேறிந்தானும் பேறியுட்கார்ந்து ஆரோகணித்துக்கொண்டான் அப்போது பயணபேரி யடித்தார்கள் அந்தச்சத்தங்கேட்ட உன்னுடொத்த சரிபலம்படைத்த ராசகுமாரர் ரதாரூடராய் மந்திரிமார்களுடன் புறப்பட்டார்கள் அப்போது சூரியனும் சுவேலமகாராசாவின் யுத்தம்பார்க்க வருபவரைப்போல உதயகிரிபர்வதத்தில் உதயமானார் தேவர்களும் ஆகாயவீதியில்வந்து நிறைந்தார்கள் அக்காலையில் யானைகள் முன்னும் ரதங்கள்பின்னும் குதிரைகள்தன்பின்னும் யணிபணியாகச் சேனைகளுடன் முப்பத்திரண்டு வாத்தியங்களும் தாம்தாமென்று முழங்கப் பூமியதிர அண்டத்திலுள்ள தேவர்கள் திடுக்கிட ஆரவாரத்துடன் கோட்டைவாசற்படிகடந்து சத்துருக்கமகாராசனுடையதண்டுக் கெதிராய்பாளயமிறங்கிப் பவுஞ்சிட்டு நிறுத்தி வில்வளைத்துப்பாணங்களை பூட்டியெதிர்த்துயுத்தம்பண்ணுகையில் இரதங்களோடு ரதங்களுமெதிர்க்கவும் குதிரைகளுடன் குதிரைகளிடிக்கவும் பட்டாவைபெடுத்துக்கொண்டு வீசியுத்தஞ்செய்து காலால்களோடு கத்திகேடயம் ஈட்டிஎறிஈட்டி குந்தம்வல்லதடி சக்கரம்வேலாயுதம் சூலம் கதைவாள் முதலிய முப்பத்திரண்டு ஆயுதங்களுமெடுத்து வெட்டிவெட்டென்று எறிந்து யுகாந்தகாலம்போல் மூண்டுகொண்டது யுத்தமானது அப்போது இருதிறவர்சேனைகளிலும் கால்வேறு கைவேறு உடல்வேறு முழங்கால்வேறாக விழுந்தது உதிரவெள்ளமானது ஆறுபோல் ஓடத்தலைப்பட்டது அதுகண்டு சுவேலமகாராசன் கோபித்தனாய் எறிந்துவிழுந்து வில்லைவளைத்து குணத்தொனிபண்ணி பாணங்களை விட்டுக்கொல்லுகிறபோது சூரசேனன்கண்டு அதிககோபத்துடனே ரதத்தைநடத்தி வில்லைவளைத்து பாணங்களை பூட்டி சுவேலமகாராஜன்பேரில் வந்தெதிர்த்தான் அதுகண்டு 1500-ராசாக்களும் ரதங்களைநடத்திச் சேனைகள்பேரில் பாணங்களைவிட்டுக் கொல்லுகிறபோது உக்கிரசேனனானவன் கண்டு ரோஷத்துடன் ரதத்தைநடத்தி வில்லைவளைத்து ஆயிரத்தைந்நூறு ராசகுமாரர்களையும் வளைத்துக்கொண்டு யுத்தம்செய்வான அதுகண்டு ஆயிரங்குமாரர்களும் ரதத்தைச் சேனைகள்பேரில் சுவிந்து பாணங்களைபூட்டிச் சேனைகளையுங் கொல்லுகிறபோது வீரசேனன்கண்டு மனந்தளராமல் ரதத்தைநடத்தி ஆயிர மந்திரிகளையும் வளைத்துக்கொண்டு யுத்தஞ்செய்தான் அந்த சமயத்தில் சுவேலமகாராஜன் வில்லைவளைத்து பத்து நாராச பாணமெடுத்து வில்லிற்சந்தித்து சேனைகள் பேரிற்பிரயோகம் செய்தான் அந்தப்பத்து நாராசமும் நாக சர்ப்பம்போற் சீறிக்கொண்டுவருகிறபோது சூரசேனனானவன் கண்டு பகர உக்கிரநாராசம் மகாகோபத்துடனே பதினைந்து நாராசமெடுத்து வில்லிற் சந்தித்துவிட்டு பத்து நாராசத்

தையும் அறுததெறிந்தான் அதுகண்டு சுவேலைராசன் இருபது அர்த்த சந்திரபாணமெடுத்து வில்லிற்சந்தித்து விட்டான் அந்த இருபது அர்த்த சந்திரபாணமும் வில்விடுபட்டு தகதகாயமாய் நெருப்புப் பொறிபறக்க வருகிறபோது சூரசேனனும் இருபத்தைந்து அர்த்த சந்திரபாணம் விட்டு அறுத்தெறிந்து நான்குபாணம் விட்டு சாரதி குதிரைகளையுங்கொன்றான்

அதைப்பார்த்து சுவேலைராசனும் மறுதேரிலேறி வில்லையெடுத்து அதிக தீக்ஷண்யமாயிருக்கப்பட்ட நான்கு திவ்யாஸ்திரங்களை விட்டு வீரசேனனுடைய சாரதிகளை அதம்பண்ணிப் போட்டான் அதுபோலவே சூரசேனனவன்ரதத்திலிருந்து குதித்துதப்பித்துக்கொண்டு மறுதேரிலேறினான் அந்தரதத்தையும் சாரதிகுதிரைகளுடன் அதம் பண்ணிவிட்டான் அந்தரதம்போகவே சூரசேனனவன் வேறொன்று பார்த்து மறுதேரிலேறினான் அதையுந் தவிடுபொடியாக்கினான் இப்படி இருபத்தைந்து ரதம்வரையில் நாசம்பண்ணவே சூரசேனனுக்கு கண்கள் சிவப்பேறி கடுங்கோபமீறி பத்து திவ்யாஸ்திரமெடுத்து சுவேலைராசன் மார்பிலணிந்த கவசத்தை பொடியாக்கினான் அந்தக்கவசம்போக சுவேலைராசனனவன் சிங்கமுகாஸ்திரமேவி சூரசேனனுடைய வில்லைக்கண்டித்து மார்பைத்தாக்கவே சூரசேனனவன் ஆயாசத்தோடு ஸ்ரீராமா ராமாவென்று மூர்ச்சையானான் அதுகண்டு சுவேலைராசன் வெற்றிச்சங்கை யெடுத்தூதி வில்லைநாட்டி சேனைகளின்மீது அஸ்திரங்களைவிடுத்து கொல்லுகிறபோது சேனைகளனைத்து சின்னாபின்னமாய் விழுந்து ஓடத்தலைப்பட்டது; அதுகண்டு கொங்கண மகாராசன் ரதத்தை திருப்பி வில்லைவளைத்து அபரிமிதமாய் பாணங்களைப்பூட்டி சுவேலைராசனைக் கைசாலட ஒட்டாமலும் பாணங்களை பூட்டாமலும் ரதத்தை நடத்த வொட்டாமலுஞ் சரங்களினால் அடிக்கிறபோது சுவேலைராசன் சற்றுநேரம் ஆயாசமடைந்து உடனே வில்லையெடுத்து நிறுத்தி நாராசம்விட்டு கொங்கணமகாராசன் வில்லைத்தொடவொட்டாமலும் அஸ்திரங்களை விடவொட்டாமலும் சாரதியானவன் ரதத்தை நடத்தவொட்டாமலும் பிரமிக்கச்செய்து நாலு திவ்யாஸ்திரம் விட்டுசாரதிகுதிரைகளை அதஞ்செய்து ரதத்தையுஞ் சக்கையாய்ப்பேர்த்தெறிந்தான் அதுகண்டு கொங்கணராசன் மறுதேரிலேறினான் அந்தரதத்தையும் நாலுபாணம்விட்டுச் சாரதிகுதிரைகளையும் அதஞ்செய்யவே மீண்டும் வேறொருதேரிலேறினான் இப்படி பதினைந்துரதம் உடைந்துபோகவேகொங்கணராசன் சீக்கிரமாய் ரதத்திலிருந்த படியே வில்லையெடுத்து நிறுத்தி ஐந்து திவ்யாஸ்திரமெடுத்துச் சந்தித்து விட்டுச்சுவேலைராசனை நோகச்செய்தான் அதுகண்டு சுவேலைராசனும் மறுதேரிலேறி மூப்பது நாராசம்விட்டு கொங்கணராசன் வில்லை நழுவவிட்டு ஸ்ரீராமாவென்று ரதத்தைவிட்டுக் குதித்தோடிப்போகவே ரதத்தைக் குதிரைகளிழுத்துக்கொண்டுபோய் விட்டதுகள்

அதுகண்டு சுவேலைராசன் வெற்றிச்சங்கை யெடுத்துடம்பம்மென்றூதி ரதத்தை சேனைகள் பேரில் வில்லையெடுத்துப் பூட்டிச் சேனைகளென்னுங் காட்டை வெட்டிவெட்டிக் கொல்லுகையில் மாளுவராசர் மனங்களாமல் சுவேலராசன் முன்னுக்கு ரதத்தை நடத்தி வில்லைவளைத்து சாங்கோபசாங்கமாய் மழைபொழிவதுபோல சலவருஷம் பொழியும் போது சுவேலராசனும் பாணங்களைவிட்டு மாளுவராசன் அஸ்திரங்களை எல்லாம் அறுத்து அவ்வரசன் மார்பைப்பார்த்து ஐந்து நாராசத்தைப் பிரயோகித்தான் அதை மாளுவராசன் சட்டைப்பண்ணமற் பதினைந்து நாராசம்விட்டு சுவேலராசன் பிரமிக்கச் செய்தான் அதனால் வருத்தமடைந்து சுவேலராசன் மிகவும் கடூரமான பாணங்களினால் மாளுவன் சரீரத்தைச் சல்லடைக் கண்களாக துளைத்து விட்டான் மாளுவராசன் கஸ்திபடைந்து ராமாவென்று மூர்ச்சைபடைந்தான் இப்பவும் ஐம்பத்தாறு ராசர்களும் சுவேலராசனுடனே எதிர்ந்து வெற்றியடையாமல் மூர்ச்சையானார்களதுகண்டு சத்துருக்க மகாராசன் மகாகோரமாய் சாரதியை பெச்சரித்துச் சுவேலராசன் முன் ரதத்தை நிறுத்தி வில்லையெடுத்து அதில் அதிக தீக்ஷண்யமா யிருக்கப்பட்ட பத்துநாராசமெடுத்து பிரயோகஞ்செய்து விட்டார் அந்தபத்து நாராசமுமாலகால விஷத்தைப்போல் சீறிக்கொண்டு வந்து சுவேலராசன் கையிற் பிடித்திருந்த வில்லையுங் கண்டித்து சாரதி குதிரைகளையுங்கொன்று ரதத்திற் கட்டியிருந்த கொடியையும் வெட்டிதள்ளியது அதுகண்டு சுவேலமகாராசன் மற்றொரு ரதத்திலே எறிக்கொண்டு அதிதீக்ஷண்யமான இருபத்தைந்து திவ்யாஸ்திரங்களையெடுத்து மந்திராபூசிகள் கொடுத்துத் தொடுத்துவிடவே அந்த திவ்யாஸ்திரமானது காட்டுத்தீயைப்போ லெரிந்துகொண்டு சடசடவென்கிற தொனிகளுடன் வருகிறதை சத்துருக்கன் பார்த்து திடீலென் றெழுந்திருந்து பத்து திவ்யாஸ்திரங்களை யெடுத்துக்கொண்டு ஆலகாலவிஷத்தைப்போற் சீறி

சாப்பிட்டு உதிர வெள்ளத்தை வாரிக்குடித்து வயி
றெடுக்காமற் களிப்பு கொண்டு காடு காத்திருக்குது
கள் சூரியனும் அஸ்தமனான். சத்துருக்கமகாராச
னும் படைத்தலைவர்களும் பாடி கூடாரம் போய்ச்
சேர்ந்தார்கள் அப்போது சத்துருக்கமகாராசனுக்
கிரசேனனை யழைத்து நம்முடைய சேனைகளில் யார்
விழுந்திருக்கிறார்கள் சொல்லென்று கேட்க ஐயா சத்
துருக்க மகாராசனை சேனும் நம்முடைய சேனைக
ளுக்கெல்லாம் தளகர்த்தனான சூரசேனனும் ஐம்பத்
தாறு தேசராசாக்களும் அறுநூறக்ரோணிகாலபல
மும் ரணக்களத்தில் எழுந்தார்களென்றான். அதைகே
ட்டு சத்துருக்கமகாராஜன் சகல துரைகளுடனும்மகா
ஜ சிரேஷ்டர்களுடனும் நாளை நடத்த வேண்டிய ரா
ஜ்சிட்டங்களைப் பேசிக்கொண்டிருந்து சகலரையும்
பாடி கூடாரங்களுக்குப் போகச்சொல்லி மட்சாங்க
வனுமானுடம் ராசாக்களுடனும் பந்தி போசனஞ்
செய்து அவ்விரவைப் போக்கினார்கள். அப்போது
உக்கிரசேனன் தண்டைச்சுற்றி காவலாகவிருந்தான்

இவ்விடத்தி லிப்படியிருக்க தூதுவர்கள் தலை
மீது கையை வைத்து கோடு கோடென்று அழுதுக்
கொண்டு வாரணபுரிபட்டணத் திறைவனாகிய சோ
மகாசமகாராஜனிடஞ் சென்று வணங்கி ஐயா ராஜ
பரமேஸ்வரா இவ்விடத்திலிருந் யுத்தத்திற்குப்போ
ன நால்வகைச்சேனைகளையும் சுவேலராசனும யுத்த
த்திலிறந்தார்களென்று கூறவே சோமகாசமகாரா
சன் சிம்மாசனத்திலிருந்தபடியே அடித்துக்கீழேவிழு
ந்து புத்திரசோபம் பெரிதானபடியால் மூர்ச்சைய
டையவே அரண்ணியமகாராசனும் தகப்பனைரயெடு
த்துக் களையாற்றி உட்காரவைக்கவே சோமகாசம
காராசனனவன் தூதர்களைப் பார்த்து அடாதூதர்
களே என்னுடைய இளையகுமாரன் சுவேலன் யாரு
டன்யுத்தம் பண்ணி யிறந்தான். அதை எனக்குத்
தெரியச் சொல்லவேணுமென்று கேட்க தூதர்கள்
சொல்லுகிறார் ஐயா தங்கள் குமாரன் அனேகராட்
சதரைக் கொன்று கடைசியில் தண்டு தளத்துக்கு
ராசாவாய் வந்த சத்துருக்கமகாராசனுடன் எதிர்த்
து யுத்தஞ் செய்திருந்தார் அதுவுமன்றி ஆயிரத்தை
ந்நூறு ராசகுமாரர்களையும் ஆயிரம் மந்திரப்பிரதா
னிகளையும மூன்றுராஜாக்களாம் கொன்றார்கள் மே
லும் காட்டில கிடக்கிற ஒரு குரங்கானது நால்வகை
ச்சேனைகளையுங்கொனறுவிட்டுப்போச்சுதென்று கூற
வே சோமகாசமகாராசன் மந்திரியன தூருவாசனை
ப்பார்த்து ஓமந்து ஆயிரத்தைந்நூறு அக்ரோணிசே
னைகளையும் ஒருகுரங்குகொன்றதென்றாலினியெனன்
யிருக்கின்றது நாளையுத்தம் நான்யுத்தத்திற் போயக்
தக் குரங்கைமுன்னேகொன்று அதன் பிறகு சத்துருக்
கனையும் அவனசேனைகளையுங் கொன்று என்பழியை
த்தீர்த்துக்கொள்ளுகிறேனென்றான்.

அதற்கு அவன் குமாரன் அரண்ணிய மகாராச
ன்சொல்லுகறான் ஓபிதாவே நானிருக்க உமக்கிவ்வ
ளவு ஆயாசம் வந்ததென்ன என்தமயனைக்கொன்ற
வனை நாளையுத்தத்தில் நான் கொன்று அவனையும்
அவன் படையையுங்காற்றிற் பஞ்சுபோற் பறக்கடிக
து வருகிறேன் றாதனென்றார் அக்கருணத்திற் சூ
ரதனெழுந்து தகப்பனைப்பார்த்து நீவேனே யுத்தத்தி
ற்குச் சென்று வெற்றியடையலாமென்று வந்த சத்து
ருக்கனெதிர்நின்று அவனைக் கொன்றவன்படையாவி
யகாரும்பை மென்று வருகிறேனென்றகாசகானைப்
பார்த்து அப்பா குமாரகாசூரதா உன்னைவிடபலவா
ன்இத்தாரகசமையில்யாரிருக்கிறார்கள்உன்வில்லுக்கு
மும்மூர்த்திகளும் நின்றுபுத்தம்பண்ணமாட்டார்கள்
உன்னைப்போல வரப்பிரசாதமான அஸ்திரம்பெ
ற்றவர் யாருண்டு ஆகையாலுன் தம்பியைக் கொன்
றசத்துருக்கனையுஞ்சேனைகளையும்அக்குரங்கையுங்
கொன்று செயம் பெற்று வாவென்று விடைகொடு
க்க அளவில்லாத ஆயுத அஸ்திரங்களை இரதத்திலே
ற்றிக்கொண்டு சூரதமகாராசன் தனக்குச் சரியான
பலாஷ்டிகம்படைத்த மூவாயிரத்தைநூறு மந்திரிபிர
தானிகளும் முப்பதகோருலட்சம் படைத்தலைவர்க
ளோடும் சிம்பக்கொடி பறக்காதமேறிப் புறப்பட்டா
ர்கள்.

புறப்படவே முப்பத்திரண்டு மேளவாத்தியங்
கள் முழக்க அண்டமதிர அண்டத்திலுள்ள தேவர்
கள் கண்டாச்சரியங்கொண்டு இன்றுசூரதமகாராசன்
யுத்தமான படியினால் நன்றாயிருக்கும் அரிபத்தியுள்
ளவன் சத்தியவாசகன் மகாவரப்பிரசாதம் பெற்ற
வன் இவனுக்கெதிரியான சத்துருக்கனோ ராமர் ச
கோதரன்மகா பலவான்களாகையால் இருதிறவர்க
ளுடைய வெற்றியுந் தோற்பும் தெரிப்பும் இவர்க
ளுடைய வீரத்தன்மையுங்காணக்கண்களாயிரம் பெ
ற்ற இந்திரனும்அந்தரத்தில்வந்துபார்த்திருக்கையிற்
சத்துருக்கமகாராசன் சூரியனுதயமாக ஐந்துநாழி
கைக்குமுன் எழுந்திருந்து காலக்கடனை முடித்துக்
கொண்டு போசனமருந்தித் தாம்பூலமென்று உக்கிர
சேனனையழைத்து இன்றைக்கு நல்லயுத்தம்போற்
காண்கிறது ஆகையால் சேனைகளை பவுஞ்சிட்டு சக்ர
ரூகமாக நிறுத்திச் சாக்கிரதையாக யிருந்து போ
ராடவேணுமென்று சொல்லக் கேட்ட உக்கிரசேன
ன்மகாபாக்கியமென்றெழுந்து ராட்சதானின் ஆனை
தேர் பரிசேனைகளையெல்லாம் நான்குசுற்றாகநிறுத்தி
எட்டுதிக்குப் பதினறுகோணத்திற்றும் சக்கிரமூக
திற்கும் கிரணவாசிகளாக அறுபதினாயிரத்தைந்நூறு
அக்ரோணி சேனையை நிறுத்தி நடுவணியில் சத்துருக்க
மகாராசனையும் வீரசேனனையும் நிறுத்தி அதற்குமுன்
னணியில் தான் யுத்தசன்னத்தனாக நின்று பேரிகை
யறைவித்தான் அப்போது அருணனானவன் இன்
றைக்கு நல்லயுத்தம் நடக்கும் நாம்போய்ப்பார்ப்போ
மென்று வந்தவரைப்போலே உதயகிரிப்பருவதத்தி
லுதையமானார்.

நிக்கொண்டு கவேலராசன் விட்ட திவ்வியாஸ்திரத்தின்பேரில சடாலென்று வந்து பாய்ந்தொருசக்கம் வெட்டு அந்த அடியோடே இருபக்கத்து திவ்யாஸ்திரமுறிந்து பூமியில் விழுந்து போயிற்று அதுகண்டு கவேலராசன்கோபாவேசங் கொண்டு பற்களைநெறநெறென்று கடித்து ஒரு சுழற்பாணத்தை யெடுத்து சத்துருக்கன மகாராசன் ரதத்தைப்பார்த்து விடவே அதற்குச் சத்துருக்கனுமவன் ஒரு கண்டக்கத்திரி பாணத்தைவிட்டு அறுத்தெறிந்து ஐந்து திவ்வியாஸ்திரத்தையெடுத்து மந்திரபூதிகள் கொடுத்து விடவே அதுகவேலனுடைய மார்பிற்பட்டுமுதுகிலுருவிப்போகவே லடியற்ற வாழைமரம் சாய்ந்தாலெப்படியோ அப்படியாக ரதத்தின் பேரிற்சாய்ந்து மூர்ச்சையடைந்தான்.

அப்போது அயிரத்தைந்நூறு ராசகுமாரர்களும் வெகு கோபாக்கினியுடனே உக்கிரசேனனை வளைத்துக்கொண்டு பாணங்களை வருவித்தார்கள் உக்கிரசேனனும் விடாமல் வில்லையெடுத்து மாரி சொரிவது போலச் சாமாரி பொழிந்து பொழிந்து வருகிற பாணங்களையெல்லாம் அறுத்துவெட்டி வெளியாக்கினன் அதனு லிராசகுமாரர்கள்கோபங்கொண்டு உக்கிரசேனன் பேரில் மிதமில்லாத வஸ்திரங்களைவிட்டு கைகாலாட வொட்டாமலும் சாரதி ரதத்தை நடத்தவொட்டாமலு மடக்கி உக்கிரசேனனை களைக்கும்படியாய் பாணங்களாலடிக்கிறபோது அவன் நிர்வகிக்கமாட்டாமல் மெய்மறந்து போகையிற் குகனுமவன் மனம் பொறுமல ரதத்தைவிட்டு வில்லைக்குனைத்தொனிபண்ணி அனேக அஸ்திரங்களை விடுத்தெதிரவரும் அஸ்திரங்களையெல்லாமறுத்து கொண்டுவெளியாக்கினன் அப்போது மட்சயந்த அனுமான்வெகு கோபாக்கினியுடனே ஒரு ஆலவிருட்சத்தின் பேரில் பாய்ந்து அந்தவிருட்சத்தை மடமடவென்று அடியோடு பிடுங்கி அடியும்நுனியுந்தரித்து கையிற் பிடித்துக்கொண்டு ராசகுமாரர்கள் கும்பிற்புகுந்து அவர்கள் விடப்பட்ட அஸ்திரங்களையெல்லாம் நொறுக்கி ரதங்களைப் பார்த்து ஓடிக்கு பத்து இருபது இந்தப்படியா யடித்து அச்சவேறு ஆணிவேறு கொடைவேறு கொடிச்சீலைவேறு சாரதிவேறு குதிரைவேறு ராசமன்னர் வேறு வேறுப் தலைப்பட்டது அதுகண்டு ராசகுமாரர்கள் இதேது காட்டிலிருக்கிற குரங்கானது ஒருமரத்தைப் பிடுங்கிக்கொண்டு அடித்து ராசகுமாரர்களைக்கொன்று நம்முடனேயுத்தத்திற்கு வருகிறதே யார்வளர்த்துவிட்ட குரங்கோ இதனுடைய கு க்குசேஷ்டையைக்காண்பித்ததுபார்த்தீர்களோ நமதுபாணத்தின்கருக்குத்தாங்கும் படியாய் அஸ்திரத்தைவிட்டுக் கொல்லவேணுமென்றுஅந்திரங்களை விடுத்தும் பிடித்திருக்கிற மரத்தை வனுமானும் வருகிற பாணங்களையெல்லாம்உதறிப்போட்டு ராசமன்னர்கூட்டத்திற் சிவ்வென்று பாய்ந்து ஒரு கதாயுதத்தைக் கையிற் றூக்கிக்கொண்டு கிறு கிறுவென்று சுழற்றி ராசர்களேறி வந்த ரதத்தைப்பார்த்து விட்டு விட்டான,

அந்தரதங்களும் ஒன்றோடொன்று ஊடுதாக்கி ரதங்களழியவும் மேலிருந்த ராச மன்னர்கள் பார்த்து இதுகுரங்கல்ல நம்மையெல்லாங் கொண்டு போகிற எமனப்படி உருவமெடுத்துவந்தானே அல்லவென்று ராட்சதர்களோ இப்படி ரூபங்கொண்டுவந்தவனாகவேண்டும் இதைக்குரங்கென்று நம்பவேண்டாம் இவனை நமதுபாணங்களினுற் கொல்ல வேணுமென்று ராசமனன ரெல்லோரும் ஒருமிக்கக்கூடி நாலுமூலையுங்கவிந்து மட்சயந்த வனுமானையும் உக்கிரசேனனையும் குகனையும வளைத்துக்கொண்டு பாணங்களைவிட்டு கைகாலாட வொட்டாமல் அடிக்கிறபோது உககிரசேனனும் குகனும் மட்சயந்தவனுமானும ராசகுமாரர்களை பங்கு போட்டு யுத்தம் பணணினர்கள் அந்தச்சமயததில மட்சயந்தவனுமான்லைகளை நீட்டிரதஞ்சாரதி குதிரைகளுடனே வாரிவாரி ஆகாயத்தில் விட்டெறிந்துகொலலத்தலைப்பட்டான்உக்கிரசேனனும உக்கிரத்துடனே அனேகதிவ்வியாஸ்திரங்களைச் சந்தித்துச் சராதி குதிரைராசமன்னர்களுடன் கொல்லததலைப்பட்டான்.

இப்படியிரண்டுசாமபரியந்தம் போராடி ஆயிரத்தைந்நூறு ராசமன்னர்களையுங்கொன்று எமலோகங்குடியேற்றினர்கள் அப்போதுஆயிரம்மந்திரிப்பிரதானிகள்வீரசேனனைவிடாமல் வளைத்துக்கொண்டு பாணங்களைவிட்டுகைகாலாடவொட்டாமலும் ரதத்தை நடத்தவொட்டாமலும் அடிககிறபோது வீரசேனனும்படைப்படாமல்ரோஷத்துவேஷங்களுடன் அனேக அஸ்திரங்களைப் பிரயோகித்து வருகிற பாணங்களையெல்லா மறுத்து நபரொன்றுக்கு ஐந்து திவ்வியாஸ்திரங்களை விட்டு சாரதி குதிரைமந்திரி பிரதானிகளை யெல்லாஞ் சங்காரஞ்செய்து சண்டனூருக்கனுப்பிச் சங்கை யெடுத்து ஜெயஞ் செயமெனறு ஊதினன். அதுகண்டு ராஜன் சேனைகளெல்லாம் மகா கோபத்துடன் ஏகோபித்து வந்து வீரசேனனையும் மட்சயந்த வனுமானையும் வளைத்துக் கொண்டு யுத்தம்பண்ணுகையில் மட்சயந்த வனுமானனவன் யானைக்கூட்டங்களில் விழுந்து யானைகளை வாரிவாரி யானைகளுடன் மோதியும் ஆகாயத்தில் விட்டெறிந்து குதிரைகளைவாரிக் குதிரைகளுடன் மோதியும் ரதத்துடன் ரதத்துடன் ரதங்களைவாரி யடித்தும் இந்தப்படியாய் நாலவகைச் சேனைகளையும் நாசஞ்செய்கிற

து எப்படி யிருந்ததென்றால்மூன்றால் இந்திரசித்து
யுத்தத்தில் அநுமாரானவர் எப்படிபோர புரிந்தா
ரோ அவ்வாறுய் தசப்பன்பேர் போகாமல் நாலுபக்
கம் வளைந்துக் கொண்டு ராட்சதக்கூட்டங்களை சா
டுகிறபோது அந்த ரதத்திலிரும் தேவர்களாச்சரி
யப்பட்டார்களப்போது வீரசேனன் உக்கிரசேனன்
குகன் முதலாகிய வீரர்கள் நால்வகைச் சேனைகளபே
ரிலஅஸ்திரங்களைவிட்டு நடவொட்டாமல் புரமுது
குகொடுத்து வோடும்படியாய் மாய்க்கிறகாலத்தில்
உதிரவெள்ள மானது வோட அந்த வெள்ளத்திலே
அனேகமுண்டங்களெழுந்து கூத்தாடுகையில் டாகி
னி-மோகினி-பிசாசுகள்,



மூன்றுநாள் சுரதராஜன் யுத்தம்.

அப்போது தண்டானது தென்கோபுர்வாசற்
படியாக நுழைந்து வருகிறபோது பூமியானது கிடு
கிடுவென்றதிர அதிசேஷன் புஜமாற்ற அஷ்டதிக்கி
லும் ஆற்பரித்துவரவே உக்கிரசேனன் கண்டு ரத
த்தை நடத்தி வில்லை நிறுத்தி சரமாரியாய் அஸ்திரங்
களையெடுத்துப்பொழிந்து சேனைகளைக் கரும்புதுண்
டுபோற் காணையாய்சூரையாடி வரும்போதுசேனதி
யான பவர்னன் சாரதியை எச்சரித்து ரதத்தை நட
த்தி வில்லை நிறுத்தி அனேக பாணங்களைவிவென்று
விடுகிறபோதுஉக்கிரசேனனனவன சிங்கம்போற்கெ
ற்சித்து அம்புறப்பொதியிற் கையைவைத்து பத்க
நாராசமெடுத்து திவர்னன்விடப்பட்டஅஸ்திரங்களை
யெல்லாமறுத்து அவன்மார் பிலணிந்தகவசங்களை
பொடியாக்கி கையிறபிடிதத விலலையுந் துண்டித்து
கவசத்தையுமறுத்துக் கீழேதள்ளி சாரதிகளையுங்
கண்டித்தான் அப்போது பவர்னன் வேறொரு வில்
லெடுத்து நாணிபிகிந்து பாணங்களைப்பூட்டிமுன்னம்
உக்கிரசேனனனவன் ஒரு அர்த்தசந்திரபாணத்தை
விடவே அது நாகசர்ப்பம்போல் சீறிக்கொணடுஅதி
வேகமாய் வந்து பவர்னன் சிரசைக் கரகர வென்று
தள்ளிவிட்டது பின்னும் உக்கிரசேனன் சேனைமீது
ரதத்தைச் செலுத்திக கொல்லுகிறபோது சுரதமகா
ராசன் கண்டு ஐர்துநாராசமெடுத்து பிரயோகஞ்செ
ய்தான் அந்தஐந்தும் காலக்கோடிவிஷம்போற்சீறிக்
கொண்டுவந்துஉக்கிரசேனன்ரதம்சாரதிகுதிரைகளை
அதம் செய்து மார்பிலேந்து நாராசபாணம்பட்டு மூ
துகிலுருகிப்போய்விடவே உக்கிரசேனனனவன் ரா
மாராமாவென்று அடியற்ற பனை சாய்ந்தாப்போல்
சாய்ந்து உயிரைவிட்டான்உடனே சுரதமகாராசன்
ரதத்தை நடத்தி முன்னணியில் வரும்போது படை
த்தலைவர்களும் முனைந்து சுரதமகாராசனைவிடாமல்
வளைத்துக்கொண்டு சிகரத்தின்மேரிலெரிவதுபோல
அஸ்திரங்களைச் சொரிவதைக்கண்ட சுரதராசன் ஆ
ண்புலி புகுந்ததுபோலும் அழகிய புறுக்களருகில் ரா
சாளிபுகுந்ததுபோலு மாக்கர் கூட்டத்தில் சிரிப்பின்
ளைகளண்டயது போலுமடர்ந்தது அஸ்திரசஸ்திரத்
தைடமிரிமிதமாய்பொழிந்துபடைத்தலைவருடன் சே
னைகளையும் வானுலகந்தாரொருவனாக நின்றனுப்பி
விட்டு இன்னமுன்னோரவென்று கண்டுகளைத் தேவ
வரையில் குகனனவன் சுரதன்பேரிற் தேரைநடத்தி
மாரிபோலச் சரமாரியாய் ஐந்து திவ்யாஸ்திரத்தை
விட்டு சுரதமகாராசன்விடபட்டஅஸ்திரங்களைக்கண்
டித்து வில்நாணியைப் படிலென் றறுத்துவிடவே த
க்ஷணம் ஓசைபெற்ற அந்தவில்லானதுமிர்ந்தசத்த
மானது அவர் காதிரண்டுஞ் செவிடுபட்டுப் போயிற்
றும் அதுசுரதமகாராசன் மறுபடியும் வில்நாணியை
இருகப்பூட்டிகுணத்தொனிசெய்து பத்துதிவ்வியாஸ்
திரமெடுத்துவில்லிற் சந்தித்துப் பிரயோகப்படுத்தி
குகனேறிவந்த ரதஞ்சாரதிகுதிரைகளையுந்தும்சப்படு
த்தி அக்குகனும் அது மடங்கத்தக்கதாகஅடிமேலடி
யடித்தால் அம்மியும் நகருமென்கிற பழமொழிபோ
ற்கைகாலாட வொட்டாமல சாடுகையில் குகன் சிர
சானது அடிபட்டு ஸ்ரீராமாராமா வென்று தேகம்
பண்ணிக் கொண்டு எமனார் புக்கண்ட மட்சந்தய
னுமான் கோபதிப்தனுப் எரிந்து விழுந்து ரதத்தை
விட்டுக் கீழே குதித்தான்,

அப்படி கீழேகுதித்த சுரதராசன் சேனைகளிற்
புகுந்து ஆனைகளைவாரி ஆகாயத்திலெரிந்துரதங்களை
வாரிபூமியோடறைந்து குதிரைகளை வாரிந்துப்பல்
குப்பலாயமோதியும் சிலதைவாரி வாரணுபுரி பட்ட
ணத்தின்பேரில் விட்டெறிந்து ஆயிரத்தொரு நாலு
அக்ரோணி சேனைகளை ஒருசாமபரியந்தத்திற்குள்
ஈபெருப்பும் தேயவிடுவதுபோல் வாயுராசன் சேயி
ன் சேயன் வானுலகங் குடியேற்றிவிடவே மற்றசே
னைகளையெல்லாம் புத்திபுத்தி இன்று தப்பிப் பிழை
த்தோமென்று வோடுகையில் சுரதராஜன்கண்டு இ
ளிபில்லாதகோபங்கொண்டு சேனைகளை அகட்டிக
கொண்டு ரதத்தைநடத்தி ஓடவொட்டாமலும் திரு
த்தி மட்சயந்த அநுமாரைப்பார்த்து அடாராவண

காட்டிற் கிடக்கிற காய்கிழங்குகளைப்பொறுக்கித்தின்
றுகளைத்தண்ணீரைக்குடித்துக்கொடியிலுறங்கிக்கிடக்கிற
உனக்குமிக்க ராசகூட்டங்களுக்குமேலானசொக்கம்
கீயார் உன்பேரென்ன உன்தகப்பன்பேர்யாது என்
சேனைகளுன்னையென்ன செய்தார்களென்று இப்படி
க்கொன்றாய் உனக்கிவ்வளவு அதிகாரம் கொடுத்தவ
னைச் சொல்லென்றுகேட்க மட்சயந்தன் யுத்தஞ்செ
ய்வதைவிட்டு நய்ராசனே கேளும் ராஜாக்களானவர்
யுத்தமூண்டபோது இளைக்களைதிற்குப்பயந்துஇப்
படிக் குலக்கோத்திரங் கேட்கலாமோ வெற்றியடை
யத்தக்க சாமார்த்தியமுடையவர்வம்சபாரம்பரையை
க்கேட்டுப் போர்புரிவார்களோ ஆனாலுமென்ன சொ
ல்லுகிறேன் கேளும் பல்லாயிரக்கோடிஅண்டத்தை
யுங் கெர்ப்பத்திலவைத்து ரட்சிக்கப்படாநின்ற ஆதி
கர்த்தாவாகிய ஸ்ரீமகாநாராயணரை மடிமீதில் வைத்
துக்கொண்டிருக்கப்பட்ட ஆயிரம் பணாமுடியையுத்த
ரிக்க ஆதிசேடனின்முறியவடித்து கீர்த்தியடைக்கசக
லபிரபஞ்சசீவராசிகளிடத்திலும் பஞ்சபூதங்களுக்கெ
ல்லாம் ப்ராணவாய்விளங்கா நின்றவாயுதேவன் அவர்
குமாரன் அநுமான் அவர் குமாரன் என்பேர் மட்ச
யந்த அநுமாரென்று சொல்லுவார்கள் அந்தப் பரு
பலவல்லவராய் ஸ்ரீமகாநாராயணரே ஸ்ரீராமனாக மூன்
றுதம்பிமாருடன் தசரதமகாராசன் வயற்றிலவதரித்து
தாடகையைக்கொன்று சனகராசன்வில்லைப்பிடுங்கிக்
கொண்டு ராத்திவிட்டு தாயார்சொல்லைத் தள்ளா
மல் சீதாலட்சுமண சமேதராய் பதினான்கு வருஷம்
வனவாசஞ்செய்யவேண்டி மரவுரிதரித்து சடாயுவைக்
கண்டு பஞ்சவடியிலிருந்தி ராவணன் தங்கை சூர்ப்ப
நகையைப்பங்கம்பண்ணி கரதூஷண திரிசிரனென்ன
ப்பட்டபன்னிராயிரம்வெக்கலாதக்காரர்களையுங்கொ
ன்று மானுருவந்த மாரீசன்பேரில் வேட்டையாடப்
போனார் அப்போது லங்காபுரியையாளப்பட்ட ராவ
ணன் சீதா தேவியைப்பன்னசாலையுடனேயெடுத்
து ரதத்தில் வைத்துக்கொண்டு போய் விட்டான்.

அப்பால் மாரீசனைக்கொன்று சடாயுவுக்குமோ
ட்சங்கொடுத்து விராதனைவதைத்து அகமுனிக்குமு
த்திவளித்து கவந்தனைமாய்த்து சவுரிக்குப் பதவிக்
தனைதூத்தையாகிய அனுமாரைக்கண்டுசுக்ரீபனை
ச்சிநேகம் பண்ணி வாலியைக்கொன்று பட்டங்கட்டி
தொடியசேதுவையுமடைய ராவணன் கும்பகர்னன்
இந்திரசித்து அதிகாயன் அட்சயகுமாரன் கும்பனி
கும்பன் இரண்டாயிரம்வெள்ளம்ராட்சதரையுங்கொ
ன்று சீதையம்மனைச்சிறைமீட்டுக்கொண்டு வந்து அ
யோத்தியா புரிபட்டாபிஷேகராய் இருக்கிறநாளில்
ராவணன்கும்பகர்னனுக்கு உதவியாய்ச் சதகண்ட
ராவணனையுங் கொன்று அவன் தம்பி மகாமாயனுக்
கு பட்டாபிஷேகஞ் செய்து வைத்து அயோத்தியில்
வந்து பட்டாபிஷேகராயிருக்கிற நாளில் திருப்பாற்
கடலிற் சமீபத்தில் அதிதிபுரமென்கிற பட்டணத்தை
யாளப்பட்ட சகஸ்திரகண்ட ராவணன் கும்பகாணனு
க்கு உதவியாய்ஐயாயிரம்ராக்ஷதாளையுங்கூட்டிக்கொ
ண்டு ஸ்ரீராமர்தேவியான சீதாலட்சுமியுத்தம்புரிந்து
ஐயாயிரவெள்ள மவனுமாண்டு போகவே யவன்கு
மாரனாகிய சலவசந்தனுக்குப்பட்டங்கட்டி அயோத்
தியில்வந்து பட்டாபிஷேகராய் ராஜரீகம் பண்ணிக்
கொண்டிருக்கிறபோது குருவாகிய வசிஷ்டமுனிவ
ரால் ராட்சதாளைக்கொன்றபாவந்தொலைய அஸ்வமே
தயாகம்பண்ணி அப்பாவத்தைப் போக்கடித்துக்கொ
ள்ளுமென்று திருவுளம் பற்ற அந்தப்படியே ஸ்ரீராம
ரும அஸ்வமேதயாகம்பண்ணவிபீஷணர்மகாமாயன்
சலவசந்தன் சுக்ரீபன் முதலான பேரையும் அவரவர்
களையும சேனைகளுடன்வந்து அயோத்திமாநகரிலிற
ங்கினார்கள் அதன்பின்பு அஸ்வமேதக் குதிரைக்கு
வசிஷ்டர்சொன்ன மந்திரபூதிகளிற் பூசைசெய்து
அந்தக்குதிரையைப்பூமிப்பிரதக்ஷணம்பண்ணவேண்
டிஸ்ரீராமர்தம்பியாகிய சத்துருக்கமகாராசனுடன்சல
வசந்தன்மகாமாயன் சூரசேனன் ஐம்பத்தாறு தேச
த்து ராசாக்களையும் அறுபத்தோராயிரமக்ஷோணி
சேனைகளையுங்கூட்டி குதிரையின் பின்னனுப்பி வைத்
தார் அவர்களுங் குதிரையை விட்டுக்கொண்டு வரு
கிறபோது மதிநுபுரிபட்டண மட்சயந்தராசனும் வீர
சேனனுங் குதிரையைப்பிடித்துக்கட்டியுத்தம்பண்ணி
யானைசேனைகளையுந் தோற்று ஸ்ரீமந்நாராயணராய்
விளங்கப்பட்ட ஸ்ரீராமருடைய பிரதாபத்தைக்கேட்
டு சத்துருக்கமகாராசனை வணங்கி இறந்தபோன
சேனைகளையும்காளிகாதேவியினலெழுப்பிக்கொண்டு
குதிரையைக் காணிக்கை கப்பங்கள் வைத்து பூசை
செய்து அவரும் அவாது குமாரனும் அவர்களுடை
யதன்டையழைத்துக்கொண்டெங்கள் தளங்களுடன்
வந்து சேர்ந்தார்கள் அப்பால் குதிரைவிட்டுக்கொண்
டுபோனையமானது பின்வரும்போது உன்தயனனஅர
ண்ணியமகாராசன் குதிரையைப்பிடித்துக்கட்டி குதி
ரைபின்வந்த ராட்சதாளையுங் கொன்றபடியாய் இப்
போ உன்புறதேவந்த சேனைகளை மாய்த்துஉன்பட்ட
ணத்தையுங்கொள்ளைகொண்டு போகவல்லவனநான்
போகவல்லவன் நான்போதாதோ அப்படிவருதபடி
க்கு குதிரையைக் கொண்டுவந்துவிட்டு சத்துருக்க
மகாராசனை வணங்கிபிழைக்கிறதேகாரியமென்றான்.

அதுகேட்டு சுரதமகாராசனானவன் சற்றுநேர
மாலோசனைசெய்து தலையைசைத்துஸ்ரீமந்நாராயண
ராய் விளங்காநின்றபரப்பிரமமே ராமனாக வந்து அ
வதரித்துராவணசம்மாரஞ் செய்துஅஸ்வமேதயாகம
பண்ணி விட்ட குதிரை நம்முடையதமயன்பிடித்துக்
கட்டி ராட்சதரைகொன்றபடியால்நமதுதம்பியாகிய

வெருசேனைகளு மாண்டுபோனார்கள் இப்போதுநாம் சமாதானத்துக்குப் போனாமேயானால் யுத்தஞ்செய்யப்பயந்து சத்துருக்கனை வணங்கிப் பிழைத்தானென்று தேவர்களும் நகைப்பார்கள் நம்மோடொத்த ராஜாக்களும் ராக்ஷதாளும் பழிப்பார்கள் ஆகிலும் என்னமுழுகிப்போயிற்று நமது கையிற் சிவன்கொடுத்த வில்லிருப்பதாற் பயனென்ன இக்குரங்கையுஞ் சேனைகளையுஞ் சத்துருக்கனையும் செயித்து ராக்ஷதாளையுங் கொன்றேனானால் இந்தசமாச்சாரம் அயோத்தியாபுரி பட்டணத்திலிருக்கப்பட்ட ஸ்ரீமந்நாராயணராய் விளங்காநின்ற ராமபிரான்கேட்டு குதிரையைவிடுவித்துக் கொள்ளவருவார் அப்போது இவரைச்சேவித்துவணங்கினால் நாம் செய்தபாவம் பரிகாரமாகிக் கடைத்தேறலா மென்ன ;மனதிலெண்ணி மட்சயந்த வனுமானைப்பார்த்துச் சிலவசனஞ் சொல்லுகிறான் அடா அனுமானே நீ சொன்னவை யல்லவா மெய்யிருந்தாலும் என்னுடன் யுத்தம் பண்ணப்பயந்து என்னைச்சமாதானப்படச்சொல்லுகிறாயே அப்படியாகிறது இன்னம் பின்னாலிருக்கின்றது இனியுன்னாலாகின்ற யுத்தங்களைச்செய்யென்றுசொல்ல 'அதுகேட்டு மட்சயந்தனுமான் அடடா நாம் இவ்வளவுதூரஞ்சொல்லியுங் கேளாமல் யுத்தம்பண்ணென்று கூறினாயல்லவா நல்லதாகட்டுமென்று கோபமாகிச் சிவ்வென்று ரதத்தின்பேரிற் பாய்ந்து சுரதராசனுடைய மார்பைப்பார்த்து ஒருகுத்தானது விட்டான் அந்தக்குத்தை தப்புவித்துக்கொண்டு சுரதராசனானவன் வில்லை நிறுத்தி வாயுவேகமனோவேகமான அஸ்திரங்களை மேன்மேலாய் மட்சயந்த வனுமான்பேரில் விட்டு சரபஞ்சமாயடிக்கிறபோது அதுகளையெல்லாம் உதறிவிட்டுச் சேனைகளின்பேரில் விட்டெறிய அதுகள் தன்பேரில் படவொட்டாமல் அஸ்திரங்களை விட்டறுக்கப் பின்னும் குதிரைகளையும் ரதங்களை வாரி வாரிச் சுரதன்பேரிலெறிய அதுகள் தன் முன்னுக்கு வரவொட்டாமல் தடுத்துக்கொண்டு ஏதடா குரங்கோ மகா பொல்லாதா யிருக்கின்றது.

நமது சேனைகளைக்கொண்டு நம்மைத்தானே கொல்லவந்தது பார்த்தாயோவென்று கோபித்து பத்து திவ்வியாஸ்திரங்களை யெடுத்து மந்திராபூதிகளுடன் பூசைசெய்து விட்டுவிட்டான் அந்த திவ்வியாஸ்திரங்களோ நாகசற்பங்கள்போற் சீறிக்கொண்டு வருகையில் மட்சயந்தவனுமான் பார்த் தண்டமளாவி யிராநின்ற ஓராலவிருட்சத்தை மடமடவென்று பிடுங்கி நுனிக்கிளை யனைத்துஞ் சேர்த்துப்பிடித்துப் அஸ்திரங்களின்பேரிற் சுழற்றியடித்தான் அதனால் அஸ்திரங்களானது கூர்மடங்கி ஒடுங்கி பூமியில் விழவே சுரதமகாராசனுக்குக் கண்கள் பொறியெழும்பக் கோபங்கொண்டு ஒரு குரங்கின்பேரில் இவ்வளவு தூரம யுத்தம்புரிந்தால் இன்ன மிருக்கு மற்றவர்களுடன் எப்போது யுத்தஞ்செய்வதென்று மீசைகள் துடிதுடிக்கப் பற்களை நறநறவெனக் கடித்து மகா வுக்கிராகாரத்துடன் ஒரு சத்தியை எடுத்து எச்சரித்து விடவே அது சிவ்வென்றெழும்பி மட்சயந்தனுமான் மார்பிற்பட்டு முதுகிலுருகிப்போகவே ராமாராமாவென்று அடியற்றவிருட்சம்போல் மடிமீதுவிழுந்து மட்சயந்தனுமான் உயிரைவிட்டான்.

நான்காநாள்யுத்தம்.

மறுநாள் காலசித்தனான ராக்ஷதன்சீறி கோபமீறிச் சுரதராசனை வந்து வளைத்துக்கொண்டு சொல்லுகிறான் ஓய் மகாராசனே ஸ்ரீராமபிரான்விட்ட அஸ்வமேதக்குதிரையை நீ பிடித்துக்கட்டிச் சேனைகளைக் கொன்றபடியினால் இப்போது உன்னையும் உன் தம்பியையும் உன்தகப்பனையங் கொன்று உன்பட்டணத்தையுங் கொள்ளை கொள்ளாமற் போனேனேயானால் என்பேர் காலசித்தனா பாரென்றுகூறவே சுரதமகாராசனுக்குச் சந்தோஷமாகிச்சொல்லுகிறான் வாராய்காலசித்தனே என்தமயனான அரண்ணியமகாராசன் உங்கள் குதிரையைப் பிடித்துக்கட்டி அதன்பின்வந்த ராட்சதாளையுங்கொன்றுபட்டணம்வந்துவிட்டார் நேற்றையதினம் என்தம்பியாகிய சுவேலராசனையும் ஆயிரத்திருநூறக்கோணிசேனைகளையுஞ் சத்துருக்கன்கொன்றபடியினாலே அப்பழிதீர சத்துருக்கனுக்கு சகாயமாக வந்த உன்னையும் உன்னுடன் சேர்ந்த சேனாசமுத்திரங்களையும் உங்களுக்கெல்லாம் ராசாவான சத்துருக்கனையுங்கொன்று பராபர வஸ்துவாய் விளங்காநின்ற அந்த ஸ்ரீராமமூர்த்தியை இவ்விடத்தில்வரவழைக்காமற் போனேனேயானால் நான் பிடித்தது வில்லுமல்ல என்பேர் சுரதராசனு மல்லவென்றான்.

அதுகேட்டு காலசித்தன் மகா கோபங்கொண்டு சுரதமகாராசனைப் பார்த்துச் சொல்லுகிறான் அடா சுரதா என்னவார்த்தை சொன்னாய் என்னையும் என் சேனைகளையுஞ் சத்துருக்க ராசனையுங்கொன்று ஸ்ரீராமரைவரவழைக்க உன்னாலாகுமோ அவர் பாணம்வந்தால் அதற்குத்தரவுசொல்ல உனக்குத்திறமுண்டோ சொல்லென்றான் அதுகேட்டு சுரதமகாராசன் அடா காலசித்தனே என்னை செயிக்கத்தக்க வல்லமையுள்ளவனுமாய் ஸ்ரீராமர் திருவடியை எந்நாளும் மறவாதவனுமாயிருப்பது மெய்யானால் யுததம்பண்ணும்போது வஞ்சனைசூது மாய்கையும்விட்டுச் சத்தியவானாகச் சண்டைபண்ணி என்னை செயிக்க உன்னால் திராணியுண்டோவென்று கேட்ட சுரதராசனைப்பார்த்துக் காலசித்தன் நகைபுரிந்து சொல்லுகிறான் அடா சுரதா

நான் ஸ்ரீராமரை வணங்கினநாள் முதல் மாய்கைவஞ்சனை சூது மோசம் இத்தொழில்களையெல்லாம் விட்டு ஸ்ரீராமரைப்போல் சத்தியவான மாறாமலிருக்கிறேன் அதேதெனென்றால் ஸ்ரீராமனுடைய ராச்சியத்தில் வஞ்சனை சூது மோசஞ்செய்தால்ராமத்துரோகம்உடனேவந்து சித்திக்குமானையால் நானுடன் உண்மையாக யுத்தம்பண்ணி உன்னைச்செயிக்கிறேன் பாரடாவென்றான் அதனைக்கேட்டு சுரதமகாராசன் வில்லையெடுத்து நிறுத்தி அனேக அஸ்திரங்களை வில்லிற்சந்தித்து பிரயோகம்பண்ணினான் அதற்கு காலசித்தனுந் தனுசிற் சந்தித்து வைத்திருந்த அனேக அஸ்திரங்களைவிட்டு அறுத்துப்போட்டு அதிகமாப்பத்து நாராசம் விட்டு சுரதன் ஏறிவந்த ரதஞ்சாரதி குதிரைகளையும் அதம்பண்ணிவிடவே சுரதராசன் மறுதேரிலேறி அதிககோபங்கொண்டு உக்கிராகாரனாய் ரதத்தைநடத்தி அநேக திவ்வியாஸ்திரங்களைவிட்டுக் காலசித்தனேறிவந்த ரதத்தை யதம்பண்ணி அவனது மார்பிலணிந்த கவசத்தையும் பொடியாக்கினான் அதுகண்டு காலசித்தன் வேறொரு தேரின்மேலேறிக்கொண்டு அதிக உக்கிராகாரத்துடன் வில்லையெடுத்து நாணி பிகிர்ந்து சரமாரியாய்ப்பொழிந்து சுரதராசனைக் கைகாலாடவொட்டாமலும் எய்கிறபோது சுரதராசன்கண்டு ஆச்சரியப்பட்டவனாய் வருகிற பாணங்களையெல்லா மறுத்துப்போட்டு நூறு திவ்வியாஸ்திரங்களை எடுத்து வில்லிற்றொடுத்துப் பிரயோகஞ்செய்தான் அதற்குத்தருந்த நூறு திவ்வியாஸ்திரத்தை விடுத்து சுரதராசன் விட்ட திவ்வியாஸ்திரத்தை யறுத்தெரிந்தான் அதனாற் கோபங்கொண்டு பதினைந்துநாராசத்தைவிடுத்து காலசித்தன் பிடித்த வில்லையுங்கண்டித்து ரதத்திற்கட்டிய துவசத்தையும் அறவெட்டி சாரதிதலையறுத்துக் குதிரைகளைக்கொன்று காலசித்தன் திரேகத்திற்றைக்கப் பிளப்பித்தான் அதனால் மகா ஆயாசத்துடன் ரதத்தின்மேற் சாய்ந்து மூர்ச்சையானான்.

அப்போது சுரதமகாராஜன் அதிக சந்தோஷத்துடனே சாரதியை மெச்சரித்து சக்கர யூகந்தனியின் பேரில் நடத்தென்று கூறி தனது வில்லை முகத்திற்கு நேராய்ப்பிடித்து அஸ்திரங்களை மேலு மேலுஞ் சேனைகள்பேரில்விட்டுக் கொன்றுக்கொண்டே சக்கரயூகத்தனியில் ஐந்துதரஞ் சுற்றிக்கொண்டு வருகிறபோது ஐந்துதரத்துக்கும் ஆயிரம் அக்ரோணி சேனைகள் மாண்டுபோயின அதுகண்டு மகாமாயன் கோபத்துடனே ரதத்தைநடத்தி சுரதராசனை அப்புறமிப்புறம்போகவொட்டாமல் அஸ்திரங்களினாலடிக்கிறபோது மூவாயிரத்தைந்நூறு ராசகுமாரர் மகாகோபத்துடனே ரதத்தைச்செலுத்தி மகாமாயனை வளைத்துக்கொண்டு போர்புரிந்தார்க ளத்தருணத்தில் சலவசந்தனும் அதிக சினத்துடனே சுரதமகாராசனை வளைத்துக்கொள்ளுகையில் ஆயிரத்தைந்நூறு மந்திரிமார்களும் வெகுதுரிதத்துடனிரதத்தை நடத்திசலவசந்தனை வளைத்துக்கொண்டு யுத்தம்பண்ணினர்க ளப்படியுத்தம் புரிகையில் சுரதராசன் இதுதான்சமயமென்று சேனைகள்பேரில் ரதத்தைநடத்திப் பாணங்களை விடுத்துக்கொல்லுகிறபோது வீரசேனமகாராசன் மகாகோபக்காரனாகி சாரதியை மெச்சரித்து ரதத்தைநடத்தி அடா சுரதா நில்லுநில்லு என்கேள்விக் குத்தரவுசொல்லு என்தலைகிழாய்விழுகிறாய் நீகையிலாகாத சிலபேரைக் கொன்றோமென்று கர்வித்து துள்ளுகிறாய் துள்ளுகிறமாடு பொதிசுமக்காதென்றறியாயோ இதோ என்னுடைய பாணாக்கினியால் பஸ்மீகரப்படுத்துகிறேன் பொறுபொறென்று வில்லிலநேக மாயிரம் பாணங்களைத்தொடுத்துவிட்டான் அதுகண்டுசுரதமகாராசன் நகைத்து ஐம்பது திவ்வியாஸ்திரங்களையேவி வீரசேனன் பாணத்தை அறுத்துவிட்டு அவன் முன்னுக்கு ரதத்தைநடத்தி அடா வீரசேனா நீயா என் முன்னின்று யுத்தம்பண்ணுபவன் எதோநீசெய்கிற யுத்தத்தைப்பாரப்போம் நில்லென்று அதட்டி வில்லை நிறுத்தி பத்து நாராசபாணங்களைச் சந்தித்துப் பிரயோகஞ் செய்தான்.

அந்த பத்து நாராசங்களும் நாகசர்ப்பம்போற் சீறிக்கொண்டுவரவே அதற்குப்பதில் வீரசேனன்பதினைந்து நாராசத்தை விட்டறுத்து இடிபோலொத்த இருபது திவ்வியாஸ்திரங்களைச் சுரதராசன் ரதத்தைப் பார்த்துபிரயோகித்தான் அந்த திவ்வியாஸ்திரங்களுந் தகத்தகாயமாய் யெறிந்துக்கொண்டு வருகிறபோது சுரதராசன்கண்டு தானும் இருபத்தைந்துதிவ்வியாஸ்திரங்களை விட்டதை அறுத்தெறிந்துவிட்டானுடனே வீரசேனமகாராசன் கோபாக்ருஷத்துடன் ஒரு அக்கினியாஸ்திரத்தையெடுத்து மந்திராபூதிகள் செய்துவிட்டான் அதுவும் வெளிப்பட்டு அக்கினிப்பொறிகளைவாரி யிறைத்துக்கொண்டு வருகிறபோது சுரதமகாராசன்கண்டு ஒரு வருணாஸ்திரத்தையெடுத்து மந்திராபூர்கள் கொடுத்து விடுததானந்த வருணாஸ்திரமானது இடிமின்னல் குமுறலுடனே குடங்கொண்டு சலம்பொழிந்தா லெப்படியோ அப்படியாக வீரசேனன்விட்ட அக்கினியாஸ்திரத்தின்பேரிற் சுரதமகாராசன் சரமாரியாகப் பொழியவே அந்த அஸ்திரமானது தணிந்து பூமியிலுருகிப்போய்விட அதனால் வீரசேனன் ஒரு பாவதாஸ்திரத்தை எடுத்துவிட்டானது அநேகபாவதங்களுருக புகையுண்டாகிவருகிறபோது சுரதராசன் கண்டு ஒரு வச்சிராயுதத்தைஎடுத்து அபிமந்திரித்து பிரயோகித்தான் அதுவுமநேகவச்சிராயுதங்களாய் ரூபங்கொண்டுவருகிற பர்வதங்களை எல்லாம் அறுத்துக் கிழேதள்ளிவிட்டது அதுகண்டு வீரசே

னமகாராசன் ஒருசத்தியையெடுத்து ஆபூதிகள்கொ
டுத்தனுப்பவே சுரதமகாராசனும் பதினெந்துநாராசம்
விட்டு வீரசேனன்விட்ட சத்தியை இரண்டுதுண்டாக்
கி அவன்மார்பிலணிந்த கவசத்தையும் பொடியாக்கி
மார்பிலுருகிப்போகச் செய்தான் அதினல் வீரசேன
ன் மகா ஆயாசமடைந்து மூர்ச்சையாய் இரதத்தின்
பேரிற் சாய்ந்துவிட்டான்.

அப்போது சுரதமகாராசன் வெற்றிச்சங்கை எடு
த்தூதினன் அதனைக்கண்ட சேனைகளெல்லாம் பிதுர்க
ளங்கிச் சுரதமகாராசனைவளைத்துக்கொண்டு பாணங்க
ளை மென்மேலாக பொழிகிறபோது அவைகளைச் சுர
தாராசனறுத்துவிட்டு ஐந்து திவ்யாஸ்திரம்பிரயோகி
த்துச் சாரதிகுதிரையுங்கொன்று நீலாட்சதன் மார்
பைக்கலக்கி விட்டானதனலவனும் கைமெய்சோர்ந்
து ஆயாசத்துடன் ரதத்தின்பேரிற் சாய்ந்தான் சாய
வே சுரதராசனும் பின்னுமந்த உக்கிரம்விடாமல் ரத
த்தைச் சேனைகளின் பேரிற்றுரத்தி அகோரமான பா
ணங்களை விட்டுக்கொய்யும்போது சேனைகள் கண்ட
ம்வேறு முண்டம்வேறு கைவேறுமெய்வேறுஇடை
வேறு தொடைவேறாய் இரத்தப்பிரவாகம் பூமியைய
றுத்துக்கொண்டு யோடுவதைக்கண்ட தேவர்கள் மு
தல் யாவர்களுஞ் சுரதமகாராசனுடையசரவேகத்தை
யுங்கரவேகத்தையுமெச்சி ஆச்சரியமடைந்தார்களந்த
சமயத்திற்காலசித்தனுனவ னுயாசந்தெளிந்து கண்ணை
விழித்துப்பார்த்துச் சுரதராசனைக்காணுமல் மறுதே
ரிலேறி வில்லையெடுத்துக் குணத்தொனி பண்ணி சார
தியையெச்சரித்து ரதத்தை நடத்தச் சொல்லி சுரதரா
சன்எங்கேயென்றுவரும்போது வெகுசேனைகள் சின்
னுபின்னமாகத் தலைவாறு கெட்டு சக்ரயூகத்தணிக்கு
ப்போய் கோஷ்டமெழும்பிற்று அந்தச் சத்தங்கேட்டு
காலசித்தன் அதிகவேகமாய் ரதத்தைநடத்தி வரும்
போது சுரதராசன் ஓய் ஒழிச்சலில்லாமற் பாணங்க
ளைவிட்டு ஒரு சாமபரியந்தத்துக்குள்ளே முப்பத்தை
யாயிரம் அக்ரோணிசேனைகளைக் கொன்றுவிட்டான்
அதுகண்டு காலசித்தன் கண்கள் சிவந்து கடுங்கோப
ங்கொண்டு ஓய் சுரதமகாராசனே நீமகாபலசாலியெ
ன்று மலைக்காதே நாய்போற் குலைக்காதே சிலபேரை
க்கொன்றேமென்று வீரத்தைக் காட்டாதே என்கை
பாணத்திற்கு இன்றுன்னை இரையாக்கிக் கொள்ளுகி
றேன்பாரென்று பத்துதிவ்வியாஸ்திரங்களைவிட்டு ரத
ஞ்சாரதி குதிரைகளுடன் பொடியாகவே சுரதமகா
ராசன் சிங்கக்குட்டிபோல துள்ளியெழுந்து மறுதே
ரிலேறி வில்லைக்கையிலெடுத்து பல்லைப்படபடவென்
று கடித்து தல்லியமான அஸ்திரங்களைத் தொடுத்து
ஓய்காலசித்தனே உன்வீரத்தை நீயேமெச்சிக்கொண்
டாய் தன்னைத்தானே புகழ்வன்றனே பதர் என்றறி
யாயோ சத்தசாகரஞ்சூழ்ந்த தரணிக்குள் சுரதராசனு
க்கு நிகரில்லையென்பது குறியாயோ சபாஷ் உன் சவு
ரியத்தை இதோ காண்பிக்கிறேன் பாரென்று மார்
பை அஸ்திரத்தால் கலக்கி விட்டான்.

அதற்கு காலசித்தன் களைபாமல் இளையாமற் சொ
ல்லுகிறன் ஓய்சுரதனே காலசித்தனென்றால் உன்னைப்
போலொத்தவர்களைக் கடைசியிற் கட்டிக்கொண்டிழு
த்துப்போகுங் கருடவாகனனுகிய காலனும் கலங்கி
நிலைவிலங்கி பதுங்கி யொதுங்கிப் போவானென்பது
நீ கண்டிலையோ நல்லதனைக்காண்பிக்கிறேன் சற்றே
யுனது கண்குளிரப்பாரென்று கைகொட்டி தோள்த
ட்டி கனைத்து இந்த அஸ்திரத்தை விடலாமென்று நி
னைத்து ரதத்தை முன்னுக்கு வரவொட்டாமல் பாண
ங்களால் அவன்தேகத்தை மூடி அதிகமாகப் பத்துநா
ராசத்தைவிடுத்து ரதத்தை பின்னுக்குத் தள்ளிக்கொ
ண்டு போகும்படியாய் செய்தான் அப்படி சுரதமகா
ராசனிட மார்புகலங்கவே மகா ஆயாசத்தோடுங் கை
யிற்பிடித்தவில்லை நழுகவிட்டு ரதத்தின்பேரிற்சாய்ந்து
மூர்ச்சையடைந்தான் அப்போது சாரதி குதிரைகளு
டன் பின்னிட்டபடியே பதினைந்து காதவழி தூரங்
கொண்டுபோய் விட்டது,

பின்பு காலசித்தன் மகாசந்தோஷமாய் ரதத்தை
நடத்திக்கொண்டு மூவாயிரத்தைந்நூறு ராசகுமாரர்
கள்பேரில் வந்தெதிர்த்தா னப்படிவந்தெதிர்த்த கால
சித்தனையு மகாமாயனையும் விடாமற் பாணங்களை பூட்
டி அகோரமானயுத்தம் புரிந்தார்கள் அக்காலையில்
மகாமாயனுனவன் சிலையையூணி அஸ்திரங்களை மெ
ன்மேலாய்ப்பொழிந்து மூவாயிரத்தைந்நூறு ராசகு
மாரர்கள் ஏறிவந்த ரதஞ்சாரதிகளுந் தும்சஞ்செய்து
விட்டான் மறுபடியும் வேறுரதத்தில் மூவாயிரத்தை
ந்நூறுபேரு மேறிவர அதுகளையுங்காறறிற் பஞ்சாக
ப்பறக்கடித்துவைத்தா னிப்படி பதினுலாயிரம் ரதம்வ
ரையிற் பொடிபொடியாய்ப்போகவே வேறேரதமேற
வுதவாமல் மூவாயிரத்தைந்நூறு ராசகுமாரர்கள் கத்
திகேடயங்களை எடுத்துக்கொண்டு ஓடிவருவதைக்க
ண்டு மகாமாயனுனவன் ஒன்றின்மேலொன்றுப் மூ
வாயிரத்தைந்நூறு ராசகுமாரர்கள் முடியையுமறுத்
துக் கீழேதள்ளுகிறபோது தேவர்கள்கண்டு மகாமா
யனுடைய கரவேக சரவேகத்திற்கு மிகவுமாச்சரியம
டைந்தார்கள் அப்போது முப்பத்தெட்டாருலட்சத்துபதி
னுயிரம் படைத்தலைவர்களும் மகாமாயனை வளைத்துக்
கொண்டு மாரிசொரிவதுபோலச் சரமாரிவிட்டு மகா
மாயன் ரதத்தை முடிபோட்டார்கள் அதுகண்டுகால
சித்தன் மிகவுங்கோபங்கொண்டு சேனைகளைக்கலிந்து
சாடுகிறபோது சின்னுபின்னமாக விழுந்திறந்தபேரு
ம் உயிருடன் தப்பியோடுகிறபேரும் சேவகம்வேண்

டாமென்கிறபேரும் பிணங்களைவாரி மேல்போட்டுக் கொண்டு மறைந்தபேரும் காலசித்தனே உமதுகாலுக்குஅபிமஞ்சரணங் காருமென்பாரும் ரதக்காலில்கட்டுத்தேய்ந்தபேரும் சாத்திறைல் தலைசாய்ந்தபேருமாகவே உதிரவெள்ளங்கள் ஆறுபோலோடத் தலைப்பட்டது டாகினிமோகினி பூதப்பிரேதங்கள் நாய்நரிகழுகுகளிகள் பிணங்களை பிடித்துத்தின்று உதிரங்களைக் குடித்து டமாரபேரிகைகளையெடுத்து கழுத்தில்மாட்டிக்கொண்டு ஓடுகிற ரத்தவெள்ளத்தில் அனேக தலையில்லாதமுண்டங்களெழுந்து கூத்தாடிற்று அதுகண்டுகாலசித்தன்பார்த்து ரதத்தைதிருப்பிக்கொண்டு சலவசந்தன்யுத்தஞ்செய்கிற இடத்திற்குவந்தான் அவ்விடத்தில் ஆயிரம் மந்திரிபிரதானிகளுஞ் சலவசந்தனை வளைத்துக்கொண்டு சாமஞ்சமாயடிக்கிறபோது சலவசந்தன் அவர்கள் விடப்பட்ட அஸ்திரங்களை யெல்லா மறுத்து ஒவ்வொருவருக்கு நான்குதிவ்வியாஸ்திரங்களைவிட்டு சாரதிகுதிரை மந்திரிபிரதானி முதலியவர்களைக்கொன்று எமபதிக்கனுப்பினான் அப்போது மகாமாயனனவன் மகா வுக்கிரத்துடனே நபுறுன் அக்கு நாலுபாணங்களைவிட்டு முப்பத்தொரு லட்சத்துபதினாயிரம் வெண்கலரதக்காரறையும் நிமையோடு நிமைதட்டுமுன்னமே எமலோகத்திற் கனுப்பிவிட்டான் இவ்வாறு ஒருவரும் நிகரில்லாமல் ருட்சதசிரேஷ்டர்கள் இரதத்தை நடத்திக்கொண்டு சத்துருக்கமகாராசனுடைய பாளையம்போய்ச் சேர்ந்தார்கள் அப்போது சூரியனுதயமாகி இருபத்தைந்து நாழிகையாயினதாம்.

ஐந்தாநாள் யுத்தம்.

அதற்குமுன்னமே சோமகாசமகாராசன் ஐந்நூறக்ரோணி யானைபரிசேனைகளைப் பயணப்படுத்தி ஐந்நூறிராசகுமாரர்களையும் ஐந்நூறு மந்திரி பிரதானிகளையும் தன்புத்திரனாகிய சுரதமகாராசனுக்குப் பின்பலமாய் கூட்டியனுப்பினார் அனுப்பவே மகாமாயன் ரதத்தைச் சேனைகள்பேரில் நடத்தி வில்லைவளைத்து அம்புறாப்பொதியில் கையைவைத்து க-ரி-ா-து-இந்தப்படியா யஸ்திரங்களைதொடுத்து ஒன்றின்மேலொன்றாய் விட்டுக்கொல்லுகிறபோது சேனைகளானது சின்னபின்னமாய் கால்மாடுதலைமாடாய் விழவே ஐந்நூறு ராசகுமாரர்களும் மகாமாயனை வளைத்துக்கொண்டார்கள் சலவசந்தன்ரதத்தை ராசகுமாரர்கள்பேரில் நடத்தினான் ஐந்நூறு மந்திரிகளும் சலவசந்தனை ராசகுமாரர்கள்பேரிற் போகவொட்டாமல் அஸ்திரங்களைபூட்டி வளைத்துக்கொண்டு யுத்தஞ்செய்தார்கள் காலசித்தனனவன் பார்த்து இதுதான் சமயமென்று பாணங்களைவிட்டுக் கொல்லுகிறபோது ராசகுமாரர்கள் விடப்பட்ட அஸ்திரங்களையெல்லாம் அறுத்துப்போட்டு பேருக்கிரண்டு பாணங்களை லக்காகத்தொடுத்து ஐந்நூறு ராஜகுமாரர்களின் சாரதி குதிரைகளையுங் கொல்லுகையில் ரதமும் நடவாமல் நின்றுவிடவே ராசகுமாரர்கள் சத்தி கேடயம் தெண்டாயுதங்களையெடுத்துக்கொண்டு ரதத்தைவிட்டு குதித்து ஓடிவருகிறதைக்கண்ட மகாமாயன் தன்னுடைய வச்சிரகோபதண்டாயுதத்தை யெடுத்துச் சுழட்டியடித்தான் அந்தடிபடமாட்டாமல் ஓடி ஒளிப்பாரும் ரோஷத்துடன் வந்தெதிர்த்து வச்சிரகோப தண்டாயுதத்தாலடிபட்டு மாள்வாரும் ஸ்ரீராமாராமா உமது திருப்பாதமேகதியென்று துதிபண்ணி உயிர்விட்டுச் சாய்வாரும் ஆகச் செய்யுங்காலத்தில் இறந்தசேனைகள்போக ஓடிஒளித்த சேனைகளெல்லாம் ஒன்றாய்க்கூடி இன்றைக்கு இராட்சதாள் புண்ணியத்தால் உயிர்தப்ப விட்டானென்று இருநூறக்ரோணி சேனைகளைப்பறிகொடுத்து பட்டணம்போய்ச்சேர்ந்தார்கள் அதில் இரண்டு தூதுவர்கள் தலைமேல் கையைவைத்து அழுதுக்கொண்டு சோமகாசமகாராசனிடஞ்சென்று வணங்கிநின்றுசொல்லுகிறார்கள்.

ஐயா ராஜாதி ராசனே ராஜமார்த்தாண்ட ராஜபரமேஸ்வரா உமது குமாரனாகிய சுரதமகாராசனுடன்கூட இரண்டாயிரத்தைந்நூறு அக்ரோணி சேனைகளுமாண்டு ராசமன்னர் படைத்தலைவர் சேனாதிபதிகள் மந்திரிபிரதானிகளுமாண்டு சுரதமகாராசனுக்குப் பின்பலமாக அனுப்பிவைத்த ஐந்நூறக்ரோணி சேனைகளும் ஐந்நூறு ராசகுமாரர்களும் மடிந்து மூந்நூறக்ரோணிசேனைகளுஞ் சத்துருக்கர் சேனைகள்கையில்தப்பித்துக் கொண்டு ஓடிவந்தோமென்று கூறவே சோமகாசமகாராசன் திகிலடைய அடடா தூதர்களே என் மகன் சுரதனுயிறப்பவன் நீங்களெங்கேயாவது நித்திரைசெய்து சொற்பனங்கண்டு வந்தீரோ சொல்லுங்களென்ன தூதர்கள் ஐயா தங்கள்குமாரனாகிய சுரதராசனும் வெகுசேனைகளும் மாண்டுபோயிற்று கேளும் ஒருராட்சதனுடனே வெகுநேரம் போராடி அந்தராக்ஷதனால் சுரதமகாராசன் கோபித்திருக்கிறாரென்றார்கள் அதனைக்கேட்ட சோமகாசமகாராசன் சிம்மாசனத்தி லிருந்தபடியே அடித்துமோதி பூமியில்விழுந்து அலறியெழுந்து வெகுவாகப் பிரலாபிக்கையில் அரண்யமகாராசன் மந்திரி பிரதானிகளும் சோமகாசமகாராசன் துயரத்தை யாற்றுகையில் ஆயாசந் தெளிந்து கண்ணை விழித்துப்பார்த்தான் அப்போதெவ்வளவு நாழிகையாயிற்றென்றால் அஸ்தமித்து பத்து நாழிகை யாயிற்று ஆகையாலினி யென்ன சண்டை நடக்கப் போகிறது எல்லாம் நாளைக்குப் பார்க்கலாமென்று சாரதியை யெச்சரித்து ரதத்தைநடத்தி பட்டணம் வருகிறபோது தமையனிறந்தான் தகப்பனிறந்தான் தம்பி சாய்ந்தான் பிள்ளைமாய்ந்தான் மாமன் செத்தானென்று வாரணாபுரி பட்டணமுழுதுங் கோவென்ற

சத்தமா யழுதுக்கொண்டிருப்பதைச் சுரதமகாராசன் கேட்டு அரண்மனைக்குப்போகிறபோது அவ்விடத்தில் பெண்டு பிள்ளை தாய்மார்சகலமேரு மழுதுக்கொண்டிருந்தார்களந்த சத்தங்களையும் அப்பால் கொலுக்கூடஞ் சென்றான் அவ்விடத்திலுங்கோவென்ற சத்தங்களாயிருக்கவே சுரதமகாராசன்ரதத்தைவிட்டுக் கீழேயிறங்கி வில்லைக்கையிற் பிடித்துக்கொண்டு சபாமண்டபம் வருகையில் நால்வகைச் சேனைத்திரங்களுமெழுந்து கைகுவித்து சேவிக்கும்படியாய் வந்துமந்திரிபிரதானி சகலராச மன்னர்களுடனும் நிறைந்தகொலுவாயிருக்கிறதை தந்தையாகிய சோமகாசமகாராசனையும் 'தமையனான அரண்ணிய மகாராசனையுஞ் சேவித்தானவர்களுக்குஞ் சுரதமகாராசன வாழ்த்தியபின்சோமகாசமகாராசனானவர் கேட்கின்றார்.

அப்பாசுரத இன்று காலமே யுத்திற்குப்போயிருந்தாயே என்னசமாச்சார மெனக்கு விபரமாய் சொல்லென்று கேட்க்கவே சுரதமகாராசனும் சொல்லுகிறான் ஓபிதாவே கேளும் இன்றுகாலமே நாலுவகைச் சேனைகளுடனே யுத்தத்திற்குப் போய்ச் சேனைகளின் பேரிற் கவிந்து பலமான யுத்தம் பண்ணினே னப்போது மட்சயந்தஅனுமானென்னப்பட்ட ஒரு குரங்கு வந்து யுத்தஞ்செய்தது அதுகாட்டிலிருக்கிற குரங்கென்றென்னவேண்டாம் அதனுடைய வாய் பிறப்பு கேட்கும் போது ராவண ஸம்மாரஞ்செய்த ஸ்ரீராமமூர்த்தியினுடைய தொண்டனாகிய அனுமார் 'புத்திரனென்று சொல்லினனவனையும்வீரசேனனையுங் கொன்றுசேனாதிபதியான காலசித்தனென்னப்பட்ட ராட்சதனுடன் போர்புரியும்போது மட்சயந்தனுமான செப்பியவாறே காலசித்தனென்னப்பட்டசேனாதிபதியுங் கூறினான் அவனுட னுத்தஞ் செய்யும்போது அவனது அஸ்திரம் என்பேரிற்பட்டுச்சகிக்கமாட்டாமல் மூர்ச்சையடைந்தேன் அதன்பின்பு மந்திரிபிரதானி ராசமன்னர்களையுஞ் சேனைகளைக் கொன்றதும்தெளிந்து ரதத்தைநடத்திக் கொண்டிவ்விடத்தில் வந்தேனென்றான்.

அதனை யுணர்ந்த சோமகாசமகாராசன் சொல்லுகிறான் ஓய் மந்திரிபிரதானிகளே பராபரவஸ்துவாய் விளங்கப்படாநின்ற ஸ்ரீமந்நாராயணருடைய திருவடியை தேவர்களாலும் ரிஷியீஸ்வரர்களாலும் மகாத்துமாக்களாலுங்கற்பகோடிகாலந் தவங்கள் செய்தாலுங் காணப்படாத இராமர்பாதத்தை இந்தராமாவதாரத்தில் நான்காணும்படியாய் என்ன புண்ணியம்பண்ணினேனும் நாம் பண்ணினபுண்ணியம் எக்கியம ஓமம் விரகலம் ஜெபமிதுகளெல்லாம் என்மூத்தகுமாரன் அரண்ணிய மகாராசனு மின்று பலித்தது அவருடைய பாதாரவிந்தங் காணும்படியானயோசனை சொல்லுங்களென்றான் அப்படி கூறிய சோமகாசமகாராசனைப் பார்த்து மந்திரியாகிய துருவாசன் சொல்லுகிறானையா சோமகாசமகாராசனே கேளுமந்தபராபர வஸ்துவாய் விளங்காநின்ற ஸ்திரீமந்நாராயணரே ராமனாக நமதுசூரியவம்சத்தி லவதரித்து அவருடையபாதாரவிந்தத்தை எப்படி காணவேணுமென்றால் நமதுசவேலோராசனைக் கொன்றபழிக்காகச் சத்துருக்கமகாராசனையும் அவனுடன்வந்த சேனாசமுத்திரத்தையுங் கொன்றுபழியைதீர்த்துக்கொண்டோமேயானாலவர்குதிரைவிடுவிக்க சேனாசமுத்திரங்களைக் கூட்டிக் கொண்டு வருவார் அப்போதாவது பாதாரவிந்தங் கண்டு தெரிசித்துக்கொள்ளலா மில்லாவிட்டா லிப்போது சத்துருக்கமகாராசனை வணங்கிச் சமாதானம் பண்ணிக்கொண்டோமேயானால் அவர் அஸ்வத்தைவிட்டுப் பூமிப்பிரதக்ஷணம் பண்ணுகிறபோது எந்தெந்தராசாக்கள் வந்தெதிர்த்துயுத்தம்பண்ணுவார்களோ அவர்களை செயித்து குதிரையை விடுவிக்க எத்தனைகாலம்எத்தனைநாள் செல்லுமோ அவர்பாதார விந்தங்காண ஆதலாலினி எங்கள் மனதிற்கு யுத்தமெப்படியோ அப்படி நடந்துக் கொள்ளலாமென்றான்.

நமது சபையிலிருக்கப்பட்ட ராசர்களே கேளுங்களிந்த பூமியிற்பிறந் திறவாதபேர் யாரிருக்கிறார்கள் எத்தனைகால முயிருடன் பிழைத்தாலும் ஒருநாளைக்கிறக்கவேண்டும் மேலுஞ் சூரபத்மாவென்னப்பட்டவன் இரண்டாயிரஞ் சதுர்யுக மிராச்சிய பரிபாலனம் புரிந்து அக்கிரமஞ் செய்ததால் சுப்பிரமணியர் கைவேலாயுதத்தினால் அவனுமிரந்தான் அதுகளுஞ்சாஸ்திரங்களிற் சொல்லக்கேள்விப்பட்டிருப்பீர்கள் கார்த்திகை வீரியார்ச்சுனனென்னப்பட்டகாந்தவராசனனேகநாட் பிழைத்திருந்து ரேணுகாதேவியினுற் பரசுராமன கையால ஆயிரம சிரசுகளும இரண்டாயிரம் அஸ்தங்களும அறுப்புண்டு அவனுமிறந்தான ஆகையால் யாரிறவாமலிருக்கப் போகிறவர்கள் பிரமலோகத்தையாளப்பட்ட பிரமதேவரும தேவேந்திரதேவர்களும் சொர்க்கமத்தியபாதாள மிந்த மூன்றுலோகத்தி லிருக்கப்பட்ட ரிஷிகள் மகாத்துமாக்கள் சத்தசமுத்திரஞ் சூழ்ந்த லோகமுழுதும மானிடராய்ப் பிறந்த எறும்புக்கடை எண்பதது நான்கு லட்சஞ் சீவாதமாக்களுமபிறந்திறந்து போவார்களேயல்லாமல் சாசுவதகாலமவாழப்பட்டவர்களொருவருமில்லை ஆகையால் ஸ்ரீராமர் கைப்பாணம்பட்டிறந்தாலுஞ் சாயுச்சியமான மோட்சத்தையடையலாம இதற்கொன்றுஞ் சந்தேகப்படத்தேவையில்லை நாளைகாலமே யெல்லாரும் யுத்தத்திற்குப்பயணப்படுகவென்ன சபையிலுள்ளவர்கள் கலக்கந்தீர்ந்து சமாதானமானார்கள்.

இவ்விடத்தி லிப்படியிருக்க சத்துருக்கமகாராசன்பாளையத்தில் என்ன சமாச்சாரமென்றான் வீரசேனனென்பவன் மூர்ச்சைதெளிந்தெழுந்திருந்து ரதத்தை நடத்திக்கொண்டு சத்துருக்கமகாராசனுடைய பாடி கூடாரத்தண்டையிற் போய் இரதத்தை விட்டிறங்கி யுட்கார்ந்திருக்கையில் சத்துருக்கமகாராசர் சொல்லுகிறார் ஓராட்சதிரேஷ்டர்களே ராஜமன்னர்களே யுத்தகளத்தில் வந்து நமது சேனைகளில் எவ்வளவு மாண்டுபோனார்கள் அதனைச்சவிஸ்தாரமாகச் சொல்லுமென்றுகேட்கையில் சலவசந்தன் சொல்லுகிறான் ஐயா சத்துருக்கமகாராசனே கேளும் இன்றையத்தினத்தில் முப்பத்தோராயிரம் அக்ரோணி சேனைகளும் சேனாதிபதியான உக்கிரசேனனும் நீலாட்சகனுமாகுகனும்மாண்டுபோனார்கள் மற்றசேனாசமுத்திரங்களும்படைத்தலைவர் சேனாதிபதிகளும் மூன்றுமனைகூட முறியவில்லையென அதனைக்கேட்ட சத்துருக்கமகாராசர் வீரசேனனைப்பார்த்துச் சொல்லுகிறார்.

வாரும் வீரசேன இன்றய யுத்தத்திற்கு யாரார் வந்தார்கள் அவர்களைச் சொல்லென்றார் ஐயா சத்துருக்கமகாராசனே சோமகாசமகாராசருடைய குமாரனை சுரதமகாராச னென்னப்பட்டவன் - 2080- அக்ரோணி சேனைகளும்-2090-ராசகுமாரர்களும்-2000-மந்திரிமார்களும்-364000-படைத்தலைவர்களும்வந்து யுத்தஞ்செய்தார்கள் அப்போ சுரதமகாராசன் பாணுக்கினியினால் நான் மெய்மறந்து மூர்ச்சை யடைந்தேனென்றான் வீரசேனனென்பவன் அதுகேட்டு சத்துருக்கமகாராசன் காலசித்தனைப்பார்த்துச் சொல்லுகிறார் வாரும் காலசித்தனே சுரதராசன் யுத்தஞ்செய்துக்கொண்டிருந்தானே அவனென்னமாய்ப்போனான் எனக்குத் தெரியச்சொல்ல வேண்டுமென்று கேட்டார் கேட்கையில் ஐயா சத்துருக்கமகாராசரே கேளும் சுரதமகாராசன் நம்முடைய சேனைகள்பேரில் முனிந்து பாணங்களால் வெகுசேனைகளைக் கொன்றுபோட்டான் அதுகண்டு நான் சுரதராசனை மடக்கிக்கொண்டு யுத்தஞ்செய்து மூர்ச்சையாக்கிவிட்டேன் இப்போது தான் மூர்ச்சைதெளிந்து ரதத்தைநடத்திக்கொண்டு பட்டணம்போய்விட்டானென்று தூதர்கள்வந்துசொன்னார்களென்றான் காலசித்தனென்பவன் அதுகேட்டு சத்துருக்கர் சொல்லுகிறார் வாருங்காலசித்தனே நாளை மகாவெச்சரிக்கையுடனே யுத்தத்திற்கு வருவார்கள் போற்காணுகிறது இனிமேலே நாமெல்லோரும் அதிகசாக்கிரதையுடனிருந்து நாளையதினத்தில் யுத்தத்தை செயிக்கவேணுமென்று சத்துருக்கமகாராசன் சொல்ல காலசித்தன சத்துருக்கமகாராசனைப்பார்த்து சொல்லுகிறான் ஐயா சத்துருக்கமகாராசனே கேளும் சுரதராசனென்பவன் வில்லுயந்திரங்களும் பெற்றவன் நாளையுத்தத்திற்கு வந்தானேயாமாகில் மகாஉக்கிரத்துடன்வருவான் அவனைசெயிக்கத்தக்கனைபேர் நம்முடைய பாளையத்தில்யாரிருக்கிறார்கள் மகாமாயன் சலவசந்தன் நாம் ஐந்துபேரும் ராட்சதசேனைகளுந்தான் இவர்களைக்கொண்டு யுத்தஞ்செய்து சுரதராசனையும் அரண்ணியராசனையும் தந்தையாகிய சோமகாசமகாராசனையுஞ் சேனைகளையுங் கொன்று குதிரைகளை விடுவிக்கவேணுமேயல்லாமல் அசாரிசமா யுத்தம்பண்ணினேமேயானால் அவர்களை செயிக்கக்கூடாதென்றான் சேனாதிபதியாகிய அகம்பன் குமாரனாகிய காலசித்தனனவன அவ்வார்த்தைக்கு யாவருஞ்சம்மதித்தார்கள் சத்துருக்கருங் காலசித்தனைப்பார்த்துச் சொல்லுகிறார் ஓய் காலசித்தனே நம்முடைய சேனையெல்லாம் பவுஞ்சிட்டுநிறுத்தி யுத்தத்திற்குத் தயார்செய்யென்று சொல்ல அப்படியே தயார்படுத்திக் கொண்டிருந்தான் யாவரும் நாளையுத்தத்திற்குவரும்படியாய் தங்கள் கூடாரம் போய்ச்சேர்ந்தார்கள்.

மறுநாள் சோமகாசமகா ராசனனவன் சூரியனுதயமாகச் சாமமிருக்கையி லெழுந்திருந்து காலக்கடனைமுடித்து ஸ்நானஞ்செய்து நியமநிஷ்டைகள் புரிந்து குமாரர்களுடனும் 80450 - இராசகுமாரர்களுடனும் உட்கார்ந்து பந்தி போசனமாகச் சாப்பிட்டு கந்தகதம்ப கஸ்தூரி பரிமளாதிகளணிந்து ஆடையாபரணங்களையுடுத்திக் கிரீடம் வாகுவலயந்தரித்து அம்புறுப்பொக முதுகிற்கட்டி ரணவரிசைகள் பூண்டு மகா சந்தோஷத்துடன் புறப்பட்டார்கள் இவர்கள் புறப்படு முன்னமே சேனாதிபதியான அஸ்வசேனன் 3735-அக்ரோணியானைகளும்-3470-அக்ரோணிரதங்களும 30880-அக்ரோணிகால்பலமும் தயார்படுத்தி பேரிகையலறவித்தார்கள துகண்டு 190-மந்திரிமார்களும் ரதமேறி சோமகாச மகாராசனும் சுரதராசனும் அரண்ணிய மகாராசனும் வந்து சூழ்ந்தார்கள் சூழவே 8490-ரதாரூடராய் வந்தார்கள் லட்சம்படைத்தலைவரும் யானையின்மீது சிங்கக்கொடி பறக்க வந்துசேர்ந்தார்கள் யாவரும் ஏகோபித்து யானைகள் முன்னுங் குதிரைகள் பின்னும் ரதங்கள் பின்னும் சேனைகள தன் பின்னுமாக அணியணியாக சயபேரி வெண்கலபேரி வீரமுரசு வெற்றிமுரசு முதலாகிய முப்பத்திரண்டு வாத்தியங்களு முழங்கத்தக்கதாகப் போர்க்களம் வந்து சேர்ந்தார்கள்.

ஆறுநாள் யுத்தம்.

இப்பால் சத்துருக்கருடைய சேனாதிபதியான காலசித்தன் யானைகளொரு பக்கமும் தேர்களொருபக்கமும் குதிரைகளொருபக்கமும் நிறுத்தி சேனைகளை நடு அணியில் நிறுத்தினான் மட்சயந்தனுமானும் சத்துருக்கரு மதற்கு முன்னணியில் வந்து நின்றார்கள்

மகாமாயனும் சலவசந்தனும் அதற்குமுன்னணியாக நின்றார்கள் வீரசேனனும் ரதாரூடனாக சேனைகளுக்கெல்லா முன்பாக நின்று வில்லையெடுத்து நெறநெறவென்று அனேக திவ்வியாஸ்திரங்களைப்பூட்டி சோமகாசமகாராசன் சேனைகளின்மீது விட்டுக் கொல்லுகிறபோது சோமகேசன் சேனைகள் முனைந்து சத்துருக்கமகாராசனிட பாளையங்களின்பேரில் பாணங்களை விட்டுச் சாடிக்கிறபோது இருதிறவர்சேனைகளுங்கவிந்துகொள்ளவே மூண்டுக்கொண்டது யுத்தமானது படபடவென்று கடிந்து அச்சேனைகளை முன்னுக்கு வரவொட்டாமல் யுகாந்தகாலத்திற் சத்தமேகங்கூடி இடி இடித்து சரமாரிபொழிவதுபோலே சரமாரியாய்ச்சோமகாசமகாராசன் சேனைகளின்மீது பொழியும்போது அச்சேனைகள் தளமாட்டாமல் ஓலமிட்டுவலசைவாங்கி யோடுவதைப்பார்த்து சேனாபதியான விஸ்வசேனன் அவர்களை ஓடவொட்டாமல் வீரசேனன் முன்பாக ரதத்தை நடத்தி வில்லைவளைத்து அஸ்திரங்களைப்பூட்டி வீரசேனனை விடப்பட்ட அஸ்திரங்களை தனும்அறுத்து எண்பது நாராசபாணத்தைவிட்டு வீரசேனனேறிவந்தரதத்தையு முடைத்துவிட்டது சாரதி குதிரைகளைக்கொன்று விட்டான் அதுகண்டுமறு தேரிலேறினான் அதையுந் தவிடுபொடியாக்கினான் அதனால் வீரசேனன் கடுங்கோபங்கொண்டு தெண்டாயுதமொன்றைக் கையிலெடுத்துக் காகாவென்றுசுழட்டிவிஸ்வசேனன் ரதத்தைப்பார்த்து ஓரடிகொடுத்தான் அந்த அடிரதத்தின்பேரில் பட்டமாத்திரத்தில் ரதமானது அச்சுவேறு ஆணிவேறாய்ச் சக்கைசக்கைதாய்ப்பிளந்து பூமியில்விழுந்து விட்டது.

அதனால் விஸ்வசேனன் அடா வீரசேனா உன்னுடைய சூரத்தனத்தை இன்று பார்க்கிறேன் என்வஞ்சத்தைத் தீர்க்கிறேன் உன்னைக்காக்கும்படியான சத்துருக்கனும் ஆகாயவாசிகளும் பார்க்கும்படியாக எமலோகத்திலுன்னைச் சேர்க்கிறேன் பாரென்று ஒரு கோபதெண்டாயுதத்தையெடுத்து மலையைச்சுழட்டியெறிவதுபோல விசைகொண்டுசிரசைபபார்த்து ஓங்கிவிட அதுவும் புறப்பட்டு வருகையில் வீரசேனன் சிறியகல்லைத் தாடுவதுபோலத் தட்டிவிட்டுச் சொல்லுகின்றார்.

அடா விஸ்வசேனா பளாபளா நன்றாய்ச்சொன்னாய் சத்தசாகரமும் வெற்றியடைந்த சத்துருக்கமகாராசரின்சேனாதிபதியென்று சற்றுமெண்ணாமல்என்னையும் அவரையும் வைதாயல்லவா இதோ உன்சிரசைக்கொய்துவிடுகிறேன் பாரடாவென்று தண்டாயுதத்தைக் சுழட்டி விஸ்வசேனன் யாற்பிற்ருக்கினான் அந்த அடிபட்டவுடனே மெய்மறந்து கோபதெண்டாயுதத்தை நழுவவிட்டு அடியற்றமரம்போலச்சாய்ந்து பூமியின்விழுந்து மூர்ச்சையடைந்தான்.

அதுகண்டு வீரசேனனும் சீக்கிரமாக ஒரு ரதத்தில் ஏறிக்கொண்டு வில்லையெடுத்து நிறுத்திச் சாங்கோபசாங்கமாய் அஸ்திரங்களைவிட்டுச் சேனைகளானது தத்தளித்துத்தடுமாறி ஓடத்தலைப்பட்டதைப் பார்க்க அரண்ணிய மகாராசன ஓடுகிறவர்களை ஓடவொட்டாமல்நிறுத்தி ரதத்தை வீரசேனன் முன்னுக்கு நடத்தி வீரசேனனைப்பார்த்துச் சொல்லுகிறான் அடா வீரசேனா நீயேன் தலைகீழாய் விழுகிறாய் துப்பற்ற சிலபேரைக் கொன்றோமென்று கர்வித்திருக்கிறாய் ஒருக்ஷண நேரத்துக்குள்ளே உன்மர்மங்களையெல்லாம் வெளிப்படுத்தி வைக்கிறேன்பாரென்று பதினைந்து நாராசபாணத்தையெடுத்து பிரயோகம்பண்ணினான் அதுவுங் காலகோட்டிவிஷம்போற் சீறிக்கொண்டுவந்து அவன்விட்ட அஸ்திரங்களைக் கண்டித்து அவனையும்நோகச்செய்யவே வீரசேனன் பார்த்து சரீரம்வேர்த்து ஒருக்ஷணத்தில் வில்லிலஸ்திரங்களைக் கோர்த்து ஒன்றுமேலொன்றாய்விட்டு அரண்ணியராசன் வில்லைக்கையில் பிடிக்கவொட்டாமலும் சாரதி ரதத்தை நடத்தவொட்டாமலும்செய்து மார்பின் கவசங்களையுமறுத்துப்போட்டான் அத்தறியில் அரண்ணிய மகாராசன் அதராமற்பதராமற் மகாகோபத்துடனே வில்லை க-௰-௱-௩-கோடியென்று கணக்குமிதமில்லாமற் பாணங்களைவிட்டுச் சாரதிகுதிரைகளைச் சாவடித்து வீரசேனனையுங் கைகாலாடவொட்டாமற் களைத்துமெய்மறந்து தண்ணிதண்ணியென்றுஎண்ணிகுண்ணும்படியாய் மூர்ச்சையடையச்செய்தான்.

அதுகண்டு காலசித்தன் சேனைகளின்பேரில் ரதத்தைநடத்திப் பாணங்களைவிட்டுக் கண்டதுண்டமாய்க் காடுமேடு தலைமாடாய் விழத்தக்கதாகக்கொன்று பின்புகோபதெண்டாயுதமெடுத்து பூமியிற்குதித்துச் சுழட்டி அடிக்கிறபோது ஒவ்வோரடிக்கு ஆனை- ௱- தேர்குதிரை-௩-காலாள் லட்சம் இத்தப்படியாய் ஒரு சாமபரியந்தம் ரதத்துக்குள்ளே ௩-அக்ரோணிசேனைகள்மாண்டு ரத்தாறோடத்தலைப்பட்டது அதனாற் சேனைகளானது காலசித்தன் முன்னுக்கு நிர்வாகமசெய்யமாட்டாமற் வலசைவாங்கிக்கொள்ளவே சுரதமகாராசன்பார்த்து சாரதியையெச்சரித்து மகாவுக்கிரத்துடனே ரதத்தைநடத்திக்கொண்டுவந்து காலசித்தனை வளைத்துக்கொண்டு அடாகாலசித்தனே பனங்காட்டு நரி சலசலப்புக் சஞ்சுமோ அதுபோல என்னிடத்தில்வந்து பூச்சிகாட்டுகிறாய் இனியுன்னை விடோம் கர்வங்கொள்ளாதேயென்று வில்லைகாட்டி அஸ்திர

க்களைப்பூட்டி சரமாரியாய்ப் பொழிகிறபோது அந்த அஸ்திரங்களையெல்லாந் தெண்டாயுதத்தைச் சுழட்டி ஒரு அடிவிட்டான் அந்த அடியினாற் சுரதாசன் ரதமானது தூளாக்கிவிட்டது இப்போது சுரதாசன் லகுவில்தப்பித்துக்கொண்டு மறுதேரிலேறி அஸ்திரவருஷங்களை கணக்குமிதமில்லாமற்பொழிகிறபோது அதுகளையெல்லாந் தடாய்த்துக்கொண்டு காலசித்தன் சொல்லுகிறான்.

அடா சுரதா நீயோ என்னுடனெதிர்த்துப்போராடுகிறவன் கருடன்முன் கொசுபறக்குமா கனத்தவிரைக்கையிலாகாதவன் கொல்வானோ நீ நேற்றையதினம் அடிபட்டு முறிந்தோடினையுனக்கு இன்றைக்கு யதிகபலம்வந்துவிட்டதோ அதையும்பார்ப்போம் நில்லுமோடிப்போகாதே என்று வச்சிரகோப தெண்டாயுதத்தைச்சுழட்டி ரதத்தைப் பார்த்து ஓரடிகொடுத்தான் அந்த அடி குதிரைகளும் நசிந்துபோகவே சுரதாசன் ரதத்தைவிட்டுக் குதித்தோடிப்போனான்.

பின்பு காலசித்தன் தெண்டாயுதத்தை எடுத்துச்சேனைகள் பேரிற் சுழட்டிவிட்டான் விடவே சேனைகளடிபட்டு சிரமற்றவரும் கரமற்றவரும் உதிரம்போனவரும் மரம்போனவரும் துண்டமானவருமாகியகாலசித்தனொருவனாற் கலங்கியோடுகின்றபோது சோமகாசமகாராசன்கண்டு கண்கள் பொறிபறக்க காதிரண்டிலும் புகைகளெழும்ப மீசைகள் துடிக்க பற்களைக்கடித்துச் சாரதியைரதத்தை காலசித்தன் முன்புநடத்தச்சொல்ல வில்லையெடுத்து நிறுத்தி அக்கினியாஸ்திரத்தைத்தொடுத்து மந்திராபூதிகள் கொடுத்துவிடவே அந்த அஸ்திரம் திகுதிகெனவெரிந்துகொண்டு வருகையில் அதன்மீது ஒரு வருணாஸ்திரத்தை விட்டு அவித்துப்போட்டார்கள் காலசித்தனவன் பின்னும் சோமகாசமகாராசன் ஒரு பர்வதாஸ்திரத்தை யெடுத்துவிட்டான்.

அதைக்காலசித்தன் ஒருவச்சிராயுதத்தா லறுத்துவிட்டான் அதுபோகவே சோமகாசமகாராசன் பிர்மாஸ்திரத்தையெடுத்து அபிமந்திரித்துப் பிரயோகஞ்செய்தான் காலசித்தனுந் தன்னுடைய பிர்மாஸ்திரத்தை எடுத்துவிடவே இதுவுமதுவும் ஒன்றோடொன்று முட்டியும்மோதியும் பொடிப்பொடியாய் பூமியில்விழுந்தது அப்போது சோமகாசமகாராசன ராட்சதர்களைக் கொல்லவேணுமென்று வளைத்து நாராயணாஸ்திரம் எடுக்கவே தேவர்களெல்லாம் ஒருஅண்டமட்டாம் ஓடிப்போய் பார்த்துக்கொண்டிருந்தார்கள்.

அந்தவேளையிற் சோமகாச மகாராசன் காலசித்தமகாராசனைப்பார்த்து அடா ராட்சதர்களே இதோ என்கையிலிருக்கிற நாராயணாஸ்திரத்தைப் பார்த்தாயா இந்த அஸ்திரங்களுக்குத் திரிமூர்த்திகளும் நேரல்ல ஆகையால் நீயும் உன்னுடைய சேனைகளும் உனக்குத் தலைவனான சத்துருக்கனும் நாராயணாஸ்திரம் விடுமுன்னே சரணமடைந்தீர்களேயானால் உயிர்தப்பிப்பிழைப்பீர்கள் இல்லாவிட்டால் இதோவிடுகிறேன் பாரென்றான் அதற்கு காலசித்தன் நகைத்துச்சொல்லுகின்றான்.

ஐயா சோமகாச மகாராசனே கேளுமந்த ஸ்ரீமந்நாராயணரே ஸ்ரீராமனாகவந்தவதரித்து எங்கள்மனதில் விட்டுவிடாமற் குடியிருக்கிறார் நீர்விடப்பட்ட நாராயணாஸ்திரம் எங்களையொன்றுஞ் செய்யப்படமாட்டாது ஸ்ரீராமரை வணங்காதபேரை நாங்களா வணங்குகிறது ஒரு காலத்திலும் இல்லை நீபிழைக்கவேணுமென்றால் எங்களைவணங்கிச் சுகித்திருமென்றான் அதற்கு சோமகாசமகாராசன் கோபங்கொண்டு நாராயணாஸ்திரத்தைப் பூசைசெய்துவிடவே அது அக்கினிகளை வாரி யிறைத்துக்கொண்டு அண்டபகிரண்டமும் அயிரத்தெட்டண்டங்களுங்குலுங்க ஆர்ப்பரித்து வருகிறபோது காலசித்தன் வில்லைத்தேரின்பேரில வைத்திரண்டு கரத்தையுஞ் சிரத்தின் மீதுகூப்பி ஸ்தவுத்தியம் செய்தான்.

அப்போது நாராயணாஸ்திரமானது குரூரத்தையடக்கிக்கொண்டு காலசித்தனையும் கண்டு அவனை விடுக்கையில் ஆயுதம் பிடித்த பேரைபஸ்மீகரபண்ணுகிறதாலும் நின்ற பேரைப் பார்த்துக் கொண்டு வருகிறபோது சத்துருக்கமகாராசனைப் பார்த்து இவர்ஸ்ரீமந்நாராயணரேயென்று மனதிலெண்ணி வலசாரியிடசாரியாக வந்து சத்துருக்கமகாராசனிட அம்புறாப்பொதியில் நுழைந்தது அதுகண்டு சகலருமாச்சரியமடைந்தார்கள்.


பின்னுஞ் சோமகாசமகாராசன் அதிக கோபங்கொண்டு பாசுபதாஸ்திரத்தையெடுத்து மந்திராபூதிகள்செய்து வில்லிற் சந்தித்துவிட்டார் அந்தப் பாசுபதாஸ்திரம் ஆவென்று வாயைத்திறந்து அண்டமுகடு பிளக்கும்படியாய் இரைச்சலிட்டு வருகிறபோது காலசித்தன கண்டுசிவனைகையில் வரம்பெற்ற பாசுபதாஸ்திரத்தை யெடுத்து மந்திராபூதிகள் செய்து பிரயோகப்படுத்தினன்.

அந்தப் பாலகர்களுங் காவலாகப் புறப்பட்டு சப்தமேகங்களும் சாகரமும் சத்த மிடுவதுபோல கூவிக்கொண்டு வந்திரண்டு பாசுபதாஸ்திரமும் நெருங்கியுத்தம்பண்ணயிடமில்லாமல் ஆகாயத்திலிருந்து யுத்தம்பண்ணுகிறபோது தேவர்கள்கண்டு திடுக்கிட்டு தேவேந்திரனுடன் பரமசிவனிடத்திற் போய் முறையிடவே பரமசிவனும் ரிஷபவாகனரூடாய் இரண்டுபாசுபதாஸ்திரத்துக்கும் மத்தியில்வந்துநின்றார். அப்போதந்த பாசுபதாஸ்திரங்களும் யுத்தம பண்ணுவதைவி

ட்டலைதூக்கிப்போனார்கள் அதற்குச்சிவனானவர் இரண்டையும் பார்த்து யுத்தம்பண்ணவேண்டாம் அவரவர்கள் அம்புறாப்பொதியிற்போய்ச் சேருங்களென்று உத்திரவு செய்தார்.

அவ்வாறே அஸ்திரங்களவர்களிட அம்புறாப்பொதியில் வந்தடையவே காலசித்தன் ஒரு வாயுவாஸ்திரத்தைவிட அதுசோமகாசமகாராசனுடைய ரதத்தை மேற்குமுகமாய்ப் பின்னிட்ட வண்ணம் ௫௰-காதவழி தள்ளிக்கொண்டு போய்விட்டது. அதனைக் கண்ட யாவரும்இது என்ன புதுமையென்று மிகவுஞ் சந்தோஷமடைந்தார்கள் அப்பாற் காலசித்தன் மகாமாயன்யுத்தஞ்செய்யுமிடம் வந்துசேர்ந்தா னக்காலையில் சுரதராசன் அதிகக்ரூரமான கோபத்துடன் சொல்லிக்கொள்ளுகிறான் ஏதடா இந்தராட்சதன் ஆறுநாளிரவுபகலாய் போராடியும்அவன்களைக்கிறவனாகக்காணவில்லையே இவனுக்குப் பின்பலமும் வந்திருக்கிறது ஆனாலுமென்னமாயிற்று வெங்கீரில் விடு வெந்து விடுமாநல்லது இவனுடனே போராடி இவனை செயித்துக் இவனுக்குப் பின்பலமாக வந்திருப்பவர்களையுங் கொன்றுவிடுகிறேனென்று அனேக திவ்வியாஸ்திரங்களை விட்டுமகாமாயனைக் கைகாலாடவொட்டாமல்அடிக்கிறபோது மகாமாயனும் வருகிற பாணங்களத்தனையும் அறுத்தெரித்து போட்டு சுரதராசன் பேரில்முனைந்து மிகவுங் கூர்மையோடுங் கூடியிராநின்ற திவ்வியாஸ்திரங்களைவிட்டுச் சுரதராசன் சரீரத்தைசல்லடைக்கண்களாகத் துளைத்து அவன் மார்பிலணிந்த கவசத்தையும்அறுத்துவிட்டான் அதனாற் சுரதராசன் ஆயாசப்படாமல் ௫௰-திவ்வியாஸ்திரங்களை வில்லிற்சந்தித்துஒன்றின்மேலொன்றாய் விட்டு மகாமாயனையுங் கைமெய் கலிக்கும்படியாய் ஒருவர்க்கொருவர் பின்வாங்காமல் இடசாரிவலசாரியாய்ரதத்தைத்திருப்பிக்கொண்டு ஸ்ரீராமபிரானும்ராவணனுஞ் செய்த யுத்தத்தைப்போற் பராமுகங்கொடாமலிருந்து சுரதராசனமிஞ்சிஉ௰-திவ்வியாஸ்திரங்களைவிட்டு மகாமாயனேறிவந்த ரதத்தையுமுடைத்து சாரதிகுதிரைகளையுங் கொன்று மகாமாயன் பிடித்திருந்த வில்லையுமுறித்து நிராயுதனாக்கி விட்டான் மறுபடியும்மகாமாயன மற்றொருதேரி லேறினான்.

அதையும் நாலு திவ்வியாஸ்திரங்களை விட்டுஞ் சக்கைச் சக்கையாய்ப்போர்த்தெரித்து மகாமாயனுக்குத் தேர்வரவொட்டாமல் அஸ்திரங்களை விட்டு அடித்துக்கொண்டிருக்கையில் மகாமாயனுக்குக்கண்கள் சிவப்பேறி கடுங்கோபமீறி கையிலுள்ள வச்சிராயுதத்தையெடுத்துக் கிறுகிறு வென்று சுழற்றி ஓடிவரும்போது சுரதராசன்கண்டுஇவன் ஏதோ மிஞ்சி ஓடிவருகிறானென்று அஞ்சலில்லாமலபஞ்சுபோற் பறக்கடித்துத் தஞ்சக்குஞ்சமெனக் கொஞ்சத்தக்கதாக ஒருசத்தியெடுத்து மாபதியங்களுஞ் செய்துவிட்டான் விடவே அந்தச் சத்தியானது மகாமாயன் எங்கே யெங்கேயென்று அகாரவுகாரத்துடன் உறுவேற்றிக்கொண்டு ஆலகால விஷம்போற் சீறிக்கொண்டு மகாமாயன் மார்மார் சடாலென்று பாய்ந்து முதுகிலுருவிப்போய் விட்டது அதனாலடியற்ற பனைபோல் சாய்ந்து ஐயனே ராமாவென்று மகாமாயன் மரணமடைந்தான்.



காலசித்தனுக்கும் சுரதனுக்கும்

ஏழாநாள் யுத்தம்.

மறுநாட் காலசித்தன்வந்து அடா சுரதராசனே நீ ஒருவீரனோ அடிக்கடிவந்து யுத்தம்புரிந்துவோடிப் போகிறதொரு வீரமோ உன்னைக் கொல்லுவது எனக்கொருபாரமோ முகத்தில் மீசையுள்ளவனானால் இப்போதாவது ஓடாமல் நின்று யுத்தம் பண்ணடாவென்றான் அது கேட்ட சுரதமகாராசனானவன் சொல்லுகிறான் அடா காலசித்தனே உன்னிலு மிஞ்சின இராட்சசசிரேஷ்டன் விழுந்ததை நீயறியாயோ அடிமேலடியடித்தால் அம்மியுங்நகருமென்ற பழமொழியை அறியாயோ என்னுடையவில்லுக்கு நீயோ ஒருசிறுபுல்லு ஆகையால் குரைக்காதேயென்றான் அஃதுணர்ந்த காலசித்தன் கூறுகிறான். அடா சுரதா நல்லவசனஞ் சொன்னாய் செல்வஞ் சொல்லுக்கஞ்சுமா அதுபோற கைகண்ட வீரனான நான் களரிக்கஞ்சுவேனோ உன்னைப்பெற்ற தகப்பன சென்றவழி நீ கண்டிலையோ பாராடாவென்று அனேக திவ்வியாஸ்திரங்களைவிட்டுச்சொரிந்தான அதற்குச் சுரதராசன அக்கினியாஸ்திரமொன்றெடுத்து அபிமந்திரித்து விட்டு அதுகளைக் கொய்தான் கொய்யவே காலசித்தன கடினமான ஒருவருணாஸ்திரத்தைஎடுத்து தனுசிற்றொடுத்து அபிமந்திரித்துவிட்டான் அது மேககற்பனைபோ விளைச்சலிட்டு யானைத் துதிக்கை நீரைப் பாணம் பண்ணுவதுபோற்சே

லைகளை ஆவாகனஞ் செய்தது சூரதராசன் கருக்கினில் ஓர் பாணத்தை யெடுத்து மந்திரபூதிகள் கொடுத்துவிடுமுன்னமே காலசித்தன்பார்த்து வடி-திவ்யாஸ்திரங்களை விட்டு அந்த நாகபாணத்தைப் பார்த்துவிட்டுவிட்டான் அந்த கருடப்பாணம் வருகிறதற்கு முன்னமே சூரதருசன் வருகொண்டு மறுதேரிலேறினான் அதைக் கண்டு காலசித்தன் கைகொட்டி சிரித்து அதிக கோபமானான் அக்கருடப்பாணமானது ரதத்தை ஆகாயமாகக் கிளம்பிக்கொண்டு போய் மேகமண்டலங்காண்டி வாயுமண்டலத்துக் கருவிலைப்பட்டு ரதமானது தலைகீழாய்ச் சாரதிகுதிரைகளுடன பூமியில் விழுந்து நசிந்து போனார்கள்.

அந்தருணத்தில் சூரதருசன் உக்கிரகாரனாகவில்லிலிருந்துச் சாக்கோபாக்கமாய்ச் சரமாரி பொழிந்துகொண்டு பருவதமேறி யிழிந்து ஓடிவருபவன் போற் பாணங்களை விட்டுக்கொண்டு இரதத்தை நடத்திவருகையில் காலசித்தன் பார்த்து எதடா சூரதமகாருசன் உக்கிரத்துடன் முனைந்து யுத்தம்பண்ணுகிறான் இனி நாம் அசாக்கிரதையாயிருக்கலாகாதென்று சூரதமகாருசன் விட்டப்பட்ட அஸ்திரங்களை வெல்லாந் தூம்சப்படுத்தி இருவரு முனைந்து போர்புரியுங் காலத்தில் சோமகாசமகாராசனுனவன்பாணவேகமடங்கி ரணக்களத்தைநோக்கு பார்க்கும்போது வெகுதூரத்தில்யுத்தம் பண்ணுகிறதைக் கண்டு இரதத்தை விட்டுக்கொண்டுவந்து வேடிக்கைப் பார்த்துக்கொண்டிருந்தான் அக்காலையில் ராட்சதப்படைத்தலைவர்களெல்லோரும் ஒன்றாய்க்கூடி சோமகாச மகாராசனுனவன் ஏதடா காலசித்தன் பொல்லாதவனாயிருக்கிறான் அன்னாகாரமுமுறக்கமில்லாமல் ஏழுநாளாக இரவும்பகலும்நம்மை விடாமற் போர்புரிகிறான் ஆகையாலிவன் தேரைப்பொடியாக்க வேண்டுமென்று மனதிற்கருதி பத்து திவ்வியாஸ்திரங்களை விட்டு ரதத்தை யொடித்து மார்பின கவசத்தையும் பொடியாகச்செய்து கையிற்பிடித்திருக்கவில்லையுமொடித்து மறுதேரி லேறவொட்டாமல் சாக்கூடக் கட்டிப் போனான் அதுகண்டு காலசித்தனுவனைச் சொல்லுகிறான் அடாசூரதா என்னுடன் திரிமூர்த்திகளானாலும் போராடமாட்டார்கள் ஆனபடியால ஏழுநாளாக இரவும் பகலும் என்னுடன் சண்டை செய்தாயாகையால் உன்னைமெச்சினேன் இதோஉன்னைக் கண்டதுண்டுக் கொண்டுபோகச் செய்கிறேனென்று வச்சிரகோப தெண்டாயுதத்தை யெடுத்துக்கிறுகிறென்று சுழற்றிவிடு முனைஞ் சூரதருசன கண்டு அடா காலசித்தா நீலேந்திரமாய் வேட்டையாடாதென்று கண்டிலாயோ மனகர்வத்தை விட்டிலாயோ வென்று தனக்குச் சிவசுப்பிரமணியர் கொடுத்தருளிய வேலாயுதத்தை யெடுத்துமந்திரபூசிசன் செய்தத விடவே அந்த வேலாயுதமானது வெளிப்பட்டு அண்டங்குலுங்க அம்புவிகலங்க தேவர்களும் மூவர்களுந்தியங்க யாவருமலங்க அக்கினிப்பொறிகளை வாரிவாரி யிறைத்துக்கொண்டு ஆர்ப்பரித்துக்காலசித்தனை தேடிக்கொண்டு வேலானதுவருகையில்வச்சிரகோபதெண்டாயுதத்தைச் சுழற்றிவிட்டானந்த தெண்டாயுதமானது வேலின மேல் போய்த் தாக்கிவேலாயுதத்தைபூமியிற்றள்ளிவிட்டு சூரதருசனைப்பார்த்துச்சுழன்று வருகிறபோது சூரதருசன் அனேகதிவ்வியாஸ்திரங்களை விட கடாய்த்துக்கொண்டு சூரதமகாராசன் இரதத்தின் மீது கடாவென்று விழுந்து ரதமுறிந்து சாரதிகுதிரைகளுடன் சாகவே சூரதருசன் தப்பிக்கொண்டு மறுதேரிலேறினான் அந்தச்சமயத்தில் வேலானது உயிருண்டாகிற போது காலசித்தனுனவன் சத்திவேடையமெடுத்து வேலாயுதத்தை நறுக்கினான் அதுசற்று மசையாமற்காலசித்தன் மார்பிற் பாய்ந்து முதுகிலுருவிப் போயிற்று அதனாற் காலசித்தன் ராமா ராமாவென்று வாய் விட்டலறிப் பனைபோற் சாய்ந்து மரணமூர்ச்சை யடைந்தான் அதுகண்டு தேவர்கள் துயரமானார்கள்.

அப்பால் சூரதருசன் சந்தோஷமாய் இரதத்தை விட்டுக்கொண்டுசேனைகள் சூரதருசனை விடாமல் வளைத்துக்கொண்டு ஆயுதஅஸ்திரங்களைவிட்டு யுத்தம்பண்ணிக்கொண்டிருந்தார்கள் அப்படியிருக்க எண்பத்துநான்குராசகுமாரர்கள் சத்துருக்கமகாராசனை விடாமல் வளைத்துக்கொண்டு யுத்தஞ் செய்யுங்காலத்தில்சத்துருக்கமகாராசனுனவர் ராசகுமாரர்களேறிவந்தரதங்களையுடைத்துராசகுமாரர்கள் பேரில் ஒன்றுக்குநான்கு பாணம் விட்டுசிரங்களைக் கண்டித்துப் போடவே உதிர வெள்ளமானது ஆறுபோலோடியது அது கண்டு சத்துருக்கமகாராசனைசூரதராசன் பேரில் ரதத்தை நடத்திச் சூரதமகாராசனுராட்சதாள் பேரில் விடப்பட்ட அஸ்திரங்களை வெல்லா மறுத்துத்தள்ளி சூரதருசனையுங் கைகலாடவொட்டாமல்பாணங்களைவிட்டடிக்கிறபோது சூரதராசன கண்ணுக்குசத்துருக்கனைப் பார்க்கப் பயங்கரமாகி இவனுஞ் ஸ்ரீராமபிரானிடத் தம்பியான சத்துருக்கமகாராச னெனப்படவிவ்வளவு பராக்கிரமம் பொருந்தியவனுகையாற்றானே அஸ்வத்தின் பின்னே துப்பினைத்தார் ஆனாலுமென்னமாயிற்று நமக்குச் சிவனகொடுத்தவிலாம அஸ்திரமுமிருக்க ஆர்க்கென்ன செய்யக்கூடு மச்சமென்னவென்று மனதைத் திடப்படுத்திக் கொண்டு நல்லதென்று வில்லில் எதிர்த்து நிறுத்தி அதிதீக்ஷண்ணியமாயிருக்கப்பட்ட பத்து திவ்வியாஸ்திரங்களை யெடுத்துப் பிரயோகம் பண்ணினான்.

அதுகள் அக்கினிச் சுவாலையாய் நாகசர்ப்பம்போற்சீறிக்கொண்டு வேகமாக வருகிறபோது சத்துருக்க

மகாருசனானவன் கண்டு ஒரு ருமபாணமெடுத்து மந்திராபூதிகள்செய்து வில்லிற் சந்தித்துப் பிரயோகம் பண்ணினனெப்படியென்றால் எடுக்கும்போது-௧-ா-புறப்படும்போது ஆயிரம் இவ்வாறாக ருமபாணமானது ஒன்றின்மே லொன்றாய் புறப்பட்டு காலக்கோட்டிவிஷம்போற் சீறிக்கொண்டு சுாதராசன் விடப்பட்டபாணங்களையெல்லாம் நாசஞ்செய்து அவன்சரீரத்தைச் சல்லடைக்கண்களாகத் துளைத்து ரதத்தைமுறித்து சாரதிகுதிரைகளையும் அதம்பண்ணிவிட்டு ருமபாணமானது அம்புறாப்பொதியில்வந்தடைந்தது இதுகண்டு சுாதனுச்சரிடப்பட்டு-ஆ-ஆ - இதென்ன பாணமின்றையவரைக்கும் நாம் கண்டதில்லையென்று மறுதேரிலேறி வில்லையெடுத்து அம்புறாப்பொதியில் கையைவைத்து இது-பத்து-இது-நூறு-இது-ஆயிரம்-இதுபதினாயிரம் இதுலட்சம் இது கோடியென்று கணக்கு மிதமில்லாமலும் ஓய் ஒழிச்சலில்லாமலும் அஸ்திரங்களைச் சேனைமாரிபோற்சொரியுங்காலையில் சத்துருக்கமகாராசனும் ஒரு நாருயணாஸ்திரமெடுத்து அபிமந்திரித்துப் பிரயோகம்பண்ணினார் அந்த நாராயணாஸ்திரமானது வில்லை விட்டு வெளிப்பட்டு ௰-ா-பதினாயிரம்-லட்சம்-கோடியென்று சொல்லி மிதமில்லாதபாணத்தை அவயவங் காத்துக்கொண்டிருந்த நாகசர்ப்பத்தைக் கோலாற்றட்டினால் அதெப்படி சீறிக்கொண்டுவந்து சுாதருசன்விட்ட பாணங்களையெல்லாம் அறுத்துப்போட்டு அவன் சரீரங்களை ரத்தமயமாக்கிவிட்டு நாராயணாஸ்திரமானது அம்புறாப்பொதியில்வந்தடைய அப்போது சுாதமகாராசனும் வில்லை தேரின்பேரில் ழுகவிட்டு ஆயாசமடைந்தான் அதுகண்டு சத்துருக்கமகாராசன் ரதத்தைவிட்டுக்குதித்து சுாதருசனிட ரதத்திலேறி அவனை ஆயாசந் தெளியும்படியாய் தன்னுடைய கச்சி யுறையிலிருந்து சஞ்சீவிவரிசை அவிழ்தங்களைச் சுாதராசன்பேரிற்றடவ அவன்சரீரம் எப்போதும்போலாகிச் சுாதராசன் கண்ணைதிறந்து பார்க்குமுன்னமே ரதத்தைவிட்டுக்குதித்துச் சத்துருக்கர் தமதுரதத்தில் வந்தேறினர்.

அவாரென்றால் பலலாயிரங்கோடி அண்டத்தையுங் கெர்ப்பத்தில் வைத்து ரட்சிக்கப்படாநின்ற கர்த்தாவாகிய ஸ்ரீராமரிட சகோதானை சத்துருக்கமகாருசனைக்கொண்டாடினார்கள் அந்தச்சமயத்தில் சுாதருசன் கண்ணைவிழித்துப்பார்த்து மறுதேரிலேரிதன் வரப்பிரசாத அக்கினியாஸ்திரத்தை எடுத்து அபிமந்திரித்து வில்லிறதொடுத்து பிரயோகம் பண்ணி விட்டான அந்தபாணம்வெளிப்பட்டு வடவா முகாக்கினியை வாரியிறைத்துக்கொண்டு திகுதிகென்று பத்தியெரிய அக்கினியைக் குபீல் குபீலென்று கக்கிக்கொண்டுவருகிறதை சத்துருக்கமகாராசன் கண்டு ருமபாணமாகிய அக்கினியாஸ்திரத்தையெடுத்து மந்திராபூதிகள் கொடுத்துப் பிரயோகம் செய்தார் அக்கினியாஸ்திரமானது புறப்பட்டு வடவாமுகாக்கினிக்குச் சமதையாய் நெருப்புகளை கக்கிக்கொண்டு சுாதருசன்விட்ட அக்கினியாஸ்திரத்தின்பேரிற் சடாலென் றபாய்ந்து ஒன்றோடொன்று மோதாக்கிச் சுாதருசனிட அஸ்திரத்தைக் கமளீகாம் பண்ணிப்போட்டு அம்புறாப்பையில்வந்தடைந்தது அதனாற் சுாதராசன் கடித்துக்கொண்டு பிரமாஸ்திரத்தை எடுத்து ஓ-ஓ-சத்துருக்கமகாருசனேகேளும் இதோயிதுவெல் என்கையில பிரமாஸ்திரத்தைப்பார்த்தையே இந்தப்பிரமாஸ்திரம் விருதாவிற்போகாது உன்னையும் உனக்குத் துணைவந்தருட்சதாளையுங் கொன்று உன்தமயன் ஸ்ரீராமரையுமழைப்பனைப்படிவருதபடிக்கு என்தகப்பனைச் சமாதானம்பண்ணி வணங்கிக் குதிரையை விடு வித்துக்கொண்டுபோய் உன்தமயன்கையினால் யாகஞ்செய்துவைப்பாய் இல்லாவிட்டால் நீயாகமபண்ணுகிறது ஸ்ரீமந்நாராயணருக்கு வெளிச்சமா மெனறான் அதுகேட்டு சத்துருக்க மகாருசன் குலுங்க நகைத்துச் சொல்லுகிறார்.

ஓ ருசகுமாரனேகேளும் நல்லவசனம் புகன்றாய் நீயோ என்னைக் கண்ணெடுத்துப் பாரக்கிறவன் நீபடுகிறபாடு உனக்குத்தெரியாமல் என்னை உன் பிரமாஸ்திரம் என்னசெய்யக்கூடும் நீ-முகத்திலே மீசைபடைத்தவனேயானால் என்னையும் என் சேனைகளையுஞ் செயித்து என் தமையனை யிவ்விட மழையும பார்ப்போமென்றார் அப்போது சுாதராசன் பிர்மமாஸ்திரத்தைவிட்டு விட்டான அந்த பிரமாஸ்திரமும் வெளிப்பட்டு சத்தசாகர நீரையுஞ் சுவரத்தக்கதாக வடவாமுகாக்கினியைப்போலத தகதகாயமா யெறித்துக்கொண்டுவருகிறபோது சத்துருக்க மகாராசனுந் தம்முடைய ராமபாணமாகிய பிரமாஸ்திரத்தை யெடுத்துப் பூசை நைவேத்தியங்கொடுதது விலலிற் சந்தித்து விடுவிட்டார் அந்தப்பிரமாஸ்திரம் வெளிப்பட்டு ஆலகாலவிஷமபோற் சீறிக்கொண்டு சுாதருசன விட்ட பிரமாஸ்திரததின பேரிற் சரேலென றுபாய்ந்து ஒனறோடொனறு மோதாக்கி சுாதருசன விட்ட பிரமாஸ்திரத்தை கமளீகாஞ்செய்துப் போயிற்று அதைப்பார்த்து சுாதருசன் நாராயணாஸ்திரததைபபிரயோகஞ்செய்தான நாருயணாஸ்திரமும் விலலிலிருந்து விடுபட்டு அணடாணடம ஆயிரதெண்டமுங்குலுங்க ஆயிரவாயைததிறநது வருகிறபோது சததுருக்கா பார்தது தமமுடைய ருமபாணமாகிய நாருயணாஸ்திரததை யெடுதது அதறகு பூசை நைவேததியஙகள் புரிநது விட்டார் அநத நாராயணாஸ்திரமான துபுறபபட்டு ஆயிரத்தெட்டணடமும்-௨௨௪ - புவனமும சததசாகரமுங்குலுங்கும்படி தேவர்களும் பறநதோட அநதவே

மாய் சாதன் விட்ட நாராயணாஸ்திரத்தை இடியென
வந்து பாய்ந்து அதைத் தமனிகாமபண்ணி விட்டுப்
போயிற்று அதினைக் கண்டு சாதாராசன் அதிக சினங்
கொண்டு அநேக பாணங்களை வில்லிற் சந்தித்துப் பு
யல்சொரிவதுபோல சரமாறி சொரிந்து அந்த சத்தி
யில் ஒருசத்தியையெடுத்துப் பூசைகள் செய்து விடுத்
தான் அந்தச்சத்தியானது விடுபட்டு மண்விண்ணை இ
அக்கினிக்கொழுந்துகளோடு பாணவேகத்தோடுகூடி
அதிவேகமாக வருவதைச் சத்துருக்க மகாராசனறி
யாமற்பாணங்களை ஏவிக்கொண்டிருந்தார் அந்த
வேளையிற் சத்தியானது சத்துருக்கமகாராசனுடைய
மார்பிற் குபீலென்று வந்துபாய்ந்து முதுகிலுருவமா
ட்டாமல் நிலைத்துவிட்டது அப்போது சத்துருக்க
மகாராசன் அந்த அதறலினாலே ஞமாஞமாவென்று
கைவில்லை நழுகவிட்டு ரதத்தின்பேரில் சாய்ந்து விட்
டார் தேவர்கள்கண்டு மகாதுயரமானார்கள்.

இந்தச்சமயத்தில் ருட்சதாள் பார்த்துச்சாதரு
சனைவளைத்துக்கொண்டு யுத்தம் பண்ணினார்கள் இதி
ரண்டுருட்சதாள் தலையின்மீதுகையைவைத்து அழு
துக்கொண்டு அயோத்தியாபுரிபட்டணஞ்சென்று ரா
மபத்திரசுவாமியைக்கண்டு சாஷ்டாங்கமாக தெண்ட
ஞ்சமர்ப்பித்துச் சொல்லுகிறான் ஐயா ரகுநாதனே கே
ளும் வாரணபுரி பட்டணத்தையாளப்பட்ட சோமகா
சமகாராசன குமாரன் ஆரண்ணியராசனென்னப்பட்
டவன் நாம்விட்ட குதிரையைப்பிடித்துக்கட்டி யுத்த
த்திற்குவந்தார்கள் அப்போது ஆரணணியராசன் தம்
பியாகிய சாதராசனும அவர்கள் தகப்பன் சோமகாச
மகாராசனும் சேனைகளைக் கூட்டிக்கொண்டு யுத்தஞ்
செய்கிறபோது சாதராசன மிஞ்சி வெகுசேனைகளும்
ராட்சதசிரேஷ்டர்களையுங்கொன்று தண்டுக்கு ராசா
வாகிய சத்துருக்கமகாராசனையும் மூர்ச்சையாக்கி ரா
ட்சதாள் தண்டிற்புகுந்து சண்டைசெய்துக் கொண்
டிருக்கிறார்களென்று கூறினார்கள் அதனைக்கேட்டு ரா
மபத்திரசுவாமியானவர் தம்பியாகிய சத்துருக்கர் மூ
ர்ச்சித்திருக்கிறாரென்று கேட்டவே மெத்ததுயரப்ப
ட்டு பிரலாபிக்கையில் பரதலட்சுமணர் வந்து நமஸ்க
ரித்துச் சுவாமியினுடைய துயரத்தையாற்றி சொல்
லுகிறார்கள் அண்ணாவே அடியேங்களுக்கு செலவு
கொடுத்தனுப்புவீரேயானால் அந்தச்சோமகாசமகா
ராசனையும அவனுடையபுத்திர மித்திர பந்துவர்க்கங்
களுடசேனாதிபதிகளையுங்கொன்று அவன பட்டணத்
தையுங் கொள்ளைகொண்டு தம்பி சத்துருக்கனையுஞ்
சேனைகளையுமழைத்து குதிரையின பின்னனுப்பிவிட்டு
ச்சீக்கிரத்தில் வருகிறோமென்றுரைத்த தம்பிமார்களு
க்கு ராமர்சொல்லுகிறார் கேளுந் தம்பிமார்களே அச
தருசனோ மிகவும பலவானபோற் றட்டுப்படுகிறது
நம்முடைய குதிரையைப்பிடிக்க திரிமூர்த்திகளாலும்
வல்லமையிராது ஆகையால் நாமேபோய் நமது குதி
ரையை விடுவித்துக்கொள்ளவேண்டுமென்றுசொல்ல
அம்மொழியைக்கேட்ட பரதலட்சுமணர் முதலாகிய
அச்சபையிலுள்ளவர் மனதிரங்குமவிசனமவந்தடை
ந்ததால் அதேதென்றால் ஆயிரத்தெட்டண்டமும்
உ௪-புவனமும் சத்தசாகரமும் ஈரேழுபதினாலுலக
த்தையும் ஏகசக்ராமாய்ஆண்டராவணேஸ்வரன தம்பி
கும்பகர்னன் பிள்ளை பேரன்மார் ஆயிரவெள்ளம்மூல
பலமும் இப்படிக்கொத்த சூரரையெல்லாம ராமபா
ணத்துக்கு இரைகொடுத்தது போகாமல் அவனுக்கு
ச்சகாயமாகவந்த சதகண்டராவணனும சகஸ்திரகண்
டராவணனும் அவர்களுடைய அண்ணன் தம்பிமார்
மைத்துனன பிள்ளை பேரன்மார் பதினாயிரவெள்ளமி
ராட்சதாள் அனைவரையும் இராமபாணத்திற் கிரை
கொடுத்திருக்கையில் இந்தராசனையும் அவன் குமார
ரையும் ஒருபெரிதாயெண்ணி இத்தனைபிரமுகாளையுந்
தள்ளிவிட்டுத் தாமேபோக வேண்டுமென்று சொல்
லுகிறாரென்று சம்சயப்பட்டு ஒன்றுஞ் சொல்லாமல்
மௌனமாயிருந்தார்கள்.

அப்படி மௌனமாயிருந்த தம்பிமாரையும்பிரமு
காளையும் பார்த்துச்சொல்லுகிறார் தம்பிமார்களே இ
ந்நமிச்சபையிலிருக்கப்பட்டவர்களே கேளும் அந்த
வாரணபுரியாளப்பட்ட சோமகாசமகாராசனை அற்ப
சொற்பமாக வென்றெண்ணவேண்டா முன்னால் நாக
தர்சொல்ல நான்கேள்விப்பட்டிருக்கிறேன் ஆனபடியி
னால் நம்முடைய குதிரையைப்பிடித்துக்கட்டினான் நா
ன் நான்போகாவிட்டால் அரி அப்பிரம்மாதிகள் போ
ய் நமக்காகப் போர் புரிந்தாலுமகுதிரையை விடுவிக்க
மாட்டார்கள் அவர்களுடையமனாலயத்தில் ஸ்ரீமந்நா
ராயணர் இடைவிடாமல் எந்நேரமுங்குடியிருக்கிறார்
ஆகையால் அவர்களைச்செயிக்கப்பரமசிவனாலுமாகாதெ
ன்றார் அதனால் தம்பிமார்முதலியவர்மனக்கலக்கமநீங்
கிமகிழ்வுற்றார்கள் அப்பால்ராமமூர்த்தியானவர்சேனா
திபதியான வாலுகோபனையும பஞ்சகண்டனையுமழை
த்து நமமுடைய தண்டுதளத்தையெல்லாம பயணப்
படுத்தென அததாவுசெய்து தமமுந்தம்பிமார்களுட
ன் கூடவெழுந்து அரண்மனை சென்றார் அப்போது நீ
லாட்சதனும் வாலுகோபனும பஞ்சகண்டனுமபோ
ய்த்தண்டை வெளிப்படுத்தினார்கள் அதெப்படியென
றால் 13-வெள்ளம் யானையும் 69-வெள்ளம்குதிரையும்
89-வெள்ளம்ரதமும் 342-வெள்ளஞ்சேனைகளுமதயா
ர்செய்தார்கள் அக்காலயில் இருமலட்சுமணபரதரு
டன் சொனன கோதண்டத்தைக் கையிற் பிடித்தா
தாருடாரானார்கள் இவர்கள் ரதமேறவே 50- இராசகு
மாரர்களும ரதமேறி வந்தார்கள் 120 - மந்திரிமார்க
ளுடைசுமந்திருமாதமேறி ஸ்ரீராமரிடம்வந்து கும்ப்

தார்கள் அனுமான் அங்கதன் நீலன் 24-படைத்தலைவருடன் சுக்ரீபராசனும் ரதத்திலேறி வந்தார்கள் 545000-கோடி படைத்தலைவர் சேனாபதிகளுடன் வானுகோபனும் பஞ்சகண்டனும் ரதமேறி வந்தார்கள் தேவசுந்தரனும் மாலியவானும் ரதமேறிக் கருடக்கொடிபிடித்து நானாவிதவாத்திய கோஷ்ட முழக்கத்துடன் யாவரும் வாரணுபுரிக்குப் புறப்படுகையில் வைகுந்த ஐபலூகிய மகாவிஷ்ணுவோராமனுகவருகிறாரென்று ஆகாயத்துறைபவன் துதிசெய்து மலர்சொரியவும் திருப்பாற்கடலில ஆலிலைமேல்சயனிக்கும் வைகுந்த வாசரூகிய ஸ்ரீமந்நாராயணரே இராமபிரானுக வருகிறாரென்றுஅம்புவியோர்கண்டு அடிவணங்கி அல்லலொழிக்கும் ஆண்டவரேயென்று ஸ்தவுத்தியம் புரியவும் நாடுகள் தழைக்கவும் யானை-சேனை-ரதப்-புரவிகள்-அணியணியாய்ச்சூழவும் வருகையில் அப்போது சவைந்தன் அரண்யமகாராசனை மூர்ச்சையாக்கிவிட்டுச் சுரதராசனுடனெதிர்த்தது அவன்பாணங்களினுற் சலவைசந்தன்மூர்ச்சையாலுன் பிறபு பட்சயந்தனுமானும்வீரசேனனும் மூர்ச்சையானார்கள் அதன் பின்பு சோமகாசமகாராசன் ராட்சத சேனைகளில் பேற்கவிந்து யுத்தஞ்செய்து ஐப்டது வெள்ளம் ராட்சதாளைக் கொன்று ரத்தாருண்டாக்கிவிட்டு யானை தேர் பரிசேனைகளையும் பறிகொடுத்து சுரதராசனுடன் கூடிதன்பட்டணஞ்சென்று சொலுமண்டபத்திலுட்கார்ந்தார்கள். அந்தப்பட்டணத்திலுள்ள பெரியமனிதர்களும் வந்து சோமகாசமகாராசனைக்கண்டு இந்தச்சங்கதிகளைப் பேசிக்கொண்டிருந்தார்கள்.



நாரதர் வாரணுபுரி சோமகாசராசனிடம் வருதல்.

விருத்தம்

விண்டுவாதிவிண்ணவர்தொழுங் கைலையை விட்டொ
மண்டலந்தொளிர்வாரணுபுரியைநோக்கி (ளிர்
அண்டகோளகையதிர்ந்திட நாரதர்வரவைக்கண்ட
வேந்தனுஞ்சென்றெதிர்கரங்குவித்தழைத் தான்

வசனம்

இப்பால் திரிலோகசஞ்சாரியாகிய நாரதமகாமுனிவர் இந்தக்காரியங்களைக்கேள் விப்பட்டு குடிகெட்டுப்போயிற்றென்று செபதாவடங்கள் குலுங்கவேகமாக வாரணுபுரிப்பட்டணம் வருவதைக்கேள்விப்பட்ட சோமகாசமகாராசனும் சுரதனும் எதிர்கொண்டுபோய் அர்க்கியபாத்தியங்கொடுத்து அழைத்துவந்து அடிபணிந்து ஆசனமளித்துஉட்காரவைத்த சோமகாசமகாராசனைப்பார்த்து நாரதர் கூறுகின்றார் வாரும் மகாராசனே நீங்களிப்போது யாருடன் யார் போர் புரிந்தீர்கள் அதையெனக்குச் சொல்லுமென்று கேட்கையில் சோமகாச மகாராசன் சொல்லுகிறான் ஐயாமுனிநாதரே அயோத்தியாபுரிபட்டணத்தையாளப்பட்ட தசாதமகாராசாவின்குமாரன் ராமபிரான் அஸ்வமேதயாகஞ் செய்யவேண்டுமென்று குதிரையை விட்டார் நமதும்சனை அந்தக்குதிரையை நமதுபட்டணத்தில் பிடித்துக்கட்டி அதன் பின்புவந்த சேவகரையுமடித்துத்துரத்திவிட்டான் அந்தச்சேவகர் ஓடிப்போய்தண்டிற் சொன்னர்கள் அவர்களும் நம்முடைய பட்டணத்தின்பேரில்யுத்தத்திற்குவந்தார்கள் நானும் என்குமாரர்களுடன் சேனைகளைக்கூட்டிக்கொண்டு யுத்தத்திற்குடபோய் அவர்கள் சேனைகளையுங் கொன்று இராசாவாகவந்த சத்துருக்கமகாராசனையும் மந்திரிபிரதானிகளையுங்கொன்று என்னுடைய சேனைகளையும் பிள்ளைகளையும்பறிகொடுத்து நானும்என்னுடைய குமாரனுந் தங்களுடைய அனுக்கிரகத்தினலேபிழைத்து வந்தோம் என்றார்கள் அதுகேட்டுநாரதர்சொல்லுகிறார் ஓய்ராசனே சேஷம்பாராபரவஸ்துவாய் விளங்கப்பட்ட ஸ்ரீமந்நாராயணரே ராமபிரானுகமூன்று தம்பிமாருடன் அவதரித்து ராவணராட்சதாளை யெல்லாஞ்சங்கரித்து அயோத்தியாபுரியில்வந்து பட்டாபிஷேகராய் இருக்கிறானில்சதசண்டராவணனென்று சொல்லுகிறஇருவருமகாவேகமாக யுத்தம்பண்ணி மாயவர்களுடையசேனைகளுடன்வந்து ராமபாணத்திற் சிறைபாய்ப் போனார்கள் அப்போர்க்கொத்த ராமபத்திரசுவாமி அஸ்வமேதயாகஞ்செய்யும்படி விட்ட குதிரையை நீங்கள் பிடித்துக்கட்டி அதன் பின்னுகவந்த யானைதேர்பரிசேனைகளையு மாய்த்துச் சத்துருக்க மகாராசனைக் கொன்றுபோட்டீர்கள் இந்தராமபத்திர சுவாமிகேட்டு தம்முடைய ரதகஜதுரகபதாதிகளுடனும் புறப்பட்டு வருகிறார்கள் அவருடனெதிர்த்து யுத்தம் பண்ணத்தக்கவர்கள் இந்தப்பூமியிலாவது யாரிருக்கிறார்கள் ஒருவரையுங்காணேன் நீங்கள் என்னடமியைத் தேடிக்கொண்டீர்கள் நீங்களெவ்விடம் போனபோதிலும் உங்களை ராமபாணம் விடாது இனியென்ன சொல்வேனென்றார்.

நாரதாவர் அதுகேட்டு சோமகாசமகாராசனுந் திடுக்கிட்டு ஐயா முனிநாதரே பாராபர வஸ்துவாய் விளங்கப்பட்ட ஸ்ரீமந்நாராயணரே ராமபி

ராஜுக அவதரித்திருக்கிறுரென்று அறிந்து அவர் விடப்பட்ட குதிரையையும் விஷமத்துடனே பிடித்துடனே பிடித்துக்கட்டி யுத்தஞ் செய்தவால்லகாங்களெல்லாம் அவர்பாதசேர்வையைக காணும்படியாக அவர் விடப்பட்ட அஸ்வத்தைவிடுக்காமபிரானே வருவார் அவருடைய பாத தெரிசனங்கண்டு சாயுச்சிய பதத்தையடையலாமென்கிற கருத்தினுல் அவர்விடப்பட்ட குதிரையைப் பிடித்துக்கட்டி யுத்தம்பண்ணினுேமென்ருர்கள் அவ்வார்த்தையைக்கேட்ட நாரதர் நகைபுரிந்து பிர்மாதேவேந்திரன் தேவர்கள் மகாத்துமாக்கள் அஷ்டகின்னரர் கந்தருவர் கருடகாந்தருவர் சித்தவித்தியாதரர் பன்னரர் ஏகாதசருத்திரர்கள் அவதாராசாந்தர்கள் காணுதற்கரிதாகிய பாதாரவிந்தத்தை வாவழைக்க உங்களால் வலிமையுண்டோவென்று சோமகாசமகாராசனும் சாதமகாராசனு மெழுந்து நாரதரை சேவித்துக்கைகட்டி வாய்பொத்தி ஐயா நாரதமகா முனிவரே அடியார்கள்செய்த அபசாரத்தைப்பொறுத்து ரட்சித்துக்கொள்ளுமென்று மிகவும் தாழ்மையோடு கேட்கையில் நாரதமுனிவர் ஓய் சோமகாசமகாராசனே கேளுங்கள் நீங்கள் அறிந்து அறியாமல் செய்த பிழையைப்பொறுத்தருளினேன் உங்களிருகிறவர் சேனைகளையுமெழுப்பி விடுகிறேன் ஆகையால் நீங்களும் உங்கள் சேனைகளுடன் மந்திரிப்பிரதானிகளையும் அஸ்வமேதக்குதிரையையும் அழைத்துக்கொண்டு போய் சத்துருக்கமகாராசனை வணங்கிச் சமாதானப்படுத்திக் கொண்டீர்களானுல் ராமர்பாதங் காணுவீர்களென்ருர் அப்படியே தங்கள் திருவாக்குக் கெதிர்வாக்கில்லாமல் செய்கிறேமென்ருர்கள்.

அதுகேட்டு நாரதர் பீடத்தை விட்டெழுந்திருந்து சோமகாசமகாராசனையுஞ் சாதராசனையுமழைத்துக்கொண்டு ரணக்களம்வந்து தமது கமண்டலத்திலிருக்குஞ் சலத்தைச சண்டமாருதம் வீசினுற்போல் நான்கு மூலையுஞ்சுழன்று அமிர்தத்தை வீசும்பொழுது அந்த அமிர்தசஞ்சீவி காற்றுனது படவே கைகால்சிரசு எலும்பு இறைச்சி தோல்யாவும்பொருந்தி நித்திரையிலிருந்தெழுபவர்போலெழுந்தார்கள் யானை தேர் பரிவாரமும் எழுந்து நின்றுர் அப்பால் பாதர் ராமருடையதண்டில்வந்து சேர்ந்தார்கள் அரண்யராசன் சுவேலராசன் மந்திரிபிரதானிகளுஞ் சோமகாசமகாராசனை வணங்கி ஆசிர்வாதம் பெற்றுர்கள் அப்போது சத்துருக்கமகாராசன் சூரசேனன் வீரசேனன் உக்கிரசேனன் மட்சயந்த மகாராசன் மகாமாயன் சலவசந்தன் காலசித்தன் நீலாட்சதன் படைத்தலைவர் சேனுதிபதிராசமன்னர் மட்சயந்தனுமான் குகன் முதல சகலரும் வந்துகண்டு அடிபணிந்து யுத்தத்திற்குச் செலவு கொடுமென்று கேட்டார்கள் அதற்குச்சத்துருக்கர் யோசனைசெய்துயுத்தத்திற்குச்செலவுகொடுத்தார் அந்தவேளையில் பேரிகைகளுடன் வாத்தியமுழங்கச்செய்தார்கள் அதுகண்டு ராட்சதர்களும் ராசமன்னர்களும் அட்டகாசம் பண்ணினுர்கள் அந்தச்சமயத்தில் சோமகாசமகாராசனும் அரண்யனும் சாதனும் சுவேலராசனும் மந்திரிபிரதானிகளும்புடைசூழ அஸ்வமேதக்குதிரையுடனும் காணிக்கை கப்பணங்களெடுத்துக்கொண்டு வாத்தியமுழங்கச்சத்துருக்கருடைய பாளையத்தினுள் வருகின்றபோது சத்துருக்கமகாராசரும் மட்சயந்தராசரும் வீரசேனனும் சலவசந்தமகாராசனும் மகாமாயனும் சூரசேனனும்வீரசேனன்யாவரும் எதிர்கொண்டுவந்து சோமகாசமகாராசன் சுவேலராசன் மூவரும் சத்துருக்கமகாராசனுக்கு அஸ்வமேதக் குதிரையுங் காணிக்கை கப்பணங்களையுங்கொடுத்து சத்துருக்கமகாராசரும் அனைவரையுஞ் சங்கீத மேளத்துடனேசமாதானமாயழைத்துக்கொண்டு வாரணுபுரிக்கருகில் தண்டுதளங்களை நிறுத்திப்போட்டு சத்துருக்கமகாராசருடன் மட்சயந்தமகாராசன் உக்கிரசேனன சலவசந்தன் மகாமாயன் சூரசேனன் வீரசேனன் காலசித்தன் ஐம்பத்தாறு தேசத்து ராசாக்களுடனும் கொலுமண்டபம்போய் ஆசனமளித்துடகார்ந்து சற்றுநேரம் வார்த்தையாடிக் கொண்டிருந்து யாவநமகிழ்ந்து ஸ்னானஞ்செய்து நியமநிஷ்டைகள் முடித்துக்கொண்டு கந்தகதம்பகஸ்தூரி பரிமளாதிக ளணிந்து சோமகாச மகாராசனுடு கொலுமுகம் வந்து ஆட பாடல்களைப் பார்த்துக் கொண்டிருந்தார்கள்

அந்த வேளையில் ஸ்ரீராம மூர்த்தியினுடைய தண்டானது வாரணுபுரிபட்டணத்தைநோக்கிமகா உக்கிரமாய் சோமகாச மகாராசனையும் அவன பிள்ளைகள் அரண்ணியராசனையும் சாதனையும் சேனைகளையுங்கொன்று பட்டணத்தைக் கொள்ளை கொள்ளுவோமென்று ஆர்ப்பரித்து கருந்தூள் செந்தூளெழும்ப வெகு வேகமாய் வருவதைத் தூதுவர்கள் கண்டு பயந்து நடுநடுங்கி ஓட்டமாயோடிவந்து சோமகாசமகாராசனுக்குச் சொல்லவே அவர் அதிவிரைவாய் பிள்ளைகளுடன் மந்திரிப் பிரதானிகளோடெ திட்டென்றெழுந்திருக்கவே சத்துருக்கராசனுந் தன்னுடனவந்தராட்சதவீரரும்ராசாதிராசரும்சேனுதிபதிகளும்எழுந்திருந்து இருதிறவீரருமவரோடித்து எதிர்கொண்டுவருவதைக்கேள்விப்பட்டராமபகிரகுரதத்தை விட்டிறங்கிப்பாதசாரியாய்வரவேயாவருங்கண்டுபடிவணங்கி அனேகவந்தனங்கள்

புரிந்துயழைத்துவந்துதன்சிம்மாசனத்தில்வீற்றிரு
க்கச்செய்துமிகவும்பயபக்திவிநயத்துடன் அநேகவ
ந்தனத்தோடு சொல்லுகிறான் ஸ்ரீயகிலாண்டகோடி
பிர்மாண்டநாயகா ஆபத்பாந்தவா ராவணசம்மாரா
அடியேன் செய்த பிழையைப் பொறுத்து ரட்சிக்க
வேண்டுமென்று அநேக விதமாகக் கொண்டாடி பி
ன்னையுஞ்சொல்லுகிறான். கேளும் ரகுநந்தனா தேவ
ரீருடைய தம்பியாகிய சத்துருக்காசரையும் ராச
மன்னர்களையும் ராட்சத சிரேஷ்டர்களையுங் கண்
டேன் இப்போதுதங்கள்பாததரிசனமுங்கண்டேன்
அதனால் நானும் என்பிள்ளைகளு மினியில்லாத பா
க்கியத்தை யடைந்தோம் மேலும் அடியார் செய்த
குற்றத்தைப்பொறுத்து ரட்சிக்க வேண்டுமென்று
பலவாறுகத்துதிபுரிந்து பணிந்துபிடித்த அஸ்வமே
தக் குதிரையையும்காணிக்கை கப்பங்களையும் கொ
டுத்துவிட்டேனென்றான் அப்போதுசத்துருக்கரும்
ஸ்ரீராமரிடத்தில் நடந்த சவிஸ்தாரத்தை சொல்லி
வணங்கினார் அப்படிவணங்கிய சத்துருக்கரையெடு
த்து மார்போடுதழுவி ஆசீர்வதித்து பிறகுராமரான
வர் சோமகாசமகாராசன்சுரதமகாராசன் சத்துரு
க்காசர் பரதலட்சமணர் சுக்ரீபன் அங்கதன் விபீ
ஷணன்-மாலியவான்-சுமந்திரன் இன்னுமற்றுமுள்
ளராசர்களுடன் கேளிவிலாசமாய் வாரணுபுரி பட்
டணத்தில் மூன்றுநாளிருந்து நாலாநாள் காலமே
அயோத்திக்குபோகவேண்டுமென்று நினைத்து தன
துதம்பியாகிய சத்துருக்காசரை அழைத்து அப்
பாசத்துருக்கா நான் அயோத்திக்கு போகட்டோ
அல்லவென்று உன்னுடன்கூட வரட்டோவென்று
கேட்க அப்போதுசொல்கிறார் அண்ணாரகுநந்தனா
தாங்கள்வரவேண்டியதில்லை அயோத்திக்குப்போய்
சேருங்கள் நானும் சோமகாசராசரும் அரண்ணிய
ருசரும்சுரதருசனும் அவர்களுடைய மந்திரிபிரதா
னிகள்முதலிய சேனைகளும் பிரயாணப்பட்டு பூமி
பிரதட்சணஞ்செய்துக்கொண்டு அதிகசீக்கிரத்தில்
அயோத்திக்குவந்து சேருகிறோமென்று சத்துருக்
சர்சொல்ல, அப்படியே ராமரும்சம்மதித்து தமது
ரதத்தைக்கொண்டு வரச்சொலல, அப்படியே சார
தியும் ரதத்தைக்கொண்டு வந்து நிறுத்தி ராமரும்
சோமகாசராசனிடத்திலும் சொல்லிவிட்டு ரதத்தி
னபேரிலேறினார் அப்போது ஆலவட்டம் சாமரை
விசமுத்துகுடைபிடிக்க திருச்சின்னம் வெங்கல
பேரிகை-செயபேரிகை-படிபட நாட்டியப் பெண்க
ள்நடனம்புரிய கட்டியர்கள்கட்டியங்கள்கூற பாட்
டகர்கள்புகழ விருதுக்கொடி பறக்க இதயாதிவை
பவத்துடனுமசோமகாசராசனுமசத்துருக்காசன
முதல் சகலமானருசகூட்டங்களும் வாரணுபுரியை
விட்டு மூன்றுநாழிகை தூரம்போய் ராமருக்கு வழி
காட்டி ராமருமயோத்தியாபுரி சேர்ந்தார்கள்.

அதன்பிறகு சத்துருக்கருசர் காலசித்தனைப்
பார்த்துசொல்லுகிறார் ஓய்காலசித்தனே நம்முடை
யயானைதேர் பரி சேனைகளை தயார் படுத்தென்றுக்
கெட்டிக்க அவ்வாறேகாலசித்தனுங் கோட்டைக்கு
வெளியில்வந்து சகலமையுந் தயார்செய்து அஸ்வ
மேதக்குதிரைக்குபூசைசெய்து அதன்பின் நநொ-
ருட்சதாளையும்சேனுபதியான நீலாட்சதனையுங் கூ
ட்டியனுப்பிஒருயானைபேரில்கருடக்கொடிபிடித்து
அடிமானங் குமுறினதுபோல பயணபேரியானது
அடிபடவே சத்துருக்காசனும் சூரசேனனும் உக்
கிரசேனனும் குகனும் மட்சயந்தனுமானும் ஐம்பத்
தாறுதேசத்து ராசாக்களும்படைத்தலைவர்சேனாதி
பதிகளும்சகலரும் ரதமேறிபுறப்பட்டார்கள். அவ
ர்கள்புறப்படவே சோமகாசராசனும் அரண்ணிய
ருசனும் சுரதருசனுஞ் சுவேலருசனும் அவர்களைச்
சார்ந்தருசமன்னரும்ரதமேறி சத்துருக்காசரிடம்
வந்தார்கள் அந்தசமையத்தில் கர்னபூரி மத்தளம்
கைத்தாளம் பட்டயம் வீரமுரசு வெண்கல முரசு
ருயமுரசு ரணமுரசு ராயபேரி வெண்கலபேரி ட
மாரபேரிகை தவண்டைமல்லரி குடமுழா பஞ்சநா
தக்கீத மேளங்கள் இப்படிசொல்லப்பட்ட முப்பத்
திரண்டு மேளவாத்தியங்கள்முழங்கச்செய்து புறப்
பட்டு தன்சேனைகளானது யானைகள்முன்னடக்கிற
அதட்டியும் தேர்கள்நடக்கிறவேகமும்அதிர்ச்சியும்
கால்பலமான ராசாக்கள் வில்தொனியுங்கண்டு பூமி
யானதுநடுங்க ஆதிசேஷன்நடுங்க அஷ்டகுல பர்வ
தங்களும் கிடுகிடென்ன இப்படி ஆரபாரத்துடன்
வாரணுபுரி பட்டணத்தை விட்டு நேர்வடக்காகப்
போய் வடக்கேயிருந்து வடமேற்காகத்திரும்பி அ
ஸ்வமேதக்குதிரையின் பின்வருகிறபோது குதிரை
யின்பின்போகிற ராட்சதாளும குதிரைமலசலம்வி
ட்ட இடங்களில் ஓமசாந்திசெய்துகோவிலுங்கட்டி
குளமெடுத்து அவ்விடம் தண்டுவிட்டிறங்கி தான
தருமங்கள் செய்துபோகிறபோது அஸ்வமேத குதி
ரையும்வடமேற்கிலிருந்து வடகிழக்காகத் திரும்பி
வருகிறபோது அஸ்வமேத குதிரையைக்கண்ட ரா
சாககளெல்லோரும்கையையெடுத்துகும்பிடுவாரும்
காணிகை கப்பங்களைக் கொண்டுவந்து கொடுதது
சததுருக்க மகாராசனைவணங்குவாரும் தண்டுவரு
கிற சமாச்சாரங்கேட்டு வரிசைவாங்கி ஓடிப்போ
வாரும இந்தப்படியாய் ஒருவர் நிகரில்லாமல காடு
செடிமலை குன்று ஆறு மடுக்கள் ஊர் நாடுசெனகிரா
மங்கள் சீமை பூமியாவும் கடந்துவருகிறபோது ப
த்மாவதி பட்டணத்தை யாளப்பட்ட சந்தனமகா

ராசனனவர் காலமே எழுந்திருந்து கோட்டைக்கு வெளியில் ஸ்நானத்திற்குவந்தார் அந்தவேளையில் அஸ்வமேதகுதிரையானது அந்தகோட்டை யோரமாகப்பச்சென்ற புல்லைக்கண்டு மேய்ந்து கொண்டிருந்தது அந்த குதிரையைசந்தனமகாராசன்கண்டு இதேது அஸ்வம் மகாவிசித்திரத்துடனேயு மிருக்கின்றது தேவர்கள் விட்ட அஸ்வமோ யார்விட்ட அஸ்வம்இந்தஅஸ்வம் இவ்விடம் வரவேண்டிய காரணமென்னவென்று அருகில்வந்து அஸ்வத்தினுடையநெற்றியில் கட்டியிருக்கிற பட்டத்தை வாசித்துப் பார்க்கும்போது அதில்எப்படி எழுதியிருக்கிறதென்றால் சூரியவம்சத்து ராசர்களனைவருக்கும் ராசாவாய் சூரியனைப்போற் பிரகாசிக்கின்றவர் பிரதாபசௌரியமுள்ளவர் என்னுயிரம் அண்டமும் ௧௪-புவனமும் சததசாகரஞ்சூழ்ந்தஈரேழுபதினுலகத்தையும் ஏகச்சக்கிராதிபதியாளப்பட்ட ராவணேஸ்வரனைவென்ற வீராதிவீரனான ராமபிரான் விட்டகுதிரை இதன்பின்னுற் சத்துருக்கன் வருகிறான் சத்துருக்கனைசெயிக்கத்தக்கசாமர்த்தியமிருந்தால் இந்தக்குதிரையைக்கண்டவுடன் பூசை செய்து காணிக்கை கப்பங்கொண்டுவந்து சத்துருக்கனை வணங்கிப் பிழைக்கிறதென்று அந்த பட்டயத்திலெழுதியிருந்ததைவாசித்துபார்த்து குஞ்சிரிப்புகொண்டு தலையசைத்துச் சொல்லுகிறான்.



சந்தனமகாராசன்

குதிரையைப் பிடித்துக்கட்டல்.

ஆஆஇந்த வைபோகமுண்டோ தானே சூரனென்றகர்வித்து தானென்றவுண்மையைபடைத்தவனை ஸ்வரோத்திற்க ண்பிக்கிறேனென்று பத்னோக்கடித்து அதிலிருந்தசேவகர்களைக்குதிரையை வொப்பித்து ஸ்நானத்திற்குச்சென்று ஸ்நானம்பண்ணிநியமநிஷ்டை முடித்துக்கொண்டு அஸ்வமேதக்குதிரையுடனே கொலுமண்டபம்வந்து மந்திரிமார்களுடனும் ராசாக்களுடனும் இந்தசங்கதியை சொல்லிக் கொண்டிருக்கையில்சந்தனராசனுடைய பேரப்பிள்ளைகளானசவுபாலன் சவுந்திரனென்னப்பட்ட இருவரும் குதிரையினுடைய நெற்றியிற்கட்டிய பட்டத்தை வாசித்துப்பார்த்து ஐயையோ ராமன் தனக்குன்தானே ரணசூரனென்று கர்வித்து நம்மையெல்லாம் கைம்பெண்களாக்கினான்பார்த்தையா வென்று கர்ஜித்துக் குதித்தெழுந்து ஆஆ இவனுடைஆண்பிள்ளைத் திமுணியையும் சேனைகளுக்கெல்லாம் ராசனாகவந்த சத்துருக்கனுடைய சவுரியத்தையும் இன்றையதினம் காண்போமென்று கடுங்கோபமுண்டாகி அஸ்வமேதக் குதிரையைப் பிடித்துக்கட்டிப் பத்திரப் படுத்துங்களென்று சேவகருக்கு ஆக்கியாபித்துத் தாங்கள் கொலுமண்டபம் வந்து உட்கார்ந்தார்கள்.

அதன்பின்புசந்தனமகாராசன் சேனாபதியான கெதாயுதனைப்பார்த்து சொல்லுகிறார் சேனாபதியான கெதாயுதனே நம்முடையதண்டுகொலுவிருந்தவர்களுக்கும் விடைகொடுத் தனுப்பிவிட்டு ரதமும் நம்முடைய பேரன்மாருடனெழுந்து அரண்மனைசென்று போசனமருந்தி கந்தகதம்பங்களணிந்து கிரீடந்தரித்து ஆடையாபரணலங்கிர்தனாகி புஜகிருதிபூண்டு அம்புரூப்பொதி முதுகிற்கட்டி கற்பூரதாம்பூலமென்று தங்கள்தங்கள் ஸ்திரீகளுடன் வசனித்துக் கொண்டிருந்தார்கள். அப்போது சேனாபதியான கெதாயுதன்தண்டை வெளிப்படுத்தினான் எப்படியென்றால் ரணரங்கசூரனான ராசமன்னர்கள் முப்பத்திரண்டாயுதங்களுமெடுத்துக்கொண்டு யானைகளின்மீதேறி இருநூறக்ரோணி புறப்பட்டன அதன்பிறகு கொடியிற்றடையை வென்று கொடிமுடிமன்னர்கள் வில்லம்பெடுத்துரதத்தின்மீதுட்கார்ந்து நூறக்ரோணி புறப்பட்டன. அதன்பின்னெத்திசையிலும் வெற்றிப்பெற்றசத்தவீரர்களை கத்திகளை அசுவத்தலேற்றிக்கொண்டு மனோவேகத்திலும் அதிகப்பட்டகுதிரைகளின்பேரிலேறி என்னூறு அக்ரோணிகள் புறப்பட்டது அதன்பிறகு செப்புதற்கரிய ஒப்பற்ற முப்பத்திரண்டு ஆயுதங்களும் இடுப்பிற்கட்டிக்கொண்டு ௲-அக்ரோணி சேனைகள் புறப்பட்டது அப்போது ஒருயானையின் மீதுபுலிக்கொடிபிடித்துக்கொண்டுதண்டுதளங்கள் போருகவே பேரிகையறைந்தார்கள்.

அந்தசத்தஞ் சந்தனராஜன் கேட்டு தானுந்தன்குமாரர் சல்லியராசனும் சாத்மீகராசனும் அவர்களுடையகுமாரர் சவுபலவுந்திரனும் ரதமேறி வந்தார்கள் வரவே ரண்டாயிரம் ராசகுமாரர்களுந் துருபதனுங்கூட ஆயிரத்தைந்நூறு மந்திரிகளு முன்னூற்றைம்பது படைத்தலைவரும் சேனதிபதியான கதாயுதனும் ரதமேறி புறப்படவே பயணம் பயணமென்று இராயபேரிவெங்கலபேரியடிக்க நானவித வாத்தியங்கள் முழங்கத்தக்க யானைகள்முன்னு மதன்பின் ரதங்களு மதன்பின் குதிரைகளு மதன்பின் சேனைகளுமாககோட்டையைவிட்டு வெளியில்வந்து பவுஞ்சிட்டு நிறுத்தி யுத்தபேரிமுழங்கினர் ள்.

இவ்விடத்திலிப்படியிருக்க அஸ்வத்தின் பின்வந்தராட்சதாலஸ்வமேதக்குதிரையைக்காணமல்குதிரையைதேடிக்கொண்டு பத்மாபுரிபட்டணம் வருகிறபோது தண்டுகளானது பாளையமிறங்கியிருப்பதை பார்த்து தண்டினுட்புகுந்துதேடிக்கொண்டு வருங்காலத்தில் சல்லியராசன் ராட்சதாளைப் பார்த்து கோபமாகிபதினயிரஞ்சேவகரையனுப்பி ராட்சதாளைப் பிடித்துவரச்சொன்னர் அவர்கள்சென்று ராட்சதாளைப்பார்த்து சொல்லுகிருர் ஓய் ராட்சதர்களே கேளுங்கள் எங்களிராசகுமாரனகிய சல்லியராசன் உங்களையழைத்துவரச்சொன்னர்வாருங்களென்றழைத்தார்க ளதற்கவர்கள் மறுவுத்தரவு சொல்லாமல் சேவகரோடு கூடவந்து சல்லியனவர்களை யுற்றுநோக்கிஅடாராட்சதர்களேநீங்களெவ்விடமிருந்து எங்குபோகிறீர்கள் தண்டில் நீங்கள்வந்த காரியத்தை தெரியச் சொல்லுங்களென்றுன் ராட்சதர் ஓய்ராசனேகேளு மயோத்தியாபுரி பட்டணத்தை யாளாநின்ற தசரதமகாராசன் குமாரனகிய ராமபிரான் ராவணகும்பகர்ணுதிகளை சம்மாரஞ்செய்து அவர்களுக்கு சகாயமாகவந்த சதகண்டராவணனையும் சகஸ்திரகண்ட ராவணனையுங்கொன்று விபீஷணன் மகாமாயன்சலவசந்த இம்மூவர்களுக்கும் பட்டங்கட்டி தாம் அயோத்தியாபுரியில்வந்து பட்டாபிஷேகராகி ராச்சிய பரிபாலனம் பண்ணிக்கொண்டிருக்கையில் அச்சபைக்குவதிஷ்டமகாமுனிவர்து ராமரை அஸ்வமேதயாகஞ் செய்யச்சொன்னர்.

அவர் திருவாக்கின்பிரகாரம் அஸ்வமேதயாகம்பண்ணவேண்டி எங்களுக்குராசாவாகிய விபீஷணரையும் ராட்சதசிரேஷ்டரையும் ராட்சதாளையு மழைப்பித்து குதிரையைவிட்டு அதன்பின் ஐம்பது வெள்ளம் ராட்சதாளையு மதற்குண்டான சேனதிபதிகளையுமனுப்பி யதற்கு ¦பின்பலனகவந்த நானூராயிரம் அக்ரோணிசேனைகளையும் ஐம-தேசத்து ராசாக்களையும் கூட்டியனுப்பிவைத்தார்.

நாங்களும் புறப்பட்டுகுதிரையை யழைத்துக்கொண்டுவரும்போது மகனுபுரிபட்டணத்தை யாளப்பட்ட மட்சயந்தராசனும் வாரணபுரியை பரிபாலனஞ் செய்யப்பட்ட சோமகாசராசனும் குதிரையை பிடித்துக்கட்டி யுத்தம்பண்ணி யவர்களால் சாயாமல் சத்துருக்கனைவணங்கி சமாதானஞ்செய்துக்கொண்டு அவர்சேனைகளுடன் சத்துருக்கராசன் தண்டிற்சேர்த்துக் குதிரையை விட்டு அதன்பின் காவலாக பதினயிரம் ராட்சதாளையு மனுப்பிவைத்தார்கள் அந்தகுதிரை யிவ்விடம்வந்தது நீங்கள்கணீர்களோவென்றுவினவிய ராட்சதர்களை சல்லியன்பார்த்து அடா ராட்சதர்களே கஅ அண்டம் உஉச புவனமுஞ் சத்தசாகரஞ்சூழ்ந்தஈரேழுபதினலகத்தையும் ஏக சக்கிரமாயாளப்பட்ட ராவண ராட்சதாளை செயம்பண்ண சூரவீரனனுமென்ன தன்னைச்சார்ந்த ராசாக்களுடைய சிமை பூமி நாடு கிராமத்தில் தன்னுடைய பிரதாபசௌரியத்தை பட்டயத்திலெழுதி குதிரையினுடைய நெற்றிற் கட்டி பிரதட்சணம்வரவேணுமேயல்லாம லிப்படித்தான் தானேசூரனென்று கர்வித்து விரப்பட்டமெழுதிக் குதிரையைவிட்டபடியினல்என்பட்டணத்தில் வந்து எங்கள்கையிலகப்பட்டகுதிரையைவிடுவிக்க மும்மூர்த்திக்கும் வல்லமையிராது ஆகையால் நீங்களபோய் உங்களுக்குத்தலைவனகிய சத்துருக்கனை குதிரைவிடுவிக்க வரச்சொல்லுங்கள் விடுவிக்க சாமர்த்தியமில்லாவிட்டால் தண்டெனுடிப்பிழையுங்கள் இல்லாவிட்டால் நம்மைவணங்கி நடக்கச்சொல்லுங்கள் மூன்றில் எதுயுக்தமாயிருக்கிறதோ அப்படிச்செய்யச் சொல்லுங்களென்ற சொன்னன்.

முதல்நாள்யுத்தம்.

அதுகேட்டுராட்சதாள் பல்லைபடபடவென்றுகடித்து சல்லியனைப்பார்த்து சொல்லுகிருர்கள் அடாராசகுமாரனே மே சம்போகாதே வேஷமாகாதே நீயா எங்களிராசனகியசத்துருக்கனை செயிக்கிறவன் உன்னுடைய கண்டுதளத்தையும் பெரிதாகயெண்ணிவணங்கவா இப்பவுமெங்கள் குதிரையைவிட்டுச் சரணமடைந்தாயேயானல்தரணியில் வாழ்வாய் யில்லாவிடில் மரணமாவாயென்றார்கள்

அதுகேட்டு வல்லமைசாலியாகிய . . லியாசன்கொல்லுஞ்சிங்கம்போல் வில்லைவளைத்து தில்லியமானபாணங்களைதொடுத்து பிரயோகஞ்செய்யவே ராட்சதாள் தீட்சண்யமானமுப்பத்திரண்டாயுதங்களையும் திவ்வுதிவ்வென்று சொரியும்போது சல்லி

யாசன் சேனைகள்முனைந்து யுத்தம்பண்ணும்போது ராக்ஷதான்மிஞ்சி சல்லியன் சேனைகள்பேரில் விழுந்துபுலி ஆட்டை கவ்வுதற்போல் குறவளையைக் கடித்து உதிரத்தைக்குடித்து அவர்களை வாரிவாரி ஆகாயத்திலெறியும்போதுகாலபலமான சேனைகளெல்லாம் பின்னும்பின்னமாய் ராட்சதாள்முன்னின்று யுத்தம்பண்ணமாட்டாமல் ஓடத்தலைப்பட்டார்கள் அதுகண்டு சல்லியன்கோபங்கொண்டு அளவற்றபாணங்களைவிட்டு ராட்சதாளைக் கொல்லுகிறபோது குதிரையின்வந்த ராட்சதாளுக்கு சேனாதிபதியான நீலோட்சதன் வெகு துலவிலிருக்கிறவன்கண்டு அதிசீக்கிரமாகரதத்தைநடத்தி ராட்சதாளைப் பின்னுக்குத்தள்ளிக்கொண்டுதான்முன்னின்றுவரப்பட்ட அஸ்வங்களையெல்லாம் சித்ரவதைசெய்து பத்துதிவ்யாஸ்திரங்களைத்தொடுத்துப் பிரயோகம்பண்ணினான்.

அதற்கு சல்லியராசன்பதினைந்து திவ்யாஸ்திரங்களைத்தொடுத்து பிரயோகம் பண்ணினான். அதுவும் நாகசர்ப்பம்சீறிக்கொண்டுவந்துநீலோட்சதன்விட்ட பத்து திவ்யாஸ்திரங்களையு மறுத்துவிட்டு அவன் பிடித்திருந்தவில்லை யிருதுண்டாக்கி விட்டது விடவேநீலோட்சதன்பார்த்து மகாபலவானுயிருக்கிறான் இவனைநேரில் கொல்லவேணு மென்றெண்ணி ரதத்தைவிட்டு கிவ்வென்றுபாய்ந்து சல்லியன்கையிற்பிடித்திருந்த வில்லைப்பிடுங்கி ஒடித்தெறிந்தான் அதுகண்டுசல்லியன் கோபங்கொண்டு தன் வளாயுதத்தையுருவிநீலோட்சதனுடையசிரசையறவெட்டினான் அதனாலவன் ரதத்தைவிட்டுப் பூமியில்விழுந்து யமலோகம்போய்ச்சேர்ந்தான்.

அப்போது ஒரு ராட்சதன் குய்யோமுறையோவென்று புலம்பிக்கொண்டு சத்துருக்கன்தண்டுக்கு சேனாதிபதியான காலசித்தனிடஞ்சென்று சொல்லுகிறான் ஓ ஐயா காலசித்தனே கேளும் பத்மாவதிபட்டணத்தை பரிபாலனம் பண்ணப்பட்ட சந்தனமாராசன்நம்முடைய குதிரையைப்பிடித்துக் கட்டி அவனுடைய குமாரவர்க்கம் பிள்ளை பேரன்மார் யானைதேர்பரிசேனையுங்கொண்டுவந்து கோட்டைக்குவெளியிலே தண்டுவிட்டிருக்கிறான்

அதுகண்டுநாங்கள் குதிரையைத் தேடிக்கொண்டு அவ்விடம்போய்ப்பார்த்தோம் காணாமையால் திரும்புஞ்சமயத்தில் சந்தனமகாராசன் குமாரன் சல்லியனென்னப்பட்டவன் சேவகரைவிட்டு எங்களையழைப்பித்து அவஷணைகளாகப்பேசி எங்களுடன்யுத்தம்புரிந்து நீலோட்சதனையும் பதினாயிரம் ராட்சதாளையுங்கொன்றுவிட்டான் நான்மாத்திரம் தப்பித்துக்கொண்டோடி வந்தேனென்றான் அதுகேட்டு காலசித்தன் அந்ததூதுவனை சத்துருக்கராசனண்டைக்கழைத்துப்போய் நடந்த .சமாச்சாரங்களைச் சொன்னார்கள் சத்துருக்கனும் பத்மாவதிபட்டணத்துக்கு அதுவனை வழிகாட்டச்சொல்லி அவனை முன்னனுப்பி அவன்பின் தண்டுகளானது சண்டையெங்கேயென்று அண்டங்குலுங்க மண்டலங்கலங்கவந்து சேர்ந்தார்கள்

அதுகண்டு சேனாதிபதியான கேதாயுதன்னுடைய சேனைகளையெல்லாஞ் சத்துருக்கமகாராசன் பாளையங்களின்மேலேவித்தாலும் ரதத்தைநடத்தி வில்லையெடுத்து நாணிபிகிந்து சாங்கோபசாங்கமாய்பாணங்களைசரமாரியாய் பொழிந்துவிட்டான் அந்தப்பாணங்கள் வில்லில் விடுபட்டுகாலக்கோடிவிஷம்போற்சீறிக்கொண்டுவந்துவிழுகிறபோது சேனைகளானது கால்மாடுதலைமாடாய் கண்டதுண்டமாய் விழத்தலைப்பட்டது அக்காலையில் சத்துருக்கமகாராசன் சோமகாச மகாராசனைப் பார்த்து சொல்லுகிறார்.

ஓய் சோமகாசமகாராசனே? நாமின்னம் தண்டுதளங்களை விட்டிறங்கவுமில்லை இதற்கு முன்பாக நம்முடையசேனைகளை இப்படிவந்து கொல்லுகிறவனார் இந்தப்பட்டணத்தை பரிபாலனம் பண்ணப்பட்டராசனைநீரறிந்திருப்பீர் அவன்பலாபலங்களும் உமக்குத் தெரிந்திருக்கும் அதையெனக்கு விபரமாகத்தெரியச்சொல்லவேண்டுமெனவே சோமகாசமகாராசன்கூறுகிறான் ஐயா சத்துருக்கமகாராசனே இந்த பத்மாவதிபட்டணத்தையாளப்பட்ட சந்தனமகாராசனேமகா அரிபக்தசிரேஷ்டன்சாந்தகுணம் படைத்தவன் தருமதயாளன் கர்வித்தராசர்களுக்கு சிம்பத்தைப்போலொத்தவன் அவருடைய குமாரரோசல்லியன் சாத்மீகனென்று இரண்டுகுமாரருண்டு அவர்களோ ஸ்ரீமந்நாராயணரை யிடைவிடாமல் தியானம் பண்ணப்பட்டவர்கள் சாமர்த்தியத்திற்கு இந்த திரிலோகங்களும் இணையல்ல இவர்களுக்கிரண்டு பிள்ளைகளுண்டு அவர்களோ தந்தைபாட்டனைவிட மிகவும்விஷ்ணுபக்தியுடையவர்கள் நீதிமுறைமைபரித்தவர்கள் வீரதத்துவ மிருந்தவர்கள் அவர்கள்முன்னிற் காலனண்ட திருநேத்திரர் வந்தாலும் நல்லபூசை பண்ணுவார்கள் வரப்பிரசாதம் பெற்றவர்களென்றார் அதுகேட்டு சத்துருக்கமகாராசன் சோமகாசனைப்பார்த்து சொல்லுகிறார் அப்படிஅரிபக்தி சிரேஷ்டர்களாய்ச் சத்தியசந்தனாய் தருமகுணதயாளர்களாகயிருப்பார்களானால் நாம்விட்ட குதிரையை பிடித்துகட்டியும் நம்முடைய சேனையையும் அவர்கள் கொல்லுவார்களாவென்றார்.

அதற்கு சோமகாசராசன் கூறுகின்றார் நாம் விட்ட அஸ்வமானது அவர் பட்டணம்போனபடியினால் அஸ்வத்தை பிடித்துக்கட்டி யுத்தத்திற்கு வந்திருக்கிறார்கள் அவர் பட்டணம்போகாமல் நமது பட்டணத்திலிருந்ததேயானால் ஒருவரும்பிடிக்கமாட்டார்கள் எவ்வளவு சாத்மீககுணராஜானாலும் தன்னைத்தேடிவந்தசண்டையைவிடுவார்களோ அப்படிவிட்டுவிட்டால் ஆனையை பூனையடித்துவிட்டதோ ராஜாக்களாய் பிறந்தவர்களுக்கு துஷ்டநிக்கிரக சிஷ்டபரிபாலனம்பண்ணுவது இயல்பல்லவோவென்றான் சத்துருக்கர்மெய்தானென்று உள்ளத்திற்கருதிச்சொல்லுகிறார் ஆனால்சமாதானமாய் அவரையழைப்பித்து குதிரையை விடுவித்துக்கொள்ளலாமா இவ்விரண்டுவிதத்திலும் எது நலமாயிருக்கிறது சொல்லுமென்றார் அதற்கு சோமகாசராசன் யோசனைசெய்து சொல்வதற்குள்ளாகக் காலசித்தன் செப்பலுற்றான்

ஐயா சத்துருக்கராசரே நீர்நல்ல வசனஞ்சொன்னீர் நம்மைத்தேடி வணங்குபவரை நாமவணங்கினால்தேவர்களும் முனிவர்களும் ராசர்களும் ராட்சதசிரேஷ்டர்களும் நகையார்களா படைவந்தபோது நகைபுரியலாமோ அதுபோல்எவ்வளவு சாந்தகுணத்தைப்படைத்தவரானாலும் சத்திய வாசகரானாலும் நாம்விட்டகுதிரையை அவர் பிடித்துக்கட்டி நமது சேனையையுங்கொன்றதுமல்லாமல் நாம்தண்டு விட்டிறங்கு முன்னம் நம்முடைய சேனைகளின்பேரிற்கவிந்து அஸ்திரங்களைவிட்டு கொல்லுகிறதைப் பார்த்திருந்தும் நாம் சமாதானமாகலாகாது அதுசரியல்ல் அடியேனுக்குச்செலவுகொடுத்தால்நான்போயுத்தஞ்செய்து சகலரையுஞ்செயித்து சந்தனராசனையும் நன்றாய்ப் பூசைபண்ணி நம்மையவர் வணங்கும்படியாய்செய்து வருகிறேனென்றான் அதுகேட்டு சத்துருக்கராசன் முதற்சகலரும் கலக்கந்தீர்ந்து காலசித்தனுக்கு சத்துருக்கர் கூறுகிறார் வாராய் காலசித்தனே ஆக்கப்பொறுத்தவர் ஆறப்பொறுக்கவேணும் அதுபோலவருங்காலம் செலகாலம் நிகழ்காலமென்று மூன்று காலங்களுமறிந்து எதிரியினுடையபலாபலங்களும் வர்த்தமானங்களுந்தெரிந்து யுத்தஞ்செய்யவேண்டும்.

அப்படியுக்தா யுத்தங்களறிந்து யாதொருகாரியங்களும் நடத்திகொள்ளவேண்டுமேவலும் நம்மிலும் பெரியோர்களாயிருக்கப்பட்டவர்களிடத்திலும் ஆலோசனைசெய்தால்அதனாலொரு தப்பிதமுமில்லை இப்பவும்நீர்போய் சந்தனராசன் நம்மை வணங்கும்படியாய் செய்துக்கொண்டுவாரு மதுவுமன்றி யுத்தமாவதுபுரிந்து வெற்றியாவதுபெற்றுவாருமென்றுவிடைகொடுக்க காலசித்தன் ரதத்தை சேனைகளின்பேரில்நடத்தி வில்களைநாணேற்றிட்டுக்கொண்டு அவன்விடப்பட்டஸ்திரங்களையெல்லாங்கண்டித்து அவன் சாரதிகளையுந் துண்டித்து ரத்தமயமாக்கித் தேரிற்கட்டியசவசத்தையும்வெட்டி தன்னிறனதனாற்சேனாதிபதியானகெதாயுதன் கோபங்கொண்டு ரதத்திலேறி வில்லையெடுக்குமுன்னமே நான்கு பாணங்களைவிட்டு அந்த ரதத்தையும் பொடிசெய்தானதனாற் கெதாயுதன் சின்னப்பட்டு கோபதெண்டையெடுத்து கிறுகிறென்று சுழட்டிக்கொண்டோடிவந்துரதத்தைப்பார்த்து ஓடியானதுகொடுத்தான். அந்தடி ரதத்தின்பேரிற்படவேகமானதுடையாமற் பின்னுக்கு தள்ளிக்கொண்டுபோயிற்று அதனாற் கெதாயுதன் மறுபடியும் பின்னுக்குவாங்கி தெண்டாயுதத்தைசுழற்றி ரதத்தின்மேலிருக்கும் சாரதியைப்பார்த்து விசைகொண்டடித்தான் அடிக்கவே சாரதிதலையுடைந்து பூமியில்விழுந்திறந்தான். இறக்கவே காலசித்தன்வில்லைரதத்தின்பேரில வைத்துவிட்டு வச்சிரகோப தெண்டாயுதத்தையெடுத்து நிலத்திற்குதித்து கறகறவென்றுசுழற்றி கெதாயுதன் சிரசைப்பார்த்தோங்கியடித்தான். அந்தடியைதண்டாயுதத்தினால் தட்டிவிட்டு காலசித்தன் புஜத்தைப்பார்த்து இரண்டடிவிட்டானதனாலவன் கையசைந்து காலோய்ந்து மூர்ச்சைபந்தித்து சுவாசத்தைக்கட்டிதன்னுடைய ஆங்காரபலங்கொண்டுவச்சிரகோப தண்டாயுதத்தைசுழற்றி கதாயுதன் மார்பிற்றாக்கினானதனையுமவன் தடாய்த்துக்கொண்டு தன்னுடைய தண்டாயுதத்தினாற் காலசித்தனைப்பார்த்து மூர்ச்சைபிடித்து மூன்றடி கொடுத்தான்

அந்த அடியினாற் சிரசிலிருந்து உதிரவெள்ளம்பெருகியது அதுகண்டுகாலசித்தன் எதடாமானிடன்மகா பலவானாயிருக்கிறான் நம்மை களைக்கவண்ணி அடிக்கிறான் நமது பலமென்னநாம்பெற்றவரமென்ன நமதுபிதாபசவுரியமுள்ள ஒருமானிடன் நம்மையிவ்வளவுகஸ்திபடுத்தினானல்லவா, காட்டில் வாழும்புலியைநாட்டில்வாழும் ஆடெதிர்ந்ததுபோலும் தாஷ்டீகவீரனை சாரமற்ற மூப்பனெதிர்த்ததுபோலுமாயிற்றல்லவா, நாமிதுவரையில் ஒருவருக்கும் புறமுதுகுகாட்டினதில்லை. இன்றிவனால்நமக்கு அபஜெயம் வரும்போலிருக்கிறது. நாம் சொல்லிவந்த சபதங்களெல்லாம் வீணாதுபோற்றேனாது இவனுடைய பலாபலமென்ன இவனென்ன அனுவுக்குச் சமதையானவன் ஒட்டைசாணில்லை ஆகையாலிவனுடைய தண்டாயுதத்தை முன்னே பிளக்க

வேணுமென்று மனதிலெண்ணி வச்ரகோபதெண்டாயுதத்தை சுழற்றி கதாயுதனைப்பார்த்து விட்டுவிட்டானதுகதாயுதன் பிடித்திருந்த கோபதண்டாயுதத்தை பொடியாக்கி கதாயுதனையும் யமலோகம்விட்டுவோவென்றனுப்பிவிட்டது அதனை சல்லியராசன் குமாரன் சவுபாலன் கேள்விப்பட்டு காலசித்தன் முன்னுக்கு ரதத்தைநடத்தி அடா காலசித்தா சிலப்சிலமினறிவாளுந்தலையுந்தின்ற காலம்போக்கு கருடனுமிய முடடா எங்கள் பட்டணத்திற்கு குதிரையைவிட்டுமீட்டுக்கொள்ளலாமென்று மனப்பாற்குடிக்கிறுயா யல்லவா எங்களுக்கு பிஞ்ஞினவர்களில்லையென்று பழிக்கிறுயல்லவா வச்ரகோப தண்டாயுதமொன்றுண்டென்றாடிக்கிறுயல்லவா என்கையினுலிறந்தால் ராமனெழுப்பிக் கொளவாரென்றுமலைக்கிறுயல்லவா, ராட்சதான் முன் ராசாக்கள் இலையல்லவென்று குலைக்கிறுய் இதெல்லாம் நினைவல்ல இதோ நீ திக்குமுக்காடி செக்கினிற்பட்ட எள்ளுபோலாடி நீவாடியோடி மபாகும்படியான வழி தேடிக்கொள்ளென்று வில்லைநிறுத்தி ஒரு அக்கினியாஸ்திரமெடுத்து அபிமந்திரித்துப் பிரயோகஞ்செய்தான்.

அதுவந்து திருதியென்றெரிந்துகொண்டு வருகையில்காலசித்தனுனவன்கண்டு ஒருவருணாஸ்திரத்தையெடுத்துவிடுத்து அக்னியாஸ்திரத்தை அணைத்துப்போட்டான் அதுபோகவே பின்னுஞ்சவுபலனுனவன் காலசித்தன் முகத்திற்குநேராக வில்லைப்பிடித்தனேக திவ்யாஸ்திரங்களைப் பூட்டி சரம்பொழிகிறபோது காலசித்தனும் அளவற்ற அஸ்திரங்களை விட்டுறத்துவிட்டுநாலு அர்த்தசந்திராஸ்திரம்விட்டானதுகள்புறப்பட்டுசவுபலனேறிவந்த ரதத்தையுடைத்து சாரதி குதிரைகளைக்கொன்று கையிற்பிடித்திருந்த வில்லையுமொடிந்தெரிந்து சவுபாலன் மார்பிற்பட்டு முதுகிலுருவிப்போய்விட்டது அதனுற் சவுபாலனை மரணமூர்ச்சையானுன்.

இரண்டாநாள் யுத்தம்.

அதுகண்டு சவுந்தரராசன் தமைய னிறந்தானென்றுகேள்வியுற்றுமகாகோபமாகிமறுநாள் ரதத்தைகாலசித்தன்முன்னுக்குசெலுத்திவில்லில் அநேகபாணங்களை சந்திதது பிரயோகம்பண்ணினுனது காசர்ப்பயபோற் சீறிக்கொண்டு வருவதைக் காலசித்தன்கண்டு திவ்யாஸ்திரங்கள் விட்டறுத்து பின்னுங்காலசித்தனுனவன் இருபதுநாருசபாணங்களை தொடுத்துபிரயோகம்பண்ணவே அந்தநாருசபாணங்கள் காலகோடி விஷம்போற் சீறிக்கொண்டு சவுந்தராசன் சரீரத்தைச் சல்லடைக்கண்களாக துளைத்துவிட்டது அதனுல் அவன மெத்தவபாயமுற்று மறுபடியு மனதைத் திடப்படுத்திக் கொண்டு நாரு திவவியாஸ்திறங்களெடுத்து ஒன்றின்மேலொன்றுயெய்கிறபோது காலசித்தனகண்டுகடுஞ்சினங்கொண்டுதானும் நூறுதிவ்வியாஸ்திறங்களை விட்டறுத்துச் சடுதியிலதனமாக நாருசபாணங்களை சவுந்தருசன் மார்பைப்பார்த்து விடுத்தான் அதுவந்து மார்பிற்றுக்கி மார்பிற்றளைப்பட்டு ஸ்ரீமங்காருபணுநாருபணுவென்று ரதத்தின்பேரிற் சாய்ந்து மூர்ச்சையடைந்தான்.

அவ்வார்த்தையைக்கேட்ட லவனானவன் கலகலவென்றுநகைத்துச் சொல்லுகிறான் அடாராட்சதர்களேகேளுங்கள் நீங்கள்உயிரோடுதப்பிப்பிள்ளைமுகம்பார்க்கிறபோனால்ஓடிப்பிழையுங்கள் இல்லையென்றாலென்கிட்டநெருங்குவீர்களேயானால்ஒரேபாணத்தினால் உங்களனைவரையும் எமலோகஞ்சேர்த்திடுவேன் சிறுபிள்ளையென்றெண்ணாதீர்கள் புலியைநாய்வந்துஎற்றியதுபோல்என்னைவந்துசுற்றிக்கொண்டீர்கள்ஓடிப்போங்களென்றுகூற ராக்ஷதாள்சொல்லுகிறார்கள் அடாலவனே நாங்களோடிப்போகிறோம் சற்றுநேரம்நீயோடாமல் நில்லென்று கிட்டநெருங்கினார்கள் அக்காலையில் லவனானவன் ஏதடாராட்சதாள்மிதமிஞ்சி கிட்டநெருங்கி வருகிறார்களென்று ஆக்கிரமிக்குரோதனாகவில்லைவளைத்துபாணங்களைப்பூட்டி நான்குமூலையுந்திரும்பித்திரும்பி ஒப்வொழிச்சலில்லாமல்உகாந்தகாலத்தில்சப்தமேகமும் ஒன்றாய்க்கூடி இடிமின்னல்குமுறலுடனே மழைவருஷித்தால் எவ்வாறோ அவ்வாறுசரவருஷங்களை மிதமில்லாமல் சக்கராகாரமாய்த் திரும்பித்திரும்பிச்சுழன்றுமூச்சுவிடாமற்சாடும்போது ராட்சதர்கள் எப்படிவிழுகிறார்களென்றால்யானைக்குபாணம்௫-சவுடாலுக்குப்பாணம் ௪-குதிரைக்குப்பாணம் ௮-ராவுத்தனுக்குப்பாணம் ௨-காலாள்களுக்குப்பாணம் ௨-இந்தப்படியாயஸ்திரங்களைவிட்டு யானைதேர்பரிசேனைகள்தன்முனைநிற்கவொட்டாமல் ஜாடுகிறபோது நெருங்கிவந்த ராக்ஷதாளெல்லாம் மாண்டுபோனார்கள்.

அதனைக்கண்ட மகாமாயன் ஏதடா சிறுபிள்ளையென்றுபார்த்தால்நம்முடையபக்ஷதவமிசத்திற்கெல்லாம் எமனைப்போற்காண்கின்றது இவனுக்குரதமில்லைசேனைகளுமில்லையானைகளுமில்லை இவனுடையவீரத்தை என்னசொல்வோம் இருபதுவெள்ளம்ராக்ஷகாளும்மாண்டுபோவதுபோற்காணுகிறது இனிநாம்சும்மாயிருக்கப்போகாதென்று மனதிலெண்ணிஇறந்தவர்போகமீதியிருந்தபதினைந்துவெள்ளம்ராக்ஷதாளைப்பார்த்துமகாமாயன்சொல்லுகிறான் அடாராக்ஷதர்களே இனிசிறுபிள்ளையென்றுபாராதீர்கள உங்களுக்கு ரோஷமில்லையோ முகத்திலிருக்கிறது மீசையோ நீங்கள் கையிற்பிடித்தது வில்லோ உங்கள்சவுரியசாமார்த்தியங்கள் எங்கேபோயிற்று உங்களைக்கொண்டுபோகிற இயமன்வந்தாலும்அவனையும் வெல்லத் தக்கின சாமார்த்தியங்களுமுண்டோ அந்தச் சாமார்த்தியங்களையெல்லாம் சிறுபிள்ளையாகியலவனுக்கு முன்பாழாக்கிவெண்டுகளாகிப்போனீர்களோ உங்களுக்குச்சற்றாகிலும் ஈனமில்லையோ உங்கள் சவுரியத்தைச் சிறுபிள்ளையானலவன் முன்னுக்குகாண்பிக்கலாகாதோ உங்களைசத்துருக்கர்கிடாவைப்போல் வளர்த்துப் பிடாரியானலவன் பாணத்திற்குகாவுகொடுக்கவைத்திருந்தேன் அடாராட்சதாளே இந்தலவனாலே நீங்கள் இறந்தாற்சத்துருக்கமகாராசனெழுப்பிவிடுவார் நீங்கள்பின்னுக்கிடையவேண்டாம்முனைந்து லவனைகைப்பிடியாகப்பிடியுங்கள் ஜாலஞ்செய்யாதீர்களென்றான் அதுகேட்டுலவனானவன்கூறுகிறான் அடாராட்சதர்களேஉங்களுக்கு சாமார்த்யமுண்டானால் எமதாகிட்டவாருங்கள்பார்ப்போமென்றான் அதுகேட்டுமகாமாயன் சொல்லுகிறான் அடாராட்சதாளே லவனுக்கென்னபுத்திசொன்னபோதிலும்லவன்கேட்கிறவனாககாணவில்லை அவன்பேசப்பட்டவிசேஷங்களைப்பார்த்தால்நமக்கு அவமரியாதை வருகிறதுபோற் காண்கின்றது அப்படிவராதபடி நடந்துக்கொள்ளவேண்டும் இப்போதிந்தலவனைக்கைப்பிடியாகப்பிடியுங்களினி வனைக் கொஞ்சத்தில் விடப்போகாது அத்துமீறிப்பிடியுங்களென்றான் மகாமாயனானவனதுகேட்டுலவனசொல்லுகிறான் அடாராட்சதாகளேஞானென்ன உங்கள்மனதிலெண்ணித்துள்ளாதீர்கள் என்னைபா

ணத்திற் கிரையாகவந்தீர்கள் சொன்னேன் சொன்னேன்கேட்டநெருங்கிவாராதீர்கள் தலைவிற்றானேயின்றுபோகங்களடா ராட்சதாளேயென்றான்.

அதுகண்டுராக்ஷதாள நடுக்கங்கொண்டு வில்லிற் பாணங்களைப்பூட்டிலவனை பொறுபொறென்றுகிட்டநெருங்கிவிட்டார்கள் அதனாலவனானவன் கோபங்கொண்டுவில்லையெடுத்துநிறுத்தி அநேகபாணங்களைவில்லிற்சந்தித்துப் பிரயோகம்பண்ணிவிட்டான் அந்தஅஸ்திரங்கள் நாகசர்ப்பம்போற்சீறிக்கொண்டு ராட்சதர்களுடையசிரங்களையும்வில்லிற்பிடித்தகாங்களையும்கவசமணிந்தஉடங்களையும்அறுத்துத்தள்ளவேராட்சதாளெல்லோரும்பயந்து ஆறிலுஞ்சாவு நூறிலுஞ்சாவென்றுமனந்துணிந்து அங்கப்பதினைந்துவெள்ளம்ராக்ஷதர்களும் அஸ்திரங்களைலவன்பேரில்விட்டார்கள அதற்குலவனானவன்சற்றுமசையாமல விசைகொண்டு அநேகபாணங்களை வில்லிற்சந்தித்துப் பதினைந்துவெள்ளம் இராக்ஷதாள் விடப்பட்ட அஸ்திரங்களைக்கண்டித்தான். அதனால்இருக்ஷதாள கோபங்கொண்டு யானை தேர் பரிசேனைகளோடுமுனைந்துவில்லையெடுத்துநிறுத்தி கலகூர்மையோடுகூடியிராநின்ற அஸ்திரங்களைவில்லிற்சந்தித்துச்சொல்லுகிறார்கள் அடாலவனே உன்னைப்பார்த்தால் ஸ்ரீராமரைப்போலிருக்கின்றதென்று உன்பேரிற்பாணங்களைவிடாமற்சும்மாயிருந்தோம் நீசெய்தபிழையெல்லாம் மனம்பொறுத்தோம்எங்கள்முன்னுக்கு அரிஅரப்பிரமாதிகளும்எதிர்நிற்கமாட்டார்கள் நீயும்உன்வில்லும் உன்னுடைய பாணமும் எங்களுக்கொருதுரும்பாகும் உன்னைப்பாராவிட்டாலும் எங்களுக்கு ராசாவாகிய ஸ்ரீராமபிரமத்தைப் பார்க்கவேண்டாமோ ஆகையால்என்சொல்லைக்கடவாமல் எங்கள்ராசாவாகிய சத்துருக்ன மகாராசரிடத்திலவகதாலுஞ்சரி அல்லது எங்கள்குதிரையை எங்கள்பின் னனுப்பினாலுஞ்சரி நாங்கள்போகிறோமென்றுசொல்ல, அதுகேட்டு லவனானவன், கூறுகிறான் அடா ராட்சதர்களே நல்லவசனஞ் சொன்னீர்கள் நீங்கள்தானே எமனுக்குஎமனாயிருக்கப்பட்டவர்கள் உங்கள்முன்னுக்கு அரிஅரப்பிரமாதிகளும் நிற்கமாட்டார்களோ ராமனசொத்தைதின்றுப்புச்சாப்பிட்டு நீங்கள ராமனுக்குப் பகையாளிகள் வந்தால் அவர்களுக்குப் பிரியவசனஞ்சொல்லிப் பிழைப்பாருமுண்டோ உண்டவன்வீட்டுக்கு இரண்டகஞ் செய்யப்பட்ட பேர்கள் நீங்கள்தானே அடாராக்ஷதர்களே யுத்தம்வந்து நேர்ந்தபோது தகப்பனென்றும் பிள்ளையென்றும் பேரனென்றும் மாமனென்றும் மைத்துனனென்றும் ரணக்களத்தில் உறவுகொண்டவருமுண்டோ ராமருடைய உப்பைத்தின்று அவருக்கே இரண்டகஞ் செய்யலாமோவென்று பிணங்கள்போலிருபக்கத்திலும் குவிக்கத்தலைப்பட்டான்

அதுகண்டுராக்ஷதாள் இனிலவனைவிடப்போகாதென்று கோபங்கொண்டு யானைக்காரர்இரதக்காரரும்லவன்பேரில்பிரயோகம்பண்ணினார்கள் அந்தப் பாணங்களும நாகசர்ப்பம்போற்சீறிக்கொண்டு வருகிறபோதுலவனானவன் கண்டு அநேகஅஸ்திரங்களையறுத்துப்போட்டு கடுதியில்அஸ்திரங்களை அவர்கள்மேல்விடுத்துக்கொல்லுகிறபோது ராக்ஷதாள்முன்னுக்கு வைத்தகாலைப் பின்னுக்குவாங்கி இடைந்து நான்குமூலையுஞ் சிதறியோடத் தலைப்பட்டார்கள்.

அதுகண்டுமகாமாயன்கோபமாகி ராக்ஷதாளைப் பார்த்துக் கடுகடுத்துச்சொல்லுகிறான் அடாராக்ஷதர்களேஎன்னமுழுகிப்போயிற்றென்று ஓடுகிறீர்கள் நீங்கள் சேவகரேஓடினால் ராமத்துரோகமல்லவோ ஓடாதீர்கள் உங்களாலே தேவர்கள்நகைக்க உடம்பெடுத்தேன் இந்தச்சிறுபிள்ளைலவனைப்பிடிக்கஉங்களாலாகாதோவென்றான் அதுகேட்டுராக்ஷதாளிருவரும் ஏகமாய்க்கூடிவில்லுகளைவளைத்து அநேகபாணங்களைவில்லிற்சந்தித்து லவன்பேரிற் பிரயோகம் பண்ணினார்கள் அதுகண்டுலவனானவன்ராக்ஷதாளைப்பார்த்து நகைத்து அடாராக்ஷதர்களே நீங்கள்தானேஅரியாப்பிரமாதிகளைச்செயித்தவர்கள் அந்தச் சாமார்த்தியமெல்லாம் என்முன் காட்டலாகாதோஉங்களுடையசாமார்த்தியங்களை நீங்கள் தானேமெச்சவேணுமென்று சரங்களை அபரிமிதமாகவாரிவாரிச் சொரிந்துக்கொண்டு பின்னுஞ்சொல்லுகிறான் என்னைக்கைப்பிடியாகப்பிடிக்கத் திரிமூர்த்திகளுக்கும்வல்லமையில்லாதிருக்கஉங்களாலாகாதென்றுஓடியொளிக்கும்படியாய்ச் சாடிக்கொண்டிருந்தான்.



லவனுக்கும் மகாமாயனுக்கும் யுத்தம்.

விருத்தம்

நீலனங்கு நிலமிசைசார்ந்தபின்
கோலமாமகா மாயன்குறிகிடச்
சீலமுள்ள லவன்மிகச்சீறிவெங்
காரைப்போ லெதிர்த்தனர்காண்மினே.

வசனம்

அப்போது மகாமாயன் அதிககோபமாகிதன்
னுடைய அகோரதந்தங்கள் சொலிக்க மீசைபடப
டவென் றுதுடிக்கபற்களை நெறநெறவென் றுகடித்து
இரண்டுகண்களுஞ்செவ்வானம்போற்சிவக்கவுருட்
டிமுழித்து இனியிவர்களாற்சாரமில்லை தாமேநேரி
ற்சென் றுபோர்செய்யவேண்டுமென் று சாரதியைஎ
ச்சரித்துதேரைசெலுத்தச்சொல்லிபரெல்லாம்நடு
ங்கத்தக்கதாய் தன்வில்லைவளைத்துஐம்பதுநாராசங்
களையெடுத்து தனுசிற்றொடுத்து பிரயோகம்பண்ண
வேலவனனவன்கண்டு சினங்கொண்டு கதித்து புலி
போற்குதித்து௨௫-நாருசபாணங்களையெடுத்துவில்
லிற்றொடுத்துவிடுத்து மகாமாயன்விட்ட௫௦-நாருச
பாணத்தையுமறுத்து அவனுடைய மார்பிலும்பட்
டுமுதுகிலுருவிப்போகச்செய்தான் அதனால்மகாமா
யன் உகாந்தகாலத்திடிபோற்கனைத்து அனேகயஸ்
திரங்களைச்சந்தித்துமாரிபொழிவதுபோற் சரமாரி
யாகப்பொழியும்போது லவனுமிவனுக்கு சளையாம
ற்களையாமற்சுருக்கில் நொறுக்கத்தக்க சுருக்கான
வெகுபாணத்தைப்பொறுக்கியெடுத்துவிடுத் மகா
மாயன் பாணங்களையுராட்சதாள் விடப்பட்டயஸ்
திரங்களையு மறுத்துதள்ளி அதிகமாக சிலபாணங்
களைவிட்டு அவர்கள்முடியுங் கொடைச்சீலையு மறு
த்துத்தள்ளினன் அதைப்பார்த்து மகாமாயன்எத
டாநாம்விட்டயஸ்திரங்களையுமறுத்து ராட்சதாளை
யும் நாடவொட்டாமற் கருவறுத்துவருகிறான் இவ
னுடைய சாமார்த்தியந்தானென்ன இவன் கரவேக
ந்தானென்ன இவனுக்கோரதமில்லை நமக்கோரதமி
ருக்கிறதுமேலும் யானைசேனை குதிரைகளில்லாமல்
யுத்தம்பண்ணுகிறான் ரணக்களத்தையெல்லாம்வெ
ருங்களமாகத்துடைத்துவிடுகிறான் நாமெப்படிசத்
துருக்கரிடஞ்சென் று அவர்முகத்தில்முழிக்கப்போ
கிறோம்நாமவருகிறபோது யானைதேர்பரிசேனைகள
ன்னடமாரபேரிகை வாத்தியங்களென்னஎலலாமிங்
தலவனுக்கு ஒப்புவித்துநாமிப்போது ஒண்டியானே
ம்சமுத்திரமெல்லாம்தாண்டி ஒருசிறியகால்வாயில்
வந்தகப்பட்டுக் கொண்டோம் இந்தலவனோ நமது
கையில யகப்படுகிறவனாக காணப்படவில்லை இதற்
கென்னசெய்வோமென்றோசனைசெய்துக் கொண்டி
ருக்கையில் லவனனவன்சொல்லுகிறான் ஓராட்சத
னேநீஎவ்வளவு யோசனைசெய்கிறாய் உன்னைப்போ
லொத்த ராக்ஷதாள்கோடிபேர் வந்தாலும்என்னை இ
ந்தவிடம்விட்டு பேருதலை பண்ணாதே முண்டோ சம்
மாயோசனைபண்ணாமல் உன்னிருப்பிடம் போய்சே
ரும் இல்லையென்றால் என்னுடன்போர்புரிந்து என்
னைசெயித்து உன்னிஷ்டமானயிடத்திற் கொண்டு
போவென் றுகூரவே மகாமாயன்சொல்லுகிறான் அ
டாலவனே நீகையிலாதசிலரைக்கொன்றோமென று
கெர்வித்திருக்கிறாய்விசேஷங்களைமிஞ்சிவரவொட்
ட.தேயானைவாயின் கரும்புபோல் எங்கள் சேனை
யின்வாய்க்கு.நீயோசிறியதுரும்பு ஆகிலும் ஸ்ரீராம
ரைப்போல வடிவுந்தேஜசும் அலங்காரமும் பொரு
ந்தியிருக்கிறபடியால் உனனுடன் யுத்தம்பண்ணுகி
றதற்குமனதுவரவில்லை உன்தாய்தந்தை பேரையும்
உன்குலங்கோத்திரத்தையுஞ்சொன்னால் அப்பாலு
ன்னுடன் யுத்தம்பண்ணுகிறேன் சொல்லென்றான்
அதுகேட்டு லவன்சொலலுகிறான் எனதாய்தகப்ப
னபேரைக்கூறினால யுத்தம்புரிவேனென்ற மெத்த
தைரியமாக சித்தங்களித்துரைத்ததினால சொலலு
கிறேன்கேள் எனதாய்பேர் ஜானகியம்மாள் எங்க
ளையர்பேர் வால்மீகர் எனபேர் லவன என்தமைய
னபேர் குசலன எங்கள் குலமெனக்குத்தெரியவரா
துநாங்கள் வால்மீகருடைய சிஷப்பிள்ளைகளென்
றான். அதுகேட்டு மகாமாயன்யோசனைசெய்துகூறு
கிறான அடாதம்பி லவனேகேளும் நீஜானகியம்மனு
டையபிள்ளையெனறலலவோ சொல்லுகிறாய் ஆனப
டியினால தர்மமாகவுனக்கு சொல்லுகிறேன் என்ன
வெனறால பிடித்துக்கட்டினகுதிரையை எனகையி
லொப்பித்துதாயுடனபிள்ளையாகப்போய்ச்சேர்எங்
களுடன்உனக்கென்னபோராட்டமிருக்கின்றதுஎங்
களைநீயறியாயோ உன்னைநாங்களறிவோம் உனக்கு
ம்மெஙகளுக்கும் த்வேஷம் ஆயாசமும் என்வரவே
ணும் அப்படிவாராதபடிக்கு நடந்துக்கொள்ளென்
றுசெப்ப அதை லவனனவனகேட்டு புன்னகைபுரி
ந்து புகலுகிறான் ஓராட்சதாளேஉங்கள்குதிரையை
உங்களூரில் நான்வந்து அக்கிரமமாய்பிடிக்கவில
லைஎங்கள்வனத்திற்கு உங்கள்குதிரைவந்தபடியினா
ல்நானபிடித்துக் கட்டினேன் என்கையிலகப்பட்ட
குதிரையைவிடுவிக்க அண்டாண்டவகண்ட சராச
ரங்களிலுள்ளஅரசர்களானாலும்உன்னைப்போலொ
த்தசவுரியபராக்ரமும் மகாசாமர்த்திய ராட்சதர்க
ளாலும் திரிமூர்த்திகளாலும் விடுவிக்கக்கூடாதந்
ந்தக்குதிரையின் ரணரங்கனான் சத்துருக்கள்வரு

கிறான் அந்தசத்துருக்கனுடைய சாமார்த்தியமும் அரைட்சணநேரத்திலறிகிறேன் நீயேனுமென்றால் உன்னுயிரை தப்பித்துக்கொண்டோடிப்பிழைஇனி யென்கையிலகப்பட்ட குதிரையை சொப்பனத்திலும்விடுவேனென்றெண்ணாதே உனக்குசாமர்த்தியமுண்டானால என்னைவென்று குதிரையை விடுவித்துக்கொண்டுபோ இல்லையானால வந்தவழிபார்த்துக்கொண்டுபோவென்றான் அதுகேட்டமகாமாயன் இதென்னவிபரீதகால மாயிருக்கின்றது ஒருசிறுபிள்ளையானவன் இருபது வெள்ளஞ் சேனைகளையுங்கொன்று நமக்குபடங்கி உத்தாவுகொடாமலசத்துருக்கனுடைய சாமார்த்தியத்தையும்அவர்படைத்தபடையினது சவுரியத்தையும் அறிகிறேனென்றான் இதுமகாபெரிய சங்கடத்திற்கிடந் தருவதுபோல் தோற்றுகின்றது இதெப்படிமுடியுமோதெரியவராதுநாம் தப்பிப்பிழைப்போ மென்றாலும் ராமத்துரோகம்வந்தணுக்கும் இதற்கு என்னசெய்வோமென்று கார்யாணுபயிர்போலும் வாலிவழியைத்தேடி. மயங்கி மகாமாயன் மறுபடியு மனதை திடப்படுத்திலவனைப்பார்த்துச் சொல்லுகிறான்.

அப்பாலவனேநானுனக்கு எத்தனைவிதபுத்திகள் சொன்னாலும் ஆற்றிற்கரைத்தபுளிபோல அவலமாக்கிவிட்டாய் யாகையால்உன்னைக்கொன்றுதுக்கோஷமில்லையேதாஎன்னுடைய அஸ்திரங்களினால்உன்னைகண்டதுண்டம்பண்ணுகிறேன் பாரடாவென்று விலலையெடுத்தநிறுத்தி அதிதீட்சண்யமாகவிருக்கப்பட்ட பத்துதிவ்வியாஸ்திரங்களைஎடுத்து மந்திரபூதிகொடுத்தலவனுடையமார்புக்குந்தோளுக்கு புயத்திற்கும் அவன்பிடித்தவில்லிற்குலக்குபார்த்துவிட்டுவிட்டான் அப்பத்துதிவ்வியாஸ்திரங்களும் ஒன்றோடொன்றாய்ந்து அக்கினிப்பொறிகள் சிதறும்படியாய்வருங்காலத்தில் லவனானவன்பார்த்து தானும்பத்துதிவ்வியாஸ்திரங்களையெடுத்து பூசைபுரிந்து ஓசைப்பொருந்திய வில்லிற்சந்தித்துவிட்டான் அப்போதந்தபத்துதிவ்யாஸ்திரங்களையுங்கஸ்திப்படுத்தி அவன்மார்பிலணிந்த கவசங்களையும பொடியாக்கிவிட்டுப்போயிற்று யதனாலந்த மகாமாயன் அதிககோபமாகி ௫௦-அர்த்தசந்திராஸ்திரங்களை தனுசிற்றொடுத்துவிட்டான இவ்விருவர் யர்த்த சந்திராஸ்திரங்களும்ஒன்றோடொன்றெதிர்த்து லவனுடைய அர்த்தசந்திராஸ்திரங்களறுத்துத்தள்ளி மகாமாயனுடையரதம்சாரதி குதிரைகளையுந மாக்கிவிடவே மகாமாயன்சிந்தைதளர்ந்து மறுதேரின்மேலேறிவில்லையெடுத்து நாணிபூட்டு ஓக்கினி யாஸ்திரத்தையெடுத்துபூசைசெய்வேத்தியம்புரிந்து இதனால்வெற்றியடையலாமென்ற ஆசைபோடெய்தான் அதுவும் வடவ முகாக்கினியை யிறைத்துக்கொண்டு சடசடவென்கிறதொனிகளுடன் ஆலகாலவிஷம்போற்சீறிக்கொண்டு யதிகவேகத்துடன் வருவதைலவனானவன் உற்றுநோக்கி சற்றும்பயமில்லாமல் அதிசீக்கிரமாகதன்வில்லில ஒருவருணாஸ்திரத்தைசந்தித்து பூசைகள் செய்துவிட்டான் யந்தவருணாஸ்திரம்விலகிவிட்டபட்டு சப்தமேகங்களும் ஒன்றாய்க்கூடிஇடிமின்னல் குமுறலுடனே குடங்கொண்டு சொரிந்தாற்போல் ஓயவொழிச்சலிலலாமல் அக்கினியாஸ்திரத்தின்பேரில மூச்சுவிடாமற்சொரிகிறபோது அக்கினியாஸ்திரமானது நீருயுருகிப்போயிற்று அதைகண்டு மகாமாயன்கோபாவேசமாகி ஒருபர்வதாஸ்திரத்தையெடுத்து தனுசிற்றொடுத்து நாபங்கொடுத்துவிடவே அப்பர்வதாஸ்திரமானது யனேகபர்வதங்களாக உருவுகொண்டு மகாதுரிதமாக வருகிறதைலவனானவன்கண்டு கோபங்கொண்டு இவனுடன்இவ்வளவுநேரம் போருட்டமாவென்று சிந்தித்து வச்சிராயுத ஒன்றெடுத்து பூசைசைவேத்தியங்கொடுத்து தன்பேரில்வருகிற பர்வதாஸ்திரங்களின்பேரிலவிடவே அந்தவச்சிராயுதமானது அநேகவச்சிராயுதங்களாய் ரூபமுண்டாகிவருகிறபர்வதாஸ்திரங்களையெல்லாம் அறுத்துத்தள்ளி வச்சிராயுதமானதுகபாலென்று மகாமாயன் மார்பை பத்தலாகக் கிழித்தெறிந்து விட்டுப்போயிற்று அதனால மகாமாயன் ராமாராமா வென்று வாய்விட்டலறி பிராணனை விட்டுவிட்டான்.

அதைக்கண்டுலவன் சந்தோஷமுற்று வில்நாணியைத்தளர்த்தி காத்திற்பிடித்துக் கொண்டு செடிமறைவாசற்றுநேரமிளப்பாறிதடாகத்தில்ஸ்நானஞ்செய்து பூசைகள்முடித்துக்கொண்டு கரையிலவந்து காமதேனுவைநினைக்க காமதேனுவானது லவனிருக்குமிடத்திலவந்துலவனுடைய பசியையாற்றி தெய்வலோகம்போய்ச்சேர்ந்தது பின்பு லவனானவன் தாம்பூலந்தரித்து செடிமறைவில்வந்துட்கார்ந்தின னஞ்சேனைகளுண்டோவில்லைபோ எல்லாஞ்சற்றுநேரமிருந்திருந்து பார்ப்போமென்று மனதிற்கருதி மண்ணைக்குவித்து தலபணையாகவைத்து ஸ்ரீமந்நாராயணனைப்போல பள்ளுக்கொண்டிருந்தா னெப்படியிருக்க அந்தரணக்களத்தில உதிரவெள்ளமானது ஒருபனைமாமுயரம்ஓடப்பட்டது அதில்யிரண்டோட்சதாளுயிரை தப்பித்துக்கொண்டுசிரமேற்காங்குவித்ததுப்யோமுறையோவென் றுகூவியழுது கொண்டுஜூரயமார்க்கமாயெழும்பி சத்துருக்கராசனிடம் வந்து சாஷ்டாங்கமாக வணங்கி சொலலுகிறார்கள்.

ஐயா சத்துருக்கமகாராசனே கேளுஞ்சிறுபிள்ளை லவனென்றல்லவோ சொன்னீர்களந்தச்சிறுபிள்ளைக்குயார்தானீடென்று சொல்லுவோம் மகாமாயனையு மிருபதுவெள்ளம்ராட்சதாளையும் எமலோகத்திற்கு வழிகாட்டிவிட்டு இன்னஞ்சேனைகளுண்டோவென்று வழிபார்த்துக்கொண்டிருக்கிறான் இருக்கப்பட்டசேனைகளெல்லாம் ஒருமிக்கச்சென்றாலும் ஒரேபாணத்திற்கொன்றுபோடுவன் தேவரீர்கூடசிகரல்லவென்றுகூறினார்கள் அதனையுந்நக்கேட்ட சத்துருக்காரசன் மெத்தவுந்துக்கசாகரத்திலாழ்ந்து சொல்லுகிறார் ஐயோசிறுபிள்ளைபாவமென்ன இருபதுவெள்ளமிராட்சதாளையும் ராட்சதசிரேஷ்டர்களையும் மகாமாயனையுங் கொன்றுவிடுவதென்ன நீங்கள்நித்திரையிலிருந்துசொற்பனங்கண்டு திடுக்கிட்டோடி வந்தவர்களாகவேண்டும் ராட்சதாளென்ன அற்பசொற்பர்களோ ராட்சதசிரேஷ்டர்கள்லேசானவர்களா மகாவரப்பிரசாதிகள புஜபல பராக்கிரமமுள்ளவர்கள் இந்தசிறுவனால் இறந்தார்களென்றால் இனிஎன்னபல மிருக்கின்றது நமது தண்டிற்சிறுபிள்ளைலவனைப் பிடிக்கத்தக்கவர்கள் ஒருவருமில்லையோவென்றார் அதற்கு ராசர்களும் ஒன்றுஞ் சொல்லாமல் மௌனமாயிருந்தார்கள்.

அந்தச்சமயத்திற் சுமதமகாராஜன்சுருக்கிலெழுந்திருந்து சத்துருக்காரசனைப் பார்த்துச் சொல்லுகிறான் ஐயா சத்துருக்காரசனே கேளும் சிவனுக்கு மடங்காத லவனைக்கைப்பிடியாக பிடித்துவர இப்போது அடியேனுக்கு செலவுதருவீரானால் அவனுக்கு உதவியாய்வரப்பட்டகாலகண்ட திரிநேத்திராநனும்கண்டதுண்டஞ்செய்து லவனைஎவ்விடம் போனாலும்விடாமல்அரைக்ஷணநேரத்தில் பிடித்து வருகிறேனென்றான் அதுகேட்டு சத்துருக்காசருஞ்சம்மதித்து சுமதராசனைப்பார்த்துச் சொல்லுகிறார் வாருஞ்சுமதராசனேலவனுக்கு உயிர்ச்சேதம் வராமற் கைப்பிடியாகபிடித்தால்லவன்வாய்பிறப்புபேசத்தைக் கேட்கலாமென்று தம்மோடொத்த ஐம்பத்தாறுதேசத் தாசர்களையும் ஐம்பதினாயிரம் அக்ரோணிசேனைகளை தயார்செய்து பேரிகைவாத்தியங்கள்முழங்க பூமியானதுநடுங்க ஆர்ப்பரித்து லவன்எங்கேஎங்கேயென்றுரணக்களம்வந்தார்கள் அப்போதந்த ரணக்களமெப்படியிருந்ததென்றால் செக்கச் சேவேலென்று செம்மணற்கரைத்த ஆறுபோல்ஒருபனையுயரம்பிரவாகமோடுகிறதாம்அந்தவுதிரவெள்ளத்தில் தலையில்லாதமுண்டங்களெழுந்தகூத்தாட அந்தமுண்டங்கள்பேரிற்கழுக்கள்ஏறி நடக்கபூதபிசாசுகளும் சாகினிடாகினிநாய்நரிகளும்பிணங்களை பிடுங்கித்தின்று உதிரங்களைகுடித்து டமாரபேரிகைகளை கழுத்தில் மாட்டிக்கொண்டு ஓடுகிற உதிரவெள்ளத்தோடு கூட இவைகளையும் அடித்துக்கொண்டு போகின்றதாம்.

அதுகண்டுசுமதராசன்நல்லயுத்தங்கள் நடந்துபோற்காண்கிறதென்றுமனதிலெண்ணிலவனைத்தேடிபார்க்கையிலவனானவன் டமாரபேரிகையினுடையசத்தங்கேட்டுநிலத்தைவிட்டெழுந்திருந்து கையிற்றனுசைபிடித்து வெளிப்புறப்பட்டான் புறப்படவேசேனைகளானதுகண்டு லவனைவளைத்துஉள்ளேபோட்டுக்கொண்டு ஐம்பத்தாறு தேசத்து ராஜர்களும் நாலுபக்கமும் ரதங்களைவிட்டுக்கொண்டு லவன்பேரிற்சேனை.ஏவினார்கள் அதுகண்டு லவன் சொல்லுகிறான் அடாசேவகரே உங்களிலும் நாஷ்டகம் படைத்தராட்சதாள் என்கையம்பினால் இறந்து கண்டிருக்கும் நீங்களேன் வீணிற்சாகிறீர்க ளெப்படி மாளாமுன்னம்நான்கவிலும் -விசேஷத்தை தள்ளாமல் உங்கள்பெண்டுபிள்ளை வேண்டாதவர்கள் என்னுடன் சண்டைக்கு வாங்களென்றான்.

அதுகேட்டு சேனைகள் சொல்லுகிறார்கள் அடா லவனே நாங்களிறந்தால் எங்களுயிரை மீட்டுத்தர சத்துருக்காரசனிருக்கின்றார் ஆனபடியினா லுனக்கும் உன்னுடைய அஸ்திரத்திற்கும் நாங்கள்பயந்தோமென்றெண்ணாதே உன்னாலான சாமர்த்தியத்தை வஞ்சனைசெய்யாமல் பாரென்றார்கள் அதுகேட்டுலவனானவன்கோபங்கொண்டு மண்டிப்போட்டு உட்கார்ந்து வில்லைப்பூமியிலூன்றி அனேகபாணங்களையெடுத்து 1-10-100-1000-1,0000-கோடி-சங்கம்-மகாசங்கமென்றுகணக்குமிதமில்லாத பாணங்களை மழைபொழிவதுபோல் நாலுமூலையுங் கரகரவென்று சுழற்றிவிட்டுக்கொண்டிருந்தான் அப்படி லவனானவன் அஸ்திரங்களை மிதமில்லாமல் விடுகிறபோதுசேனைகளானது திக்குமுக்காடி சின்னாபின்னமாக கால்வேறு சிரம்வேறு இடைவேறு தொடைவேறாக அறுந்துவிழுந்ததுகள் படைக்குட்சென்று ஐம்பதினாயிர மக்ரோணிசேனைகளுமாண்ட உதிரவெள்ளமானது உலகமுடிவிற் சததசாகரமும் பெருகிவந்ததுபோல் பனைமரமளவாகரத்தாறுபெருகியோடத்தலைப்பட்டது அதுகண்டு ஐம்பத்தாறுதேசத்து ராசர்களும் அதிககோபமுண்டு ரதத்தை முன்னுக்குநடத்தி சொல்லுகிறார்கள்.

அடாதம்பி லவனேகேள் அள்ளியமாடு பொதி சுமக்குமா (மூத்தோர்சொல் வார்த்தையமிர்தமென்பதைகைகொண்டு அங்களானைக்குபோராட்டமென்ன நாங்கள் சொன்னபடியேகோ அதென்ன

வென்றால்குதிரையையெங்கள்வசமொப்பிவித்து எங்களுடன்கூட சத்துருக்க ராசனிடத்திற்கு வந்துகண்டுபேசி உன்னிருப்பிடத்திற்கு வந்துவிடுவாய்வாராய்தம்பியென்றார்கள் அதுகேட்டு லவன்புன்னகைபுரிந்துராமது கைவில்லுக்கு நல்லவிருந்துவந்தகப்பட்டதென்றுநினைத்துஐம்பத்தாறுதேசத்தாசர்களையும்பார்த்து சொல்லுகிறான் ஓராசாக்களே நல்லவிசேஷஞ்சொன்னீர்கள் என்கையிற்பிடிபட்ட குதிரையை விடுவித்துக்கொள்ள சத்துருக்கனைப் போலும் அவன்தமயன் ராமரைப்போலும் 100-பேர் வந்தாலும் குதிரையைவிடுவேனென் றெண்ணுநீர்கள் நான் உங்களோடு கூடவருகிறவனல்ல உங்களுக்கு சாமார்த்தியமுண்டானால் என்னைச்செயித்து குதிரையை விடுவித்துக்கொண்டுபோங்கள் இல்லையென்றால் என்னுடன் சொல்லாமல் ஓடிப்பிழையுங்கள் வீணிலேன்மடிகிறீர்கள் உங்களாலென்னை என்ன செய்யக்கூடும் உங்களை உற்பத்திசெய்த பிர்மதேவன்வந்தாலும்சளையேன் உங்கள்பின்வாறேன் சுறேலென்றோடிப்பிழையுங்களென்றான் அதுகேட்டு ஐம்பத்தாறுதேசத்துராஜாக்களும் கோபமாக அனேகபாணங்களைத்தநுவிற்சந்தித்து உகாந்தகாலத்து சப்தமேகங்களும் ஒன்றாய்க்கூடி இடிமின்னல்குமுறலுடனே மழைபொழிந்தாலெத்தன்மையாய் பொழியுமோ அத்தன்மையாய்சரமாரிலவன்பேரிற்பொழிந்தார்கள்.

அதற்குலவனானவன்கடிந்து வில்லிலனேகபாணங்களைசந்தித்து சேனைமாரிபோற் சேனைகளின்பேரிற்சரமாரியாய்பொழிந்து ராசாக்கள்விடுத்த அஸ்திரங்கலனைத்தையு மறுத்துத்தள்ளி அவர்களேறிவந்தரதம்சாரதி குதிரைகளையும் தும்சம்பண்ணிவிட்டான் அதுகண்டுவோர லவனானவன்பார்த்து பெருக்கிரண்டுபாணம்விட்டுகெத்திகேடயங்களைபொடியாக்கி ஐம்பத்தாறுதேசத்தாசர்களையும் பார்த்துச் சொல்லுகிறான்

ஓகோராசர்களே நீங்கள்வரும்போது யானைசேனைபரிவாரத்துடனேகசமுகத்தோடும் வந்தீர்களே அதையெல்லாம் யெங்கேபோய்விட்டது ஆனபடியினால்நீங்களும்அவ்வாராய்விடுவீர்கள்குறியாயோடிப்பிழையுங்கள் அந்தமீறினவர் சித்திரவதைபடுவாரென்பதறிவீர்களா சண்டைக்கும் உங்களுக்கும் வெகுதூரம்ஐதுநிமிஷகன்றுபோங்களென்றுகூறிய லவனைப்பார்த்துராசாக்களெல்லோரும் மனதுபொங்கி ஈட்டி-எறிவீட்டி-சரிகை-வாங்கு-வளைதடி-வல்லயம்-சக்கரம்-குந்தம்-வேல், இப்படி சொல்லப்பட்ட முப்பத்திரண்டாயுதங்களையும் லவன்பேரில் திவ்வுறிவ்வென்றெடுத்தெறிந்து கொண்டிருக்கையில் லவனானவன் ஏதடாநாம் தர்மமாய் பார்த்தபோது நம்மைவிட்டுப்போகாமல் நமதுபேரிற்றானே ஆயுதஅஸ்திரங்களை எடுத்துவருகிறார்களினிநாம்சும்மாயிருந்தால் காரியமல்லவென்றுவில்லில் 100-நாராசபாணங்களைச்சந்தித்து பிரயோகம்பண்ணினனந்த 100-நாராசபாணங்களும் வில்லில்விடுபட்டு அவயவங்கார்த்துக்கொண்டிருந்தசர்ப்பம்சீறிபுறப்பட்டாலெவ்வண்ணமோ அவ்வண்ணமாய் புறப்பட் சாக்களுடைய ஆயுதங்களையுமறுத்து ஐம்பத்தாறு தேசத்து ராஜாக்களின் மார்பிற்றைத்து முதுகில் உருவிப்போக அதனாலவர்கள் மெத்தவுங் கஸ்தியடைந்து ராமாவென்றசத்தத்துடன் அடியற்றமரம்போற் சாய்ந்துபூமியில் வீழ்ந்தார்கள்



லவனுக்கும் சுரதராஜனுக்கும் யுத்தம்.

கலிவிருத்தம்.

பாலன்கைக்கணையாலவன்பட்டபின்
தாலமேல்வருஞ்சண்டனேவென்றயர்ந்
தோலமிட்டுவுழலு படைத்துணை
வேலெடுத்துச்சுரதனுமேவினன்.

வசனம்

இவைகளைத்துங்கவணிறுற்கண்ட சுரதராஜனானவன் ஆக்ராருரோதனாகி பல்லை நறநறவென்று கடித்துமீசைபடபடவென்றுதுடிக்க அக்கினிபொறிகளானது முகத்திறசொலிக்க இவனைகெலிக்கநமக்குசாமர்த்தியமில்லையோவென்றுகெக்கலிகொட்டிபுயத்தைதட்டிசாரதியையதட்டி ரதத்தைநடத்தச்சொல்லி லவனைப்பார்த்துச்சொல்லுகிறான் அடாதம்பிலவனே நாங்கள்விட்ட குதிரையையும் பிடித்துக்கட்டிஎங்களுடைய சேனைகளையுஞ் சின்னபின்னமாய்க்கால்மாடுதலைமாடாகக்கொல்லல மோ சொல்லென்றான் அதுகேட்டு லவனானவன்கூறுகிறான்.



பக்கம். உக: ஸ்ரீராமர் ஆலோசனைசபை — சத்துருக்கன் அஸ்வத்தைவிடுத



லவன்குதிரையை கட்டுதல். — லவன் சத்துருக்கருடன் யுத்தம்பண்ணுதல்



லவன்கட்டுபட்டது (ஈாக.) — குசலன் சத்துருக்கருடன் யுத்தம்செய்தல்



குசலவர்கள் சத்துருக்கனை மரணமூர்ச்சைசெய்தது. ஈகூ. [illegible]

கேளும்நீங்கள்விட்டகுதிரை எங்கள்வனத்திற்கு
வந்தமையால் நான்பிடித்துக்கட்டியுத்தத்திற்குவந்
தேன் உனனால்சாமர்த்யமுண்டானால் என்னைசெயி
த்துகுதிரையை விடுவித்துக்கொண்டுபோம் யில்லா
விட்டால் கூப்பிடாமற்செடிமறைவிற்படுத்துக்கொ
ள்ளென்றான் அம்மொழியைக்கேட்டசுரதராஜன்பு
ன்னகைகொண்டு லவனைநோக்கிச்சொல்லுகிறான் அ
டாலவனே நீகையிலாகாதசிலரைக் கொன்றோமெ
ன்ற கெர்வத்தை மனதிலெண்ணியல்லவோ என்னை
செடிமறைவிற்படுத்துக்கொள்ளசொன்னாய் உன்னை
சிறுபிள்ளை என்று சும்மாவிட்டுவிட்டே னில்லாவிட்
டால் யிந்நேரம்பதறிச்சொன்னநாவையறுத்துவை
ம்பேனடா நீதான்சூரனென்றெண்ணாதேவீண்சவுரி
யம்பண்ணாதேதானென்பதேயார்க்குங் காணாதென்
பதுயறியாயோ ஆகையால் சிறியோர்கட்டிய சிற்று
டைபோற்புரியாதே வில்லாண்மைக்குவீரனென்று
செருக்குற்று திரியாதேயென்று முன்னிலும் என்ம
ணங்கதிகமாகதனுசைஎடுத்துநிறுத்திநாணிபிகிந்து
நாணோசைகொண்டு எட்டுதிசையுமதிர அட்டகாச
ஞ்செய்து பதினைந்துதிவ்யாஸ்திரங்களை எடுத்துவி
ல்லிற்றொடுத்து மந்திராபூதிகொடுத்துவிட்டான் அ
ப்பதினைந்துதிவ்வியாஸ்திரங்களெடுத்து வில்லில்சந்
தித்துவிட்டுசுரதன்விட்ட திவ்யாஸ்திரங்களையறுத்
துத்தள்ளிசுரதனுடையகவசங்களையும் பொடியாக
ச்செய்தான் அதனால்சுரதன்மிகவுங்கோபமாகி ஐம்
பதுநாராசங்களெடுத்துபிரயோகஞ்செய்தா னதுவு
ம்காலகோடிவிஷம்போற்சீறிக்கொண்டு வருகிறதை
லவன்பார்த்து தானும் ஐம்பது நாராசபாணங்களெ
டுத்துவிட்டான் அதுசுரதனுடைய வில்நாணியையு
றுகப்பார்த்தான் பார்க்கவேநாணியுமொன்றாய்க்கூ
டியது அப்போதுசுரதன்எதடாசிறுபிள்ளையென்று
பார்த்தால்இவன்நாம்விட்டபாணங்களைத்தும்அ
றுத்துத்தள்ளினான் இவனாலனேக அரசர்களும்மா
ண்டுவிட்டார்கள் இவனோ மகா சாமர்த்தியவானாயி
ருக்கிறான் அவனால்நமக்கபஜெபம்வரும்போலக் கா
ண்கின்றது இவனைக்கைப்பிடியாகப்பிடித்துவரசொ
ன்னார்களே இதற்கெப்படி யோசனையென்று சற்று
நோஞ்சம்மாயிருந்தேன் அதுகண்டுலவன்புன்னகை
புரிந்துசுரதனைப்பார்த்துசொல்லுகிறான் ஓராசனே
உங்கள்சூரத்துவத்தை நீங்கள்மெச்சி நீங்களேசூர
னென்ற குதிரையை விட்டீர்களே அந்தவீரத்தத்துவ
த்தை சற்றேமுன காட்டலாகாதோ சி பிள்ளையெ
ன்றுசும்மாயிருக்கிறீர்களோ அப்படிநீங்களிருந்தா
லும் நானிருக்கமாட்டேன் இதோபாணந்தொடுக்கி
றேன்இந்தபாணத்தைவிலக்கிகொள்ளும்பார்ப்போ
மென்றுவில்லில்ஒருசுழற்பாணத்தைசந்தித்துசுரத
னேறிவந்தரதத்தைப்பார்த்துவிட்டான் அச்சுழற்பா
ணமும்ரதத்தில்வந்து புகுந்து ஆகாயமார்க்கமாய்ர
தத்தைகிளப்பிவிட்டது அந்தரதமானதெப்படிபோ
குதென்றால் குயவனுடையசக்கரமானது எப்படிச்
சுழலுமோ அதுபோல்சுழன்றுக்கொண்டுமேகமண்
டலம்வருணமண்டலம்வாயுமண்டலம்போகிறபோ
துசுரதன்மிகவும்பயந்து வில்லையொருகையிலும்ரத
த்தின்குத்துக்கல்லையொருகையிலும் பிடித்துக்கொ
ள்ளவேரதமானதுசுழலிலகப்பட்டது பாணவேகம
டங்கிப்பூமியிற்குதித்துவிட்டான் அவன்குதித்தமா
த்ரத்தில்ரதமானது பூமியில்விழுந்து சாரதிகுதிரை
களுடன்நசுங்கிப்போய்விட்டது அதுகண்டுசுரதன்
வேறொருரதத்திலேறினானந்தரதத்தையுமிரண்டுபி
டிபாணம்விட்டு உடைத்தெறிந்துவிட்டானிந்தப்ப
டி-ம-ரதம்வரையில் பொடியாய்ப்போயிற்று அதுக
ண்டுசுரதன்கடுங்கோபங்கொண்டு அதிசீக்கிரத்தில்
வேறொருதேரிலேறி வில்லையெடுத்துவளைத்துநாணி
பிகிந்து ஒருநாகாஸ்திரத்தையெடுத்து வில்லிற்றொ
டுத்துவிட்டான் அதுவும் வில்லிலிருந்து விடுபட்டு
மகாவேகத்துடன்வருவதை லவனானவன் கண்டுதன்
னுடையவில்லில் ஒருகருடாஸ்திரத்தைதொடுத்து
விட்டுவிட்டான் அவ்வஸ்திரமானது வந்து சுரதன்
விட்ட நாகாஸ்திரத்தை கபளீகரம் பண்ணி விட்டு
லவனுடைய அம்புறாத்தூணியில்வந்தடைந்தது அ
துகண்டு சுரதன்கண்களில் நெருப்புப்பொறிபறக்க
புருவம்நெளிக்க மீசைகள்படபடவென்றுதுடிக்கா
துகளில் புகையெழும்ப பற்களை நறநறவென்றுகடி
த்து லவனைப்பார்த்துச்சொல்லுகிறான் அடாதம்பி
லவனே நீசிறுபிள்ளையென்றுநான்சாரிமமாயிருந்து
உனக்குபுத்திமதிகளைச்சொல்லியும் கேளாமல் சண்
டைசெய்கிறாயல்லவா நல்லதாகட்டும் இதோ அஸ்
திரம்விடுகிறேன் அதைநீ தப்புவித்துக்கொள்ளடா
பார்ப்போமென்று தனது அம்புறாப்பொதிகையில்
கையைவைத்து ஒருஅர்த்தசந்திராஸ்திரத்தையெ
டுத்து தூபதீப நைவேத்தியத்துடன் மந்திரவுச்சா
டனஞ்செய்து வில்லிற்சந்தித்து லவனுடையகைவி
ல்லுக்குச்சரியாய் லக்குவைத்துப்பிரயோகஞ்செய்
தான் அந்த அஸ்திரமானது வில்லிற்விடுபட்டு ஆல
காலவிஷத்தைப்போல அதிக்குரூரமாகிய அக்கினி
களைவாரி யிறைத்துக்கொண்டு வருகிறபோது லவ
னானவன் கண்டு இந்த அஸ்திரம் மகாமகிமையுடன்
வருகிறதென்று தனது வில்லில் ஒரு ருத்திரத்தை
கொடுத்துவிடடுவிட்டுவிட்டான் அதுவும்விரைவாக
வந்து சுரதன்விட்ட அஸ்திரத்தைதும்சப்படுத்திவி
ட்டு அவன்ரதத்தையுஞ்சக்கைசக்கையாய் உடைத்
துவிட்டது அப்படி அந்தரதமும் போகவே மறுப
டியும்ரதமில்லாமல் பூமியில் நின்று வில்லெடுத்து நி

நத்தி சாங்கோபசாங்கமாய் அஸ்திரங்களை மழைமாரிபோல்சாமாரியாக லவன் பேரில்வேகமாகவிடுகிறபோது லவனும் அநேகபாணங்களை விட்டறுத்துப்போட்டுபின்னும் அதிவேகமாய்ச் சிலபாணங்களை விட்டு சாதனுடைய சிரங்களை சல்லடைக்கண்களாகத் துளைத்துவிட்டானதனால் சாதன்மனம் நொந்து ஒருவேலாயுதத்தையெடுத்து கையிற்பிடித்துக் கொண்டு லவனைப்பார்த்துச் சொல்லுகிறான்.

அடா தம்பிலவனே நீபிடித்த குதிரையைவிட்டுச் சத்துருக்னமகாராசனிடம்வந்தாலாயிற்று வாராவிட்டாலிந்தவேலாயுதத்தினால் உன்னை யமலோகமனுப்பிவிடுகிறேனைபாரடா லவனேயென்றுசொல்லி சாதன்மகாகோபமாகி வேலாயுதத்தை யெடுத்து பூசைசெய்துவிட்டுவிட்டான் அந்தவேலானதுசாதனைவிட்டு அண்டபகிரண்டங்குலுங்க அண்டத்திலுள்ளதேவர்களுங்கலங்க அதிகவுக்கிரத்துடன்வருகிறபோதுலவன்பார்த்து ஒருசத்தியை எடுத்து பூசைசெய்துவிட்டான் அந்தசத்தியும் வெளிப்பட்டு அண்டசராசரமுதல் யாவும்நடுங்க அதில்வாழும் சீவராசிகளெல்லாமொடுங்கவுமென்றுவாயைத்திறந்து சாதனுடைய வேலாயுதத்தை கபளீகாஞ் செய்து போயிற்று அதனால்சாதன்கோபமாகி நாராயணாஸ்திரத்தையெடுத்து கையிற்பிடித்துலவனைப்பார்த்து சொல்லுகிறான் அடாலவனேயிதுவரையிலுன்னைசிறுபிள்ளை யென்று விட்டுகெட்டே னிதோபார்த்தை யாநாராயணாஸ்திரம்நீயெவ்விடம்போனாலும்விடாது கண்டிப்பேன் என்சொல்லைக்கடவாமற் சத்துருக்கமகாராசனைச் சரணமடைந்தாயானால் பிழைப்பாய் யில்லாவிடிலிதோயமலோகத்திற்கனுப்புகிறேன் பாரென்றானதுகேட்டுலவன் புன்னகைபுரிந்து சாதனைப்பார்த்துச்சொல்லுகிறான் ஓராசனே உன்னால்சாமர்த்தியமுண்டானால் என்னைசெயித் துகுதிரையைக் கொண்டுபோவென்று முன்னமே நான்சொல்லியிருக்கிறேனதையேமீண்டு கூறுகிறாய் இனியெனக்குப் பிரியவசனஞ் சொல்லவேண்டாம் உன்கையிலிருக்கிற நாராயணாஸ்திரத்தை எதோவிடு பார்ப்போமென்றான்

அதைகேட்டுசாதன் எவ்விதத்திலுமிவன் ஒப்புகிறதாகக்காணவில்லையென்று மகாகோபமாகிநாராயணாஸ்திரத்தைபூசைசெய்து வில்லிற் சந்தித்துவிட்டான் அந்நாராயணாஸ்திரமானது அக்கினிபொறிகள்சிதற ஆவென்று வாயைத்திறந்துகொண்டு வருகிறபோது லவனானவன் தன்னுடையநாராயணாஸ்திரத்தையெடுத்தபின்மந்திரித்துவிட அதுவுமதிவேகமாய்ச்சாதன்விட்ட நாராயணாஸ்திரத்தின்பேரில்விரவேகமாகிலுனன்றோடொன்றுதாக்கிஆகாயமார்க்கத்திலெழும்பியமற்கட்டியயுத்தம்புரிந்து சாதனுடைய நாராயணாஸ்திரத்தை கபளீகாம் பண்ணிவிட்டுப்போயிற்றுஅதனால்சாதராசனமிகவும்விசனப்பட்டு மறுபடியுந் தைரியம்விடாமல் வில்லிலநேகபாணங்களைப் பிரயோகம் பண்ணினானதற்குலவனானவன் மிகவும் கனமான பாணங்களைவிட்டு அப்பாணங்களைக்கொய்து அநனமாகப்பத்து நாராசபாணமெடுத்துச் சாதன்புஜத்திற்கும் மார்பிற்கும் லக்குபார்த்துவிடவே அதனால் சாதன் நிர்வாகம் பண்ணமாட்டாமல் ரணக்களத்தில் பின்முதுகிட்டோட்டமிட்டான் அதுகண்டு கைகாட்டி நகைத்து அடாராஜனே ஓடாதேசற்றுநில்லுநில்லுநில்லென்றுதாத்திக்கொண்டோடினானல்லவனானவன் அக்காலையில்தேவர்கள் லவனுடைய சாமார்த்தியத்தை மெச்சிக்கொண்டாடினார்கள் சாதன் சின்னப்பட்டு மறுபடியும் லவன்முன்வந்துயுத்தம்பண்ணிக்கொண்டிருந்தான் லவனானவன்கண்டு ஓராசனே நீயொருசேவகனுமுகத்திலிருப்பதுமீசைபா ராசாக்களாய்ப் பிறந்தவர்கள் ரணக்களத்திற் புறமுதுகு காட்டி யோடலாமா அரசர்நீதியா தருமமா உனக்குபுஜபலபாக்கிரமந்தானில்லையா உன கையிலிருக்கிற வில்லானது புல்லோ நீஒருராசனென்றுபோர்புரிய நேர்வந்துநின்றுயேஉன்றலென்னை என்னசெய்பக்கூடும் உயரப்பறந்தாலும்ஊர்குருவிபருந்தாகுமோ எடுபாணத்தையென்றான் அதைக்கேட்டசாதன்மனதுகுன்னிலவனைப்பார்த்து அடாலவனே உனக்கிந்த வீண்பெருமைபேதவிர மற்றப்பெருமையைக்காணேன்.

அதுஎனென்றால்ராசாக்களாய் சன்மித்தவர்கள் வில்லெடுத்து யுத்தம்பண்ணுவார்கள் வில்வேல் கத்திகேடயம் கெதாயுதமுதலாகியதைக்கொண்டு யுத்தஞ் செய்வார்கள் அதுகள்ராசநீதி முறைமை ரிஷிபிள்ளையானபடியினால் உனக்குவில்வித்தைதவிரமற்ற வித்தைதெரியாதுபோற்காண்கிறதென்றான் அதற்குலவன் மிகவும்விசனத்துடன சொல்லுகிறேன் ஓராசனேகேளும் இரண்டுவீரர்கள் கையிலும் வில்லிருக்கிறபடியினால் வில்வளைந்துவிட்டு மற்றோராயுதங்களையெடுத்து யுத்தஞ்செய்ய ஞாயமுண்டோ உன்னால்சாமார்த்திய முண்டானால்தோ நான்பிடித்திருக்கிறவில்லைகண்டித்தாயேயானால் அதன்பின்ஆயுதமெடுத்துயுத்தமபண்ணலாமென்றதுகேட்டு சாதராசன் இவனைநம்மால்வெல்லமாட்டோமென்றுமனதிலெண்ணிக் கொண்டு சற்றுநேரம் வாதாடிக்கொண்டிருந்தான் அப்போதுலவனானவன் சாதராசனைப்பார்த்துச் சொல்லுகிறான்.

ஒப்ராசனே உன் சாமர்த்தியமெல்லா மிவ்வள
விலடங்கியின்றுபோ குதிரையைவிடுவிக்க சாமர்த்
தியமில்லாமல்வீணாவில்லைக்கையிற்பிடித்துக்கொ
ண்டு என்முன்னிற்கலாமோ விற்பிடித்து யுத்தஞ்
செய்ய சாமர்த்தியமில்லாவிட்டால் வில்லைச்சுற்றி
யெறிந்துவிட்டு செடிமறைவில் படுத்துக்கொள்ளெ
ன்று முன்னமே சொல்லியிருந்தேனப்படி செய்யா
மல் என்னையுஞ்செயித்து குதிரையையும் விடுவிக்
காமலிப்படி சும்மாயிருந்தால் உன்னாரசனென்று
எப்படிசொல்லுகிறது நீ சூரியவம்சத்துராசனானால்
ரோஷமில்லாமல் யானைதேர்பரிசேனையும் பறிகொ
டுத்து இப்படிதனிமையால் என்முன்னிற்கலாமோ
அடாவுனக்குவீரதீரமில்லையோவென்றான் அதுகே
ட்டு சாதராசன் மனதுநொந்து வில்லையெடுத்து வி
றுத்திகல்ல கூர்மையோடுங்கூடியிருக்கப்பட்ட நா
றுநாராசபாணங்களை யெடுத்து வில்லிற் பிரயோகஞ்
செய்து லவன்மார்புக்கும்புஜத்திற்கும் கைவில்லுக்
கும் லக்குபார்த்துவிட்டான் அந்தநாறுநாராசபா
ணங்களும் லவன் வில்லிற்பாணஞ்சந்திக்கு முன்ன
மே நாகசர்ப்பங்களைப்போற் சீறிக்கொண்டுவந்து
லவனுடையவில்லை பக்துபிளவாகக்கிழித்து லவனு
டையமார்பிலும் புஜத்திலும்சற்றுமசையாமல் வில்
லையெறிந்துவிட்டுசிவ்வென்று வாளையுருவிக்கையில்
பிடித்து சாதராசன்பாணந் தொடுக்குமுன்னமே
அம்பிலுமதிக வேகமாய்ப்பாய்ந்து வில்லையுங்கண்
டித்து சாதராசனையும் இரண்டுதுண்டாகவெட்டி
கீழேதள்ளிவிட்டு லவனானவன் தன்மேரிற்பட்டபா
ணத்தைபிடுங்கி அப்புறம்போட்டு உரையிலிருந்து
அமிர்தசஞ்சீவியை யெடுத்துப்பாணம்பட்ட காய
த்தின் மேற்றடவி யத்துடன் காயங்களாறவே லவ
னானவன்சந்தோஷமாகி ஒரு தர்ப்பையைப்பிடுங்கி
வால்மீகர் தனக்குபதேசித்த மந்திரத்தையுச்சரித்து
வில்லுண்டாக்கிகையிற்பிடித்தின்னம வருவாருண்
டோ யுத்தம்புரிவாருண்டோ அதனை சற்றுநேரம்
பார்த்து அப்புறம்போவோமென்று செடிமறைவிற்
போய்ச்சயனித்துக்கொண்டிருந்தான்.

அப்போது தூதுவர்கள்ரணக்களம்விட்டு வெ
ளிப்பட்டு அப்பாகூவினால் மோசலவன்கிட்டவேவி
னால்நாசம் கேவலம்லவன்சண்டை தேங்காய்போ
லருளுதலைமண்டை அண்டைநெருங்கினால் இன்
னம்யாதுமோசஞ்செய்யுமோவென்றுஒடுங்கிக்கொ
ண்டுலவன்செய்யும்வேதையாகிய சேதிகொண்டுகு
வ்யோமுறையோவென்றுகூவிக்கொண்டு சேனைகளி
ருக்குமிடந்தாவிக்கொண்டு ஓட்டமாயோடி சத்து
ருக்காரசனைச் சேவித்து ஐயா சத்துருக்காரசரே
இனிசத்துரு யில்கூவென்று சித்தத்தி லெண்ணியி
ருந்தோம் சத்துருவாயும் பார்ப்பவருக்குச் சிறியபு
த்ரனாயும் உற்பவித்தலவனானவன் சாதராசனையும்
ஐம்பத்தாறு தேசத்தாசர்களையும் ஐம்பதினாயிரம்
அக்ரோணிசேனைகளையும் அண்டவொட்டாமற் க
ண்டதுண்டம்பண்ணியமனாருக்கு போமென்றனு
ப்பி விட்டின்னம் வருவார்களோவென்றுவழிபார்த்
திருனென்றுகூற சத்துருக்காரசர் ராசாக்களையும்
ராட்சதசிரேஷ்டர்களையும் பார்த்து சொல்லுகிறார்
ஆ ஆபார்த்தீர்களோ சிறுவனானவன்சுத்தவீரனை
நம்முடைய சாதராசனையும் ஐம்பத்தாறுதேசத்தி
ராசாக்களையும் ஐம்பதினாயிரம் அக்ரோணிசேனைக
ளையும் கொன்றானல்லவா இதுமகா ஆச்சரியமாயி
ருக்கிறது ஒரு சுண்டுவிரலத்தனையுள்ள சிறுவனைக்
கைப்பிடியாக பிடித்துவரவொட்டாமல் தோற்று
ஓட்டம் பிடித்தார்களென்று சமாச்சாரமேயலலா
மல்வென்றசமாச்சாரம்ஒன்றுமின்றுக.னேன் இன்
னம்நம்முடையதண்டில்யாரிருக்கிறார்கள் ஒருவரை
யுங் காணோமென்றுகூறிய சத்துருக்கர் வார்த்தை
யைகேட்டு சகலரு மாலேசனை செய்திருக்கையில்
சாதராசன் தன்தமயனை அரண்யராசனும் சேனா
பதியானகாலசித்தனும்கேட்டெழுந்து ஐயாசத்து
ருக் ராசனே என்னயோசனைபண்ணுகிறீர் எங்க
ளுக்கு செலவுதந்தால் லவனானவன் எமலோகம்
போயொளித்தாலும்கைப்பிடியாகப் பிடித்துக்கொ
ண்டிப்போதே வருகிறோமென்றார்கள் அதுகேட்டு
சத்துருக்காரசன்சொல்லுகிறான்வாரும்அரண்யரா
சனே காலசித்தனே மெத்தசந்தோஷம் நீங்கள்பத்
துவெள்ளராட்சதர்களை கூட்டிக் கொண்டுபோய்
சிறுபிள்ளையாகிய லவனை கைப்பிடியாகப்பிடித்து
அவனுக்கு உயிர்சேதம்வராமல்கொண்டுவரவேணு
மென்று சத்துருக்காரசன் செலவுகொடுத்தனுப்ப
அரண்யராசனும் விடைபெற்று பத்து வெள்ளம்
யானை தேர்பரிசேனைகளைக் கூட்டிக்கொண்டு மேள
வாத்தியங்களுடன் ரணக்களம்வந்தார்கள்.

அதுகேட்டு லவனானவனெழுந்துதன்னுடைய
வில்லையெடுத்து தோளில்மாட்டிக் கொண்டு தண்டு
பாளையத்தைவேடிக்கைபார்க்கவந்தவன்போல்வரு
கிறபோதுராட்சதாளகண்டுயானைகள் கிழக்கும்ரத
ங்கள்தெற்கும் குதிரைகள்மேற்கும் சேனைகள்வட
க்குமாக நாலுகுழுவையும்நின்று லவனைவளைத்து உ
ட்போட்டுக் கொண்டு சொல்லுகிறார் அடாதம்பி சி
றுபிள்ளாய் குதிரையைபிடித்துக் கட்டின துமன்றி
சேனைகளையுங்கொன்றவன்நீதானே சொல்லடாவெ
ன்றுகேட்டார்கள் லவன்சொல்லுகிறானடா ராட்ச
தர்களே அவர்கள் தான்புத்தியில்லாமல்மாண்டார்

கள் உங்களுக்கென்ன விவேகமில்லையா உங்களகுதிரைகள்வனத்தில்வந்தபடியினால் நான் பிடிக்கட்டினேன் வாவிட்டால் பிடித்துகட்டுவேனே இது தெரியாதஎன்மாண்டுபோகிறீர்கள் குதிரையையும விடப்போகிறதில்லை ரதாஜ துரகபதாதிகள் உங்களுக்கு மிச்சமாயிருக்குதென்று அச்சமில்லாமல்வந்து மடியவேண்டாம் இந்திராதிதேவர்வந்தாலும் இருதண்டமாகச்செய்வேன் வலேந்காரிர்கள் நீங்கள்என்கையில்லாமாய்த்துபூமியில்விழுந்து ஆயுள் முடிந்து போவீர்கள் அதனாலுங்களிராசனுயெ சத்துருக்கருக்கடிந்து கொள்ளுவார் தெரியாமற்சிறிவேனென்று பரியாசமாகச் சரியாக வார்த்தையாடி வருகிறார் அதுவேண்டாம் உற்றதுசொன்னாலுற்றது பகையென்பார் அதுபோலஎன்னைவிட்டு அப்புறம் போய்விடுங்களென்றான் அதுகேட்டுராட்சதபடைத்தலைவர்கள்யாவரும்சினங்கொண்டு சொல்லுகிறார்கள் பார்த்தாற்சிறுவனாகயிருக்கிறான்மேலும் யானை தேர்பரி சேனைகள்யாதுமில்லை இவன்சாமார்த்தியந்தான் என்னமோராட்சதரும்புகரு எமனாகவந்திருக்கிறான் காமன்சோமன் இயாவரு மிவன்வல்லமைக்கீடல்லஇவனுடையசவுரியத்தைநாமுங் கண்டறிவோமென்றுஆயுதங்களை கையிலெடுத்து நாலுமூலையுஞ்நெருங்கிவருவதை லவனானவன்கண்டு வில்லையெடுத்துநிறுத்தி நாணிபிகியவே ராட்சதாள் பார்த்து அகம்நாணிமுதல்கோணி எச்சரிக்கை எச்சரிக்கையென்று பிண்டமருகில் நெருங்கினர்கள் அது கண்டு லவனானவன் வில்லிலனேக பாணங்களைப்பூட்டி நாலுமூலையுஞ்சுழன்று மாரிசொரிவதுபோலச் சரமாரியாய்ச் சேனைகள்பேரில் சரசரவென்று விடுகையிற் காலற்றவரும் சிரமற்றவரும் தேர்விட்டவரும்நாளகெட்டவருமாகச் சின்னபின்னமாயோட தலைப்பட்டார்களப்போது காலசித்தன் கடுங்கோபமாகி இந்த சிறுவனுக்குபயந்து இப்படி ஓடுவார்களோ ஓடவேண்டாம் ஓடவேண்டாம் நில்லுங்கள்நில்லுங்களென்று அவர்களையழைத்து தன்பின்னால் நிறுத்திக்கொண்டு தான்முன்னின்று லவனைப்பார்த்துச்சொல்லிக்கொள்ளுகிறார்கள் ஆஆ இவனைப் பார்த்தால் ராசவடிவாகவும் ராமரைப்போலு மிருக்கிறான் நம்பதறிப் பாணம்விடுவோமேயானல்பாலனிறந்துபோய்விடுவான் இவனை கைப்பிடியாகப் பிடித்துக்கொண்டு போவோமென்றால் அதுராமத்துரோகமல்லவோ இராமனிராச்சியத்தில் வஞ்சம் ஞ்துரோகம் மாய்கை துரோகஞ்செய்தான் இராமதுரோகம் அவர்களை எவ்விடம்போனாலும் விடாது ஆகையால்நாம் சொர்ப்பனத்திலும் துரோகிகளைவைவினைக்கப்போகாதே இதற்கெப்படியென்றுதேஸில்விழுந்தாயைப்போலத்தியங்கி ஒன்றும்பிரியாமற்சற்றுநேரம்யோசனைசெய்துக்கொண்டிருந்தார்



லவனுக்கும் அரண்ணியாராஜனுக்கும் யுத்தம்

அன்னவனிலமேற்சாய வரண்யனுங்கண்டுவெம்பி
தன்னிகரில்லாவிந்த தனையனுமந்தோவினே
மன்னியதளங்களெல்லர் மடிந்தனகணையாலென்று
துன்னியரதத்தைதூண்டி சொரிந்தனன்சரத்தை
(யெங்கும்.

வசனம்.

அக்காலையில் அரண்யராஜன் லவனைப்பார்த்துச் சொல்லுகிறான் அடாலவனேஎங்கள் குதிரையைப்பிடித்து கட்டினதுமல்லாமல் எங்கள்சேனைகளையும்வீரர்களையுங்கொன்றுபல்லவாஉன்னைகொஞ்சத்தில்விடுவேனென் றெண்ணாதே இன்னஞ்சொல்லுகிறேன்குதிரையைவிட்டு சத்துருக்கமகாராசனை சரணமடைந்தாயாகில பிழைப்பாயிலலாவிட்டால் என்னுடைய பாணத்தினால உன்னைக்கொன்று எமலோகத்திற்குவழிகாட்டுகிறேன் பாடாவென்றான் அதுகேட்டுலவன்கோபித்து அரண்ய ராசனைப்பார்த்து பற்களை நறநறவென்றுகடித்து ஒரு விசேஷம் சொலலுகிறான் அடா ராசனே நீ வா

யால் வன்மைகெடாதே நீங்கள்விட்டகுதிரை உங்கள்பட்டணத்திற் பிரதட்சணம்பண்ணி வைக்கவேணுமேயல்லது எங்கள்வனம் வந்தபடியினால் நான் பிடித்துக்கட்டினேன் உங்கள் பட்டணத்திலிருந்த குதிரையை நான்வந்துபிடித்துக்கட்டவில்லை உனக்குசாமர்த்தியமுண்டானால் என்னைஜெயித்து குதிரையை விடுவித்துக்கொண்டுபோம் சாமர்த்தியமில்லாவிட்டால் ஓடிப்பிழையுங்களென்றான் அதுகேட்டாரண்யராசன் கோபமாகிராட்சதசேனையைலவன் பேரில்விட்டு தான்முன்னின்று தனுசையெடுத்துவிறத்தினைதாண்டு லவனுனவன் ஆக்கிரமிக்குரோதனாகி பல்லை நறநறவென்றுகடித்து வில்லிலனேக பாணங்களைச்சந்தித்து யுகாந்தகாலத்திற் சப்தமேகங்களும்ஒன்றாய்க்கூடி இடிமின்னற்குமுறலுடன் குமுகுமென்கிறசத்தத்துடனே சலவருஷம்பொழிந்தாலெப்படியோ அப்படியாக பாணங்களைப்பொழிந்துக்கொண்டிருந்தான் அப்படி ராக்ஷதாள்மீது விடவே பத்துவெள்ளம்ராக்ஷதாள்மாண்டு அரண்யனுடையசரீரமெங்குஞ்சல்லடைக்கண்களாகத்துளைப்பட்டு ரத்தாறுஓடத்தலைப்பட்டதுகண்டு காலசித்தன் லவனுடையகரவேகசரவேகந்தானியாதோ அவனென்ன ராக்ஷதாளுக்கு எமனாகவந்துபிறந்தானோ பார்த்தால் சிறுபிள்ளையாயிருக்கிறான் பாய்ந்தால் பெரும்புலிபோற்பாய்கிறான் இவனுடையசரவேகசரவேகத்தின் முன்னின்று யார்தான் நிர்வாகஞ்செய்வார்கள் இவன்கைவில்லுக்கு நாமுமெதிரியல்லபோற் காண்கின்றது குதிரையை விடுவிக்கலாமென்றாலுமிவன்விடுகிறவனாகத்தோற்றமில்லை அதுவுமன்றிசீதாலட்சுமியில்லாமல் ராமருடையயாகத்திற்கு பின்னம்வந்துநேர்ந்தது லவனைப்பார்த்தால் ரவுத்ராகாரனாக திருமூர்த்தியைப்போலசேனைகளுமிலவாதமுமில்லை பக்கத்துணையுங்காணோமிவனுடையதைரியந்தானென்னவோ லவனென்று சொல்லாமுன்னமே சிரசுபோய்விடுகிறது அந்த விசேஷங்களைப்பார்த்தால்ராமரென்றுஞ்சொல்லலாம் இவனைப்பெற்றவளேலோகமாதாவென்றுகூறலாம் இவனாலதிகதுன்பமுண்டாகும்போற் காண்கிறதென்று அரண்யராசன் யோசனைசெய்து அதிககோபமாகி வில்லிலனேகபாணங்களைச் சந்தித்து லவன்மீதெய்திறபோது லவனுனவனவருகிற அஸ்திரங்களையெல்லாம்அறுத்து ௧௦-திவ்யாஸ்திரங்களையேவிவிட்டு அரண்யனேறிவந்த ரதஞ்சாரதிகுதிரைகளுடன்தும்சஞ்செய்து அரண்யனமார்பிற்கும் புயத்திற்கும் வில்லிற்கும்பட்டு சிரசுமுடைந்துபுயங்கிழிந்துமார்புதிறந்து நாராயணவென்று மாணமடைந்தான்.

அதுகண்டு காலசித்தன் நமக்குமிதுதான்வழியென்று மனதிலெண்ணினவனாக ரதத்தைலவன்முன்னுக்குநடத்திச் சொல்லுகிறான் அடாலவனே என்னையறிந்திருப்பாயோ அறியாயோ ஆகினுஞ்சொல்லுகிறேன்கேள் உன்னைக்கொண்டுபோகிறகாலன் என்னைக்கண்டால் கைகூப்பிகும்பிடுவான் என்பேர் சொன்னால் நடுங்குவான் திருமூர்த்திகளும் தேவர்களும்பயப்படுவார்கள்என்பேர் காலசித்தனென்று யாவருக்குந் தெரியவரும் உன்னுடைய சாமார்த்தியமெல்லாம் என்முன் செல்லாது எங்கள் குதிரையைவிட்டு நீதாயுடன்பிள்ளையாய்ப்போய்ச்சேர் இல்லையென்றால் குதிரையைக் கொண்டுவந்து விட்டு சத்துருக்கராசனை சரணமடைந்து சமாதானமாய்ப்போவென்றான் அந்தவார்த்தையை லவன்கேட்டு நகைபுரிந்து சொல்லுகிறான் அடாகாலசித்தனே நீ எமனுக்குநமனாயிருந்தாலும்உன்னைத்தேவர்கள் வணங்கப்பேர்பெற்றாலும் என்பாணுக்கினிமுன் உன் சாமர்த்தியம் சூரியனைக்கண்ட பனிபோலாய்விடும் என்னுன்னை இப்போதுகொண்டுபோகவரும்எமனை புதியயமனா பழையயமனாவென்று கேட்டனுப்புவேன், அதுயிருக்கட்டும் பலவார்த்தைஎன்ன வாய்வேட்டைவிட கைவேட்டைநிகமென்று பழமொழியுண்டாகையால் எடு அஸ்திரம் பார்ப்போமென்றான் அம்மொழியைக்கேட்ட காலசித்தன் அடா நாம்இதுவரையிலனேகயுத்தங்களிற் கைகண்டிருக்கிறோமிச்சிறுவனால்நமக்கு மதிமோசம் வரும்போல் தட்டுபடுகின்றது சிறுபாம்பாகிலும்பெரியகோலிலடிக்கவேணுமென்று பெரியோர் சொல்லுவார்கள் மேலும் ஸ்ரீராமர்பகையான ஆயிரத்தெட்டண்டமும்-௨௪-புவனமும் சத்தசாகரஞ்சூழ்ந்த ஈரேழுபதினுலோகத்தையும் ஏகச்சக்கிரமாயாண்ட ராவணேஸ்வரன் ஸ்ரீராமர்பகையைத் தேடிக்கொண்டு இராமபாணத்தால்இராவணன் கும்பகர்ணன் இந்திரசித்து அதிகாயன் அட்சயகுமாரன் கும்பனிகும்பன் பவர்னனிப்படி சொல்லப்பட்ட ராட்சதசிரேஷ்டரும் பிரமுகாளுமிரண்டாயிரம் வெள்ளம் ராக்ஷதாளும் ராவணனுக்கு சகாயமாகவந்த சதகண்டராவணனுஞ் சகஸ்திரகண்ட ராவணனும் பதினாயிரம்வெள்ளம்ராட்சதாளும்மாண்டார்கள் அந்த ராமபாணத்தினுடையசேதி இன்னமுனக்குத்தெரியவாராது நீ இந்தக்குதிரையைப் பிடித்துக் கட்டினசேதி ராமலட்சுமணர் கேட்டாரேயானால் அங்கிருந்தபடியேராமபாணம் வந்துவிடும் நீ எமலோகம்போயொளித்தாலும் உன்னைவிடாது என்வினில்மாண்டுபோகிறாய் உன்வார்த்தைசொல்லாமல்குதிரையை

விட்டுச்சமாதானமாகிவிடும் இல்லையென்றால்வில்லையெடுத்து பாணத்தைப்பூட்டு பார்ப்போமென்றான்.



லவனுக்கும் காலசித்தனுக்கும் யுத்தம்.

விருத்தம்.

அங்குள்ளபாலன்கையாலாண்ணியன்மாண்டபின்னர், மங்குல்போலடர்ந்தசேனை வாரிதிமாண்டசெய்தி, தங்கெதூதரோடிசக்ரருக்கருக்குரைத்தகாலிற், சிங்கமதனையகால சித்தனுஞ்சமர்க்கெழுந்தான்.

வசனம்.

அப்படி காலசித்தன் கூறியதைக்கேட்ட லவனானவன் அதிககோபங்கொண்டு அடா காலசித்தனே ஆயிரத்தெட்டண்டம் ௨௨௪-புவனம் சத்தசாகரம் ஈரேழுபதினாலுலோகத்தையுமேகச்சக்கரமாயாண்ட ராவணனை செயித்தாலுமென்ன அவனுடையசூரத்தனம் அவன்மட்டிற்கு மல்லாமல் என்புவனத்திற்கு அவனதிகாரஞ் செல்லமாட்டாது அப்படிஏகச்சக்ராதிபதியாய் இருந்தராவணனை ராமன் செயமடைந்தால்மகாவீரனென்றுபுகழுகிறாய் அந்தராமன் என்கையில் படப்போகிறபாடு உனக்குத் தெரியாமலென்னமலைக்கிறாய் அந்தராமபாணம் என்முன்னில்லாது அதிருக்கட்டும்நீயோ எமனைவென்றவன் அந்தபாணத்தைசற்றெடுத்து என்னை செயித்தாயேயானால்நீஎமனைவென்றதுமெய்தானே இல்லாவிடில் அதுபொய்தான் அதெப்படியென்றால ராசனிடத்திலிருக்கப்பட்ட சேவகனுக்கு சேவகவீரம் மெத்தவுண்டானால்ராஜனும் அதிகபலவானென்று சகலருமெண்ணுவார்கள் சேவகனிடத்தி சேவகமட்டுண்டானால்ராசன்பராக்கிரம சாலியாயிருந்தாலும்வணங்கார்களதுபோல் உன்சேவகமும் உங்களிராசனுபசத்துருக்கனுடையசேவகமும் ஒருக்ஷணத்தி லறிவிக்கிறேன்பாரடாவென்று வில்லைவளைத்துப்பத்துதிவ்வியாஸ்திரங்களை வில்லிற்சந்தித்துப் பிரயோகம்பண்ணினான் அதைப்பார்த்துகாலசித்தன் மூர்த்தி பாலன் பாணமிஞ்சினனென்று ௨௰ திவ்யாஸ்திரங்கள் வில்லிற்சந்தித்துவிட்டதுகளையறுத்துப்போட்டான் அத்திவ்யாஸ்திரங்களறுபட்டுப்போகவேலவனதிககோபமாகி ஆக்ரகிக்குரோதனாய் பல்லைப் படபடவென்று கடித்து வில்லில்-௧௰-திவ்யாஸ்திரங்களைப்பிரயோகஞ்செய்துவிட்டானத்திவ்யாஸ்திரங்களானது வில்லில்விடுபட்டு தகத்தகாய் நெருப்புப்புகையுடனுஞ் சடசடவென்கிற தொனிகளுடனும்வருகிறகாலையில்காலசித்தன் பார்த்து அதிசீக்கிரம் ௨௰ திவ்யாஸ்திரங்கள் எடுத்துவிட்டு லவனுடைய ௧௰ திவ்யாஸ்திரங்களையும் அறுத்தெறிந்தான்.

அதனை லவனானவன் சினந்து முனைந்து கடிதிற் கருத்தில்நினைந்து திருத்தமான-௱-நாருசபாணங்களைசந்தித்துவிட்டான் அந்த ௧௦௦ நாருசபாணங்களும் வில்லைவிட்டுவிடுபட்டு நாகசர்ப்பம்போற்சீறிக்கொண்டு வருகிறபோது காலசித்தனுங்கண்டுவெகுண்டு தானும் நூறுநாருசபாணங்களையும் அறுத்துத் தள்ளிப்போடவேதக்ஷணம் பக்ஷணம்பண்ணுவேனென்றுகடிந்து கொடிதாகிய ௫-சிங்கமுகாஸ்திரத்தை வில்லிற்சந்தித்துபிரயோகம் பண்ணினான் அந்த-௫-சிங்கமுகாஸ்திரமும் ஆலகாலவிஷம்போற்சீறி அக்கினிக்கொழுந்துகளோடு அதிவிரைவாய்ப்புறப்பட்டு காலசித்தன்பிடித்த வில்லையுங்கண்டித்துரதத்தையும் பொடிசெய்து சாரதிகுதிரைகளையுங்கொன்று காலசித்தனுடையமார்பிலணிந்த கவசங்களையுமுடைத்தெறிந்துவிட்டுபோயிற்று அதுபோகவேகாலசித்தனானவன் மறுதேரிலேறினான் அதையும் இரண்டிடிபாணம்விட்டு லவனானவன் உடைத்தெறிந்துபோட்டான் அதுகண்டு காலசித்தன் அதிசீக்கிரமாய் மறுதேரிலேறி வில்லெடுத்து அநேகதிவ்யாஸ்திரங்களை வில்லிற் சந்தித்து சாமாரியாய்ப்பொழிகிறபோது லவனானவன்கண்டு இன்று யுத்தத்தில் வந்தவர்களைவிட இவன் மகாசாமர்த்தியனென்றுபுகழ்ந்து அனேகபாணங்களை பந்திபந்தியாய்சந்தித்தெய்து காலசித்தனவிடப்பட்ட அஸ்திரங்களையெல்லாமறுத்து அதனமாக நாலுதிவ்யாஸ்திரங்களைவிட்டு ரதஞ் சாரதி குதிரைகளுடனும் தும்சமட்டிப்போட்டான் அதுகண்டு காலசித்தன் மகாகோபமாகி மறுதேரிலேறி வில்லெடுத்து சிறத்தி அபுரூபமான அஸ்திரங்களை தனுசிற்றொடுத்து ஐப்பசிகார்த்திகைமாதத்தில மேகமானது மழைக்காலிறங்கி இடிமின்னல் குமுறலுடன் பொழிந்தாலென்னமோ அவ்வண்ணஞ் சரவருஷமாய் பொழி

ந்துக்கொண்டிருக்கும்போது லவன்பார்த்து தானும்அநேகபாணங்களை ஒன்றின்மேலொன்றாய்சரசரவென்றுவிட்டு காலசித்தன்விடப்பட்ட அஸ்திரங்களையெல்லாமறுத்துவிட்டு அதுபோக பின்னுஞ்சரபஞ்சமான திவ்வியாஸ்திரங்களைவிட்டு வில்லையொடித்தெறிந்தான் இதனால் காலசித்தன் கோபங்கொண்டு வேறொருவில்லெடுத்து நாணியேற்றி அக்கினியாஸ்திரமொன்றை அவ்வில்லிற்சந்தித்து தூபதீப நைவேத்தியங்களுடன் விட்டுவிட்டான் அந்த அக்கினியாஸ்திரமானது வில்லில் விடுபட்டு திருதிகென்று எரிபுகைகளுடன் நெருப்புகளைவாரி யிறைத்துக்கொண்டுவருகிறபோது லவன் ஒரு வருணாஸ்திரத்தையெடுத்து வில்லிற்றொடுத்து மந்திராபூதிகள் கொடுத்துப் பிரயோகம்பண்ணினான் அந்தவருணாஸ்திரமும் வில்லைவிட்டு வெளிப்பட்டு சப்தமேகங்களுமொன்றாய்க்கூடி மழைதாரையிறங்கி யானைதும்பிக்கைபோற் குடங்கொண்டு அக்கினியாஸ்திரத்தின் மேற்பொழியும்போது அக்கினியாஸ்திரமானது நீராளமாயுருகி பூமியில்விழுந்துபோயிற்று அதுகண்டு காலசித்தன் ஒருபர்வதாஸ்திரத்தையெடுத்து வில்லிற்றொடுத்து மந்திராபூதிகள் கொடுத்துவிட்டான் அந்தபர்வதாஸ்திரமானது வெளிப்பட்டு அநேகபர்வதங்களாக உருவங்கொண்டு லவன்பேரில் வருகிறபோது லவனனைவன்கண்டு ஒருவச்சிராயுதத்தை எடுத்து தனுசிற்றொடுத்து மந்திராபூதிகள் கொடுத்துப் பிரயோகஞ்செய்தான் அந்தவச்சிராயுதமானது விடுபட்டு வருகிறபர்வதாஸ்திரங்களனைத்தையும்நொறுக்கித்தள்ளிப்போயிற்று அதனாற்காலசித்தன் மெத்தவும் ஆக்ருஷங்கொண்டு பிர்மாஸ்திரத்தையெடுத்து மந்திராபூதிகொடுக்கும்போதுலவனொருதிவ்யாஸ்திரத்தைவிட்டு காலசித்தன்பிடித்த பிரம்மாஸ்திரத்தை யறுத்துத் தள்ளிவிட்டானதைப் பார்த்து காலசித்தன் கடுங்கோபங்கொண்டுநாராயணாஸ்திரத்திற்கு இரண்டு திவ்யாஸ்திரம்விட்டு ரதத்திற்கொரு திவ்யாஸ்திரமுமெடுத்துவிட்டான்

அந்த அஸ்திரங்களும அதிவேகமாகவந்து காலசித்தனபிடித்த நாராயணாஸ்திரத்தையு மறுத்து ரதத்திலவாய்வாஸ்திரம்புகுந்து யுகாந்தகாலத்திற் சண்டமாருதம் வீசினதுபோல் காலசித்தன் ரதத்தை வெகுதுலைவிற் கொண்டுபோய்விட்டது அப்போது லவன்வெகுசந்தோஷமாகி தன்தேகத்தில் அம்புகாயங்களையெல்லாம் ஆற்றிக்கொண்டு செடி மறைவிற்போய்ச் சயனித்துக் கொண்டிருந்தான்.

இப்பால்இரண்டுராட்சதாள்இவன்கையிலிருக்குஞ்சிங்கோ நமதுபடைகளின் தலையை யறுத்து உலகில்வந்தவா ரில்லையோவென்று கிலேசலங்கியமூதுக்கொண்டோடி சத்துருக்க மகாராஜரே கேளும் அரண்யமகாராஜனும் பத்துவெள்ள மிராட்சதசேனைகளும் லவன்கைசிலையின்பாணங்களால் மாண்டு போனார்கள் காலசித்தன்மாத்திரம் யுத்தஞ்செய்துக்கொண்டிருந்தான் அவனையும்அவன்ரதத்தையும் வாய்வாஸ்திரத்தைவிட்டடித்தான் அதனால்ரதமும் காலசித்தனும் எந்ததிக்கிற்போய்விட்டானோ தெரியவராதென்றார்கள அதுகேட்டு சத்துருக் மகாராஜன் மிகவும் கோபாக்கினியுடனே பற்களை நறநறவெனக்கடித்து சொல்லுகிறார் ஓராஜமன்னர்களே ராட்சதவீரர்களே மந்திரிபிரதானிகளே ஒருசிறுபிள்ளையின்முன் யுத்தத்திற்குப்போன வீரர்யாவரையும் அணிப்பிள்ளை கிளிப்பிள்ளைபாய் அவமதித்து முப்பதுவெள்ளம் ராட்சதர்களையும் ஐம்பதினாயிரம்சேனைகளையும் அறுபதுகுதிரையும் அதம்பண்ணிவிட்டானல்லவா ஆகையால் இனிநம்முடையசௌரியமென்னயிருக்கிறது தேவர்கள்கேட்டால் நகைபுரிந்துபரியாசமாகப்பேசார்களா நம்மோடொத்த ராஜாக்களின்னம்லவனைப்பிடித்துவா நம்முடைய தண்டிற் சாமார்த்தியர்களும் வில்லில்வல்லவர்களில்லையோவென்று சொல்லிய சத்துருக்காராஜனைப் பார்த்து சலவசந்தனெழுந்துசொல்லுகிறான் ஐயா சத்துருக்கமகாராஜரே கேளும் நானிருக்கும்போது தங்களுடையமனதிற்கு ஆயாசம் வருவானேன் இப்போதெனக்கு செலவு தருவீரேயானால் லவன் திரிமூர்த்திகளை சாதிக்கப்பட்டவனா யிருந்தாலும் என்னுடைய சாமர்த்தியத்தினால் லவனை கைப்பிடியாகப்பிடித்துவருகிறேன் அப்படிபிடித்துவர சாமர்த்தியமில்லாவிட்டால் என்பாணத்திற்கு லவனை இரையாக்கி குதிரையை விடுத்துவருகிறேன் இவ்விரண்டிலொன்றுவது செய்துவாராமற்போனால் என்னை சகஸ்திரகண்ட ராவணனுடைய குமாரனென்றும் சொல்லவேண்டாமென்றானதுகேட்டு சத்துருக்கமகாராஜர் சலவசந்தனைப்பார்த்துச் சொல்லுகிறார் வாராய் சலவசந்தனே இப்படி சொற்பமானவார்த்தையைச் சொல்லலாமோ மகாமாயனென்ன புஜபலபராக்கிரமமில்லாதவனோ சேனாதிபதியானகாலசித்தனென்னவனைநேர்ந்தவனல்லவா அரண்யராஜனும்சுராதாசனும் ஐம்பத்தாறு தேசத்துராஜர்களும்சாமார்த்தியமில்லாதவர்களோ லவன்சிறுபிள்ளையானபடியினால் ஸ்ரீராமரைப்போல் வடிவும் தேஜசுமுள்ளவன் ஆனபடியினால் லவனைப்பிடித்துவந்தால் சீதாலட்சுமியம்மனிருக்கிறசமாச்சாரம் லவனாலறியலாமென்றல்லவோ சேனைகளைக்கூட்டிய

துப்பிகைத்து லவன் சிறுபிள்ளை புத்தியானதினல் டாணங்களைவிட்டுக் கொன்றுபோடுகிறுன அவனுடையசாமார்த்தியம் எவ்வளவென்று சொல்லலாமோ ன்ருர் அவ்வார்த்தையைக்கேட்டு சலவசந்தன் மறுவார்த்தைகூற இடமில்லாமல் மலைநொந்து அப்பாலிடைக்துவிட்டான் அத்தருணத்தில் தூதுவர்கள் சொல்லுகிருர்கள், ஐயா சத்துருக்கமகாராஜரே நேரும் இவ்வளவு புஜபலபாராக்கிரமமுள்ள சலவசந்தனை ா ருசலவசந்தனும் ரத வெள்ளம் ராட்சதாளும் ஆயுதாஸ்திரபாணிகளாய் லவன்முன் சென்றுநின்றெதிர்த்தாலும் லவனுடைய அஸ்திரத்தினுலே-கூ-நாழிகையிற்கொன்றுபோடுவான் லவனைப்பிடிக்கப்போன பிரமுகாளில் அஸ்திரங்களில்லாமல் யுத்தஞ்செய்து இறந்துபோனவர்களில் ஒருவனுகிலும் லவனிடம் போர்புரியாமலிறந்துபோகவில்லையேயாவருஞ்சண்டைசெய்திறந்து போனவர்கள்தானே அந்தலவனை திருமூர்த்திகளாலுஞ் செயிக்கப்போமோ வென்றுர்கள்.

அக்காலையில்சத்துருக்கமகாராஜர் சோமகாசமகாராஜனையு மட்சயந்தமகாராஜனையும்பார்த்துச் சொல்லுகிருர். ஓராஜாதிராஜர்களேகேளுங்கள் நம்முடையதண்டைஎல்லாம் ஒருமிக்கக் கூட்டிக்கொண்டுபோய் நானேமுன்னின் றந்தச்சிறுபிள்ளை லவனைப்பிடித்துக் கட்டுகிறேன் அப்படி லவனைப்பிடித்துக்கட்டாமற் போனேனேயானுல் நான்பிடித்ததுகோதண்டமல்ல என்னை ஸ்ரீராமருடையசகோதரனென்றுசொல்லவேண்டாம் லவனுடைய புஜபலபாராக்கிரமத்தை அரைக்ஷணநேரத்தில் வெளிபடுத்துகிறேன்பாருங்களென்றுசொல்லி மகாஉக்கிரத்துடனே ரதமேறிச்சாரதியையெச்சரித்துரதத்தை நடத்தினர் அதுகண்டு சகல ராஜபன்னரும் இராக்ஷதபிரேஷ்டரும் காலபலமான இராக்ஷதாளுமனத்திடங்கொண்டுரதமேறி கூடநடந்தார்கள் சேனைகளும்பின்னிடைந்து வருவதைக்கண்ட லவனுனவன்திடுக்கிட்டெழுந்து வில்லையெடுத்து தோளில்யாட்டிக்கொண்டு ரணக்களத்தில்வந்துநின்று இன்னமெவ்வளவுசேனைதான் இந்தராஜனுக் கிருக்கின்றதோசமுத்திரமடரண்டுவருவதுபோல வெகுசேனைகள்வருகின்றது நம்முடைய தமயனு மிவ்விடத்திலில்லை இப்போவருகிறவன சத்துருக்கனைப் போலும் காணகிறது வந்தாலு மென்னமாயிற்றென்று மனதைரியப்படுத்திக்கொண்டுமண்டிபோட்டு உட்கார்ந்துகலைகர்ப்பபோடுக்கூடியிருக்கப்பட்ட திவ்வியாஸ்திரங்களை யெடுத்து வில்லிற் றெடுத்திருந்தான்.

அந்தசமயத்திற் சத்துருக்கமகாராஜன் ரதத்தைவிட்டுக்கொண்டு லவனுனவன் எங்கேயெங்கேயென்றுதேடிக்கொண்டு இரணக்களத்தில் வந்துவிட்டார்கள் அப்போதந்த ரணக்களமானது எப்படியிருந்ததென்றுல் செக்கச்செவேலென்று சிவந்திறுதநோடுங்கூடிய உதிரவெள்ளத்தில் யானை தேர் பரி சேனைகளை யடித்துக்கொண்டு ஒன்னரைப்பனையுயரம்போனதுகண்டு சத்துருக்கமகாராஜன் மகா கோபதீப்தனாய் உகாரகாரத்துடன் சாரதியை எச்சரித்து ரதத்தைவிட்டுக்கொண்டு லவன்முன்வந்துநின்றுபார்த்தார் அந்த லவன் சத்துருக்கமகாராஜனுடையபார்வைக் கெத்தன்மையா யிருக்கிறுனென்றுல் பச்சைநிறமும் பவளச்செவ்வாயும் மலர்ந்தசெந்தாமரைப்போல வதனமும் அகண்டமார்பும் நீண்டகரங்களும் மணிமத்தளம்போற் புஜங்களும் ஆலிலைபோல்வயிறும் அமர்ந்தபாதமும் லட்சுமிவிலாசமானபார்வையும் தன்தமையனுன ஸ்ரீராமரைப்போல் தோற்றவே இவன் சீதையம்மன் பிள்ளையென்பதற்குச்சந்தேகமில்லை அம்மனுமிந்தவனத்திற்றுனிருக்கவேண்டும் யாவுங் கண்டறிவோமென்று உள்ளிற்களிப்பும் வெளிக்குக்கோபமாகி சொல்லுகிருர் வாராயப்பாசிறுபிள்ளாய் நீயார்உன்பேர் என்ன எனக்குத் தெரியச்சொல்லென்றுர் அவ்வார்த்தைகேட்ட லவன் சொல்லுகிருன் போம்போம் ராஜாக்களாய்பிறந்து யுத்தம்வந்தபோது சண்டைக்குப்பயந்து குலங்கோத்திரங்களையுந்தாய்தந்தைபேருங்கேட்டு யுத்தத்திற்குத் தப்பித்துக்கொள்ளலாமோ படுகளத்தி லொப்பாரியுமுண்டோ நின்று யுத்தம் பண்ணுமென்றுன் அப்படிகூறின லவனுடைய வார்த்தையைக்கேட்டு சத்துருக்கமகாராசர் சொல்லுகிருர் வாருடப்பாநான் யுத்தத்திற்குப்பயந்து உன்தாய்தந்தைபேரைக்கேட்கவில்லை உன்னைப்பார்த்தால் சிறுபிள்ளையாயிருக்கின்றுய் உன்னுடன்யுத்தம்பண்ண எனக்கு மனஞ் சம்மதப்படவில்லை உன்தாய்தந்தையின் நாமதேயத்தையும் உன்குலத்தைக்கூறுவாயாகில் அதன்பின்பு யுத்தம் பண்ணலாமென்றுர்

அதுகேட்டு லவனுனவன் இவன்தான்குதிரைக்கும் தண்டுக்களத்திற்கும்ராஜாவான சத்துருக்கன் போற்றோன்றுகிறது இவனைப்பார்த்தால் பயங்கரமாகயிருக்கிறது இவனுடைய புஜபலபாராக்கிரமமென்னமாயிருக்குமோ நமது தமையனு மருகிலில்லை இவனுல்நமக்குஇடர்வரும்போற்காணுகிறது நமது தாயார்ஜானகியம்மாள் நம்மைக்காணுமென்றேக்கமாயிருப்பாள்முன்னமேபோய்விடாமற் போனேம் ஆனுலுமென்னமாயிற்று தாயாருடைய கிருபை நமக்கிருக்கிற வரையில் யாதொருகுறையும் வந்த

நம்முடைய தமயனை இச்சங்கதியைக் கேழ்விப்படு
வாரேயானுற் சத்துருக்கனும் தண்டு பாளையமும்
அவ்விடம்போயொளித்தாலும் விடார் இந்தராஜ
னே தாய்தந்தைபேரை சொல்லென்று கேழ்க்கிரு
ன் சொல்வலாமென்று மனதை தைரியப்படுத்திக்
கொண்டு சத்துருக்கராசனைப் பார்த்துச் சொல்லு
கின்றான்.

ஓ ராசனேகேள் என்தாய்பேர் ஜானகி எங்களை
யர்பேர் வால்மீகரிஷி என்தமயன்பேர்குசலன் என்
பேர்லவன் எங்கள்குலம் எனக்கு தெரியவாதென்
ருன் அதைக்கேட்ட சத்துருக்கர் உள்ளங்களித்து
ஜானகியம்மன் இந்தவனத்திற் ருனிருக்கவேண்டும்
இவன்ரிஷிபிள்ளையென்றுகூறுகிருன் ராமரைப்போ
ல வடிவுகொண்டிருக்கிருன் மேலும் தமயனொருவ
னிருக்கிருனதுவோசமுசயமாயிருக்கிறது ஆனலு
மென்னமாயிற்று நமது குதிரையை விட்டுவிட்டா
னேயானல்சேனையையெழுப்பிக்கொண்டுபோகலாம்
லவனைக்கைப்பிடியாகப்பிடித்துராமரிடத்திற்கொ
ண்டுபோகலாமென்றெண்ணினவராய் லவனைபார்த்
துசொல்லுகிருர் அடாதம்பிலவனே நாம்விட்டகு
திரையைபிடித்துக்கட்டி என்னுடையசேனைகளைப்
பாணங்களாலடித்து கண்ட துண்டம் பண்ணலா
மோவென்றுலவன்புகன்ருன் ஐயா சத்துருக்கராச
ரேகேளும் நீங்கள்விட்டகுதிரை எங்கள்வனத்திற்
குவந்தபடியினல் பிடித்துகட்டினேன் என்கையில
கப்பட்டகுதிரையை நீவிடுவித்து உன் தமயன்கையி
ஞல் யாகஞ்செய்துவைக்கப்போகிறது ஸ்ரீமந்நாரா
யணருக்கே தெரிந்திருக்கும் உன்னைப்போல நூறு
சத்துருக்கர்வந்தாலும் நான் குதிரையைவிடேனெ
ன்று உமதுகருத்திலெண்ணிக்கொள்ளுமென்று கூ
றியலவனைப்பார்த்துசத்துருக்கர்சொலலுகிருர் வா
ராய்தம்பிலவனே நான்விட்டகுதிரை உன்வனத்திற்
குவந்து உன்னை என்னபண்ணிற்று வனத்தை யழித்
ததோ அல்லவென்றுன்பேரில்யுத்தம்பண்ணிற்ரே
என்னகுற்றஞ்செய்ததென்று என்குதிரையைப்பிடி
த்துக்கட்டி என்சேனையை இப்படிசின்னபின்னப்ப
டுத்திக்கொன்ருய் சொல்லென்றகேட்கலவன் கூறு
கிருன் ஐயாசத்துருக்கராசரேகேளும் உமகுதிரை
எனவனத்திற்குவந்து ஒன்றுஞ்செய்யவில்லை அந்த
குதிரையினுடையநெற்றியில்கட்டிய வீரபட்டத்தி
லென்ன வெழுதியிருக்கிருய் சத்துருக்கபயங்கரன்
தனுர்வேதசாஸ்திரன் ரணரங்கசூரன்சத்துருக்கன்
வருகிருன் அச்சத்துருக்கனைஜெயிக்கத்தக்கசாமர்த்
தியமுள்ளபேர் குதிரையைப்பிடித்துக்கட்டி யுத்த
த்திற்குவருகிறதென்றெழுதி கட்டியிருந்தபடியின
லல்லவோநானபிடித்துக்கட்டிபின்வந்தசேனைகளை
யுங்கொன்றேனென்ருன் அதுகேட்டு சத்துருக்கர்
யோசனைசொல்லுகிருர் வாருந்தம்பி லவனே உன்
னேடொத்தராசகுமாரன் நீயானலும் உனக்கு யா
னைதேர் பரிசேனைகளுமில்லை உன்னுடனெதிர்த்தெ
ப்படியுத்தம் பண்ணுகிறது நீ ராஜகுமாரனல்லவெ
ன்றுஞ்சொல்லுகிருய் ரிஷிபுத்ரனனபடியால் நீ பா
தசாரியாய்நின்றேயுத்தம்பண்ணுகிறவனனபடியின
லும்உன்னுடன்போர்புரிவது ராசதருமமல்ல எங்க
ளுடனுனக்குவைராக்கியம் என்னத்திற்கு குதிரை
யை எங்கள்கையிலொப்பித்து தாயுடன்பிள்ளையா
ய்ப்போய்ச் சேரென்று அதுகேட்டு லவனவர்
யோசனைசெய்து சத்துருக்கரைப்பார்த்துசொல்லு
கிருன் ஐயாசத்துருக்கராசனே நல்லவார்த்தைசொ
ன்னீர்யுத்தம்வந்தவேளையில் ராசகுமாரனென்ருல்
யுத்தம்பண்ணுகிறது ராஜகுமாரனில்லாவிடில் யுத்
தம்புரிய வேண்டியதில்லையென்றுராசநீதியில் சொ
ல்லுகிறதோ அந்தராஜநீதி சாஸ்திரத்தை நீர்தா
னேஅறிவீர் யானைதேர்பரிசேனைகளில்லாமல் பாத
சாரியாய்நின்றுசண்டைபண்ணுகிறவனேடுயுத்தஞ்
செய்யவேண்டாமென்று எந்த சாஸ்திரத்தில் சொ
ல்லுகிறது குதிரையைவிடுவிக்க சாமர்த்திய முண்
டானல் என்னைஜெயித்து குதிரையை விடுவித்துக்
கொண்டுபோம் சாமர்த்தியமில்லாவிட்டால் உன்
சேனைகளுடன் தமயனிடம் போய்ச்சேரும் உன்த
மையன்யாகம்பண்ணப்போகிறது உனக்கேதெரிய
வரு மென்ருன்அயமொழியைக்கேட்டு சத்துருக்க
ரிதென்ன சிறுபிள்ளையாவது யுகமுழுகத்தக்க வா
ர்த்தைகளைப் பேசுகிரு னிவன்பேசும் வார்த்தைக
ளைப்பார்த்தால் இரும்பையொத்த மனதைப்படை
த்தவனனலும் கலங்கி கழிச்சலெடுத் தோடிப்போ
வான்போற் காண்கின்றதென்று மனதிலெண்ணின
வாய்ச்சொல்லுகிருர்.

வாருந்தம்பிலவனே உன்னைப்பார்த்தால்சிறுபிள்
ளையாயிருக்கிருயிளங்கன்று பயமறியாதென்பது
உன்னளவிற்கண்டேனதெப்படியென்ருல் பெரியவ
ர்களாயிருக்கப்பட்டபேர்கள் அந்தக்காரியஞ்செய்
தால்நன்மைஇந்தகாரியஞ்செய்தால் துன்மை அந்
தக் காரியமாகும்இந்தக்காரியம் ஆகாதென்பதுமூ
த்தோர்சொல் வார்த்தையமிர்தமாக வெண்ணி சிறி
யோர்களா யிருக்கப்பட்டவர்கள நடக்கவேண்டும்
தன்னுலும் பெரியவர்கள்தன்னிடத்தில்வந்துபுத்தி
போசனைகள் புரிந்தால்சிறியவர்கள் கேழ்க்கவேண்
டும் அப்படிகேளாதவர்க் கிடுக்கண்வந்தெய்துமெ
ன்றசான்ருேர் சொல்லுவார்கள் ஆகையாலெங்கள்
பகையுனக்குவேண்டாம்வருடனபகைக்கில்வேரு
டன்கெடுமென்பதுஒருவனுக்கொருவன்பகையாளு

லவணுகும்பமுழுதும் நாசமடைவர் அதெப்படி
யென்றால் ஆயிரத்தெட்டண்டம் உ௪௪-புவனம் ச
த்தசாகரஞ்சூழ்ந்த ஈரேழுபதினாலுலகத்தை ஏகச்
சக்கிராமாயாண்டுக்கொண்டிருந்த அந்தராவணனை
வன் அடிப்பட்ட ராவணனைஜெயித்தவர்கள் வானர
ங்களா அவதரிக்கவும் ஸ்ரீமன்நாராயணரே ராமனாக
மூன்றுதம்பிமாருடன் அவதரித்து ராவணசம்மார
ஞ்செய்து அவனுக்குசகாயமாகவந்தவரையெல்லா
ம்ராமபாணத்தி லாயினைக் கொடுத்து தேவேந்திர
னுக்குக்கொடுத்துலங்கையைவிபீஷணருக்களித்து
அக்ராபுரியை மாயனுக்குத்தந்து இரத்தினபுரத்தை
சலவசந்தனுக்குகல்கிமுடியுஞ்சூட்டி யாகம்பண்ண
வேணுமென்று குதிரையைவிட்டுப் பின்னல் ராக்ஷ
தாளுமில்லாமல் வந்திருக்கிறார்கள் குதிரைபிடிபட்
ட சமாச்சாரங் கேட்பார்களேயானால் வந்து விடு
வார்கள் எவ்விடஞ்சென்றாலும் உன்னைவிடார்கள்
எங்கள்பகையைத் தேடிக்கொள்ளாதே யென்றான்

அப்படிசொன்ன சத்துருக்கனுடைய வசனங்க
ளையெல்லாம் லவன்கேட்டுகுலுங்கநகைத்து ஓ சத்
துருக்கராசனே என்னுடன்யுத்தம்பண்ண நடுங்கிக்
கொண்டுஇப்படி பெரும்பொய்யைபுகன்றால்லவன்
பயந்து ஓடிப்போவானென்றுநினைத்தீரோ அப்படி
யோடத்தக்கவனல்ல ஆதிபராபரவஸ்துவாயிருக்க
ப்பட்டநாராயணரேஎன்னுடன்வந்தெதிர்த்தாலும்
நன்றாய்ப்பூசைசெய்து எமலோக மனுப்பிவிடுவேன்
அதிருக்கட்டுமிப்போது உனக்கு சாமர்த்திய முண்
டானால்குதிரையைவிடுவித்து கொண்டுபோம் குதி
ரையைவிடுவிக்க சாமர்த்தியமில்லாவிட்டால் ஓடிப்
போவென அப்படிசொன்னவனுடைய வார்த்தை
யை சகலராசாக்களும் ராட்சதசிரேஷ்டர்களுங்கே
ட்டுமனநடுங்காகோபங்களாகி சத்துருக்கருடைய
முகத்தைப்பார்த்தார்கள் அதுகண்டு சத்துருக்கர்
இன்னம்லவன்என்னதான் சொல்வானேபார்ப்போ
மென்றகோபத்தை மனதுள்ளடக்கிக்கொண்டு யா
தொன்றுஞ்சொல்லாமல் மௌனமாயிருந்து விட்
டார்அப்போது லவனைவன் சத்துருக்கனைப்பார்
த்துச்சொல்லுகிறான் ஓ சத்துருக்கராசனே நீயோ
ராசனென்றமுகத்தில்மீசையைவைத்துக்கொண்டு கை
யிற்றனுசைபிடித்திருக்கிறாய் நீதானேகுதிரையை வி
டுவித்துஉன்தமயனான ராமன்கையால் யாகம்பண்
ணிவைக்கப்போகிறாய்உன்னோடொத்த ராசாக்கள்
எல்லோரும் உன்முகத்தை எறப்பார்க்கிறார்கள் உ
னக்குரோஷந்தானில்லையோ உன்னைத்தானே ரண
ரங்கசூரனென்று குதிரைபின்பின் அனுப்பினார்கள்
அவர்களுடையதிறமையும்உன்னுடையசௌரியமு
ம்சேனைகளின் புஜபலபராக்கிரமம் உன்னளவிற்கண்
டேனென்றான்.



சத்துருக்கமகாராசனுக்கும் லவனுக்கும்யுத்தம்.

விருத்தம்.

காலனென் றெதிர்த்தோன்றன்னைக்காலனர்வ
சமேசெய்யப் பாலனும்லவன்றன்வீரம்படையுளோ
ன்றறைபக்கேட்ட, நீலமேனியனர்தம்பி நிகரில்சத்
துருக்கன்றானும், ஆலகாலம்போற்சீறி வமர்செயத்
தொடங்கினனே.

வசனம்.

அப்படிகூறியலவனுடையவார்த்தையை சத்துரு
க்கமகாராசன்கேட்டு கண்களிரண்டும் செவவானம்
போற்சிவக்க காதுகளிரண்டும்புகையெழும்ப கைக
ளிரண்டும்பதைக்க சரீரமெங்குந் துடிக்க மீசைகள்
படபடவென்றுதுடிக்கமுகங்களில் அக்கினிப் பொ
றிகளெழும்பவந்தகோபத்தை தேவர்கள்கண்டுலவ
னிறந்தும்போவானென்று மனதிலெண்ணிப்பார்த்து
கொண்டிருந்தார்கள் அப்படி சத்துருக்கருக்கு
கோபமுண்டாகி மறுபடியும் பிள்ளையென்றபாசமா
னது வந்தடைந்துகோபத்தைத் தணித்துவிடவே
சத்துருக்கர் சொல்லுகிறார் அடாலவனே சிறுபிள்
ளைபயமறியாதென்பதுபோல் நயமானவார்த்தையி
னால் நீபயனடைவாயென்று செபம்பொருந்திய ரா
சாக்களும்ராட்சதசிரேஷ்டர்களுமவந்து கூறியதை
அறிவிட்டாய் தனக்குத்தானே மீறிவிட்டாய் இப்
போது என்னையுந்தூஷித்தாய்பார்க்குங்காலம் நில்
லாது அம்புவிக்கதுசெல்லாது அனித்தியத்திற்கது
பொல்லாது அப்போததுவெல்லாது அகலா நீக்கு
நானறைவதை நீவிசேஷத்தைமிஞ்சாதேசிறுபிள்ளை
யென்று உன்னை சும்மாவிட்டுவிட்டேன் நீசொன்ன
விசேஷம் எனனிடத்தில் மற்றொருவர் சொன்னால்
இந்நேரம் எமலோக மனுப்புவேன் வீணிலிறந்து
போகவேண்டாம் குதிரையை எனனிடத்தி லொப்

பித்து தாயுடன் பிள்ளையாக சேவென்றார் அதுகே
ட்டு லவணனவன் பல்லைநறநறவென்று கடித்து கடு
கடுத்துஓசத்துருக்கனே உனக்கு எத்தனைவிதத்திற்
சொன்னாலும் வெகு நீதிமார்க்கங்களை பேசுகிறாய்
நீதானேபெரியவனென்றுகைவீசுகிறாய் அதுவேண்
டாம் உன்னுடையபுஜபலபராக்கிரமத்தையும் உனை
க்குமின்பலனைய்வந்தராசாக்கள் ராட்சதருளுடைய
சாமர்த்தியத்தையும் இதோ ஒரு க்ஷணத்திற்குள்
யானறிவிக்கிறேன்பாரென்று தன்கைநாட்சாத்தை
பூட்டி சாம்பிராணிதூபங்காட்டி சத்துருக்கராசன்
பேரில் விட்டுவிட்டானந்தபாணமும் வில்லைவிட்டு
விடுபட்டு அதிகவேகமாய் பெருந்தொனியோடுவரு
வதைசத்துருக்கர்கண்டு பாலன் மிஞ்சனுனென்று
வெருண்டு தானும வில்லையெடுத்து திவ்யாஸ்திரத்
தைதொடுத்து மந்திராபூதிகொடுத்து லவன்விடப்
பட்டபாணத்தை யறுத்து மறுபடியும்அப்பாணம்
லவன்பேரிற்போகவொட்டாமல திவ்யாஸ்திரத்தை
தம்மிடத்திலழைத்துக்கொண்டார் இனிவிடப்போ
கிற அஸ்திரங்களும் இந்தப்படியா யென்றறிந்துக்
கொள்ளுங்கள்.

அதுகண்டு லவன்கோபமாகி முதற்கோணல் மு
ற்றுங்கோணலென்பதைகண்டவனாய் விண்டலமண்
டலமண்பாடுகள் கண்டு பயங்கொண்டு வாடவுந்த
ண்டுகமண்டலங்கொண்டவர்கள்பார்த்து முகம்வே
ர்த்து பயம்பூர்ந்துஇடம்வேர்த்துஓடவுமக்கணம் சுழ
ற்பாணத்தை எடுத்துவில்லிற்றொடுத்து சத்துருக்க
ராசருடையரதத்தைப்பார்த்துவிடுத்தானந்தசுழல்
பாணம் காகரவென்றுசுழன்றுக்கொண்டுசண்டமா
ருதம்போல் உயரக்காற்றுக ளெழும்பி அதிவிரை
வோடும்வருகையிற் சத்துருக்கராசனும் ஒரு சூரா
வளிஅஸ்திரத்தைஎடுத்துவிடுத்தார் அதனால்திக்கு
கள்நடுங்கதேவர்கள்ஓடுங்க ஏழுகடலுமவரளயட்
சயமின்லார்மனமானதுபுரளஆகமவேதங்கள்பாட
அன்பர்மனதடங்க புறப்பட்டுவந்து லவனுடைய
சுழற்பாணத்தையறுத்தெறிந்துப்போயிற்று அதனு
லவனனவன்சீறிகோபமீறி நூறுதிவ்யாஸ்திரங்களை
வாரி இந்திரன்முதலானோர்சிந்திக்கும்படியாய் வந்
தனை வழிபாடுசெய்து மந்திராபூதிகள் கொடுத்து
விடுவிக்கவே அதுகள் ஒன்றேடொன்றாய்ந்துக்
கொண்டு அக்கினிப்பொறிகள் சிதறவருகிறபோது
சத்துருக்க மகாராசருந் தம்முடைய ராமபாணமா
கிய ஐம்பது திவ்யாஸ்திரங்களை வில்லிற்றொடுத்து
அபதிபமகொடுத்துவிடுத்தார் அந்ததிவ்யாஸ்திரங்
கள் வில்லைவிட்டுவிடுபட்டு தகத்தகாயமாக காட்டு
க்குளுடன் பின்புபட்சியிறகுபூண்ட அஸ்திரங்கள

ளை ஆலகாலவிஷம்போற் சீறிக்கொண்டுபோய் ல
வன்விட்டநூறு திவ்பாஸ்திரங்களையுமறுத்து பூமி
யிற்றள்ளிவிட்டு சத்துருக்கராஜன் அம்புறுப்பொதி
யில்வந்தடைந்தது அதுபோகலவன் நூறநாராசபா
ணங்களை எடுத்துவிடுத்தான் நூறு நாராசபாணங்
கள் நாகசர்ப்பம்போலிரைச்சலிட்டுக்கொண்டு தம்
முடைய ராமபாணமாகிய இருபத்தைந்து நாராச
பாணங்களைஎடுத்துவிடுத்தான் அதுகள்பூமியாகாய
மெல்லாம் புகையெழும்ப புறப்பட்டு லவன்விட்ட
நூறுநாராசபாணங்களை யறுத்துபூமியிற்றள்ளி சத்
துருக்கராசனிடம் வந்துவிட்டதுகள் உடனே லவ
ணனவன் ஒரு அக்கினியாஸ்திரத்தையெடுத்து மந்
திராபூதிகள் கொடுத்து விடுக்கவே அதுவும்வடவா
முகாக்கினியைப்போல பொரிபுகைகளுடன் சடச
டவென்ற தொனிகளுடன் மகாதுரிதமாய் வருகிற
போது சத்துருக்கர் தம்முடைய ராமபாணமாகிய
அக்கினியாஸ்திரத்தைஎடுத்துமந்திராபூதிகள்கொ
டுத்து விடுக்கவே அதுவும்ஆவென்று வாயைத்திறந்
துக்கொண் டக்கினிப்பொறிகளை அமோகமாக கு
பீலென்று கக்கிக்கொண்டு புறப்பட்டுலவன்விட்ட
அக்கினியாஸ்திரத்தை கபளீகாம் பண்ணிப்போ
ட்டு வந்துவிட்டது.

இப்படியாகலவன்விட்ட பாணங்களையெல்லாஞ்
சத்துருக்கரானவர் கண்டித்து லவனுக்கு காயம்ப
டாமற்செய்துவருகையில் லவணனவன் கண்டு மன
பயங்கொண்டு கண்களிரண்டுஞ் சிவந்துமருண்டு ஓ
கோமலைபோலவந்த ராக்ஷசவீரர்களை வைது சிலை
களையுந்தலைகளையுங்கொய்து நிலைகலங்கச் செய்தது
மன்றி ராசர்களான மன்னர்களையும் சின்னமடைய
வின்னப்படுத்திநாம் இம்மன்னன்கையிலகப்பட்டு
முன்னும்பின்னுமுழிக்கலாயிற்று என்னசெய்வேன்
ஐயோ அம்மணிநானிவ்வளவுபாணங்களை விட்டும்
எதுவும்படாமற்கெட்டுப் போயிற்றல்லவா நல்லது
இன்னமும்பார்ப்போமென்று ஒரு பர்வதாஸ்திரம்
எடுத்து மந்திராபூதிகள்செய்து எய்தான்.

அப்பர்வதாஸ்திரமானது வெளிப்பட்டு அநேக
பர்வதாஸ்திரங்களாய் உருவுண்டாக்கி சத்துருக்க
ராசன்பேரில்வருகிறபோது அவரும் ஒருவச்சிராயு
தத்தைஎடுத்து மந்திராபூதிகள்செய்து பர்வதாஸ்
திரத்தையறுத்துப்போடவே லவனகண்டு மனத்தி
டங்கொண்டுமறுபடியுஞ்சதுதியில் வில்லையெடுத்து
நிறுத்திநோய்ப்பிடித்தான் அதனைக்கண்டுசத்துரு
க்கர்நகைபுரிந்து இவன்சிறந்தெரிந்து மனதிற் களி
ப்புகொண்டவராய்வரும் தம்பிலவனே என்வீணில்
மாண்டுபோகிறாய் வேண்டாம் வேண்டாம் குதிரை

கைவிட்டு தாயுடன் பிள்ளையாகப் போய்ச்சேர்ந்து மன்னனுடைய சேனைகளை எழுப்பிக்கொண்டு குதிரையுடன் அயோத்திக்குப் போய்ச்சேருகிறேன நீ சிறுபிள்ளையானபடியால் முன்பின் யோசனைசெய்யாமல் என்சேனைகளைமாய்த்தாய் பெரிதல்ல போருக்கு நோகமாட்டாயென்று கூறியதை லவன்கேட்டு ஓ சத்துருக்கனே கேளும் நீ என்ன பிரியவசனம் புகன்றுமுன்னைவிடேன் பயப்படேன் என்றிருவரும் வாதாடிக்கொண்டிருக்கையில் பாலசித்தனானவன் பாணவேகமடங்கினவுடனே அதிவேகமாய் ரதத்தைநடத்திக்கொண்டுரணக்களம்வந்து சத்துருக்கருடன்கலந்து அவருடையவிசேஷமென்ன பிறக்கிறதோவென்று அநேக ஜாக்கிரதையுடன் பக்கத்திலிருக்கையிற் சத்துருக்கர் லவனைப் பார்த்துச் சொல்லுகிறார்.

வாராய்தம்பிலவனே நான்யுத்தத்திற்கு உனக்குப்பிரியவசனம்சொல்ல வரவில்லை சிறுபிள்ளையானபடியாலுனக்குப்பிரியவசனம்புகன்றேன் அதனாற்குற்றமொன்றுமில்லை என்றுசொல்ல லவன் அதிககோபமாகி ஓ சத்துருக்கனே நானென்னசொன்னபோதிலும்உனக்குரோஷத்துவேஷமில்லை ஆனபடியினாற் சிறுபிள்ளையினுடைய சாமார்த்தியத்தை இதோகாண்கிறேன் பாரென்று முகதனுக்கு நேராய்பிடித்தவில்லிலநேகவஸ்திரங்களைசந்தித்து-௧-௰-௱-௲-௰௲-கோடி-சங்கம்-மகாசங்கமென்று சமுத்திர ஜலத்தையெடுத்துப்புறக்கவிழ்த்தாலெப்படியிருக்குமோ அப்படியாக ஒய் ஒழிச்சலில்லாமலும்மூச்சுவிடாமலும் சாசாவென்று பொழிகிறபோது சத்துருக்காசனுமிதமில்லாத பாணங்களை வாரிவாரி விறவிறென்று பொழிந்துலவன்விட்ட அஸ்திரங்களனைத்தும் ஒன்றுவதுசேனைகள்பேரில் போகவொட்டாமலறுக்கறுக்க அவ்வம்புசரீரத்திலும்வந்து பாயவுஞ்சேனைகள்பேரிலும் போய்விழுந்துசேனைகளுபாணத்தலைப்பட்டார்கள்.

பின்னுமலவன் மண்டிபோட்டவண்ணம் பாணங்களெடுக்கிறதும் வில்லிற்றொடுக்கிறதும் தேவர்களுக்குத்தெரியவில்லையாம் இவனுடைய கரவேகசரவேகந்தான் எவனமோவென்று கண்ட ராசாக்கள் யாவரும்நடுங்க ராக்ஷதருமொடுங்கசேனைகள்சிதறிக்கைபதறி இந்தசேவகம்நமக்கு வேண்டாம்வேண்டாமென்று உயிருண்டானால் உப்பாறிபிழைக்கலாமென்றுநினைவுகொண்டிருக்கையில் கால்பிலமானராசாக்கள்பயங்கொண்டு இந்தசண்டையில் மண்டைபோமோ தொண்டைபோமோ அண்டைகெருக்கினாற்கண்டம்போமோகண்டிலோம்லவனே உன்வில்லுக்கோதண்டபாணத்திற் கிருகோடிதண்டம் உன்பாதத்திற்கு முக்கோடிதண்டமென்று கண்டாண்டவிடமாய் இனி அண்டேமென்றோடும்படியாய் சாடுகிறபோது சத்துருக்கராசனுக்கும் லவனுக்கும் மெய்மறந்துபோகிறதாம்யுத்தமானது அந்தயுத்தம் எத்தன்மையொத்ததென்றால்லட்சுமணரும் இந்திரசித்தும் புரிந்ததும் ராமரும் அதிகாயனும்போர்செய்தமைபோலுமிருந்தாய் அப்படியாகலவன் பாணங்களைவிடுகிறபோது சத்துருக்கராசர் எத்தனைபாணம் விடுப்பார் எத்தனைபாணம் குறிப்பார் இங்குபாணங்கண்டிப்பார் இங்குபாணமங்குபாணம் எங்கு பாணமாம் கிழக்கு தெற்குஞ்சாமேற்குஞ்சாம் வடக்குஞ்சாமாக நான்குதிக்கும் லவனுடைய பாணவேகமானது மூடிக்கொள்ளவே அதனாற்சத்துருக்கருடைய கையுமெய்யுஞ்சலித்து மண்டிபோட்டகாலும்வலித்துக்கொள்ளுதாம் அதுவுமன்றிபாணங்களுடைய அக்கினிவேகத்தால் முகமுமகமுந் தீய்ந்துபோகிற தாமதனை அந்தரவாசிகளாகிய இந்திரனும்தேவர்களும்பார்த்து இந்தயுத்தம் ராமர்ராவணயுத்தமென்று சொல்லலாமோ அல்லது சுப்பிரமணியருஞ் சூரபத்மனுஞ் செய்தயுத்தமென்று தான்சொல்லலாமோ இந்தயுத்தத்திற் கெதுவும இணைசொல்லப் போகாதென்று பார்த்துக்கொண்டிருக்கையில் லவனானவன் பாணங்களைமட்டிட்டுச்சொல்வதற்கு தட்டுப்படாத கட்டுகட்டாயுருவிவிட்டு ஒருவர்க்கொருவர் தெரியாமல்விடும் அஸ்திரங்களினால்மூடி அந்தஅஸ்திரம்போகிற வேகத்தோடுகூடஅதிவேகமாகஓடிவந்து சத்துருக்கருக்குந் தெரியாமல் அவருடையகைவில்லையுங் கண்டித்துத்தள்ளி அவருடையமார்பைப்பார்த்து நாற்பதுநாலுசபாணங்கள்விட்டான் அதுகண்டுசத்துருக்கராசர் அதிசீக்கிரமாகவில்லையும் நாணியையுமிருகப்பார்த்துஒருதிவ்யாஸ்திரத்தைஎடுத்து வில்லிற்சந்தித்துவிட்டு லவன்விட்டபாணங்களையெல்லாம்பகலவனை பனிபோலநீக்கிவிட்டவெளியாக்கிஅட்டகாசஞ்செய்து அதிசீக்கிரமாக பின்னுஞ்சிலசரங்களை எய்துநாற்பது நாலுசபாணங்களையும் ஒரு.ராமபாணம்விட்டுலவன்பிடித்திருந்தவில்லையுங் கண்டித்துப்போட்டார்.

உடனேலவனானவன்வில்லையெறிந்துவிட்டுஉடைவாளையுருவிகொண்டுமுன்கர்ந்து பின்கர்ந்துமுப்பத்திரண்டுகேர்ந்துகொண்டுசத்துருக்கராசனை அரவெட்டவேணுமென்று சேற்கெண்டையானது சிவ்வென்று பாய்வதுபோற் பாய்ந்துவருகிறபோது சத்துருக்க

ராசன் ஒரு ராமபாணம்விட்டு உடைவாளை பொடி
யாக்கிப்போட்டாரதுகண்டு லவன் சினங்கொண்டு
சொல்லிக்கொள்ளுகிறான் அந்தோ கைவில்லையுங் க
ண்டித்தான் உடைவாளையுந் துண்டித்தான் இவன்
வல்லமைக்கு நிகர் இவ்வெல்லையிலொருவரு மில்லை
யென்று சொல்லுதற்கு ஐயமுண்டோ நல்ல இன்
னம்பார்ப்போமென்று இடுப்பிற்கட்டிய முப்பத்திர
ண்டாயுதங்களையும் நிவ்வுறிவ்வென்று சத்துருக்க
மகாராசன்பேரில்விட்டெறிந்தானதனால் சத்துருக்
கமகாராசனும் ஒருபாணம்விட்டுவருகிற ஆயுதங்க
ளையெல்லாந் துண்டுதுண்டாய் கண்டனம் பண்ணி
விட்டு லவனைப்பார்த்துச் சொல்லுகிறார்.




லவன் சத்துருக்கனிடத்தில் கட்டுப்படுதல்.

கலிவிருத்தம்.

உம்பர்வாழுலகமெங்கு மிருதிறவர்சளாற்பெய்த
அம்புகனெருங்கசிவராவியைக்கவருங்காலில்(தான்
சத்துருக்கன்தொட்ட சரமதால்மண்மேற்சாய்ந்
சிம்புளாம்லவனைத்தாவி திறமுடன்கட்டினானே.

வசனம்.

அடாதம்பி லவனே இனியாகிலும் எங்கள் குதி
ரையைவிட்டு நீசுகமாய் நடந்துவிடென்று கூறவே
லவனதிககோபமாகி சத்துருக்கனே நானே சூரா
னென்றுரதத்திலேறி நின்றவில்லைக்கையிற்பிடித்த
படியாகவல்லமைபேசின உன்னை யிதோ என்கைக்
கத்தினாற் குத்திவில்லையுமொடித்து உன்னமடித்து
எமலோகத்திற் கனுப்பிவிடுகிறேன் பாரென்கையை
மூடிக்கொண்டோடிவருகிறபோது சத்துருக்கராசர்
கண்டு இதுதான் லவனைபிடிக்கசமயமென்று ரதத்
தைவிட்டு குதித்து இடசாரிவலசாரியாகவந்து லவ
னுடையபிடிப்பிற்கையைக்கொடுத்து பிடிக்கப்போ
குஞ் சமயத்தில் லவன்கண்டு சிவ்வென்று பாய்ந்து
இப்பால்வந்துவிட்டான பின்னுஞ்சத்துருக்கராசர்
கோபங்கொண்டு மறுபடியும் லவனைசேர்த்துப்பிடி
க்கச் செல்லுகையில்லவனுமதற்கு தப்பித்துக்கொ
ண்டான் அதனால் சத்துருக்கராசன்கண்களிரண்டு
ஞ்செவ்வானம்போற் சிவக்க விழியை யுருட்டிப்பா
ர்த்து லவனை பாணத்தினாற் கட்டவேணுமேயலலா
மல் மற்றவிதத்தில் பிடிபடமாட்டான் லவனோடு
இனிபோராட்டமென்னத்திற்கென்று ரதத்திலேறி
சீக்கிரமாகவில்லையெடுத்து ஒரு கட்டுபாணத்தைப்
பிடுங்கிவில்லிற்சந்தித்துவிட்டு லவனைக்கட்டி மூர்ச்
சையாக்கி தேரின்பேரிற்கொண்டுவந்து குசதுக்கா
னுடன் கட்டிப்போட்டார் அதுகண்டு தேவர்கள்
சத்துருக்கனைமெச்சிக்கொண்டாடி அப்போது ரா
சாக்களும் ராட்சத சிரேஷ்டர்களும் கால்பலமும்
லவன் பிடிபட்டான் இனிநாம்பிழைத்தோமென்று
செயபேரிராயபேரி வெங்கலபேரி கர்ணா பூதப்பட்
டம் இப்படிசொல்லப்பட்ட முப்பதிரண்டு மேள
வாத்தியங்களுந் தாம்தாமென்று முழங்கச்செய்து
அஸ்வமேதக்குதிரையைக் கூட்டிக்கொண்டு சரஸ்
வதிஆற்றங்கரையில் வந்து கூடாரமடித்து தண்டு
பாளையமிறங்கிஇறந்தசேனைகளை எழுப்பிக்கொண்
டிருந்தார்கள்.



வனத்துப்பெணகள் லவன் பிடிபட்டதை
சீதையம்மனுக்குச் சொல்லல்.

கலிவிருத்தம்

வன்மைசேர்லவனுக்குற்றவன்மையைகண்டமா
தர்,துன்மெனனிலத்திற்சாய்ந்துசோர்ந்து பின்தெ
ளிந்தெழுந்து, கண்புனலுகுத்தல்செய்துகாரிழைக்
குரைப்போமென்று, மணம்புகழ்சீதாதேவிமலரடி
தொழுதுசொல்வாம்.

வசனம்.

அப்படி லவன்சத்துருக்கனிடத்தில் பிடிபட்டுப்
போகஇதுகளெல்லாம்வனத்துபெண்கள் தூரத்தில்
நின்றுசெடிமறவில்பார்த்துக்கொண்டிருந்து ஐயை
யோ லவகுமாராவென் றடித்துமோதி பூமியில்விழு
ந்தலறியெழுந்து வால்மீகருடையவனத்தைநோக்கி

அழுதுகொண்டிருக்கிறார்கள் எப்படியென்றால் அடா தம்பிலவனே சீதாலட்சுமியானவள் எங்களை லவகுமாரனெங்கே யென்று கேட்டால் நாங்களென்ன சொல்வோம் உன்தமயன் குசலனுக்கு யாதுமறுதலை புகல்வோம்தம்பி இதற்கோ நாங்கள்கூடவந்தோம் எப்படிசொல்வோம் இருவரிலொருவராவது வருவீர்களேயானால் பிரியமாகப்பெற்ற உரிய அன்னைக்கு பிரிவுண்டாகும் அறியாதவர்களோடு தெரியாமல் வந்தோமே உங்கள்சொல்லும் கல்வியும்சவுரியமும் சீதையம்மன் காண்பாள் ஒருத்திலாசைபூண்டாள் அதுவுமின்றி உங்களையாவால்மீகர்காலையுமாலையுமுங்கள் கனிவாய்மொழியைக்கண்டு கமண்டலத்தெண்டுவிட்டு கையிலெடுத்துகனிவுடன் முத்தங்கொடுத்து கருத்துற்றுக்கவலையற்று காத்துக்கொண்டு வளர்த்து வந்த செல்வர்களே அவளென்னசெய்வாளோ அப்பா லவகுமாராவென்று தாரை தாரையாகக்கண்களில் நீர்பெருகி அழுது ஆண்டவனைத்தொழுது அப்பாகுசலா வேட்டையிற் றனித்தாயே நீபோவது உன்தாயிடம்வந்து சேர்ந்தாயோ அரிஅரிஅச்சுதாபரந்தாமா ஆபத்பாந்தவாவென்று அழுது புலம்பி காடுவனங்களைத்தாண்டி சீதையம்மனிருக்கும் பர்ணசாலைக்குவந்தார்கள் அப்போது சீதையம்மன் எப்படியிருக்கிறாளென்றால் மைந்தர்களை வேட்டைக்கனுப்பினேனே அஸ்தமித்து ௫-நாழிகை யாயிற்றே காலை ௮-நாழிகைமாருக்கு போன பிள்ளைகளை இதுவரையிற்காணோமேயென்றுமனங்கலங்கி குசலவாள்வருகிற வழியைப்பார்த்துக்கொண்டு சீதையம்மன் பர்ணசாலையிலிருந்தாள்.

அப்பால்தாதிப்பெண்களானவர்கள் அழுதுகொண்டு சீதையம்மனிடஞ் சென்று அடிவணங்கிநின்று சொல்லுகிறார்களம்மா உன் குமாரர்களிருவரும் உன்னிடத்திற்செலவுபெற்றுக்கொண்டு வனத்திற்சென்று வேட்டையாடி திரும்புங்காலையில் குசலவன் மேல்கோக்கிமறுவனம்வேட்டைக்குப்போனான் லவகுமாரன்நாங்களும் பர்ணசாலைக்குவருகையில் ஒரு அஸ்வமேதக் குதிரையானது பார்விட்ட குதிரையோ தெரியவாரது அக்குதிரையின் பின்வந்த சேனைகளையுங்கொன்றுவிட்டான் அதன்பின்பு யானை குதிரை சேனைகளும்வந்துகூடி லவனுடன்போராடி லவனைகைப்பிடியாகப்பிடித்துக்கட்டிரதத்திலேற்றி கொண்டுபோய் சரஸ்வதியாற்றிலெல்லோருங் கூடாரம்போட்டுதண்டிறங்கியிருக்கிறார்கள் இந்நேரந் தம்பிலவனை யென்னசெய்தார்களோ ஏதாயிற்றோ தெரியவாரதென்றார்கள் அதுகேட்டு சீதையம்மன் அடித்துமோதி அலறிவிழுந்து கடகடவென்று புரண்டழுது களையாகவே தாதியர் அம்மனையெடுத்து களையாற்றினார்கள் அப்போது சீதாலட்சுமியானவள் களையாறியெழுந்திருந்து எப்படி யழுது புலம்புகிறாளென்றால் ஐயையோ லவகுமாரா உங்களையர் வால்மீகரில்லாதவேளையில் எவனையிப்படிதனிமையாய்விட்டு வஞ்சனைசெய்து போகலாமோ உன்தமயன் குசலனில்லாதவேளையில் குதிரையைப்பிடித்துக்கட்டி யுத்தஞ்செய்யலாமோ யுத்தம்பண்ணினும் எதிரிகள் கையிலகப்பட்டு மாண்டுபோவாயென்று இதுவரையிலிதற்குத்தானோ வளர்த்தேனடா மகனே லவகுமாரகா எதிரிகள் கையிலகப்பட்டவுன்னை என்னசெய்தார்களோ யாதொன்றுமறியேன் நான் என்பிராணநாதனைவிட்டு பிரிந்தவிசனத்தை உங்களால் மறந்தேனவராசையைத்துறந்தேன் அயோத்தியின்வாழ்வையும்நீக்கினேன அப்பா லவகுமாரா உன்னைகைப்பிடியாகப் பிடிக்கையில் நீஎவ்வாறுய்க்கதறிபழுதாயோ உன்கையில் வில்லம்பு யில்லாமற்போய்விட்டதோ ஐயையோ லவகுமாரா அயோத்தியையாசாள்வாயென்று அதிக ஆவலோடு உங்களையருமநாளும்நம்பியிருந்த எங்களை வெம்பவைத்து நமனுக்கிறையானயோ உன் தமயன்வந்து தம்பிலவனெங்கே யென்றுகேட்டால் என்னசொல்வேன்வால்மீகருக்கேதுரைப்பேனென்று சீதையம்மனவள் புலம்புகிறசத்தத்தை அந்தவனத்திற்குள் வருகிறகுசலவன் கேட்டுதிடுக்கிட்டு நாமவரவில்லையென்று நமதுதாயார் அழுகிறப்போல் காண்கிறது அதனைசல்தியிற்சென்று கண்டறியவேணுமென்று பர்ணசாலைக்குவந்து அம்மாநானிதோவந்தேனழவேண்டாமென்று பாதத்திற்பணிந்தான் அப்படி வணங்கியகுசலனையெடுத்து வாழ்த்தி உட்காரவைத்துசீதையம்மன் சொல்லுகிறாள் அடா குசலனே உன்தம்பிலவனை எங்கேவிட்டாய் உங்களையர் வால்மீகரிலலாதவேளையில்லவனும்நீயும் வேட்டையாடச்சென்றீர்கள் அவ்விடத்திலெங்கே கைசோரவிட்டாயென்றாள்.

அதுகேட்டு குசலவன் சித்தம்நொந்துமெத்த வருத்தம்வந்து தம்பியை தனித்தனுப்பினேனும் எங்குநின்றானோ எவ்விடஞ்சென்றானோ என்செய்வோம் தெய்வமேஎவ்வாறினி வாழ்வோமென்றெண்ணி இதயங்குணக்கடவுளை எண்ணிதுதிபண்ணி இதுகாலகதியோ காரணவிதியோ யார்செய்சதியோ தம்பியின்மதியோ தாயின்வாய்மொழியைத்தடுத்துசென்றோமே அதனாலோ ‘தாய்சொற்றுறந்தால் வாசகமில்லை’ எனபதைமறந்தோமென்று வெரும்பியகும்பியையாற்றிப்பின்புபோய் தேடலாமென்று தயிரியங்கொண்டு சொல்லுகிறான் தாயே நாங்களிருவரும் வேட்டையாடி ஆசிர்மந்திரும்புங்காலையில் தம்பிலவனைமுன்னதாகவனுப்பிவிட்டு நான்மறுவனந்தே

டிவேட்டைக்குபோயிருந்தேன்நான் பொய் சொல்லவில்லை இந்தவனத்துப்பெண்களைக்கேட்டால் சொல்லுவார்களென்றான் அதைகேட்டுசீதையம்மன்சொல்லுகிறாள் அடாமகனேகுமாராத்தினமே உன்தம்பி ஆசிர்மம்வரும்போது வனத்தில் ஒரு அஸ்வமேதக்குதிரைமேய்ந்துக்கொண்டிருந்ததாம் அதைலவன் பிடித்துக்கட்டி குதிரையின்பின் தேர் பரிசேனைகளோடுமுனைந்துயுத்தம்பண்ணுகையில் தம்பிலவனுக்குவில்லம்பில்லாதபடியினால் எதிரிகளவனைக்கைப்பிடியாகப்பிடித்துக் கொண்டார்களாம் அவர்கள்சரஸ்வதியாற்றங்கரையோரந்தண்டுவிட்டு பாளையமிறங்கியிருக்கிறார்களாம்அவர்களுக்கோரதகஜதுரகபதாதிகளிருக்கிறதாம் உங்களுக்குயாதுமில்லையே நமது ஐயர்வால்மீகரிவ்விடமிருந்தால் ரதகஜதுரகபதாதிகளுமுண்டுபண்ணிக் கொள்ளலாம் அவரில்லாதவேளையில் நான் வனவேட்டைக்குப் போகவேண்டாமென்றுகூற என் வார்த்தையைத் தடுத்துப்போன உங்களுக்கு அபஜெயம்வந்ததே இனி நானென்னசெய்வேன் மகனேயென்று புலம்புகையில் குசலன்சொல்லுகிறான் அம்மணி ஒருநாள் நானும் ஐயர் வால்மீகரும் தனித்திருக்கையில் ஒரு சுலோகஞ்சொல்லி என்னையதற்குபொருளென்னவென்று கேட்டார் அப்பொருள் தெரியாமல் சற்றுநேரஞ்சும்மாயிருந்துவிட்டேன் அதற்கவர் என்மீதிற்கோபங்கொண்டு அந்தச்சுலோகத்திற்கு அர்த்தஞ்சொன்னாதெப்படியென்றால் கைலாசவாசராகிய பரமசிவனிடப்பாகத்திலமர்ந்த உமாதேவியும் வைகுந்தவாசராகிய ஸ்ரீமந்நாராயணருடைய மார்பிலுறைகின்ற மகாலட்சுமியும் இம்மூன்றுருபமும் ஒரு ருபமாயிருக்கப்பட்ட உன்தாயார் சீதாலட்சுமி யென்று தெரிந்துக்கொள்ளுவாய் குசலனேயென்றுஇன்னுஞ் சிலாகசியப்பொருள்சொல்லி மனதில்வைத்துக்கொள்ளென்று சொன்னார்.

அப்படியெல்லாம்எங்களையர்வால்மீகாருளிச்செய்திருக்க எங்களுக்கு யானைதேர் பரிசேனைகளில்லையென்றும் லவனைப்பிடித்து கட்டிக் கொண்டுபோய்விட்டார்களென்றும் நீசொல்லலாமோ இந்தயீரேழுபதினாலுலகத்தையும் கவிழ்த்துவிடவேணுமென்றாலும் கவிழ்ப்பாய்நிறுத்தவேணுமென்றாலும் நிறுத்திரட்சிப்பாய் எங்களுக்கு ரதகஜ துரகபதாதிகளில்லாவிட்டாலும் லோகமாதாவானநீர் ஆசிர்வாதஞ்செய்துக்கொடுக்க ஒருவில்லம்புஉனக்கரிதாய்போமோவென்று ஸ்தோத்திரம்செய்யவேசீதாலட்சுமிக்கு பூர்வகஞானமுதித்து இனிகுசலவனால் நடக்கப்போகிறகாரியங்களும் அதன்பிறகு தன்பதியிற்றான்போய்சேருகிற காரியங்களுந்தெரிந்துசந்தோஷமாகி குசலனைப்பார்த்து கிருபைகூர்ந்து சொல்லுகிறாள்.

அப்பா குசலவனே எதிரிகள்விடப்பட்ட அஸ்திரத்திற்கு இந்தபிர்மாஸ்திரத்தைவிட்டறுத்துப்போடுநாராயணாஸ்திரங்களெய்தால் நீயிந்நாராயணாஸ்திரத்தையெய்து அறுத்துவிடுசிவன்சூலமும் பாசுபதாஸ்திரம் பிரமதண்டும்எதிரிகள் விடுத்தால் ஸ்ரீமந்நாராயணர்கையிலிருக்கப்பட்ட நாராயணாஸ்திரத்தையுனக்குக்கொடுத்தேனிந்த நாராயணாஸ்திரங்கொண்டுகொய்துபோடு எதிரிகள் சக்கரம்விட்டால்இதோ ஸ்ரீமந்நாராயணர்கையிலிருக்கப்பட்டசக்கரமுனக்களித்தேன் இச்சக்கரத்தினால் அந்தசக்கரத்தையறுத்து ரதகஜதுரக பதாதிகளெல்லாம் வந்தெதிர்த்தாலும்சம்மாரஞ் செய்துபோட்டு இதோஉனக்கு மாளாத அட்சயதூணியுங் கொடுத்தேன்வில்லையுமழைப்பித்துத் தருகிறேனென்று வருணதேவனை நினைத்து கையைநீட்டினாள் அந்த வருணன் அம்மனை நினைத்தறிந்து பிரசண்டகோதண்டமென்றவில்லையெடுத்து அம்மனுக்கு சாஷ்டாங்கநமஸ்காரஞ்செய்துகொடுத்தானப்போது சீதாபிராட்டியும் அந்தவில்லைவாங்கி குசலன்கையிற் கொடுத்துகூறுகின்றாள்.

அப்பாகுசலனே அந்தவில் ஸ்ரீமந் நாராயணருடையவில் இதற்குமுன் யீஸ்வரன்பிர்மா இந்திரன் அக்கினி இயமன்வருணனுடையவில்லும் எதுவும் நிகரல்ல இந்தயுகமுழுகிப்போகுங்காலத்திலும் இவ்வில்லையெடுக்கிறதில்லை அப்பேர்ப்பட்ட பிரசண்டகோதண்டத்தை உனக்குதந்தேன் இதோஉமையவள்கரத்திலிருக்கப்பட்ட பிரசண்ட கோதண்டத்தையுனக்குத்தந்தேன் வாங்கிக்கொள் தேவர்களாவது ராசாக்களாவது வந்தெதிர்த்தாலுங் கொன்றுவிடும் மும்மூர்த்திகளுடைய பலமும் உனக்குத்தந்தேன் நீபோய் அவர்களை சம்மாரஞ்செய்து செயமடைந்துவாரும் குமாரகாவென்று வாழ்த்தின மாத்திரத்திலசீதையம்மனுக்கு பூர்வக்கியானமாறி கனவுகண்டதைப்போலாயிற்று சீதையம்மனவள் காமதேனுவைநினைக்க அக்காமதேனுவானது தெய்வலோகம்விட்டு வால்மீகருடைய ஆசிர்மம்வந்தன அதுகண்டுஅம்மனவள் வாராய்காமதேனுவே குசலவான் யுத்தத்திற்குப்போகிறபடியால் அவர்கள் நினைத்தவிடத்தில் நீவந்துபசியாற்றிப் போவென்று உத்தாரவுகூற அவ்வாறேசெய்கிறேனென்று சீதையம்மனிடத்தில் விடைபெற்று தெய்வலோகம்போய்விட்டது உடனேகுசலனானவனெழுந்திருந்து அடிவணங்கி அம்மாநான் போய்வருகிறேனென்றுஅம்புறப்பொதி முதுகிற்கட்டிவில்லை கையிலெடுத்துக்கொண்டு அரியபிரமாதிகள்வந்தெதிர்த்தாலும்செயமடைந்து வருவாயென்று விடைகொடுத்தாள்



குசலராஜன் சத்துருக்கமகாராஜன் தண்டைத்தேடிப்போகுதல்.

விருத்தம்.

பொய்ம்மதமாயெவரக்கர் புல்லர்முதலானவர்க்குப்போதகல்கி
மெய்ம்மதத்தைநாட்டவந்த விராமனிளவலுமிருடிவெழிற்காணுற்றத்
தெய்விகக்குசலராஜேந்திரனன்னை சொற்படியேசிலையம்பேந்தி
துய்யலவன்றனைத்தேடிப் போரிடவேநாடுமிதைசொல்லுவாமே.

வேறு விருத்தம்.

வனிதையிந்தவகையுரைக்கக்குசல்ராசன் வணங்கிவிடைகொண்டுவில்லுமம்புமேந்தி
முனிசிலைவேந்தனைமாய்த்துச்தம்பிதன்னைக் குடதிசையிற்றினகரனொளிக்குமுன்னம்
இனிமைபெறக்கொண்டுன்பால்மீள்வேனென்று இருவிழியிற்கனல்பொரிப்படையைத்தேடி
தன்னிகரில்லாதசிங்கம்போன்றபாலன் றுவினுடவிதனின்மேவினனே.

வசனம்.

இப்பால் குசலனும் வனத்துப்பெண்களில் ஒரு ஸ்திரீயை வழிகாட்டச்சொல்லிபுறப்பட்டு காடுசெடிவனங்கடந்து சரஸ்வதியாற்றங்கரையில் வருகிற போது ரணக்களமானது எப்படியிருந்ததென்றால் பர்வதங்கள்போல்யானைகளும் தேர்களும் குதிரைகளும் கல்பலையானராட்சதாளும்விழுந்தாத்தவெள்ளத்திலுருட்டிகொண்டு மூன்றுபனைபிரமாணமாத்தாரோடை அத்தாத்தாற்றிற் காகங்கள்கத்த கழுகன்பிடுக்கரிகள்சாப்பிட பூதப்பிரேதங்கள் பூரித்துண்டுமேளதாளபேரிகையெடுத்து குசலன்வருகிறுன் இன்னல்கொற்றவர்விருந்தமெத்த தருவானென்றுமேளததை கொட்டுகிறதும் தாளத்தைதட்டுகிறதும் ஆடுகிறதும்பாடுகிறதுமாகவிருந்ததைக்கண்ட குசலனானவன்மகாசந்தோஷமாக லவன்கையில்வெகுசேனைகள்மடிந்ததென்றெண்ணி வருகிறகாலத்தில்சத்துருக்கனுடையதண்டானது சரஸ்வதியாற்றங்கரையிலிறங்கியிருக்கக்கண்டு அத்தண்டில் மெதுவாகநுழைந்தானத்தண்டிலிருக்கப்பட்ட ராசாக்கள் ராட்சதாளும்சேனைகளும்குசலவனை பார்த்துஇவனர் அச்சம்பயமில்லாமல்நமதுதண்டில் வருகிறானிவனைப்பார்த்தால் ஒட்டைசாணில்லை யிவனுடையவில்லைபார்த்தால இவனுக்குமிரண்டுகொண்டதாயிருக்கின்றதே இந்தவில்லைபார்த்தால்மணிகளும்க

ட்டியிருக்கிறது இவனைக்காணும்போதே சுறபங்கலங்குகின்றது இவன்வில்லிற்கு நிகரானவில் சத்துருக்கமகாராஜனுடையவில்தவிர மற்றபேர்வில் பில்லுதான் என்றெண்ணினவர்களாய் இராமனுண்டால்நமக்கென்னபயம் லவன்தமயனுண்டால் நமக்கென்னநஷ்டம் உனக்கென்ன எனக்கென்ன வென்று சும்மாயிருந்து விட்டான்

அதுகண்டு குசலராசனுங்குஞ்சிரிப்புக்கொண்டு பாருசவுக்கை தாண்டி இரண்டாமணியில் வருகிறபோது ராக்ஷதர்கு லாசனைப்பார்த்து இவனல்லவனுக்குமூத்தவனைப்போற்காண்கிறது இவனைப்பார்த்தாலலவனிலும் பராக்ரமசாலியாயிருக்கின்றான் இவனுக்குநாம் பயப்படுவோமாகில் இராமத்துரோகம்வந்து நடும் அசரீசமாயிருக்கப்போகாதென்று ஒருவர்க்கொருவர் பேசிக்கொண்டு வில்லையெடுத்துநிறுத்தி பாணங்களைப்பூட்டி குசலராஜன்பேரிலெய்கிறபோது அவ்விராசனும் வருகிற அஸ்திரங்களையெல்லாம்கோதண்டத்தில்தட்டிவிட்டு தன்னுடைய பிரசண்டகோதண்டத்தை பூமியில் நிறுத்தி நாணிபிகிக்த மாத்திரத்தில அண்டகடாகம்படீலென்றுவெடிக்க பூமியமுந்திய ஆதிசேடன்ரத்தங்களை கக்கிக்கொள்ள அஷ்டகஜங்களும்வீறிட அஷ்டகுலபர்வதங்களும் நடுநடுங்க அஷ்டதிக்குப் பாலகர் பயங்கொள்ள அஷ்டவயிரவர்களுந் திடுக்கிட்டுப்பதுங்க தேவர்கள்நடுங்கி ஒரு அண்டவுயரம் ஓடிப்போக சத்தசமுத்திரம் கொதிப்பெடுத்து ஒருசுற்று நீர்வற்றிப்போக நாணிபிகிந்தமாத்திரத்திற் சந்திரசேகர சடாமண்டலதாரியாயிருக்கப்பட்டபரமேஸ்வரனும் பார்வதியுங்கேட்டு குசலன் செய்யும் யுத்தத்தைபார்ப்போமென்று ரிஷபவாகனமேறவே நந்திகேஸ்வரர், பிரிங்கி, மார்க்கண்டேயர், குண்டோதரர்முதல்பூதப்படைகளும் புடைசூழப்புறப்பட்டார் அப்படி பரமசிவன்புறப்படவே விநாயகர் வீரபத்திரர், சுப்ரமணியர், பிரமதேவர், தேவேந்திரன் அவரவர்கள்வாகனங்களில்ஏறிகொண்டு புடைசூழவேதேவதுந்துமிமுழங்க தெய்வரம்பையர்கள் நடனம்புரியகைலாயம்பிரமலோகம்தெய்வலோகம் விட்டு ஆகாயத்தில்வந்து நிறைந்தார்கள் அந்தவில் குணத்தொனியினுடைய சத்தமானதுராட்சதர்களும்கண்டு மனந்திடுக்கிட்டுச்சொல்லுகிறார் இவனுடையவில் முறப்பைப்பார்த்தால் நம்மையெல்லாம் இந்தவில்லுக்கிரைகொடுப்பான்போற் காண்கின்றது இந்தவில்லின்முன் திரிமூர்த்திகளுடையவில்லும்நிகரல்ல வென்பாரும் மேலும் இந்தவில் ரணங்கண்டவில்போற் காண்கிறதென்பாரும் அப்பா இந்த வில்லோ ஸ்ரீராமர்கை பிரசண்ட கோதண்டம்போலிருக்கிறதென்பாரும் இதுவில்லல்லராட்சதரைக் கொல்லவந்த வல்லமைபொருந்திய நமன்போலிருக்கின்றதென்பாரும் இவனைப்பார்த்தாற் சிறுபிள்ளையாயிருக்கின்றான் இவன்பிடித்திருக்கப்பட்டவில்லைப்பார்த்தால் அவனிலுமிரண்டுகொண்டாயிருக்கிறதென்பாரும் இவனுடனெதிர்த்துயார்தான் போராடுவோர்களென்பாரும் இந்தப்படியாய் நாணிபிகிந்த சப்தத்தில் சகலரும்மனங்கலங்க அந்தவேளையிற் குசலராஜனனவன் அநேகபாணங்களைவில்லிற்றொடுத்துசேனைகள்பேரில்விடுகிறபோது சேனைகளோவென்றால் சின்னபின்னமாய்க் கால்மாடுதலைமாடாக கவிழ்த்தலைப்பட்டார்கள்.



குசலராஜனுக்கும் சுவேதராஜனுக்கும் யுத்தம்.

விருத்தம்.

யானனம்போற்சென்றதிருக் குசலவேந்த
　னங்குள்ளசுவேதனையு மவன்றன்னைச்சூழ்ந்த
யானைபரிதளங்களை,சொற்கரிகூட்டம்போற்
　றுவியொருகணைப்போதி லொழிப்பேனென்று
வானவருமன்னவரும நடுங்காளில்
　நலமுழக்கைகாட்டியிடி முழக்கம்போலச்
சோனைமழைபெய்வதுபோற் சிலகூட்டத்தைச்
　சொரிந்திட்டாரிருவரும்போர் புரிந்திட்டாரே

வசனம்.

அதனுற்சுவேதராசன்கோபமாகி ரதத்தைகுசலராஜன்முன்பாகநடத்திச் சொல்லுகிறான் அப்பாசிறுபிள்ளாய் எங்கள்சேனை உன்னைஎன்னசெய்தது நீயார் உன்தாய்தந்தைபேர்யாது சொல்லடாவென்றுகேட்டான் அதுகேட்டு குசலராஜன் சொல்லுகிறான் அடாராஜனே நீயோஎன்தாய்தந்தை நாமதே

யங்கேட்கிறவன் படிகளத்திலொப்பாரியாடவந்தா
யோ அடா வில்லுவில்லுவில்லு வில்லுவில்லாய்கொய்
கிறேனென்று வில்லிரண்டு திவ்வியாஸ்திரங்களை
தொடுத்துவிடுத்தான் அந்தத்திவ்வியாஸ்திரங்களு
ம்விடுபட்டு காத்தகாயமாய் தங்கக் கட்டுகளுடன்
பின்டப்பட்டுவிறகுபூண்ட காலகோடி விஷம்போல்
ஒன்றுபதினாயிரம் லட்சங் கோடியாய் அவதரித்து
சீறிக்கொண்டுவாறபோது சுவேதராசனுங்கண்டு
அதிசீக்கிரமாய் ஒன்றின்மேலொன்றாய் அநேகதி
வ்வியாஸ்திரங்களை வில்லிற்சந்தித்து வருகிற திவ்வியா
ஸ்திரங்களும் விடுபட்டு நாகசற்பம்போற்சீறி ஒன்
றோடொன்றுறாய்ந்துக்கொண்டு அதிவேகத்துடன்
குசலராஜன்விடுத்த அஸ்திரங்களின்பேரிற்சடாலெ
ன்றமோதி ஒருசத்தங்கேட்டது அந்தசத்தத்துட
ன் குசலராஜன்விட்ட திவ்வியாஸ்திரம் அறுபடாமல்
பூமியில்விழுந்துபோயிற்று அப்போது குசலனுடை
ய திவ்வியாஸ்திரமானது அம்புறாவில் வந்தடைந்தது
அதனால் சுவேதராசன் கோபமாகிப் பற்களைநறநற
வென்றுகடித்து நாருசபாணங்களை வில்லிற்றொடுத்
துக்கொண்டு குசலனைப்பார்த்துச்சொல்லுகிறான்.

அடா குசலனேகேளாய் என்தமயன் அரண்யமகா
ராசனையுங்காதமகாராசனையும் உன்தம்பிலவன்கொ
ன்றபடியால் அப்பழிக்கு உன்னைக்கொன்றுதீர்த்து
க்கொள்ளுகிறேன் என்றதைக்கேட்டகுசலன் சுவே
தராஜனைப்பார்த்துசொல்லுகிறான் கேளும்ராசனே
என்தம்பிஉன்தமயன்மாரைக்கொன்றபழியை என்
னைக்கொன்றல்லவோ தீர்க்கிறேனென்று புகன்றாய்
ஆனபடியால் என்தம்பியன்றுக்கு உன்தமையன்மா
ர்களைக்கொன்றான் அந்தவரிசைதப்பாமல் என்
பங்குக்கு உன்னைக்கொல்லாமல்போவேனேயாகில்
காண்பிடித்ததுகோதண்டமுமல்ல என்பேர்குசலனு
மல்லவென்றுசொல்லவே சுவேதராஜனுக்குக்கோப
மூண்டு கண்களிரண்டும்புகைகளெழும்ப மீசைகள்
படபடவென்று துடிக்க குசலராஜனுடைய வில்லை
உருட்டிப்பார்த்து ௧௦-நாருசங்களை வில்லிற்றொடுத்
துவிட்டான் அந்தநாருசங்களும்வில்லிலிருந்துநாக
சர்ப்பம்போற் சீறிக்கொண்டு வந்து குசலனுடைய
வில்லின்பேரிற்பட்டு கூர்மடங்கி பூமியில்விழுந்துவி
ட்டது அதுகண்டு குசலனானவன் நகைத்துச்சொ
ல்லுகிறான்.

அடா சுவேதராஜனே இந்தபலத்தினகருவங்கொ
ண்டோ என்னைச்செயிக்கப்போகிறாய்போபோ உன்
னைப்போலொத்த நூறு சுவேதன் வந்தாலும் ஒரே
பாணத்தினால் எமலோகக் குடியேற்றி வைப்பேன்
உன்னால் என்னை ஜெயிக்க வல்லமை யிருந்ததேயா
னால் எடுபாணங்களைப் பார்ப்போமென்றான் அப்
போது சுவேதராஜன்கோபமாகி கண்ணிமைகொட்
டுமுன்னமே மாரிபோல சரமாரியாய் அநேகபாண
ங்களைவாரி குசலன்பேரிற் சொரிகிறதைப்பார்த்து
குசலனும் அநேகபாணங்களை வில்லிற்றொடுத்து சு
வேதராஜன்விட்ட பாணங்களையெல்லாம் அறுத்துப்
போட்டு மறுபடியும் நூறு திவ்யாஸ்திரங்களை வில்
லிற்சந்தித்து ராட்சதாள்பேரில் விட்டான் அந்தப்
பாணங்களானது ௧௦-௱-௲-அநேககோடி பாணங்க
ளாய் ராட்சதாளையும ராசாக்களையும் கொல்லும்
போது சேனைகளானது எப்படி விழுகிறதென்றால்
யானைக்கிரண்டுபாணம் மாவுத்தனுக் கொருபாணம்
ராசாவுக்கிரண்டுபாணம் தேருக்கொருபாணம் குதி
ரைக்குநான்குபாணம்காலாள் ஒன்றுக்கொருபாண
ம் இந்தப்படியாய்க்காலறுந்தும் கையறுந்தும்தலை
யறுந்தும் மார்புபிளந்தும் அச்சுமுறிந்தும் ஆணிக
ழன்றும் குத்துக்காலொடிந்தும்குதிரைகளறுந்தும்
இந்தப்படியாய் யானைசேனை பரிவாரங்களுமாண்டு
உதிரவெள்ளமானது ஓடத்தலைப்பட்டதாம் அதுக
ண்டு ராட்சதாளுடையதண்டில் கோவென்ற சத்த
முண்டாயிற்றும் அச்சத்தஞ் சத்துருக்கமகாராசர்
கேட்டு அருகாமையிலிருந்தசோமகாசமகாராசனை
ப்பார்த்துச் சொல்லுகிறார்கேளும் சோமகாச மகா
ராஜனே இதென்னவிப்படிவிற்குணிசத்தமும் ராட்
சதாளுடைய இறைச்சலும்கேழ்க்கின்றது இப்போ
துநம்முடையதண்டில் யுத்தம்பண்ணுகிறவன்யாவ
ன் சொல்லென்றார் அதற்கு சோமகாச மகாராஜன்
யோசனைசெய்துக்கொண்டிருக்கையில் இரண்டுதூ
துவர்கள் வந்து சத்துருக்கனைவணங்கி ஐயா சத்து
ருக்கமகாராஜரே கேளும் நம்முடையதண்டில் யா
ரோசிறுபிள்ளைவந்து யுத்தஞ்செய்கிறான் அவனைப்
பார்த்தால் லவனுக்கு மூத்தவனைப்போற்காண்கின்
றது இவனைப்பார்த்தால் லவனையும் பார்க்க வேண்
டியதில்லை அவன்கையிற்பற்றிய வில்லைப்பார்த்தால்
கற்பகலங்குகின்றது.

அப்படிக்கொத்தபலமானவிஸ்நமதுதண்டிலில்லை
என்றார்கள் அதுகேட்டுசத்துருக்கமகாராசர் கால
சித்தனை யழைத்துச் சொல்லுகிறார். வாராய் கால
சித்தனே நம்முடையதண்டு பாளையங்களை பவுஞ்சி
ட்டு நிறுத்தி வையுமென்றார் அக்ஷணங்காலசித்
தன் ராசாக்களுடையகால்பலங்களை முன்னணியில்
நிறுத்தியதற்குப்பின்னணியில் ராக்ஷதாளைநிறுத்தி
சத்துருக்கமகாராசனையும் நடுஅணியில்நிறுத்தி சந்
தனமகாராசன் சவுந்தராசனையும் அதற்குமுன்ன

ணியில்நிறுத்தி பவர்ன கதாயுதன் மட்சயந்தனுமா
னையும்அதற்குமுன்னணியில்நிறுத்திசலவசந்தனும்
தானுமாக முன்னிலையில் நின்று பேரிகையையறை
வித்தார்களாம்அப்போதுசுவேதராஜனும்சிலாக்ஷ
தர்களும் குசலராசன்பேரில் முனைந்து அஸ்திரங்க
ளைமிதமில்லாமல் வில்லிற் சந்தித்துப் பிரயோகம்ப
ண்ணிவிட்டார்கள். உடனே அந்த அஸ்திரங்களும்
நாகசற்பம்போற்சீறிக்கொண்டு வருகிறபோது குச
லமகாராஜனும் அநேகபாணங்களைவிட்டுவரும்போ
து அஸ்திரங்களை எல்லாமறுத்துத் தள்ளிப்போம்
அதனல் சுவேதராசன் மகாகோபதீப்தனுயெறிந்து
விழுந்து-ள-நாராசபாணங்களெடுத்து வில்லிற்சந்தி
த்துபிரயோகம்பண்ணிவிட்டார் அந்தநாராசபாண
ங்களும்வில்லைவிட்டுவிடுபட்டுநாகசற்பம்போற்சீறிக்
கொண்டு வருகிறபோது அதுகண்டு குசலராசனும்
தட்சணம்-க0-நாராசபாணங்களைப்பிடுங்கி வில்லிற்
சந்தித்துவிட்டு அந்த-ள-நாராசபாணங்களையு மறு
த்து அதனமாக உ-திவ்வியாஸ்திரங்களை விட்டு ர
தஞ்சாரதிகுதிரைகளுடன் துஞ்சம்பண்ணிப்போட்
டான்.

அதுகண்டுசுவேதராசன் லகுவிற்றப்பித்துக்கொ
ண்டு மறுதேரிலேறி வில்லைஎடுக்குமுன்னே குசலரா
சன் பின்னுமிரண்டு திவ்யாஸ்திரம்விட்டு அந்தரத
த்தையுமுடைத்தெறிந்துபோட்டான் இப்படியாய்
கடு-ரதம் உடைந்துபோகவேசுவேதராசன்அதிசீக்
கிரத்தில் வேறொருரதமேறி வில்லைஎடுத்து நாணிபி
ழிந்து ஒருஅக்கினியாஸ்திரமானதுவில்லில்விடுபட்
டுகொழுந்துவிட்டெறிந்துநெருப்புபொறிகளைவாரி
யிறைத்துக்கொண்டு ஆலகாலவிஷம்போற்சீறி வரு
கிறதைகுசலராசன்கண்டு அதிசீக்கிரத்தில்ஒருஅக்
கினியாஸ்திரமெடுத்து கடுகடுத்துவிட்டான அந்த
அக்கினியாஸ்திரமும்வெளிப்பட்டு சண்டமாருதம்
வீசினதுபோல வடவாமுகாக்கினியை யிறைத்துக்
கொண்டு சடசடவென்கிறதொனியுடனும் அதிவே
கத்துடனும் வந்து அந்த அக்கினி யாஸ்திரத்தை
அடித்து லயளீகரஞ்செய்துபோய்விட்டது.

தன்னுடையஅக்கினியாஸ்திரம் விருதாவிற்போ
னதைக்கண்ட சுவேத மகாராசன் கோபாவேசனுகி
பற்களைநெறநெறவென்றுகடித்து ஒருசத்தியையெ
டுத்து பூசைநைவேத்தியத்துடன வில்லிற்சந்தித்து
விட்டானந்தசத்தியானது வில்லிலிருந்து புறப்பட்
டுசத்தசாகரமுஞ்சுவறிப்போக அண்டபகிரண்டங்
குலுங்க குசலனெங்கே எங்கேயென்று ஆரவாரஞ்
செய்து சேரவரும்போது குசலராசன் கண்டு சத்
தியை எடுத்து மந்திராபூதிகொடுத்து வில்லிற்றொ
டுத்துவிட்டான்.

அந்தசத்தியானது விடுபட்டு கபகபவென்றெரிந்
து பர்வதங்களும்படீரென்று வெடிக்க ஆதிசேஷன்
புயமடிக்க சத்ராதிகள்கிலிபிடிக்க குசலன் வெற்றி
யைச் சகலரும்படிக்க ஆவென்றுவாயைத்திறந்துக்
கொண்டு அதிவேகத்துடன்வந்து சுவேதராசனவி
ட்ட சத்தியைகமளீகரம்பண்ணிப்போட்டு அம்புறு
தில்வந்தடைந்தது அதுகண்டுசுவேதராசன் ஆக்ரம
கிக்ரோதனுகி பல்லைபடபடவென்றுகடித்து ஒருநா
ராயணஸ்திரத்தை எடுத்து பூசைசெய்து சோடச
வுபசாரத்துடன வில்லிற்சந்தித்துவிட்டான் நாரா
யணஸ்திரமானது வெளிப்பட்டுசகலபுவனங்களும்
நடுங்கும்படி வடவாமுகாக்கினியைவாரி யிறைத்து
க்கொண்டு உலகமுழுகிப்போகிறதுபோல வருகிற
தைக்கண்ட குசலராசன் அதிசீக்கிரமாய் தன்னு
டையநாராயணஸ்திரத்தையெடுத்து பூசைசெய்து
விட்டான் அந்தநாராயணஸ்திரமானது வெளிப்ப
ட்டு எப்படி வருகுதென்றுல் முன்னம்லவனுலிறந்த
வர்களை சத்துருக்கமகாராசனெழுப்பினுனென்றுகே
ள்விப்பட்டுமறுபடியுங்கொல்லுகிறேனென்று சத்த
சாகரங்கள்வாட அதிகுரூரமாகிய வடவாமுகாக்கி
னியைவாரியிறைத்துக்கொண்டுவந்துசுவேதராசன்
விட்ட நாராயணஸ்திரத்துடனேநாடி போராடிவா
தாடிகமளீகரம்பண்ணிவிட்டு அம்புறுவில்வந்தடை
ந்தது அதனுற்சுவேதராசன்பின்னும் க0-நாராசபா
ணங்களைஎடுத்து குசலராஜனுடையவில்லைப் பார்த்
துவிட்டான் அந்த க0-நாருசங்களும நாகசற்பம்
போற் சீறிக்கொண்டுவந்து குசலராசன்வில்லின்பே
ரிற் சடாலென்றுவந்து பாய்ந்து ய-நாராசபாணங்க
ளுங்கூர்மடங்கிபூமியில்விழவே சுவேதராசன்கண்டு
கோபங்கொண்டு வில்லை முகத்துக்கு நேராய்பிடித்
து கண்ணிமைதட்டுமுன்னமே அநேகபாணங்களை
வில்லிற்றொடுத்துவிட்டறுத்துப்பின்னும் அதனமா
க ச-பாணங்களைவிட்டு சுவேதமகாராசனேறிவந்த
சாரதிகுதிரைகளைக்கொன்று ஒருஅர்த்தசந்திரபா
ணம்விட்டு சுவேதராசனும் ஸ்ரீமந்நாராயணனுவென்ற
சத்தத்துடன்பொன்னுலகம்போய்ச்சேர்ந்தான்.

அப்போதுகுசலராசன்சந்தோஷமாகி வில்லைநிறு
த்திவில்லில நேகபாணங்களை சந்தித்து காலபலமான
ராட்சதாள்பேரிலேயும்விடுகிறபோது ராட்சதாளும்
ராசாக்களுமுனைந்து அஸ்திரங்களைவிடவே அவைக
ளெல்லாங் குசலராசனபாணத்தின்மீதபோய்தாங்
கிகுசலராஜன்பாணத்தாலறுபட்டுவிழுந்தான் அது
களபோககுசலராஜன் பாணத்தின்வேகமடங்காமல்
மறுபடியும்ராக்ஷதாள்பேரிலுங்கி உபர்ந்து உயிரை
வாங்குகிறேனென்றுவந்துவிழுகிறபோது ராட்சதா
ள்தலைசாய்ந்தவரும் காமற்றவரும் மாழுறிபட்டவ

ரும் காக்கப்போனவரும்கண்டதுண்டமானவரும் சலிப்பாரும்ஒளிப்பாரும்முழிப்பாரும் வழிபார்ப்பவருமாகி கூச்சலிட்டு வோடுகையிற் சலவசந்தன் ரதத்தைநடத்திஓடுகிறராக்ஷதரை ஓடவேண்டாமென்று மடக்கும் காலையில் ராக்ஷதாள் சலவசந்தனுக்குச் சொல்லுகிறார்கள் ஓசலவசந்தனே கேளும்நாங்களபட்ட அவஸ்தைகளுக்குத்தெரியும் ராமன் அஸ்வமேதயாகஞ்செய்தால்யாருக்குநயம இந்தகுசலனை அந்தயாகத்தைமுறித்தால் யாருக்குநஷ்டம் இப்படிப்பட்டசேவகம் எங்களுக்குவேண்டாம்குசலன்பேர்பிள்ளைக்குப்போதி குண்டியும் குடலும் கலங்குகின்றது நாங்கள் பட்ட அவஸ்தை நீயின்றுபட்டால்தெரியும் சுவேதராஜனும்பாவைடான் ஆகையால்சும்மாயிருப்பதுவேசுகமென்ன அவர்களை சலவசந்தன்பார்த்துச்சொல்லுகிறான் அடா ராக்ஷதர்களே அந்தமானிடனைப்போல நீங்களுஞ்சொல்லுகிறது நல்லதோ நாம் கையில்வைத்து சக்கிரசக்கி புசக்கி பொசிக்குகிற சிறைப்பயலுக்கா குய்யோமுறையோ வென்று கூவி என்கையிலிருக்கும் வில்லையும்பாராமல் என்சவுரியமூங்கொண்ணாமல் நமக்கையலுகியவைகமளங் தராமனை உப்பைதின்று இப்போதுராமனுக்கு இநிகள் கையில்நமமுடையபகவானுகியராமனைக் காட்டிகொடுத்துநாம்கடக்கப்போயினால் ராமதுரோகம்வந்துசித்திக்காதோ சாவுக்குப்பயந்தால்நிருமாசாகாவரம்பெற்றவர்யார்தாமிருக்கிறார்கள் ஒருவரையுக்காலேனும்நாமிறந்தால்ஸ்ரீராமர்நம்மைமுப்பிவிவோர் நமக்கென்னபயம்வாருங்களென்றவர்களைதிருப்பிக்கொண்டுகுசலன்முனனுக்கு ரதத்தைநடத்தினிலேயேடுத்து குணத்தொனிசெய்துடத்ததிவ்யஸ்திரங்களைவிலில்தொடுத்து சொல்லுகிறான்.



குசலராஜனுக்கும் சலவசந்தனுக்கும் யுத்தம.

விருத்தம்.

தின்னமுறுங்கவேதனைத் தென்திசையிற்சேர்ந்த
செப்சலவசந்தனுக்கு செப்பக்கேட்க
அன்னமெனுமிராமச் சந்திரக்செப்பேழ்வில்
க்ந்தாரய்வாதிடுயிச்சேவரரோ
நண்ணியவன் றனைகேட்போமென்றேயெண்ணி
ரதந்தாண்டிக் குசலனைக்கண்டடாதம்பி
எண்ணிமுடிமன்னர்களைக் கொன்றநீங்க
ளெவ்வுலகமாந்தரதை யிசையென்றானே.

வசனம்.

அடாதம்பிஉன்னைப்பார்த்தால் சிறுபிள்ளையாயிருக்கிறது உன்னுடன் சண்டைசெய்ய மனமானதிசையவில்லை ஆனபடியினால்உன்தாய்தகப்பன்பேரும்உன்பேருஞ்சொல்லென்றான துகேட்டு குசலராஜன் அடாபோபோகாட்டுமிருகமான உங்களுக்கெல்லாம் நான்தாய்தந்தைபேர்சொல்லுகிறதோ நீஎன்னபூதபிசாசோ அல்லவென்று அரசனைகாட்டுமிருகங்களுக்கும் மனிதபாஷைதெரியுமோசொல்லடாவென்று மண்டிப்போட்டுவில்லில் திவ்யாஸ்திரங்களையெடுத்துசந்தித்ததுகண்டு சலவசந்தன்சொல்லுகிறான்.

அடாசிறுபிள்ளாய் நல்லவசனம்பகர்ந்தாய் என்னைப்பார்த்தால் உன்கண்ணிற்குகாட்டுமிருகம்போலும்பூதபிசாசுபோலுங்காண்கிறதோ அப்படியல்ல நான்ராக்ஷதர்களுக்கெல்லாம்ராஜவாயிருக்கப்பட்டவன் என்பேர் சலவசந்தனென்றுசொல்லுவார்கள் நீமுன்பின் எண்ணுமல் இப்படிஎன்னைகாட்டுமிருகமென்று சொல்லலாமோ இன்னும் அநேகவெள்ளம் ராக்ஷதாள் அயோத்தியில் வாசமாயிருக்கிறார்கள் நாங்கள் மாத்திரந்தானென் றெண்ணவேண்டாமென்றான் அதுகேட்டு குசலராஜன் கூறுகிறான் அடா சலவசந்தனே நான் காட்டு மிருகமல்ல ராக்ஷதருக்கெல்லாம் ராஜனென்று பகர்ந்தாயே உன்னுடைய ஊரெங்கே நீஏவ எங்கள்வனத்திற்குவந்து என்தம்பியுடன்போர்புரிந்து என்தம்பியைபிடித்து கட்டிக் கொண்டு போகவந்த காரிய மியாது என்றுகேட்க சலவசந்தன் கூறுகிறான்.

அடாதம்பிசிறுபிள்ளாய்கேளும் ஆயிரத்தெட்டண்டமும்உ௪௬-புவனமுஞ்சத்தசாகரஞ்சூழ்ந்தஈரேழுபதினுலகத்தையும் ஏகசக்கிரமாயாண்டுக்கொண்டிருந்த எங்கள்பெரியதகப்பனாகிய ராவணன் கும்பகர்னன்விபீஷணனென்றவர்கள்குமாரர் இந்திரசித்து அதிகாயன் அக்ஷயகுமாரன்கும்பநிகும்பன் பவர்னன் என றுசொல்லப்பட்ட லக்ஷக்குமாரர்களுடனும் துரைத்தனம்பண்ணிக்கொண் டிருக்கையில் எங்கள்பங்காளியாகிய சதகண்டராவணனுக்குச்சகரபுரியென்றொருபட்டணமுண்டுபண்ணி ஐபாயிரவெள்ளமிராக்ஷதா ளவரைப்பணியும்படியாய் முடிபுஞ்சூட்டிவைத்து என்தகப்பன் சகஸ்ரகண்டராவணனுக்குரத்னபுரமென்றொரு பட்டணமுண்டுபண்ணிஐபாயிரவெள்ளமிராக்ஷதாள்என் தகப்பனைவணங்கிஇணங்க மகுடஞ்சூட்டி தேவர்களேவல்செய்ய

ரிஷிகள்மச்சம்பிடித்துலர்ந்துதருக வருணன்சாணந் தெளிக்க வாயு முத்தப்பெருக்க சூரியன் லங்கைக்குபுரத்தில்தாம்தடசந்திரன்பூமியிலிறங்கிபிள்ளைகளுடன்விளையாட பிரமன்பஞ்சாங்கஞ்சொல்லவிஷ்ணுமனைவரிசெலவுநடத்தஈஸ்வரர்கேட்டவான்கொடுக்க யமல்ராட்சதாளைக்கண்டால் கையெடுத்துகும்பிட தெய்வலோகத்தையாளப்பட்டதேவாஜனுகிய தேவேந்திரனைப்பிடித்து எத்தனைதரமோ விலங்குபாச்சிவிடுத்து தெய்வலோகம்பிரமலோகம்வைகுந்தகைலாசத்திலும் ராவணனுடையவீணைக்கொடிபறக்கும் அப்படி சகலசராசரமும் ராவணேஸ்வரனுடைய அதிகாரமுந்துரைத்தனமுமாயிருக்கும் இந்திரன் அக்கினிஇயமன் நிருதிவருணன் வாய்வுகுபேரன் ஈசானியன் இப்படிசொல்லப்பட்ட அஷ்டதிக்குப்பாலகரும் அன்னைக் கண்ணுடம் ஏவல்கேழ்க்க அஷ்டகஜங்களும்வந்துவணங்க ஆதிசேஷன் பாரந்தாங்க இப்படி ஒருவரும்நிகரில்லாமல துரைத்தனம்பண்ணிக்கொண்டுவருகிறநாளில் அயோத்தியாபுரிபட்டணத்தை யாளப்பட்ட தசரதமகாராஜனுக்கு புத்திரனில்லாமல் புத்திரகாமேஷ்டியாகம்பண்ணும்போது அந்தயாகத்தில் பராபரவஸ்துவாய் விளங்கப்பட்ட ஸ்ரீமந்நாராயணரே ஒருபிண்டமாயும் ஆதிசேஷனொருபிண்டமாகவும் அந்த இரண்டுபிண்டம் யாகத்திற்பிறக்கவே அந்தவிரண்டுபிண்டத்தையும் மூன்றுதேவிமாருக்குக்கொடுக்க கவுசலையம்மன்வயிற்றில் ஸ்ரீராமர்பிறந்தார் சுமித்திரையம்மன்வயிற்றில்லட்சுமணப்பெருமாளும் கைகேசிவயிற்றில்பரதர்சத்துருக்கராசனும்பிறந்தார்கள் இந்தநாலுபேரும்யாரென்றுகேழ்ப்பாயோ ஸ்ரீமந்நாராயணரே ஸ்ரீராமனுகவும் அவர்சக்கரமேபரதாழ்வார் அவர்சங்கே சத்துருக்கமகாராஜர் ஆதிசேஷனே லட்சுமணப்பெருமாளென்று கண்டுகொள்க.

இப்படியாகதசரதமகாராஜன்வயிற்றில்வந்தவதரித்து விஸ்வாமித்திரர் யாகத்தையழித்த தாடகையைச்சம்மாரஞ்செய்து அகலிகைக்குமோக்ஷமளித்து ஜனகராஜன்வைத்திருந்தவில்லைவளைத்துஜானகியம்மனைமணம்புரிந்து பரசுராமனைப்பங்கப்படுத்தி வில்லைவளைத்துக் கொண்டு துரத்திவிட்டு அயோத்தியில்வந்து தாய்மொழிதவறுமல் பதினன்குவருஷம் வனவாசஞ்செய்யவேண்டி தான்லட்சுமணர்சமேதராய் பஞ்சவடிதீர்த்தத்தில்வந்திறங்கியிருக்கும்போது ராவணனசீதையம்மனை பன்னசாலையோடு ஸ்ரீராமலட்சுமணர் இல்லாதவேளையிற் பேர்த்துரதத்தில்வைத்துகொண்டுலங்கைக்குச்சென்று அசோகவனத்திற்சீதையம்மனைத்தேடிக்கொண்டுவரும்போது அனுமாரைக்கண்டுசிநேகஞ்செய்து வாலியைக்கொன்று சுக்ரீவனுக்குப்பட்டங்கட்டி தேவர்களால் யவதரித்த எ௰-வெள்ளம்வானராளையும் தண்டுகட்டி அலைகடலடைத்து இலங்கைக்கேராவணன் கும்பகர்னன் இந்திரசித்தன் அதிகாயன் அட்சயகுமாரன் கும்பநிகும்பன் இரண்டாயிரம்வெள்ளம்ராக்ஷதாளைமாய்த்து சீதையம்மனை சிறைமீட்டி விபீஷணருக்குப்பட்டங்கட்டி அயோத்தியில்வந்து பட்டாபிஷேகராய் பட்டம் ஆண்டுக்கொண்டிருக்கிறநாளையில் எங்கள்பங்காளிசதகண்டராவணனுங் கேட்டு எங்கள்சேனைகளுடன் வந்துஸ்ரீராமர்பேரில் எதிர்த்து யுத்தஞ்செய்து இராமபாணத்தினுல் மாண்டுபோனுர்கள் அதன் பிற்பாடு சதகண்டராவணன்தம்பியாகியமகாமாயனுக்கும்சக்ரபுரிபிற்பட்டங்கட்டிதங்கள்இராச்சியஞ்சென்றுபட்டாபிஷேகராயிருக்கிறநாளையில்ராக்ஷதாளைகொன்றபாவந்தொலைய அஸ்வமேதயாகம்பண்ணும்படி எங்களுடைய ரதகஜ துரகபதாதிகளையும் எங்களையுமழைப்பிக்க அயோத்தியில் வந்து அஸ்வமேதக் குதிரையையும் டு௰-வெள்ளம்ராக்ஷதாளையுஞ்ச௯-அக்ரோணிசேனைகளையுங்கூட்டி ஐம்பத்தாறுதேசத்து ராஜாக்களையும்பின்பலனுகச்சேர்த்துமகாமாயனையும் என்னையும் தலைநாயகராக வைத்து எங்களுக்குஞ் சேனைகளுக்கும் ராஜாவாகியஸ்ரீராமருடையதம்பியாகிய சத்துருக்கமகாராஜனைக்கூட்டியனுப்பிவைத்தார் அவ்வாறேபிரதட்சணம்வரும்போது மூன்றுராஜாக்கள்வந்தெதிர்த்து யுத்தஞ்செய்து அவர்களாற்ஜெயிக்கமுடியாமற் சத்துருக்கமகாராஜனைவணங்க அவர்களுடைய சேனைகளோடுந் தண்டிற் கூட்டிக்கொண்டு குதிரையுடன் வருகிறபோது குதிரையானது ஒருவர் கையில் அகப்படாமல் இந்தவனமேவந்துவிட்டது நாங்கள்விட்ட குதிரையை ஆரோ சிறுபிள்ளை லவனென்னப்பட்டவன் பிடித்துக்கட்டி எங்கள்சேனைகளையெல்லாம் அதம்பண்ணிப் போட்டான் இந்த சங்கதியை சத்துருக்கமகாராஜனறிந்து லவனுடன் யுத்தம்புரிந்து அவனைக்கைப்பிடியாகப்பிடித்துக்கட்டி அஸ்வமேதக்குதிரையையும் விடுவித்துக்கொண்டுஅயோத்திக்குப்போகவேணுமென்று பயணமாயிருக்கையில் நீயாரோசிறுபிள்ளை இவ்விடத்தில்வந்து யுத்தம்பண்ணுகிறுப் உன்னையுங் கட்டுகட்டென்று தாடையிற்றட்டி நெட்டிக்கொண்டுபோகுமுன்னம் உன்னுடையதாயதந்தைபேரையும் உன்பேரையும் சொல்லவேணுமென்றுகேட்டானே அப்படி சொல்ல சலவசாதனுடையவார்த்தைக்குகுசலவசற்றுகவனித்துதன்மனதிலெண்ணிக்கொள்ளுகிறுன் இந்தராட்சதன் நம்முடையதாயார்பேரையுஞ்சொல்லி மற்றசங்கதிகளையுஞ் சொன்னுனு அப்படியிருந்தால் நம்முடையவிஸ்தாரத்தை நமக்குச்சொல்லுவிராளோ நல்லது நம்முடைய ஜயா வால்மீகரிஷி

அநு[illegible]சொல்லாரோ நமதுதாயார் ரிஷிபத்தினியாயிற்றே நம்முடையதாயார்பேரைப்போல் உலகிலெத்தனைபேரோ நம்மைப்போல்ரூபம்படைத்தபேர் எத்தனைபேரோ நாமிதுவெல்லாங் கேழ்க்க வேண்டிய காரியமென்ன நாம்தாயார்சொற்றவறாமல்வந்தெதிரந்தவரில் யாவரையுஞ்சம்மாரம் பண்ணி தப்பியவர்களை விடுவிக்கவேணுமேயல்லாமலிந்தகட்டுக்கதையான வார்த்தையை நாம் கேழ்க்கவேண்டியதில்லையென்று மனதிலெண்ணினான் அதேதென்றால் வால்மீகர்சொல்லியராமர் என்கிற கீர்வாணசுலோகத்திற்கு அர்த்தம்தெரியாதவனானபடியினாலும் சிறுபிள்ளையென்பதினாலும் சலவசந்தன்சொல்லியவாக்கியத்தை கவனித்துப் பாராமல் சலவசந்தனைப் பார்த்துசொல்லுகிறான்.

அடாசலவசந்தனே புளுகினாலும் பெரும்புளுகு புளுகுறாய் ஸ்ரீமந்நாராயணரோஸ்ரீராமனாகதசரதர்வயிற்றிற்பிறக்கிறதென்ன ஆதிசேஷன் லட்சுமணாகவும் சங்குசக்கரமாவது பரதர்சத்துருக்நாகவும் தசரதர்வயிற்றிற்பிறக்கிறதென்ன இதுகளெல்லாம் உன்னுயிர்க்குபயந்தல்லவோ கட்டுக்கதை புகன்று தப்பித்துக்கொள்ள நினைத்தாய் நீயுயிருடன்தப்பிப்போவேனென்றாலும விடுவேனென்றுபாராதே நின்று யுத்தம்பண்ணடாபார்ப்போமென்றான் குசலராஜனைப்பார்த்துச்சொல்லுகிறான் நான் உயிருக்குப்பயந்து எனக்குப்பிரியவசனஞ்சொல்லவந்தேனென்றுபாராதே நீசிறுபிள்ளையானபடியினாலும் நான் தருமநீதியாக சொன்னேன் நீகேளாவிட்டால் எனக்குராமநந் தரோகமில்லை இனி உன்தாய்தந்தைபேரைச்சொன்னாலுஞ்சரி என்மேற் குற்றமில்லை இனி உன்னாலானயுத்தத்தைச் செய்யென்றான்.

அப்படி சொன்ன சலவசந்தனுடைய வார்த்தை குசலராஜனகேட்டு யோசனைபண்ணி தாயார்சொல் தவறாமல்செய்கிறதேகாரியமென்று மனதிலெண்ணி வனுகவில்லிற் ௧௦-திவ்யாஸ்திரங்களெடுத்து சந்தித்து சலவசந்தனபேரிற் பிரயோகம் பண்ணினான் இந்த-௰-திவ்யாஸ்திரங்களும்வில்லில்விடுபட்டுதநத்நாயமாசதங்கக்கட்டுகளுடன் பின்படட்சிறகுபூண்டபாணமவது ஒன்றுடொன்றுருப்பந்து நெருப்புப் பொறிகள் பறக்க அதிவேகமாகவருகிறபோது சலவசந்தன கண்டு பாலன் பாணமிஞ்சினானென்று-௫௦-திவ்யாஸ்திரங்களெடுத்து வில்லிற்சந்தித்து பிரயோகப்படுத்தி குசலன்விட்ட ௩௦ - திவ்யாஸ்திரங்களையுமறுக்க திவ்யாஸ்திரமறுபடாமற்குசலனுடைய திவ்யாஸ்திரத்தினாற்சலவசந்தனது திவ்யாஸ்திரம்அறுபட்டுபூமியிலவிழுந்துபோயிற்று அதுகண்டுசலவசந்தன்கோபமாகி நூறுநாராசபாணம்எடுத்து வில்லிற்சந்தித்துப் பிரயோகம்பண்ணினான் அந்தநாராசபாணங்களும் வில்லில்விடுபட்டுநாகசர்ப்பம்போற்சீறிக்கொண்டு அதிவேகமாய்வருகிறபோது குசலராஜன்கண்டு ௱ - நாராசபாணங்களையு மறுத்துத்தள்ளினான்.

அதுகண்டுசலவசந்தன்மகாகோபமாகிமீசைகள் படபடவென்று துடிக்க அதிககோபாக்கினியுடன் வில்லிலநேகபாணங்களைச்சந்தித்துமாரிபொழிவதுபோல்சரமாரியாய்இடிமின்னல்குமுறலுடன ஒப்பொழிச்சலில்லாமற் பாணங்களை குசலராஜன் பேரிற் பொழிகிறபோது குசலன்கண்டு அதிக சுருக்கான பாணங்களை வில்லிற்சந்தித்துவிட்டு சலவசந்தன்விட்டகொடியபாணங்களைஎல்லாம் அறுத்துத்தள்ளி சலவசந்தனைச் சல்லடைக்கண்களாகத்துளைத்து மிதமில்லாதஅஸ்திரங்களை ராட்சதாள்பேரில்விடுகிறபோதுராட்சதாள்பேரில்விடுகிறபோதுராட்சதாள் எப்படிவிழுகிறார்களென்றால் கால்வேறு கைவேறு தலைவேறுஉடல்வேறு எலும்புவேறு இரைச்சிவேறு வேறாகவீழ்ந்து மண்டைகளுடைய துதிக்கையறுந்தும்துடைமுறிந்தும் வாலறுந்தும்விழத்தலைப்பட்டது ரதங்களோவென்றால் அச்சு முறிந்தும் ஆணிகழன்று மச்சு ஒடிந்து காடியறுந்து கொடைகள் முறிந்து குதிரைகளோவென்றால் தலையறுந்தும் காலொடிந்தும உடலறுந்தும் கல்லானை பிளந்து உருளத்தலைப்பட்டது இப்படியானைதேர்பரிசேனைகளும் குசலராஜன் பாணங்களினால்மாண்டு உதிரவெள்ளம்பெருகியோடினதாம் அப்படி குசலராஜனுடையயுத்தமானது ராட்சதாள் பேரில மூண்டுக்கொள்ளவே ராட்சதாள்விடுகிற பாணமோ சலபமென்றெண்ணவேண்டாம் குசலனோ எல்லாந்தேவதாஸ்திரங்களே எடுத்துவிடுகிறான.

இந்தப்படியாய் குசலராஜனுடைய அஸ்திரத்தினாற்சலவசந்தனுமெத்தநொந்து ராட்சதாளுஞ்சின்னாபின்னமாய் தலைவாறுகெட்டுமுறிந்தோடுகிறபோது காலசித்தன்கண்டு எதடாராட்சதசிரேஷ்டரும் ராட்சதாளுமுறிந்தோடுகிறார் தேவர்கள்கண்டால நகைப்பார்களே இதுமெத்தவெச்சலல்லவோ ஆயுசுளவரைக்கும்பேச்சலல்லவோ ராஜாவோடினால ராட்சதாள் ஒப்புகிறதும் மகா பெரிதோவென்று தன்னுடைய சாரதியைஎச்சரித்து ரதத்தைநடத்தி ராட்சதாளைப்பார்த்துச்சொல்லுகிறான் அடாராட்சதாளேஓடவேண்டாமநில்லுங்கள என்னமுழுகிப்போச்சுதென்றோடுகிறீர்கள் உங்களுக்கு ரோஷபாஷந்தானில்லையோ ஒருசிறுபிள்ளைக்குபயந்து இப்படிசின்னாபின்னமாயவிழுந்துகெட்டுஓடுகிறவர்களுண்டோ ஓடினால் ராமநதுக்கோபம் நம்மைவிடுமோ ராமருடையவுப்பைதின்றுப்சாப்பிட்டு எதிரிகள்வந்து என்னை

எதிர்த்துக்கொண்டவேளையில் இந்தசரீரத்தைசதிரிகள்கையில் ஒப்பிவியாமல் இப்படி புறமுதுகுகாட்டி ஓடிவரலாமோ அடாராட்சதாளேஓடாதீர்கள் அந்தசிறுபிள்ளை குசலனைஜெயித்தாலும்சரி அல்லது குசலன்கையில் மாண்டாலுஞ்சரி உங்களைஎழுப்பிக்கொள்ளுவே இல்லையென்று ஓடிவந்துவிட்டீர்களேயானால் என்வாளாயுதத்திற்குஉங்களைஇரையாகப்போடுவேனென்றான் அப்படிசொன்ன காலசித்தன்வார்த்தைக்கு மறுவார்த்தை சொல்லாமல மகாரோஷத்துவேஷங்களுடன் குசலன்பேரிற்றிரும்பி ஈட்டி எறியீட்டி சரிகை வாங்குவளைதடிசக்கரம் இருப்புலக்கைகண்டகோடாலி கத்திதண்டு சூலம் இப்படிசொல்லப்பட்ட ௨௨-ஆயுதங்களையுமெடுத்து குசலராஜன்பேரில் திவ்திவ்வென்று பிரயோகம் பண்ணிவிட்டார் அதுகள் வேகத்துடன வருவதை குசலராஜன்பார்த்து அநேகபாணங்களை விட்டுவிடுகிற ஆயுதங்களையெல்லாங் கண்டித்து அவர்களுடைய சிரங்களையுமறுத்துப்போட்டான் அதுகண்டுசலவசந்தன் அதிகஉக்கிரத்துடன் குசலன்ரதத்தைத் திருப்பிக்கொண்டு அநேகபாணங்களை ஒய்ஓழிச்சலில்லாமல ஐப்பிசிகார்த்திகைமாதத்தில் மூடுபனிபோல் பொழிந்துவிட்டான்.

அதுகண்டுகுசலராஜனும்அநேகபாணங்களைவில்லிற்சந்தித்துவிட்டுவருகிறபாணங்களையெல்லாமறுத்துமலைபோலிருபக்கம்குவிக்கத்தலைப்பட்டான் அதனாற்சலவசந்தன அதிககோபத்துடன் சீக்கிரமாக ௧௫-சிங்கமுகாஸ்திரமெடுத்துவில்லிற்சந்தித்துகுசலராஜன்மீதில்விட்டான் அதுகண்டுகுசலன்-௧௦-அர்த்தசந்திராஸ்திரம்விட்டறுத்துப்போட்டான் அதுகண்டு சலவசந்தன் குசலராஜனைக்கட்டி சுழலில் விடவேணுமென்று சுழற்பாணத்தை எடுத்து வில்லிற்சந்தித்துவிடுந்தா னதுபார்த்து ஒரு சூராவளி எடுத்துபிரயோகம்பண்ணிவருகிறசுழற்பாணத்தை கண்டித்துவிட்டான் அதுபோகவே சலவசந்தன்உக்ராகாரனாக குசலன்முன்னுக்கு ரதத்தைநடத்திச் சொல்லுகிறான அடாசிறுபிள்ளாய் ஏன்தலைகீழாய் விழுகிறாய் உன்தாய்தந்தைபேரைச்சொன்னால்அதனபின் தேவதாஸ்திரங்களைஎடுத்துவிட்டு யுத்தம்பண்ணுவோம்சொல்லென்றுகேட்டான் அதற்குகுசலராஜன சலவசந்தனுக்குச்சொல்லுகிறான் என்னாயார்பேர் ஜானகியம்மாள் எங்களையர்பேர்வால்மீகர் என்பேர்குசலன் என்தம்பிபேர்லவன் இனியாவதெதோ எடுபார்ப்போம்தேவதாஸ்திரங்களைவிடுயென்றான அதுகேட்டுசலவசந்தன் யோசனைசெய்து இவன் ரிஷிபிள்ளையென்றே சொல்லுகிறான் இவனைப் பார்த்தால் ஸ்ரீராமர்போலுமிருக்கின்றது இவனது வில்லுக்குமுன் நம்முடையவில்லில்லாதுபோற்றட்டுப்படுகின்றது இவனால்நமக்கு இடுக்கண்வரும்போலுமிருக்கின்றது சூரியனஸ்தமானான் இனி என்ன யுத்தம்நடக்கப்போகிறது எல்லாம்நாளையுதயத்திற் பார்த்துக்கொள்வோமென்று குசலராஜனைப்பார்த்து அடாதம்பி குசலனே கேளாய் உன்னைப் பார்த்தால் ஸ்ரீராமரைப்போ லிருக்கின்றது ஆனபடியால் எனக்குன்பேரில் யுத்தஞ்செய்யமனதிசையவில்லை என்பேரிற் சண்டை செய்ய வேணு மென்றாலும் பொழுதுபோய்விட்டது இனி என்னயுத்தஞ்செய்யப்போகிறாய் சுருக்கில் உன் தாயிடம் போய்ச்சேரென்றுசொன்ன சலவசந்தனைப்பார்த்துக் குசலன் சொல்லுகிறான் அடா சலவசந்தனே என்னவார்த்தைபுகன்றாய்என்னைப்பார்த்தால் ஸ்ரீராமரைப்போலிருக்குதென்றும்பொழுதுபோயிற்றென்றும் இனி என்னயுத்தமாகப்போகுதென்றும்சொல்லவந்தாய் உலகில்மனிதரைப்போல ரூபம்படைத்தவர்கள் அநேகருண்டு இனிபொழுதுபோனாலும் பொழுதுவிடிந்தாலும் இரவுபகலானாலும் உங்களைவரையும பொழுதுவிடிகிறதற்குள் சம்மாரம்பண்ணி தம்பிலவனை மீட்டுக்கொண்டுபோகாமல் போவேனேயானால் நான்பிடித்தது பிரசண்ட கோதண்டமல்ல என்பேர் குசலனுமல்லவென்று சொல்ல அவ்வார்த்தையைக்கேட்ட சலவசந்தன் பகர்கின்றான்.

அடாகுசலனே இந்தராக்காலத்தில்ராக்ஷதருடன்யுத்தம்பண்ணி நிர்வாகம்பண்ண மாட்டுவைபோ மாய்கையில்வல்லமையுள்ளராட்சதாளாயிற்றேஇத்ராட்சதாளைநீஜெயிக்கமாட்டாய்உன்னாட்டியை கடித்து உதிரத்தைக்குடித்து ஜீவனையுங் கொண்டு போய்விடுவார்கள் அப்படிவாராதபடி உன்னுயிரை காப்பாற்றிதாயிடம்போய் சேர் நாளையுதயத்திற்கு வாவென்றான் இதனையுணர்ந்த குசலன் மொழிகின்றான் அடா சலவசந்தனே மீன்குஞ்சுக்கு நீஞ்சலும் வேங்கைக்குட்டிக்குப்பாய்ச்சலும உலகிற் காண்பித்துக்கொடுத்தவருண்டோ அதுபோற் பனங்காட்டில் வாசம்பண்ணும் நரியானது சலசலப்புக்கஞ்சுமென்றாற்போல் ராட்சதர்கள்மாய்கையிலமிருந்தவரென்று பயங்காட்டவந்தாயே அப்படிபயங்காட்ட வேண்டாம் உங்களாலானசாமார்த்தியத்தை நன்றாய்க்காண்பிக்கலாம் உங்கள் பிராணனுக்கு பிஞ்சன வஞ்சனையான யுத்தம்செய்து சாகவேண்டாம உங்கள மாய்கையும் பாணமும எடுங்களேதோபார்ப்போமென்றான் அதனைக்கேட்ட சலவசந்தன்நகைபுரிந்து நாம்மாய்கையில் வஞ்சனைமோசம்இராஜத்துரோகம்வந்துவிடுமே இதுநலமாய் காணவில்லை எதிர்க்கெதிரியாய் நின்று யுத்தம் பண்ணி வெல்லுங்களென்று வில்லிலநேக மாயிரம் பாணங்களைச் சந்தித்து குசலராசன்பேரில் மழைபொழிவதுபோல ரா

ஷுதானும் சலவசந்தனுஞ் சராமாரியாகப்பொழிகிற போது இந்தபாணங்கள் ஒன்றோடொன்றுறைய்ந்து நெருப்புப்பொறிகள் பறக்கிறபோது இரவுபகலாய் வெளிச்சங்காண்பிக்க மிதமில்லாத அஸ்திரங்கள்வருகிறதாலேயிற்குசலராசன்கண்டுதயிரியங்கொண்டு அநேக அஸ்திரங்களைவிட்டறுத்துப்போட்டான் அதனாற் சலவசந்தன்கோபமாகி ஒரு அக்கினியாஸ்திரமெடுத்து பூசைசெய்துவிடுத்தான் அதுவும்வில்லிற்விடுபட்டுகாலகோடிவிஷம்போற்சீறிக்கொண்டு அண்டமுகவெட்டும்படிவாயைத்திறந்து சலவசந்தன்விட்ட அக்கினியாஸ்திரத்தின்பேரில் தடாலென்றுவந்துவிழுந்து அதைக் கபளீகரம் பண்ணிப்போட்டு அம்புறாவில்வந்தடைந்தது அதுபோகவே சலவசந்தன் ஒருபர்வதாஸ்திரத்தை எடுத்து வில்லிற்றொடுத்துமந்திரபூஜைகள்கொடுத்து கடுகடுத்துவிட்டான் அந்தபர்வதாஸ்திரமானதுவிடுபட்டு அநேக பர்வதங்களாய் உருவுகொண்டுகுசலராசன் எங்கே எங்கேயென்றுவருகிறபோது அக்குசலராசனனவன் ஒருவச்சிராயுதமெடுத்து பூசை நைவேத்தியங் கொடுத்துவிடுத்து வருகிற பர்வதங்களையெல்லாம் அறுத்துவெட்டவெளியாக்கிறதுகண்டு சலவசந்தன் கோபமாகிஒருசத்தியையெடுத்துதனுசிற்றொடுத்து பத்திசிரத்தையுடன் பூசைநைவேத்தியம்புரிந்து குசலன்மார்புக்கு லக்குவைத்துவிட்டான்.

அந்தசத்தியானது வில்லைவிட்டு விடுபட்டு அண்டாண்டபுவனமதிர ஆவென்றுவாயைத்திறந்து குசலனைத்தேடிவருகிறதைகுசலன்கண்டு சுருக்கினிலக்குக்கியுருக்கிவிடும் பெருக்கமான ஒருசக்தியையெடுத்து பூசைநைவேத்தியம்புரிந்து வந்தனை வழிபாடு செய்துவிடுத்தானந்தசத்தியும்விடுபட்டு ஈரேழுபதினாலு உலகத்திலுள்ளயாவருந்திடுக்கிட்டேங்கி எமுசற்றரீ கவரிப்போ வேகத்துடனவந்து சலவசந்தனவிட்டசத்தியை படீரென்றிடித்தடித்துமுடித்து அம்புறாவில்வந்தடைந்தது அதுகண்டு சலவசந்தன் கடுங்கோபகொண்டு மகாசீக்கிரத்தில் நாராயணாஸ்திரத்தையெடுத்துவில்லிற்றொடுத்துமந்திரபூசைகள்செய்தான அந்த நாராயணாஸ்திரமும் வில்லிற்விடுபட்டு அநேககோடி சூரியனைப்போற பிரகாசித்துவெகுபலனென்றெரித்துகொண்டு குசலனைக்க எகுந்தவராமல பகசம் படுத்துங்கேமலை ருங்கார நீங்கார மூங்காரத்துடன் வருவதை கண்டு அண்டமண்டலாதிபனுகிய ஸ்ரீராமபிரான் புத்திரசிரோமணியாக விளங்காநின்ற குசலனுனவன் தட்சணம் அந்தப்பட்சணஞ்செய்யுபடியானலட்சணம்பொருந்திய தாயார்கொடுத்த நாராயணாஸ்திரத்தையெடுத்து பாராயணஞ்செய்துவிடுத்தானதுவும் அந்தவிதசைதலதாதல மகாதல பாதாளமுற்றும் நடுங்கதேவர்கள்கண்டோடுங்க ஆவென்றுவாயைத்திறந்துகொண்டுவந்துசலவசந்தன்விட்டநாராயணாஸ்திரத்தை கபளீகரம்பண்ணிப்போய்விட்டது.

அதுகண்டுசலவசந்தன்கோபமாகிவில்லைமுகத்திற்குநேராய்ப்பிடித்துசாங்கோபசாங்கமாய் அநேக அஸ்திரங்களைவில்லிற்சந்தித்து மாரிசொரிவதுபோல சராமாரியாய்பொழிகையிற்குசலராஜன்கண்டு அநேகபாணங்களை வில்லிற்சந்தித்துவிட்டதை யறுத்து அதலைமாகனாலுதிவ்யாஸ்திரங்கள்விட்டு சலவசந்தனேறிவந்தரதத்தை தும்சம்பண்ணிப்போட்டான் அந்தரதத்தையும்திவ்யாஸ்திரங்கள்விட்டு ரதம்சாரதிகுதிரைகளுடன் தும்சப்படுத்திவிட்டான் மறுபடியும் ஒருரதத்திலேறினனந்தரதத்தையும் சாரதிகுதிரைகளுடன் அஸ்திசளாற்கஸ்திப்படுத்தி இந்தப்படியாய் சலவசந்தனைரதமேறவொட்டாமல் ௨௰-ரதம்வரையிற் குசலராஜன் அதம்பண்ணினன் அதுகண்டுசலவசந்தன் அதிசீக்கிரமாய்வேறொருரதமேறி சாரதியையெச்சரித்து ரதத்தை குசலராஜன முன்னுக்குநடத்தி வில்லை எடுத்து நாணிபிகிந்து அநேக திவ்யாஸ்திரங்களை வில்லிற் சந்தித்துப் பிரயோகம் பண்ணவே குசலராசனும் ௱-திவ்யாஸ்திரங்களெடுத்து வில்லிற்சந்தித்து விட்டறுத்துப்போட்டதனமாய் ௫-சிங்கமுகாஸ்திரம்விட்டு சலவசந்தன் ரதத்திற்கட்டிய துஜத்தையுமறுத்து கைவில்லையுமொடித்து ரதஞ் சாரதி குதிரைகளுடன் தும்சம்பண்ணிவிட்டு சலவசந்தனுடைய சிரசையும் காகாவென்றறுக்கவே சலவசந்தன் ஸ்ரீராமாமாவென்று வைகுந்தஞ்சேர்ந்தான்.

அதுகண்டு குசலராசன் சந்தோஷமாகி வில்லிலநேகபாணங்களைச் சந்தித்து ராக்ஷதாள் பேரில் ௰-லா-௩-கோடிசங்கம் மகாசங்கம் அற்புதநிற்புதமென்று கணக்கு மிதமில்லாமல் சொரிகிற போது ராட்சதசேனைகளானவை காலறுந்தும் தலையறுந்தும் குடல்சரிந்து தொந்திகிழிந்தும் கையறுந்தும் சேனைகளானது இந்தப்படிசின்னபின்னமாய்மாண்டொத்தாரோடியதுஅப்போதுராட்சதர்ளயனைமேர் பரிசேனைகளுடன்போர்புரியும்போது சேனாதிபனகாலசித்தன்கண்டு சாரதியையெச்சரித்து குசலராசன்பேரில் ரதத்தைநடத்தி குசலராசனை பார்த்தான் அப்போது இராக்காலமாகையால் சந்திரனுடையவில்லிற்குசலனுக்குவகப்படாமையாற்குசலனை நோக்கிச்சொல்லுகிறான் வாருந்தம்பி சிறுபிள்ளாய் உன்தாய்தந்தைபேரியாது உன்னுடையபேரென்ன உன்னிருப்பிடமெங்கே எங்களுடன்யுத்தம்பண்ண வேண்டியகாரியமென்னசொல்லென்றுகேட்டான் அ

குசலராஜன்நகைத்துகாலசித்தனைப்பார்த்துஇவன் யார் பிர்மராட்சதனைப்போலிருக்கிறான ஒருவனைப் பார்க்கிலுமொருவன் ஞானுக நம்முடைய தாய் தந்தைபேரையம் நம்முடையபேரையும்முனவந்து கேழ்க்கிறான் நாம் வந்தபேருக்கெல்லாஞ் சொல் லிக்கொண் டிருக்கிறதா வென்று கடித்து அடா ராட்சதனேநீயோயென் தாய்தந்தைபேரைக்கேட் கிறவன் யுத்தமுனையில் உறவாடவந்தாயோ உன்னு டைய சாமார்த்தியம் இதனுற் றெரியவந்தது என் னுட னென்றும்பேசாமல் யுத்தம்பண்ணடாபார்ப் போமென்றான்.

அப்படிக்கூறிய குசலராஜனைக் காலசித்தன் பார்த்து அடாபிள்ளாய் நான் போர்செய்யபயந்து உன்தாய்தந்தைபேரைக் கேழ்க்கவரவில்லை உன்னை ப்பார்த்தால் சிறுபிள்ளையா யிருக்கின்றது என்னை யறியாயோ அறியமாட்டாயோ சகல உயிர்பிராணி களையுங் கொண்டு போகின்ற யமனுண்டே அந்த யமன் என்னைக்கண்டால் கையெடுத்துக் கும்பிடு வான் அப்படிப்பட்ட காலனை செயங்கொண்டபடி யினுல் என்பேர் காலசித்தனெனறு ஞாலத்திற் சொல்லுவார்கள் அதிருக்கட்டும் உன்தாய்தந்தை பேரை முன்னஞ்சொன்னபிற்பாடு என்முன்யுத்தம் பண்ணென்றான் அப்படிச்சொல்லியகாலசித்தனைப் பார்த்து குசலராஜன்சொல்லுகிறான் அடா கால சித்தனே என்தாய்பேர் ஜானகியம்மாள் எங்களை யர்பேர் வால்மீகர் என்பேர்குசலன் என்தம்பிபேர் லவன் இனியாகிலும் யுத்தம்பண்ணென்றான்.

அதைக்கேட்ட காலசித்தன் போசனை செய்து இவன் ரிஷிபிள்ளையென்று சொல்லுகிறான் நாமுந் திப்பதறிப்பாணம் விடப்போகா தென்று மனதி லெண்ணினவனுக குசலராஜனைப் பார்த்து அடா குசலனே நீயோசிறுவன் இந்த ராக்ஷதாளுடன் உனக்கு யுத்தமென்னத்திற்கு உன்னை என்னசெய் தார்களென்று என்னுடைய சேனையை இப்படிக் கொன்றாய் சொல்லென்றான் அதற்கு குசலராஜன் காலசித்தனைப் பார்த்துச் சொல்லுகிறான் அடா காலசித்தனே என்தமபிலவன உங்களை என்னபண் ணினுனென்று பிடித்துக்கட்டிக் கொண்டுபோனீர் கள் சொல்லென்றான.

அடாதம்பி குசலராஜனேகேள் அயோத்தியா புரி பட்டணத்தைப் பரிபாலனம் பண்ணப்பட்ட ஸ்ரீராம மூர்த்தி அஸ்வமேதயாகம் பண்ணும்படி யாய் குதிரையைவிட்டார் அக்குதிரையை உன தம்பி பிடித்துக்கட்டினான் அதைககாணுமல்தேடிக் கொண்டு இந்தக்காட்டில் வரும்போது குதிரை யைக்கண்டு பிடித்தோரையும் தேடி வந்தவர்களை யுங்கொன்றபடியினுல் எங்கள்தண்டுக்கு ராஜாக வந்த ஸ்ரீராமருடைய சகோதரனுகிய சத்துருக்க மகாராஜன் கேள்விப்பட்டு லவனுக்குப் பிரியவச னஞ்சொன்ன போதிலுங் கேளாமல் சத்துருக்க மகாராஜருடனே யெதிர்த்து யுத்தஞ் செய்தபடி யால் சத்துருக்நமகாராஜன் கோபமாய் உன்தம்பி லவனைப் பிடித்துக்கட்டி குதிரையும் விடுவித்துக் கொண்டு அயோத்திக்குப் பயணமாயிருக்கையில் நீவந்து இப்படி எங்கள்சேனையைக் கொல்லலாமோ வென்றான் காலசித்தனுனவன் அதுகேட்டு குசல ராஜன் சொல்லுகிறான் அடாகாலசிததனே அயோ த்தியாபுரி யாளப்பட்ட ஸ்ரீராம பிரான் விட்ட குதிரை தங்கள்பட்டணமட்டும் பிரதட்சணம் வர வேணுமே யல்லாமல் எங்கள் பட்டணத்திற்குவந்த படியினுல் என்தம்பி லவன்பிடித்துக் கட்டினுன் அவனுடன் யுத்தம்பண்ணி அவனைப் பிடித்துக் கட்டி குதிரையைவிடுவித்துக்கொண்டுபோக உங் களுக்கென்ன ஞாயமிருக்கின்றது சொல்லென்று கேட்டான் அதனைக்கேட்ட காலசித்தன் சொல்லு கிறான் அடாதம்பி குசலனே என்னவசனம் புகன் றாய் அயோத்தியாபுரி பட்டணத்தைப் பரிபாலனம் பண்ணப்பட்ட ஸ்ரீராமபிரான் விட்ட குதிரை அவ னுடைய பட்டணத்தைப் பிரதக்ஷணம் வரவேணு மேயல்லாமல் என்னுடைய வனத்திற்கு வந்தபடி யினுல் என்தம்பி லவன்பிடித்துக் கட்டினுனென் றல்லவோ ஞாயஞ் சொல்லவந்தாய் ஆனுற் கேளு ந்தம்பி ௱அ - அண்டம் ௨௰௪ - புவனம் சத்த சாகரஞ் சூழ்ந்த ஈரேழு பதினுலு உலகத்தையு மாளப்பட்ட தேவேந்திரன் அந்த தேவேந்திரனை தாத்திவிட்டு-௱அ அண்டம் ௨௰௪-புவனமும்சத்த சாகரஞ்சூழ்ந்த ஈரேழு பதினுலு லோகத்தையும் ராவணேஸ்வரன் ராச்சிய பரிபாலனம் பண்ணு கையில் ரிஷிகள் தேவர்கள்மச்சங்கள் பிடித்துக் கொண்டுவந்து தருகவும் வருணன் சாணந்தெளி க்கவும் வாயுதேவன் முத்தம் பெருக்கவும் சூரி யன் லங்கைக்குள் வராமற் புறத்தில நடக்கவும் சந்திரன் மாத்திரம் தன் பட்டணத்தில்வந்து தன் பிள்ளைகளுடன் விளையாடவும் பிரமதேவன் பஞ் சாங்கஞ் சொல்லவும் விஷ்ணுவானவர் மனைவரிச் சிலவுபார்க்கவும் ஈஸ்வரர்வந்து ஞாயவசனங்கூற வும் இந்தப்படியாய் சகலதேவர்களும் ரிஷிகளும் ஊழியஞ்செய்து பிழைக்கவும் யமன் லங்கைக்குள் ராக்ஷதாளைக் கண்டால் நடுக்கங்கொண்டோடவும் அக்கினிதேவன் சுயம்பாகியா யிருக்கவு மிப்படி யொருவரும் நிகரில்லாமல் துரைத்தனம்பண்ணிக் கொண்டிருக்கையில் அந்தராவணனைச் செயித்து ஈரேழுபதினுலுலோகத்தையுந்தேவேந்திரனுக்குக் கொடுத்துதேவேந்திரன பட்டணத்தைநிலைநிறுத்தி ரிஷீஸ்வரர்களுடைய சபதத்தையு மீடேற்றினுர் அப்படிச் சகல லோகங்களையும நிலைநிறுத்திய ஸ்ரீ

ராமபிரானுக்குஇந்தவனத்திற்கு குதிரைவிட அதிகாரஞ்செல்லாதோ நீசிறுபிள்ளை புத்தியானபடியினால் எங்கள்வனத்திற்கு வந்தகுதிரையைப் பிடித்துக்கட்டி யுத்தம் பண்ணினேனென்று சொன்னாய் அப்படிச் சொல்லாதே இப்பொழுது என்தம்பிலவன்செய்ததெல்லாந்தப்பென்று சத்துருக்கமகாராஜனை சரணமடையென்றான்.



குசலராஜனுக்கும் காலசித்தனுக்கும்யுத்தம்

சந்தவிருத்தம்.

வெஞ்சிலைதொட்டவசங்கநெப்புகழ்வெய்யோனுங்
அஞ்சதற்கண்டேசடற்கணை ஏந்திசொல்லும்சித்தன்
செஞ்சிலைமாரனெனத் திகழுங்குசலவன்றன்னை
மஞ்சதும்பால்வாடந்து னற்கொடுமேய்த்தனனே.

வசனம்

அப்படிச் சொன்ன காலசித்தனைப் பார்த்து குசலராஜனுக்கு கண்களிரண்டும் நெருப்புப்பொறி பறக்கக் காதுகளிரண்டிலும் புகைகளெழும்ப சரீரம் படபடவென்று துடிக்க சேனாதிபதியான காலசித்தனைப் பார்த்து தேவேந்திராதி தேவர்களும் வணங்காத ராவணனும்பர்ணதியை செயித்த வீராதிவீரனை ஸ்ரீராமபிரானுடையசாமர்த்தியம் என்முன வந்தாலல்லவோ தெரியும் அதிருக்கட்டும் இப்போது உன்னுடைய சாமர்த்தியத்தையும் உனக்கு ராஜாவாகிய சத்துருக்கமகாராஜனுடைய சௌரியத்தையும் இதோக்ஷணப்போதிலறிகிறேன் பாரடாவென்று பத்து திவ்வியாஸ்திரங்களெடுத்து வில்லிற் சந்தித்து காலசித்தன்பேரில்பிரயோகம்பண்ணினான்.


அந்த திவ்வியாஸ்திரங்களனைத்து வில்லில் விடுபட்டு அக்கினிச்சுவாலையாய் நெருப்புகளைக் கக்கிக் கொண்டு அதிகவேகத்துடன் வருகிறபோது காலசித்தன்கணமொருசாண் பாணத்தையிஞ்சினனென்று திவ்வியாஸ்திரங்களெடுத்து வில்லிற்சந்தித்துவிடுத்து குசலராஜன்விட்ட திவ்யாஸ்திரங்களை யறுத்துதள்ளி குசலராஜனைப் பார்த்துச் சொல்லுகிறான் அடா குசலனே வயிலாகாதசிலாக்ஷ தானைசெயித்தோமென்கிற கெர்வத்தினாலே என்வார்த்தையைத்தள்ளிவிட்டுப்பாணந் தொடுத்தாயல்லவோ நீயும் உன்னுடைய பாணமும் போகிறவழி உனக்குத் தெரியாமலேனதுள்ளுகிறாய் என்னுடைய சேதி உனக்குத்தெரியாமல் பாணந்தொடுத்ததால் நீசிறுவனானதினால் மனம் பொறுத்தேன் இப்போதாகிலும் என்பேச்சைத் தள்ளாமல் சத்துருக்கமகாராசனைவணங்கிப் பிழைத்தால் உன்தம்பிலவனை மீட்டுக்கொள்வாய் அப்படி சமாதானமாகிறதில்லையென்றால் இதோ என்னுடைய அஸ்திரத்தினாலே பஸ்மீகரப்படலமாய் உன்னையெறித்துப்போடுவேனென்றான் அப்படி கடூரமானவார்த்தை சொன்ன காலசித்தனைப்பார்த்து கண்கள்சிவப்பேறி கோபமீறி அடா காலசித்தனே நல்லவசனமுரைத்தாய் உங்களிராஜாவாகிய சத்துருக்க மகாராஜனைவணங்கி என்தம்பிலவனை விடுவித்துக்கொள்ளா விட்டால் உன்னுடைய அஸ்திரத்தினாலென்னை பஸ்மீகரப் படலம் பண்ண உன்னால் வல்லமை யுண்டோ அப்படி வல்லமை யுண்டானால் பாணாஸ்திரத்தை எதோபெடு பார்ப்போமென்று இந்திராஸ்திரம் அக்கினியாஸ்திரம் இப்படிச் சொல்லப்பட்ட அஷ்டதிக்குப் பாலகருடைய அஸ்திரங்களை வில்லிற் சந்தித்து காலசித்தன்மீது மாரி பொழிவதுபோல் சரமாரிபொழிய அவைகள் அக்கினிகளை குபீல்குபீலென்றுகக்க அக்கினிப் பொறிகள் ஆகாயமெழும்பி பூமியில்விழுகிறபோது இரவும்பகலாய் பாணங்கள் மகாமகிமையுடன்வருகிறபோது காலசித்தன்கண்டு தான் அஷ்டதிக்குப் பாலகரிடத்தில்வரம்பெற்ற அஸ்திரங்களையெடுத்து ப்பூசைசெய்துவிட்டான் அந்த அஸ்திரங்களுமாலகாலவிஷம்போல்அக்கினிச்சுடர்களுடனே அதிவேகமாகவந்து குசலராஜனுடைய பாணங்களை காலசித்தன்பேரில் போகவொட்டாமல் மறித்து ஒன்றோடொன்று யுத்தஞ் செய்து பொடிப்பொடியாய் பூமியில் விழுந்தது அதற்குள்குசலராஜன் நாராசபாணங்களெடுத்து காலசித்தன் பேரில்பிரயோகம்பண்ணினான் அந்த நாராசபாணங்களும் வில்லைவிட்டு அவ்வயதி லிருந்த நாகசர்ப்பத்தை கோலால்தட்டினால் எப்படிசீறிக் கொண்டுவருமோ அப்படிபோல நாராச பாணங்களானது ஒன்றோடொன் றுருப்ந்துக்கொண்டு அக்கினிப்பொறிகள் சிதறும்படியாக வரும்போது சேனாபதியான காலசித்தன்பார்த்து அதிகபலம் பொருந்தி யிருக்கப்பட்ட நாராசபாணத்வத க-௰-கது-௯௰-கோடியெ

ன்று கணக்குமிதமில்லாத நாமுசபாணத்தை வில்லிற்சந்தித்து குசலராஜன் விட்டனுறுநாமுசபாணங்களையும் அறுத்து பூமியிற்போட்டான் அதைப்பார்த்து குசலராஜன் எதடா ராக்ஷதன் அதிபலவானுயிருக்கிறன் இவனுடன் இப்படி யுத்தம்புரிந்தால் முடியாது தனதுவில்லை முகத்திற்கு நேராகப்பிடித்து அநேகபாணங்களை வில்லிற் சந்தித்து திமையுடன் திமைதட்டு முன்னம் சங்கம் அற்புதம் திற்புதமென்று கணக்குமிதமில்லாத பாணங்களைக் கட்டுக்கட்டாய் சோர்வைசோர்வையாய் உபரவிட்டவனைப்போல அநேகமாக வாசாமகோசாமாய்விட்டு ரதம் சாரதிகுதிரைகளையும் துச்சப்படுத்தி காலசித்தனுடைய சரீரத்தையுஞ் சதைசதையாய்ப் போத்தெறித்து விட்டான் அதைக்கண்ட காலசித்தன் சரீரமிகவும்நொந்து அநேகபாணங்களைவாரிகுசலராஜன்பேரில் விட்டான் அதுகள்கடலொலிபோல் இரைச்சலிட்டுக்கொண்டு வருகையிற் குசலராஜன் கண்டு அதிசீக்கிரமாய் ௫௦ திவ்வியாஸ்திரங்களெடுத்துப் பிரயோகஞ்செய்து காலசித்தனுடையபாணங்களையெல்லாம் அறுத்துப்போட்டு ஐந்து இடியாஸ்திரங்களெடுத்துப் பிரயோகம் பண்ணினன் அந்தவிவ்யாஸ்தரங்க ளைந்தும் அதிவேகத்தோடு வந்து காலசித்த னேறிவந்த ரதஞ்சாரதி குதிரைகளுடன் அதஞ்செய்துபோயிற்று அந்தாதம்போகவே காலசித்தன் மறுதேரிலேறி முன்னமே குசலராஜன் பின்னுமைந்து இடியாஸ்திரம்விட்டு ரதத்தையு முடைத்தெறிந்துப்போட்டான் அந்தப்படி ௰ ரதம்வரையில் குசலராசன்உடைத் தெறிந்து விட்டான்.

அதுகண்டு சேனாதிபதியான காலசித்தன எதடாலவனிலுங்குசலன் பலவானு யிருக்கிறன் நம்மைமாதமேறவொட்டாமலும் வில்லைக்கையிற்பிடிக்கவொட்டாமலும் பாணங்களைப் பூட்டவொட்டாமலும் அஸ்திரங்களை விட்டறுக்கிறன் நாமோ அநேகயுத்தங்களிற் கைகண்டிருக்கிறோம் அநேக தேவர்களுடனும் ராஜாக்களுடனும் யுத்தம்பண்ணியிருக்கிறோம் அப்போது நமக்கித்தனை ஆயாசமிளைப்பு வந்ததில்லை இப்போதிந்த குசலனலே ஆயாசம் இளைப்பு வருகின்றது எல்லாம் ஸ்ரீ ராமருடைய கிருபையென்று மனதை தைரியப்படுத்தி ராமாராமா வென்று ஸ்தோத்திரம் பண்ணவே காலசித்தனுடைய இளைப்பு ஆயாசம்நீங்கி அமிர்தஞ் சாப்பிட்டவனைப் போல அதிகதைரியத்துடனே மறுதேரிலேறி சாரதியைபெச்சரித்து ரதத்தை குசலராஜன் முன்னுக்கு நடத்தி வில்லைவளைத்து நாணிபிடித்து அநேகபாணங்களை வில்லிற் சந்தித்துவிடுத்து குசலராஜன் கைகாலாட வொட்டாமலும் வில்லைக் கையிற் பிடிக்கவொட்டாமலும் குசலராஜனுடைய சரீரத்தை ரத்தமயமாக்கிவிட்டான் அதனுற் குசலராஜனுக்குக் கைசோர்ந்து மெய்சோர்ந்துபோனதையிற் சொல்லுகிறன் இவனுடைய காவேகசாவேகர்தான் என்ன யுத்தப்புரிந்த பிரமுகனில் இவன்பலவானு யிருக்கிறன் நாம் விடப்பட்ட அஸ்திரங்களை யெல்லா மறுத்துப் போடுகிறன் இவனால் நமக்கு ஆயாசமிளைப்புமதிகமாக வருகின்றதென்று சற்றுநேரம் சும்மா யிருந்தோமேயானல் ராக்ஷதன்கையி லகப்பட்டுப்போவோம் என்செய்வோமென்று தாயே தாயேயென்று சீதையம்மனை மனதி லெண்ணின மாத்திரத்தில் சீதையம்மனுடைய கிருபையால் குசலராஜனுக்கு ஆயாசமிளைப்புநீங்கி அமிர்தபானம்பண்ணினவனைப் போலாகி அதிகதைரியத்துடன் அநேக அஸ்திரங்களை வில்லிற்பூட்டி வருகிற அஸ்திரங்களை யெல்லாம் தன்பேரில் படவொட்டாமல்வாட்டி சனுதியிலே வாய்வாஸ்திரத்தை யெடுத்து பத்தி விநயத்துடன் பூசைசெய்து காலசித்தன் ரதத்தைப்பார்த்துவிட்டுவிட்டான் அந்தவாய்வாஸ்திரமோ யுகாந்த காலத்தில் சண்டமாருதம் வீசினதுபோலகாலசித்தனுடைய பாணத்திற்குப் பிடிபடாமல் அதிவேகத்துடன் ரதத்தில்வந்து பாய்ந்து தெற்கே நூறு யோசனை தூரத்தில் ரத்தத்தைப் பின்னுக்குத்தள்ளிப்போய்விட்டது.

அதுகண்டு குசலராஜன் சந்தோஷமாகி அநேக பாணங்களைச்சந்தித்து யானைதேர்பரிசேனைகளின் பேரிற்பிரயோகம்பண்ணினன் அப்படிகுசலராஜன் மிதமில்லாத பாணங்களை சேனைகள்பேரில் விடுகிறபோது யானைக்குப் பாணம் ௬ சவுடாலுக்குப்பாணம் ௩ சேனைகளொன்றுக்கு ஒவ்வொருபாணம் இந்தப்படியாய் கணக்காகஎடுத்து அஸ்திரங்களை விட்டுக்கொல்லுகிறபொதுயானைதேர்பரிசேனைகள எப்படிவிழுகு தென்றால யானைகள் காலறுந்தும் வாலறுந்தும மத்தகம் பிளந்தும் தும்பிக்கைபறந்தும்கொம்புகள் முறிந்தும் சவுடால்கள் தறிந்தும் அம்பாரிகள் ஒடிந்தும் மாவுத்தன் தலையறுந்தும இராஜாயிறந்து விழவும் ரதங்களானது அச்சுமுறிந்தும்ஆணிகழன்றும் குத்துக்காலொடிந்துங்குடை வெட்டுண்டுமே துஜந்தரிபட்டும்குதிரைகள்குடல்சரிந்தும் சாரதி தலைவிழுந்தும ராஜாக்கள் மார்புதிறந்துசாயவும் குதிரைகளோவென்றால் முன்காலிரண்டுமுறிப்பட்டதும் கறிபட்டதுமாய் விழவும் சேனைகளோவென்றாலகால்வேறகைவேறுஉடல்வேறுஇறச்சிவேறுகவிழுந்தாத்தாறுடத்தலைப்பட்டது அதனற்குசலராஜன்சந்தோஷமாகி பாணங்களைவிட்டுக்

கொண்டு முதல் அணிகடந்து இரண்டாமணியில் வருகிறபோது அவ்விரண்டாமணியி லிருக்கப்பட்ட சேனைகள்கண்டு குசலாஜனை மடக்கிக்கொண்டு பாணங்களைவிட்டு யுத்தம் பண்ணும்பொழுது குசலனும் வில்லிலனேக பாணங்களைச் சந்தித்துவிட்டு கால்பமையான சேனைகள் விட்ட பாணங்களையெல்லாம் அறுத்துப்போட்டுக் கொல்லுகிறபோது சேனைகளானது பின்னபின்னமாய்த் தலைவாறுகெட்டு அயோத்தியை யோடலுற்றார்கள்.



கெதாயுதனுக்கும் குசலராஜனுக்கும் யுத்தம்.

விருத்தம்.

தேர்மிசையுற்ற கெதாயுதனென்ற செழுஞ்சூரான்
காரிருள்போற்பெருஞ் சேனைகளோடுகெலங்தேமி
பாரிநிறின் றபுராந்தகனெனவோர் பண்போனை
போர்புரியாவகை யோதுகவென்புகல்வானே.

வசனம்

அதனைப்பார்த்த கெதாயுதன் ஓட்டமாயோடுகிற சேனைகளை யோடவொட்டாமல் திருப்பிக்கொண்டுவந்து இரண்டாமணியில் நிறுத்தி ரதத்தைக் குசலராஜன் முன்னுக்குத்தாக்தி வில்லையெடுத்து நாட்டிக் சரங்களைப்பூட்டிவிடுகையில் குசலராஜன் கண்டு ௰-அர்த்தசந்திராஸ்திரங்களை விட்டறுத்துத்தள்ளி அதனமாய் ௰-நாராசங்களைவிட்டு கெதாயுதவ மார்பிலணிந்த கவசங்களையும் அறுத்துத்தள்ளிவிடவே கெதாயுதன் பார்த்து கோபமாகி ௫-திவ்யாஸ்திரங்களை யெடுத்து வில்லிற்சந்தித்து பிரயோகஞ்செய்தான் அந்தத்திவ்யாஸ்திரங்கள் விடுபட்டு அக்கினிச்சுவாலையுடன் நிருதிகெலரிந்துக்கொண்டு வருகிறபோது குசலராஜன்கண்டு நாலு திவ்யாஸ்திரங்களையுங்கொய்து அதனமாக இரண்டுதிவ்யாஸ்திரம்விட்டு சேனாதிபதியான கெதாயுதனேறிவந்த ரதத்தை யுடைத்துவிட்டான் மீண்டு மறுதேரிலேறினன் அதையுமுடைத்தெரிந்தான் இந்தப்படி ௨௰-தேர்வரையில் அதமாகவே கெதாயுதன் அதிசீக்கிரமாக மறுதேரிலேறி வில்லெடுத்து நாணிபிகிந்து சரங்களை வாரிசொரிகையில் அதுகளையுஞ் சில அஸ்திரங்கள்விட்டு தமோடச்செய்விட்டு அதனமாய் ஒருதிவ்யாஸ்திரம்விட்டு கெதாயுதன் பிடித்திருந்தவில்லை இருதண்டமாகச் செய்தான் இதுபோகவே கெதாயுதன் கோபமாகி எதடா சிறுபிள்ளையென்று பார்த்தால் நம்மை வில்லை கைபிடிக்கவொட்டாமலும் அஸ்திரங்களைப் பூட்டவொட்டாமலும் பின்னப்படுத்துகிறான் பார்த்தாயோவென்று தன்னுடையதண்டாயுதத்தையெடுத்துச்சுழட்டி குசலராஜன்பேரில் விட்டெறிந்தான் அதுபோகவே கெதாயுதன் கத்திகேடயமெடுத்துக்கொண்டு ரதத்துடன் வரும்போது குசலராஜன் பார்த்து ஐறுதியில் ஒருஅர்த்தசந்திராஸ்திரத்தை எடுத்து வில்லிற்றொடுத்துகடுகெடுத்து சிரசையறுத்துத்தள்ளினன்.



மட்சபந்தனுக்கும் குசலராஜனுக்கும்யுத்

கலிவிருத்தம்

மக்ஷபந்தவறுமாறும்வன்மைசேர்
இஷ்டருங்கதாயுதனேமனர்
பட்சமானதுகண்டுபெதறியத
துஷ்டனைமுடிப்பேனெனத் தூண்டினன்

வசனம்.

அதனைக்கண்டசேனாதிபதியானவன்கோபங்கொண்டு ரதத்தைகுசலராஜன் முன்னடத்திவில்லெடுத்து நிறுத்திநாணிபிகிந்து அனேகபாணங்களைவில்லிற் சந்தித்துகுசலராஜன்பேரிலெய்து யுத்தம்செய்துக் கொண்டிருக்கும்போது மக்ஷபந்தனமான் கண்டுமன

தில் அநேககோபங்கொண்டு மேற்கு முகமாய்ப்பாய்ந்து ௫0-யோசனைநீளம் எண்பது யோசனையுயரமுள்ள ஓர்பர்வதத்தைக் கெல்லித் தோளின்மீது வைத்து கோபநகைநகைத்து குசலாசன் முன்னுக்கு கொண்டுவந்து அவனைப்பார்த்துச் சொல்லுகிறான் அடாகுசலவனே கேளும் நீகையிலாகாதசில ராட்சதரைக் கொன்றோமென்று கெர்வித்தாயே அதையிதோ அறிவிக்கிறேன் என்கையிலிருக்கிற பர்வதத்தை பார்த்தாயோ இந்தப்பர்வதம் விடு முன்னமே எங்கள்ராசாவாகிய சத்துருக்கமகாராசனைவணங்கினால் நீவல்லவனாய் இல்லாவிடிற்சாவாயென்றான் அப்படிகூறிய மக்ஷயந்த அனுமானைப் பார்த்து அடாஇதுஎதடா காட்டிற்றிரிகின்றகுரங்கானது மலையைத்தூக்கிக்கொண்டு வந்துசத்துருக்கனுடையபேரைச் சொல்லி நம்மை மிரட்டுகிறது இதையார் வளர்த்து வார்த்தை கற்றுக்கொடுத்த குரங்கோ ஆனாலும் இவனுணுவத்தை அறிவோமென்று அருகில் நெருங்கி அடாகுரங்கே எதுமொழிக்காய்நான்சத்துருக்கனைவணங்கினால்நன்று இல்லாவிடில்உன்கையினாலிருக்கும்குன்றினாலின்று கொன்று விடுவேனென்ற என்முன்னின்ற புகன்றாயல்லவாநல்லது அந்தசத்துருக்கனிடத்தில்பலாபலமிருந்தால் என்னைவெற்றியடைகிறான் இல்லாவிடில் என்கைசாமார்த்தியமிருந்தால் நான்வெற்றியடைகிறேன் நாட்டில் வாழாதகாட்டில் வாழும் நீயோகுரங்கு உனக்கு மவனுக்கும் என்னசம்மதமுண்டென்றுதலைமேல மலைவைத்துக்கொண்டு வந்தாய் ராட்சதமாய்கையால் இப்படி குரங்குருபமெடுத்து வந்தாயே நீயார் சொல்லாவிடில் உன்னையும் முன்தோளிலிருக்கும் பர்வதத்தையும் நீர்த்தூளி படலமாக்குவேனென்றான்.

அவ்வார்த்தையைக் கேட்ட மட்சயந் தநுமான் குசலாசனைப் பார்த்து குலுங்கநகைத்துச் சொல்லுகிறான் அடாகுசலவனே கேள் பராபரவஸ்துவாய் விளங்குகின்ற ஸ்ரீமந்நாராயணனே ஸ்ரீராமமூர்த்தியாய் அவதரித்து ராவணசம்மாரஞ் செய்யுங்காலையில்வாய்வு புத்திரன் அநுமாராகிய என்தந்தையைக்கொண்டுசிநேகங்கொண்டுவாலியைக்கொன்று சுக்ரீவனுக்கு பட்டங்கட்டி எழுபத்திரண்டு வெள்ளம் எனனைப்போன்றவானரரைதண்டுகூடிப்படையெடுத்து லங்கைக்குள் நுழைந்து ராவணசம்மாரமுடிப்பித்து கீர்த்திபெற்ற அநுமார்குமாரன் என்பெயர்மட்சயந்தனுமானென்று சொல்லுவார்கள் அப்படியிருக்க காட்டில் வாழுகிற குரங்கானால் பேசத்தெரியுமோ இப்பேர்க்கொற்ற பர்வதத்தை நோக்கி தூக்கிக் கொண்டுவர பலன்தானுண்டோ என்னைப் போல்பலம் படைத்த எழுபத்திரண்டு வெள்ளம்வானரரால் அயோத்தியி லிருக்கிறார்கள் அதுவுமன்றி ஐந்நூறுவெள்ளம் ராக்ஷதரும் ராக்ஷதசிரேஷ்டர்களும் வந்திருக்கிறார்கள் நீயோசிறுபிள்ளைஎன் வீணில் மீளாதவகையை தேடிக்கொள்ளுகிறாய்வலருடன்பகைக்கின்வேருடன்கெடுமென்ற பழமொழி யுணர்ந்திலாயோ ஆர்பகையானாலும் ஸ்ரீராமர் பகையாருக்குமாகாது ராமபாணங்கொஞ்சத்தில்விடாது ஆகையால்யென்சொல்லைத் தள்ளாமல் வேறொன்றுங் கருதாமற் கொள்ளாமற் சத்துருக்கமகாராஜனை இணங்கி வணங்கிபிழைப்பதே காரியமென்றான்

அப்படிச்சொல்லிய மக்ஷயந்தனுமானைப்பார்த்து குசலாசன் சொலலுகிறான் அடாமக்ஷயந்தவனுமானே அந்தராமனைப்போல் லட்சராமன் வந்தாலும் அவன்தம்பி சத்துருக்கனைப்போல் இரண்டு லக்ஷம் சத்துருக்கன் வந்தெதிர்த்தாலும் உன்னைப்போலபலாபலம்படைத்தவானரவெள்ளமானராக்ஷதவெள்ளமானதுகோடிவெள்ளம்வந்தாலும் அயோத்தியைநாடிதேடி தேடியோடிப் போகும்படியாய் என்னுடைய நாராயணாஸ்திரத்தினாலேஒருக்ஷணப்பொழுதிற் சம்மாரம் செய்துபோடுவேன் அந்த ராமனும் அவனுடைய சேனைகளும் உனக்கேபெரிதாயிருக்கும் அதுகளெல்லாம் எனக்கோர் துரும்பென்றுநினைத்திருக்கிறேன்நீபோடப்பட்டமலையை எதோபோடு பார்ப்போமென்றான்.

அப்போது மக்ஷயந்த அநுமான் அதிககோபங்கொண்டுஇவனைக்கொன்றாலும் தோஷமில்லையென்று சுழட்டிக்குசலாசன்பேரில்விட்டான் அந்தபர்வதமானது மூங்கிற் காடுபத்தி எறிய காடுபுலிசிங்கம் காட்டானைகள் திடுக்கிட அதிவேகமாக வருகிறபோது குசலாசன் கண்டுசீதையம்மாள்கொடுத்த இந்திரனுடைய வஜ்ராயுதத்தை எடுத்து வருகிற பர்வதத்தின்பேரிலே வீசிவிட்டான் அந்தவச்சிராயுதமானது பாவதத்தின்பேரிலே படவே பர்வதமானது விபூதிதூளிதம்போற் பூமியில விழுந்துவிட்டது அதுகணடு மட்சயந்தனுமான் கோபமாகி மேற்கு முகமாக நோக்கி மற்றோர் பர்வதங்கொண்டுவரப் பாயுமுன்னமே குசலாசன்கிலல னேகபாணங்களைச் சந்தித்து மட்சயந்தவனுமான் பேரிற் பிரயோகம் பண்ணிவிட்டான பாணங்கள் வில்லில்விடுபட்டு நாகசர்ப்பம்போற் சீறிக்கொண்டு மட்சயந்த அநுமானுடைய சரீரங்களில் சருக்குசருக்கென்று வந்துதைக்கவே மட்சயந்தவனுமான் கையினாலும் வாயினாலும் பாணங்களை பிடுங்கிவுதறினான்அப்போது பாணங்களெல்லாமுறிந்துபோய் விட்டதுஅதற்குகுசலாஜன்-ஐ-சுரசபாணங்களை

டுத்து வில்லிற்சந்தித்து மட்சயந் தனுமான்பேரிற பிரயோகஞ்செய்தான அந்தப்பத்து நாராசபாணங்களும்விட்டு காலக்கோட்டி விஷம்போற் சீறி டிடி படபடவென்று சத்தத்துட னெறிந்துக் கொண்டுவருகிற ௰-நாராசங்களையும் மட்சயந்தனுமான்கையைநீட்டி பிடித்து கசக்கிபொசுக்கி சந்துவடங்காத நீவந்தவழிபோவென்றுகாட்டிக் கூட்டிபோட்டி விட்டார் அதனால் குசலராசன் கண்களில் பொறிபறக்க கோபத்துடன் நூறுநாராச பாணங்களையெடுத்து வில்லில் ஒவ்வொன்றாய்ச் சந்தித்துவிட்டான்.

அந்தநாராசபாணங்களானது ஆலகாலவிஷம் போற் புகைகளுடன் சீறிவரும்போது மட்சயந்தனுமான் ரணக்களத்தி லுருண்டு கிடக்கும் இரும்பு தெண்டாயுதத்தை கையிலெடுத்து வருகிறபாணாஸ்திரங்களை பறக்கடிக்கிறபோது பாணங்களானது வந்தவழி போனவழி தெரியாமற் போய்விட்டது குசலராசன் பின்னுமதிக சினங்கொண்டு திவ்யாஸ்திரங்களெடுத்து தனுசிற்றொடுத்து விடுத்துமட்சயந்த அனுமான்கையிற் பிடித்திருந்த இரும்புதெண்டாயுதத்தை யறுத்தெறிந்தான் அதுபோகவேமட்சயந்தனுமான் ரணக்களத்தில் விழுந்திருந்த ஆனைகளைவாரிவாரி குசலராசன் பேரில்விட்டெறிந்தான் அதுகண்டு குசலராசன் இரண்டுஅர்த்தசந்திராஸ்திரங்களைவிட்டு அதைச்சிதைத்தான் அதனால் மட்சயந்தனுமான் ரதங்களைவாரி குசலராசன் மீதுவிடுத்தான் அதற்குமிரண்டு திவ்வியாஸ்திரங்களைவிட்டு வருகிற ரதத்தை உடைத் தெறிந்தான் அதனால் மட்சயந்தனுமான் மயங்கித்தியங்கி இவனைஎவ்வாரஞ்செயிப்போமென்று மனதில் யோசனைகொண்டிருக்கையிற் குசலராசன் சொல்லுகிறான்.

அடாமட்சயந் தனுமானே என் யுத்தம்பண்ணுகிறாய் உனக்கு ஆயுதம் அஸ்திரங்கள்கல்லும் மரம் பானை தேர்களோடு இப்படியுத்தஞ் செய்தோரா வனராட்சதானை ஜெயித்தீர்கள் உங்களைசேவகத்திற்குவைத்துக் கொண்டாரமனும்உங்களைப்போல் தானேயுத்தம் பண்ணுவான் உங்களுடையவம்மிஷ சேஷ்டைகளையே காட்டினீர்கள் நீங்களொருசேவகனீரென்று என்முன்யுத்தம் பண்ணலாமோ உன்னைப்போல்-௯௨-வெள்ளம் வானரரும் இப்படிதான் யுத்தம்பண்ணுவார்களோ வென்றான் அதுகேட்டு மட்சயந்தனுமான் கோபத்துடனே குசலனைப்பார்த்துச் சொல்லுகிறான் அடாகுசலனே நீவிசேஷத்தை மிஞ்சாதே நீதானேசூரனென்று துள்ளாதே உன்கையில் வில்லிருக்கிறதென்று மதியாதேஎனக்கை குத்துக்கு உன்னுடைய அஸ்திரங்கொண்டா என்னைச்செயிக்கப் போகிறாய் உன்னால் வல்லமையுண்டானால் வில்லம்பை பூமியில்வைத்து என்னுடன் யுத்தம் பண்ணிப்பார் உன்னுடைய சமார்த்தியமும் என்னுடைய சௌரியமும் அப்போதல்லவா தெரியவரும் அப்படி யுத்தம்பண்ணுகிறதைவிட்டு ஆயுதஅஸ்திரங்கள் மிச்சமாயிருக்குதென்று நிராயுதராய்நின்ற பேரை என் வீணில் கொல்லுகிறாய் நீராசகுமாரனானால் ராஜயுத்தமும் தெரியவரும்ரிஷிபிள்ளை யானபடியினாலே உனக்கு இந்தவில்வித்தை விடவேறேயுத்தஞ் செய்யமாட்டாய் எதிரிக்கு வில்லம் பில்லாது கத்திகேடயமெடுத்து யுத்தஞ்செய்யவேண்டும் மெதிரி நிராயுதனாக போர்புரிய வேண்டும் இதல்லவோ ராசநீதிமுறைமையான யுத்தம் உனக்கு தனுர்வேதசாஸ்திரயுத்தம் தெரியுமா நாலாவித யுத்தமும் தெரியவாராதோ வென்றான்.

அப்படிசொன்ன மட்சயந்தனுமானைப் பார்த்து குலுங்கநகைத்து அடா மட்சயந் தனுமானேநல்ல வசனம் சொன்னாய் காட்டில்வாசம்பண்ணப்பட்ட மிருகங்களுக்குச் சமதையான குரங்கு யுத்தியை இனி நான கேட்டல்லவோ நான்யெந்த யுத்தமாகிலும்செய்யவேண்டும் வில்லம்பிருக்கிற மட்டும்நான் வில்லம்புகொண்டே யுத்தம்பண்ணுவேன் உன்னாற்சாமார்த்திய முண்டானால் என்னுடைய வில்லையொடித்தெறிந்து போட்டாயே யானால் அதன்பிற்பாடு எந்தயுத்த மாகிலும் பண்ணுவோ மென்று அனேக திவ்வியாஸ்திரங்களை வில்லிற்சந்தித்துசரமாரியாக மட்சயந்தனுமான் பேரில் உச்சந்தலை முதல்உள்ளங்கால்வரைக்கும்பொழிந்துவிட்டான்.

அதனால் மட்சயந்தனுடைய சரீரங்களெல்லாம் சலலடைக்கண்களாகத் துளைத்து உதிரவெள்ளம் சொரிய மகா ஆயாசத்தோடு ஸ்ரீராமாராமா வென்றடியற்ற பனைசாய்ந்ததுபோல் மட்சயந்தன் பூமியில் மரண மூர்ச்சையை யடைந்தான் அதனைக் கண்டபவர்னன் மகாகோபாக்கினியுடன் அனேக அஸ்திரங்களை தனுசிற்றொடுத்து விட்டான்அந்த அஸ்திரங்களும் காலகோடி விஷம்போற் சீறிக் கொண்டு வருகையில் குசலராசன்கண்டு பதினைந்துஅர்த்தசந்திராஸ் திரமெடுத்து விடுத்துவருகிற பாணங்களை யறுத்து அதனமாக ஐந்துதிவ்வியாஸ்திரம் விடுத்து ரதஞ்சாரதி குதிரைகளையு மதஞ்செய்து பவர்னனுடைய மண்டையைப் பிளந்துவிடவே பவர்னனும் மிகஆயாசத்தோடு வில்லையடித்தட்டிற்போட்டு விட்டு மூர்ச்சையடைந்தான்

அப்போது குசலராசன் சந்தோஷமாக வெழுந்திருந்து அநேகஅஸ்திரங்களைசந்தித்து இரதகஜதுரகபதாதிகளின்மீதெய்து கொல்லுகிறகாலையிற்சேனு

திபதிகள்நின்று நிர்வாகம் பண்ணமாட்டாமலோடத்தலைப்படவே சேனாதிபதியான சூரசேனன் பார்த்து ரதத்தை நடத்தி ஓடுகிறசேனைகளை ஓடவொட்டாமல்திருப்பிக் கொண்டுவரும்போது குசலராசனானவன் இரண்டாம்மணிவிட்டு மூன்றும் மணியில்வந்தான்.



குசலராசனுக்கும் உக்கிரசேனனுக்கும் யுத்தம்.

கலிவிருத்தம்.

வஞ்சமிருமட்சயந்த அநுமான்பாய
வயவீரன்குசனொருதிருவச்சார்ந்தனே
ஞ்சதுபோற்பரந்தபடைஉக்கிரசேனன்
பாற்கொன்றருகுறையுசம்பகைத்துதன்னேனும்
தஞ்சமெனவடுத்தவருட்டணிவுசொல்லி
தடர்ந்ததேர்மேலேறிசெஞ்சிலையைதாங்கி
செஞ்சுடரோன்முன்னடரும்மஞ்சுபோலச்
சேனையொடுமேவுசிலசெப்புவானால்.

வசனம்

அவன் வந்ததைக்கண்ட உக்கிர சேனன்மகா கோபாக்கினியுடன் ரதத்தைக் குசலராசன் முன்னடத்திச் சொல்லுகிறான் அடாகுசலனே நில்லுநில்லெங்கே வருகிறாய் நீபோகாதே சிலபேரைக் கொன்றேமென்று கர்வித்திருக்கிறாய் அந்தகர்வத்தை அரைக்ஷணநேரத்தில் அடக்கி வைக்கிறேனபாரடாவென்று வில்லைஎடுத்து கிறத்தி அதிகதீட்சண்யமாயிருக்கப்பட்டம-திவ்யாஸ்திரங்களை வில்லிற்றொடுத்து பிரயோகஞ் செய்தான் அதுகண்டு குசலராசன் கோபாக்கினியுடன் ஐந்துநாராசமெடுத்து அபிமந்திரித்து விட்டான் அதுவும்விடுபட்டு நாக ற்பம் போலசீறிக் கொண்டுவந்து உக்கிரசேனன் விட்ட பத்துதிவ்யாஸ்திரத்தையும் அவன் ஏறிவந்தரதம்சாரதி குதிரைகளையும் தும்சம்பண்ணிப்போட்டது

அதுகண்டு உக்கிரசேனன் லகுவிலதப்பித்துக் கொண்டு மறுதேரிலேறினான் அதையும் இரண்டு திவ்யாஸ்திரங்களை விட்டுத் தெறித்தான் இப்படி முப்பதுதாம்வரையிற் குசலராசன் பாணங்களினாற் பொடியாக்கச்சே உக்கிரசேனன் திக்குமுக்காடி அக்கணை மறுதேரிலேறி சாரதியை பெச்சரித்து ரதத்தைநடத்தி வில்லையெடுத்து கிறத்திநாணிபூர்த்து அனேகதிவ்யாஸ்திரங்களை வில்லிற் சந்தித்து விட்டுவிட்டான் அந்தபாணாஸ்திரங்கள அக்கினிச்சுவாலையுடன் வருகிறபோது குசலராசன்கண்டுசீக்கிரத்தில் நூறுதிவ்யாஸ்திரம் விடுத்து தொடுத்து உக்கிரசேனன் கைவில்லைக் கொய்து சதைசதையாகப் போகும்படி செய்துசாரதி தலையறுத்து குதிரைகளையும் துண்டுதுண்டாகத்தரித்துப்போட்டான்.

அதனால் உக்கிரசேனன் தயிரியம்விடாமற்கத்தி கேடயமெடுத்து ரதத்தைவிட்டுக் குதித்துமண்டி விட்டுசிவ்வென்று பாய்ந்து குசலராசன்கண்டு ஒரு திவ்யாஸ் திரமெடுத்து சீக்கிரம்விடுத்து கத்திபிடித்தகையை அறவெட்டித் தள்ளினான் அந்தக் கத்தியுடன்கை போகவே அதிககோபமாகி வேகமுடன்இடதுகையிற் றண்டாயுதமெடுத்து சுழட்டிவிட்டெறிந்தான் அதுவுங் குசலனபேரில் ஓடிவருகிறபோதுகுசலராசன்கண்டு ஒருஅர்த்தசந்திராஸ்தமெடுத்துவிட்டு தெண்டாயுதத்தை அறுத்துத்தள்ளி அதிசீக்கிரமாக ஒருகண்டக் கத்திரிபாணமெடுத்து உக்கிரசேனன் சிரசையறுத்துத் தள்ளினான்.



குசலாசனுக்கும் அசுவசேனனுக்கும் யுத்தம.

கலிவிருத்தம்

வெஞ்சமர்செய்துஉக்கிரசேனனை
அஞ்சவெவகணை தொட்டகுசலன்மேல்
பஞ்சபாதகனுமஸ்வசேனனும
வஞ்சபோசெய்மர்க்குவளைந்தவன்.

வசனம்.

அப்போது அஸ்வசேனன் மகாவுக்கிரகத்துடன்
இந்த குசலனுடைய கைவில்லையும் இவனுக்கும்
உறுதியான சொல்லையும் அந்த வெல்லையி லுள்ள
வர்கள் யாவருமென்னை மெச்சத்தக்கதாய் கண்டிக்
கிறேன் இவனையு மிருபிளவாகத துண்டிக்கிறே
னென்று கண்டிப்பாக அனேக அஸ்திரங்களைவில்
விற்சந்தித்து குசலாசன் பேரில் சரமாரியாய்ப்
பொழிந்துக் கொண்டிருந்தா னதுகண்டு குசலாச
ன்வில்லிலனேக பாணங்களைச் சந்தித்து அசவசே
னன் சரீரத்தைச் சல்லடைக்கணைகளாகத் துளைப
டச்செய்தான் அதனால் அசவசேனன் மிகவும்கோக்
முஒரு சத்தியையெடுத்து பூசைசெய்து விட்டான்
அந்த சத்தியானது அண்டாண்ட புவனங்களும்
நடுங்க ஆர்ப்பரித்து வருகிறபோது குசலானதை
ப்பார்த்து தானுமோர் சத்தியையெடுத்து வந்தனை
வழிபாடுசெய்து உச்சரித்து அத்தருணத்தில்விட்டு
விட்டாதுவும் விடுபட்டு மண்டலமதிர விண்டலம்
நடுங்க வண்டவர்கலங்க இரண்டாவிலங்க சண்டப்
பிரசண்ட உத்தண்டத் துடன் வென்றுவாயைத்
திறந்துக்கொண்டு அசவசேனன் விட்டசத்தியைக்
கபளீகரம்பண்ணிப் போட்டது அதனால் அசவசே
னன்மகாகோபாக்கினியுடன் வில்லிலனேகபாணங்
களைச்சந்தித்து யுத்தம்பண்ணிக் கொண்டுவந்தான்

அந்தச்சமயத்தில் சேனாதிபதியாகிய காலசித்த
னுலவ பாணவேகமடங்கிரதத்தை அதிகவேகத்
துடன் நடத்தி ரணக்களம்வந்து குசலாசனைக்
கண்டு சொல்லுகிறான் அடா குசலனே நீயொரு
சேவகனென்று வில்லைக் கையிற்பிடித்தாய் எதிர்
நின்றயுத்தம் பண்ணப்பட்ட என்னை இப்படியஸ்
த்ரம்விட்டு சமயத்திலரதத்தை தள்ளிவிட்டபடி
யினால் இதுவரையில் நீபிழைத்திருந்தாய் இல்லா
விடில்என்னுடைய அஸ்திரத்தினாலேரித்தப்போ
வேன் இப்போதுமென்னஎதோஎடுபோர்ப்போமென்
முன் அப்படிசொன்ன காலசித்தனுடைய வார்த்
தையை குசலாசன் கேட்டுசொல்லுகிறான் அடா
காலசித்தனே விசேஷத்தை மிஞ்சாதே என்னவார்
த்தைபுகன்றாய் நீயொரு சேவகனென்று வில்லை
கையிலேபிடித்தா னென்றும்சமயத்தில் வாஸ்வாஸ்
திரம் விட்டு ரதத்தைப்பினனுக்குத் தள்ளிவிட்டா
னென்றும் இல்லா விடில் உன்னையும் உன்னுடைய
அஸ்திரத்தினாலே பஸ்மீகரப் படமா பெரியப்
போடுவா யென்றல்லவோ சொன்னாய் அப்படி
யானால் உன்னிலும் உன்னுடைய அஸ்திரத்தை
யும் பெரியப்பட்ட அஸ்திரமுண்டானால் எதோ
எடுபோர்ப்போ மென்று வில்லிலனேக பாணங்களைச்
சந்தித்துவருஷ காலத்தில் ஈசானிய மூலையில்மேக
மானது விடுபட்டு இடிமின்னல் குமுறலுடனே ஓய்
ஒழிச்சலில்லாமல் சரமாரிபொழிவது போலேஒன்
றரைநாழிகை பரியந்தம் மூச்சுவிடாமல் சரமாரி
யாய்ப்பொழிகிறபோது காலசித்தன் கண்டனேக
பாணங்களை வில்லிற்சந்தித்து ஐப்பசி கார்த்திகை
மாதத்தில் பெய்யுமழைப்போல இரண்டுநாழிகை
பரியந்தம் பொழிந்துக் கொண்டிருக்கையில் குசல
ராசன்விட்ட பாணங்க ளதிவேகமாய் வந்து கால
சித்தன் விடப்பட்ட அஸ்திரங்களை யறுத்து கால
சித்தனுடைய சரீரத்தையுஞ் சல்லடைக்கண்களாக
த்துளைத்து சாரதிகுதிரை களையும் அதஞ்செய்து
சேனைகள் பேரிலும அஸ்திரங்கள்பட அதிககூச்ச
லெழும்பத தலைப்பட்டது.

அப்படி குசலராஜனுடைய அஸ்திரங்களினாற்
காலசித்தன் மிகவுங்கஸ்தியடைந்துகுசலராசனைப்
பார்த்து பல்லைக்கடித்து ஒரக்கினி யாஸ்திரமெடுத்
து வில்லிற்றொடுத்து மந்திராபூதிகள் கொடுத்து
விடுததான் அந்தஅக்கினியாஸ்திரமானது வில்லில்
விடுபட்டு அக்கினிப் பொறிகளை வாரி யிரைதது
சிடசிட படபட வென்கிற தொனியோடு திகுதி
கெனயெரிந்துக் கொண்டு அதிவேகமாய் வருகிற
போது குசலராசன்கண்டு ஒரு அக்கினியாஸ்திர
யெடுத்தது சிற்றொடுத்து மந்திராபூதிக ளுடன்
விட்டுவிட்டான் அந்தக்கினியாஸ்திர மானது எரி
புகையுடன் யாவரும்மயங்க மூவருந்தியங்க தேவர்
களும் அண்டம் விட்டண்டமோதுங்க தந்திராதி
கள் வனமொடுங்க சிவ்வென்று வாயை திறந்து
கொண்டுகாலசிததனுடைய அக்கினியாஸ்திரத்தை
பூமியிற்தளளிப்போட்டு அம்புறாவில் வந்தது.

அதனாற் காலசித்தன் கடுஞ்சினமாகிய ஒருசத்தி
யைக்கையி லெடுத்து மந்திரா பூதிகள் செய்துவிட்
டான் அந்தச் சத்தியானது புறப்பட்டு அண்ட
ரண்டங்களும் ஆயிரத் தெட்டண்டமுங் குலுங்க
அக்கினி சுவாலையாய் அதி வேகத்துடன் சத்தி
யானது குரூரமாய் ஆகாயமெழும்பி தெர்தனம்
பாடிக்கொண்டு குசலராசன எங்கே யென்றுதேடி
வருகிறபோது தேவர்கள் கண்பயந்து ஒருஅண்ட
உயரமோடிப் போனார்கள் அப்போது குசலராசன்
கண்டு இந்தசத்தி மகாமகிமையுடனே வருகிறதெ
ன்று தன்னுடைய உக்கிரவீரசத்தியைத் தன் கை

திராபூதிகள்செய்துவிட்டான் அந்த உக்கிரவீரசத்தியானது ஆவென்று வாயைத்திறந்து அக்கினியை குபீல்குபீலென்று கக்கிக்கொண்டு அதிவேகமாய்வந்து காலசித்தன்விட்ட சத்தியை குசலனண்டைக்குப் போகவொட்டாமல்மடக்கிக்கொண்டு யுத்தஞ்செய்துகாலசித்தனுடையசத்தியை கமளீகரம்பண்ணிப்போட்டு அம்புறுவில் வந்தடைந்தது.

அப்படி காலசித்தன்விட்ட சத்திபோகவே காலசித்தனநாராயணாஸ்திரத்தைகையிலெடுத்தான் அதுகண்டுதேவர்களெல்லாம்பயந்து ஒருஅண்டமுயரம்ஓடிப்போனார்கள் அப்படிதேவர்கள்நடுங்கும்படியாய் நாராயணாஸ்திரத்தை பூசைசெய்து வில்லிற்சந்தித்துவிடவே அந்த நாராயணாஸ்திரமானது ஆலகாலவிஷத்தைப்போல் அக்கினியை வாரியிறைத்துக்கொண்டு அதிகவேகத்துடன்வருகிறபோது குசலராஜன்கண்டு இந்தநாராயணாஸ்திரமானது மகாமகிமையுடன்வருகிறதென்று தன்தாயார்கொடுத்த நாராயணாஸ்திரத்தை யெடுத்து பூசைநைவேத்தியஞ்செய்து பிரயோகஞ்செய்தான் அந்த அஸ்திரமானது அண்டங்குலுங்கஆற்பரித்துக்கொண்டு காலசித்தன்விட்ட நாராயணாஸ்திரத்தை தடாலென்று மோதிஒன்றோடொன்றாடுதாக்கி சிலநேரம்யுத்தம்புரிந்து குசலனுடைய நாராயணாஸ்திரத்தை கமளீகரித்து அம்புறுவில் வந்தடைந்தது

அதுகண்டுகாலசித்தன் மகாகோபாக்கினியுடன் எறிந்துவிழுந்து குசலராஜனை கொல்லவேணுமென்றுபிரமாஸ்திரத்தையுங்காலனிட வச்ரகோபதெண்டாயுதத்தையுஞ் சிவன்கொடுத்த சூலமுமெடுத்து பூசைகள்புரிந்து குசலராசனைப்பார்த்து ஒருவசனஞ்சொல்லுகிறான் அடாகுசலனே கேளும் இதுவரையில் உன்னை சிறுபிள்ளையெனறும் ராமரைப்போலிருக்கிறுயென்றுஞ் சீதாலட்சுமியுடைய பிள்ளையெனறு இதுவரையிலும் பொறுத்தேன் அப்படிமனம்பொறுத்ததோஷம் என்னுடைய சரீரமெல்லாந்துளைபட்டு மிகவுங்கஸ்தியடைந்தேன் ஆனபடியினலிப்பொழுது பிரம்மாஸ்திரமும் காலன்கொடுத்ததெண்டும் சிவன்றந்தசூலமும்விடுகிறேன் இனியுன்னைக் கொஞ்சத்தில் விடுவேனென்றுபாராதே இதோவிட்டுவிட்டேன் இதைவிலக்கடா பார்ப்போமென்று ஒன்றின்மேலொன்ருய் விட்டுவிட்டான்.

அம்மூனருயுதமும்வெளிப்பட்டு அண்டபகிரண்டம்ஆயிரத்தெட்டண்டங்களும்நடுங்க அக்னிபொறிகளெழும்ப அட்டகாசஞ்செய்து குசலராசனை எங்கேஎங்கேயெனறுவருகிறபோது குசலராசர் பார்த்துஅதிகவிரைவில் தாயார்கொடுத்த நாராயணாஸ்திரத்தைஎடுத்துபூசைசெய்துவில்லிற்சந்தித்துப் பிரயோகப்படுத்தினன் அந்தநாராயணாஸ்திரமும் விடுபட்டுமண்விண்ணதிரஏழுதடிஏழுலகமும் மேலுநடுமேலுலகமுருவுகொண்டு வடவாமுகாக்கினிப் பொறிகள் சிந்தி பூமியில்விழுந்து ரணக்களத்தி லிறந்திருக்கும் யானைபரிசேனைகளும்எரிந்து கடுநாற்றங்களெழும்பஆங்காரவீரபராக்கிரமத்துடன்விட்ட பிரம்மாஸ்திரம்தண்டாயுதம்சூலாயுதத்தின்பேரிலும் வந்துசடாலென்றுமோதி ஆகாயம்பூமியுமொன்ருய் ரூபங்கொண்டெதிர்த்துப்போராடி யுத்தம்புரிந்து அம்மூன்றுயுதத்தையும் முன்னுக்கு வரவொட்டாமல் அடித்து துறத்துகிறபோது தேவர்களகண்டு இந்த நாராயணாஸ்திரமானது நமதுபேரில் எங்கே வருகிறதோவென்று தியங்கிமயங்கும்படியாய் அம்மூன்றஸ்திரங்களுஞ் சின்னப்பட்டு வெட்கி அது இருப்பிடம்போய் சேரவே காலசித்தன்கண்டுபயங்கொண்டு எல்லாம்பலராமருடைய கிருபையென்று மனதைரியப் படுத்திக்கொண்டு பாசுபதாஸ்திரமெடுத்து வில்லிற்சந்தித்து மந்திராபூர்வத்துடனே பூசைகள்செய்து குசலராசனை செயமடைந்து வாவென்று வரவிட்டான்.

அந்தபாசுபதாஸ்திரம்விடுபட்டு அதற்குக் காவலாய் அஷ்டவயிரவர்களும் பாணத்தின்மூலையில்குலத்தைப்பிடித்து கொண்டிருக்க அஷ்டதிக்குபாலகரும்வரவர ஆயுதங்களும்பாணத்தின மத்தியில்நிற்க ஏகாதசருத்திரர்கள் துவாதசதனமுகான்சூலங்களை கையிற்பிடித்துக்கொண்டு பாணத்தினுடைய வலப்புறமாகக்காக்கப்புறப்பட்டது பாசுபதாஸ்திரமானது கண்டுதேவர்கள் சொல்லிக்கொள்ளுகிறார்கள் பிரமாஸ்திரத்தையுஞ்சூலத்தையுந் தெண்டாயுதத்தையும் நாராயணாஸ்திரஞ் செயித்தது இந்த பாசுபதாஸ்திரத்துக்கு எந்த அஸ்திரம் விடுவானே பார்ப்போமெனறிருக்கையில்குசலராசர்கண்டு இந்தஅஸ்திரமும் மகாமகிமையுடன வருகிறதெனறு நினைத்து சனைத்து தனதாயார்கொடுத்த நாராயணாஸ்திரத்தைஎடுத்து தூபதீப நைவேத்தியஞ்செய்து மந்திராபூதியுடனே வில்லிற்சந்தித்து தன் தாயை துதிசெய்து காலசித்தன்விட்ட பாசுபதாஸ்திரத்தை செயப்படுத்திவாவென்றுவிடவே அந்தநாராயணாஸ்திரமானது அண்டாண்ட பிரம்மாண்டம் ஆயிரத்தெட்டண்டங்களும் நடுங்க அக்கினியை வாரி குபீல்குபீலென்று பூமியிற்கக்குகிறபோது அந்தஅக்கினிப்பொறியானதுபூமியில்விழுந்து புல்பூண்டுமரமட்டைசெடிகளும் பத்திக்கொள்ள அந்த அக்கினிக்கடலில் யானை தேர் பரி சேனைகளும் கடு

சுற்றங்களொழும்ப அண்டபுவனங்களும் நடுங்க அஷ்டதிக்குமதிர ஆலகாலவிஷத்தைப்போற் சீறிக்கொண்டு அதிகவேகத்துடன்வந்து காலசித்தன் விட்ட பாசுபதாஸ்திரத்தை சடாலென்றுமோதி வேரறுகொடுக்கவே பாசுபதாஸ்திரத்தைக் காத்துக்கொண்டிருந்த அஷ்டபைரவர்களுடைய சூலமுமொடிந்து அஷ்டதிக்குப்பாலரிடஆயுதங்களுமுடிந்து ஏகாதசருத்திரான்சூலமுந்தவிடுபொடியாக்கி அஷ்டபைரவர்களும் அஷ்டதிக்குப்பாலகரும் ஏகாதசருத்திரர்களும் நாராயணாஸ்திரத்தினால் அடிபட்டு முறிந்தோடிப் போகவே பாசுபதாஸ்திரமானது வுக்கிரங்கிடாமல் நாராயணாஸ்திரத்தின் பேரில்லேறி யுத்தஞ்செய்கிறபோது நாராயணாஸ்திரம் அதிகவுக்கிரத்துடன் பாசுபதாஸ்திரத்தை முறிய வடித்து பூமியிற்றள்ளிவிட்டு அம்புறாவில வந்தடைந்தது.

அந்தபாசுபதாஸ்திரமானது பின்னப்பட்டு உருவாகி வெபிரானிடம்போய்ச்சேர்ந்தது தேவர்களும்நாராயணாஸ்திரத்தினுடைய மகிமையை ஒருவாரும் சொல்ல முடியாதென்று கொண்டாடிக் கொண்டிருந்தார்கள்.

அப்போதுகாலசித்தன் மிகவும் விசனப்பட்டு ராக்ஷதரைப்பார்த்துச்சொல்லுகிறான் அடாராக்ஷதர்களேகுசலன்சிறுபிள்ளையென்று பார்க்கிறீர்கள நம்முடைய ராக்ஷதகுலத்திற்கு நமனாகவந்திருக்கிறான் இவனை கெருசத்தில் விடப்போகாது நாலுமூலையும் வளைந்துக்கொண்டு யுத்தஞ்செய்து செயிக்கவேண்டுமென்றுசொல்லி மூன்றுமணியிலிருந்த ரதகஜ துரகபதாதிகளையும கூட்டி யானைகளொருபக்கமும் ரதங்களொரு பக்கமுமாய்நிறுத்தி குசலனைச்சில மடக்கிக்கொண்டு தானுமஸ்வசேனனும் சேனைகளையேவிவிட்டு வில்லையெடுத்து நிறுத்தி அனேகபாணங்களை வில்லிற்சந்தித்து இடைவிடாமற் சரவருஷங்களைப பொழியும்போது குசலராசன் கண்டு நகைத்து அபரிமிதமான அஸ்திரங்களைவாரி சொரிய மூலையிலிருந்து மேகமானது விட்டு இடிமின்னலைகுமுறலுடனே மழைசொரிவதுபோல ஓயாமல் நாலுமூலையும் குபவனந்திரிபோற்றிரும்பி பெய்து ராக்ஷதருடைய அஸ்திரங்களை பறக்கமாளாமல்வந்துவிழுகுதாம் பாணங்களானது அப்படி ராக்ஷதரும் காலசித்தனும் அசுவசேனனும் ரோஷத்துவேஷங்களுடன மிதமில்லாத பாணங்களைகுசலராசன ஒருவன்பேரில்வைக்கிறபோது குசலராஜனானவன் பாணமென்றறுப்பான் எவ்வளவுதொடுப்பான் என்னமாய்தானும் அஸ்திரம் விடுப்பான் ராட்சதரோடு கட்டுக்கட்டாய் பாணங்களை மட்டுமிதமின்றி உருவிவிடுவார்கள அதனாற்குசலராசனும் கல்லதென்று வில்லைநாட்டி அஸ்திரங்களைப்பூட்டி க-ம-ஈ-ஆயிரம்-பதினாயிரமென்று ஒரு முகூர்த்தம் மூன்றேமுக்கால்நாழிகை சரவருஷமாக பொழிகிறபோது அந்த அஸ்திரங்களானது காலசித்தனும் ராட்சதரும் விடப்பட்டபாணங்களையெல்லா மறுத்து ரதகஜ துரகபதாதிகளின் பேரில் மூண்டு எப்படிவிடுகிறதென்றால் யானையொன்றுக்குமூன்று பாணம்சவுடாலொன்றுக்கு ஒருபாணம இந்தப்படி கணக்காகவிட்டு கொல்லுகின்ற யானைகளானது காலறுந்தும் வாலறுந்தும் தும்பிக்கையறுந்தும் மத்தகம்பிளந்தும் கொம்புமுறிந்தும் குடல்சரிந்தும் விழுந்ததாம் பின்னும் ரதத்திற்கைந்துபாணம் சாரதிக்கொருபாணம் இவ்வண்ணமாகவிடுகையில் அவ்விரதங்கள் அச்சுவேறு ஆணிவேறு குத்துக்கால்வேறு கொடுங்கைவேறு சட்டம்வேறு தும்சம்வேறு கொடிவேறுசாரதிவேறு கால்வேறு உடல்வேறு தலைவேறு குதிரைவேறாகவிழுந்தலைப்பட்டதாம்.

அப்பால்குதிரைகளுக்கோவென்றால் மூன்றுபாணம்ராவுத்தனுக்கிரண்டுபாணம் சாரதிக்கொருபாணம் இந்தப்படிகணக்காய் பாணங்கள் குதிரைகள் பேரில் போய்விழுகிறபோது எப்படி விழுகிறதென்றால் காலறுந்தும் வாலறுந்தும் தலையறுந்தும் குடலறுந்துமாயவும் ராக்ஷதசேனைகளுக்கோவென்றால் நபரொன்றுக்கிரண்டு பாணங்கள் கணக்காகவிடுத்துக் கொல்லுகையில் சேனைகளெப்படிவிழுகிறதென்றால் தலைவேறுகைவேறு உடல்வேறு சதைவேறு எலும்புவேறு குசலராசனுடைய பாணங்களினால் ரதகஜதுரகபதாதிகள்மாண்டு காலசித்தன் சீரழிந்தும் தளைப்பட்டு ஆயாசத்தோடு ஸ்ரீராமாராமாவென்று கைவில்லை நழுகவிட்டுதேரின்பேரிற் சாய்ந்து மூர்ச்சையடைந்தான் அப்போது பாசறையிலுள்ள சவங்கள் பிணக்குவியலாய்க் குவிந்துஉதிரவெள்ளமானது ஓடத்தலைப்பட்டது.



வீரசேனனும் சூரசேனனும் குசலராசன்பேரில் யுத்தம்பண்ணுதல்.

எழுசீரடியாசிரியவிருத்தம்.

அண்டமெண்டிசையுஞ்சாங்களான்மறைந்தவஸ்வசேனன்முடிசிந்தக்
கண்டிடுவீரசேனனுஞ்சூரசேனனுங் கருவியேயெழுந்து
சண்டமாருதம்போற்றுனுவொட்டார் தனியனுங்குசலனைவளைத்து
எண்டிசையோருங்கிரிகொளாக்கணைகள் மாரிபோல்வாரியேயிறைத்தார்.

வசனம்.

அப்பால் குசலராசன் மூன்றுமணிகடந்து நான்காமணியில்வருகிறபோது மூன்றுமணியிற் காலசித்தனும்செய்திருந்தயுத்தத்தை பார்த்துக்கொண்டிருந்த ராமருடைய தண்டுதளங்களுக்கு சேனாதிபதியானவீரசேனனும் மட்சயந்தராசனுடைய குமாரனாகிய வீரசேனமகாராசனும் இவ்விருவருங்குசலராசனை நாலாமணியில் போகவொட்டாமல் மூன்றுமணியில்நிறுத்தி குசலனை முன்னுக்கு ரதத்தை நடத்தி சொல்லுகிறான் அடாகுசலனே எங்களைக் கண்டுபயந்து நீயோடினுல் நாங்கள் விடுவோமோ போகாதேநில்லடாவென்று வில்லைவளைத்து நாணிபிணிந்துபாணங்களையெடுத்துமாரிபொழிவதுபோல சரமாரியாய்ப்பொழிகையிற்குசலன் கண்டு கோபங்கொண்டு வில்லிலநேக அஸ்திரங்களைத்தொடுத்து அவர்கள்விட்ட அஸ்திரங்களையறுத்து அதனமாக ச இடியாஸ்திரங்களைவிடுத்துவீரசேனன்சூரசேனனேறிவந்த ரதத்தையு முடைத்தெறிந்துப் போட்டான் ரதமுடைந்துபோகவேவீரசேனனும்சூரசேனனும்பூமியிற்குதித்து மறுதேரிலேறி இருதிறவரும் வில்லைநாட்டி நாணிபிணியா முன்னமே குசலராசன் அதிசீக்கிரமாக ச-இடியாஸ்திரமெடுத்து வில்லிற்சந்தித்துவிட்டு இருதிறவருமேறிய ரதத்தையுமுடைத்துவிட்டானந்த ரதம்போகவே வீரசேனனும் வேறுரதமேறி வில்லையெடுத்து பாணந்தொடுக்கு முன்னமேகுசலராசன் உவாய்வாஸ்திரமானதுவிடுபட்டு சண்டமாருதம் வீசுவதுபோல அதிகவேகத்துடனே இருவருடையரதத்தில் வந்துபுகுந்து ரதத்தைபின்னிட்ட வண்ணம் கரு-போசனை தூரத்தில் கொண்டுபோய்விட்டது.




சவுபலராசனுக்குங்குசலராசனுக்கும் யுத்தம்.

கலிவிருத்தம்.

வலிமிகுந்தவிருவரும்வாலியான்
மெலிவுகொண்டவர்மேவுசெய்தியை
நலிவுளோர்சொல் கேட்டசவுபலன்
ஒலிசெயும்ரதத்தூர்ந்தவன்மூடினன்.

வசனம்.

அதுகண்டுகுசலராசன் ஆயுதமெடுத்துக்கொண்டுமூன்றாமணியைவிட்டு நான்காமணிக்குவருகிறபோது சந்தனராசனுடைய பேரன் சல்லியமகாராசனுடையகுமாரன் சவுபலராசன்கண்டு ரதத்தை குசலராசன்முன்செலுத்தி சொல்லுகிறான் அடாசிறுபிள்ளாய் எங்கேவருகிறாய் நில்நில்லடாவென்று வில்லைவளைத்து அநேகபாணங்களை வில்லிற்சந்தித்துப் பிரயோகம்பண்ணினான் அந்தபாணங்களும் வில்லில்விடுபட்டு அதிவேகமாகவருகிறபோது குசலராசன்கண்டு ௰-அர்த்தசந்திராஸ்திரமெடுத்து வில்லிற்றொடுத்துவிடுத்துவருகிற அஸ்திரங்களை அதம்பண்ணிவிட்டான் அதுகண்டு சவுபலராசன் கோபமாகி ௱-நாராசபாணங்களெடுத்து குசலன் வில்லைப்பார்த்து விட்டுவிட்டான் அந்தநாராசபாணங்களும்விடுபட்டு நாகசர்ப்பம்போற் சீறிக்கொண்டு அதிவேகத்துடனவருகிறபோது குசலராசன்கண்டு அதிசீக்கிரமாய் ௫௦-நாராசபாணங்களெடுத்து வில்லிற்சந்தித்துவிட்டு ௱-நாராசபாணங்களையு மறுத்தெறிந்து அநேகமாக உ௱-நாராசபாணங்களைவிட்டு சவுபலன்பிடித்திருந்தவில்லை ௯௦-பினவாகப்பிளந்துபோட்டானதுபோகவே நட்சணம்சவுபலன் ஒருவில்லையெடுத்து நாணிபிகிந்து க௦-அர்த்தசந்திராஸ்திரமெடுத்து வில்லிற்சந்தித்து பிரயோகம்பண்ணினான் அந்த அர்த்தசந்திராஸ்திரங்களானது வில்லில்விடுபட்டு அக்கினிச்சுவாலைகளுடன் அதிவேகமாய்வருகிறபோது குசலன் அர்த்தசந்திராஸ்திரமெடுத்து-௫௦-அர்த்தசந்திராஸ்திரத்தையு மறுத்து அதனமாக ஒருஇடியாஸ்திரம்விடுத்து சவுபலனேறிவந்தரதத்தை சக்கல்சக்காக உடைத்துவிட்டான்.

அதனாற்சவுபாலன் கோபங்கொண்டு மறுதேரில்லேறினைந்ததேரையுமொருஇடியாஸ்திரம்விட்டு உடைத்தெறிந்தான் இந்தப்படியாக ௫௱-ரதமுடைந்துபோகவே சவுபலன் அதிசீக்கிரமாய் வேறொருதேரிலேறி சாரதியையெச்சரித்துகுசலராசன்முன்புரதத்தை நடத்தி வில்லையெடுத்துநாணேற்றி அநேகபாணங்களை வில்லிற்சந்தித்து சோனைமாரிபோல சரமாரியாய் குசலராசன்பேரிற் பொழிந்து விட்டான் அதனை குசலராசன் பார்த்து-௫௦-திவ்யாஸ்திரங்கள்விட்டு சவுபலன் அஸ்திரங்களையெல்லாம் கண்டனஞ்செய்து சவுபலனமார்பிலணிந்த நவகவசங்களையும் பொடியாக்கிவிட்டான் அதுபோகவே சவுபலன்சீறி கோபமீறி ஒருசத்தியை யெடுத்து மந்திராபூதிகள் செய்துவிடுத்தான் அந்த சத்தியானது விடுபட்டு அண்டாண்ட புவனங்களும் நடுங்கஆர்ப்பரித்துகுசலன பேரில்வருகிறபோது குசலராசனும்வெற்றியுடைய சத்தியொன்றைஅந்தட்சணமெடுத்து பூசாவிதிகள் கொடுத்து விடுத்தான் அதுவும் விடுபட்டு சவுபலனிடசத்தியை சித்திரவதை செய்துவிட்டு அவ்வரசனேறிவந்த ரதத்திற்கட்டிய நாலுகு குதிரைகளையுமாய்த்து சாரதிதலையைத்தேய்த்துப்பின்புசவுபலனுடைய மகரகுண்டலகேயூரமதாணிப் பதக்கங்களும கிரீடங்களுடனிருக்கப்பட்ட சிரசை யறுத்துதள்ளி அம்புறாவில் வந்தடைந்தது




சவுந்தராராஜனுக்கும் குசலராஜனுக்கும் யுத்தம்.

கலிவிருத்தம்.

வெற்றிசவுபாலன் மாய்ந்தபின்மேனகை
வெற்றிடுங்குசன் பிணக்காடுபோ
லுற்றசேனைமது வுள்ளமதுருட்டவே
சற்றிரக்கமற் சவுந்தரன்தோன்றினன்.

வசனம்.

அதனைக்கண்ட சவுந்தராராஜன் தமையனிறந்தானென்று சாரதியை எச்சரித்து ரதத்தைநடத்தியில்லையெடுத்துநிறுத்தி அநேக அஸ்திரங்களை வில்லிற்சந்தித்து குசலராஜன்பேரிற் பிரயோகம்பண்ணினான் அதுகண்டுகுசலராஜன்பதினைந்துதிவ்யாஸ்திரங்களை எடுத்து தனுசிற்றொடுத்து பிரயோகப்படுத்தி சவுந்தராராஜன்விட்ட அஸ்திரங்களையறுத்து வெட்டவெளியாக்கினான் அதனாற்சவுந்தராராஜன்கோபங்கொண்டு அடா ராஜகுமாரா நீ இப்போது என்னுடையதமயனைக்கொன்றாயல்லவா அப்பழிக்குபதில் உன்னைக்கொன்றுபழியைத்தீர்த்துக்கொள்ளாவிட்டால் என்பேர் சவுந்தராராஜனு பாரென்று சபதஞ்செய்யவே குசலராஜன் அடாசவுந்தராராஜனே என்னவசனம்புகன்றாய் என்தமயனைக்கொல்லாவிட்டால் நீபிடித்ததுவில்லுமல்ல உன்பேர் சவுந்தராராஜனுமல்ல அஸ்திரத்தினாலுன்னையும் உன்ரதம்சாரதிகுதிரைகளையும் பஸ்மீகரப் படலம் பண்ணாமல் போவேனேயானால் நான்பிடித்ததுபிரசண்டகோதண்டமுமல்ல என்பேர்குசலனுமல்லவென்று சபதங்கூறி ஒருஅக்கினியாஸ்திரத்தைஎடுத்துத் தனுசிற்றொடுத்து பூசைநைவேத்தியங்கள் கொடுத்து கடுகடுத்து விடுத்தான் அந்தக்கினியாஸ்திர மானது திக்குகள் நடுங்க தேவர்கள் ஒடுங்க சக்கிரம்போற் சக்கிராகாரமாய் அக்கினிப்பொறிகளைக் கக்கிக்கொண்டு வரும்போது சவுந்தராராஜன்கண்டுபத்துதிவ்யாஸ்திரங்களை எடுத்து தூபதீபநைவேத்தியங்கொடுத்துவிடுத்தான் அதுவும் யுகாந்தகால யிடிபோ லிடித்துக் கொண்டு குசலன்விட்டஅக்கினியாஸ்திரத்தின்பேரில் வருணாஸ்திரமானது சற்றுமசையாமல் எரிகிற கூர்மையின்பேரில் எண்ணெயைக்குப்புறக்கவிழ்த்ததுபோல் வருணாஸ்திரத்தைக் கபளீகரம் பண்ணிக்கொண்டு அதிகஅக்கினிச்சுவாலையுடனதிகுதிகென்றெரிந்துக்கொண்டுவருகையிற் சவுந்தராராஜன் பின்னும் அநேகபாணங்களை விடுகிறபோது அவைகளையும் தும்சஞ்செய்து சுறுதியாய் வந்து ரதம் சாரதி குதிரைகளையுஞ் சவுந்தராராஜனையும்பஸ்மீகரப்படலம்பண்ணிவிட்டு அதிவேகமாக அம்புறாவில வந்தடைந்தது.



சல்லியராஜனுக்கும் குசலராஜனுக்கும் யுத்தம்.

கலிவிருத்தம்.

அந்தகன்பார் சவுந்தரனைபின்
சிந்தைநொந்து படைகள்சிதறிட
வெந்துயர்கொடு சல்லியராஜனும்
வந்துதேர்மேல் வளைத்தனன்வில்லையே.

வசனம்.

அப்படிச்சபதங்கூறிய சவுந்தராராஜனிறந்துபோனதைச் சல்லியராஜன்கண்டு பிள்ளைகளிறந்துபோனார்களென்று அதிகோபாக்கினியுடன்யானைமீதேறி குசலராஜன்முன்புநடத்தி அடாகுசலனே நீ எங்களுடையசேனைகளையும் என்னுடையகுமாரர்களிருவரையும் என்னநிமித்தியமாய்க் கொன்றாய் சொல்லடாவென்றான் அப்படிச்சொல்லிய ராஜனைப்பார்த்துச்சொல்லுகிறான் ஓமகாராஜனே என்னவசனம்புகன்றாய் என்தம்பிலவனைஉங்களிராஜாவாகிய சத்துருக்கர் பிடித்துக் கட்டினபடியால் என்னைஜெயித்து உன்தம்பியைக் கொண்டுபோம் இல்லாவிட்டால் நீயந்தவழியைப்பார்த்துக் கொண்டு நடவென்றான் அவ்வார்த்தையைக்கேட்ட சல்லியராஜன் குசலனைப்பார்த்துச்சொல்லுகிறான் அடாகுசலனே என்னவார்த்தை யுரைத்தாய் சத்துருக்க மகாராஜன்விட்டகுதிரை உன்தம்பிலவன்பிடித்துக்கட்டி யுத்தஞ்செய்து எங்கள்சேனையைக் கொன்றபடியினாலே சத்துருக்கமகாராஜனவன்கண்டு லவனுக்குப் பிரியவசனஞ்சொல்லியும் அவன்கேளாமற் சத்துருக்கமகாராஜனுடனெதிர்த்து யுத்தம்புரிந்தபடியினால் சத்துருக்க மகாராஜன் லவனைப்பிடித்துக் கட்டிவிட்டார் இதுகளையும்நீயுற்றுஇப்படிவீணிற் சேனைகளைக்கொல்லுகிறாய் இவ்வண்ணம் போர்புரிந்தும் உன்தம்பி லவனை விடுவிக்கப்போகிறாயா வருஷம் பன்னிரண்டானாலும் சத்துருக்கமகாராஜனைச் செயிக்க வல்லமையுண்டோ இராது நீயும் வீணில்

மடிந்துபோகாமல் சத்துருக்கமகாராஜனை வணங்கி
உன தம்பி லவனை விடுவித்துக்கொண்டு போவென்று
அப்படிகூறிய சல்லியனேகேள் எங்கள்வன த்திற்கு
நீங்கள்விட்ட குதிரை வந்தபடியினால் என தம்பிலவ
ன் பிடித்துக்கட்டினன் உங்கள்குதிரை உங்கள்பட்
டணத்தைச்சுற்றி பிரதட்சணம் வரவேண்டுமேயல்
லாமல் எங்கள்வனம்வரலாமோ வந்தபடியினால்யுத்
தம்பண்ணினனை அவனை நீங்கள் கட்டிக்கொண்டு போ
க என்னஞாயமிருக்கிறது அப்படிஞாயமின்றி அவ
ஞாயமாக எங்கள்வனத்தில்நீங்களும் உங்களுடை
யகுதிரையும் அடிவைத்ததுமல்லாமல் என்தம்பில
வனைப்பிடித்து கட்டிக்கொண்டுபோனதினால் சத்து
ருக்கராஜனுக்கு துணையாகவந்த உன்னையும் உன்னு
டைய சேனைகளையும் உன்ராஜனாகிய சத்துருக்கம
காராஜனையுங்கொன்று என் தம்பிலவனை மீட்டுக்கொ
ண்டு உங்கள் குதிரையையும்பிடித்துக்கட்டி அதற்கு
மேல்வரப்பட்ட சேனைகளைக்கொன்று ராமர்லட்சு
மணர் பரதனைக்கொல்லாமற்போவேனேயானால் நா
ன்பிடித்த பிரசண்டகோதண்டமுமல்ல என்பேர்
குசலராஜனுமல்லவென்று சபதம்பண்ணினன்.

அப்படி குரூரமாகச்சொல்லிய குசலராஜன்வார்
த்தையைச் சல்லியராஜன்கேட்டுசொல்லுகிறான் அ
டாகுசலனே என்னைக்கொல்ல வல்லமையுனக்குண்
டோ கொல்லது உன்னையென்னுடைய பாணங்களினால்
முன்னங்கொல்லாமல் விடுவேனேயானால் நான்பிடி
த்த வில்லுமல்ல நானேறிவந்த பட்டத்துயானை
யுமல்ல என்பேர் சல்லியராஜனுமல்ல என்னைக்கொ
ல்லப்பட்ட அஸ்திரத்தை தொடு பார்ப்போமெ
ன்றான் அப்படி அதிஉக்கிரமாகச்செப்பியசல்லிய
னே உன்னிலுமிகுந்த புஜபலபராக்கிரமமுள்ளபே
ரெல்லாம் உனக்குமுன்னிறந்துபோனதை நீகண்டி
ருந்தும் சபதம்பண்ணலாமோ அவர்களிலுமதிக
வீரசூர பராக்கிரமமுள்ளவன் நீயானால் எய்தாலடு
கொடு விடு அலைவிடில் அடுபடுகாடு என்றவில்லி
க்குணத்தொனிபண்ணவே அந்தசப்தமான துசகல
ரும்கேட்டு பன துதிடுக்கிட்டார் அப்படிதிடுக்கிடும்
படியாய் ஒருசிங்கமுகாஸ்திரத்தையெடுத்து மந்திர
பூர்வமெடுத்து தனுசிற்றொடுத்து விடுத்தான் அந்த
சிங்கமுகாஸ்திரமானது விடுபட்டு அநேக சிங்கங்க
ளாக உருவுகொண்டு வரும்போது சல்லியராஜன்க
ண்டு அநேகதிவ்வியாஸ்திரங்களை வில்லிற்சந்தித்து
ப் பிரயோகஞ்செய்தான் அந்த திவ்யாஸ்திரங்களை
யுந் தடாய்த்துக்கொண்டுவரும்போது மதமென்ன
ப்பட்ட யானையானதுகண்டு தன்னைப்பார்த்தெடு

த்ததாம் ஓட்டமானது அதனை சல்லியராஜன்பா
ர்த்து மாவுத்தனையெச்சரித்து யானையை முன்னுக்கு
நடத்தி ஒருசத்தியையெடுத்து பூசை நைவேத்திய
ஞ்செய்து குசலராஜன் விடுத்த சிங்கமுகாஸ்திரத்
தையறுத்து அவ்விராஜன்பேரிற் சத்தியானதுவரு
கையில் அவன்கண்டுதானும் ஒருசத்தியை எடுத்து
ச்சல்லியராஜன்விட்ட சத்தியை அறுத்தெறிந்தான்
அதனைக்கண்ட சல்லியராஜன் அதிககோபவேகத்து
டன் மாவுத்தனையெச்சரித்து யானையைநடத்தி வில்
லிலநேக திவ்வியாஸ்திரங்களைப்பூட்டி பிரயோகஞ்
செய்தான்.

அந்த திவ்வியாஸ்திரங்களும்விடுபட்டு அதிக அ
க்கினிச்சுவாலையுடன்வரும்போது குசலராஜன் ஐம்
பது திவ்யாஸ்திரங்களைப் பிரயோகித்து சல்லியரா
ஜன்விட்ட திவ்யாஸ்திரங்களைத்து மறுத்து அந
ந்தமாக திவ்யாஸ்திரங்களும் விடுபட்டு நக்ஷத்ரகாய
மாய் தங்கக் கட்டுகளுடனே பிண்டபட்சி பிறகுபூ
ண்ட நெருப்புப்பொறிகளைக்கக்கிக்கொண்டு வருகிற
போது சல்லியராஜன தன்தொடுத்து வில்லிற்றொடு
த்துவிடுத்தான் அந்தபிருப திவ்யாஸ்திரங்களும்
விடுபட்டு குசலராஜனவிட்ட திவ்யாஸ்திரத்தின்பே
ரில் சடாலென்றுவந்துமோதி குசலனுடையதிவ்யா
ஸ்திரத்தினாலறுபட்டு பூமியில் விழுந்து போயிற்று
பின்னுங்குசலராஜனுடைய திவ்வியாஸ்திரமானது
உக்கிரம்விடாமல் சல்லியராஜனபேரிலும் பட்டண
த்துயானைபேரிலும் அம்பாரிபேரிலும் அப்படிவிழு
கிறதென்றுப் யானைக்கு திவ்யாஸ்திரம்-க அம்பாரி
க்கு திவ்யாஸ்திரம்-உ மாவுத்தனுக்கு திவ்யாஸ்திர
ம்-ந இந்தப்படிகணக்காக திவ்யாஸ்திரம்விடுபட்டு
எப்படிவிழுகிறதென்றால் யானைவாலறுந்தும் மாவு
த்தனுக்கு மண்டையுடைந்தது ம இப்படியாய்ச்சல்
லியராஜனும் யானையும் குசலராஜன்பேரில் யுத்தம்
புரிகிறதைப்போனாகள் குசலராஜன் சந்தோஷமா
கி வில்லிலநேக பாணங்களை விடுவித்துக்கொண்டி
ருந்தான.





சாத்மீகராஜனுக்கும் குசலராஜனுக்கும் யுத்தம்

கலிவிருத்தம்.

வில்லும்வேலு மொழிந்தசல்லியன்
சொல்லொடுங்கிப் புவிமிசைசேரனே
ரல்லிக்கென்செயலோ மென்றசாத்மீகனும்
பல்லைக்காட்டி படுகளத்தோட்டினன்.

வசனம்.

அப்போது சாத்மீகராஜனானவன் குசலராஜன்பேரில் யுத்தஞ்செய்துக்கொண்டிருக்கிற தன்பிள்ளைகளுந்தமயனும் இறந்து போனார்களென்று கேள்வியுற்று மகாவிசனப்பட்டு சாரதியையெச்சரித்துக் குசலன்முன்னுக்கு இரதத்தைநடத்தி அவ்விராஜனைப் பார்த்துச்சொல்லுகிறான்.

அடாரிஷிகுமாரா உன்னைப்போல்வீண்சண்டைதேடிக்கொண்டபிள்ளையைதானெங்குங்கண்டதில்லை அதுவுமன்றி உன்வித்தையும் சூரத்துவமும் எங்கள்முன்பாகாண்பிக்கிறது நீசிறுபிள்ளையென்று உனக்குஞாயம்சொல்லி விலக்கவந்தபேரையெல்லாம் இப்படிஅஸ்திரங்களைவிட்டு கஸ்திப்படுத்திசித்திரவதைசெய்யலாமோ சொல்லடாவென்றான் அப்படிச்சொல்லியசாத்மீகராஜனைப்பார்த்து குசலராஜன் ஓ ராஜனேகேளும் எனக்குஞாயஞ்சொல்ல வந்தவர்களையெல்லாம் வீணில் மாய்த்துப்போட்டேனென்று நீர்ஞாயஞ்சொல்லவந்தீரல்லவா எங்கள்வனத்திற்கு உங்கள்குதிரைவந்தடிவைத்ததுமல்லாமல் என்தம்பிலவனுடனேயுத்தஞ்செய்து அவனைப்பிடித்துக்கொண்டுபோக ஞாயமுண்டோ சொல்லுமென்றுகேட்டான் அதற்குச்சாத்மீகராஜன் சொல்லுகிறான் அடாதம்பி ரிஷிகுமாரகா என்னவசனம்பகர்ந்தாய் பராபரவஸ்துவாய்விளங்கப்படாநின்ற ஸ்ரீமந்நாராயணரே ஸ்ரீராமனாகத்தசரதராஜன்வயிற்றிலவதரித்து ஸ்ரீராமபிரானுக்குதன்பட்டணமென்றும் தன்னுடைதேசம்பூமியென்றும் அவருக்கு வேற்றுமையுண்டோ அவர்விட்டகுதிரை உங்கள வனத்தில்வா என்னபாக்கியம்பண்ணினீர்கள் நீசிறுபிள்ளைத்தன்மையானபடியினாலே அவர்விட்டகுதிரையைபிடித்துக்கட்டி அவருடையசேனைகளை இப்படி அநியாயமாகக் கொன்றாய் இந்தபுத்தியைக் கொண்டோ அவரைஜெயிக்கபோகிறாய் உன்னால் அவரைஜெயிக்கபோகிறாய் உன்னால் அவரைஜெயிக்கவல்லமையிராது இன்னமும் நான்சொல்லப்பட்ட புத்தியைக்கேள் சிறுபிள்ளைகட்டிய சிற்றுடைபோலாகாது உன்னுயிர்தப்பித்துக்கொண்டு உன்தாய்தந்தையிடம்போய்ச்சேர் இல்லையென்றால் வானுலகமனுப்பிவிடுவார்கள் அப்படிவாராதபடிசத்துருக்கனைவணங்கி உன்தம்பிலவனைமீட்டிக்கொண்டுபோகிறதே காரியமென்றான் அப்படிசொன்னசாத்மீகராஜனைகுசலராஜன்பார்த்து இவன்வலுவாயனென்று குதினவனாக நாராசபாணமெடுத்து வில்லிற்சந்தித்துவிட்டான் அந்த அஷ்டதிக்கும்விடுபட்டுச் சண்டமாருதம்வீசினதுபோல இரத்தமயமாக்கி சல்லடைக்கண்களாகத்துளைத்துவிட்டது அதனால் தன்சரீரம் இரத்தங்கள் சொரிய ஆயாசத்தோடு ஸ்ரீராமராமாவென்று வில்லைதேரிலேவிட்டு ரதத்தின்பேரில் அடியற்றமாம்போல்முடியற்று மூர்ச்சையடைந்தான்.



வீரசேனனும் சூரசேனனும் குசலராசன்பேரில் யுத்தம்பண்ணுதல்.

எழுசீரடிப்பாசிரியவிருத்தம்.

மானமழித்தொடிபார்சாத்மீகன்றன்னை மணிரதத்திலேற்றியப்பாற்கொடுபோல்தோற்ற
வானளவுமுவர்ந்தநெடுந்தேர்மேலேறி வாரிதிபோற்றிரண்டபெருஞ்சேனைசூழத்
தீனபராக்கிரமசூரசேனனோடு தின்னமுறவிற்றுரும்வீரசேனன்
ஆனவிருவருங்கூடிக்குசலன்மீது அக்கினிபோற்பொறிசிதறவமர்செய்தாரே.

அப்போது யானைதேர்பரிசேனைகளைக் குசலராஜன்விடாமல் அஸ்திரங்களைவிட்டு அல்லோலகல்லோலத்தைப்பார்த்து சூரசேனனும்வீரசேனனும ரதத்தைநடத்தி வில்லைவளைத்துநாணிபூட்டி சரங்களைசொரியும்போது குசலராஜன் கண்டு வில்லிற்பாணங்களைததொடுத்துவிடுத்து வீரசேனன்சூரசேனன் இருவர்விட்ட அஸ்திரங்களையெல்லாமறுத்துத்தள்ளினான் அதுகண்டமட்சயந்தமகாராஜனுடைய குமாரனாகிய வீரசேனமகாராஜனும ஸ்ரீ ராமருடைய அறுபதினாயிரம் அக்ரோணிசேனைகளுக்கும் சேனாதிபதியான சூரசேனனும் அதிககோபமாகி வில்லிலநேகபாணங்களைச் சந்தித்து பிரயோகப்படுத்தினார்கள் அப்போது குசலராஜன் ஐம்பது திவ்யாஸ்திரமெடுத்துவிட்டு அவர்களிருவர்விட்ட பாணங்களைமறுத்து அதனமாக ௪௰-நாராசபாணங்களெடுத்து இருவர்மீதிலும் பிரயோகஞ்செய்தானதுகள் நாகசர்ப்பம்போலசீறி வருகிறபோது வீரசேனமகாராஜன்கண்டு ௱-நாராசபாணங்களைவில்லிற்றொடுத்து பிரயோகப்படுத்தி குசலராஜன்விட்ட ௪௰-நாராசபாணங்களையுமறுத்து அதனமாக ௱-அர்த்த சந்திராஸ்திரங்களை பிரயோகஞ்செய்தானதுகள் ஒன்றோடொன்றுராய்ந்து நெருப்புப்பொறிகளைக்கக்கிக்கொண்டு அதிகவிரைவில் வருகிறபோது குசலராஜன்கண்டுவெகுண்டு ௱-அர்த்தசந்திராஸ்திரமெடுத்துவீரசேனனுடைய நாராசபாணங்களையு மறுத்து அதனமாக நான்கு இடியாஸ்திரங்கள்விட் டவனேறிவந்தரதத்தையுடைத்தெறிந்துபோட்டானந்தரதங்களையும் நானகுஇடியாஸ்திரம்விட்டு தும்சப்படுத்தினானிந்தப்படியாய் ௯-ரதம்வரையி லுடைந்துபோகவே அதுகண்டு சூரசேனனும் வேறாரதமேறி சாரதியைஎச்சரித்து ரதத்தை குசலராஜனமுன்னுக்கு நடத்தி குசலராஜனைப்பார்த்து சூரசேனன் சொல்லுகிறான்.

அடாதம்பிஉன்னைப்பார்த்தால் சிறுபிள்ளையாயிருக்கிறாயுன்தாய்தந்தைபேரையும் உன்பேரையும் உன்குலங்கோத்திரங்களையுஞ் சொல்லென்றுனந்தசூரனைப்பார்த்து குசலனசொல்லுகிறான் ஓராஜனே நீயோஎன்தாய்தந்தைபேரைக்கேட்கிறவனயுத்தத்திற்குவருகிறபேருக்கெல்லாம் தாய்தந்தைபேரைச்சொல்லிக்கொண்டிருக்கின்றதோ படுகளத்தில் ஒப்பாரியுண்டா உமக்கு சாமர்த்தியமுண்டானாலென்னுடன் யுத்தம்செய்ய சக்தியில்லாவிட்டாற் சொல்லாமலும் என்முன்னில்லாமலும்நடக்கவிடு என்வினைவந்துமடிகிறீர்கள் ஒருவனாகிலும் ஒருநாழிகைபரியந்தம்நின்று யுத்தம்பண்ணினவனைக்காணேன் இவ்வளவுபலனைக்கொண்டோஎன்னைஜெயிக்கபோகிறீர்களதுவிருக்கட்டும் நீசண்டைசெய்ய பயந்துடன் தாய்தந்தைபேரைக்கேட்கவந்தாய் நான்சொல்லுகிறதோவென்று யுத்தம்பண்ணடாவென்று அதிககோபத்துடனே பாணங்களை யெடுத்தானப்படி பாணங்களையெடுத்து குசலராஜனை வீரசேனன்சூரசேனனும் பார்த்துச் சொல்லுகிறான்.

அடாதம்பிசிறுபிள்ளாய் அரசராயுற்பவித்தது யுத்தம்வந்தவேளையில் அதற்குப்பயந்து தாய்தந்தைபேரைக்கேட்பார்களோநீசிறுபிள்ளையானதால்உன்தாய்தந்தைபேரைக்கேட்டு யுத்தம்பண்ணலாமென்று பெரியவர்களாயிருக்கப்பட்டவர்கள் கேட்டால் சண்டைக்குபயந்து என்தாய்தந்தைபேரைக்கேட்கவந்தீர்களென்று சொல்லலாமோவென்றார்களப்படி சொல்லிய வீரசேனன்சூரசேனனுக்கு குசலராஜன் சொல்லுகிறான் ஓராஜனேதேவரீர் என்தாய்பேர்ஜானகியம்மாள் எங்களையர்பேர்வால்மீகமகாரிஷி என்பேர்குசலன என்தம்பிபேர்லவன் என் குலங்கோத்திரம் எனக்குத்தெரியவராதென்றுனப்படிசொல்லியதைச் சூரசேனனும் வீரசேனனும் கேட்டு சொல்லிக் கொள்ளுகிறார்கள் இவன் ரிஷிபிள்ளையென்றுசொல்லுகிறான் இவனுடைய ரூபத்தை பார்ப்போமென்றால் நிலவுவெளிச்சத்திற்தெரியவில்லை யுத்தம்பண்ணவேண்டாமென்றாலுமிவன்கேட்கமாட்டானிவனுடைய வீரபராக்கிரமர்தானென்ன இவனாலேவெகுஜனங்கள் மடிந்துபோனார்கள் நாம்சமுத்திரமெல்லாந்தாண்டி சின்னகால்வாயில்வந்து தாண்டமாட்டாம லகப்பட்டுக் கொண்டோம் சீதாலட்சுமியில்லாமல் ஸ்ரீராமருடைய யாகத்திற்கு பின்னமசம்பவித்தது இதற்கெப்படி யோசனையென்று சற்றேசும்மாயிருந்தார்கள்

அதுகண்டுகுசலராஜன் ஓஓராஜரே இப்படிரணக்களத்திலொப்பாரிசொல்லிசும்மாயிருந்தால் நான் விடுவேனோ நீங்கள் இனிசொல்லாமல் ஓடிப்போகிறோமென்றாலும் உங்களைவிடமாட்டேன் வில்லையெடுத்துபாணத்தைத்தொடுங்களென்றுசொன்னானப்படிசொல்லும் குசலனுடையவார்த்தையிருவருங்கேட்டு அவ்விராஜனைப்பார்த்து வீரசேனமகாராஜன் சொல்லுகிறான் அடாதம்பிகுசலனே அவரையாரென்று இப்படி எளிதமாய்பேசுகிறாய் பராபரவஸ்துவாய் விளங்காநின்ற ஸ்ரீமந்நாராயணரேஸ்ரீராமனாய் அவதரித்து தன்னுடைய அறுபதினாயிர மக்குரோணிசேனைகளுக்குச் சேனாதிபதியாக பட்டங் கட்டிவைத்தாரப்படி வீரசூரனான சூரசேனன் மகாராஜனைச் சண்டைக்குபயந்தாரென்று எளிதமான அற்பவிசேஷம் சொல்லலாமோ அவருடைய சாமர்த்தியம் இன்னமுனக்கு தெரியவராதென்றுனதுகேட்டு குசலனதிக புஞ்சிரிப்போடு குலுங்கநகைத்து சொல்லுகிறான் ஓராஜனே உங்களுக்கு முன்னம்வந்து யுத்தஞ்செய்து இறந்தவர்களில்சேனாதிபதியான காலசித்தனென்னப்பட்டவன்.

ட்டராட்சதன்வந்து தன்னிலுமிருந்த சூரனல்லவென்று வெகுநேரம் போர்புரிந்துக்கொண் டிருந்தான் அவனுக்கு மிஞ்சினவர்களானால் அஸ்திரங்களை யெடுங்கள் உங்களாற் கூடியவரையில் விடுங்கள் பார்ப்போமென்று கூறிய குசலன்வார்த்தையை இருவருங்கேட்டு சூரசேனன் சொல்லுகிறான் குசலனே நீ விசேஷத்தை மிஞ்சாதே அப்படி வீரசூரராமர் வரப்பட்டபேரை யெல்லாம் நீ சங்கரிக்கப்பட்ட ரணாங்க சூரனானையால் சைமிலாகாத சிலரைக் கொலவரோ மென்று கர்வித்திருக்கிறாய் அந்த கர்வத்தை க்ஷணநேரத்திற் காண்பிக்கிறேன் பாராடாவென்று ௫௰-சிங்கமுகாஸ்திரங்களை வில்லிற் சந்தித்து குசல ராசன்பேரிற் பிரயோகஞ் செய்தான் ௫௰-சிங்கமுகாஸ்திரம் விடுபட்டு ஆலகாலவிஷம்போற் சீறிக்கொண்டு குசலராசன்பேரில் வருகிறபோது அவ்விராசனும் ௨௰-சிங்கமுகாஸ்திரம் விடுத்து ஆலகால விஷத்தை யள்ளியுண்ட த்திரனைப்போல் வரப்பட்ட சிங்க முகாஸ்திரத்தையுமறுத்து சூரசேனன்பேரிற் போகப்பட்ட சிங்க முகாஸ்திரத்தையும் மறுத்துத்தள்ளவே சூரசேனன் விட்ட ௫௰-சிங்கமுகாஸ்திரம் அதிக வேகத்துடன் வந்து குசலராசன் பிடித்திருந்த வில்லின் பேரிலும் வில்நாணின் பேரிலும் தடாலென்று மோதி சிங்கமுகாஸ்திரம்பிளந்து பூமியில்விழுந்து போயிற்று.

அதுகண்டு குசலராசன் சூரசேனனையும் வீரசேனனையும் பார்த்துச் சொல்லுகிறான் அடா சூரனே நீங்களிருவரும் விட்ட பாணத்தினுடைய வல்லமை யிவ்வளவுதானோ இதோ இந்த அஸ்திரத்தினால் நீங்களிருவரும் பிடித்திருக்கிற வில்லைக்கண்டித்துப் போடுகிறேன் பாருங்களென்று தன்தாயாரை மனதிற்றியானித்து இரண்டு அர்த்தசந்திராஸ்திரத்தை யெடுத்து மந்திரித்து வில்லிற்றொடுத்து பிரயோகம் பண்ணினான் அந்த அர்த்த சந்திராஸ்திரங்களும் விடுபட்டுதகத்தகாயமாய் விரைவாகிய போது சூரசேனனும் வீரசேனனுங்கண்டு அதிசீக்கிரமாய் நிமையோடு நிமைதட்டு முன்னமே கோடி அர்த்தசந்திராஸ்திரங்களை யெடுத்து விட்டார்கள் அந்த கோடிபாணங்களும் குசலன்விட்ட அர்த்த சந்திராஸ் திரத்தின்பேரில் சடாலென்றுமோதிக் குசலராசனுடைய அர்த்தசந்திராஸ்திரனா லடிபட்டு பூமியில் விழுந்து போகவே குசலராசனுடைய அர்த்த சந்திராஸ்திரங்கள் உக்கிரம்விடாமல் அதிக வேகத்துடன் வந்து வீரசேனன் சூரசேனன் பிடித்திருந்த வில்லுகளைக் கண்ட துண்டங்களாய் நறுக்கிப் போட்டு அப்புறவில் வந்தடைந்து அதுபோகவே சூரசேனனும் வீரசேனனும் வேறுவில்லைக் கையிலெடுத்து இரண்டு சுழற்பாணத்தையும் தனுசிற்றொடுத்துப் பிரயோகம் பண்ணினார்கள் அந்த சுழற் பாணங்களும் வில்லைவிட்டு வெளிப்பட்டு சண்டமாருதம் வீசினபோது உக்கிராற்றுகளெழும்பிக் கிறுகிறென்றசுழன்றுக்கொண்டு அதிக வேகமாய் ஒரு சுழற்பாணத்தை யெடுத்து தனுசிற்றொடுத்துவிட்டு வீரசேனனும் சூரசேனனும்விட்ட இரண்டு சுழற்பாணத்தையு மறுத்து அதனமாக ௱-நாராசபாணத்தையும் விட்டு சூரசேனனுடைய திரேகத்தையும் சல்லடைக் கண்களாகத் துளைத்துவிட்டான் அதனாற் சூரசேனனுடையமெய்யும் வீரசேனனுடைய சரீரமும் இரத்தங்கள் சொரிய மகா ஆயாசத்தோடும் ஸ்ரீமந் நாராயணாவென்று கைவில்லைத்தேரின்பேரில் நழுகவிட்டு ரதத்தின்பேரில்சாய்ந்து மூர்ச்சை யடைந்தார்கள்.

அதுகண்டு சந்தனமகாராசன் கோபமாகி சாரதியை யெச்சரித்து ரதத்தை நடத்திவில்லையெடுத்து நாணிபிகிந்துவில்லிலனேக அஸ்திரங்களைச் சந்தித்துகுசலராசன்பேரில் பிரயோகம் பண்ணினான் அந்தபாணங்கள்வில்லைவிட்டு அதிகவேகத்துடன்வருகிறபோது குசலராசன்கண்டு பத்துதிவ்யாஸ்திரங்களையெடுத்து வில்லிற் சந்தித்துப் பிரயோகப்படுத்தி சந்தன மகாராசன்விட்ட பாணங்களையறுத்து அதனமாக ஒரு வாய்வாஸ்திரமும் வில்லில் விடுபட்டு சண்டமாருதம் வீசினதுபோல அதிக வேகத்துடன்வந்து சந்தனமகாராசன் ரதத்திற் புகுந்து ரதத்தை பின்னிட்டபடியாய் கிழக்கே ௱-யோசனை தூரத்திற் றள்ளிக்கொண்டுபோய்விட்டது அப்பாற் குசலராசன் யானை தேர் பரிசேனைகள் பெரில் முனைந்து பாணங்களை வில்லிற் சந்தித்து பிரயோகஞ் செய்தான் அந்தப் பாணங்களால் எப்படி விழுகுதென்றால் யானைகள் காலறுந்தும் ரதங்கள் அச்சொடிந்தும் ஆணிகழன்றும் மச்சுமுறிந்தும் குடல்சரிந்தும் சேனைகள் கைவேறு கால்வேறு உடல்வேறு எலும்புவேறு இறைச்சிவேறு இவ்விதமாக விழுந்து ரத்த ரூடத் தலைப்பட்டதைக் கண்ட குசலராசன் சந்தோஷமாகி நாலாவது அணிகடந்து ஐந்தாவது அணியில் வருகிறபோது ஐந்தாமணியி லிருக்கப்பட்ட படைத்தலைவருஞ் சேனாதிபதிகளும முசுத்த சேனைகளுங் கண்டு குசலராசனை ஐந்தா மணியில் வரவொட்டாமலும் வில்லிலனேக பாணங்களைச் சந்தித்து மழைமாரி பொழிவதுபோலச்சரமாரியாகக் குசல

ராசன்மீது பொழிந்தார்கள அதுகண்டு குசலாசன் விழுந்துவாப்பட்ட ராட்சதசேனைகளின பேரில் அனேக அஸ்திரங்களைப் பிரயோகப்படுத்தினுன் அந்த அஸ்திரங்களும் வில்லைவிட்டு வெளிப்பட்டு திருதிருவென்று அக்கினிச் சுவாலைகளுடன அதிகவேகத்துடன்வந்த ராட்சதர்கள்விழுகிறபோது அந்த ருட்சதர்கள் எப்படி விழுகிறார்களென்முல் கால்வேறு கைவேறு உடல்வேறு சதைவேறுளதும்புவேறுஇறைச்சிவேறு வேருகவிழுந்து ராட்சதாள்விட்டபாணங்களுமுறிந்து கோஷ்டங்களெழும்பினதாம்.

அதுகண்டு சத்துருக்கமகாராசன்கடுஞ்சினங்கொண்டு வெகுண்டு சாரதியெச்சரித்து ரதத்தைக்குசலாசன்முன்னுக்கு நடத்தச்சொன்னுர்அந்தருணத்தில் வாரணுபுரி பட்டணத்தை பரிபாலனம்பண்ணப்பட்டசோமகாசமகாராசன் இந்தாதத்தை நடத்திச் சத்துருக்கமகாராசனைபார்த்து சொல்லுகிறுன் ஐயா சத்துருக்கமகாராசரேகேளும்அந்தசிறுவனுகியகுசலனை ஒருபெரிதாயெண்ணி தேவரீர் அவன் பேரில் யுத்தத்திற்குப் போகவேணுமோ இன்னம் அனேக ராட்சதாளும் இராசமன்னருமிருக்கையில் என்ன முழுகிப்போயிற்றென்று நீர் யுத்தத்திற்குப் போகிறது நலமாககாணவில்லை நில்லு நில்லுமென்று சத்துருக்க மகாராசனை நிறுத்தி சாரதியை யெச்சரித்து குசலாசன் முன்னுக்கு ரதத்தை நடத்தினுன் அவன் ரதம் நடக்கையில் வீரசேனராசன் தகப்பனுகிய பட்சயந்தமகாராசனும் ரதத்தை நடத்தினுன் அந்த வேளையிற் சந்தனமகாராசனும் பாணவேக மடங்கி ரதத்தை வேகமாக நடத்திக்கொண்டு ரணக்களம்வந்து குசலாசனை நாலாமணியிற்காணுமல் ஐந்தாமணியிலிருக்கிற குசலாசன் பேரில் நாட்டி பாணங்களைப்பூட்டிப் பிரயோகம்டண்ணினுன்.





சந்தனமகாராசனுக்கும் குசலாசனுக்கும் யுத்தம்.

கலிவிருத்தம்.

முந்திவந்த விருவர் முனையழிந்
துந்துமிந்தேரு மொழிந்திடக்கண்டதோ
சந்தனமகா ராசனென்றக்கவன்
விந்துவில்லை வணங்கப்பொழிந்தனன்.

வசனம்.

அதனைக் கண்ட குசலாசனும் தனுசிலனேக பாணங்களைச் சந்தித்துப் பிரயோகப் படுத்திவிட்டு சந்தனமகாராசன்விட்ட பாணங்களைந்து மறுத்து அதனமாய் ௨௰-நாராசபாணங்களைடுத்து விட்டுவிட்டான அப்பாணங்கள் புறப்பட்டு நாகசர்ப்பம்போற் சீரிவருகையில் சந்தனமகாராசன் கண்டவுடனே ௱-நாராசபாணங்களைடுத்து வில்லிற்சந்தித்துவிட்டு குசலன்விட்ட இருபது நாராசபாணங்களையு மறுத்து தாஸ்தியாகப்பத்து நாராசபாணங்களை விட்டார்கள் விடுகிறபோது குசலாசன் கண்டு ௨௰-திவ்வியாஸ்திரமெடுத்துப் பிரயோகஞ்செய்து சந்தனமகாராசன்விட்ட ௱-திவ்வியாஸ்திரங்களையும் அறுத்து அதனமாக ௬௰-அர்த்தசந்திராஸ்திரங்களும் தகத்தகாயமாக அக்கினிப்பொரிகள் பறக்க ஒன்ருேடொன்றுருய்ந்துக் கொண்டு பூரணச்சந்திரனைப்போற் பிரகாசித்து அதிக வேகத்துடன் வருகிறதைச் சந்தனமகாராசன் கண்டு அதிகசீக்கிரமாக இமையோடு இமைதட்டு முன்னமே ௱-அர்த்த சந்திராஸ்திரங்களை அதனமாக இரண்டு அக்கினியாஸ்திரஙளும் வில்லில் விடுபட்டு அக்கினிச்சுவாலைகளை வீசிக்கொண்டு நாராசம் போல வேகமாக வருகிறது குசலாசன் பார்த்து ஒரு அக்கினியாஸ்த்திரத்தையெடுத்து வில்லிற்சந்தித்துசந்தனமகாராசன்விட்ட அக்கினியாஸ்த்திரத்தின்பேரில்பிரயோகப்படுத்தினுன் அந்தஅக்கினியாஸ்திரம்வில்லில்விடுபட்டு வடவாமுகாக்கினியை வாரியிறைத்துக்கொண்டு அதிகவேகத்துடன் வருகிறபோது சந்தனமகாராசனவிட்ட அக்கினியாஸ்திரங்களையும் கபளீகரம்பண்ணி அம்புருப்பொதியில் வந்தடைந்தது.

அதுகண்டு சந்தனமகாராசன் இரண்டு சத்தியை யெடுத்து பூசைநைவேத்தியங்கொடுத்துகுசலராசனுடைய மார்பைப்பார்த்து விட்டுவிட்டான் அந்தசத்தியும் விடுபட்டு அண்டாண்ட பகிரண்டங்குலுங்க அக்கினிச்சுவாலைகளுடனே அதிகவேகமாககுசலாசன் வருகிறபோது குசலாசனும்

தன தாயார் கொடுத்த உக்கிர வீரசத்தியையெடுத்து பூசை நைவேத்தியங் கொடுத்து விடுத்தான் அந்த வீரசத்தியானது வில்லைவிட்டு வெளிப்பட்டு அண்டபிண்ட பிரம்மாண்டம் ஆயிரத் தெட்டண்டங்களும் நடுங்க ஆலகாலவிஷத்தைப்போற்சீறி அக்கினிச் சுடர்களெழும்ப வேகத்துடன் வந்து சந்தனமகாராஜன் விட்ட இரண்டு சத்தியையும் அடித்து முறித்து கமளீகரம்பண்ணி அம்புறுவில் வந்தடையவே சந்தன மகாராசன் கோபங்கொண்டு நாராயணாஸ்திரத்தை யெடுத்து வந்தனை வழிபாடென்று தூபதீபங்கொடுத்து குசலராசன் மீது விடுத்தான் அந்த நாராயணாஸ்திரமும் வில்லைவிட்டு வெளிப்பட்டுபாதாளமும் ஆகாயமும் அல்லோலகல்லோலப்படுவதாகவருகிறபோது குசலராசன் சற்றுவது அச்சமின்றிதன் தாயார் கொடுத்த நாராயணாஸ்திரத்தை யெடுத்து மந்திராபூதியுன் பூசைபுரிந்து சந்தனமகாராசன் விட்ட நாராயணாஸ்திரத்தைப் பெற்றுவா வென்று பிரயோகம் பண்ணினன் அந்தநாராயணா ஸ்திரமும வில்லில்விடுபட்டு அண்டாண்டங்குலுங்க அம்புவில்லுகள் நடுங்க ஆலகாலவிஷம்போற்சீறிக்கொண்டு ஆவென்று வாய்திறந்து அக்கினிகளைக் குபீல்குபீலென்றுகக்கி ஆகாயத்திலும் பூமியிலும் அக்கினிச்சுடர்கள்வீச அந்த அக்கினிசுடர்களில் ஆகாயவீதியிலிருக்கப்பட்ட தேவாதி தேவர்களுங் கண்டு அஞ்சமுறயாமோடிப்போகபூமியிலிறந்து கிடக்கிறயானை பரிசேனைகளுஞ் சுடுநாற்றங்களெழும்ப அதிக உக்கிர நரசிங்கம் போலவந்து சந்தனமகாராசன்விட்ட நாராயணாஸ்திரத்தையும் கமளீகரம் பண்ணியும் உக்கிரம் நீங்காமல்வரும்போது சந்தனமகாராசன் மனதுகலங்கி வில்லிலவேக பாணங்களைப் பூட்டிவருகிறநாராயணாஸ்திரத்தின் பேரில் மழைமாரிபோலே சரமாரியாய் பொழிந்துக்கொண்டிருந்தா னப்படி சந்தனமகாராசன் பாணங்களை ஓய்வுசாய்வுயில்லாமல் பொழிகையிற் குசலராசனுடைய நாராயணாஸ்திரமானது வருகிறபாணங்களை யெல்லாம் கமளீகரம் பண்ணிக்கொண்டு அதிவேகத்துடன்வந்து சந்தனமகாராசன் யேறிவந்த ரதச்சாரதி குதிரைகளுடனும் பஸ்மீகரம் பண்ணி அம்புறுவில் வந்தடைந்தது.

நாராயணாஸ்திரத்தினாலே பத்மாவதிபட்டணத்தைபரிபாலனம் பண்ணப்பட்ட சந்தனமகாராசன்இறந்தது கண்டு வாரணாபுரிபட்டணத்தையாளப்பட்டசோமகாசமகாராசன்கோபதீப்தனுகிகுசலராசன்முன்னுக்கு ரதத்தைநடத்தினர் அந்தராசன் ரதத்தைநடத்தவே பதனுபுரிபட்டணத்தை பரிபாலனஞ் செய்யப்பட்ட சயந்தமகாராசனை ரதத்தை நடத்திச் சோமகாசமகா ராசனைப்பார்த்துச்சொல்லுகிறார் வாருஞ் சோமகாச மகாராசனே இன்னமநேக ராசமன்னர்களும் ராட்சதர்களும் மந்திரிபிரதானிகளும் நானுமிருக்க நீர் முந்தி யுத்தத்திற்குப் போகிறது நலமாய்க்காணவில்லை யமலோகத்துக்கனுப்பிவிடாமல் இனிநான் சும்மாவிடமாட்டேன் நீர் நில்லுமென்று சோமகாச மகாராசன் முன்னுக்கு நடத்திச்சொல்லுகிறார் அடா தம்பிகுசலனே நீயார் உன்தாய்தந்தை பேரென்ன உன்னுடைய குலங்கோத்திரமென்ன இந்தப்படிக்கு யெங்களுடைய சேனைகளைக் கொல்ல நீயார் உன்னுடைய பூர்வோத்திரங்களை யெனக்கு நன்றாய் இன்னாரின்னாரென்று தெரியச்சொல்லடா தம்பி குசலனே யென்றான்.

ஓகோராசனே நீரென்ன வசனஞ் சொல்லவத்தீர் முந்தியுத்தத்திற்கு வருகிற பேரையெல்லாம் நிறுத்தி உனக்கு யெமலோகத்திற்கு வழிகாட்டுகிறேனென்று ரோஷத்துடன் வந்து நீர் யென்னைக் கண்டு பயந்து இப்படி என்தாய்தந்தை பேரையும் யென் குலங்கோத்திரங்களையுங் கேட்டுபெகனைத்திலொப்பாரிபண்ணுவாருண்டோ நீஒருராசனென்று முகத்தில் மீசையைவைத்துக்கொண்டு என்முன் வந்து நின்றுஇப்படிப் பஞ்சவார்த்தைபேசலாமோ நீங்கள்தானே சூரியவம்சத்தில் பிறந்த சூரத்துவம் பொருந்தி யிருக்கப்பட்ட ராசாக்கள் முன்னுக்கு வந்து பின்னுக்கு வாங்கலாமோ உன்னுடைய சாமர்த்தியம் இவ்வளவு தானேயில்லுமென்று சுழற்பாணத்தை யெடுத்து வில்லிற்சந்தித்துப் பின்னையும் மட்சயந்த ராசனைப்பார்த்துச் சொல்லுகிறான்.

ஓஓஇராசனே உனக்கு யெமலோகத்திற்குவழிகாட்டுகிறேன் பாரென்று வில்லிற்சந்தித்த சுழற்பாணத்தைப் பிரயோகம்பண்ணிவிட்டான் அந்த சுழற்பாணமானது வில்லில்விடுபட்டு சண்டமாருதம் வீசுவதுபோல் உக்கிரகாற்றுக ளெழும்பிச் சுழன்று அதிகவேகமாய் வருகையில் மட்சயந்த மகாராசனகண்டு பதிலஸ்திரமெடுத்து வில்லிற்சந்தித்து முன்னமேகுசலன் அஸ்திரமானது வந்து மட்சயந்தமகாராசனுடைய ரதத்திறபுகுந்துசாரதி குதிரைகளுடன் ஆகாயத்திற் கிளம்பிடவே மட்சயந்தமகாராசன் கண்டுயேதடா மோசம்வந்ததென்று வில்லைத் தேறின்பேரில்வைத்துக்கடிந்துக் காலிரண்டு கையினாலும் சேர்த்துப் பிடித்துக்கொண்டான்.

அப்போது அந்தரதமானது எப்படிச்சுழல்கின்றதென்றால குயவனுடைய சக்கரமானது எப்படி சுழலுமோ அப்படிப்போல ஆகாயவீதியில் சுழன்று மேகமண்டலம் வருணமண்டலம் வாய்வுமண்டல மட்டுமோய் ரதமானது சுழன்றுபோய்மறுபடியும் திரும்பி வருகிறபோது பாணவேகமடங்கி

பூமியைச்சேற வருகிறபோது மட்சயந்தமகாராசன்
சுவாசத்தைப் பந்தனம் பண்ணி பூமியிற் குதித்த
மாத்திரம் ரதமானது சாரதிகுதிரைகளும் பூமியில
விழுந்து அச்சுவேறு ஆணிவேறு கும்பகலசம்வேறு
கடைக்கால்வேறு பலகை வேறு குத்துக்கால் வேறு
கொங்கைவேறு கொடிச்சிலைவேறு குதிரைவேறு
சாரதிவேருகப் பூமியில்விழுந்து மாய்ந்தனுகள்.

அதுகண்டு மட்சயந்தமகாராசன் கோபமாகி
மறுதேரிலேறி வில்லைவளைத்து நாணிபிகிந்து வில்
வில் நல்ல கூர்மையோடுங் கூடியிருக்கப்பட்ட
அனேகபாணங்களை வில்லிற்சந்தித்துப் பிரயோகம
பண்ணினுர் அந்த நாராசபாணங்களும் வில்லில்
விடுபட்டு நாகசற்பம்போற் சீறிக்கொண்டு வரு
கிறபோது குசலாராசன் கண்டு அதி சீக்கிரமாய்
ூ௦-நாராச பாணங்களை யெடுத்து வில்லிற்றெடுத்
து பிரயோகப்படுத்தி மட்சயந்த மகாராசன்விட்ட
நாராசபாணங்களையு மறுத்து மட்சயந்தமகாராச
ன் மார்பிலணிந்த கலசங்களையுமறுத்து சரீரங்களை
யும் ரத்தமயமாக்கிவிட்டான் அதுகண்மெட்சயந்த
மகாராசன் தைரியம்விடாமல் அதிக சீக்கிரமாய்
வில்லைமுகத்திற்கு நேராகப் பிடித்துப் பாணங்களை
யெடுத்து வில்லிற்சந்தித்து மாரிபொழிவது போல்
ஒய்வொழிச்சலில்லாமல் ஒண்ணரை நாழி பரியந்
தம் மூர்ச்சைவிடாமற் சலவருஷம்போல பொழி
கிறதை குசலாசன்கண்டு அனேக பாணங்களை
வில்லிற் சந்தித்து பிரயோகப்படுத்தி மட்சயந்த
மகாராசன் விடப்பட்ட பாணங்களை யெல்லாம்
இமையோடு இமைதட்டு முன்னமே விட்டறுத்து
அதனமாய்ப் பத்துதிவ்யாஸ்திரங்களை யெடுத்து
வில்லிற் சந்தித்துப் பிரயோகப்படுத்தினுன் அந்த
திவ்யாஸ்திரங்கள் வில்லில் விடுபட்டு அக்கினிச்
சுவாலைக்கிளம்ப அதிவேகத்தோடே வருகிறதைக்
கண்ட மட்சயந்த மகாராசன் நூறு திவ்யாஸ்திரங்
களெடுத்து வில்லிற் சந்தித்துப் பிரயோகப்படுத்
திக் குசலாசன் விட்ட திவ்வியாஸ்திரங்களையு
மறுத்து சாரதியை யெச்சரித்து ரதத்தைக் குச
லாசனமுன் நடத்தினுன்.

அந்தச் சமயத்தில் மட்சயந்த மகாராசனு
டைய குமாரனுகிய வீரசேன மகாராசன் மூர்ச்சை
தெளிந்து கண்ணைமுழித்துப் பார்த்தான் சூரசே
னனும் மூர்ச்சையா யிருக்கிறதுகண்டு குசலாச
னைக் காணுமல் ரதத்தைவிட்டுப் பூமியிற்குதித்து
மறுதேரிலேறி சாரதியை எச்சரித்து ரதத்தை
குசலாசன் முன்னுக்கு நடத்திக் குசலாசனைப்
பார்த்துச் சொல்லுகிறுன் அடா குசலனே என்
தம்பியாய்விழுகிருய் உன்னைவிட சூரனில்லையென்
றக் கையினாத சில ராட்சதரைக் கொன்றே
யென்று கெர்வத்தினுலே தள்ளாதே அந்தகெர்
வத்தை இதோ ஒருக்ஷணநேரத்தில் தெரிவிக்கிறே
ன் மாரடாவென்று வில்லையெடுத்தான்.

அதுகேட்டு குசலாசன் கோபமாகிவீரசேன
னை யுற்றுப்பார்த்து பல்லைநெறநெறவென்று பத்து
நாராச பாணங்களெடுத்து வில்லிற்சந்தித்துவீரசே
னனைப்பார்த்துச் சொல்லுகிறுன் ஓராசனே நல்ல
வசனம்புகனுய் நீயொருராசனென்று முகத்தில்
மீசை வைத்துக்கொண்டு என்முன்வந்து நின்ருய்
உன்னைப்போல் சூரத்துவம் பொருந்திய ராசர்களை
யும அனேகம்பேரைக்கண்டேன் இறந்தவன் பிறந்
தவன் போலும் வந்தாய் இதோஎன்னுடைய அஸ்
திரத்தினுல் உன்னைக் கண்ட துண்டம் பண்ணு
கிறேன் பாரடாவென்று வில்லிற்சந்தித்த ூ-நாராச
த்தையும் வீரசேனன்பேரில் பிரயோகம் பண்ணி
விட்டான் அந்தபத்து நாராசபாணங்களும் வில்
லில் விடுபட்டு நாகசர்ப்பம்போற் சீறிக்கொண்டு
அதிவேகத்துடன் வந்து வீரசேனனுடைய சரீரத்
தை சல்லடைக் கண்களாகத் துளைத்து ரத்த
மயமாக்கிவிட்டுப் போயிற்று அதனுல்வீரசேனன்
மிகவும் நொந்து தைரியம்விடாமல் ஸ்ரேஷ்த்துவச
ஞக வில்லிலனேக பாணங்களைச் சந்தித்துக்குசல
ராசன்மீது மழைபொழிவதுபோல சரமாரியாய்ப்
பொழிகிறபோது குசலாசன் கண்டு நூறுதிவவி
யாஸ்திரத்தை யெடுத்து வில்லிற்சந்தித்து பிர
யோகம் பண்ணிவிட்டு வீரசேனன்விட்ட திவ்யாஸ்
திரமெல்லா மறுத்து அதனமாய் இரண்டு இடியா
ஸ்திரம்விட்டு வீரசேனனேறி வந்த ரதச்சாரதி
குதிரைகளுடன் உடைத் தெரிந்து போட்டான்
அந்தாதம்போகவே வீரசேனனுனவன் லகுவில்தப்
பிநதுக் கொண்டு மறுதேரிலேறி வில்லை எடுத்து
நாணிபிகிந்து சாரதியை யெச்சரித்து ரதத்தைக்
குசலாசன் முன்னுக்கு நடத்தி குசலாசனைப்
பார்த்துச் சொல்லுகிறுன்

அடா குசலனே உன்னை சிறுபிள்ளையென்றெண்
ணிப்பாரத்ததற்கு உன்னுடைய சிறுபிள்ளை தனத்
தையுங்கண்டேன் வாய்ச்சொல் வாய்க்குள்ளிருந்து
வருமுன்னமே பாணத்தை விட்டுக் கொல்வாறு
முண்டோ அப்படி சிறுபிள்ளையின் தன்மையடை
ந்த உன்னை என்னுடைய நாகபாசத்தை விட்டு
கண்டதுண்டம்பண்ணி விடுகிறேன் அடாகுசலனே
யென்று நாகபாஷத்தை யெடுத்தான் அந்தவாசுகி
யென்னப்பட்ட நாகபாசமானது வீரசேனனுக்கெ
ப்படிவந்து சேர்ந்ததென்றுல ஒருநாள் வீரசேன
மகாராசனுனவர் வேட்டைக்குப்போகவேண்டி ரத
கெஜ துரகபதாதிகளுடன் வெளியே புறப்பட்டு
வடமுகநோக்கி கந்தமாமலை யென்றொரு பர்வத
மிருக்கின்றது அந்தபர்வதத்தைச் சேர்ந்த வனத்
தில் வேட்டையாடிப் போகிறபோது கந்தமாமலை
யண்டையிலிறங்க கூடாரமடித்திருக்கையில் வீர
சேனமகாராசனுனவர் சாயந்திர வேளையில் சில
துரைகளுடன வில்லையு மெடுத்து இரதத்தில்
வைத்து ஆயுதபாணியாக கந்தமாமலையைச் சுற்றி
வருகிறபோது அந்த கந்தமாமலையின் ஈசானிய
மூலையில் எலும்புகளை மலை மலையாகக் குவித்தி

குவித்திருந்தது அந்தஎலும்புமலையைப்பார்த்து ஆ
ச்சரியப்பட்டு அந்தஎலும்மைச்சுற்றிவருகிறபோது
அவ்விடத்திலே பாதாளத்திற்கு வழி போகின்றது
அதுகண்டுவீரசேனனும்கூடவந்தராசாக்களும் ரத
ம்விட்டுக்கீழிறங்கிஅதிசயத்தைப்பார்த்துக்கொண்
டிருந்தார்கள் அந்தவேளையில்வாசுகியென்னப்பட்
ட நாகமானது பூலோகத்தைப் பார்க்க வேணுமெ
ன்று சிறிதுகூட்டங்களுடனேகூடிக்கொண்டுபாதா
ளலோகத்தைவிட்டு பூலோகத்தின்வாசற்படியில்வ
ந்து கருடபகவான்வந்துவிட்டானேயென்று திடுக்
கிட்டு மனதுகலங்கிவந்து நிற்கின்ற ராசாக்களைக்க
ண்டுமனதுபிரியமாகி வாசுகியென்னும் நாகமானது
வீரசேனனைப் பார்த்துச் சொல்லுகின்றது

வாராய்ராஜகுமாரா நான்யாரென்றிருக்கிறாய்
அனந்தனென்னப்பட்ட ஆதிசேஷனுண்டே அந்த
ஆதிசேஷனுடையகுமாரன் என்பேர்வாசுகியென்று
சொல்வார்கள்இப்போதெனக்குப்பூலோகம்பார்க்க
வேண்டி வெகுஆசையுடனேகூட இவ்விடம்வந்தே
ன் இவ்விடத்திற்கு கருடனாலே எங்களினத்தார்மா
ண்ட எலும்புமலையைக்கண்டேன் காணவேஎனக்கு
முன்னும்வரக்கூடவில்லை பின்னும் போகக்கூடவில்
லை கருடன்வந்தால் என்னையும் என்னினத்தாரையு
ங்கொன்றுபோடுவான் இதற்கெப்படியென்றுயோ
சனை செய்துக்கொண் டிருந்தேன் இப்போது உம்
மைக் கண்டவுடனே மனதுபயந்தெளிந்தே னென்
றான் வாசுகியானவன்.

அதுகேட்டுவீரசேனமகாராஜன் வாசுகியைப்
பார்த்துச்சொல்லுகிறான் வாராய்வாசுகியேஉனக்கி
ப்படிப்பட்டபயமும் ஆபத்துங்கருடனால்வருமென்
றல்லவோசொல்லுகிறாய் அந்தக்கருடன் இந்நேரம்
இவ்விடம்வந்தானேயாகில் எங்களுடைய அஸ்திர
ங்களினால் அந்தக்கருடனைக் கண்டதுண்டம பண்
ணிப்போடுவோம் நாங்க ளிருக்கும்போது உன்னு
டையகூட்டத்துடனவெளியேவாருங்கள் நீங்கள்ப
யப்படவேண்டாமென்றான் அப்படிகூறியவீரசேன
மகாராஜனுடையவார்த்தையை வாசுகியென்னப்ப
ட்ட நாகமானது உற்றுக்கேட்டுச்சொல்லுகின்றது
வாரும் இராஜகுமாரனே கருடனே மகாபலவான
மும்மூர்த்திகளுமீடல்ல அந்தகருடனே எங்களுக்
குச் சகாயமாகவந்தவர்களல்லா மாண்டுபோனார்
கள் உம்முடையபாணங்களைச் சட்டை பண்ணமா
ட்டான் அவன்சேதிஉமக்குநன்றாய்த்தெரியவாது
எங்களால் நீரேன் மாண்டுபோகிறீர் அப்படி எங்க
ளைக்காக்கவேணுமென்ற வல்லமையுண்டானால் அ
ந்தக்கருடனைச்செயித்து என்னையும் என்னினதா
ரையும்ரட்சித்துக்கொள்ளும் அப்படியெங்களைரட்
சித்தீரேயாகில் உம்முடைய அம்புறாப்பொதியில்நா
னே ஒருபாணமாகயிருக்கிறேன் உனக்குஉயிர்ச்சே
தம்வருகிறவேளையில எதிரிபேரில்என்னைஎடுத்துவி
ட்டீரேயானால் ஆலகாலவிஷத்தையுண்ட ஈஸ்வரனா
லுஞ்சரி ஆதிசேஷன்மீது பள்ளிகொண்டிருக்கப்
பட்ட ஸ்ரீமந் நாராயணனாலுஞ்சரி சத்தியலோக
வாசகராயிருக்கப்பட்டபிரமதேவனாலுஞ்சரிஎன்
னுடைய விஷாக்கினியினாற் றகித்துப்போடுகிறேன்
அதற்குநீசந்தேகப்படவேண்டாம் இந்தவேளையில்
எங்களைக்காப்பாற்றவேணுமென்றுசத்தியவசனமா
கச்சொல்லிய வாசுகியென்னப்பட்ட நாகத்தின்வா
ர்த்தையை வீரசேனமகாராஜன்கேட்டுச்சொல்லுகி
றான் வாராய்வாசுகியே அந்தக்கருடன் எவ்வளவுப
லம்படைத்தவனாயிருந்தாலும் என்னுடைய அஸ்தி
ரத்தினால்கருடனைச்செயம்பண்ணி உன்னையும்உன்
னினங்களையும்காப்பாற்றுகிறேன் அப்படிக்காப்பா
ற்றுமற்போனேனேயாமானால் என்னை மட்சயந்தம
காராஜனுடையகுமாரன் வீரசேனனென்றசொல்ல
வேண்டாமென்று சொன்னான்

அப்படிசொன்ன வீரசேன மகாராஜனுடைய
வார்த்தையை வாசுகி யென்னப்பட்ட நாகமானது
கேட்டு சந்தோஷமாய் வாராய் வீரசேனமகாராஜ
னே உம்முடையவார்த்தைநம்பி வெளியில்வரச்செ
லவுசொல்லுமையாவென்றுவாசுகிகேட்க அதுகே
ட்டு வீரசேன மகாராஜன் வாசுகியைப் பார்த்துச்
சொல்லுகிறான்வாராய்வாசுகியே ஆகாயவாணிபூமி
தேவியறிய கருடனைச்செயம்பண்ணி உன்னையும்உ
ன்னுடையசேனைகளையும்ரட்சிக்கிறேன் நீயொன்
றுக்கும்பயப்படவேண்டாம் வெளியேவாருங்களெ
ன்று பரவசமாகச்சொன்னவீரசேனமகாராஜன்வா
ர்த்தையை வாசுகியென்னும் நாகமகேட்டு கூட்டத்
துடனேபூலோகம்வந்து தன்னினத்தார்களின் எலு
ம்புமலையைச்சுற்றிப்பார்த்து அவ்விடத்திலிருக்கப்
பட்ட கந்தமாபர்வதத்தின்பேரிலுள்ள காடுசெடிக
ள் புதருகளெல்லாம் வாசுகியினுடையவிஷங்கக்கு
கிறபோது அந்தவிஷக்காற்றினால் காடுசெடிகளெல்
லாம்நீறுநீறாய்வெந்துபோயிற்று அப்படிவிஷச்சுவா
லையுடன் பாவதத்தின்பேரில் போகிறபோது அந்த
வேளையிற்கருடபகவானனவர் வைகுந்தம்விட்டுகந்
தமாபர்வதத்திற்குவருகிறபோது அவரதுஇரண்டு
சிறகினுடையகாற்றுவேகமானது சண்டமாருதம்வீ
சினதுபோலக் காற்றுகளெழும்பி அதனால் மலைக்கு
ன்றுகளெழும்ப மலைக்குன்றுகளெல்லாஞ் செண்டு
போலெழும்பிப்பதினாறுகோடி சூரியபிரகாசம்போ
லமேனிதுலங்க அதிசீக்ரமாய்வருகிறதை வாசுகி

யும் குமாரர்களுங்கண்டுபயந்து பர்வதத்தைவிட்டு அந்தவேகமாக எழும்பி ஓவீரசேனமகாராஜனே இந்தசமயம் அபயங் காருமென்றுவந்துவிட்டார்கள்.

அதுகண்டுவீரசேனன் வாசுகியென்னப்பட்ட நாகத்தைப்பார்த்துபயப்படாதேயென்று வாரியெடுத்துத் தன்னுடைய அம்புறாப்பொதிக்குள்ளேவிட்டு நாககூட்டத்துடன்ரதமேறி வாசுகியினுடைய கூட்டங்களையுந் தங்கள் ரதங்களி லடக்கிக்கொண்டார்கள் அந்தவேளையிற்கருடபகவானனவர் சிறகுகளையும்அடித்துக்கொண்டுவருகிற வேகத்தினால் சண்டமாருதமான காற்றுகளெழும்பி வீரசேனமகாராஜனுடையரதத்தையும் ராஜமன்னர்கள்ரதத்தையும் ஆலமரச்சருகுபோல் ஆயிரத்தைந்நூறுகாதவழி ரதத்தைக் கொண்டுபோய்விட்டது.

அதுகண்டுவீரசேனனும்ராஜகுமாரனும் ஆச்சரியப்பட்டு இதுகருடனிடத்திற்போனால்கருடனால் மாண்டுபோவதுநிச்சயப்பட்டு நாகத்தைப்பார்த்து சொல்லுகிறான் வாராய் வாசுகியே நீகருடன்மகாபலவந்தனென்று சொன்னது நிஜமாயிற்று கருடனுடையசிறகடிகாற்றினாலே நம்முடையரதத்தை வெகுதூரத்திற்கொண்டுவந்துவிட்டது ஆகையால்உன் சேனைகளும்பிழைத்தனநானும்ராஜமனனரும்பிழைத்தோம் அல்லவென்றாலெதிர்நின்றோமேயானால் எல்லோருங்கருடனாலடிப்பட்டுமாண்டுபோவதுமல்லாமல் எங்களைநம்பிவந்தநீயும் உன்சேனைகளுமாண்டு போவீர்கள் அதற்குச்சந்தேகமில்லை ஆகையால் உன்னுடையலோகம்போக மனதிருந்தாற் போய்விடு அல்லவென்றால் என்னிடத்தில் உனக்கிருக்க மனசம்மதியானால் பயமில்லாமலிருந்துவிடு உங்களை ரட்சித்துக்கொண்டுவருகிறேனென்று சொல்லிய வீரசேனவார்த்தையை வாசுகிகேட்டு நம்முடைய லோகம்போனாலும கருடன்வராமலிருக்கப்போகிறதில்லை கருடனாலே அச்சமாயிருக்கும் இந்த பூலோகராசனிடத்திலிருந்தோமேயானால் நமக்குபயமிருக்குபயமிராதென்று மனதிலெண்ணி வீரசேன மகாராஜனைப்பார்த்துச் சொல்லுகிறது

வாராய்வீரசேனமகாராஜனேகருடனுடையசிறகடிகாற்றினால் வெகுதூரவில் வந்துவிட்டோம் இனிகருடனாலே நமக்குபயமில்லை நான பாதாளலோகத்துக்குப்போகிறதில்லைஎங்களைரட்சித்துக்கொள்ளுமென்றுவாசுகியெனனப்பட்ட நாகேந்திரனசொல்ல அதுகேட்டுவீரசேனமகாராஜன் சந்தோஷப்பட்டு அன்றுமுதலின்றையவரைக்கும யாதொருவிசனமில்லாமல் ரட்சித்துக்கொண்டுவந்தான் அப்பப்பட்ட நாகபாசத்தையெடுத்து வில்லிற்றொடுத்து குசலராஜனைப்பார்த்துவிடுத்தான்வீரசேனமகாராஜன் அந்தவாசுகியென்னப்பட்ட நாகபாசமானது வீரசேனமகாராஜனைவிட்டு வெளிப்பட்டு ஆலகாலவிஷங்களைப்போல விஷங்களைகக்கிக்கொண்டு அக்கினிச்சுவாலைவீசி அக்கினியானது குபீல்குபீலென்றுவேகத்துடன் குசலராஜன்எங்கேஎங்கேயென்று நாகாஸ்திரமானதுவருகிறபோது குசலராஜன்கண்டு நன்றாய்வுற்றுற்றுப்பார்த்து ஏதடாசற்பமானது சீறிக்கொண்டுவருகிறதென்று அதிசீக்கிரமாகச்சக்கரத்தையெடுத்துமந்திராப்பூதிகள்கொடுத்துவருகிற நாகபாசத்தின்பேரில் பிரயோகம்பண்ணிவிட்டான் அப்படிசக்கரத்தாழ்வார் மந்திராப்பூதிகொண்டு குசலராஜன்கைவில்லில் விடுபட்டுத் தகத்தகாயமாய்ப்பதினறுகோடி சூரியப்பிரகாசமாய் அண்டாண்டபிரமாண்டங்களும் ஆயிரத்தெட்டண்டங்களும்நடுங்கதேவரொல்லாம்திடுக்கிட்டுப்பயந்தோட அதிவேகத்துடன்வீரசேனன்விட்ட நாகபாசத்தையுங்கண்டதுண்டமபண்ணி அந்தவுக்கிரம்விடாமல் வீரனுடையசிரசையுமறுத்து சாரதிகுதிரைகளையுங்கொன்று ஆயுதம்பிடித்திருந்த இராட்சதர்முடிகளைத்துணித்துக்குசலராஜன்விட்ட சகரமானது வந்துவிட்டது.



மட்சயர்நமகாராஜனுக்குங்குசலராஜனுக்கும் யுத்தம்.

சந்த விருத்தம்.


அக்ரமிலானருளுஞ்சிசுவாலவிளையாட்போரில்
வந்தபதாதிகரித்திரள்யாவையுமழித்தோன்
சந்தனனென்றுமதங்கள்கடிந்தவைபோரமட்ச
ந்தனனெனும்ரதமேனியடர்ந்தானே.

வசனம்

அதுகண்ட மட்சயந்தமகாராஜன்பிள்ளையிறந்துபோனனென்று அதிககோபாக்கினியுடன்வில்லையெடுத்துநிறுத்திப் பாணங்களைவில்லிற்சந்தித்து மழைபொழிவதுபோல்சரமாரியாகப்பொழிந்து ஒரு சத்தியையெடுத்துப்பூசைசெய்துபாணவேகத்தோடு கூட குசலராஜனுடையவில்லைப் வார்த்துவிட்டான் அந்தசத்தியானது விடுபட்டு அண்டாண்டபுவனங்களுமடுங்க அக்கினிச்சுவாலை யெழும்ப அதிவேகத்துடன்வருகிறபோது குசலராஜன்கண்டு அதிசீக்கிரமாய்த் தன்னுடையவில்லிலனேகதிவ்யாஸ்திரங்களைச் சந்தித்துவிட்டு மட்சயந்தமகாராஜனுடைய அஸ்திரங்களையெல்லாங்கண்டித்துவருகிற சத்தியின்பேரிற் சடாலென்றுவந்துபாய்ந்துசத்தியினலடிப்பட்டு பூமியில் சாய்ந்துபோயிறறு அப்போதுசத்தியானது வேகத்துடன் குசலராஜனுடையபிரசண்ட கோதண்டத்தின்பேரில் வந்துவிழுந்த சத்தியை யறவெட்டிப் பூமியில் தள்ளிவிட்டான்.

அப்போது சத்தியானது குசல ராஜனுடைய கோதண்டத்தைப் பிளக்கவொட்டாமல் பின்னப்பட்டு குசலராஜனுடைய வாளாயுதத்தினல் வெட்டுண்டு பூமியில் விழுந்துபோனதையு மட்சயந்தமகாராஜன்கண்டு கடுங்கோபங்கொணடு நாராயணாஸ்திரத்தையெடுத்துப்பூசைசெய்து வில்லிற்சந்தித்துப் பிரயோகம்பண்ணினன் அந்தநாராயணாஸ்திரமானதுவில்லில்விடுபட்டு அண்டாண்டபகிரண்டமாயிரத்தெட்டண்டங்களுமகுலுங்க ஆலகாலவிஷத்தைப்போல் அக்கினிச்சுவாலைகளுடன அதிவேகமாகவருகிறபோது குசலராஜன்கண்டு கோபமாகித்தானும் ஒருநாராயணாஸ்திரத்தைப்பூசைசெய்துவில்லிற்சந்தித்துப் பிரயோகம் பணணினன் அந்தநாராயணாஸ்திரமும் வில்லில்விடுபட்டு ஆகாயம்பூமியுமொன்ரு யுருவுகொண்டு அக்கினிகளைக் குபீல் குபீலென்றுகக்கி ஆலகால விஷத்தைப் போலச் சீறிக்கொண்டு அதிவேகத்துடன் மட்சயந்தமகாராஜன்விட்ட நாராயணாஸ்திரத்தை கமளீகாம்பண்ணிவிட்டு அம்புருவில் வந்தடைந்தது

அதுகண்டு மட்சயந்தராசன் கணக்குமிதமில்லாதபாணங்களையெடுத்துவில்லிற்சந்தித்துசோனைமாரிபோலக் குசலராஜன்பேரிற் பொழிந்துவிட்டார் அதுகண்டு குசலராஜனனவன் அநேக பாணங்களைப்பிரயோகப்படுத்திமட்சயந்தமகாராஜனவிட்ட பாணங்களையுமறுத்து மிச்சமாக ஐந்துதிவ்வியாஸ்திரங்களைவிட்டு மட்சயந்தமகாராஜனேறிவந்த ரதஞ்சாரதிகுதிரைகளுடன் அதஞ்செய்து மட்சயந்த மகாராசன் சிரசை காசரவென்று அறுத்து தள்ளிவிட்டான்.



சோமுகாராஜனுக்குங்குசலாராஜனுக்கும் யுத்தம.

கலிவிருத்தம்

மட்சயந்த வாசன்பிடித்தபின்
துஷ்டனுஞ்சோம காசனுள்ளந்துடித்
திட்சணத்தி லெடுத்தவனுவியை
பட்சணஞ்செய்குவேனெனப் பாய்ந்தனன்.

வசனம்.

அதுகண்டுவாரணாபுரியையாளப்பட்ட சோமகாசமகாராஜன்பல்லை நறநறவென்றுகடித்து கோபமாய் ரதத்தைக்குசலாராஜன்முன்னடத்திவில்லையெடுத்துநாணிமிகிந்து ஒருமுகூர்த்தம்மூனேமுக்கால்நாழிகைபரியந்தம ஒய்ஒழிச்சலில்லாமலும்மூச்சுவிடாமலும் பாணங்களை சரசரவென்று குசலாராஜன்மீது அநேகபாணங்களைவிட்டு சோமகாசமகாராஜன்விட்ட பாணங்களெல்லாமறுத்து அதனமாகப்பத்துதிவ்யாஸ்திரங்களெடுத்து கோதண்டத்திற் சந்தித்துப் பிரயோகம்பண்ணினன் அதுகள்கோதண்டத்தில்விடுபட்டு காட்டுத்தீயைப் போற் கணகணவென்றெரிந்துக்கொணடுவருகிறபோது சோமகாசமகாராஜன்கண்டு நூறு திவ்யாஸ்திரமெடுத்து வில்லிற்றொடுத்துவிட்டுக் குசலன்விட்டபத்துதிவ்யாஸ்திரத்தையுமறுத்துத் தள்ளிபோட்டான்.

அதுகண்டுகுசலராஜன்வெருண்டுநூறுநாராச பாணங்களெடுத்து பிரயோகம் பணணினன் அந்த நூறுநாராசபாணங்களுங்காலகோடிவிஷம்போற்

சிறிக்கொண்டு அதிக வேகத்தோடு வருகிற போது சோமதாசமகாராஜன் கண்டு வில்லிலநேக பாணங்களைசந்தித்துப் பிரயோகப்படுத்தி குசலன்விட்டநா நாராசபாணத்தையுங்கண்டித்து அதனமாய்ப்பதினைந்து திவ்வியாஸ்திரம்விடுத்தான் அந்த அஸ்திரங்களும் வாய்வேகமனோவேகமாய்வருகையில் குசலாராஜன் கண்டு நான்கு திவ்யாஸ்திரங்களையும் துவசஞ்செய்து அவன்மார்பிலணிந்த கவசகவசத்தையும் பொடியாக்கினன் அப்படி கவசகவசங்களும் பொடியாகவேசோமதாசமகாராஜன் அதிகோபமாகி அறுபதுசிங்கமுகாஸ்திரத்தையுமறுத்து அவனுடையரதஞ்சாரதிகுதிரைகளுடன் துவம்சம்பண்ணினன்

அப்படி குசலராஜனும் சோமதாசமகாராஜனும் ரோஷத்துவேஷத்துடன்மிதமில்லாத அஸ்திரங்களைவிட்டியுத்தஞ்செய்துகொண்டிருக்கையில் இலங்காதிபதியான காலசித்தன் மூர்ச்சைதெளிந்து கண்ணைமுழித்துக் குசலராஜனைப் பார்த்தான் அவ்விராஜனுடைய விற்குணத்தொனி சத்தமானதுவெகுதூரத்திற்கேட்டது இந்தசத்தங்காலசித்தன்கேட்டவே சித்தாக்கிரந்தனுகி விசனப்பட்டு சிதாலட்சமில்லாமல் ஸ்ரீராமபத்திரசுவாமியாருடைய யாகத்திற்குப் பின்னம் வந்துவிட்டது இதுயாருடைய சாபம் இப்படி வந்து விளைந்தது ஸ்ரீமந்நாராயணா ஸ்ரீராமபத்திரா ரகுநந்தனுவென்று மகாவிசனசித்தனுகி ரதத்தைவிட்டுப் பூமியிற் குதிதது மறுதேரிலேறிச் சத்துருக்க மகாராசனுடைய ரதத்தின்கீழடிபணிந்து தீர்க்கதெண்டஞ் சமர்ப்பித்து சத்துருக்க மகாராசனுல் ஆசீர்வாதம்பெற் றெழுந்திருந்து அவ்வாசனைப்பார்த்துச் சொல்லுகிறுன்.

இராஜாதிராஜனே ராஜபரமேஸ்வரா சத்துருக்கமகாராஜனேகேளும இந்திரன் அக்கினியமன் நிருதி வருணன்வாய்வு குபேரன் ஈசானியன் இப்படிச்சொல்லப்பட்ட அஷ்டதிக்குப் பாலகருடன் யுத்தம்புரிந்து ஜெயங்கொண்டேன் அவர்களுடைய அஸ்திரங்களும் இதற்கிணையல்ல இந்தகுசலனே நமதுசேனைகளுக்கு யெமனுகவந்திருக்கிறுனே சகலவுயிர்ப்பிராணிகளையும்கொண்டுபோகுங் காலனுனவன் எம்பேரிலதூதருடன்வந்துயுத்தம்பண்ணி என்னை ஜெயிக்க மாட்டாமல் எத்தனைதரமோ யென்கையிலடிப்பட்டு சொற்பமானயுத்தஞ்செய்கிறுனென்றெண்ணவேண்டாம் மகா வல்லவன் குசலனுடைய அஸ்திரம்-ம-ா-ஆயிரம்பட்டு மிகவும் கஸ்திபடைந்தோடிப்போய் விட்டான் அப்படிப்பட்ட எமனும் என்னைக்கண்டவுடனே கையெடுத்துக் கும்பிட்டுக்கொண்டிருக்கிறுன் அந்தகாலனுடைய பாணத்தின் சுருக்கும் இந்தகுசலனுடைய பாணத்தின்சுருக்குக்குமிகாசல்ல பிரமதேவரைநோக்கி அநேககாலந்தவசுசெய்து அவரால் பிரமாஸ்திரமும்பெற்றேன் பரமசிவனைவருந்தி தவஞ்செய்து சூலமும் பெற்றேன் ஸ்ரீமந்நாராயணரை அநேககாலந்தவஞ்செய்துஸ்ரீமந்நாராயணர் வாதபடியினுலே வைகுந்தபுரத்தின் பேரில்யுத்தத்திற்குப்போய் ஸ்ரீமந்நாராயணருடன் அநேகயுத்தஞ்செய்து நாராயணுஸ்திரமும்பெற்றேன் காலனுல்தெண்டும்பெற்றேன் அதனுல்சகலராட்சதாளும் தேவர்களும் வணங்கும்படியாய் இதுவரையில்பேரும்பெற்றேன் இப்போதிந்தக்குசலனுல் மும்மூர்த்திகளால் வரம்பெற்ற ஆயுதாஸ்திரங்களுந்தோற்று என்சரீரமுமறுப்புண்டு மகா ஆயாசம்இளைப்போடு மூர்ச்சைதெளிந்தெழுந்துவந்தேனென்றுன் அவனைச் சத்துருக்க மகாராசர் தன்னுடைய கரத்தினுற் சரீரமுழுதுந்தடவிக்கொடுத்துச்சொல்லுகிறுன்.

வாராய் காலசித்தனே குசலன் சிறுபிள்ளையானபடியினுல் முன்பின்யோசனையில்லாமல் அஸ்திரத்தைவிட்டுக்கொன்றுபோடுகிறுன் இப்போதிந்தக் குசலனுல் நம்முடையசேனுசமுத்திரமெல்லாம் மாண்டுபோயிற்று இன்னமுனக்குசூலமும் நாராயணுஸ்திரமும் பிரம்மாஸ்திரமும் காலனுடையதெண்டு அட்டதிக்குப் பாலரைச் ஜெயிக்கத்தக்க ஆயுதமுனக்குத்தருகிறேன் நீபயப்படாமல் ரதமேறிக்கொண்டு குசலனையெடுத் தெவ்விதத்திலும் உயிர்ச்சேதம் வரவொட்டாமல் கைப்பிடியாய் பிடித்துவரவேணுமென்று சொல்லி சூலமும் நாராயணுஸ்திரமும் பிரமாஸ்திரமும் காலனுடைய தெண்டும்போலமைத்ததெண்டுமெடுத்துகாலசித்தனுடையகையிற்கொடுத்தார் அவர் யாரென்றுல் பல்லாயிரங் கோடி அண்டத்தையுங்கெற்பத்தில்வைத்து ரட்சிக்கப்படாநின்ற நமதுஸ்ரீராமபத்திரசுவாமியாருடைய சகோதாருக விளங்கப்பட்ட சத்துருக்கனைப் பார்த்துச் சொல்லுகிறுன் ஐயாசத்துருக்கராஜரேகேளும்குச

துயாளாத அட்சயதுணிபாயிருக்கிறது இந்தவில்லோ பிரசண்டங்கள் கண்ட வில்லுபோலிருக்குது அந்தவில்லினுடையமுறப்புக்கு திருமூர்த்தியும் முன்னிற்க மாட்டார்கள் எததனை அஸ்திர மந்தவில்லின்பேரில்விட்டாலுங் கூர்மடங்கிபூமியில்விழுந்து போகிறதேயல்லாமல் வில்முறிந்த பாடில்லை குசலராசனைப் பார்த்து பாணமெடுக்கும்போதே சிரசுபோய்விடுகின்றது அந்தகுசலனுடனே யார்நின்று யுத்தம் பண்ணுவார்கள் இதுயாருடைய சாபமோ இப்படி சிறுவன் கையினா மாண்டுபோககாலம் வந்தது ஸ்ரீராமருடைய யாகத்திற்கு பின்னம் வந்துவிட்டது சமுத்திர மெல்லாந் தாண்டி சின்ன காலவாய் தாண்ட மாட்டாமற் போனோம் என்னசெய்வோம் சத்துருக்க மகாராஜனே என்றான் அப்படி சொன்ன காலசித்தனுடைய வார்த்தையை சத்துருக்கமகாராஜன் கேட்டு சொல்லுகிறார் வாராய் காலசித்தனே இந்தகுசலனை ஒருபெரிதா எண்ணி இப்படி விசனப்படுவார்களு முண்டோ இந்தகுசலன் எமலோகம் அல்லது கைலாயம் வைகுந்தம் போயொளித்தாலும் என்னுடைய அஸ்திரம்விடாது நான்போயந்த குசலனுடனே யுத்தம் பண்ணி செயிக்கிறேன் பாருமென்று ஒருவர்க் கொருவர் பேசிக்கொண் டிருக்கும்போது குசலராஜனனவன் மிதமில்லாத பாணங்களை விட்டு சோமகாச மகாராஜனுடையசரீரத்தை சல்லடைக்கண்களாக துளைத்து ரதத்திற்கட்டிய துஜத்தையுமறுத்துத் தள்ளினான் துஜமறுந்து போகவே சோமகாச மகாராஜன் கடுஞ்சினங் கொண்டு சாரதியை எச்சரித்து ரதத்தை குசலராஜன் முன்னுக்கு நடத்தி குசலராஜனை பார்த்து சொல்லுகிறான் வாருய்சிறுபிள்ளாய் நீயார் உன்குலமென்ன உன்தாய்தந்தைபேரென்ன நீஎங்களுடன் யுத்தம்புரிய வேண்டிய காரிய மென்ன சொல்லுந் தம்பி யென்றுகேட்டார் அதற்குகுசலராஜன் சோமகாசமகாராஜனைப்பார்த்துசொல்லுகிறான் ஓராசனே என்தாய்தந்தைபேரையுங் கேழ்க்கப்பட்டவர்க்கெல்லாம்சொல்லிக்கொண்டு நானிருக்கவோ யுத்தமுனையில் உறவுநடத்துவாரு முண்டோ ஒருவாகிலும் என்கைதிமிர்தீர யுத்தம்பண்ணுவாரைக்காணேன் நீயொருராஜனென்று வில்லைகையிற்பிடித்தாய் என்முன் வந்து நின்று வாய்விசேஷக் கேட்கவந்தாய் அப்படி விசேஷங்கேட்டு தப்பித்துக்கொள்ளவந்த உன்னை இதோ என்கைபாணத்தினால் கண்டதுண்டம் பண்ணுகிறேன் பாரென்று மகா உக்ராகாரத்துடன் மநாராசபாணமெடுத்து வில்லிற்றொடுத்துவிடுத்து சோமகாசராஜனுடையசக்காத்தை சல்லடைக்கண்களாக துளைத்து விட்டானதனாற் சோமகாசமகாராஜன் மிகவுமனம்நொந்து இவனைக்கொன்றால் தோஷமில்லை என்றுநாராயணாஸ்திரத்தை எடுத்து மந்திரா பூதிகள் செய்து பிரயோகம பண்ணினானந்த நாராயணாஸ்திரமானது வில்லிலிருந்து விடுபட்டு அண்டபகிரண்டங்களும் நடுங்க ஆலகாலவிஷத்தைப்போற் சீறிக்கொண்டக்கினி பொறிகள் சிதறும்படியா யதிகவேகத்துடன் வரும்போது குசலராஜன் கண்டு கோபாக்கினியுடன் நாராயணாஸ்திரத்தைஎடுத்து வில்லிற்றொடுத்து மந்திராபூதிகள செய்துவிட்டானந்த நாராயணாஸ்திரமும் வில்லில்விடுபட்டு அண்டாண்ட பகிரண்டங்களும் ஆயிரத்தெட் டண்டங்களும் ஆவென்று வாயைத்திறந்து வடவாமுகாக்கினியை வாரியிறைத்துக்கொண்டு அதிவேகமாய் வந்து சோமகாச மகாராஜன்விட்ட நாராயணாஸ்திரத்தை கபளீகரம்பண்ணிப்போட்டு அம்புறாத்துணியில மறுபடியும்வந்தடைந்தது

அதுகண்டுதிகிற்கொண்டு சோமகாசமகாராஜன் தயிலத்திற்றோய்த்து கூர்மைதங்கியிருக்கும்வேலாயுதததை யெடுத்து தூபதீப நைவேத்தியங்கள் கொடுத்து அடையவர்கள் போற்படைகளில்முந்திருக்கும் தசரதமகாராஜன்பௌத்திரனாகிய குசலமகாராஜன் மார்பில் லக்குபார்த்து விட்டுவிட்டானந்தவேலாயுதம் விடுபட்டு அண்டாண்ட பிர்மாண்டமும் ஆயிரத்தெட்டண்டங்களும் நடுங்க அண்டமுகடுகிழிய அண்ட கோளத்தையும் பத்தியெறிய ஆவென்றுவாயைத்திறந்து அக்கினிகளை குபீலென்று கக்குகிறபோது அண்டத்திலுள்ள தேவர்களுமக்கினிசுவாலைகள் பொறுக்க மாட்டாமல் ஒருஅண்ட உயரம் ஓடிப்போய் பார்த்துக் கொண்டிருந்தார்கள் அந்த சமயததில் குசலராஜன் விட்ட வேலாயுதத்தை கபளீகரஞ்செய்து சோமகாசமகாராசன் மார்பில்பாய்ந்துமுதுகிலுருவி திருப்பாற்கடலில்ஸ்னானஞ்செய்து அம்புறாத்துணியில் வந்தடைந்தது சோமகாசமகாராஜாவில்லை நழுகவிட்டு தேரின்பேரில்விழுந்து ஸ்ரீமந்நாராயணா வென்று உயிரைவிட்டான்.

அதுகண்டுகுசலன்சந்தோஷமாகி வில்லிலனேக அஸ்திரங்களை சந்தித்து ராட்சதாள் பேரில் பிரயோகம்பண்ணினானந்த அஸ்திரங்களின் ராட்சதாள்தலைசாய்ந்தவரும் சிலைமாய்ந்தவரும் கண்டமானவரும் துண்டமானவரும் கதறுவார்களும் உயிர்தப்

பிழைக்குமென்று பதறுவார்களும் காணுக்குமாக சி
தறுவார்களும் சடசமென்று வருவார்களும் படப
டென்று போவார்களும் இப்படியாக சிலர் ஓடத்த
லைப்பட்டார்கள்.



சத்துருக்கமகாராசனுக்கும் குசலராஜனுக்கும்
யுத்தம்.

கலிவிருத்தம்.

சத்துருக்கன்சினத்துடன்வந்துபோர்
முற்றமாடிமுறியசாச்சிலை
சித்தவேத்திகத்தவனோர்புறஞ்
செத்தவன்போலிருக்கச்சிரித்தனன்.

வசனம்.

அதனை சத்துருக்கமகாராசன் கண்டு கண்களி
ற்பொறிபறக்க காதுகளிரண்டிலும் புகைகளெழும்
ப மீசையானது படபடென்று துடிக்க இரண்டுகை
களும் பதைக்க அதிக உக்கிரசின்னப்போற்கோபமா
கொதிப்பைத்தரித்து குசலராஜன் முன்னுக்குரத
த்தைநடத்தி சொல்லுகிறார் வாருந் தம்பி சிறுபிள்
ளாய் நீயார்உன்தாய்தந்தைபேரென்ன உன்பெயர்
யாது உன்குலமென்ன சொல்லென்றார்.

அதற்கு குசலன் புகலுகின்றார் ஓராஜனே கே
ளும்ராசாக்களாய்ப்பிறந்தபேர்களுக்கு யுத்தம்வந்து
சேர்ந்தகாலத்தில் யுத்தத்திற்குபின்னிடைந்து உறவு
கடத்தனாறு முன்னேடா வந்தபேருக்கெல்லாம் தா
ய்தந்தை பேரை சொல்லிக்கொண் டிருக்கிறதோ
யுத்தத்திற்கு பயந்தால் நான்விடுவேனே விடேனெ
ன்றுனப்படி கூறிய குசலன் மொழியை சத்துருக்க
மகாராச னானது சொல்லுகிறார் வாரும்பிள்ளா
யான யுத்தத்திற்குபயந்து உன் தாய்தந்தைபேரை
சொல்லவில்லை நீ சிறுவனாகையால் உன்னை யின்றோர்
பெயரையறிந்துக்கொண்டு போர்புரியலாமென்றும்
நீஇப்படி சொல்லலையா ஆகையால் சந்தேகமின்றி
தந்தையின்பெயரும் உன்வரலாறும் எனக்குஅறிவி
யென்றார்.

அவ்வாறுகூறிய சத்துருக்க மகாராஜன் திரு
மொழியைச் சிறுவனான குசலவன்கேட்டு என்தாய்
பேர் ஜானகியம்மாள் எங்கள் ஐயர்பேர் வால்மீக
ரிஷி என்பேர்குசலன் எனதம்பிபேர்லவன் எங்கள்
குலமெனக்குத் தெரியாதென்றான் அதைக்கேட்ட
சத்துருக்கமகாராஜர் யோசித்து இவன்ரிஷிபிள்ளை
யென்றுசொல்லுகிறான் ஆனால் சீதாலட்சுமிக்கும் இரண்
டுபிள்ளைகளுண்டாவானேன் அதிசயமாயிருக்கிறதெ
ன்று சந்தேகித்து இன்னமிவனது வாய்பேச்சை
ஆராயவேணுமென்று குசலனைப்பார்த்துச்சொல்லு
கிறார் வாருந்தம்பி குசலனே உன் தாய்தந்தைபே
ரையும் புகன்றாய்பலவான் என்னுடைய சேனைகள் எ
ன்னசெய்ததென்று இப்படி வீணில் மாய்த்துவிட்
டாய் சொல்லென்றார்.

அதற்குகுசலராஜன் சொல்லுகிறான் ஓகோரா
ஜனேகேளும் என்தம்பிலவனானவன் உங்களை என்
ன செய்தானென்று பிடித்துக் கட்டிக்கொண்டுபோ
னீர்கள் அதைச்சொல்லென்றான் அதற்கு சத்துரு
க்கமகாராஜர்சொல்லுகிறார் வாருமதம்பி குசலனே
அயோத்தியாபுரி பட்டணத்தை பரிபாலனஞ் செ
ய்யப்பட்ட ஸ்ரீராமபுத்திர சுவாமி அஸ்வமேதயா
கம் பண்ணவேண்டி குதிரையை விட்டார் அந்த அஸ்
வமானது இந்தவனத்திற்குவந்தது அதை உன்தம்
பிலவன்கண்டு குதிரையை பிடித்துக்கட்டி பின்வந்த
சேனைகளையுங்கொன்று என்னுடையசேனைகளையு
மல்லோலபடுத்தினபடியால் நான்வந்துகுதிரையை
விடச்சொல்லிக் கேட்டால் என்னையும் உதாசின
மாகதூஷித்து பாணப்பிரயோகம் பண்ணினான் அ
ந்த பாணங்களையெல்லா மறுத்து மூர்ச்சையாக்கி
பின்கட்டாகக்கட்டி போட்டேனென்றார்

அவ்வார்த்தையை குசலராஜன்கேட்டு இரண்
டுகண்களுஞ்சிவப்பேற இரண்டுகாதிலும் புகைளழு
ம்ப சரீரந்துடிக்க கண்களிரண்டும் பதைக்க அதிக
கோபாக்கினியுடன் சத்துருக்க மகாராசனை பார்த்
து இடிமுழங்கிய சத்தம்போலே பல்லை நெறநெற
வென்று கடித்து ஓசத்துருக்கமகாராஜனே என்ன
வசனம புகன்றாய் அயோத்தியாபுரியை பரிபாலன
ம்பண்ணப்பட்ட ஸ்ரீராமபிரான் விட்ட குதிரை அ
வர் பட்டணத்தைச்சுற்றி பிரதட்சணம் வரவேணு
மேயல்லாமல எங்கள் வனத்திற்கு அந்த குதிரைவ
ந்தபடியினால் என்தம்பிலவன் பிடித்துக்கட்டினான்
ஆனலவனுடன் நீங்கள்வந்தெதிர்த்து யுத்தஞ்செய்
து பிடித்து கட்டிக்கொண்டுபோக உங்களுக்கென்ன
ன்யாயமிருக்கிறது சொல்லென்றான அப்படி கூறி
ய குசலனுடைய வார்த்தையை சத்துருக்கமகாரா
சர்கேட்டு சொல்லுகின்றார் வாருந்தம்பி குசலரா
ஜனே ஆயிரத்தெட்டண்டங்களும உசச புவனமு
ம சத்தசாகரமுஞ்சூழ்ந்த ஈரேழுபதினாலுலகத்தை
யும் ஏகசக்காராயாளப்பட்ட இராவணேஸ்வரனை
இராமபாணம் விட்டு சங்கரித்து ஆயிரத்தெட்ட
ண்டம் உசச புவனமும சத்தசாகரமுஞ்சூழ்ந்த ஈ
ரேழு பதினாலுலோகத்தையும் விளங்கிறதத் ஸ்ரீராம

பத்திரசுவாமி யாருக்குதன் பட்டணமென்றும் உங்கள்வன மென்றுமிருக்குதோ சிங்கத்துக்கு தன்காடென்றும புறங்காடென்ன மிருக்குதோ அப்படியவர்விட்டகுதிரை உங்கள்வனமென்றும்எங்கள்வனமென்றும்வேற்று மையிராதுகண்டாய் இப்போ உன தம்பிஎன்சேனையை வீணிலே கொன்றபடியினுலேநானவனைபிடித்து கட்டநாய மிருக்கிறது நீசிறுபிள்ளையானபடியால் உனக்கிவ்வளவு ஞாயந்தெரியாமல் என்னுடைய சேனையை முன்பின் பாராமல் அஸ்திரத்தைவிட்டுக்கொன்றுபோட்டாய்சிறுபிள்ளையானபடியினுலே நான்மனம் பொறுத்தேன் வேறேமற்றபேராளுல் என்குதிரையைபிடித்து கட்டினதற்கு இந்நேரம் வானுலகம்போய்சேர வேண்டும் உன்னுடையஉயிரை தப்பித்துக்கொண்டுஉன் தாயுடன் பிள்ளையாய்ப்போய்ச் சேரென்றுர்.

அதனைக்கண்ட குசலாசன் சத்துருக்கமகாராசனைப்பார்த்து சொல்லுகிறுன் அடா சத்துருக்கனே என்னவசனம்புகன்ருய் சிங்கத்திற்குதன்காடென்றும் பிறர்காடென்று முண்டோ இன்றுசொல்லவந்தாய்நீயும் அந்தராமனும் இன்னம் சற்றுநேரத்தில்படப் போகின்றபாடு தெரியாமல் என்னையிகழ்ச்சியாகச்சொன்னஉன்னையிதோ அரைட்சணம் நேரத்திற்குள் என்னுடையமர்மசர்மமெல்லாம்வெளிப்படுத்திவைக்குறேன்பாரென்று பிரசண்டகோதண்டத்தைகுணத்தொனிபண்ணி ௰ நாராசபாணங்களைஎடுத்து கோதண்டத்திற் சந்தித்து சத்துருக்கமகாராசன பேரில பிரயோகம்பண்ணினுனந்த நாராசபாணங்களும் வில்லில்விடுபட்டு நாகசர்ப்பமபோற் சீறிக்கொண்டு வருகிறபோது சத்துருக்கமகாராசன்கண்டு பாலன் பாணமிஞ்சினுனென்று ௰ நாராசபாணமெடுத்து வில்லிற சந்தித்து விடவே அவ்வயத்திலிருந்த நாகசாப்பம்போற்சீறிக்கொண்டு அதிவேகமாக புறப்பட்டு குசலாசன்விட்ட நாராசபாணங்களின்பேரில் சடாலென்று வந்துபாய்ந்து ஒன்ருேடொன றுதாக்கி ஆகாசமார்க்கத்திலெழும்பி யுத்தங்களசெய்து இருவருடைய பாணங்களுமகொடிந்து பூமியில்விழுந்து அவர்களுடைய அம்புருப் பொதியிலவந் தடைந்தது அதுகண்டுகுசலாசன கோபமாகி வில்லையெடுத்து அநேக அஸ்திரங்களைச்சந்தித்து வருஷகாலத்திற் சத்தமேகங்களும் ஈசானிபங்களும் ஒன்ருகக்கூடி இடிமின்னல்குமுறலுடனே குமுகுமுவென்று ஒப்பொழிச்சலில்லாமல சந்துபிசகாமல சரவருஷமபொழிந்தாலெப்படியோ அப்படியாக சரவருஷமாய் மிதமில்லாதபாணங்களைச் சத்துருக்கமகாராசன வில்லிலனேகபாணங்களைச் சந்தித்து ஈசானியமூலையிலிருந்துமோமானதுவெர்ச்சித்தாலெப்படியோ அவ்வாறு வெர்ச்சித்து சலவருஷம் பொழிந்து குசலாசனுடைய அஸ்திரங்களுடன் ஒன்ருேடொன றுதாக்கியுத்தங்கள் செய்துகூர்மடங்கி பூமியில்விழுந்து அம்புருப் பொதியில் வந்தடைந்ததுகண் அதுகண்டுகுசலாசன கோதண்டத்தில் மோகமான அஸ்திரங்களைச்சந்தித்து சத்துருக்கமகாராசனபேரில் பிரயோகப்படுத்தினு னந்த திவ்வியாஸ்திரங்களும வில்லில்விடுபட்டு ஒன்ருேடொன் றுருப்ந்துக்கொண்டு நெருப்புப்பொறிபறக்க வருகிறபோது சத்துருக்கமகாராசன்கண்டு தானும்வில்லிலனேக திவ்வியாஸ்திரங்களைத் தொடுத்துபிரயோகம் பண்ணினுர் அந்ததிவ்யாஸ்திரம் அதிகவிரைவோடு அக்கினிபொறிகள் சிதறி ஒன்ருேடொன்றுதாக்கி கூர்மடங்கி பூமியிலவிழுந்து அவர்களுடைய அம்புருப் பொதியில் வந்தடைந்தது அதுகண்டு சத்துருக்கமகாராசர்பின்னும்சிங்கமுகாஸ்திரத்தைஎடுத்து பிரயோகம்பண்ணினுர்.

அந்த சிங்கமுகாஸ்திரம் வில்லில்விடுபட்டு உக்கிரசிங்கம்போலஅக்கினிகளை கக்கிக்கொண்டு அதிகவேகத்துடனே வரும்போது இருவர்விட்டசிங்கமுகாஸ்திரம் ஒன்ருேடொன்றுதாக்கிமற்கட்டியுத்தங்கள்செய்து கூர்மடங்கி பூமியில்விழுந்து அவருடைய அம்புருவில்வந்தடைந்தது குசலாசன் சினங்கொண்டு ஒரு அக்கினியாஸ்திரத்தைஎடுத்து அபிமந்திரித்துப் பிரயோகம்பண்ணினுன்.

அந்த அக்கினியாஸ்திரமானது வடவாமுகாக்கினியைவாரி யிறைத்துக்கொண்டு ஆலகாலவிஷத்தைப்போற்சீறிக்கொண்டு அதிகவேகத்துடனவருகையிற் சத்துருக்கமகாராசன் கண்டுபிரமைகொண்டு பனம்விண்டு இந்த அக்கினியாஸ்திரம் மகாமகிமையுடன் வருகிறதென்று தன்தமயன்கொடுத்த இராமபாணமாகிய அக்கினியாஸ்திரத்தை யெடுத்து அபிமந்திரித்து பிரயோகம்பண்ணினுரந்த அக்கினியாஸ்திரமும்வில்லிலவிடுபட்டுதகத்தகாயமாய் சுயரூபமுடனே தங்கக்கட்டுகளுடன பின்பட்சியிறகு பூண்ட அக்கினியாஸ்திரமானது ஆலகாலவிஷத்தைப்போல் வடவாமுகாக்கினியை வாரியிறைத்துக்கொண்டு சடசடவென்கிற தொனிகளுடனேயு மதிசீக்கிரமாய் குசலாசன்விட்ட அக்கினியாஸ்திரத்தின்பேரிற் சடாலென்று வந்துபாய்ந்து ஆகாயமார்க்கங்களிலும் ஒன்ருேடொன றுதாக்கி எதிர்த்துபோராடினதுபோலவும் ஒன்ருேடொன்றுபொருந்தி அக்கினிகளையும கக்கிக்கொண்டு அக்கினிசுவாலைதனை பொறுக்கமாட்டாமல் ஒரு அண்ட உயரமோடிப்போனுர்களப்படி இரண்டு அக்கினியாஸ்திரமும் ஒன்றுக்கொன்று தோல்வியில்லாமல் யுத்தஞ்செய்யத் தலைப்பட்டது அதனைப் பார்க்க குசலாசனேதடாசத்துருக்கன் பலவானு

விருக்கிறான் நாம்விட்டபட்ட அஸ்திரத்துக்கெல்லாம் பதில்விட்டு யுத்தம்பண்ணுகிறான் இன்னம்அவனுடைய சாமர்த்யத்தைபரிவோமென்று தன்தாயார்கொடுத்த இந்திரனுடைய வச்ராயுதத்தையும் யமனுடைய காலதண்டாயுதத்தையும் ஈசனுடைய சூலாயுதத்தையும் எடுத்து மந்திராபூதிகள் கொடுத்து ஒன்றின்மேலொன்றாக விட்டுவிட்டானந்த ஆயுதங்களும் குசலராசன்கையில் விடுபட்டு அண்டரண்டபிர்மாண்டங்களும் நடுங்க அண்ட கோரத்தையும் பற்றிஎரிய அண்டச்சுவர்களும்நெகுவிட அண்டத்திலுள்ள தேவர்களும் பயந்தோடிவருகிறபோதுசத்துருக்கன்கண்டு எதடா குசலன் மகாபராக்கிரமசாலியாயிருக்கிறானிவன்விட்ட அஸ்திரங்களுமகாமகிமையோடு மிருக்கின்றது இவன்சிறுபிள்ளையாயிற்றே இவனுக்கிப்படிப்பட்ட அஸ்திரம் யார்கொடுத்தது எல்லாங்கண்டறிவோ மென்று தம்முடைய ராமபாணமாகிய வச்ராயுதமுந்தண்டாயுதமுஞ்சூலாயுதமெடுத்து மந்திராபூதிகள் கொடுத்து ஒன்றின்மேலொன்றாய் குசலராசன்விட்ட ஆயுதத்தின்பேரில் விடுத்தாரந்த மூன்றாயுதமும் சத்துருக்கமகாராசன்கையில் விடுபட்டு மும்மூர்த்திகளைப்போல்ஒருவரும் நிகரில்லாமல் அதிவேகத்துடன் குசலராசன்விட்ட ஆயுதங்களின்பேரில் சடாலென்று வந்துபாய்ந்து ஒன்றுக்கொன் றாடுதாக்கி ஆகாயமார்க்கஞ்சென் றிருவர்விட்ட அஸ்திரங்களும் யுத்தஞ்செய்துக்கொண்டிருக்கையில்குசலராசன்தன்தாயார்கொடுத்த நாராயணாஸ்திரத்தைஎடுத்துபூசைசெய்து வில்லிற்சந்தித்துபிரயோகம்பண்ணி அந்தநாராயணாஸ்திரமு மண்டலங்குலுங்க அம்புவிலங்க ஆவென்று வாயைத் திறந்து அக்கினிபொறியை குபில்குபிலென்று வாரியிறைத்துக்கொண்டு சத்துருக்கமகாராச னெங்கேயெங்கே யென்றுவரும்போது சத்துருக்க மகாராசர் கண்டு தன்னுடைய நாராயணாஸ்திரத்தைஎடுத்து ஸ்ரீராமரைத்துதிசெய்து தூபதீப நைவேத்தியங்களுடன் பூசைசெய்து வில்லிறசந்தித்து பிரயோகம்பண்ணினனதுவும் வில்லைவிட்டு வெளிப்பட்டு ஆழிவான அம்புவிபாவ ஆவென்று வாயைத்திறந்துக் கொண்டு குசலராசர்விட்ட நாராயணாஸ்திரத்தின்பேரிற் சடாலென்றுவந்துபாய்ந்து ஒன்றோடொன் றாடுதாக்கி ஆகாயவீதியிற்கிளம்பி ஒன்றுக்கொன் றுதோர்வையில்லாமல யுத்தம்பண்ணுகிறபோது இருவருடையஅஸ்திரத்திலுல் தேவர்களுடைய முகம் கருவேறுதாம் அப்போது தேவர்கள சொல்லிக்கொள்ளுகிறார்கள் இதனை சுப்பிரமணியரும் ஞாபகதமனுடைய யுத்தத்திலும் கண்டிப்படிப் பட்ட தன்பமும் வந்ததில்லை நாம் வேடிக்கை பார்க்கவந்தது போதுமென்று அண்ட உபரம் ஓடிப்போனார்களாமப்போது இருவர்விட்ட நாராயணாஸ்திரங்களும் ஒன்றோடொன் றெதிர்த்துயுத்தம் பண்ணத் தலைபட்டதாக எதுகண்டு குசலராசன் கோபமாகிசக்கரத்தைகையிலெடுத்து மந்திராபூதிகளுடன விட்டுவிட்டாரந்த சக்கரத்தாழ்வார் மந்திராபூதியை உட்கொண்டு குசலராசர்கையில் விடுபட்டு தகத்தகாயமாய்ப்பதினாறு கோடி சூரியனைப்போற் பிரகாசித்துக்கொண்டு அண்டங்கள்யாவுமகுலுங்கஅண்டமுகடுவரையிலும் பத்திஎரிய மூவர்கள் வாட தேவர்கள பயந்தோட ஆலகாலவிஷத்தைப்போற் சீறிஎறிய புகைகளுடன சிடசிடபடபடவென சத்தத்துடன சத்துருக்கனெங்கேயென்று வரும்போது சத்துருக்கமகாராசர்கண்டு எதடா சக்கரமானது மகாமகிமையுடன் வருகுதென்று தன்தமயன்கொடுத்த ராமபாணமாகிய சக்கரத்தின்பேரில் விடவே இதுவும்பூசைகொண்டு தகத்தகாயமாய் இரவுபகலாய்ப் பிரவேசித்துக்கொண்டு கீழேழுலகமும் மேலேழுலோகமும் ஒன்றாயுருவுக்கொண்டு வரும்போது அண்டத்திலுள்ள தேவர்கள்யாவரும் எங்களெம்முடையபேரில் சக்கரம் வருகிறதோவென்று பயந்தோட ஆர்ப்பரித்து குசலராசனவிட்ட சக்கரத்தின்பேரில் தடாலென்றுமோதி ஒன்றோடொன றாடுதாக்கி ஆகாயமேகிளம்பி ஒன்றுக்கொன்றுதோர்வையில்லாமல்யுத்தம்பண்ணத் தலைப்பட்டதாக எதுகண்டுகுசலராசன் தன்தாயார் கொடுத்த வேலாயுதத்தைஎடுத்து மந்திராபூதியுடன் பூசைசெய்து சத்துருக்க மகாராசனுடைய மார்புக்கு லக்குபார்த்துசத்துருக்கனை செயமடைதுவாவென்றுவிட்டுவிட்டானந்த வேலாயுதமானது குசலராசனைவிட்டுவிட்டு ஆகாயம்பூமியுமொன்றாக வாயைத்திறந்து வடவாமுகாக்கினியை வாரி யிறைத்து அண்டகோளகையும்பற்றிஎரிய அண்டமுகடுகிழிய சத்துருக்க மகாராசன் கண்டு இந்த வேலாயுதம் மகாஉக்ரத்துடன்வருகிறதென்று தன்தமயன் கொடுத்தஉக்ரவேலை எடுத்து மந்திரபூர்வத்துடனே பூசைகள்செய்து குசலன்விட்ட வேலாயுதத்தை செயம்பண்ணிவாவென்று விட்டுவிட்டாரந்த வேலாயுதமும் விடுபட்டு அண்டம் படாலென்று வெடிக்கத்தக்கதாக அக்கினிபொறிகளெழும்ப கணகணவென்றதிவேகத்துடன் சடாலென்றுவந்து குசலராச வேலாயுதத்தின்பேரில் விழுந்துவேகமாய் ஒன்றோடொன் றாடுதாக்கி ஆகாயவீதியிற்கிளம்பி ஒகொன்றுதோர்வையில்லாமல்பிரசண்டயுத்த

தலைப்பட்டதுகள் அதுகண்டு குசலராஜன் கோபமாகி தன்தாயாரைத்துதிபண்ணி உக்கிரவீரசத்தியை எடுத்து மந்திராபூதிகளுடன்பூசைசெய்து சத்துருக்கனுடன்போய் போராடி செயஞ்செய்து வாவென்றுவிட்டுவிட்டானந்தசத்தியானது விடுபட்டு ஆகாயம்பூமியு மொன்றாயுருவுகொண்டு ஆவென்று வாயைத்திறந் தக்கினி லைக் குபீல்குபீலென்றுகக்கிக்கொண்டதிக உக்கிராகாரத்துடன் உக்ரவீரசத்தியானது வருகிறபோது சத்துருக்க மகாராஜன் கண்டு தன்தமையன்கொடுத்த ராமபாணமாகிய சத்தியைபூசைசெய்து விட்டுவிடவே அச்சத்தியுமதிக உக்ராகாரத்துடன் குசலராஜன் விட்ட சத்தியின்பேரில் சடாலென்றுவந்துமோதி ஒன்றுக்கொன்றுயுத்தங்கள்செய்து சத்துருக்கமகாராஜன் விட்ட சத்தியை இரண்டுதுண்டாகநறுக்கி பூமியிற்றள்ளிப்போட்டு உக்ரவீரசத்தியானது வரும்போது சத்துருக்க மகாராஜனும் வில்லையெடுத்து நிறுத்தி அநேக ராமபாணங்களை வில்லிற்சந்தித்து நிமையோடு நிமைதட்டுமுன்னமே கோடிராமபாணம்விட்டாரந்தராமபாணங்களையெல்லாம்உக்ரவீரசத்தியானது கபளீகரம்பண்ணிவிட்டு அதிவேகமாய் வருகிறபோது சத்துருக்கமகாராஜன்கண்டு பல்லைநெறநெறவென்று கடித்து நிமையோடு நிமைதட்டு முன்னமே தன்னுடையமுப்பத்திரண்டாயுதங்களையும் திவ்றிவ்வென்று சத்தியின்பேரில் விட்டுவிட்டாரந்த உக்ரவீரசத்தியானது முப்பத்திரண் டாயுதங்களையும் கபளீகரம்பண்ணிக்கொண்டு வருகிறபோது சத்துருக்கமகாராஜன் கோபித்து தன்தமயன்கொடுத்த மந்திரவாளையுருவி சத்தியின்பேரில்வீசிவெட்டினாரந்தவெட்டானது சத்தியின்பேரிற்படவே இரண்டுதுண்டாய் பூமியில்விழுந்து உடனேயுருவாகி அக்கினிக் கொழுந்துகளை விட்டு அதிகவேகத்துடன் சத்துருக்க மகாராஜனுடைய மார்பிற் சடாலென்றுவந்து பாய்ந்து உருகமாட்டாமல் முதுகிலுருகி திருப்பாற்கடலில்ஸ்நானம்பண்ணி குசலராஜனுடைய அம்புறுப்பொதியில்வந்தடைந்தது அப்படி உக்ரவீரசத்தி மார்பிற்பட் டுருகவே சத்துருக்கமகாராஜர் கைசோர்ந்து மெய்சோர்ந்து குருதிகள் பீரிட ஸ்ரீராமபத்திரா ராமபத்திரா ரகுநந்தனாவென்று தேரில்விழுந்து மரணமூர்ச்சையடைந்தார்

அப்படி சத்துருக்க மகாராஜர் தேரின்பேரில் விழவே தேவேந்திராதிதேவர்களெல்லாங்கண்டு துக்காக்கிராந்தராய் ராமாராமாவென்றுவிசனப்பட்டார்கள் அப்போதுகுசலராஜன் மகாசந்தோஷமாய் பிரசண்ட கோதண்டத்தை குமுகுமென்று குணத்தொனிபண்ணி குசலராஜனானவன் குதான் காலசித் தன்முப்பதினாயிரம் ராஜகுமாரர்களும் ஐயாயிரமந்திரிபிரதானிகளு முப்பதினாயிரங்கோடி சபைத்தலைவர்களுஞ் சேனாதிபதிகளும் ஒன்றாய்க்கூடி குசலராஜன்முன்னுக்கு ரதத்தைநடத்தி குசலராஜனை வளைத்துக்கொண்டு யுத்தஞ்செய்திருந்தார்கள் அந்தச் சமயத்தில் இரண்டுராட்சதாள் ஆகாயமார்க்கத்திலெழும்பி வாய்வேக மனோவேகத்துக்கதிகமானவேகத்துடன் அயோத்யாபுரியில்வந்து குதித்து சகலரோடும் பொதுவாயிருக்கும் பொது மண்டபம்வந்து ராமரைக்கண் டடிபணிந்து விருந்தவணக்கத்தோடுஞ் சொல்லுகிறார்கள்.

ஓ சுவாமி அயோத்தியாபுரியி லிருந்து நேர்வடவாகத்திரும்பி பத்மாவதி பட்டணம்போய் அவ்விடத்திலிருந்து சேதுபந்துராமேஸ்வரம் வந்து அவ்விடத்திலிருந்து நேர்மேற்கிலிருக்கும் வால்மீகர் வனம்போய் சேர்ந்து அஸ்வமானது அவ்வனத்தில் ஒருசிறுபிள்ளை லவனென்னப்பட்டவன் நம்முடைய குதிரையை பிடித்து கட்டி யுத்தஞ்செய்து விட்டானதுகேட்டு சத்துருக்கமகாராஜர் போய் யுத்தம்புரிந்து லவனைமூர்ச்சையாக்கி தம்முடைய ரதத்தின்குத்துக்காலில்பிடித்துக் கட்டிக்கொண்டுவந்துவிட்டார் அந்தசங்கதி அவன் தமயன் குசலன்கேட்டு ஓர்பெரியவில்லைக்கையில்பிடித்துக்கொண்டு வந்து நம்முடையசேனைகளையெல்லாங் கொன்று மூர்ச்சையடையவுஞ் செய்துவிட்டானவனுக்கு எவ்வளவு பிரியவசனஞ்சொன்னாலுங் கேளாமல் சத்துருக்கமகாராஜரோடும் எதிர்த்துயுத்தஞ்செய்து அவரையு மூர்ச்சையடையச் செய்துவிட்டான் இவர்களிருவருடைய வடிவுமழகையும் பார்த்தால் தங்களைப்போ லிருக்கிறார்களவர்களுடைய தாய் தந்தைபேரைக் கேட்டால் தாயாம்பேர் சீதாலட்சுமியென்றும் ஐயாபேர் வால்மீகரிஷி என்றும் சொல்லுகிறார்கள் அவர்களைப்பார்த்தால்ஒட்டைசாணில்லை அவர்கள் கைவில்லைப்பார்த்தால் ரணரங்கங்கண்டவில்லைப்போலிருக்கின்றது அவர்களைமடக்கிக்கொண்டு சிலராட்சதர்களும் படைத்தலைவருஞ்சேனாதிபதிகளும் மந்திரிமார்களும் ராஜகுமாரர்களும் யுத்தஞ் செய்துக்கொண் டிருந்தார்கள் அவர்களுமின்னேர மாண்டுபோவார்களென்று காண்கிறதென்றார்கள்.

அதுகேட்டு ராமபத்திர சுவாமியும் தம்பிமார்களும் மந்திரி சுமந்திரரும் விபீஷணரும் அனுமாரங்கதனும் சுக்ரீபரும் யோசனையானார்களப்போது ராமபத்திர சுவாமியாருக்கு தம்முடைய அவதாரமானதும்சிறு பிள்ளைகள் தம்மைப்போ லிருக்கிறதென்றுசொல்லவே மிகவுஞ் சந்தோஷமாகி பாதலட்சுமணா ஞானமில்லாமல் தம்முடைய யாகத்

திற்குபின்னம்வந்து ஜானகி வால்மீகருடையவனத்திற்றனிருக்கவேணும் அந்த யிரண்டுபிள்ளைகளையும் கைப்பிடியாய் பிடித்து வந்தால் பிள்ளைகளாலே ஜானகி உயிருடனிருக்கிறதும் இறந்து போனதுந் தெரிந்துக் கொள்ளலா மென்றார் அதற்குபரதர் லட்சுமணர்சொல்லுகிறார் அண்ணுவேதங்களுடைய திருவுளப்படி யாரை அனுப்புகிறீர்களோ அவர்கள்சென்று சிறுபிள்ளைகளுக்கு உயிர்ச்சேதம்வரா தொட்டாமற் கைப்பிடியாய் பிடித்துக்கொண்டு வருகிறேனென்றார்க ளப்போது ராமர் யிளையபெருமாளாகிய லட்சுமணரை யழைத்து நம்முடைய எழுபத்திரண்டு வெள்ளம் வானரரையும் பயணப்படுத்தி அனுமாரங்கதன் இருபத்து நான்கு படைத்தலைவர்களையும் கூட்டிக்கொண்டு இருபத்தைந்து வெள்ளம் ராட்சதர்களையும் கூட்டிக்கொண்டு போய் அந்தசிறுபிள்ளைகள் இரண்டு பேரையும் உயிர்ச்சேதம்வரவொட்டாமற் கைப்பிடியாகப் பிடித்துக்கொண்டுவாரும் கையிலகப்படாமற்போனல் அஸ்திரங்களைவிட்டாகிலும் மூர்ச்சையாக்கி ரதத்திற் கட்டிக்கொண்டு வாரும் தம்பி என்று வில்லம்புங்கொடுத்தா ரதனை யிலட்சுமணர் இரண்டு கரத்தாலும் வாங்கிக்கொண்டு சுவாமியையும் பரதரையுஞ் சேவித்து அவர்களிடத்திலாசீர்வாதம்பெற்று வெளியே புறப்பட்டார் இலட்சுமணரானவ ரதுகண்டு அனுமார் அங்கதரும் எழுந்திருந்து சுவாமியையும் பரதரையுஞ் சேவித்து அவர்கட்கு ஆசீர்வாதஞ் செய்து ராமபத்திர சுவாமியார் அனுமார் அங்கதன் சாம்புவந்தரையுமழைத்துச் சொல்லுகிறார் நீங்களும்தம்பி லட்சுமணன்கூடச்சென்று ஆலசியமில்லாமல் அந்த சிறுபிள்ளை குசலவர்களுடைய வாய்மொழியைக் கேட்டு கிட்டநெருங்கி கைப்பிடியாகப் பிடித்துக்கொண்டு வந்தால் சீதையிறந்துபோனதுமிருக்கிறது மறிந்துக்கொள்ளலாம் சிதைவில்லாமல் யாகதந்திற்குபின்னம்வந்து நேர்ந்தது சீக்கிரமாய் தண்டு தளத்தைக் கூட்டிக்கொண்டு நடவுங்களென்றார்.

அப்போது சாரதியானவன் ரதத்தைச்சிங்காரித்து ஆசாரவாசலின் முன்பாக கொண்டுவந்து நிறுத்தினன் அந்த ரதத்தின்பேரில் லட்சுமணரானவரேறி ஆரோகணித்துக்கொண்டார் அனுமார் அங்கதன் இருபத்து நான்கு படைத்தலைவர்களும் ரதமேறி புறப்பட்டார்களவர்கள் புறப்படவே சரிபந்தி போசனஞ்செய்யப்பட்ட ஐயாயிரம் ராஜகுமாரர்களும் ரதமேறிப்புறப்பட்டார்களப்போது ஜயபேரி வெங்கலபேரி ரணபேரி முரசுவெண்கலமுரசு டங்காமணி முரசு மத்தளம் ருத்திரவீணை சர்ணுபூரிதப்பட்டம் கைத்தாளம் குடமுழா பஞ்சநாதம் இப்படிச்சொல்லப்பட்ட முப்பத்திரண்டு மேளவாத்யங்களும் தாம்தாமென்று முழங்க அரவக்கொடி பறக்க அம்புயிற்சிறக்க அயோத்தியைவிட்டு ஆறுமவெகுளங்கள்தாண்டி பாலவனம்வந்தார்க ளப்போது பலபலவென்று விடிந்து சூரியபகவானும் லட்சுமணருடைய யுத்தம்பார்க்க வந்தவரைப்போல உதயமாகவே அவ்விடத்தில் தண்டுபாளைய மிறங்கினர்க ளப்போது லட்சுமணர் தனுசை யனுமார்கையில்கொடுத்து அங்கதன்கையில் உடைவாளைக்கழட்டிக்கொடுத்து தடாகததிலிறங்கி ஸ்நானஞ்செய்து நித்திய நிஷ்டைகளை முடித்துக்கொண்டு புறப்பட்டார்கள்.

அப்போது குசலராஜனனவன் வில்லிலநேக பாணங்களைச்சந்தித்து ராட்சதாள்பேரிலும் குகன்காலசித்தன்பேரில்விட்டு கொல்லுகிறபோது ராட்சதரும் ராஜகுமாரர்களும் மந்திரி பிரதானிகளும் குகனகாலசித்தனுந் தனுசி லஸ்திரங்களைப் பூட்டி மாரிபொழிவதுபோலசரமாரியாய்க் குசலராஜன்மீது பொழிகிற போது குசலராஜ னகோரமான அஸ்திரங்களவிட் டவைகளை யறுத்துத் தள்ளி தன்தாயார்கொடுத்த உக்ரவீரசத்தியையெடுத்து பூஜைசெய்து ராட்சதாள் ராஜகுமாரர்கள்மந்திரிபிரதானிகள் குகன் காலசித்தன்பேரிலும் விட்டுவிட்டானந்த உக்கிரவீரசத்தியும்வெளிப்பட்டு உக்கிராகாரத்துடன் விண்மண்ணதிரவென்றுவாயைத்திறந்து வடவாமுகாக்கினியை வாயிற் குபீல்குபீலென்று கக்கிக்கொண்டு வருகிறபோது காலசித்தன் கண்டு வில்லில் நாராயணாஸ்திரத்தைஎடுத்துசந்தித்தும மந்திராபூர்வகத்துடனே பூசைகள் செய்து குசலராசன்விட்ட சத்தியின் பேரில பிரயோகப்படுத்தி சத்தி வேல் சூலம் காலதெண்டாயுதமெடுத்து ஒன்றின்மேலொன்றாய் மந்திராபூதிகள் செய்து குசலராஜன்விட்ட சத்தியின்பேரில் பிரயோகப்படுத்தி விட்டுவிட்டா னந்த ஆயுத அஸ்திரங்களும் அண்டமாயிரதெட்டும் நடுங்க ஆலகால விஷத்தைப்போல அக்கினிச் சுவாலைகளை வீசிக்கொண்டு அதிவேகத்துடன சடாலென்றுவந்துபாய்ந்த சத்தியினபேரில் யுத்தஞ்செய்ததுகள் அப்போதந்த சத்தியானது அதிக உச்சாகாரத்துடன் ஆயுத சாஸ்திரங்களை அடித்துப் பூமியிற் றள்ளிவிட்டு வருகிறபோது ராட்சதாள் விடப்பட்ட அஸ்திரங்களையும்கமனீகரம்பண்ணிவிட்டு ராட்சதாளுடைய மார்பிலும் குகன்காலசித்தன் மார்பிலும்பட்டு முதுகிலுருவி பாற்சமுத்திரத்தில் ஸ்நானம் பண்ணிவிட்டு குசலராஜனுடைய அமபுருப்பொதியில் வந்தடைந்தது அதுகண்டு குசலராஜன் மகாசந்தோஷமாகிக் கோதண்டத்தைக் கையிலே பிடித்துக்கொண்டு கொஞ்சதூரம்நடந்துபோய்ச் சத்துருக்கமகாராஜனுடைய ரதத்திலேறி தேர்க்காலுடன் கட்டியிருக்கிற ல

வனுடைய கட்டையவிழ்த்து மூர்ச்சை தெளியவே கண்ணைமுழித்துப்பார்த்து தன்தமயன்மூர்ச்சைதெளியவைத்தா ரென்று தெரிந்தவனாக வெழுந்திருந்து குசலராஜனைசேவித்து நடந்த சமாச்சாரத்தையெல்லாம் குசலராஜனுக்குச் சொல்லி சத்துருக்க மகாராஜர் மூர்ச்சையடைந்திருக்கிறதையுங் கண்டு ரதத்தைவிட்டு இருவருங் கீழேகுதித்து ஒருவர்க்கொருவர் சாமார்த்தியத்தை பேசிக்கொண்டு வருகிறபோது அஸ்வமேதக் குதிரையைக்காணமல் ரணக்களத்தைவிட்டு புன்னைமரச்சோலையிலவருகிறபோது அவ்விடத்தில் ஒருமரத்திற் கட்டிவைத்து து௱-ராட்சதாள அக்குதிரைக்கு காவலிருக்கிறதையுங்கண்டு அவ்விடம் குசலர்கள் வருகிறபோது ராட்சதாள்கண்டு அதிககோபங்கொண்டு வில்லைவளைத்து அஸ்திரங்களை வில்லிற் சந்தித்து குசலர்களைப் பார்த்து சொல்லுகிறார்கள் அடா சிறுபிள்ளைகளே எங்கேவாரீர்கள் நில்லுநில்லுங்களென்று சொல்லி யஸ்திரங்களைவிடுகிறபோது குசலராஜன்கண்டு தலையை யசைத்து குஞ்சிரிப்புக்கொண்டு அதிககோபமாகி வில்லில் திவ்யாஸ்திரத்தையெடுத்து சந்தித்துவிட்டுராட்சதாள் விடப்பட்ட அஸ்திரங்களனைத்தையுமறுத்து அதனமாக கடு-திவ்யாஸ்திரத்தையும்விட்டு து௱-ராட்சதாளையுஞ் சம்மாரம்பண்ணி அஸ்வமேதக் குதிரையைப்பார்த்து ஆச்சரியப்பட்டு குதிரையினுடைய நெற்றியிற் கட்டியிருக்கிற பட்டத்தை வாசித்துப் பார்த்து தம்பியாகிய லவனைநோக்கி சொல்லுகிறான்.

அடாதம்பிலவனே நம்முடையகையிலகப்பட்ட குதிரையை விடுவிக்க சத்துருக்கன் தமயனைப்போலொத்த ஸ்ரீ-ராமன் வந்தெதிர்த்தாலும் நம்முடைய பாணத்தினாலே நன்றாய் பூசைசெய்தனுப்பலாம் நமது கையிற் சிக்கின குதிரையை விடுவித்துக்கொண்டு ராமன்கையினால் அஸ்வமேதயாகம்பண்ணுகிறதும் ஸ்ரீமந்நாராயணருக்கே தெரியவரும இன்னம் அந்தராமனுக்கு எவ்வளவுசேனைதானிருக்கின்றதோ வருகிறசேனைக்கெல்லாம் என்கையஸ்திரமிருக்கையிற் பயமென்னவென்று அஸ்வத்தைக் கட்டவிழ்த்து அப்பாற் கொண்டுபோய் சுதட்சண மரத்திற் கட்டிவிட்டு சரஸ்வதியாற்றில் ஸ்நானம்பண்ணி நேமவிஷ்டைகளை முடித்துக்கொண்டு ஒருதோப்படியில்வந்து காமதேனுவைநினைக்க அக்காமதேனுவானது வந்து அமுதளிக்க இருவர்கள்போசித்து கைகாலலம்பி சற்றுநேர மிளைப்பாறிக்கொண்டிருந்தார்கள்.

அப்போது லட்சுமணருடைய தண்டானது மண்ணதிரவிண்ணதிர டமாரபேரிகை வாத்தியங்கள் முழங்க பாலவனத்தையும் விட்டுப் புறப்பட்டு தமது சேனைகளானது அப்படி ஆரவாரத்துடனே தண்டானது வருகிறபோது குசலவர்கள் அந்தசத்தங்கேட்டு இன்னம் வெகு சேனைத்திரள் வருகிறது போல காணுகிறதென் றிருவரும் அண்டகோளத்தையளாவியிராநின்ற சுதட்சணமரத்திலேறி உச்சிக்கிளையினின்று லட்சுமணருடைய தண்டின் பெருக்கத்தைப் பார்த்தார்களாம கங்குகரை கொள்ளாத சேனைகளும் யானைகளும் ரதங்களும் குதிரைகளும் கண்ணுக்கெட்டின தூலவில் வருகிறதைக்கண்டு மரத்தைவிட் டிறங்கி இருவரும் ரணக்களத்தை சுற்றிக்கொண்டு வருகிறபோது லவனானவன் குசலராசனுடைய பிரசண்ட கோனத்தையும் அம்புறாப்பொதியையும் பார்த்துச் சொல்லுகிறான்.

அண்ணாவே இந்தப்பெரியவில்லும் அம்புறாபொதியையும் யாரளித்தது சொல்லுமென்றவனதுகேட்டு குசலராஜன் லவனைப்பார்த்துச் சொல்லுகிறான் வாருந்தம்பி லவனே உன்னுடன் சத்துருக்கமகாராஜன் யுத்தஞ்செய்து உன்னைமூர்ச்சையடையச்செய்து ரதத்திற் கொண்டுபோனா ரென்று வனத்துப்பெண்கள் நமதுதாயாருக்கு சொன்னதாய் நம்முடையதாயார் நான் மருவன வேட்டையாடி வருகிறபோது அழுதுக்கொண்டிருக்கிற தாயாருடையசத்தங்கேட்டு சீக்கிரமாயோடிவந்து அம்மா நாங்கள் சுகமாயிருக்க உனக்குதுக்கமுந் துயரமும்வருவானேனம்மாவென்றேன் அப்போது அம்மா வனத்துப்பெண்கள்சொன்னபடி சொல்லியழுது ஸ்ரீமந்நாராயணர் கையிலும் இந்த அஸ்திரமும் அம்புறாப்பொதியு மழைப்பித்துக்கொடுத்து உன்தம்பி லவனைப் பிடித்துக்கொண்டு போனவர்களை சம்மாரஞ்செய்து தமபியை மீட்டுக்கொண்டுவா மகனேயென்று விடைகொடுத்தனுப்பினார்கள் அம்மான்திருவாக்கைத் தள்ளாமல் வந்தெதிர்த்த ராசாக்களையுஞ் சம்மாரஞ்செய்து உன்னை மூர்ச்சைதெளியவைத்தேன்தம்பி லவனே என்றான்

அதுகேட்டு லவனானவன் நம்முடையவில் முறிந்துபோயிற்றே எதிரியினுடைதென்டானும் நெருங்கிவந்துவிட்டதே நமதுகையில் வில்லில்லாமற்போயிற்றே நமக்கு ஐயர்சொன்ன சூரிய மந்திரமிருக்கின்றதல்லவா இப்போது அந்த மந்திரபலனை யறியவேண்டுமென்று தடாகக்கரையில் வந்து நின்று சூரியநமஸ்காரஞ்செய்து சூரியமந்திரத்தை யுச்சாடனஞ்செய்யவே சூரியபகவானும் லவனுடைய மந்தி

ரதநி ஞாகிய கோரிக்கையறிந்து லவனுமென பிரசன்னமாகவே லவனுனவன் அதிக சந்தோஷத்துடனவரை நமஸ்கரித்தான் அந்த லவனை ஆசீர்வதித்து நம்மை துதிசெய்து வருத்தியழைப்பித்த காரியத்தை சீக்கிரமாய்ச்சொல்லும் தம்பி யென்றார்.

சூரியபகவானுனவர் அப்போது லவனுனவன் மிகவும் வணக்கத்துடன் சுவாமி அடியேனுக்கு ஒடியாதவில்லும் அம்புருதாணியு மாளாத அஸ்திரமுங்கந்தருளவேண்டு மென்று கந்தமுருஞ் சந்திரவடிவில்சேவிக்க சூரியபகவான் இந்தவேளைக் குதவிசெய்ய வேண்டுமென்று லவன்மனதில் நினைத்தபடியே தம்முடையவில் லம்புருப்பொதியுங்கொடுத்து செயமடையக்கடவதென்று ஆசீர்வாதஞ் செய்தினார் அதனைப்பெற்ற லவனுனவன் சந்தோஷமாகி முதுகில் அம்புருப்பொதியுங்கட்டி கையில் வில்லைப்பிடித்துக்கொண்டு தடாகக் கரையைவிட்டு வெளியில்வந்து தமயனுக்கு வில்லையும் அம்புருப் பொதியையும் காண்பித்து சந்தோஷமாக பேசிக்கொண்டிருந்தார்கள்.

அப்போது லட்சமணருடைய தண்டானது சாஸ்வதியாறு தாண்டி ரணக்களம்வந்து லட்சுமணர் அனுமார் அங்கதன் சாம்புவந்தன் நீலன் குமுதன் மத்தகமைக்காசன் கெந்தவிரலன் உல்முகன் கும்பன் சாம்பன் கேசரி இடும்பன பாசன் எமுகன் கோமுகன் துய்யசாதனன் தற்சாவலிமுகன் பந்தவாதி அகம்பன் அரக்கன அனுவன் இப்படிசொல்லப்பட்ட உச-படைத்தலைவர்களும் உச-வெள்ளம் எஉ-வெள்ளம்ராட்சதர்களும் ருது-ராஜகுமாரர்களுங்கண்டு இந்தச்சிறுபிள்ளை குசலர்களாலே இவ்வளவுசேனைகள மாண்டுபோயிற்றென்று மனங்கலங்கி எல்லாம் ஸ்ரீராமருடைய கிருபை யென்று மனதை திடப்படுத்திக்கொண்டு குசலவா ளெங்கேயென்று ரணக்களத்தில்தேடிக்கொண்டு தண்டுவிட்டு பவுஞ்சிட்டு நிறுத்தி லட்சுமணரையும் அனுமாரையும் ருது-ராசகுமாரர்களும் நடுவணியில்நிறுத்தி அங்கதனையும் சாமபுவந்தரையும் அதற்கு முன்னணியில்நிறுத்தி உரு வெள்ளம்ராட்சதர்களையும்-உச-கோடிராட்சதப்படைத்தலைவர்களு மதற்கு முன்னணியில்நிறுத்தி தான்முன்னின்று பேரிகையறைவித்தான் வானரான் தண்டிற்கு சேனதிபதியான நீலனுனவ னந்தசத்தங் குசலராஜன் கேட்டு மகா சந்தோஷத்துடன் லவனைப்பார்த்து குசலராஜன்சொல்லுகிறான் கேளுந்தம்பி லவனே இந்த தண்டில் வந்திருக்கிற பிரமுகாள் பேரில் நான் யுத்தஞ்செய்கின்றேன் நீஎன்னைவிட்டுப்பிரியாமல் நிறுத்திக்கொண்டே சேனைகள் பேரில் யுத்தம்பண்ணு இன்றையதினம் நல்லயுத்தம்போற் காண்கிறது சாக்ரதையாயிருவென் றுத்தாவுசெய்தான் அவ்வாறே லவனும் வில்லையதிகசீக்கிரத்தில் வளைத்து நாணிபிகிந்து கையிற்பிடித்தா னதுகண்டுகுசலராஜன் அட்டகாசஞ்செய்து கோதண்டத்தை நெறநெறவென்று வளைத்தான் அண்ட கடாகம் படபடவென்றவெடிக்க அண்டத்திலுள்ள தேவர்களும் கிலிபிடிக்க நட்சத்திரங்கள் பலபலவென் றுதிர பூமியானது நெகிழ ஆதிசேஷன் ரத்தங்களைக் கக்கிக்கொள்ள அஷ்டகெஜங்கள்வீறிட அஷ்டதிக்கும் நடுங்க ராட்சதர்களும் திடுக்கிட்டேங்கி நாணிபிகிந்த ஓசையானதுகண்டு சேனாதிபதியானநீலன் சாரதியை எச்சரித்து ரதத்தை குசலராஜன்முன்னுக்குச்செலுத்தி நீயார் உன்பேரென்ன சொலலென்றான்.



சேனதிபதியான நீலனுக்கும்
குசலராஜனுக்கும் லவனுக்கும் யுத்தம்.

விருத்தம்.

விதிமுதலோர்புகழ்கானிலுறைந்திடுவள்சீதை
சதிரொடுதந்தளஞ்சியமாகியதோனும்
துதிபெருசபைநினைந்தொருமிழல்சொற்சேன
பதியெனுநீலனுறம்பெருசபையோடுவந்தானே

வசனம்.

அவ்வார்த்தையைக் கேட்ட குசலராஜனுனவன் தம்பியாகிய லவனைப்பார்த்துச் சொல்லுகிறான் அடாதம்பிலவனே குரங்குசொன்ன வார்த்தையை

க்கேட்டாயோகுரங்குக்கோ வில்லம்பில்லை ராஜாக்
களைப்போல ரதமேறிக்கொண்டு நம்மை சட்டைப
ண்ணாமல் நம்முடைய தாய்தந்தை பேரையும் கே
ழ்க்கின்றது காட்டில்வாசஞ்செய்யுங்குரங்கு நம்மு
டைய பாஷையைக் கற்றுக் கொண்டு நமது பேரிற்
போர்புரிய தேரேறிநோய்வந்துவிட்டது இந்தகு
ரங்குக்கு நம்முடைய தாய்தந்தைபேரையோ சொ
ல்லுகிறதென்றான் அதுகேட்டுலவனானவன் தமைய
னைப்பார்த்துச் சொல்லுகிறான் அண்ணாவே காட்டு
க்கிழங்கைப்பிடுங்கிக் கடித்து சுனைநீரைக் குடித்து
பாரைமீதுஞ்செடிமீதும் உறங்கிக்கொண்டிருக்கும்
வானரத்தை ராமன் பிடித்து கும்புகூட்டி சேவகத்
திற்கு வைத்துக்கொண்டவனாகவேணும் இந்தக் கு
ரங்குகள் நம்மை என்ன செய்யக்கூடும் இந்தக்குர
ங்கையொரு பொருட்டாக எண்ணி நாம் தாய்தந்
தை பேரைச் சொல்லுகிறதோ முன்பின் பாராமல்
பாணங்களை விட்டு யுத்தஞ்செய்து வெற்றியடைந்
து நம்முடையதாயாரிடஞ் சனுதியிற் போய்ச்சேர
வேணுமென்றான் லவனானவன் அப்படி கூறிய லவ
னுடைய வார்த்தையை குசலராஜன் கேட்டு முன்
பின் யோசனைபண்ணாமல் சிறுபிள்ளை புத்தியானப
டியால் அம்புறாப்பெட்டியிற்கையைவைத்து நான்கு
திவ்யாஸ்திரங்களெடுத்து கோதண்டத்திற் சந்தித்
துக்கொண்டு நீலனைப்பார்த்து அடாநீலனே நீஎன்
னவார்த்தைசொல்லுகிறாய் ராமன உப்பைத்தின்று
ராமனுக்கு எதிரிகள் வந்து வளைத்துக்கொண்ட வே
ளையில் அவர்களுக்கு நீங்கள்பயந்து பிரியவசனஞ்
சொல்லி உயிர் தப்பித்துக் கொள்ள என்தாய் தந்
தைபேரை கேழ்க்க வந்தாயோ அப்படி தாய்தந்
தையர்பேரை எனக்கு சமதையான மனிதருக்கல்
லவோ நானசொல்ல வேண்டியது காட்டில் வாசம்
பண்ணப்பட்ட குரங்குக்கோ சொல்லுகிறது அடா
குரங்கே யென்று அதிக கோபாக்கினியுடன் நான்
கு திவ்யாஸ்திரங்களையும் விட்டுவிட்டான் அந்தநா
லு திவ்யாஸ்திரங்களும் விடுபட்டு தகத்தகாயமா
ய் தங்கக் கட்டுகளுடன் பிண்டபட்சி யிறகுபூண்டு
ஒன்றோடொன்று முராய்ந்துக் கொண்டு நெருப்புப்
பொறிபறக்க அதிவேகத்துடன் வருகிற போது நீ
லனானவன்கண்டு எதடா சிறுபிள்ளை புத்தியைக் கா
ண்பித்தாய் பார்த்தாயோ வென்று அதிகோபங்
கொண்டு ரதத்தைவிட்டுக் குதித்து ஆகாயமளாவி
ய ஒருஆலவிருக்ஷத்தின்மேல் பாய்ந்து மடமடவெ
ன்று வேருடன்பிடுங்கி அடியும் நுனியுந் தரித்துப்
போட்டு தண்டாயுதம்போற் பிடித்து காகாவென்
று குசலவர்பேரில் வருகிற திவ்யாஸ்திரங்களைத் த
டாய்த்துக் கொள்ளவே குசலராஜன் லவனைப்பார்
த்து எதடா குரங்கு மகா பலவான்போல காண்கி
றதென்று கோபங்கொண்டு ராட்சதசேனைகள்பே
ரில் லவனும் நீலன்பேரில் குசலராஜனும் முனைந்து
யுத்தஞ்செய்யத்தலைப்பட்டார்கள் அப்போது ஒரு
வெள்ளம் ராக்ஷதர்களும் இருபத்து நாலாயிரங்
கோடிபடைத்தலைவர்களும் வில்லைவளைத்து அநேக
அஸ்திரங்களைவாரிக் குசலர்கள்பேரில் பாணம் விடு
கிறபோது இருபத்தைந்துவெள்ளம் ராக்ஷதர்களு
ம் இருபத்துநாலாயிரங்கோடிபடைத்தலைவர்களும்
எத்தனைபாணம்விடவேணுமோ அத்தனைபாணமெ
ன்று கணக்கறிந்துக்கொள்ளுங்கள் ஒருவருஷகால
த்தில் ஈசானியமூலையிலிருந்து மேகமான தவிடுபட்
டு இடிமின்னல் பெருங்காற்றுடன் குமுகுமென்று
சந்தித்து சந்தித்து பிசகாமற் சாவருஷம் ஒன்னா
ரைநாழிகைபரியந்தம்பொழிந்தா லெப்படியிருக்கு
மோ அப்படியாகராட்சதாள் ஓய்ஒழிச்சலில்லாமல்
குசலவர்கள் பேரிற் பொழிகிறபோது குசலவர்கள்
மிதமில்லாத பாணங்களை ராட்சதாள் விடப்பட்ட
அஸ்திரங்களின்மீதில் பிரயோகஞ்செய்துவிட்டறு
த்து அதிகமாக ஆயிரந்திவ்யாஸ்திரங்களையெடுத்து
வில்லிற்சந்தித்துப் பிரயோகப்படுத்தினார்கள்

அந்ததிவ்யாஸ்திரங்களானது வில்லைவிடுபட்டு
ஒன்றோடொன் றுரய்ந்து நெருப்புப் பொறியைக்
கக்கிக்கொண்டு அதிகவேகமாய் வருகிறபோது ரா
க்ஷதாள் அநேகபாணங்களை மழைபொழிவதுபோ
ல் குசலவர்கள்விட்ட பாணங்திரத்தின்பேரில்விட்
டார்களதுவந்துபாய்ந்து குசலவர்கள்விட்டபாண
ங்களினாலடிபட்டு பூமியில் விழுந்துபோயிற்று அப்
போது குசலவர்களுடைய அஸ்திரமானது ராக்ஷ
தாள்விட்ட அஸ்திரங்களையெல்லாம் டரித்துக்கொ
ண்டு ராக்ஷதகூட்டங்களில் விழுந்து அவர்களுடை
யசிரசைக் கரகரவென்று பூமியிலறுத்துத் தள்ளிவி
ட்டதாம.

அதுகண்டு நீலனானவன் கண்களிரண்டுஞ் செவ்
வானம்போற் சிவக்க காதுகளிரண்டிலும் புகையெ
ழும்ப அதிககோபாக்கினியுடன் கையிற்பிடித்திரு
ந்த ஆலகாலவிஷமரைகிறகிறென்றுசுழட்டிக் குச
லராஜன் வில்லைப்பார்த்து விட்டெறிந்தான விரு
க்ஷமானது சுழன்றுக்கொண்டு வருகிறபோது குச
லராஜன்கண்டு நான்குநாராசபாணத்தை வில்லிற்ச
ந்தித்து பிரயோகப்படுத்தி வருகிற ஆலவிருக்ஷத்
தை நூறு டத்தலாகப்பிளந் தெறிந்து போட்டான்
அதுபோகவே நீலனானவன் கோபமாகி இறந்துகி
டக்கிற ராக்ஷதாளுடைய இரும்புத் தண்டாயுதத்
தைக் கையிலெடுத்துக கொண்டு ஓட்டமாயோடிவ
ருகிறபோது குசலராஜன் ஈ-திவ்யாஸ்திரத்தை வி

ட்டு நீலன் கையில்பிடித்திருந்த தண்டாயுதத்தையும் பஸ்மீகரம் பண்ணிவிட்டான் பின்னும் நீலனனவன் வால்மீகருடைய வனத்தில் அநேகோனகைமூட்டி வளர்ந்திருக்கின்ற ஆலவிருட்சங்களையும் மடமடவென்று பிடுங்க அதைக் குசலராஜன் கண்டு ஏதடா குரங்காளுல் நாம் விடப்பட்ட பாணங்களையும் அறுத்துத்தள்ளி பலமானயுத்தம்பண்ணுகிறது இந்தக்குரங்கை கொல்லவேணுமென்று அநேகபாணங்களை நீலன்பேரில்விடுத்து சரீரத்தைச்சல்லடைக்கண்களாகத் துளைத்துவிட்டானதனால் நீலனுடைய சரீரங்களிலபட்டு ரத்தங்கள் பீறிட்டு தாரைத்தாரையாய் வடியப் பின்னுந் தைரியம் விடாமல் மலைகளை யெடுத்துவந்து போடத் தலைப்பட்டான் அம்மலைகளை யெல்லாம் குசலன் அஸ்திரங்களினுற் பொடிசெய்துவிட்டான்.

அதுகண்டு நீலனனவன் ஏதடா நாம் ராவணன் கும்பகர்ணன் இந்திரஜித்து அதிகாயன் கும்ப நிகும்பன்பமானன் என்று சொல்லப்பட்ட அதிவீரபராக்ரமமுள்ளராட்சதசிரேஷ்டர்களுடனும்யுத்தஞ்செய்தோம் அவர்களும்வரம்பெற்ற அஸ்திரங்களையெடுத்து விட்டார்களவர்கள் விட்ட அஸ்திரத்தினுடைய சுறுக்கு நமக்கிப்படிதைத்து உதிரம் பீறிட்டோடினதுமில்லை இந்தக் குசலனுடைய சுறுக்கு சரீரமெல்லாந் துளைபட்டு ரத்தங்கள்பீறிட்டது பார்த்தாயோ வென்று கோபாவேசனுகி கிவ்வென்று ஆகாயமார்க்கம் கிளம்பி குசலராஜனுடைய வில்லின்பேரில்வந்துகுதித்தானப்படிகுதித்த வானரசேனுபதியான நீலனை குசலராஜனனவன் தனதுவில்லினுலே தட்டினமாத்திரத்தில் ஈ-யோசனை பதிக்காத வழிதூரத்திற் போய்விழுந்தான்.

அதுகண்டு குசலராஜன் நகைபுரிந்து லவனைப் பார்த்து அடாதம்பிலவனே குரங்குடைய சேஷ்டைபோகாமற் போய்விட்டது இப்படி அஷ்டத்தமுள்ள குரங்குகள் எத்தனை குரங்குகள் வந்திருக்கின்றதோ தெரியவாரதென்று ஒருவர்க்கொருவர் பேசிக்கொண்டிருக்கும்போது ராக்ஷதர்களுடைய படைத்தலைவர்கள் குசலவர்களைவளைந்து உன்னை போட்டுக்கொண்டு யுத்தஞ்செய்கையில சேனுபதியான நீலனனவன யோசனை பதிக்காதவழியிற்போய்த்திரும்பி அதிவேகமாய்ப்புறப்பட்டு குசலராஜனை கொல்லவேறுமென்று பிரமாண்டகெதியா யிருக்கப்பட்ட பர்வதத்தைத் தூக்கிக்கொண்டுவந்து குசலராஜனை பார்த்துச் சொல்லுகிறுன் அடாகுசலனே என்கையி லிருக்கிற பர்வதத்தை பார்த்தாயோ இந்த பர்வதத்தை விட்டு உன்னைக்கொன்றுபோடுவேன் அப்படிவாராமுன்னம் அஸ்வத்தை விட்டு எங்களெஜமானுகிய லட்சுமணப்பெருமாளைவணங்கிப்பிழைத்தாலுன்னுயிர்தப்பித்து தாயுடன் பிள்ளையாய்ப் போய்ச்சேர்வாய் இல்லையென்றால் என்கையிலிருக்கிற பர்வதத்தை விட்டுக் கொன்றுபோடுவேன் பாரடா குசலனே என்றான்.

அதுகேட்டு குசலராஜன் கடிந்து சொல்லுகிறுன் அடாவானரனே நல்ல வசனங் கூறினுப் உன்னுடைய வேகமும் பலாபலமுமென்னுடைய கோதண்டத்தின் முன்னளவிற் கண்டு விட்டேன் அப்போதில்லாத பலாபலன் இப்போதிந்த மலையினளவில் உனக்கு வந்துவிட்டதோ நீபோடப்பட்டமலையை அதோடுபோடு பார்ப்போமென்றுனப்படி சொன்ன குசலராஜனுடைய வார்த்தையை நீலன்கேட்டு கடினகோபமுண்டாகி கையிலிருந்தபர்வதத்தை விட்டெறிந்தான அந்தபர்வதமானது குசலராஜன் கண்டு சீக்கிரமாய் தன்னுடையவில்லி லநேகதிவ்வியாஸ்திரங்களைச் சந்தித்துவருகிற பர்வதத்தின்பேரிற் பிரயோகம்பண்ணினுன்.

அந்த திவ்வியாஸ்திரங்களுந் விடுபட்டு வடவாமுகாக்கினியை வாரியிறைத்துக்கொண்டு வந்து அப்பருவதத்தைத் துாம்சம் பண்ணியும் அப்பாணத்தின் வேகமடங்காமல நீலனுடைய நெஞ்சுக்குழியிற்ப்பட்டும் பிடரியி லுருவிப்போய் விட்டது அப்போது நீலனனவன் ஸ்ரீமந் நாராயணரை நினைத்து கண்ணீரானது இருபக்கத்திலும் ஆறுபோடவிட்டு பிராணனைவிட்டான்.

அப்போது ராட்சதப் படைத்தலைவர்கள் சினங்கொண்டு இந்திர பாணஞ் சந்திரபாணம் மேகபாணம் நாகபாணம என்று சொல்லப் பட்ட பாணங்களை யிடைவிடாமற் குசலராஜன்பேரி லதிகமோகமாய்க் குடங்கொண்டு பொழிவது போல பொழியத்தலைப் பட்டார்கள் அந்த பாணங்களும் வில்லைவிட்டுவிடுபட்டு ஒன்றின்மேலொன்றுப் சடசடவென்கிற தொனிகளுடனே காட்டுத்தீயைப்போலகனகனவென்றெரிந்துகொண்டு வேகமாக வருகிறபோது குசலராஜன்கண்டு வாயுவாஸ்திரம் வருணாஸ்திரம பிரம்மாஸ்திரம அக்கினியாஸ்திரம் சூரியாஸ்திரம் சமனுஸ்திரமென்று சொல்லப்பட்ட அஸ்திரங்களையெடுத்து வில்லிற்றொடுத்து பிரயோகம்பண்ணினுர் [illegible]மாய் வடவாமுகாக்கினிக்கு சமதையாய் நெருப்புகளைவாரி யிறைத்துக்கொண்டு படபடவென்கிற சத்தத்துடன் இரைச்சலிட்டுக்கொண்டு ராக்ஷதப்படைத்தலைவர்கள்விட்ட பாணங்களை குசலராஜன்முன் போகவொட்டாமல் வருகிற பாணங்களையெல்லாம் அறுத்துத் தள்ளிப்போட்டு ராக்ஷதப்படைத்தலைவர்கள் பிடித்திருந்த வில்லையு மாபிலணிந்த கவசங்களை யறுத்துவிட்டு

து அதுகண்டு ராட்சதப் படைத்தலைவர்கள மறுவில்லெடுத்து மகாவேக்ராகாரத்துடன் காளிபாஸ்திரம் பர்வதாஸ்திரமும் கருடாஸ்திரமென்று சொல்லப்பட்ட அஸ்திரங்களை வில்லிற்சந்தித்து மந்திராபூதிகள் செய்து குசலராஜனுடைய மார்பிற்கும் தோளிற்கும் தண்டகத்திற்கும் வில்லுக்கும் லக்குபார்த்து பிரயோகம்பண்ணிவிட்டார்கள்

அப்படி - உதுசா-கோடி ராக்ஷசப் படைத்தலைவர்களும் விட்ட பாணங்களானது அண்டாண்டபுவனங்களுமதிர ஆவென்று வாயைத்திறந்துகொண்டு அக்கினியைக் குபீல்குபீலென்று கக்கிக்கொண்டு குசலராஜன் எங்கேயென்று தேடிக்கொண்டு வருகிறபோது குசலராஜன்கண்டு மகா கோபங்கொண்டு தன் தாயார்கொடுத்த நாராயணாஸ்திரந்தை எடுத்து பூசைசெய்து வில்லிற் சந்தித்து பிரயோகம்பண்ணினன் அந்தநாராயணாஸ்திரமானது வில்லில்விடுபட்டு அண்டபகிரண்டமஆயிரத்தெட்டண்டங்களும்குலுங்க அண்டத்திலுள்ளதேவர்களுபயந்தோட அண்டகோளகையுந் திகுதிகென்று பதறியெறிய இரண்டச்சுவர்களுமவெடிக்க ஆங்காரவோங்காரத்துடன் அநேகமாயிரூபங்கொண்டு ராட்சதப்படைத்தலைவர்களவிட்ட அஸ்திரங்களுக்கெல்லாம் பதிலஸ்திரங்களாக ஒன்றுக்கொன்று ஊடுதாக்கி கமளீகாம் பண்ணிவிட்டு வில்லம்புபிடித்த உகச-சதகோடி ராக்ஷதப்படைத்தலைவர்களையும்-உடுது-வெள்ளம்பரிசேனைகளையும் கரகரவென்றறுத்து தள்ளி திருப்பாற் கடலில் ஸ்நானம் பண்ணி குசலராஜனுடைய அம்புறுப்பொதியில் வந்தடைந்தது.

அப்படி உடு - வெள்ளம் யானைத்தேர் பரிசேனைகளும் உசக-கோடிபடைத்தலைவர்களும் மாண்டு உதிரவெள்ள மானது உ - பனைமாமுயரம் ஆறுபோலோடத்தலைப்பட்டது அந்த உதிரவெள்ளத்திலே ஆனைதேர்பரிசேனைகளை புரட்டிக்கொண்டுபோகையில் தலையில்லாத முண்டங்கள் எழுந்து கூத்தாட அந்தமுண்டங்கள் பேரிலே கழுகுகள் கூத்தாடவும் டாகினிசாகினி பூதப்பிசாசுகளும் பிணங்களைபிடுங்கி பொசித்து ராக்ஷதர்களுடைய டமாரபேரிகைகளை கழுத்தில்மாட்டிக்கொண்டு உதிரவெள்ளத்திலோடுகிறதையும ராக்ஷதசேனைகளும் படைத்தலைவர்களும மாண்டு தலைமாடு கால்மாடு தெரியாமல் விழுந்துகிடப்பதைக்கண்ட வானரர்களும் வானரப்படைத்தலைவர்களும் சொல்லிக்கொள்ளுகிறார்கள் அம்மம்மா இவனுடைய காவேகசரவேகந்தானென்ன இவன்வில் பெருமைதானென்ன, இவன புஜபல பராக்ரமந்தானென்ன இவனொ ஒட்டைசானில்லை இவன் பிடித்திருக்கிற வில்லைப்பார்க்கச்சே கெற்பங் கலங்குது ராமோராவணன் கும்பனிகும்பன் அதிகாயன் கும்ப கர்ணன் முதலான ராக்ஷதசிரேஷ்டர்களோடு யுத்தஞ் செய்து செயங்கொண்டோம் அந்தகும்பிலே இப்படிக் கொத்த சரவேகசரவேகத்துடனே பாணம் தொடுப்பாரையுங் காணோம் இவன்முன் சாம்புவந்தர் எப்படி நிர்வகிக்கப்போகிறார்களென்று யோசனையானார்கள் அந்த சமயத்தில உடு-வெள்ளம்வானரர்களும்உசது-படைத்தலைவர்களும மலைவனங்களும் விருக்ஷங்களையும் பிடுங்கிக்கொண்டுவந்து குசலவர்கள் பேரில் யுத்தஞ்செய்துக்கொண்டிருக்கையில இரத்தமழைபெய்ந்து அதனை லட்சுமணர் அங்கதன் சாம்புவந்தர் முதலானவர்கள் கண்டு திமிக்கிட்டார்கள் லட்சுமணனவரைப்பார்த்து சொல்லுகிறார் வாரும் அநுமாரே நாம் அநேகயுத்தங்களில் கைகண்டிருக்கிறோ மந்தயுத்தங்களில் நமக்கிப்படி கொத்த அவசகுனங் கண்டதில்லை இப்போதிந்த குசலவர்கள் யுத்தத்தில் நமக்கு துன்பதுக்கமுடையாளமான சகுனங் காணவேண்டிய தென்ன சொல்லும் அநுமாரேயென்றார் வாரும் இளையபெருமானே சதகண்டராவணன் இவர்கள் மூவருடைய யுத்தத்திலேயும் நம்முடைய சேனைகள்பேரில் இப்படிக்கொத்த ரத்தமழை பேய்ந்த தில்லை மகாலட்சுமி யில்லாத படியால் ஸ்ரீராமருடைய யாகத்துககு பின்னம்வந்தது என்று.மனங் கலங்கினவராய் திசைகாலங்களையும் உணர்ந்த அனுமார்சொன்னார்.

அதைக்கேட்ட லட்சுமணர் பதிலுத்தரவு சொல்லாமல் மௌனமாயிருந்துவிட்டாரப்போது குசலராஜனானவன் பிரசண்ட கோதண்டத்தில் நாராசபாணங்களை மிதமில்லாமற் பிரயோகம் பண்ணிவிட்டாரந்தபாணங்களும் வில்லில் விடுபட்டு-ா-கூ-ா-கோடிசங்கம் மகாசங்கமென்று சொல்லப் பட்ட கணக்கில்லாத விதமாய் நாகசற்பம்போல சீறிக்கொண்டுவந்து வானரதண்டிற்புகுந்து கொல்லத் தலைபட்டது வானரர்களப்படி விழுகிறார்களென்றால் கால்வேறு கைவேறு தலைவேறு குடல்வேறு சதைவேறு எலும்புவேறாகவிழுந்து உதிரவெள்ளம் ஓடிற்ற இப்படி வானரர் மாண்டுபோகவே குமுதன் சாம்பன உலமுன் கெந்தமாதனன ஆரகவவந்து வால்கேசரி அகம்பன் அந்த அ-வானரப்படைத்தலைவர்களு மகாகோபத்துடனே பெருக்கொருமலையைப்பிடுங்கி குசலன் தலையை உடைக்கிறோமென்று குசலவர்கள முன்னின்றுக் கொண்டு அடாசிறபிள்ளாய் பதறுதே ஒருவசனஞ் சொல்லுகிறோம்கேள் நீமகாசிறுபிள்ளை உன்னோடு யுத்தம்பண்ண எங்களுக்கு ஞாயமேயில்லை ஆகையால் எங்கள் அஸ்வத்தைவிட்டு லட்சுமணப் பெருமானை வணங்கிச்சேவித்துக் கொண்டால் நல்லவாகளென்று பிரியவசனத்தோடு சொன்னார்களதனைக்கேட்ட குசலராஜன அந்த அ-வானரப் படைத்தலைவரைப்பார்த்து குலுங்க நகைத்து ஒருவசனம சொல்லுகிறு

ண்டா வானரங்களே நல்ல தந்திரஞ்சொல்லி தப்பித்துக் கொண்டு போகவந்தீர்கள் ஒருசேவகரென்று சேவகத்தில்வைத்துக்கொண்ட ராமன் உங்களினும் பலவானாயிருப்பானோ நீங்கள் தப்பித்துக்கொண்டுபோகிறோமென்றாலும் நான் விடுவேனென்று நம்பவேண்டாம் நீங்கள் ஒன்றாகக்கூடி வந்து சபதவார்த்தையை பேசிக்கொண்டு அந்தமலையை ஏதோ போடுங்கள் வானரங்களேயென்றான்.

அப்படிகூறிய குசலராஜனுடைய வார்த்தையை கேட்ட வானரவீரர்கள் மகா கோபங்கொண்டு அட்டகாசஞ் செய்து குசலவன்பேரில் தங்கள் கையிலிருந்த மலையை எறிந்துவிட்டு ஆகாய மளாவிய விருட்சங்களை பிடுங்கி அடியும் நுனியுங்கொய்து நடுதண்டாயுதம்போலே கையில்பிடித்துக்கொண்டு வருமுன்னமே கிறுகிறவென்று சுழன்று வரும் மலையை குசலராஜன்பார்த்து ௮-திவ்யாஸ்திரமெடுத்து விடுத்துவருகிற மலையை தூளிதப்படச் செய்து வில்லிலநேக பாணங்களை சந்தித்து வருகிற வானரவீரர்கள்பேரிலே ஐப்பசி கார்த்திகை மாதத்தில் ஈசானியமூலையிலிருந்துகிளம்பிட்டு இடிமின்னல் குமுறலுடன் மழைபெய்தால் எப்படியோ அப்படியோ பாணங்களை பொழிந்து விட்டான் அதுவுங் காலகோட்டி விஷம்போலவே சீறிக்கொண்டு வந்து வானரப் படைத்தலைவர் கையிலிருந்த தண்டாயுதத்தையும் பொடியாக்கிவிட்டு அவர்கள் பேரிலுஞ் சுருக்குசுருக்கென்று தைத்து குருதிகள் பீறிட்டோடச்சே அதுகளையெல்லா முதறிப்போட்டு இறந்து கிடக்கிற ராட்சதர்களுடைய கத்திகேடயங்களை எடுத்துக்கொண்டு முனைக்கு பின்னுக்கு முப்பத்திரண்டுக்கும்பாய்ந்து குசலராஜனை வெட்டவேணுமென்று ஓடிவரும்போது குசலராஜன் கண்டு நாலிரண்டெட்டு மண்டலங் கத்திரிபாணமெடுத்து விடுத்து கத்திகேடயம் பிடித்திருந்த கையை யறுத்துத் தள்ளினான் இவர்களெல்லாம் பூமியில்விழவே ௮-வானரரும் கோபங்கொண்டவராய் எழும்பி குசலராஜனை உதைத்துக் கொல்லவேணுமென்று வருகிறதை குசலராஜன்கண்டு அவர்களுடைய சாமார்த்தியமெல்லாம் அம்புபட்டுஞ் சாகாதிருக்கிறார்கள் நல்லது ஆகட்டுமென்று நாலிரண்டெட்டு அர்த்தசந்திராஸ்திரமெடுத்து வானரப்படைத்தலைவர்கள் சிரங்களையறுத்துத்தள்ளினான் அவர்கள்மாண்டுபோகவே வானரதண்டில் கூச்சலெழும்பத் தலைப்பட்டது.

அப்போது இடும்பன் பனசன் திருமுகன் மதங்கன் மக்கரன் கும்பன் சாவலி அனுமானமுதலான படைத்தலைவர்களும் மகா கோபத்துடனெழுந்து பெருங்கொம்புவிருட்சங்களைபிடுங்கிக்கொண்டு அடியும்நுனியுந்தரித்துவிட்டு கையில்பிடித்துக்கொண்டு ஓடிவரும்போது குசலராஜன் கண்டு அதிககோபங்கொண்டு வில்லிநிறுத்தி அநேகபாணங்களைச் சந்தித்து பாறிசொரிவதுபோல ஓய் ஒழிச்சலில்லாமல் ஒருஜாமபரியந்தம் சமயாரியாய்ப்பொழிந்து வானரப்படைத்தலைவருடைய சரீரமெல்லாஞ் சல்லடைக்கண்களாகத் துளைப்பட்டு குருதிகள் தாரைதாரைதாரையாய்ப் பீறிட்டோடிவழிந்து பூமியில்விழுந்து எத்தனமையாயிருந்ததென்றால் முன்னால் இந்திரசித்தானவன் ராவணன் சம்மாரத்தின் ௪-நாள்யுத்தத்தில் ௨௪-படைத்தலைவர்பேரிலுமுணர்ந்துபாணங்களைவிட்டு சரீரங்களை சல்லடைக்கண்களாக எப்படி துளைத்துவிட்டானோ அப்படியிருந்தது குசலராஜனுடைய அஸ்திரங்களினால்வுதையுண்ட வானரப் படைத்தலைவர்களுடைய சரீரங்கள் தளர்ந்து கைகால்ஓய்ந்து நடக்கச்சிவனற்றுசுவாசமின்றி ஸ்ரீராமா ரகுநந்தனாவென்று வாய்விட்டலறிசாவுக்குச் சமதையானவர்களாய் பூமியில் விழுந்து மூர்ச்சையடைந்தார்கள்.

அதுகண்டு குசலராஜன் சந்தோஷமாய் இன்னுஞ்சிறிது வானரப்படைத்தலைவர்களும் வானராளுமிருக்கிறார்கள் அவர்களையுங்கொன்று ராசாவாய்வந்திருக்கிற லட்சுமணரையுங்கொன்று அஸ்வத்தைக் கொண்டுபோகவேணுமென்று மனதிலெண்ணினவனாய் முன்னணியில்நின்று வில்லிலநேகபாணங்களை சந்தித்துவிட்டு கொல்லுகிறபோது எப்படிவிழுகிறார்களென்றால் கால்வேறுகைவேறுஇடுப்புவேறாகவிழுந்து உதிரவெள்ளமானது ஆறுபோல ஓடினதாக அப்போது சிலவானரர்கள் பாணங்களினால் காயம்பட்டு முன்வைத்தகாலைபின்வைத்து ஒருவருடன் ஒருவர் சொல்லாமல் ஓடினார்கள் அவ்வேளையில் சிலதுவானரப்படைத்தலைவர் அவர்களைஓடவொட்டாமல் மடக்கிக்கொண்டு சொல்லுகிறார்

அப்போது வானரர்களே முன்ராட்சதர்களை ஜெயித்து கீர்த்திபெற்றகீர்த்தியை இன்றோடு தேவர்கள் நகைக்க அபகீர்த்திபெற்றோம் இப்போது குசலவனை ஜெயிக்க சாமார்த்தியம் உங்களுக்கில்லையோ ரோஷ பௌருஷந்தான் உங்களுக்கில்லையோ நாமெல்லாரும் ஒருமுகமாய்க்கூடி குசலவர்களை ஜெயிக்கக் கூடாதோ ஓடினாலும் ராமத்துரோகம் விடாதே பயப்படாதே நீங்கள் வாருங்களென்று ஒன்றாய்க்கூடி மலைகுன்று விருக்ஷங்களை பிடுங்கிக்கொண்டு குசலன்பேரில் காகாவென சுழட்டி விட்டார்கள் அதனைக்கண்டகுசலராஜன் தனுசிலநேக அஸ்திரங்களை சந்தித்து சரசரவென்று விட்டு மலைகுன்று விருக்ஷங்களை தவிடுபொடியாக்கிவிட்டு அவர்களையுங்கொன்று இரத்தாரோடும்படி செய்துவிட்டான்.

அதைக்கண்ட இளையபெருமாளாகிய லட்சுமணர்சிந்தாக்கிராந்தராய்மகாகோபத்தோடு செவ்வானம்போலிருகண்களும்சிவக்ககையிலிருந்துவில்லை நெறநெறவென்றுகடித்துமீசைபடபடவென்றுதுடிக்கஉக்கிரத்துடன் சாரதியை அதட்டினமாத்திரத்தில் ரதமானது குசலராசனமுன் வந்துவிட்டது அதனைகண்டவானரசிரேட்டர்களாகிய அநுமார் அங்கதன்சாம்புவந்தர் முன்னமேவந்தடிபணிந்துகைகட்டிவாய்

பொத்திருந்த வணக்கபொத்தி மிருந்தவணக்கத்துடன் நின்றுசொல்லுகிறார்கள் கேளும் இளையபெருமாளே நீங்களெல்லாமிருக்க எந்தப்படைமுழுகிப்போச்சுதென்றுவில்லெடுத்தீர்பாலன்பயப்படுவான் வில்நாரியைத் தளர்த்திவிடும் எதிரிமீதில்ராமபாணந்தொடுத்தாப்போல் நாங்களிருக்க தாங்கள்போவது தகுதியல்லவில்லுஞ் சற்றுநேரம் தேவரீர்வேடிக்கைப்பார்த்துக்கொண்டிருங்களென்று அனுமார் அங்கதன் சாம்புவந்தர்சொல்ல லட்சுமணர்கோபமீறி வில்நாரியைத்தளர்த்தினர்.

இவையெல்லாம் குசலராஜன்கண்டு நல்லதாசட்டுமென்று பல்லைநெறநெறவென்று கடித்து வில்லைக் குமுகுமுவென்று குணத்தொனி பண்ணி நின்றான். அந்த சத்தமானதை அனுமார் அங்கதன் சாம்புவந்தன்சகலராஜாக்களும் மந்திரிபிரதானிகளுங்கேட்டு மனதுதிடுக்கங்கொண்டார்கள் லட்சுமணரும்குணத்தொனிபண்ணினசத்தங்கேட்டு ஆச்சரியப்பட்டு நமது தமயனுடையகோதண்டமென்று அனுமார் அங்கதன்சாம்புவந்தருக்குக்காண்பித்து இந்தப்பிரசண்டகோதண்டத்துக்குமுன்னேசூலபாணியாய் விளங்கப்பட்ட காலகண்ட திரிநேத்திரமுடையவர் பூதப்படைகளுடன் சூலாயுதங்களுடனே எதிர்வந்து முன்னின்றுமுன்னிற்கமாட்டார்கள் மகாபலம்பொருந்திய வயிரகோதண்டம் இந்தக்கோதண்டத்தினுடையபெருமையைச்சொல்ல என்னால் முடியாதுயுலகமுழுகிப்போகிறகாலங்களிலேயும்இந்தப்பிரசண்டகோதண்டத்தைஎடுக்கிறதில்லை இப்போதிந்தபிரசண்டகோதண்டத்தையாரெடுத்து உலகத்தை முழுகப்பண்ணினார்களோ தெரியவராது இந்தப்பூலோகத்து நரஜென்மங்கள் யென்னபாவம் பண்ணினார்களோ கடக்கொள்ளாத யானைதேர்பரிவாரங்களை க்ஷணநேரத்தில் உதிரவெள்ளத்தில்கலந்துவிட்டான்.

இவனுடைய சேவகந்தானென்ன அந்தப்பரஞ்சுடராயிருக்கப்பட்ட ராமபிரமத்திற்கு பிடிபடுமேயல்லாமல் மற்றப்பேர்கையில்பிடிக்கப்பலன்போருது இதிலே தெரிந்துக்கொள்ளும் அனுமாரேயென்றார் லட்சுமணப்பெருமாளானவரதைக்கேட்ட அனுமார் அங்கதன் சாம்புவந்தர் முதலாகிய ராஜாக்களும் மனது திடுக்கிட்டு முன்வைத்தகாலை பின்வைத்தார்கள் அதைக்கண்ட லட்சுமணப்பெருமாள் தன்தமயனாகிய ஸ்ரீராமபிர்மத்தை மனதிலெண்ணினவராய்மகாதைரியங்கொண்டு அனுமார் அங்கதன்சாம்புவந்தரைப்பார்த்துச்சொல்லுகிறார் வாரும்வானரசிரேஷ்டர்களே ஸ்ரீராமாவென்றுதுதிபண்ணிதைரியத்துடனின்று குசலவன் வில்லை லகுவிற் பிடித்துக்கொள்ள வேணும் அவன சிறுபிள்ளையான லவனைக்கைப்பிடியாகப்பிடிததுகொள்ளவும அவனுக்கோயானைதேர் பரிவாரங்களில்லை பாதசாரியாய் நின்று யுத்தம்பண்ணுகிறான் அப்படி பண்ணுகிறவன் பேரில்வில்லெடுத்து யுத்தம்பண்ணினேனேயானால் தேவர்கள் நகைப்பார்கள் ஸ்ரீராமபிர்மந்தான் என்ன சொல்லுவாரென்றார் அதைக்கேட்டு அதிகபக்திவிநயத்தோடு லட்சுமணரைநோக்கி அனுமார் சொல்லுகிறார்

சின்ன பாம்பினாலும் பெரிய தடிகொண் டடிக்கவேண்டும் அவர்களைப்பார்த்தால் ஸ்ரீராமரைப்போலவடிவழகும் நடையுமாயிருக்கிறார்கள் அந்தச்சிறுபிள்ளைகளுடைய வாய்விசேஷத்தைக்கேட்டு யுத்தம்பண்ணுவோம் இனி ஒருக்ஷணப்பொழுதில் கண்டறிந்துவிடுகிறேனென்று லட்சுமணரைச்சேவித்து குசலராஜன்முன்னுக்கு அங்கதன்சாம்புவந்தர் திரும்பினார்கள்

அதைக்கண்ட குசலராஜன் தம்பியாகிய லவனை நோக்கி ஒருவசனஞ்சொல்லுகிறான் வாரும்தம்பிலவனே அதோவருகிற மூன்றுகுரங்கைப்பார்த்தாயோ ரதத்தைநடத்தி வந்தராஜனை குறுக்கேவந்து மடக்கிக்கொண்டு இரண்டொரு விசேஷஞ்சொல்லி நிறுத்திப்போட்டுத்தாங்களேசாமார்த்தியரென்று அதிகவேகத்தோடு வருவதைப்பார்த்தால் நம்மையெதிர்த்து யுத்தம்பண்ணிக் கைப்பிடியாகப் பிடித்துக்கொண்டுபோவார்கள்போற்காண்கிறது முன்வந்தெதிர்த்து மாண்டுபோனகுரங்குக்கெல்லாம் யெஜமான்போற்காணுகின்றது இந்தமூன்றுகுரங்குகளுடனே நான்யுத்தம்பண்ணுகிறேன் பின்னேயிருக்கிற லட்சுமணன்பேரிலும் சேனைபேரிலும் நீயுத்தஞ்செய் இந்தவேளை யென்றுடனின்று யுத்தம்பண்ணவேண்டாம் சதுதியில் ராட்சசப்படைகளை வெல்லவேண்டுந் தம்பியென்று சொல்லியவார்த்தையை லவன்கேட்டு வாருமண்ணாவே செங்குரங்கு கருங்குரங்கு ஒரு குட்டக்குரங்குமாக வருகிறதைப்பார்த்தால் நீர்சொன்னபடியே செய்வார்போற்காணுகின்றதாகையால் தாங்கள்மிகுந்த சாக்கிரதையுடன் நின்று யுத்தம்பண்ணுமண்ணாவென்று சற்றிடைந்துபோய் யுத்தஞ்செய்துக்கொண்டிருந்தான.

அப்போது அனுமார் அங்கதன் சாம்புவந்தர் இம்மூவரும் அதிகவேகத்துடன்வந்தெதிரில்நின்று குசலவர்களைப்பார்த்து அனுமார் ஒருவசனஞ்சொல்லுகிறார் தம்பிசிறுபிள்ளைகளா காட்டுக்கிழங்குகளைத்தின்று சுனைநீர்குடித்தும் பாரைமேல்படுத்துக்கிடக்கிறகுரங்குகள் உங்களையென்னபண்ணினதென்றுஇப்படிக்கொன்று பிணக்குவியலும் ரத்தப்பிர

ளையமுமாகவிட்டீர்கள் அதிருக்கட்டும் நீங்கள்யார் உங்களைபேரென்ன உங்கள் தாய்தந்தைபேரென்ன சொல்லுந்தம்பி யென்று கேட்டதற்கு குசலராஜன் தம்பி லவன்முகத்தையேறப்பார்த்தான் அந்தஜாடையறிந்தவனாய் அருகில்நெருங்கி அநுமாரைப்பார்ந்தொருவசனஞ்சொல்லுகிறான் அடா குரங்கே யென்னவார்த்தைசொன்னாய் காட்டுக் கிழங்குகளைத்தின்று சுனைநீர் குடித்துப் பாறைமேல்படுத்துக்கிடக்கிற குரங்குகள்யென்னபண்ணிற்றென்றுகேட்டாய் ஆனால் சொல்லுகிறேன் கேள் அயோத்தியாபுரியையாளப்பட்ட ஸ்ரீராமர் யாகம்பண்ணவேண்டி அஸ்வத்தைவிட்டார் அந்தஅஸ்வமானது எங்கள்வனத்தில்வந்தபடியால் அதை நான்பிடித்துக்கட்டினேன் அந்தச்சமாச்சாரங்கேட்டு சத்ருக்கன் தன்சேனைகளைக்கூட்டிக்கொண்டுவந்து எங்களுடனெதிர்த்து யுத்தம்புரிந்து அவனும்அவனுடையசேனைகளும் மாண்டுவிட்டார்கள்.

அந்தச்சமாச்சாரம் ஸ்ரீராமர்கேட்டு அவன் தம்பி லட்சுமணனை அனுப்பினாலும் அவன்கையில் எங்கள்பிராணனையாகிலுங் கொடுக்கிறோம் அல்லது எங்கள் கையில் அவனாகிலுமிறக்கிறான் அப்படிஞாயமிருக்க நீங்களார் உங்களையுத்தத்திற்கழைத்ததார் சோளத்தட்டில்நெருப்புப்பற்றியெறிந்தவுதிர்த்தாப்போல் நீங்களேன்வீணில்வந்துமடிகிறீர்கள் இனியாகிலும் நீங்களிருக்கும் காட்டகத்தில் தப்பிப்பிழையுங்கள் எங்கள்முன்னில்லாதிர்கள் நின்றீர்களே யானால்சிரசுபோய்விடும் காட்டில் வாசமபண்ணப்பட்டகுரங்குகளோ எங்கள்தாய்தந்தைபேரைச்சொல்லுகிறது எங்கள்பேர் குசலவர்களென்று சொன்னவிசேஷத்தைக்கேட்ட அநுமாருக்கு இரண்டுகாதிலும் புகைகளெழும்ப சரீரமாதியந்தமும அக்கினிபற்றியெறிய அதிககோபத்தோடும மண்டியிட்டு குசலவர்களைப்பார்த்து ஒருவசனஞ்சொல்லுகிறார்.

அடா குசலவர்களே என்னை யறிவீர்களோ நீங்கள் சிறுபிள்ளையான படியினால் அறிய மாட்டீர்கள் அரிஹரப்பிரம்மாதிகள் என்னைக்கண்டால் நடுங்குவார்கள் காலனுமொடுங்குவான் இந்திரனும் பயந்தோடுவான் அப்படி சகலதேவர்களும வாய்வுபுத்திரன் ஸ்ரீராமருடைய சேவகன் அனுமந்தனென்றறிவார்கள் அப்படிப்பட்ட யென்னையென்னாமல் சிரசைத் துணிப்பேனென்றசொன்ன வாயைக்கிழித்தெறிவேன் நீங்கள் சிறுபிள்ளைகளென்று மனம்பொறுத்தேன் வீணிலேன் ஆவியை முடித்துக்கொண்டிறந்துபோகிறீர்கள் உங்கள் தாய்தந்தைபேரைச்சொல்லி எருவிற்குதிரையைவிட்டுவிட்டு லட்சுமணப்பெருமாளை சரணமடைந்தால் பிழைப்பீர்கள் அல்லாவிடில் என்கைக்குத்தினால் உங்களிருவருயிரையும் எமலோகமெட்டிப்பார்க்கச்செய்வேன் அப்படி வாராதபடிக்கு நடந்துக் கொள்ளுங்களென்று அஞ்சனாதேவி குமாரன்சொலலிய வசனத்தைக்கேட்டகுசலராஜன் குலுங்கநகைத்து சொல்லுகிறான் ஓகோ அனுமந்தா கேளு சூட்ச மறியாதவனுக்கு மோட்சமில்லையெனபதுபோல காட்டில்வாசம்பண்ணப்பட்ட குரங்குகளுக்குத் திரிமூர்த்திகளும் பயந்து எதிர்நின்று போராடமாட்டாரென்று சொல்லிச் சூட்சத்தில் வெல்லவந்தாயே அப்படி திரிமூர்த்திகளைவென்ற சாமர்த்திய முண்டானால் என்பேரில் ஏதோகாட்டுபார்ப்போமென்றான் அதனைக்கேட்ட அநுமார் சொலலுகிறார் அடா குசலனே என்னைக் காட்டில் வாசம்பண்ணப்பட்ட குரங்கென்றும் பலத்தை காட்டென்று மல்லவோ சொல்லுகிறாய் ஆனால் என்பலத்தைக் காட்டுகிறேன் அதோதெரிகிற அந்தபர்வதத்தை நான் இங்கிருந்தபடியே யழைப்பிக்கிறேன்பாரென்று தன்னுடையவாலைவளத்தி அந்தபர்வதத்தை மூன்றுசுற்றாகச்சுற்றிநெருக்கியிழுத்தமாத்திரத்தில் பர்வதம் அருகில்வந்தவுடனே தன்வாலைச்சுருக்கிக்கொண்டார்.

அதுகண்டு குசலராஜன் தம்பி லவனைப்பார்த்துச்சொல்லுகிறான் இந்த அநுமான் ஜெகஜாலவித்தைகற்றவன் தலைவிருந்தமலையை வாலைவிட்டுநெருக்கி யிழுத்ததை நாம் கண்ணினாலேகண்டோம் நம்மையுமிப்படிதான் வாலைவிட்டிழுப்பானோ என்னமோதெரியவில்லை முன்வந்த குரங்குகளிலேயும் இவன் மந்திரங்கற்றவனைப்போலுமிருக்கின்றான் நாம் அஜாக்கிரதையா யிருந்தால் வாலைவிட்டுக் கட்டிக்கொண்டுபோவான்போற்காண்கின்றது பாணத்தையெடுத்துவில்லிலேபூட்டிக்கொள்ளுந் தம்பியென்றான் அதுகேட்டு லவன்சொல்லுகிறான் வாரும் அண்ணாவே அப்படி ஜெகஜாலவித்தை கற்றவன் என்னமோசம் பண்ணுவானோ முன்பின்பாராமற் பாணப்பிரயோகம் பண்ணுகிறதே காரியமென்றான்.

அதுகேட்டு அங்கதன் சொல்லுகிறான் வாரும் தம்பி குசலனே இளங்கன்று பயமறியா தென்பதுபோலப் பெரியோர்கள்சொன்னவார்த்தையை சிறியோர்களா யிருக்கப்பட்டவர்கள் கேழ்க்கவேணும் அவர் ஆரென்றுஇப்படிச்சொல்லுகிறீர், ஆயிரத்தெட்டண்டத்தையும் கவிழ்த்துப்போடவும் இந்தப்பூமியைப்பிடுங்கிச் சமுத்திரத்திற்போடச்சொல்லும் போடுவார் இந்தலோகத்தையெடுத்துச்சுழட்டியெறிவார் அவர்யாருக்கும் பயப்படார் ஸ்ரீராமமூர்த்

இயின்னழியன் அனுமார் எப்படிசொல்லுகிருரோ அப்படியே கேளுங்கள் தம்பியென்முன்.

அதுகேட்டு குசலராஜன் நகைத்து ஒருவசனஞ் சொல்லுகிருன் அடா வாணரங்களே தங்கள் பெருமையை தாங்களுக்குள்ள சொல்லிக்கொள்ளுகிறீர்கள் அந்தப்பெருமையும் பாக்கிரமமும்யென்முன்னே சற்றுநேரங்காண்பிக்கலாகாதோ நாங்கள்சொல்லப்பட்ட விசேஷமெல்லாங்கூத்தாடி சிலம்புபோலாச்சுது இப்படிக்கொத்த சொற்களெல்லாம் உங்களுக்குபார் கற்பனைபண்ணினது ஆனாலும் தியாகங்கொடுக்கிறயிடத்தில் உங்கள் பெருமைகளையும் பிரதாபத்தையும் சொன்னால் தியாகங் கொடுப்பார்கள கையூரல்நீர யுத்தம்பண்ணுவார் லொருவருமில்லையென்று குசலராஜன் சொன்னன்.



அநுமாருக்கும் குசலராஜனுக்கும் யுத்தம்.

சந்த விருத்தம்.

வஞ்சமலர்க்கா வேமதால்மிகுகாளையாகித்
அஞ்சியகேலனைக்கண்ட சொலத்தருதேர்ப்பாகன்
வெஞ்சமர்பூமியை விட்டெதஞ்சொலமேலானும்
அஞ்சனைபாலனெனும் அனுமானும்நடந்தானே.

வசனம்.

அதுகேட்டு அனுமார் சாம்புவந்தரும் அதிககோபமுண்டாகி அங்கதன் முகத்தைப்பார்த்தார் அதுகண்டு அங்கதன் அனுமார்பின்னலிருந்த பர்வதத்தை செண்டுபோலெடுத்து குசலன்பேரில் விட்டெறிந்தான் அந்தபர்வதமானது சுழன்றுவருமுன்னமேகுசலராஜன் ஒருவச்சிராயுதத்தையெடுத்து பர்வதத்தைப் பொடிப்பொடியாய் உதைத்துவிட்டான் அதுகண்டு அனுமார் பூமியிலேகிடக்கிற தெண்டாயுதங்களையெல்லாம்பொறுக்கிதன்னிடத்திலொருபர்வதம்போல குவித்துக்கொண்டார் அதுகண்டு அங்கதன் பிர்மாண்டமதிபாயிருக்கப்பட்ட ஆலவிருக்ஷத்தை மடமடவென்று பிடுங்கி அடிமனியையுங்கொய்து கையிலே பிடித்துக்கொண்டு கிறுகிறுவென்றுசுழற்றி குசலராஜன்பேரில் விட்டெறிந்தான் அதுகண்டுகுசலராஜன் நாலிரண்டெட்டு குருவளிபாணம்விட்டு அதை தும்சம்பண்ணிப்போட்டான் அதுகண்டுஅங்கதன் லவன்பேரிலெதிர்த்து யுத்தம்பண்ணிக்கொண்டிருந்தான்.

அப்போது அனுமார் இந்தக் குசலராஜனுடைய சாமார்த்தியத்தைப் பார்க்கவேணுமெனறிதாய் தன்னண்டை பர்வதம்போலக் குவித்திருக்கிற தெண்டாயுதங்களையெடுத்து க-டி-ா-து-டு-சக்கம் மகாசக்கம் அற்புதம்ிற்புதமென்று கண்ணிமையோடிமைகொட்டு முன்னமே வாலினாலும் வாரிவாரிகுசலராஜன்பேரில்விட்டெறிந்தான அப்போதுகுசலன்-க-டு-ா-து-இப்படியாக பாணங்கள்விட்டு வருகிற தண்டாயுதத்தையெல்லாம உடைத்தெறிந்து இடைவிடாமல் அஸ்திரங்களைவிட அனுமார்இவன்இந்திரசித்திலு மகாசாமார்த்தியனு யிருக்கிறுன் அவன்மாய்கைகுதெரிந்தவன் இவனுக்கு மாய்கைகுதெரியாது நிலமையுடனேநின்று யுத்தம்பண்ணுகிறுன இவனுடனேநாம்கையூரல்நீரயுத்தமபண்ணவேணுமென்று தன்பேரில் வந்துவிழுகிற பாணங்களையெல்லாம் ஒருநொடியிலுதறிவிட்டுகுசலராஜன் வில்லின்பேரில்வந்து சாய்ந்தார் அதுகண்டுகுசலராஜன் அனுமாருடையசிரசைப்பார்த்து வில்லினலடித்தான் அந்த அடிஅனுமாருடையசிரசில்பட்டுகபாலந்திறந்து உதிரவெள்ளமோட ஸ்ரீராம ராமாவென்றுவாய்விட்டலறி அடித்துமோதி பூமியில் விழுந்து மூர்ச்சையடைந்தார்.



சாம்புவந்தருக்கும் குசலராஜனுக்கும் யுத்தம்

சந்தவிருத்தம்.

அண்டமளைத்துமதிரிடவந்திடுமநுமந்தனும்
கண்டகனுந்திபகணைவலியாற்கணைபோட்டோய
விண்டுவெழுந்திடுபுவனென்றிடுவல்லோன்றேர்
கொண்டுபழங்கணைபெய்துகொடுஞ்சமர்செய்தானே

வசனம்.

அதுகண்டு தேவர்களெல்லாம் துயரப்பட்டார்கள் சாம்புவந்தர்கோபமாகி சேற்கெண்டைபாய்ந்து வருவதுபோல்கைமுரிக்கிகொண்டோடிவந்தார் அவ்வேளையில்குசலராசன் இந்தக் கிழக்குரங்கினுடையசாமார்த்தியத்தைப்பார்ப்போமென்று வில்லையெடுத்துப்பத்துநாராசபாணங்களைச்சந்தித்துவிட்டு சாம்புவந்தரைநோவெய்தான் அந்தநாராசபாணங்களைசாம்புவந்தர் பிடுங்கி யெறிந்துபோட்டு இறந்துகிடக்கிறராட்சதர்களுடையசந்திராயுதத்தையெடுத்துக்கொண்டு குசலராஜனையும் அவன்வில்லையும் ஓரேவீச்சினுலேவெட்டி யெறிந்து போடுகிறேனென்று மகாகோபத்துடனே ஓடிவருகிறபோது குசலராஜன்கண்டு எதடா குரங்கானுஞ் சந்திராயுதத்தை யுருவிக்கொண்டு ஓடிவருகிறதென்று மகாகோபாக்கினியுடனே நாலுதிவ்யாஸ்திரங்களையெடுத்து கவெடுத்து வில்லிற்றொடுத்து விடுத்து சந்திராயுதத்தை இரண்டுதுண்டாயுடைத்துப்போட்டான்.

அதுகண்டு சாம்புவந்தர் ரணக்களத்திலபுகுந்து ரதங்களைவாரிகுசலராசன்பேரில்விட்டெறிந்தார் அப்போது குசலராஜன் ஒருதிவ்யாஸ்திரமவிட்டுச்சுக்கைக்காய் உடைத்தெறிந்தான் அதன்பின்புஇறந்துகிடக்கிறயானைகுதிரைகள்வாரிவாரிக்குசலராஜன்பேரிற்போடவே குசலராஜன ௰-திவ்யாஸ்திரங்களைவிட்டுதுண்டுதுண்டாகவெறிந்துவிட்டான் அதுபோகவேசாம்புவந்தர் ராட்சதபிணங்களை வாரிவாரிவிட்டெறிந்தார் அதுகண்டு குசலராஜன் கோபங்கொண்டுவருகிற ராட்சத பிணங்களையெல்லாம் பாணங்களைவிட்டு அறுத்துப்போட்டு ரு-நாராசபாணங்களையெடுத்து வில்லிலேசந்தித்துவிட்டு சாம்புவந்தரைமிகவுங்நோகச்செய்தான் அதனுலேசாம்புவந்தர்கொண்டு ௰-நாராசபாணங்களைக்கையினலும்பிடுங்கிகுசலராஜன்பேரில் விட்டெறிந்தார் அதுகண்டு குசலராஜன் எதடாகிழக்குரங்குநம்மிடம்பாணத்தைபிடுங்கி நம்முடையபேரிலேவிட்டெறிந்தது கல்லது ஆகட்டுமென்று வில்லிலநேகபாணத்தைச்சந்தித்துஒன்றின்மேலொன்றாய் மழைபொழிவதுபோற் பிரயோகம்பண்ணிவிட்டான் அந்தபாணங்கள் வில்லைவிட்டு விடுபட்டு சடசடவென்கிற தொனிகளுடனேயும் அக்கினியானது பக்திகொண்டு வருவதுபோலும் அதிவேகமாய் வந்து சாம்புவந்தர் பேரில் பாய்ந்து சரீரத்தை ரத்தமயமாக்கிவிட்டது அதனுலேசாம்புவந்தர் மிகவும்நொந்துகைகாலுதறிக்கொண்டு ஸ்ரீராமாராமாவென்று அடியற்றமரம்போல்முடியற்றுப் பூமியில்விழுந்து மூர்ச்சையடைந்தார்.

அதுகண்டு குசலராஜன் கருங்குரங்கு செங்குரங்கு மாண்டுபோயிற்றென்று அதிகசந்தோஷமடைந்து ராட்சதப் படைத்தலைவர்களின்பேரில் வருகிறபோது லட்சுமணர்கண்டு கண்கள்செவ்வானம்போற்சிவக்க காதுகளில் புகைகளெழும்ப மீசைகள்துடிக்க பல்லைநெறநெறவென்றுகடித்து வில்லையெடுத்து நாணிபிகிந்து சிலபாணங்களைத்தொடுத்து சாரதியை அதட்டிரதத்தைகுசலராஜன்முன்னுக்குக் கொண்டுநிறுத்தி குசலராஜனுடையமுகத்தைப்பார்த்து இப்பிள்ளைதானென்று அதிகசந்தோஷமாகி ஆனந்தவெள்ளத்தினில் மூழ்கினவராய்கையில்பிடித்திருந்தவில்லை தன்தேரின்பேரில்வைத்துவிட்டு சும்மாயிருந்துவிட்டார்.

அப்போது குசலராஜன் எதடா ரதத்தைநடத்திக்கொண்டு நமதுமுன் வந்தாகள் நம்மைக்கண்டு பயந்து வில்லை ரதத்திலவைத்துவிட்டு சும்மாயிருந்தால் நாம்சும்மாவிடப்போகலாமோ நம்முடையதாயார்சொன்னபடி வந்தபேரையெல்லாங்கொன்று ஜயங்கொண்டுபோகவேணுமென்று மனதினுலகருதிவைக்க லட்சுமணரைப்பார்த்து ஒருவசனஞ்சொல்லுகிறான் ஓராசனேஎன்னைக்கண்டவுடனேபயந்தநீதியோ நான்சும்மாவிடுவேனோ இவ்வளவு சாமர்த்தியமிலாதபேர் யாகஞ்செய்ய குதிரையைவிடலாமா முகத்திலேயிருப்பது மீசையல்லவோ நீபிடித்தது தனுசு அல்லவோ உனக்கு சாமார்த்தியம்போதாதோ க்ஷத்திரியனனால்நான்சொல்லப்பட்டவிஷயம் உனக்குரோஷம் உண்டாகுமென்றுசொல்லவே அதை ஒருவசனஞ்சொல்லுகிறார் வாருந்தம்பி சிறுபிள்ளாய் என் அதிவிசேஷத்தைமிருசி விசேஷிக்கிறாய் நீயார் சிறுபிள்ளை உன்னுடைய தாய்தந்தைபேரைச்சொல்லும் அப்புறம் உன்னுடன் யுத்தம்பண்ணுகிறேனென்றார்.

அப்போது குசலனானவன் ஙங்களுடைய தாய் பேர் ஞானியம்பாளெங்களையர்பேர் வால்மீகிரிஷி எதோ உம்முடையசாமார்த்தியத்தைக்காட்டுமென்று ஒரு அர்த்தசந்திராஸ்திரத்தையெடுத்து வில்லிற்சந்தித்துவிட்டுவிட்டானப்போது லட்சுமணப்பெருமாள் வில்லெடுக்கநேரமில்லாமல மண்டியிட்டுத தன் பலத்தையெல்லா மூலமையிலே கொண்டு பாயவந்தபாணத்தை ஒரு அறைகொடுத்து வந்தவழிதெரியாமலோடவிட்டாரப்போது குசலராஜன் வில்லிலநேகபாணங்களைச் சந்தித்து ஐப்பசிகார்த்திகை ஈசானியமூலையிலிருந்து மேகமானது விடுபட்டுவிடிமின்னற்குமுறலுடன் ஒய்வொழிச்சலில்லாமல் சலம்வருஷிப்பதுபோல பாணங்களைவிடுகிறபோது தேவர்களுக்குந்தெரியாதாம் அப்பாணங்களைக்கட்டுகட்டாயுருவி விடுகிறபோது லட்சுமணரும்வில்லிலநேக அஸ்திரங்களைப்பூட்டி மழைபொழிவதுபோல சரமாரியாய்பொழிந்துவருகிற அஸ்திரங்களையெல்லாமறுத்து மிதமில்லாதபாணங்களை விடுத்துவிடுகிறபோது பாணங்களானது ஆகாயமார்க்கத்திலெழும்பி ஒன்றுகொன்று நோவையில்லாமல் யுத்தங்கள்புரிந்துக்கொண்டிருப்பதுகள் அவ்வேளையிலனுமார்மூர்ச்சைதெளிந்து கண்ணைவிழித்துக் குசலவனெங்கேயிருக்கிறனென்று பார்த்தால் குசலனவெகுதூலயில் உத்தம ன்னுகிறனென்றறிந்து யெழுந்து சாம்புவந்தரிடத்தில் வந்து அவர் மூர்ச்சையடைந்திருப்பதைக்கண்டு அவ்விடம்விட்டுலவனிடத்தில் யுத்தம்புரிந்து இவனுடயெயின்னமென்னத்திறகுப்போராட்டம் ஒரேயறையிலேயமலோகமனுப்பிடுமென்று கூறியமொழியை லவன்கேட்டு அதிககோபங்கொண்டு அநுமாரையுங் கூடவளைத்துக்கொண்டு யுத்தம்பண்ணும்போது சாம்புவந்தர்மூர்ச்சைதெளிந்தெழுந்திருந்து அநுமாரவகதன யுத்தம்புரியுமிடம்வந்தா அதுகண்டு லவனசாம்புவந்தரையுமடக்கிக்கொண்டு யுத்தஞ்செய்தான மூன்றுபேருங்கூடி அதிக உக்கிரகாரத்துடன தேவர்களும்கண்டுமெச்ச யுத்தம்புரிந்தார்கள்.

அந்தப்படியிருக்கதென்றல் அநுமார் பாய்ந்து பாணத்தை யுடைத்தெறிந்து போடுவார் சாம்புவந்தன்பேரில்பாணம்பட்டால் அங்கதனெழும்பிபாணத்தையுடைத்தெறிந்துபோடுவான் இந்தப்படி லவனைவளைத்துக்கொண்டுயுத்தம்பண்ணினார்கள் இம்மூவரையும் ஏகாகோசமாயெண்ணவேண்டாம் மும்மூர்த்திகளானாலும் இவர்களைநிர்விர்வாகம்பண்ணுவார்கள் இவர்கள் அநேகயுத்தங்களில் கைகண்டுகீர்த்திபெற்றவர்கள்லவனுமவனைறுல்லட்சுமணப்பெருமாளுக்கு சரிப்பலனபடைத்தவன அவனபாணமெடுக்கிறதுந்தொடுக்கிறதும் இம்மூவருக்குந்தெரியவில்லை இவனுடைய கரவேகஞ்சரவேகந்தானென்னமோ கைதானசலியாதோ புஜந்தானவலியாதோ மண்டியிட்டகால் புரளெதியாதோவென்று தேவர்கள்மெச்சும்படியாயுத்தம்புரிந்துக்கொண்டிருந்தான

அப்போது குசலராஜனுடையபாணமும் ஆகாயத்திலயுத்தம்பண்ணுகிறபோது குசலராஜன் பாணமிந்தி லட்சுமணருடைய பாணங்களை அதம்பண்ணிப்போட்டு அம்புறாத்தூணியில்வந்தடைந்தது அதுகண்டுலட்சுமணர் மகா கோபாக்கினியுடன் அதிகவிசையில் நூறுதிவ்யாஸ்திரமெடுத்து மகாதிராபூதிகள்கொடுத்துவில்லில்லதொடுத்து பிரயோகஞ்செய்தார் அந்தநூறுதிவ்யாஸ்திரங்களும்வில்லில்விடுபட்டு அவயத்திருந்த நாகசர்ப்பத்தை கோலால்தட்டினால் எப்படிசீறிக்கொண்டுவருமோ அப்படிசீறிக்கொண்டுவிஷாக்கினியுடனே வருகிறபோது குசலன்கண்டு நூறுதிவ்யாஸ்திரமெடுத்து வில்லிலேசந்தித்துவிட்டு லட்மணர்விட்ட நூறுதிவ்யாஸ்திரத்தையுங்கண்டித்து அநேகமாய் பத்துநாராசபாணங்களெடுத்து தனுசிற்றொடுத்துவிடுத்தான் அந்தநாராசபாணங்களும் அதிக உக்கிரத்துடன வருகிறபோது லட்சமணர்கண்டு தன்றமையன் கொடுத்த ராமபாணமாகிய அன்பது நாராசபாணங்களெடுத்து பிரயோகஞ்செய்து அந்த நூறு திவ்யாஸ்திரங்களையுமறுத்தெறிந்துபோட்டார்

அதுகண்டு குசலராஜன் நூறு அர்த்தசந்திராஸ்திரமெடுத்து அநுபதிபங்கொடுத்துலட்சுமணர்பேரில் பிரயோகஞ்செய்தான் அதுகண்டுலட்சுமணர் நூறு அர்த்தசந்திராஸ்திரத்தை அறுத்தெறிந்தார் அதுகண்டு குசலராஜனுக்குகண்களிரண்டும் செவ்வானம்போலசிவந்து காதுகளிரண்டும்புகைபெழும்ப அதிகரோஷத்துவேசனுப் அம்புறாப்பொதியிறைப்பைப்போட்டு ௰-ா-ஆயிரம் பதினாயிரம் கோடிசங்கம் மகாசங்கமென்று கணக்குமதியில்லாத பாணங்களை மழைபொழிவதுபோல சாமபரியந்தம் சரமாரியாய்ப் பொழிந்துவிட்டான அதுகண்டு லட்சுமணர் தாமும் அப்படியேபாணங்களையெடுத்துவிட்டறுத்துப்போட்டு … நாகாஸ்திரமெடுத்துவில்லிலேசந்தித்துவிட்டுகுசலராஜனுடையவில்நாரியைபடிலெவறறுத்தெறிந்துவிட்டார் வில்நாறி அறுபடவே அடைடடாகப்படிலென்றுவெடித்ததுபோலிருந்தது குசலராஜனுந்திடுக்கிட்டுப் பிதிர்கலக்கமனதைரியபடுத்திக்கொண்டு உருவப்பட்டதான ஒன்றுப்கூடினதைக்கண்டு குசலராஜன சனுதியிலேபே நாணியைப்பிடித்துபாணங்களைச் சந்தோபசாங்கமாய் வில்லில்சந்தித்துவிட்டு அநேகமாயிரநாராசபாணங்களெடுத்து லட்சமணருடையவில்லுக்கு லகுபார்த்துபாணத்திறுடையசத்திலே விட்டுவிட்டான குசலவிடப்பட்டபாணங்களுக்கு பதில்பாணங்களைவிட்டறுத்துக்கொண்டேயிருந்தார்

அந்தச் சமையத்தில் இரண்டு நாராசபாணங்களும்வந்து லட்சுமணருடைய கையிலிலே … லாகக்கிழிந்தெறிந்துபோட்டது அதுகண்டுலட்சுமணர் குசலராஜனைமெச்சி பளாபளாவென்றுச்ச … நாராவணனைகும்பகர்ணன் இந்திரஜித்து அதிகாயனைகும்ப

கிரும்பன் இப்படிச்சொல்லப்பட்ட பிரமுகானிடத்திலேயும் பின்னேயும் ராட்சசாளுடனேயும் யுத்தம்பண்ணினேன் இதுவரையில் நம்முடையபிலவேயிப்படிப்பிரபலத்தவர்களில்லை இவன் மகாபலவந்தனென்றுசொல்லிக்கொண்டுவில்லைடுநவப்பார்த்தார் ஒன்றுக்கூடிவிட்டது அப்போதுலட்சுமணர்ஜெயம்பண்ணி குதிரையைவிடுவிக்கவேணுமென்று ஏகாக்ரசமாய் இவனுடனேயுத்தம் பண்ணலாகாதென்றும் அசாரிசமாய் யுத்தம்பண்ணினால நம்மைகொன்று விடுவானென்றும் மனதில் நிட்டப்பட்டவராய் தன்னிடத்திலிருக்கப்பட்ட பாணங்களையெல்லாம் வில்விலேசந்தித்து மந்திராபூதிகள்செய்து குசலராஜனுடையமார்புக்கும் கண்டத்திற்கும் லகுபார்த்துவிட்டுவிட்டார் அந்தராமபாணங்களானது எடுக்கச்சேனைதனில்லேல்லைக்ச்சேபத்து தொடுக்கச்சேநூறு யிழுக்கச்சேஆயிரம்விடுக்கச்சேபதினாயிரம் புறப்படச்சேலட்சம் ஒருபாணமித்தனையாய் லட்சுமணர்விடப்பட்ட ராமபாணத்துக்கெல்லாம் எத்தனையென்றுகணக்குப்பார்த்துக்கொள்ளுங்கள் அந்தபாணங்களானதுவிடுபட்டு ககத்தகாயமாய் தங்கக்கட்டுகளுடனேபின்டபட்சியிறகுபூண்ட வடவாமுகாக்கினிக்குச்சமதையால அக்கினிக்கொழுந்துகள் வீறிட்டெழுந்துக்கொண்டு அதிகவேகத்துடனே வருகிறபோது குசலராஜன்கண்டு அநேகபாணாஸ்திரங்களைவாரி அபரிமிதமில்லாமல்பிரயோகம்பண்ணிரும பாணங்களெல்லாம் அறுத்தெரிந்துபோட்டார் அதைகண்டுலட்சுமணர் முப்பத்திரண்டுசிங்கமுகாஸ்திரமெடுத்துவில்லில்சந்தித்துமந்திராபூதிகள்கொடுத்து பிரயோகம்பண்ணிவிட்டார் அதுகண்டுகுசலராஜனுபத்திறைவின்கமுகாஸ்திரமெடுத்து வில்விற்சந்தித்துப்பிரயோகம்பண்ணிவிட்டான் அநனமாய் அக்கினியாஸ்திரமெடுத்து அபிமந்திரித்துப்பிரயோகம்பண்ணினான் அதுவும்விடுபட்டுவடவாமுகாக்கினியுமவாரியிறைத்துக்கொண்டு கடகடவென்கிற தொனியுடனே [illegible]செடிகளபத்திபெரிய காகரவென்றபட்சிகளை அதிகவுக்கிரத்துடன்வருவதை லட்சுமணர்கண்டு தம்மிடராமபாணமாகிய அக்கினிபாண்திரம்விடுபட்டு வடவாமுகாக்கினியைவாரியிறைத்துக்கொண்டு சடசடவென்கிற தொனிகளுடனே புறப்பட்டு குசலராஜன விட்ட அக்கினியாஸ்திரத்தின்பேரிலே தடாலென்று வந்து மோதி ஒன்றுககொன்றுதிரணஞ்ஆகாயமெங்குமபி யுத்தம்பண்ணத்தலைப்பட்டதுசன்.

அதுகண்டு குசலராஜன் ஒருபர்வதாஸ்திரத்தையெடுத்து வில்லிற்றொடுத்து மந்திராபூதிகள்செய்துவிட்டுவிட்டான் அந்தப்பர்வதாஸ்திரமானதுவில்லில்விடுபட்டு அநேக பர்வதங்களாக உருவுகொண்டு வருகிறபோது லட்சுமணரானவர் அந்தப்பர்வதாஸ்திரங்களானதுவருமுன்னம் நம்முடைய ராமபாணமாகிய பர்வதாஸ்திரத்தையெடுத்து வில்லிற்சந்தித்துமந்திரபூசைசெய்து பிரயோகப்படுத்தினார் அந்தப்பர்வதாஸ்திரமும் ஆகாயமார்க்கமெங்கும்பிக்குகுசலராஜனவிட்டபர்வதாஸ்திரத்துடனெதிர்த்து ஒன்றோடொன்று முட்டி கட்டிப்புரண்டு ஜெயித்திடவேணுமென்று யுத்தம்பண்ணத்தலைப்பட்டது அதுகண்டுதேவர்களெல்லாம்நமது பேரிலெங்கேவந்துவிழுகுதோவென்று ஓண்டமுயமோடிப்போனார் அப்போது குசலராஜன் பிரமாஸ்திரத்தை யெடுத்துப்பூசைபுரிந்துமந்திரஉச்சாடனங்களுடன்வில்லிற்சந்தித்துப் பிரயோகம் பண்ணினான் அந்தபிரமாஸ்திரமானதுவெளிப்பட்டு அண்டபுவனங்களுநடுங்க ஆலகாலவிஷம்போற்சீறிக்கொண்டு லட்சுமணரெங்கேயெங்கே யென்றுதிருதிகெல்ரெரிந்துக்கொண்டுவருகிறபோது லட்சுமணரானவர்கண்டு தம்முடையராமபாணமாகிய பிரமாஸ்திரத்தையெடுத்து வில்லிற்றொடுத்து பிரயோகம் பண்ணிவிட்டார் அதுவும் வில்லில்விடுபட்டு ககத்தகாயமாய் தங்கக்கட்டுகளுடனே பின்டபட்சி யிறகுபூண்ட பிர்மாஸ்திரமானது குசலராஜன்விடப்பட்ட பிரம்மாஸ்திரத்தின்பேரிற்பாய்ந்து இரண்டுபிரம்மாஸ்திரங்களும்சந்தித்து யுத்தம்பண்ணத்தலைப்பட்டதுசவித்தருணத்தில்குசலராஜன்எதடாலட்சுமணன் மகாபலசாலியாயிருக்கிறான் நாம்விடப்பட்ட அஸ்திரத்துக்கு பதிலஸ்திரம்விட்டு யுத்தபண்ணுகிறான் நம்முடைய அஸ்திரமோ வைகுந்தவாசகராயிருக்கப்பட்ட ஸ்ரீமந்நாராயணருடையதாயிற்றே யிந்தலட்சுமணன்நாளுச்சுதே அவனுக்கேதுபலம்பொருந்திய அஸ்திரம் நமமுடையஅஸ்திரமெல்லாமறுத்துவிடுகிறான்யிவனே புஜபலபராக்கிரமசாலியாயிருக்கிறான் யுத்தங்களிற்கைகண்டவன்போலும்காணுது நாமசாரிசமாயிருந்தோமானால் நம்மை யெமனுலகமனுப்பிவிடுவானென்று மனதிற் றிடங்கொண்டவனாத் தன தாயார் கொடுத்தசக்கரத்தைக் கையிலெந்தினான் அதுகண்டு மனனுள்ளொருயினுள்ளொருபோசனைபண்ணி கண்ணையெண்ணிதுதிபண்ணி மவந்துண்ணிவடிப்போனார்க எப்போதுகுசலராஜனவன்சக்கரத்திற்குத்தக்க மந்திராபூதிகள் செய்து தூபதீபவந்வேத்தியங்களுடனே சோடசோபசாரஞ்செய்து லட்சுமணருடையகண்டத்திற்கு லகுபார்த்துவிட்டுவிட்டான் அந்தச் சக்கரமானது வெளிப்பட்டுசுடுசென்பத்தி பெரியத்தக்கதாக லட்சுமணரைபட்சணஞ் செய்வேனென்று தேடியோடி வரும்போது அதுகண்டுலட்சுமணரானவர் மிகமையோடுமிமைதட்டுமுன்னமே கோடிராமபாணங்களைச் சக்கரத்தினபேரிலவிட்டார் கோடிராமபாணங்களையுமறுத்துபூமிதறள்ளிவிட்டு லட்சுமணர்பேரில் சக்கரமானது வருகையில்லட்சுமணர்பயந்து நாராசத்தையும் பா

சுபதாஸ்திரத்தையும்சிலாஸ்திரத்தையுமெடுத்துவி
டுத்தார் அம்மூன்றஸ்திரங்களும் புறப்பட்டுசக்கா
த்தின்பேரிலெதிர்த்து யுத்தம்பண்ணத்தலைப்பட்ட
துகள் அதுகண்டுகுசலராஜனதன்தாயார்கொடுத்த
உக்கிரவீரசத்தியையெடுத்துகையிற்பிடித்துமந்திர
உச்சாடனஞ்செய்யும்போது அனுமார்கண்டேத
டா குசலவனுக்கிரவீரசத்தியையெடுத்து உச்சாட
னம பண்ணுகிறான் இந்தச் சத்திவிட்டால் லட்சும
ணர்பிழையாரென்றுதிடுக்கிட்டுமனதுகலங்கி குசல
வனுடையசத்தியையொடித்தெறிந்து போடவேணு
மென்றுமனதிலெண்ணி சக்தியினபேரில்வந்து பா
ய்ந்தார் அதுகண்டுகுசலராஜனேதடாசெங்குரங்கு
நமதுபேரில் வருகுதென்று பிரசண்டகோதண்டத்
தைச்சுழட்டியடித்தானவ்வடியான தனுமார்மேற்ப
டவே கபாலந்திறந்து ராமாராமாவென்றுவாய்விட்
டலறி குப்புறப்பூமியில்விழுந்துவிட்டார் அந்தவே
ளையிற்சத்தியையெடுத்துவிட்டுவிட்டான்குசலராஜ
னனவன் அந்தசத்தியானது பாதாளமேழு முயர்
வாயெழும்பிதத்தளித்து தெந்தனம்பாடிக்கொண்டு
வர லட்சுமணர்கண்டுகோபமாகி அநேகராமபாண
ங்களை யெல்லாஞ் சத்தியானது கபளீகரம்பண்ணி
க்கொண்டு லட்சுமணர்மீது வருகிறபோது அங்கத
னேதடா நமதுலட்சுமணர்மீது வருகின்றது இந்த
சத்திபட்டால் லட்சுமணர்பிழையாரென்று கருட
னனவன்நாகசற்பத்தைசீறிக்கொண்டு பாய்ந்தாலெ
ப்படியோ அவ்வாறாக அங்கதனனவன் சத்தியைப்
பிடிக்க வருகிறபோது குட்டிக்குரங்கின் சேஷ்டை
போகாமற் காண்பித்ததென்று நன்குநாராசபாண
ங்களைத்தொடுத்து அங்கதனுடைய திரேகமுழுது
ஞ் சல்லடைக்கண்களாகத் துளைசெய்தான் அதனு
லங்கதன் ரத்தங்களை கக்கிக்கொண்டு ராமாராமா
வென்று வாய்விட்டலறி பூமியில்விழுந்தான் அந்த
வேளையில்சத்தியானது மகா உக்கிரத்துடன் வரும்
போதுலட்சுமணர் கண்டு சத்திவேல்சூலம் இம்மூன்
றையுஞ் சத்திமேலெடுத்துவிட்டார் இம்மூன்றாயுத
ங்களுஞ் சத்தியின்பேரிலெதிர்த்துயுத்தம்பண்ணி சத்
தியினாலடிபட்டு பூமியில் விழுந்துபோயிற்று மேலு
மந்த உக்கிரவீரசத்தியானது உக்கிரம்விடாமல்லட்
சுமணர் பேரில்வருகிறபோது லட்சுமணர் மந்திரவா
ளையெடுத்து உக்கிரவீரசத்தியைரெண்டுதுண்டாக
வெட்டினார் வெட்டவே துண்ட மிரண்டாகி மறுப
டியுமொன்றாய்க் கூடி லட்சுமணருடைய மார்பிலே
தடாலென்றுவந்துபாய்ந்து முதுகிலுருவிப்போய்வி
ட்டது அதனால்லட்சுமணர் ஸ்ரீமந்நாராயணாவென்று
தேர்தட்டில்விழுந்துவிட்டார் சாரதியானவன் குதி
த்தோடிப்போனான் அந்தாவாசிசுந்தரம்பொருந்திய
லட்சுமணர்யிறந்தாரென்று துயாமுற்றார்களந்தவே
ளையிலுக்கிரவீரசத்தியானது சமுத்திரத்தில் ஸ்நா
னஞ்செய்து அம்புறாத்தூணியில் வந்தடைந்தது அ
துகண்டுகுசலராஜன் சந்தோஷமாகி விலநாரியைத்
தளர்த்தினான் அப்போது லவனனவன் இராஜகு
மாரர்களுடனும் சாம்புவங்களுடனும் யுத்தம்பண்
ணிக்கொண்டிருந்தானப்போது ராத்திரிபதினெட்
டுநாழிகை யாச்சுதாம்.

அப்போ திரண்டு அதர்கள் உச்சியின்மீது கை
யைக்குப்பிஇசைக்குகந்தலட்சுமணர்செய்தியை இ
ட்சணம்சொல்லவேண்டுமென்று கூவியழுது ஆவிக்
குரிய ஸ்ரீராமரைக் குறித்துத்தொழுது குப்பேர்மு
றையோவென்றவரிருக்குமிடந்தேடியோடியபோத்
தியைநாடி பலவாய்த்துதிகள்பாடி எங்களைக்காக்
குமையனேதேசார்ந்தமெய்யனேகேட்டருள்வீர் ல
ட்சுமணப்பெருமாள் அனுமார் அங்கதன்சகலவான
ரத்தலைவர்களும் ராட்சதர்களும் குசலவான்பேரில்
யுத்தஞ்செய்துமாண்டார்கள் நாங்கள்மாத்திரந்தப்
பியோடிவந்தோமென்றார்கள் அதுகேட்டுராமபத்தி
ரர் லட்சுமணர் அனுமார் அங்கதனிறந்தார்களெ
ன்றுசொல்லவே ஆயாசமுற்று அருட்கண்ணீர் பெ
ருகி அப்பா தம்பிலட்சுமணா முன்னால்பரசுராமன் ந
மது தந்தையாகிய தசரதமகாராஜனைமடக்கிக்கொ
ள்ள அந்தபரசுராமனை ஓரேபாணத்தினாற்கொன்று
விடுவேனென்று வுத்தரவுகொடுமென்றுமே அந்த
தைரியமுஞ்சவுரியமுமபலாபலமும சிறுபிள்ளைகுச
லவாள்பேரிற்காண்பித்தால் பிள்ளைகள் பயப்படுவா
ர்களென்றுசிறுபிள்ளைகள்பாணத்தினு லிறந்தாயோ
கைகேசியம்மன்சொற்பிரகாரம்பதினாலுவருஷம்கா
ட்டிற்குப்போகச் சொன்னார்களே அப்போ ராசா
வாசலில்வந்து கைகேசியையும் தசரதனையுங்கொ
ல்வேனென்று வில்லைநாணேற்றிச்செய்து ஆரவார
ஞ்செய்தாயே அதுவுமன்றிசீதையுடன் பஞ்சவடிதீ
ர்த்தத்திலிருக்கிறபோது சூர்ப்பனகையானவள் வந்து
உன்னை தோஷஞ்செய்யுமவளை மூக்குமுலையரிய
அவளால்கரதூஷணாதிகள் சண்டைக்குவர அவர்களை
கொன்றேனேபின்னையுஞ் சுக்கிரீவன்வாலியைக்கொ
ல்லவேணுமென்று விண்ணப்பஞ்செய்ய நாமதற்கி
சைய அப்போது சுக்கிரீவன் சொன்னது தம்பியே
அம்பு மராமரமுமிருக்கிறது அதைபெய்தால்வாலி
யைக்கொல்லத்தக்கினவர்களென்று சொன்னதை
கேட்டு உன்னைக்கண்டு ஜாடைசெய்ய நீயதையறி
ந்து தம்பிபெருவிரலினாலிடவிட்டா
ய் அதுயெந்தசமுத்திரபபோய் விழுந்ததோ தெரி
யாதோ பின்னும் என்னைக்காப்பாற்றவேணுமென்

நபதிருஞவருஷமன்ஞாரசித்திரையில்லாமலிருந்
தாாவணசம்மாா முடிப்பித்துக்கொண்டு என்னைக்
காத்தாயே அப்படியிருக்க யிப்போதுன்னைவிட்டு
ப்படிபிரிந்திருப்பேன் தம்பிலட்சமணுவென்று பி
ரலாபிக்கையில் பாதாழ்வாரானவர் அண்ணுவே அடி
யேனுக்கு திருவுளம்புரிந்தால் தம்முடைய தம்பிமா
ர்களைக்கொன்ற இரண்டுபிள்ளையையுங்கண்டதுண்
டமாய்ப்பண்ணி சகலரையுமெழுப்பிக்கொண்டுவருகிறே
னென்றுர்

அதனைக் கேள்வியுற்று ஸ்ரீராமபத்திர சுவாமியா
னவர்சொல்லுகின்றார் வாராய்தம்பிபாதாழ்வாரேசி
றுபிள்ளைகளிருவரையுங்கொன்றுல்சீதையிருப்பிட
மெவ்வாறறியலாம் சீதையில்லாமல்யாகத்துக்குபி
ன்னம்வந்துசம்பவித்தது ஆகையாலந்தயிரண்டுபிள்
ளைகளையுங்கொல்லாமல் கைப்பிடியாகப்பிடித்துவந்
தால் அந்தபிள்ளைகளால சீதையிருக்குமிடங் கண்
டறியலாமென்று நாறுவெள்ளம்ராக்ஷதாளைக் கூட்
டிக்கொண்டு போய் அந்தப்பிள்ளைகளையாதிதமாகிலு
ம்கைப்பிடியாகப்பிடித்துக்கொண்டுவாவென்று நா
ராயணுஸ்திரத்தை எடுத்துக்கொடுத்து சிலாமபா
ணமும் சத்திவேல்சூலமுங்கொடுத்து மந்திரங்களை
யுஞ்சொல்லியனுப்பினர்.



பாதமகாராஜன் யுத்தத்திற்குப்புறப்படுதல்

கலிவிருத்தம்.

வாதமோங்கு குசலன்றன்வாளியாற்
றாகமுங் கரியுந்துணிபட
விரதமோங்குமெவிலட்சமணன்றனைப்
பாதன் கண்டு பரிந்துடன்வந்தனன்

வசனம்

அப்படியே பாதாழ்வார் சகலமான சேனைகளை
யும்யானைகளையும் காலாட்களையுங்கூட்டிக்கொண்டு
சர்வடம்பாத்துடனே தேவசுர்காளுப் ஒருபாளை
யின் மீது சிக்ககொடிபிடிக்கஅயோத்தியைவிட்டு

ப்புறப்பட்டார்கள் பொழுதுவிடிய இன்னமைந்து
நாழிகை யிருக்கின்றகாம அப்போது லவனுனவன்
ரு-ராஜகுமாரர்களுடனும் மந்திரி பிரதானிகளுட
னும் யுத்தம்பண்ணுகையில் சாம்புவந்தரிருக்கின்ற
ராட்சதபிரேதங்களையாரிவாரிகுசலவனபேரில்விட்
டெறிந்து யுத்தஞ்செய்துக்கொண்டிருக்கையில் அ
னுமார் மூர்ச்சைதெளிந்தெழுந்து லட்சுமணா சோ
பித்திருப்பதைக் கண்டு அதிக கோபாக்கினியுடன்
இரண்டுகணகளுஞ்செவ்வானம்போற்சிவக்க மீசை
படபடவென்றுதுடிக்கஉக்ரசிங்கம்போல் ஒயாவெ
னறஅட்டகாசஞ்செய்தார் அந்தஅட்டகாசத்தை
தேவர்கள்கேட்டு நடுங்கவும் குசலவர்களுங் கண்டு
பயங்கொள்ளவும்வருகிறபோது எதடாசெங்குரங்
குமகாபொல்லாதகாய்காண்கிறது இந்தக்குரங்கை
யெத்தனைதரங்கொன்றாலும்சற்றுநேரம்பொறுத்து
சண்டைக்கு வருகிறது இந்தக் குரங்கை முன் ன
கொல்லவேணுமென்று ஐம்பதுகாரசபாணங்களை
யெடுத்து வில்லிற்பூட்டி அனுமார்பேரில்விட்டான
ந்தபாணமானது நாகசற்பமபோற்சீறிகொண்டுவரு
கிறபோது சாம்புவந்தர் ஆகாயமார்க்கங் கிளம்பிவ
ந்து ஐம்பது நாராசபாணங்களையும் பிடித்தொடித்
துப்போட்டா ரதுகண்டு குசலாஜனகைத்து இரு
பது திவ்வியாஸ்திரததையெடுதது சாம்புவந்தர்பே
ரில் பிரயோகம் பண்ணினுன் அதுகண்டு அனுமார்
சொந்துபாய்ந்து இருபதுதிவ்வியாஸ்திரங்களையும்
பிடித்துஒடித்தெரிந்துபோட்டார் அந்தப்படியாய்
குசலாஜன்விட்டபாணங்களையெல்லாம் ஒடித்தெ
ரிந்தார்கள்.

அப்போது குசலராஜன் அதிக கோபாக்கினியு
டன் அக்கினியாஸ்திரத்தையெடுத்துவில்லிற்பதித்
துமந்திராபூதிகளுடனே அனுமார்பேரிற்பிரயோக
ம்பண்ணினுன் அதுகண்டனுமார் வருகிற அக்கினி
யாஸ்திரத்தைப்பிடித்துமுடுக்கிப்பிழிந்தா ரதுபோ
கவே குசலராஜனொருவேலெடுத்துபூசைசெய்து அ
னுமார்மார்புக்குகுறிபார்த்துவிட்டான் அந்தவேலா
யுதமோசுப்பிரமணியருடையவேலாயுதம் அந்தவே
லினுல்சூரபதுமனைச் ஜெயமடைந்ததாம் அந்தவே
லாயுதத்தை மகாலட்சுமியான சீதையம்மன்வாங்கி
த்தன்பிள்ளை குசலனுக்குக்கொடுத்தாள் அதனை அ
னுமார்பேரில் விட்டபடியினுல் அது புறப்பட் டா
கிரகதெட்டண்டமு நடுங்க ஆங்கார ஓங்காரரீங்
காரசத்தத்துடன் அக்கினிச்சுவாலைகள்ஜொலிக்கவ
ருவதைசாம்புவந்தர்கண்டு இதென்ன யுகமுழுகிப்
போவது போலவே வருகின்றதே என்று இந்த

வேலாயுதத்தைதடுக்க சம்மாலாகாதுராமராண்டா
ல்சயமென்ன குசலனுண்டால்கஷ்டமென்ன போம்
போம்அனுமாரேயென்று சாம்புவந்தர்பின்னிடைந்
தார் அதுகண்டு அனுமார்கைத்து அதிசீக்கிரமாய்
விஸ்வரூபத்துடன் முன்கையிற்பிடித்து அடிமான
ங்கறுத்து நுமானஞ்சிலந்துகமோனமின்னல்மின்
னி உச்சியில்பேரிடியிடித்தா லெப்படியிருக்குமோ
அப்படியாகவேலாயுதத்தின்பேரில் தபாலெனவிரு
ருகுத்தாலதுவிட்டார் அப்போதந்தவேலானதுபி
ன்னிடைந்து மறுபடியு முருவுகொண்டு அனுமார்
பேரில்வருகிறபோ தனுமார் சற்றும் பயமில்லாமல்
ஸ்ரீராமாவென்று ஆகாயமொழும்பி வேலாயுதத்திற்
குறுக்கப்பாய்ந்து வேலாயுதத்தைப்பிடித்துமுழங்
காலில்வைத்து இருதுண்டாய் ஒடித்தெறிந்துபோ
ட்டார் மறுபடியும்வேலாயுதமானது இருதுண்டும்
ஒன்றாய்க்கூடி மகா வுக்கிரத்துடன் அனுமாருடை
யமார்பிலனைந்து பாய்ந்து உருவமாட்டாம லுருவிப்
போய் திருப்பாற்கடலில ஸ்நானம்பண்ணிகுசலரா
சனுடைய அம்புருப்பொதியில்வந்தடைந்தது அனு
மாரானவர்ராமாவென்று வாய்விட்டலறி, பர்வதம்
போல பூமியிற் சாய்ந்துவிட்டார் அதனால்சுவர்க்க
வாசிகள துயரமடைந்தார்க ளப்போதுசாம்புவந்த
ர்பசங்கள்வண்ணி கைப்படலாகாதென்று பதுங்கி
யொதுங்கிப்போகிறவரை குசலராச னெதிரோடிவ
ளைத்துக்கொண்டு பாணப்பிரயோகம் பண்ணினன்
அதுகண்டுகுசலன் தான்விட்ட பாணங்களைத் தடுக்க அரியாப் பிரமாதிகளாலேயுங் கூடாதே இந்தராமனை மந்திரங் கற்றவனைப்போற் காணுகிறதென்று பின்னும் அக்னியாஸ்திரத்தை யெடுத்து விட்டானந்த அக்கினியாஸ்திரம்வில்லைவிடுபட்டு அண்டகடாகமும்பத்திபெரிவதுபோல் வருவதைக் கண்டு ராமர்வாரும் அக்கினியாஸ்திரமேயென அவரைச்சேவித்து அவருடைய அம்புருப்பொதியில் வந்தடைந்தது அதைக்கண்டகுசலன் தன்தம்பியை நோக்கி ஒருவசனஞ்சொல்லுகிறான் அடாதம்பிலவனே ராமன்செய்த மந்திரவித்தையைபார்த்தாயோ நாம்விடப்பட்டபாணங்களையெல்லாம்தன்னுடைய அம்புருப்பொதியி லடையச் செய்கிறானென்றான் அப்போது லவன்சொல்லுகிறான் வாருமண்ணாவே பிரமாஸ்திரம்நாராயணாஸ்திரம்சக்கரஞ்சூலம் வேல் சத்தி அவைகளைத்தடுக்க ஒருவராலுங் கூடாது அவைகளைப் பிரயோகம்பண்ணும் அண்ணாவேயென்றான் அதுகேட்டுகுசலன் பிரமாஸ்திரத்தை விட்டுவிட்டான் அதுவில்லைவிடுபட்டு ஆலகால விஷத்தைப்போல் அண்டங்குலுங்க யாவருமொடுங்க வருகிறதைக்கண்டுராமர்வாரும்பிரமாஸ்திரமேயென அதுஉடனேசுவாமியை நமஸ்கரித்து சுடரையடக்கிக்கொண்டுசுவாமியினுடைய அம்புருப்பொதியில் வந்தடைந்தது அதுகண்டு குசலன்நாராயணாஸ்திரமெடுத்து பூசைசெய்துவிட்டான் அந்த நாராயணாஸ்திரம் வில்லைவிடுபட்டு தகத்தகாயமாய் மகா காந்தியுடனே அண்டங்குலுங்க யாவருங்கலங்க அண்டகோளகை பத்திபெரியத் தக்கதாய் வருகிறதைக்கண்டு ராமர்வரட்டுமென்று மௌனமாயிருந்துவிட்டாரப்போது நாராயணாஸ்திரம்வலம்வந்து துளசிமாலையாக சுவாமி கழுத்தில் விழுந்தது அதைகண்டு சகலதேவர்களும் சந்தோஷமானார்கள் குசலன்கண்டு கடுஞ்சினங்கொண்டு சக்கரத்தையெடுத்து பூசைசெய்து சுவாமியினுடைய கழுத்திற்கு லக்குபார்த்துகிறுகிறுவென்று சுழற்றிவிட்டுவிட்டான் அந்தசக்கரமானது சூரியப்பிரகாசமாய்ப்புறப்பட்டு அண்டம் நடுங்க யாவருமொடுங்க அக்கினிபோலெறிந்துக்கொண்டுஅண்டகோளகை பத்திஎரியத் தக்கதாய் வருகிறதைக்கண்ட சகலரும்பயந்து கலங்கினார்கள் அப்போது சக்கரத்தாழ்வார் வந்து சுவாமி முகத்தைப்பார்த்து தன்சுயரூபத்தையடக்கி சுவாமியினுடைய திருக்கரத்தில் நின்றுவிட்டார் அதுகண்டுகுசலன் அதிககோபங்கொண்டு வேலாயுதத்தையெடுத்து மந்திராபூதிசெய்துவிட்டுவிட்டானந்த வேலாயுதமானது அண்டாண்ட பிரமாண்ட ஆயிரத்தெட்டண்டங்களும் நடுங்க அண்டகோளகை பத்திபெறிய அக்கினிச்சுடர்கள் வீசிக்கொண்டு சர்வலோகமுங் குலுங்க யாவருங்கலங்க அண்டம்படீலென்று வெடிக்கத்தக்கதாய் வருகிறதை சாரதியானகாந்தாரன் கண்டு சுவாமிஎனக்குமிகவும்பயமாயிருக்கிறதென்று சொல்ல சுவாமியானவர் ரதத்திலிருந்தபடியேயென்று சிங்கநாதம்பண்ணினார் அந்ததொனி வேலாயுதம்கேட்டு தன்ஆங்காரத்தை யடக்கிக்கொண்டு சுப்ரமணியரிடம்போய்ச்சேர்ந்தது அப்போது தேவர்களெல்லாங்கண்டு ஆச்சரியப்பட்டுஉளமகிழ்ந்தார்கள் அதுகண்டுகுசலன்கோபங்கொண்டு சிவன்சூலமெடுத்து பூசை செய்துவிட்டு ஆயிரத்தெட்டண்டமுமொடுங்க நடுங்கக்குலுங்க அதிதீட்சண்யமான அக்கினிசுவாலையை வீசிக்கொண்டு அண்டகோளகைபத்திபெறிய ஆகாயபூமியுமொன்றுபுருக்கொண்டு வடவாமுகாக்கினி வாரியிறைத்துக்கொண்டு வருகிறதைக் கண்ட சாரதிகாந்தாரன் மெய்மறந்துபோனான் அப்போது சுவாமி ரதத்திலிருந்தபடியே ஒரு ஓங்காரசத்தம் போட்டார் அந்தசத்தங்கேட்டு சூலாயுதமும் தன் ஆங்காரபலத்தை யடக்கிக்கொண்டுபரமசிவனிடம் போய்ச்சேர்ந்தது அதனைகுசலன்கண்டு துயரமுற்று கடுஞ்சினங்கொண்டு தன்தாயார்கொடுத்த உக்ரவீரசத்தியையெடுத்து தனதாயாரைத்தோத்திரஞ் செய்துவிட்டான் அந்தசத்தியானது வில்லைவிடுபட்டு ஈரேழுபதினாலுலோகமும் ஆயிரத்தெட்டண்டமும் நடுங்க ஆலகாலவிஷத்தைப்போற் சீறிக்கொண்டு ஆகாயம்பூமியு மொன்றுபுருக்கொண்டு வடவாமுகாக்கினியைக் குபீல்குபீலென்றுகக்க அண்டத்திலுள்ள தேவர்களுங்கலங்கிவாட குசலனைக் கொண்டாட அக்கினிக்கொழுந்துகளுடனே வருகையில் சுவாமிக்கு பூர்வக்கியானம்வந்து போய்விடவே கனவுகண்டாப்போலாச்சுதாம் அப்போஉக்கிரவீரசத்தியானது சுவாமிதிருமுகத்தைபபார்த்துமார்பிலே தடாலென்று பாய்ந்து கூர்முனைமழுந்தி உருவமாட்டாமல் வெட்கி குசலராசன் அம்புருப்பொதியில் வந்தடைந்தது அந்த உக்கிரவீரசத்திபட்ட அதிர்ச்சியிலே தேர்தட்டில்சாய்ந்துமூர்ச்சையடைந்தார் அந்த தெப்பை ஆருக்குப்பட்டதென்றால் பரமசிவன் முதலானவர்களுக்குமபட்டதாம்.

அதுகண்டு குசலவர் ஜனகமகா ராசனையும் அநுமாரையும் சாம்புவந்தரையு மடக்கிக்கொண்டு யுத்தம் பண்ணுகிறபோது அநுமார் சாம்புவந்தர் மாண்டுகிடக்கிறயானைதேர்பரிசேனைகளை வாரிவாரி குசலவன்பேரில விட்டெறிந்தார்கள் சோமகாசராசனும் மாலியவானும் வில்லில் அனேகபாணங்களை சந்தித்துவிட்டு விட்டார்கள் அதுகண்டு குசலவர்கள் ஆள்ஒன்றிற்குயிரண்டு சிங்கமுகாஸ்திர மெடுத்துவிட்டுவிட்டார்கள் அது ஆலகால விஷத்தைப்போலும் ஐந்துசிங்கங்கள் சீறிவருவதைப்போலும் வந்த இந்த ஐந்துபேரையும்பட்சணம்பண்ணி நட்சணம்போய்விட்டது.


அதுகண்டு குசலவர் ஆனந்தக்களிப்படைந்து மாண்டுகிடக்கிற சேனாதிபதிகள் ராசசம்பந்தர்கள் இவர்களுடைய ஆபரணங்களையும் கிரீடங்களையும கழட்டிமூட்டைகட்டி ஒருபக்கத்தில் வைத்துவிட்டு சத்துருக்கர் பரதர்லட்சுமணர் அவர்களணிந்திராநின்ற ஆடையாபரணங்களையும் கிரீடங்களையுங் கழட்டி ஒருபக்கத்தில்வைத்துராமரணிந்திராநின்ற ரத்தினகிரீடத்தையும் ஆடையாபரணங்களையுங் கழட்டி மூட்டைகள் கட்டிவைத்துவிட்டு எடுப்பாரில்லாமல் ரணக்களத்தை சுற்றிப் பார்த்துக்கொண்டு வருகிறபோது அநுமார் சாம்புவந்தர்கண்ணை விழித்துபிணங்கள் கீழேயிருந்தபடியேஎட்டிபெட்டிப்பாரப்பதை கண்ணுற்ற குசலவர்கள் ஓடி அநுமாரையும் சாம்புவந்தரையுந்தூக்கி அவர்கள் தலைமீதில்வைத்து அழைத்துக் கொண்டு அஸ்வமேதக் குதிரையின்கழுத்தில் கயிற்றைக்கட்டி பிடித்துக் கொண்டுவால்மீக ராசிரமம்வருகையில் சூரியபகவானஸ்தமித்த ஒருநாழிகைபொழுதிருக்கிறதாம்அப்போது அநுமாரையும சாம்புவந்தரையும் ஆசிரமத்திற்குவெளியேநிறுத்திப்போட்டு குசலவர்கள் உள்ளேசென்று தாயாரைக்கண்டு பாதத்தில் விழுந்து நமஸ்கரித்தார்கள் அப்படிநமஸ்கரித்தபிள்ளைகளை வாரியெடுத்து ஆசீர்வதிக்க ஆசீர்வதித்ததாயாருக்கு யுத்தத்திற்குவந்தராசாக்களுடையபேரையும் பலாபலத்தையும சத்துருக்கர் லட்சுமணர்பரதர் ராமர் வந்துமூர்ச்சைபடந்ததையு மவர்களாடையாபரணங்களைகழட்டி மூட்டைகட்டிசெங்குராங்கு கருங்குரங்கு தலைமீதில்வைத்து அஸ்வமேதகுதிரையுடன் வந்ததைப்பார்த்துடன்சொன்னார்கள் அதைகேட்ட சீதாலட்சுமி விழுந்து அலறிபெழுந்து பிள்ளைகத்தூரிக்கொண்டுவெளியேவந்து அநுமாரையுஞ் சாம்புவந்தரையும் அஸ்வமேத குதிரையையுங் கண்டு சொல்லரியதுயரங் கொண்டேகனே அநுமந்தர் ஐயாசாம்புவந்தரே இந்தசிறுபிள்ளைகளுக்கு அவர்களுங்கள் தகப்பனென்று சொல்லப் போகாதோவென்று அழுகிறபோது குசலவர்கள் அம்மாநீங்களாகிலும் வாலமீகாகிலும் என் தகப்பன்மார் அயோத்தியிலிருக்கிறார்களென்று சொன்னதில்லை அதனாலேதான் எங்களிடத்திற்குயுத்தத்திற்கு வந்தவர்களெல்லாம் எங்கள்தாய்தகப்பன்பேரைக்கேட்டார்களென்றுசொல்ல சீதை அவர்களைக் கூட்டிக்கொண்டு ரணக்களம்வந்து அங்கதன்சுக்ரீவன்விழுந்துகிடப்பதைக்கண்டு அழுது அவர்கள் பிரதாபத்தைச் சொல்லிப்புலம்பி என் தகப்பன் ஜெனகராசனும் சத்துருக்கர் பரதாலட்சுமணர் ராமபத்ரரும் மூர்ச்சையடைந்திருப்பதைக்கண்டு பூமியில்விழுந்தழுது கண்ணீரை ஆராகபோடவிட்டு அவர்களுடைய பிரதாபத்தைச்சொல்லி புலம்பிக்கொண்டிருக்க அவ்விடத்திலயோத்தியில் கௌசலைகைகேசி முதலானவர்கள் அழுதுபுலம்புகிறதை ஞானதிருஷ்டியினாற்றறிந்து வசிஷ்டமகாமுனிவர்சிஷியர்களோடு பெழுந்தருளிஅயோத்திக்குவந்து கௌசலைகைகேசி முதலானவர்களைப் பார்த்துச் சொல்லுகிறார் சீதாலட்சுமிவனம்போய் அழுதகண்ணீர்வீணாய்ப்போகாமல் இத்துன்பங்கள்நேரிட்டது இப்பவுமென்ன நாளை யுதையத்திற்குச் சகலருமெழுந்து சீதாலட்சுமியையும் பிள்ளையுங்கூட்டிக்கொண்டு வருவார்களென்று ஆறுதல் சொல்லிப்போனார்.

அவைவயெல்லா மறிந்து நாரதமுனி பாதாளலோகத்தில்ஆதிசேஷனிடத்தில்யாகம்பண்ணி கொண்டிருக்கிற வால்மீகரிடத்திற்குப் போய்ச்சொல்ல வால்மீகர்கேட்டுதிடுக்கிட்டு அவ்விடத்திலில்லாமல்பூலோகத்திற்கு நாரதமுனியுடன் ரணக்களம்வந்துயாவர்களையும்சீதாலட்சுமியையும் பிள்ளைகளையும் அநுமார் சாம்புவந்தரையும்ஆசீர்வதித்து வாயுதேவரையழைத்து கமண்டலத்திலுள்ள அமிர்தத்தை எடுத்து நாலுதிசையும் விசிறினமாத்திரத்தில் அந்த அமிர்தத்தினால எலும்புதோல் சிரசுடடல் கால்கைகளொன்றுப்கூடி சகல யானைதேர் பரிசேனைகளும்சத்துருக்கர் பரதலட்சுமணர்ராமபத்ரசுவாமியுஞ் சகலராசாக்களுமெழுந்தார்களப்போது பரமசிவன் முதலானமுப்பத்துமுக்கோடிதேவர்களும்சஅத-மரிஷிகளும் ரணக்களத்திற்குவந்து ஆனந்தக் களிப்புடனே புஷ்பமாரி பொழிந்தார்களதுகண்டு ராமர் தம்பிமாருடனெழுந்து சகலருமர்க்கிய பாத்திரங்கொடுத்து நின்றார்களப்போது சகலரும்ஸ்ரீமந்நாராயணனென்று ஸ்தவுதிபம்பண்ணினார்கள் ஜானகியம்மாளும் பிள்ளைகளும் ஸ்ரீராமரை வலம் வந்து

தையையும் பிள்ளைகளையுங்கண்டு வெட்கி அம்மன் முகத்தைப் பாராமலும் பிள்ளைகளையெடுத்து ஆதரணை பண்ணாமலுமிருந்துவிடவே சகலதேவர்களு முனிவர்களும் ராமமூர்த்தி சுவாமியைநோக்கிசீதாதேவியின் பேரிலும் பிள்ளைகள்பேரிலும் கோபம் வேண்டாமென்று சொன்னார்கள் அதுகண்டுசுவாமி தேவர்களையும் முனிவர்களையும நோக்கிச்சொல்லுகிறார் சீதாலட்சுமிக்கு இரண்டுபிள்ளைகள் வந்த காரணமென்ன வென்று கேட்டதற்கு ஸ்ரீமந்நாராயணரை எப்போதும் தியானஞ் செய்யாநின்ற நாரதமகாமுனி சொல்லுகிறார்-ஓசுவாமி ரகுநந்தனு நீவண்ணான் பேரிலேபோக்கு காட்டி கர்ப்பவதியாகிய சீதாதேவியை லட்சுமணரைக் கொண்டு வால்மீகர் ஆசிரமத்துக்கடுத்த வனத்தில்விடுத்து விட்டீர் அவ்விடத்திலம்மன் அழுது புலம்புகிறபோது வால்மீகர்கண்டு அழைத்துக்கொண்டுபோய் ஆசிரமத்தில் வைத்துக்கொண்டிருக்கிற காலத்தில் அம்மன் ஒரு பிள்ளையைப் பெற்று குசலனென்று பேரிடப்பட்டு அந்தக்குழந்தையை வால்மீகர்சமீபத்திற் கொண்டுபோய் விட்டுபின்பு குழந்தையை எடுத்து வந்துவிட்டாள் ஐயர்ஜெபத்திலிருந்தார் அதனைபின் கண்ணை விழித்துப்பார்த்தார் குழந்தையில்லாமற் போகவே பயந்து ஒரு தர்ப்பைபுல்லைப் பிடுங்கி அந்தக்குழந்தைபோல சிருஷ்டித்தவுடனே அம்மனும்வந்து இந்தப்பிள்ளை ஏதென்று கேட்டதற்கு வால்மீகர்நடந்த காரியத்தைச்சொன்னார் அம்மனும் இதுவுமென்பாக்கியமென்று வளர்த்துக்கொண்ட பிள்ளை லவனென்றார் அதைக்கேட்ட ஸ்ரீராமர் சந்தேகந்தெளிந்து வால்மீகர் முதலான முனிவர்களுடைய ஆசிர்வாதங்களையும் பெற்றசீதா லட்சுமியையும் பிள்ளைகளையும் ஆசிர்வதித்து அங்கீகரித்து சகலயானை தேர்பரி சேனைகளையும் அஸ்வமேதக் குதிரையையுங் கூட்டிக்கொண்டு சகலராசர்களையுந்தம்பிமாரையுஞ் சீதாலட்சுமியையும் பிள்ளைகளையும் ரதமேறச்செய்து தாமும் ரதமேறிச் சகல குடை-க உமேளவாத்தியங்களுடனேயும முத்துக் குடைகள் பூச்சக்கரக்குடைகள் ரத்தினக்குடைகள் வெகு ஆடம்பரத்துடனே சகலவிருதுகளும் விளக்கு ஆலவட்டம்வெண்சாமரை வீச தாமதாவென்று அவிடம்விட்டுசகலரும் புறப்பட்டுவசிஷ்டரால் நியமிக்கப்பட்ட வனத்தில் வந்துசேர்ந்தார்கள். அப்போது லட்சங்கன்னியர்கள பவழங்களால் ஆலாத்தியெடுத்து வீதியில் கொண்டாடினார்கள் சுவாமியார் அஸ்வத்தைப்பார்த்து ஆனந்தக்களிப்பு கொண்டு ராட்சதாளைப்பார்த்து அஸ்வத்தையாலயத்தில் கட்டிவையுங்களென்று உத்திரவுசெய்து ராமரும் சீதையம்மனும பின்னால் குசலவர்கள்நடக்க அதன்பின்னே சத்துருக்கர்பரதர் லட்சுமணர் நடக்க யாகசாலையினுள் வரும்போது கவுசலை கைகேசி சுமுத்திரை முதலானவர்கள் பேரப்பிள்ளைகள் மருமகள் வருவதைக் கண்ணாரக்காட்சி கொண்டு எழுந்து நின்றார்கள் அவர்களைராமர் சீதாலட்சுமி பிள்ளைகள் பரதலட்சுமணர் சத்துருக்கர் முதலானவர்கள் சேவித்து ஆசிர்வாதங்களைப்பெற்று யாக மண்டபத்தில் நம்பிமார்களும சகலராசாக்களும் மந்திரிப்பிரதானிகள் முதலான சகலரும் புடைசூழ்ந்து நவரத்தினம் இழைத்த சிம்மாசனத்தின்பேரில உட்கார்ந்தார் மற்றயாவரும அவரவர்களுக்குத்தக்க பொற்பீடங்களின்மீதுட்கார்ந்தார்கள்.

அப்போது வசிஷ்டர்சகலரிஷிக்கூட்டங்களுடனே கொலுமண்டபத்துக்கெழுந்தருளினார் அதைக் கண்டுராமரும் தம்பிமார் முதலானவர்களுமெழுந்தெதிர்சென்று பயபக்தி வினயத்துடனழைத்து வந்துமான்தோல் புலித்தோலாசனங்களின மீதுட்காரச்செய்து அவர்களாசனங்களிற்போயுட்கார்ந்தார்கள் அப்போது ராமபத்திரசுவாமி சொல்லுகிறார் ஐயோயெங்கள் குருசிகாமணியாகிய வசிஷ்டரேநான்செய்த பூசாபலத்தினால் சகலரும் வந்திருக்கிறார்கள் யாகத்துக்குவேண்டிய பூசாதிரவியங்களுந் தயாராயிருக்கிறது சித்திராபருவமும் வந்துவிட்டது இனியென்ன தாமதம் யாகத்தை நிறைவேற்றுமையா வென்றார்.

ஸ்ரீராமர்யாகஞ்செய்கிறது.



அப்போது வசிஷ்டர் சகலரிஷி கூட்டங்களுடனே யாகசாலைக்கெழுந்தருளி அந்த யாகசாலையை அலங்காரஞ்செய்து காராம்பசுவின் சாணங்கொண்டு மெழுகி கோமயந்தெளித்து நவரத்தினங்களால் கோலமிட்டு தங்கத்தினுற்குந்தனமிழைத்து வாழைமரங்களிறுத்தி சுற்றிலுங் கீலக்கண்ணாடி பதித்து கர்ப்பூரதீபங்களேற்றி அனுமார் அநேகதனு வேசகல பூசாதிரவியங்களு மழைப்பித்துக்கொண்டு வசிஷ்டர் பிரகஸ்பதி பகவானுடனேயுங் கலைக்கோட்டு மகாரிஷியுடனே ஆலோசனைசெய்தகாலத்தில் ராமருக்குஞ் சீதாலட்சுமிக்கும் ஸ்நானஞ்செய்விக்க அறுபது வெள்ளையானைகளின்பேரில அறுபது பிராமணஸ்திரீகளையும் அனுப்பித் தங்கக்குடங்களில சரஸ்வதி தீர்த்தங்கொண்டுவரச்செய்து அந்தக்குட தீர்த்தங்களை வாங்கி மந்திரபூஜைசெய்து யாகசாலைக்குள் கொண்டுவந்து நேமியமத்துடனே சுவாமியையும் அம்மனையும் தீர்த்தத்தினுல் ஸ்நானஞ்செய்து பல பீதாம்பரப்பட்டுகள் அணிந்துவரச்செய்து அப்படியேசுவாமியும் அம்மனுஞ்செய்து பீதாம்பரப் பட்டுகளுடுத்தி அலங்கிருதரா யாகசாலையில் வந்திருந்தார்கள் அப்போது வசிஷ்டர் யாககுண்டத்தில் மந்திரபூர்வத்துடன் அக்கினிபகவானையாககுண்டத்திலிருத்தி அதில்நெய்களையானைத்துதிக்கைபோல் சொரிந்து பஞ்சதிரவியங்கள் முதலானவைகளை அபரிமிதமாய்ப்போட்டு வேதகோஷங்கள் பூமியுமாகாயமு மதிரத்தக்கதாயுண்டாயிற்று வசிஷ்டர் பிரகஸ்பதி பகவானையுஞ் சுக்குவானையும் பிரபுக்களாகவைத்து பிரமரிஷிகளை ரித்தசுத்த காரியராயிருக்கச்செய்து சேமபாதிகளைபேற்படுத்தி தாம்புரோகிதராய் அகஸ்தியரோடு கூடவிருந்து சுவாமிக்கும் அம்மனுக்கும் மந்திரபூர்வத்துடன் ஓமம்வளர்க்கவே அந்தஅக்கினிபகவானிடத்திலுண்டாகிய புகைமேகமண்டலஞ் சொர்க்கம் வரையில் போய் கப்பிக்கொண்டது அதைக்கண்டபரமசிவன் பார்வதிசமேதராய் ரிடபவாகனரூடராயும் பிரம்மதேவர் சரஸ்வதிசமேதராய் அன்னவாகன ரூடராயும் தேவேந்திரனிந்திராணி சமேதராய்விமானமேறிச் சகலதேவர்களும் புடைசூழவெழுந்தருளி ராமர் யாகமண்டபத்துக்கு நேராய் ஆகாயவீதியில்வந்து நிறைந்தார்கள் அதுகண்டு சுஅசுமரிஷிகளும் சகலருமெழுந்து சேவித்துயாகதிருட்கார்ந்தார்களப்போது யாகமண்டபம்முழுமையும முனிவர்கள் ராசாக்கள்ராட்சதாள்வானரர் முதலானவர்கள் நிறைந்து இடைவபோதாமலிருந்ததாம்.



ஸ்ரீராமர் சீதையம்மனை இரண்டாவது சப்தம் செய்யெனல்.

இக்கிமோது சீதைக்கு மயறுமிராமச் சந்திரன்
துக்கமாம் யாகசந்தனை அயதாரன் முடித்தே
சங்கைகேமந் ணடி வாங்கு சதிபனை வத்னநோக்கி
மங்கைகேளெனக்கு சத்திய மகமதிற செய்வாயெனஞர்.

வசனம்.


அப்படியிருக்கிற சமயத்தில் அயோத்தியில் ரசகனுமெயவண்ணுன் சொன்னவிசேஷம் ராமருக்கு மியாபகம்வந்து இதற்கென்ன செய்பவமென்று வான்மீகரைப்பார்த்துச்சொல்லுகிறார்கேளும் வால்மீகரே முன்னோராவணசம்மாரமுடைக்கவுடன் கமது சீதையைசத்தியஞ்செய்யும் படியாகசொன்னோம் அவளும்அப்படியே தேவர்களறிய சத்தியஞ்செய்தாளதை ஐம்பத்தாறு தேசத்துராசாக்களும் மற்றசகலரு மறியமாட்டார்கள் ஆகையாலிப்போது சகலதேசத்துராசாக்களும் ரிஷிகூட்டங்களும்பந்துவர்க்கங்களுமிராட்சதர்களும் வானராளுமின்னம்மற்றுள்ள சகலவித ஜனங்களும் நிறைந்த யாகசாலையில் லோக அபவாதத்திற்சீதையம்மையை இரண்டாஞ்

சத்தியஞ்செய்யச் செய்தால் அதன்பின்பு இந்த வி
ரேழுபதினாலுலோகத்திலும் நம்மையொருவரும் இ
கழ்ச்சிசொல்லமாட்டார்களென்றுராமர்சொன்னார்
அப்படிச்சொன்ன ஸ்ரீராமருடைய விசேஷத்தை
யாகசாலைக்குநேராக ஆகாயமார்க்கத்தில் வந்திருக்
கும் பிரம்மதேவர் முப்பத்துமுக்கோடி தேவர்கள்
கின்னரர் கிம்புருடர் காந்தருவர் சித்த வித்தியாத
ரர் முதல்சகல தேவர்களும் கேட்டுக்கொண்டிருந்
தார்கள் அந்தச் சமையத்தில் லோகபிராட்டியாயி
ய சீதையம்மனானவள் ஸ்ரீராமர்சொன்ன வாக்கிய
த்தையெல்லாம் தன்னிரண்டுகாதுங் குளிரக்கேட்டு
அந்த யாகசாலையில் ஸ்ரீராமருக்கெதிராக சத்தியத்
தைச்செய்து பிறகுபூமிதேவியைப் பார்த்து கேட்
கிறுவென்றால் அம்மாபூமாதேவி நான்பூமியின்கண்
மிதிலாபுரி பட்டணத்தை யரசாட்சிசெய்த ஜனக
மகாராசனிடம் பிறந்து அயோத்தியா புரியையா
ளும் தசரதமகாராசனுடைய குமாரர்ஸ்ரீராமருக்கு
நான் மணமாலை சூட்டினது உண்மையானால் இந்த
ஸ்ரீராமமூர்த்தியை எதுவேளையும் என்மனதிலுங்
கனவிலும் நினைத்திருக்கிறது மெய்யானாலும் கற்பு
டைய பெண்களுக்கு தங்கள் மனக்காவலல்லாமல்
பெரிய மதிற்காவல் வைத்தாற் பிரயோசனமென்ன
அதைப்போல எனது மனதிலிருந்த ஸ்ரீராமமூர்த்
தியே பத்தாவாக திரிகாலத்திலும் நினைத்திருப்
பது நிச்சயமாயிருந்தால் அட்டியில்லாமல் வந்து
யிடந்தரவேண்டும் பூமாதேவியே யென்று அனேக
விதமாகக்கேட்கிறபோது அவ்விடத்தில்பூமியானது
இரண்டாக வெடித்து அதனிடத்தில் ஒருபெரிய
பிலத்துவார முண்டாகி அதிலிருந்து சங்கீதமேள
வாத்தியங்கள் முழங்க குடைகொடிச் சிலைகள்
முதல் கூடவிருதுகள் நாககன்னியர்கள் பிடிக்க
ஆலவட்டம் மயில் விசிறி வெண்சாமரைவீச நாக
கன்னியர்கள் நடனம் புரிய ஆதிசேஷன் பராமரிக்
க திருதராட்டிரன் ஜனமகாராசன கார்க்கோட
கன் தட்சகன் இன்னம்சகலமான மந்திரிகள்பொற்
பிரம்பு வெள்ளிதடிபெடுத்துவர சிலநாககன்னியர்
கள் கட்டியங்கூற சிலநாககன்னியர்கள் நவரத்தின
ங்களிழைத்த ஒரு சிம்மாதன மெடுத்துவர பூமி
தேவியானவள் அனேக ஆடையாபரணங்களெடுத்
துக்கொண்டு பிலந்து வார்த்தைவிட்டு சகலரும்
வெளியில்வந்து பூமாதேவியானவள் சீதையம்மன
ருகில் வந்து அம்மனுக்கு அனேகவிதத்தில் தேறு
தலைசொல்லித்தான் கொண்டுவந்த ஆடையாபரண
ங்களை லவகுசர்தஞ்செய்து நவரத்தினசிம்மாதனத்
தில் பேறிக்கொண்டு சகலமேளவாத்தியங்கள் முழ
ங்க இதுகளெல்லாம் ஆகாயத்திலிருக்கும் தேவர்
கள் பார்த்து புஷ்பமாரிபொழிய சகல வைபவத்
துடன் பூமாதேவியானவள் சீதையம்மனுடன்பிலத்
துவாரத்தின் வழியாய்ப் பாதாளலோகம் போய்ச்
சேர்ந்தார்கள் பிலத்துவாரமும் பூமியளவும் எப்
போதும்போல மூடிக்கொண்டது.

அதன்பிறகு ராமரானவர் ஒன்றுந்தோன்றாமல்
தியங்கிமயங்கி சீதையம்மன் பிரியத்தினாலுண்டான
வருத்தத்தினால் அனேகவிதமாகப்புலம்பி மறுபடி
யுந்தானே மனதைத்திடப்படுத்தி அதிககோபமீறிக்
கண்கள்சிவக்க மீசைகள் படபடவென்று துடிக்க
பற்களை நறநறவென்று கடித்து வெழுந்திருந்து
அண்டையி லிருப்பவர்களைத்தூறி இந்தபூமாதேவி
க்கு யித்தனை கெர்வமாக ஜானகியையும் வந்திருக்
கும்போது அச்சமப மில்லாமலும் என்னுடன்
சொல்லாமலும் சீதையை அழைத்துக் கொண்டு
போனாளே அந்தபூமாதேவியையும் அண்டாண்டங்
களையும் இதோ ஒரேபாணத்தினால் பேர்த்துசமுத்
திரத்தில் தள்ளிவிடுகிறேன் பாருங்களென்று அதிக
உக்கிரகாரமாய் இலட்சுமணருடைய கையிலிருக்
கும் வில்லை வெடுக்கென்று பிடுங்கி குமுகுமுவெனக்
குணத்தொனிசெய்து இராமபாணத்தை யெடுத்து
வில்லிற்சந்தித்தார் அதை ஆகாயத்தி லிருக்கும்
பிரமன்பார்த்து இதேதுயுகமுடிவுகாலம் வந்து
போயிருக்கிறதென்று அதிசீக்கிரமாய் ராமருக்கு
முன்னேகுதித்து அவருடைய இரண்டுகையையும்
பிடித்துக்கொண்டு ஒசுவாமி தாங்களே இப்படி
கோபித்துக்கொண்டால் தங்கள்கோபத்தை யார்
தணிக்கவல்லவர் தாங்கள் ஆக்யாபித்தபிரகாரம்நட
ந்ததே யொழிய வேறில்லை நான்தங்களுடைய உந்
திக்கமலத்திற் பிறந்தபிரமன் தாங்கள் இராவண
சம்மாரமுடித்து சிலகாரியங்களு நிறைவேறினது
ஆதியில் தாங்கள் ஆக்யாபித்த பிரகாரம் சீதையம்
மனும் வைகுந்தத்திற்போய் தங்களவரவுக்கு எதிர்
பார்த்துக் கொண்டிருக்கிறாள் ஆனபடியால் தாங்கள்
லோக நடத்தையைவிட்டு கோபத்தைத் தணிக்க
வேண்டும் இதுவல்லாமல் வால்மீகர் உத்தரகாண்ட
முழுமையும் குசலவர்களுக்குக் கற்பித்திருக்கிறார்
அதைப்போல நடந்து காத்து ரட்சிக்கவேண்டுஞ்
சுவாமியென்று பிரமதேவன் சொல்லவே இராமரும
கோபந்தணித்தார் பிரமன் ஆகாயவீதியில் அவர்
களுடன்போய்ச்சேர்ந்தார் இருவரும்வில்லை லட்சு
மணர்கையில் கொடுத்துவிட்டு அதிகசந்தோஷத்
துடன் தர்ப்பாசனத்தின்பேரில் உட்கார்ந்தார் அப்
போது வசிஷ்டருத்திரவுபடி இராமலட்சுமணரை
க்கொண்டு அஸ்வமேதக்குதிரையை யழைப்பித்து
காட்டு முருக்கமரத்தில் கன்றுயிழைத்து அமைத்த
யாககுண்டத்துக்குக் கிழக்கேயிருத்தி புஷ்பதாம
பூலங்கள் வைத்து பூசைசெய்துக் கொண்டிருக்கிறார்
உத்தமம அஸ்வமேத நாங்கள் கீர்த்திப்பிரதாப
தையடையும்பொருட்டு அஸ்வமேதயாகம்பண்ணு
கிறேன்தேவசெய்து உடசரீரத்தையாககுண்டத்
தில்விட்டுதிவ்யசரீரந்தரித்துசுவர்க்கலோகம்போய்
ச்சேர்வார் அப்போது வதிஷ்டர் அந்தக் குதிரை
யை தூபதீபங்களினாலே பூசை பண்ணிதோத்திரங்
கள்செய்துலட்சுமணரைநோக்கி குதிரையை [illegible]டி
புமென்றார் அதுகேட்டவுடனே சிரசாவகித்து

லாமலதீர்த்தம் தாரைதாரையாக சொரிய சிவ்வென்
றுகேசரிமார்க்கத்திலெழுந்து ஸ்ரீமந்நாராயணனை
தோத்திரம்பண்ணி சூரியபகவானுடன் கலந்துவிட்
டது அப்போது லட்சுமணர் அஸ்வத்திலுள்ள மா
மிசத்தை வர்ரமபோலும் பவளம்போலும் தரித்து
ராமர்கையில்கொடுக்க ராமர்வாங்கி வசிஷ்டர்சொ
ல்லுகிற மந்திராபூர்வகத்துடன் யாக குண்டத்திற்
போட்ட அக்கினிபகவானும் பிரியத்துடன் வாங்கி
க்கொண்டு தன்பக்கத்தில் சேர்த்துவைத்தார் அப்
போதுவசிஷ்டர் இராமர்கையில் பரமசிவன்பிரம்ம
தேவர் முதலானதேவர்களுக்கும் தேவரிஷிகளுக்
கும் யாகபாகத்தை யெடுத்துக்கொடுக்க அவரவர்
கள் பெற்றுக்கொண்டு ஆசீர்வாதங்க ளளித்துப்
போயினர் அப்பால் பிரம்மரிஷிக்கு யாகபாகத்
தையும் ஆவின்கள் ௮௦-குதிரை ௱,௨௲ பாரந்தங்க
மும்கொடுத்து ஆசீர்வாதம்பெற்றுஇப்படியேசகல
பிராமணர்களுக்கும் யேழை பாதேசிகளுக்கும் அள
வற்ற திரவியங்களை அவரவர்கள் விதிப்படிக்குக்
கொடுக்க அவரவர்கள் வாங்கிக்கொண்டு தங்கள்
தங்களிருப்பிடம் போய்ச்சேர்ந்தார்கள் அப்பால்
ஸ்ரீராமரானவர் ஸ்ரீராமப்பிரதிஷ்டை செய்யும்படி
நினைத்து அங்கிருக்கும்ராசாக்களையும் சேனைகளை
யும் புறப்படும்படியாய் உத்தரவுசெய்து சந்தனரா
சன்முதலான ஸ்திரீசெனங்களெல்லாரும் நவரத்ன
மயமான ரதங்களிலேறி நடக்கவும் குசலவர்முத
லான யிராசகுமாரர்களெல்லோரும் குதிரைகளின்
பேரிலேறிக்கொண்டு ஆயுதங்களைபிடித்துகொண்டு
வரிசையாகநடக்கவு மிப்படி சகலாடம்பரத்துடன
ராமரானவர் விபீஷணர் சுக்ரீபர் தம்பிமாருடனும்
சதாருடராய் புறப்பட்டு அனுமார் அங்கதன் முத
லானவர்களும் புடைசூழ்ந்து வரத்தக்கதாகதண்டு
விட்டுநடக்கும்போது பதினெட்டுவாத்தியங்களும்
தர்மதானமென்று முழங்கவும் அனேகமாயிரம் நா
டகபெண்கள் விநயத்துடன் பரத நாட்டியங்களைச்
செய்துகொண்டுவர அச்சின்னங்களினுடையவோசை
களானது பூர்வத்தில்தசரத ராசனுடையவாக்கியங்
தப்பாமல் பதினான்குவருஷம் வனவாசஞ் செய்ய
பஞ்சவடிதீரத்தில் வந்து பிறகு கரதூஷணரைகொ
ன்று மாரீசனைவதைத்து சீதையையிழந்துவாலியை
ச்சங்கரித்து சமுத்திரத்தில் இராவணகும்பகர்ணன்
இந்திரசித்து அதிகாயன் கும்பநிகும்பனமிப்பேர்ப்
பட்ட ராட்சதர்களைத் துவம்சம்பண்ணிசீதையம்மனை
சிறைமீட்டி அயோத்தியில்வந்து பட்டாபிஷேகராய்
குசலவர்களையும்பெற்று அஸ்வமேதயாகஞ்செய்து
முடித்து பிராமணக்ஷத்திரியவைசிய சூத்திரர்களாகிய
நாலுவருணத்தார்களுக்கும் ஆசையடக்கத்தக்க
தட்சணைகொடுத்து அன்னதானம்சுவர்ணதான
மவஸ்திரதான முதலான சோடச மகாதானங்கள்
செய்துசிரேஷ்டமான லோகத்திலும்கீர்த்திபிரதிஷ்
டைபெற்று தருமசொரூபனாகி அயோத்தியாபுரி
யைப்பரிபாலனம்பண்ணுகிற ராமமூர்த்தி வருகிறு
ரென்றூதவும் அனேகவீரர் வெற்றிச்சங்குகளூதி
க்கவும்பொற்பிரம்புக்காரர் சேனைகளுக்கு முன்னே
நின்றும் தகத்தாகிய ராமமூர்த்தி பவனி வருகிறார்
விலகிநில்லுங்கோளென்று சந்தடிவிலக்கவும் இ
ரண்டு பக்கத்திலும் ஆயிரப்பேர்கள் கற்பூரதீவட்டி
கள் பிடித்துக்கொண்டு வரிசைவரிசையாய் வரவும்
ஆகாயத்திலிருக்கும் தேவர்கள் பாரிசாதபுட்பங்க
ளை கலகலவென்று வருஷிக்கவும் இப்படிப்பட்ட
வைபவத்துடனே ராமமூர்த்தியானவர் ஸ்ரீராமப்பிர
திஷ்டைசெய்துமறுபடியும்நல்லசுபமுகூர்த்தத்தில்
திரும்பி அயோத்தியாபுரியில் பிரவேசித்து அரண்
மனைக்குவந்து ரதத்தை விட்டிறங்கி சகல ஆடம்ப
ரங்களையும் நிறுத்தி அவர்களையனுப்பிவிட்டு அனு
மார் சாம்புவந்தர் விபீஷணர் சுக்கிரீபன் சந்தனரா
சன் முதலான ராசாக்களுக்கும்வெவ்வேறே விடுதி
கள் மாத்திவைத்து தம்பிமார்களுடனும் கௌசலை
கைகேசிசுமித்திரை முதலானவர்களுடனும் அரண்
மனைக்குப் போனார் மறுநாளுதயத்திற்கு ராமமூர்
த்தியானவர் யெழுந்திருந்து காலோசிதமான கர்மா
னுஷ்டானங்களைமுடித்துக்கொண்டு சர்வாலங்கிரு
தராய்ப் புறப்பட்டு தம்பிமார்கள் குமாரர்கள் மந்
திரிசாமந்திரிகள்பிரதானியர்கள்புடைசூழ்ந்துவரக்
கொலுமண்டபத்திற்குவந்து நவரத்ன சிம்மாசனத்
தின்பேரிலுட்கார்ந்துகொலுவாயிருந்தா ரப்போது
விபீஷணர்முதல் சகல ராசாக்களும்வந்து நமஸ்கரி
த்து அவரவர்களுக்குத்தகுந்த ஆசனத்தி லுட்கார
ந்தார்கள் அப்போதுவிபீஷணர்முதல் சகலராசாக்
களும் சுவாமியை வணங்கிச்சொல்லுகிறார்கள் தங்
கள் அனுக்கிரகத்தினால்பாததெரிசனம்பண்ணினோ
மிதுவரையில் எங்களுடையதேசமெல்லாம் எப்படி
யிருக்கிறதோ ஆதலால் நாங்கள்போய்வருகிறோம்
எங்களுக்குச் செலவு கொடுத்து அனுப்புங்களெ
ன்று கேழ்க்கவே ராமரும் மெய்தானென்று அவ
வர்களுக்குத் தக்கபடி யானைதேர்பரிசேனைதங்கம்
இவைகளெல்லாம் வெகுமதியாகக்கொடுத்து பரத
சத்துருக்கரால் அவர்களுக்கு வழிவிடும்படிச்செ
ய்து பிறகுதம்பிமார்குசலவர் அனுமார்மந்திரி பிர
தானிகளுடனும் இராசநீதிதவறாமல் மாதமும்மாரி
பொழிய நித்தியமங்கல சுபசோபனங்களுடனே தா
ன் தருமங்களைச்செய்து அயோத்தியாபுரிபட்டண
த்தை பரிபாலனஞ் செய்துக்கொண்டிருந்தார் பய
பக்தியுடனே யார்படித்தாலும்எழுதினாலும் காதுகு
ளிரக்கேட்டாலும் அவர்களசெய்த மகா பாதகங்க
ளெல்லாம் நீங்கி இம்மையில் சகலபோகபாக்கியத்
தையுமனுபவித்து மறுமையில்ராமமூர்த்தியின பா
தாரவிந்தமாகிய சாயுச்ய பதவியைப்பெறுவார்கள்.









ஸ்ரீராமஜெயம்.

மகாலிந்தம்.

வெண்பா.

சீர்திருச்சிற்றம்பலயர் செய்துஞ்செப்பாமலவிட்ட
ஓர்திருச்சரித்திரத்தி லோதமிதம்—சார்வாக
வேண்டியெழுதினதை மெய்ந்நூல்வல்லோர்பொறுக்க
வேண்டிமிகவணங்கு வேன்.

கலிவிருத்தம்.

கனைகடலுலகெலாங் கடகடன்றுடன்
தனைபரிவல்லியர் தயன்றநீகுண
இனையநாலாண்ட பசியற்றிச்செலவிழி
மனைகழலிராகவன் மகிழ்ந்திருந்தான்.

விருத்தம்.

வானவர் துயரைப்போக்க வன்மைசேர் யோத்திவ
ந்த, போனமாம்வஸ் துவாயனுவுளார்களார்தமாயன்
தானவாதழைபொழிந்து தனைபெருப்பகவியீப்
து,மானிலத்தேரர்களேத்தவைருந்ததேமேனினே.

வசனம்.

பிரமதேவனே வாலாலே யமதருமராசன் அக்காலத்திலே கன்வடிவுமாறி அயோத்திமாநகரத்தின்மலிலே பால்பிலேகொண்ட நான அரண்மனை வாசலின்முன்னேகருத்த ஒருமுனிவு வடிவுகொண்டுவந்து அங்கேவளர்ந்த காடிகளுடனே அந்தர இடிபோல்முழங்குஞ் சொற்களையுடையவர்களாசையினாலேயிரம்புங்கொண்டுவந்துதக்கையுடனே அங்கேநின்றுசிங்கங்கள்போல் திற்றவாயில் காக்கு மிலேச்சர்களைப் பார்த்து நான் வுள்ளேபோய் முறமபோலும் காதுகளையுடைய சத்துரு சஞ்சயமெனும் பட்டத்து யானைமேல் வரந்த ராமமூர்த்தியைக் காணவேணும்நீங்கள்போய் ஒருதவமுனிவந்து உம்முடைய வாசலிலேயிருக்கிறாரென்று சொல்லுங்களென்று சிதவும்மவனே அப்போது கோபமலலாதபோதும் அக்கினிபோற்கொதிக்குங் கண்களையுடைய வாயில்காப்பவர்களில் ஒருவன் முப்புரி நூலணிந்தமுனிவரே நன்றென்று வணங்கிக்கொண்டுபோய் ராமமூர்த்தியைவணங்கிநின்றுசெய்து சக்கிரவர்த்தி திருமகனை ஸ்வாமி சந்நிதிசேவகத்தைக்கொண்ட ஒருவைதிக முனிவர்வந்து நம்முடைய மணிமதில்சூழ்ந்தகோயிலின்முன்னே கட்டிய கோபுரவாசலில் நின்று உம்மைக்காணுதற்கென்றுஞ்சொல்ல அதுகேட்டு மழைப்பொழிகின்றமலைபோலும்யானைமேல் அலங்கிருதராய்ப்பணிவுந்து உலகையாண்டு ரட்சிக்கின்ற ராமமூர்த்தியானவர் அந்தவாயில்காக்கும்வீரனைப்பார்த்து நான் முனிவர்கள்மேல் நீங்காதபவுகொண்டு உலகத்திலேதகாதசெய்கைசெய்கிற அசுரர்களைவேரறுக்கிறதேயெனக்கு விரதமானபடியினாலே அந்த முனிவர் எந்தகாரணத்தினாலே வந்தாரோதெரியவில்லை யவன் எவ்வளவுதடைசெய்யாமல் அவரை இங்கழைத்து வாருங்களென்று அருளிச்செய்தவுடனே உலகமெல்லாம் ஆள்கின்ற ராமமூர்த்தியைமுனிவேடங்கொண்ட யமதருமராசன் வாசலகடை நீங்கிவந்து ணைவைலசிற்று ஆதலாலே கடல்சூழ்ந்தஉலகத்திலுள்ளவர்களெல்லாம் யமன் தப்பாமல்வந்து உயிர்வாங்குவானென்று பயந்தோல்ல தவங்கள்செய்பவேனும் இன்னும் பாமோதமான ராமஸ்வாமியையுடைக்கொள்ள உலகில் கன்னுக்குத்தோற்றுவைத்த முனிவடிவை ராமர் கண்டு ஐயா முனிவரே நீர் வந்தவகை யில்லை பென்றேயென்று வேறொருவரைப்போலன்னை விழுந்தோம் நீர் என்னிடம் தக்கது ஆலோசிக்கும்போது உம்மை யொப்பானவர்களொருவருமில்லை இதற்கு முன்னமே மெய்ப்பப்ப முறிக்கின்ற கடல்சூழ்ந்த வுலகத்திலேநான்கண்டதேயில்லை ஆகையால் உங்களையெல்லாம்நன்றாய்சிருஷ்டிக்கின்ற உந்திக்கமலத்துள் பிரமதேவன்போலும் பெருமையுடைய நீர்வேண்டிவந்ததைசொல்லுமென்றுராமர்கேட்க அதற்கு நான் தவயோக்கிய பரிசுத்தரான ராமர் விரைந்துபார்த்து அநந்தமகாவிஷ்ணுவினுடைய அம்சத்தினிடத்தில் நான்ஜெயனுஜப பெரியமுனிவன் ஒப் செவ்வைகைதுணர்ந்தினரோ தேனொழுகின்ற மலர்மேற்கடவுளானநான்முகன் எனக்கு விடைகொடுத்தபடியே செய்யவந்தவன் யாதென்று எடுத்துச்சொல்ல தொடங்கினன் சகனுஞ்சக்கிரவர்த்தி திருமகனே நான் சொல்லுவதொன்றுண்டு அதாவதுநாமிருக்கும் இவ்விடத்தேதனியேயிருந்து பேசவேண்டும் அதற்காகவேநான்வந்து இப்படியே தனித்து பேசிக்கொண்டிருக்கும்போது யாராலுஞ்சரியே இங்கேநம்முடையரகசியம் தெரியவருவார்களேயானால் அவர்களைமேல் தாட்சணியஞ்செய்யாமல் அவர்களைக் கொலைசெய்யவேண்டுமென்ன அதுகேட்டு ராமன் இப்படி கேட்டுக்கொண்ட அந்தவைதிகமுனிவரும் சம்மதித்து கூடியிருந்த இளையபெருமாளான லட்சுமணனைப்பார்த்து தம்பிலட்சுமணா உன்னைப்போலேபார் வந்தாலும் உள்ளேவிடாமல் ஜெயபேரிகை முழங்குகின்ற அழகான நம்முடைய கடைவாசலுக்குபோய்காத்துக்கொண்டிருவென்று தம்பிக்கு விடைகொடுத்துவிட்டபின்பு இதழ்கள்விடிய முறுக்குடைத்தேனொழுகின்றசேனையுடைய மலராகியமாலையணிந்த ஸ்ரீரகுவீரன் ஐயமுனிவரே இனிநீர் வும்முடைய மனமகிழ்ச்சியுடனே சொல்லுமென்று கேட்க அப்போரகசியமானபழைய கீர்வாணபாஷையில் வழங்குகின்றஅந்தவைதிகமுனிவர் சொற்களுடனே வசிக்கின்றமாலையணிந்த சக்கிரவர்த்தி திருமகனை நோக்கி மூவகை யுலகங்களுக்கு முடிவுசெய்ய வேண்டினாலும்செய்ய வல்லவனெவ்விய சமர்த்தனான யமதருமன் நானென்று சொல்லத் தொடங்கினன் அப்படியென்றால் முடிவகைச்சொல்வதான கற்பனொன்றும்வாழ்நாளையுடைய நான்முகனை முறைபோலாயிரம்பிரபந்தம்போலப் பழையதான நான்கு வேதங்களையும்பாடுவானாகிய திருமாலுந்திக் கமலத்திலேபிறந்து பிரமதேவராகவந்து அந்தபெழுலகங்களையும்சிருஷ்டித்தவனான அவனாலே சொல்லதாய்முடிவானதை நீ கேட்பாயாக முன்னே என்னோடும்எதிர்த்து தேவர்கள்மனதாலும் வெல்லக்கூடாதவனாகியசிவனை பொருந்துகின்ற கைலாய மலையையுமெடுத்த ஒப்பற்ற பெரியபலமுள்ளவன் இவனுமவாளிமைபொருந்திய சந்திரனும் மேலேசெல்லக்கூடாமல சூரியனுஞ் சந்திரனும் பொதுங்கிச் செல்லத்தக்கவிலங்கைத்தீவிலுள்ளவர்க்கு அரசனானவன்பின்னும்மல்புகழ்தத்தினாலே சிறந்த பெரிய

புஜவலிமையுடைய தேவர்களிலேசிறந்தவர்களான
மூவராலும் தொலையாததான முக்கோடியென்னும்
அளவையையுடைய ஆயுசுள்ளவன் இன்னும்கொன்
றைமாலைவிளங்குகின்ற சிவந்தசடையை யுடையசி
வனிடத்தில்மிகுந்தவலியைக்கண்டுகொண்டவாளா
யுதம்பெற்றவன் நிறமோயிரவைப்போல விளங்கிநி
லைபெற்ற இராவணனென்னும்பெயர் நான்குதிக்கிலும்
சொல்லுதலான இப்படிப்பட்ட ராவணனுடையவு
யிரைக் கொல்வதாகத் திருவவதாரஞ் செய்திரே
னென்றதேவருக்கு வார்த்தைகூறியவேலைக்கொண்
டராமனென்னும் பிரபுவே சூரியனுடைய பெரிய
ரதம்வருகின்றகுலத்திலே பள்ளிகொண்ட சர்ப்பச
யனமும்திருப்பாற் கடலும்விட்டொண வந்து இந்த
திருவயோத்தியிலேபிறந்தாய் அப்படி அவதார மா
னகாரணத்தை முடிவுசெய்தாய் இனிஉன்னுடைய
மெய்யான மேன்மையைக்கொண்ட பரமபதத்துக்
கெழுந்தருளவேண்டும் மென்பதாகஇப்படிசொன்
னதுமன்றிதாமதம் பண்ணமல் நான்சொன்னயிந்த
ப்படியேசெய்யக் கடவாயென்று நிலையாகசொல்லு
மளவில் விளங்குகின்றரத்தினமாலையும் பசியதாக்
குளிர்ந்தபூமாலையுமணிந்து ரகுவீரனுடைய சூரிய
னதேர்வலம்வரத் தக்கசுவர்ண சகிதமானநவரத்தின
மாளிகையினைச் சூழ்ந்த வாயிலின் முன்னேயெரி
கின்றசிவந்த மூன்றுதியும்வளர்த்து வேள்விசெய்கி
ன்றஅத்திரிமகா முனிவருடைய பெரியபுத்திரனை
விளங்குகின்றமுப்புரி நூலணிந்த துருவாசமுனிவ
னின்று ஒருவராலுமவளைக்கக்கூடாதநீண்டவில்லை
க்கையிலேகொண்ட லட்சுமணப் பெருமாளேவே
லாயுதங்கொண்டாரகுவீரனிடத்தில்கருதியுள்ளதா
னஒரு வார்த்தைசொல்ல வேண்டியிருக்கிறது ஆத
லால்புகழ்ந்துமுடியாத சிரேஷ்டத்தைக்கொண்ட
துருவாசமகாமுனிவனவந்து வெளிவாசலில்நிற்
கிறனென்றுசொல்ல வேண்டியதனக்கு கடனெ
னறுநான்கு வேதங்களுணர்ந்த முனிவன்சொல்ல
அந்தவார்த்தை காதிலேவேலைச் சொருகினற்போ
லாகக்கேட்டுவெள்ளி மலர்களாலே பெரியவண்டுக
ளின்மேல்தேனைப் பொழிகின்ற சோலைசூழ்ந்தகம்
சைதிருநாட்டை யுடையவனுடைய திருத்தம்பியா
னவர் பாலைமுழிபவர்க்கார்போல வெண்புரிநூல
ணிந்தபழைமை வைதிகரேசொன்னபடியேஉமக்கு
யாதொருகுறைவுந்தோன்றாமல் வும்முடைய காரி
யத்தைமுடித்து தருவேன் அதைச் சொலலவேணு
மென்று இளையபெருமாள மிகவும்வணங்கிகேட்கவு
ட்னே அந்த முனிவரானதிலே மிகவுங்கோபங்கொ
ண்டுநீஉன் தமையனுக்கு இப்படியாக வெனவருத
லைசொல்லாயேயானல் இப்பொழுது உங்களு
டையபடைமுழுதும்அழியவதாக அப்படிபட்ட ஒரு
சாபத்தைகொடுப்பேனென்றுசொல்ல அப்படிஉ
தாரத்தோடுகூடிய பெரியவேதங்களுக்குந் தலைவ
ரானமுனி சிரேஷ்டர்சொல்லக்கேட் டிளையபெரு
மாள் திடுக்கென்றநெஞ்சை யுடையவராய்வியசனத்
துடனே ஆலோசித்து யிவரிடுஞ் சாபமானது தன்
னுயிர்க்குநேருமேயென்று பெரியவேலைக்கொண்டவ
ராயும்பயந்து நடுநடுங்கி புல்நுனிமேலான பனி
த்துளியும்பொழிகின்ற மேகத்தில்மின்னலும் அந்த
மேகத்தில்பெய்த்தோடுகின்ற நீர்க்குமிழியும் போ
லல்லவோ இந்தநிலையில்லாத உடம்புகளென்றென்
றெண்ணிஇளைய பெருமானும் விரைந்துசென்றுத
ன்குறையாகவேண்டிருக்கிற ராமனைப்போய்கண்டு
சுவாமிமிகுந்த பெருமையை யுடைய அத்திரிமகா
முனிவர்புத்திரனகிய ஞானதார மிக்கவேதமு
னிவனுகிறார் உம்மைக்கண்டு கொள்ளவெனறுபா
தங்களில்வணங்கிச்சொல்ல அதுகருங்கொம்பு நெ
ருப்பைச்சிந்துகின்றகண்களுங் கொண்டருமைக்
கடாவாகனத்தில்நன்றாக மகிழ்ந்தேறுகின்ற கன்
னுக்குத்தோற்றாத யமனைநோக்கிவந்த துருவாச
மகாமுனிவரைஉபசரித்து போகச்செய்து பின்னா
ங்கேவருகிறேனென்று ஒரேவுறுதியான வார்த்தை
சொல்லியனுப்பிவிட்டு தன்னிடத்திலவந்துசொன
னதம்பியுடனேகிலேபான பெரியவேதங்களெல்லாந்
தெரிந்ததுருவாசமகா முனிவர்வந்தபின்பு அவர்
பாதங்களைவணங்கித் தூர்வசமுனிவரேநீரென்னி
டத்திலவந்தது என்னகாரியமென்று கேட்கஅதற்
குதுருவாசமகாமுனிவர்கேளும் ராமனங்கள் குல
த்துமுன்னேர்கள்முறைமையே முடிசூட்டி அரசாளுகி
றஅக்காலந்தொடங்கி ஆயிரவருஷத்திற் கொருதரம்
நானஒருநாள்வந்து உங்களிடத்திலே போசனஞ்
செய்துக் கொள்ளுகிறதாகிய அந்தநாளின்றுஆகை
யால்நான்போசனஞ்செய்ய வேண்டுமென்றுசென்
ஞர் அதுகேட்ட வுடனேஎட்டுத்திக்கிலும் யாகஞ்
செய்வதிலேயேசீர்த்திச்செலுத்தவல்லவனும் அ
முதபொக்கியரான முப்புரிநூலணிந்த மார்பினரா
ய் அரசாகளுக்குத்தகுந்தமனமும் நிழலும்போலவ
ரானசயம் பாகிகளைத் தகுந்தபடியே அழைபுங்க
ளென்று உத்தரவு பண்ணியருளினா

வெற்றிமாலை யணிந்தராமன் அப்போதவராலே
வரப்பட்ட தூதர்கள்கடல்போலும்பெரிதானவேகத
த்டனே ஒருநொடிக்குள்ளேசென்றவிரைவிலோடி
அங்கேவருமபடிகூட்டிவா அமுதுசமைப்பவர்கள
ராமமூர்த்தயைவந்து கண்டவுடனே அமுதாக்
கியவரேங்கள் பெரியவரானயிவர்சமிட்டதல்வந்து
எல்லோரும் வேண்டத்தக்க யுங்கள்கை நற் செய்
யும்சமயல்வேலையைப் பார்த்துமகிழவேணும் இவர்
வந்துகேட்க முல்லைபருப்புபோல்வரான போசனம்
இப்போதே சமையல்ஆக வேணுமென்று வந்த
சயம்பாகிகளில் ஒருவன் பொன்னுகிலும் வெள்ளி
யாகிலுஞ்செய்த பாத்திரங்களை யெல்லாம் விலக்கி
ரத்தின குடங்களிலே நல்ல நீர்கொண்டு வந்து
பொன்பாளைகளெல்லாம் நல்லயந்திரத்தாலேமூட
மற்றபேர்கள் வந்து அவர்களுடைய திருமடப்ப

ள்ளியில்வெந்தவெள்ளைச் சாதங்களைவாரி கொட்டிவிட்டுவாசனைமிருந்த சந்தனத்தினுலுங்குளிர்ந்தஅகிலுமுஞ்சேர்த்துக்கொண்டு வந்தவீரர்களாலே அப்பெரிய மட்டிகொடியநோய் சனில்லாமல் நல்லமுனைமுறியாதபுழுகுசம்பா அரிசிகள் ஆயிரம்படியரிசியை யுலையிலேபெய்து துடுப்பினாலேதுழாவி பதமாகவடித்து வகைவகையாக இறக்கி அறுசுவையோடுகூடிய கறிவகைகளைச் சமைத்து அதற்குப்பின்கனருத்தாளிதஞ் செய்து வைத்து பசுநெய்யைபதமாகக்காய்ச்சி முதிர்நல்லபக்குவமுள்ள முக்கனிகளுடனே நிருமிப்பான குழம்புபாலுங்காய்ச்சிதபடியானவகைகளெல்லாஞ் செய்துவைக்கும்போது வந்திருக்கிறபழைய மொழியானதேசங்களிலவல்லவனுன துருவாச மகாமுனிவரையும் பார்த்து ஐயாமுனிவரே நீர்கேட்டபோசனம் உண்டருளுமென்றவண்டுகள் இன்னிசைராகங்களை யெடுத்துநிறைதருப்பாடுறமாலையணிந்தராமன்செல்லதிருமாளிகையிலே ஆசனமிட்டுஒருபொன்பாத்திரத்தில்நீர்கொண்டு வந்துகொடுக்க அந்தமுனிவர்கைகழுவினபின்பு பலவகைக் கறிகளுடனே நல்லதிருவமுதுபடைத்து நின்றார்கள் அப்போதுதுருவாசமகாமுனிவர் மெய்யானமந்திரவிதிப்படியானநல்லதினத்தில் குற்றமற்ற தீயினல் சுற்றினபின்புகையிலேகொண்டநீரை பாணஞ்செய்து அன்புடனேஐவகைமந்திரத்தினுலே அமுதருந்தி பாலாக்கினிபால்தேன் நிலாவைப்போல விளங்குகின்றமலைக்கொப்பாகக் குவித்தவெண்சோறு இவைகளைவின்னஉலாவித்திரிகின்ற உதாரக்கினிருத்தியாகவிலாபக்கத்தில்வுள்ள பள்ளங்களெல்லாம் நிறம்பவுண்டு அவர்கையிலே கொண்டநீருங்குடித்துவேதத்தினுலேசிறந்தமுனிவர் வுயர்ந்தபெரியரத்தினக்கிரீடமணிந்த பரிசுத்தான அரசர்தங்கள்சிவந்தகையினுலேயே பொன்னுய் கொப்பியிலே கொண்டுவந்தகங்கை சலத்தினுலே சிவந்தகைகள் கழுவிக்கொண்டுநெய்யிலே அறுசுவையும்புறுகி சர்க்கரைப்பாலுஞ்சோறு மானபாயாசமுஞ் சாப்பிட்டுஎட்டுதிக்கிலுமிப்படிப்பட்டசாப்பாடுசெய்து படைப்போர்கிடைக்கமாட்டார்களென்று சமையல் செய்தவரில்சிறந்தவரைக்கொண்டு மகிழும்போது ராமர்இந்தஅமுதுபோக்கியர்களான குலத்தினரேயென்றுஅவர்கள்குலமரபும தமக்குறவானதையுந் தெரியச்சொல்லஅதிமானநிலைக நோக்கிசென்றனர்பின்புருகுந்தனானவர் மகரகேயூரகங்கணங்களணிந்தமைதருமனசொன்ன உறுதிவார்த்தையை யெண்ணிபார்க்கும்போதுதம்மோடுகூடிப்பிரியாதிருக்கிறஇளையபெருமானைப் பிரிகிறதற்கிட மாயிற்றேவெகுதுக்கமாந் துயரத்திலே முழுகினர் அதுகண்டஇளையபெருமான் சுவாமி கரியசெயல் கனலாவுகின்ற நீர்வளம்பொருந்திய கேகயதேசத்தரசன்மகளுக்குன்மதருமராசனவரங்கொடுத்து தன்னுயிரையெமனுக்குக்கொடுத்தநீரெனச்சாதக்கிக்கவேண்டாம் வெற்றிமாலையையணிந்த வேலாயுதங்கொண்டஇராமாவென்று பாதத்திலே விழுந்துசேவித்துசுவாமியெம்மாலே நமதுபிதாவானவர் தம்முடையவாக்கைநிலைசெய்து கொண்டதினாலே அவர்பொய்சொல்லாதவரென்று உலகத்திலேஅக்காலந்தடங்கிநிலை பெருவதாயிற்று அப்படி நம்முடையதாய்மார்கள்வரங்கொடுத்து நிலைசெய்ததினாலேநீயென்னையெமக்குகொடுமென்று நான்கேட்கிறதைகுறித்துதுக்கிக்கவேண்டாம் இக்காலத்தின் எமக்குஅவ்வரம்நிறைவேற விடையுங் கொடுமென்று மிகவும்வேண்டித்தளர்வுகொள்ள அதுகேட்டராமன்கமலங்கண்டுகண்களிலும் அருவிபோல நீரொழுகிறமார்பிலேவழியுமாறுபவிட்டு நீங்காதநமது நிலையானநிழல்போன்றவனுகிய இளையவன் பிரிவுக்கஞ்சிமிகவும்வருந்துதலாம் மிகுந்ததேனொழுகுகின்றதுளசிமாலையணிந்த பராபரானராமன் இதழ்களாலருசெய்த மாலையணிந்த தூதர்களே நம்முடையவளமைபொருந்திய பட்டணத்து சனங்களை வசிஷ்டகுருவுடனேகூட்டி மொழியானதைக்கேட்ட பின்புபெரியபட்டணத்துசனங்களும் வசிஷ்டரும் வந்துஅரசனுகிற தம்மைக்கண்டபின் தாமுந்தம்பியுமானயிருவருங்கூடி இந்தசமயத்தில் அப்படிக்கூடிநிறைந்தபெரியசபையாரையும் பார்த்துஎமதருமராசன்வந்துதம்மிடத்தில் வரங்கேட்டுக்கொண்டதும்அத்திரி புத்திரான துருவாசனேவுதலாலோச்சியமென்று தெரிந்துவர வாசல்காக்கின்றதம்பிடத்தில்வந்ததும் அரக்கரால் விளங்குகின்ற கூறியவேல் வல்லமை கொண்ட ராமன் தெரியச்சொன்னான்.

அதுகேட்டு வதிட்டர் மத்தகத்தையுடையபட்டத்துயானையானது ராமனைப்பார்த்துக் கேளும்ராமாஉமது தகப்பனார்தானே தாவுகின்றகுதிரைகட்டிய தேர்மேல்வருகிறதசரதன் அவரிடத்தில ஒருநாளவந்த அத்திரனுனவன் துருவாசரைப்பாதங்களில் வணங்கித்துதித்து ஐயாஎன்னுடையராசாங்கத்துக்கு தக்கபுத்திரர்களில்லா திருக்கிறேன்அவருந்திக்கேட்டார அதற்குத்துருவாசர் பெரிதானஅஸ்வமேதயாகஞ் செய்தீராகில் அறிவுள்ளநான்குபுத்திரர்களைப் பெருவீர் ஆனல் அந்தப்பிள்ளைகளில் ஒருவரிறந்தால்மாற மூவரும்பிறந்துபோவார்களென்று சொன்னதை நான்கேட்டு மிகவும்வெருண்டு ஆனால்விதியை வெல்லஒருவராலுமுடியாதுஇனிநீர் செவ்விபபசியதான பூண்டுகளும் ஆயுதமானவன் பிடித்தகங்கணச் செய்கைகளுங்கொண்டதம்பிக்காக விசனப்பட வேண்டா மென்றிப்படிச் சொல்லும்போது இளையபெருமான் கேட்

டரோகமநுகுலகுருவான வசிஷ்டர் சொன்னதை
இனியெனக்குவிடையருள வேண்டுமென்று பெண்
வடிவமாக நீண்டகடல் கடந்தவழியேசென்றதாம
ரைமிறமாகச்சிவந்த திருவடிகளில் விழுந்துசேவிக்
ககண்டாராமன் தருமத்தின் கன்றுபோன்ற தம்பி
யாகியவல்லவர்கள் நெஞ்சைப்பிளக்கிறதினலேமல
ர்போலுங் கண்களிலேயுருவி சோரிதியின் முடி
வையாலோசித்து வொன்றம்பேசாமல் நினைவுமூச்
சுமில்லாமல் மௌனமா யிருக்கும்போது இளைய
பெருமாள் அப்படிசெய்த மரப்பாவையைப்போல
யெதிர்வார்த்தைவொன்று பேசாதிருக்கிற ராமனு
டையபாதங்களைவணங்கித்துதித்து அப்பாபேசா
திருக்கிறதேவிடையென றெண்ணிக்கொண்டு அங்
கேயில்லாமல்அந்தப்பட்டணத்தை விட்டுபோகும்
போதுவண்டுகள்நீங்காத காட்டிலும் நமனையில் ம
னேதிடங்கொண்டுபறந்தோடிவந்த இளையபெரு
மாள் உடலைப்பிடுங்குகின்றகாலத்து வுயிர்போவத
னைதமக்குதங்காதயிரிய முனிவரைகைகேசிசொல்லி
காட்டுக்குபோகும்போது இந்தச்சந்தைபை வொ
ப்பானர்இராமாஅப்போது அகண்டவர்களும் சில
ர்இளையபெருமாளும் போகுபோது தன்னைநம்பி
னனான்மறையோருக் கெல்லாம் உபசாரஞ்செய்து
க்கொண்டுபோவதனல் இதையோசித்தால் தேவ
ர்கள்சொன்ன வார்த்தை உலகத்திலே பிசகுமோ
வென்பார்கள்சிலர்மனம் நடுங்குகிறது முடிவுகாலம்
வந்ததென்பார்கள்சிலர் தம்பியைப்பிரிந்து தமயன்
வுயிர்நிற்குமா வென்பார்கள் சிலர்வீரத் தன்மை
பொருந்திய அரசாட்சியைகொண்டு அயோத்திமா
நகரத்தரசர்களுக்கு வரங்கொடுத்துவுயிரை விடுகி
றகுலசுபாவமே யென்பார்கள்சிலர் இந்த அரசர்க
ளுயிரையபன் தானுவதுகொள்ளத்தகுவானே வெ
ன்பார்கள்சிலர்இந்த அயோத்தியாபுரியில்துன்பப்
படாமல்சுகமடைவதுண்டோ வென்பார்கள் சிலர்
லட்சுமணரேபிராணனை விடுவாரானல் நாம் இனிப்
பிராணனேடிருப்போமோ வென்பார்கள் இப்படி
அயோத்தியாபுரிவாசிகள் நைந்துநைந்து கரைந்து
கரைந்துதுக்கித்தவருந்த இளையபெருமாள் அந்த
ப்பட்டணத்து வாயிலைநீக்கி நவமணிகளைக்கொழி
த்துமுத்துகளைப் பொன்னுடனே வாரிக்கொண்டு
எவ்விடத்தும்சலப்பிரவாகமாகி தனக்குச்சரியான
நதியொன்றுமில்லை என்ன உகைக் கொண்டாடும்ப
டியான சரயுநதிக்குவந்துசேர்ந்தார்வந்தபின்புகுற்
றமில்லாதமணிகள்பதித்தமதில்கள்சூழ்ந்த அயோ
த்தியாபுரியில்வாசஞ்செய்கின்ற வெகு சனங்களும்
துன்பத்தினல்வருந்தவும் பெண்கள செந்தீயில் மூ
ழ்கவும்பாசபந்தத்திலகப்படாத பரதமகாராசன்க
ண்ணீரிலமூழ்கவும் இளையபெருமாள் சரயுநதியில்
மூழ்கினர்அப்படி முழுகிவராகவதாரத்தில் அதனு
டையநீண்டகொம்பினலே பொறுக்கப்பட்ட துன்
பத்தைதீர்த்துகடலிலமூழ்ந்தின உலகையாண்டமகா
வீரனுனசூரியகுலத்து இராமருடைய முதிர்ந்தபி
ணிநோய்கள்முதலான பெரியபிறவிக் கடலின் கரை
யேறுதற்கு அந்தப்பெரியநதிக் கரைமேலேறினர்
அப்படியேறினபின் காமக்குரோத லோபமாகமத
மாச்சரியமானபகைகளைவிளைக்கின்ற பஞ்சேந்திரிய
ங்களையும்உளளேயடக்கி வெண்மையானசங்குகள்
மேய்கின்ற பெரியமணற் கரைமேலே குத்துகின்ற
வேலையுடையஇளையபெருமாள்யாகஞ்செய்துகொ
ண்டிருக்கையில் ஆயிரமிதழ்களுடைய செந்தாம
ரையிலுண்டான ஒருசாதிலிங்க நிறமான பவழம்
போலப் பொன்னுபரணங்களையணிந்த தேவேந்திர
ன்பெரிய விலங்கைமுழுதும் அநுமானலே யேவும்
படிசோபித்த இராமனுக் கிளையபெருமாளுக்கு மு
ன்னுளாயத்திலே விளங்குகிற செம்பொன்விமா
னத்தின்மேலேவந்து தனனை யுத்தஞ்செய்துகொ
ன்றபெருமையுள்ள இளையபெருமாளைச் சொல்லுத
ற்கரிதான புகழைக்கொண்ட சரீரத்துடனேமகிழ்
ந்துபொன்மயமானதேர்போலும் விமானத்தின்மே
லேறிக்கொண்டுபோக அப்படி போய்கடல்சூழ்ந்த
பெரிய வுலகத்தாரெல்லாரும் அயோத்தியாபுரிவா
சிகளுடனேபுலம்பியழ வெற்றிவேலைக்கொண்ட இ
ளையபெருமாள உடம்புடனே தேவலோகத்துக்கு
போய்அங்கேயிருந்து திவ்வியதேசத்தை சொண்
டுசித்திய சூரியர்கள் சூழ்ந்துவர வைகுண்டப்போ
ய்ச்சேர்ந்தருளினர்.



ஸ்ரீராமர் லட்சுமணரைப்பார்த்துப் புலம்பல்.

ஏங்கியேதரையில்விழ்ந்திடி யிடித்ததுபோலெண்
ணி, தாங்கியேமனந்தளர்ந்து சதிர்ப்பாதையும்பார்
த்து, பாங்குளதம்பியேநீபட்டணமான் வாய்நாளும்
நீங்கியேபோனேனென்று நிலைதளர்ந்துருகுவாரே.

வசனம்.

அப்பால்நடந்ததை சொல்லுகிறோம் எப்படி
யென்றால்இங்கேஇப்போது தன்னைவிட்டுநீங்காதத
ம்பியையிழந்து மிகவும் வருந்துகின்ற துன்பத்துக்
கிடமாகி இராமன் தனக்குள்ளேயெண்ணி காதுநிக்
கிலும்பார்த்து தம்பியைகாணுமல் மனந்துடித்து
வேர்த்துத் திருமேனியெல்லா மெலிந்து இளைத்து
நெடுங்காலமெல்லா மென்னைக் கைவிடாமல் காத்த

தம்பி இப்போதென்னைக் கைவிட்டு போனுபோலெ ன்று நாமமறைபோலும் கண்களிலே சோகப்புலம்ப நதொடங்கி வெற்றிக்குடை கொண்டே மேகாத ஞை இக்கிரசித்தை ஒரு அம்பினலேகொன்று அரி யாதபாவியான எனக்குஜெய முண்டாகச் செய்த என்னுயிரே திவ்வியபரிமளமாலையணிந்த தசாதச் சக்கரவர்த்திபுத்திரனே புத்தியில்லாதவனுக்கு அனே யான தம்பி இனி நான் வுலகத்திலே பிழைகொள்ளே ன்றில்லைகொள்ளமாட்டேன் ஒருசேனைபொறுத்திருப் பேனோ என்னாசைகளெல்லாம் பகைத்தபடி புருஷவிசி ஷ்ணா முன்னே யவன்வந்து சேராதபடி காத்துப் பகையான இராவணன் விட்டவேல் முனையென்ற அம்புபோல மார்பிலே தாங்கின எனதுமயிலட்சும ணு என்னுயிரே இனிநானென்னசெய்வேனென் றிப் படிப்பலவகையாகநினைத்துப்பிரலாபித்து பொன்னு ஆம் இரத்தினங்களிலும்அலங்கிருதமான மார்பி லேயும்போலேமழை விழுவது போலவும் அருவி யொழுகுவதுபோலவும்கண்ணீர்பெருக இழுத்துபி ரலாபித்தார் அப்படி தன் செவ்விய திருவடிகளையே எல்லாருக்குந் தந்து ரட்சிக்கும் ராமர் அழுதும் போது அவர்திறத்தை கொண்டமல்லர்களும் அழுத தன்பெரியதிக்குபாலகர்களுமழுதனஆகாயமும்பெரி யதிக்கும்வுலகங்களும் அழுதன இப்படி நினைத்து யெண்ணியெண்ணி கரைந்து கையாத பொருள்க ளொன்று மில்லைபின்னையும் ராமர்பென்னுடையஇ விதானவுயிர்போனுல் பொய்யான பென்னுடம்பு நிற்குமோ ஆசையாலேஇனியெனக்கிளையவன்போ னவழியே நானும் போகக்கடவனேயென்று ரத்ன ங்கள்பதித்தராஜமுடியைசூட்டிக் கொள்ளென் றுஎல்லாரும்அதிசயக்க யானைப்பார்க்க அ ப்படிபார்த்தவுடனே பரதன்விரைவிலே தமதுகை களைத்தலைமேலேவைத்துக் கொண்டெதிர் நிற்க அவனைக்கண்டு வாசமிகுந்த மாலையணிந்த ராமரா னவர் தம்பி பரதா இனி உலகைகாத்தால் உனக் கே கடனென்றுசொல்ல அதுகேட்டுப் பரதன் மிக வுந்துக்கி இராமர் பாதத்தின் கீழேசேர்ந்தவன்போ ல்விழுந்து ஐயையோ இந்தராமர் விளங்குகின்றஇ ராசமுடிசூடிகொள்ளென்று எவ்வளவுதான்பல கொள்ளாமற்சொன்ன தகப்பனிடத்திலே பெரு மைகொண்டகேகயராசன் பெறறகைகேசி பெற்று க்கொண்டவாத்திலும் கெட்டதாயிருக்கின்றதென் றுசுவாமிநீர் அரசாட்சிசெய்கிறதென்றுசுவாமிநீ ர் அரசாட்சிசெய்கின்ற வுலகத்தை ஆலோசித்து என்னிடத்தே கொடுக்கிறது தெய்வத் தன்மையை கொண்ட தாங்கள் தருகின்ற இந்த நால்வகை யானவுலகத்தை இந்தவுலகத்திலே திரிகிறபாம்பை த்தாங்கென்று சொல்வதிலுஞ் சிறந்ததே யின்ன ம்மதங்காலப் புல்லரிசி செந்நெல்லுக் கொப்பாகு மோ ஆறும் வுமக்கொப்பாக அரசாளுகிறதுவுள் ளுக்குமிகவுங்குற்றமேபாம் ஆனதால் வும்மைபோ லே ஆளுமைத்தொழிலைக்கொண்டவர்கள் தன்பின் னும்மில்லபாக இந்தவுலகத்தை நடத்தவல்லவர்கள் யாரென்றால் குற்றமில்லாமல உதாரணங்களுடைய குசலவர்களே நீர்உம்முடைய வொளி பொருந்திய பெரிய முடியைச்சூட்டுமென்று சொல்லிபரத மகா ராசன் வணங்கினன்.

குசலவர்களுக்கு முடிசூட்டல்.

சக்கரவர்த்தித் திருமகனர் திருவடிகளேசரணம்.

மகாவிந்தம் முற்றுப்பெற்றது.

விருத்தம்.

தங்கமுறமுந்துய்ய ரத்தின நதாளுஞ் சொல்லறிய மாகதமாணிக்கத்தாலும்
பொலகமுறசதுர்ப்பந்த லமைத்தயின்னேர் புலகமுறவேதினியோ வியப்பாத்
தகைகள்பிர்குசலவர்க்கு மகுடஞ்சூட்டச் செய்திகேட்டரசர்களுஞ் சேரவந்து
தலைகள்தங்கள்காணிக்கை கப்பங்கட்டி சார்ந்திட்டார் மனக்களிப்பு கூர்ந்திட்டாரே.

வசனம்.

அப்போது இராசாதிராசனுன ராமர்மனமகி ழ்ந்து அவ்விடத்தேகொல்லறைசெய்த கொலைவ லைக்கொண்டு நிற்கிற குசலவருக்கு அப்பொழுது தானேமுடிசூட்டுதற்கேற்ற காப்புக்கட்டி உடயாத பெரியானைமேல் ஏறுகின்ற அரசனுக்குடி ப்பிராமணர்கள்சூழ்ந்து பேரிகைகள் முழங்க சதுர்ம ன்முழங்கவாசனைப்பொருந்திய பூவையணிந்த கூந் தலையுடைய பெண்கள் விலக்குகள் தாங்க பெரிய யானைமேலேறாற்றேட்டு தங்ககுடைகளின்வாய்மி தம்பகக்கோசலன் கொண்டுவரச் செய்து உலகாத காரிக்கின ராமர் தம்முடைய பிள்ளைகளுக்கு மகி ழ்வுடனே பட்டாபிஷேகம் பண்ணி செய்வேனுக் களிமேலேசொல்லியபடி ஆராய்ந்து நல்லநாளிலேபொ னனுலாகிய சிங்காதனத்தின் மேலேற்றி பொன்னு டையணிந்த யானைவீரர்களெல்லாந்தங்கள் அழகி யகைகளைதலைமேல் சூடக்குசலருக்கும் பெரியராச முடிசூட்டியருளிய பச்சிலைகளையுடைய பழுத்தகு லைகளைகொண்டவாழைமாங்கள் குற்றமற்றபெண்க ள்நடையிலே நீண்டுவளர்கின்ற அந்தகோசலநாட் டிலேகுசலவதியென்று ஒருகுற்றமற்ற நீண்டமதில் சூழ்ந்தபெரிய ஒருபட்டணம உண்டுபண்ணி தகு தியான நால்வகைச்சேனைகளும் அதற்குத் தகுந்த செல்வமும் வகை வகையாக வைத்துக் கொத்துக ளோடுமலர்ந்தமாலையணிந்த குசலவனென்பவனை அந்தப்பெரியபட்டணத்திலே அரசாளவைத்துவி

ரீடமணிக்கவசசத்காசனுகியஸ்ரீராமர்பின்னுவுத்தி
தாகோசமென்று விளங்குகின்றதிரு நாட்டில்அம்
கவிசித்திரமான கூஷீராப்தியென்கிற வொருசிறந்த
நகரத்தில் வரிசையாக ரத்தினங்கள்பதித்து உயர்
ந்தராஜதானியான மாளிகையொன்றுகட்டி தம்மு
டைய தாங்க சேனைகளுமில்லைபெற்ற செல்வமுமெ
ன்ருகக் கொடுத்து பொன்னைலாகிய கீர்த்தியைக்
கொண்டமதில் சூழ்ந்த அங்கரத்திலே லவனை அர
சாளவைத்துப்பின்பு அன்றபோன நாளையதினம்
லட்சுமணர்போன அந்தப்படிநானும் போய்ச்சேர
வேணும்சத்துருக்கும் நீங்கள்போய் சொல்லுங்க
ளென்றவண்டு ஏ தேனைகுடித்து பாடுகின்றமாலை
யணிந்தஸ்ரீராமனுதனை யனுப்பிவிட்டார் தூதர்க
ள்சத்துருக்க மகாராசனுடைய அதிருங்கழல்களை
வணங்கி அயோத்தியாபுரியிலே விசேஷமுண்டான
தும்பின்புநடந்த சமாச்சாரமும் வினவிச்சொன்னு
ர்களவாயுகதியாகவந்தவர் அப்படி ஒட்டத்துடனே
வந்து சொன்னவர்கள் வார்த்தைவிசேஷங்களையெ
ல்லாஞ் செவிகொடுத்துக் கேட்டு கிழிந்தநெஞ்சுட
னேகண்களும்வெருழுகவுடம்பெல்லாம் நடுங்கிமலை
போன்றதோள் மிகவுமெலிந்து சோரதனக்கொப்
பில்லாத மாலையணிந்த ராமனுடைய பொன்னடிக
ளை இனிவணங்கிவுச்சிக்கப்போகிறேன்நீங்கள் இந்
தப்பட்டணத்தை யாண்டுக்கொண்டு சுகமாயிருங்
களென்றுதன்னுடைய பிள்ளைகளுக்கு ராஜமுடிசூ
ட்டிப்பின்புசங்கிரன் தவழுகின்றமாலையுடையமதி
ற்புறத்திலே விதிப்படிகூஷீராப்தியென்று மிகுதியை
கொண்டபுகிதான ஒருமண்டபத்தையுண்டு பண்
ணிதன்புத்திரர்களை அந்தப்பட்டணத்திலேயிருக்க
ச்செய்துபின்பு பாபகயணிந்த சிற்றடியும் பவளம்
போலும் சிவந்தவாயும் கங்கணங்களணிந்த கைக
ளையுடைய பெண்கள்வருந்தி சோர்வடைய பெரிய
மாடமாளிகையுடையமதுரைமாநகரத்தைபின்னி
ட்டுசொர்ன மதில்கள்சூழ்ந்த அயோத்தியாபுரிக்கு
வந்துராமனுடைய இரண்டுதிருவடிகளையும் வணங்
கியதன்புத்திரர்களுக்கு பொன்முடிசூடினதும்குதி
ரையானைதேர்களாகிய இவைகளைக்கொடுத்தும்வி
ளங்குகின்றபெரியமதில்சூழ்ந்த அந்தப்பட்டணத்
தைகொடுத்துவந்து தெரியச் சொன்னுன் அதெல்
லாங்கேட்டபின்பு அருவிப் போலநீரொழுகுங்கண்
களையுடையதனக் கொப்பில்லாத வெற்றிமாலையை
யணிந்தஇராமர் முந்தினநாளில் தன்னைவிட்டுப்பிரிந்
தபெரியதோள்களையுடைய இளையபெருமாள்போன
நல்லவழிபேசெல்ல ஆலோசிக்கும்போது சந்திர
னைபோலாக வெள்ளைபான முத்துக்குடை ஆகா
யத்தின்மேலே அழகுகாட்ட கட்டுகுலையமுறிக்கப்
பட்டபதர்ச்சுவட்டைக் கொண்ட வெவ்விதமான
வகைகள் முன்னின்றயானைமேலே விபீஷணென்னு
ம்பெருஞானியானவன் பின்பு யெல்லோரும் அஞ்
சத்தக்க இராமனுடைய பெரிதானபத்துமகுட
ங்களிலும்விளங்குகின்ற ரத்தினங்களையும் பரித்து
கொண்டுவந்தகமையனைப்போல் சஞ்சரிக்கின்ற ஏ
ழுகுதிரை கட்டியதேரின்மேலே எட்டுதிக்கும்விள
ங்குகின்றசூரிய குமாரனென்றுஞ் சுக்ரீவனும்வந்து
சேர்ந்தான் அவனுடனேமகிழ்ந்து உதயமாகின்ற
சூரியபகவானைஒருபழுத்த சிவந்தகனியென்று மு
றையுடையவனை கோபித்துவந்து உலகமெல்லா
முழுகமோதுகின்ற பெரியவாயுபுத்திரனும் வந்து
கூடினுன் அனேகமலைகளைப் பலங்கொண்டுபோகப்
போகஒருகையாலேவாங்கிஅவ்வானவர்மேலேசேர்த்
சித்துபோடுகின்றகடலையணைகட்டினநளனும்வந்து
சேர்ந்தான்பின்புகுரங்குடனேயுத்தஞ்செய்யஇந்
தாவென்றென்னை கொண்டனனும் திரங்க
ளால் யுத்தம்பண்ணி வருகிற ராட்சதசேனைகளை
கைகளாலும் மாலைகளாலும் மலைகளாலும் பிரகாசி
யாநின்றவெண்மையான பாவைகளாகப் பிறந்தவ
ர்களும்மற்ற அரசர்களும்வந்து கூடினர் ஆகையா
லேமுன்னேபோன இளையபெருமாளுடனே கூடப்
பெருமைபொருந்திய மலர்போலும் பாதத்தைவ
ணங்கினபேர்களுக்கெல்லாந் தேனபொருந்தியமா
லையணிந்த யிராமர்தெரியச் சொல்லி முன்னேவிபீ
ஷணனைப்பார்த்து மின்னுகின்ற வேலைக்கொண்ட
நீண்டகைகளையுடையவிபீஷணனே உன்னுடையபொ
ன்மயமான இலங்கைக்குப்போய் உலகத்திலுள்ள சீ
வகோடிகளுள்ளளவும் வாழ்ந்திருக்ககடவைபோ
லென்றன்புடனேவிடைகொடுத்தனுப்பிவிட்டுசுக்ரீ
பனைப்பார்க்க அதுதெரிந்து சூரியகுமாரனுனசுக்ரீ
பன்தனக்கும் விடைகொடுத்தனுப்புவர் சேனரு
பயர்துசுவாமி ராகவானன் அங்கதனுக்குமகுடஞ்
சூட்டி அங்கேவைத்துச் சிலருடனே இங்கேகூட
வருகிறதற்காக வந்தேன்என்று வணங்கினுன் அப்
படிவணங்கி வேலைக்கையிலே கொண்டராமர் பின்
னேசூரியகுமாரன் சுக்ரீவன்வருவது தெரிந்து ராம
ரானவ ஓசுக்ரீபாநிறைந்த குணத்துடையவர்களா
னல் திரிலோகத்திலேயுள்ளவர்கள் யாரானாலும்
ஒருவா செய்தநன்றியை மாக்கமாட்டு வார்களோ
வென்று வாயு புத்திரனுன அனுமாரைமிகவும்
மகிமையுடனே பார்த்து முன்னேநான் சொன்ன
தெல்லாம் கேட்டாயல்லவோ இனிவுலகத்திலேவா
ழ்ந்திருப்பது உன்கருத்துடனே கூடினதாதலால்
பொன்மலை போலுயர்ந்த தோள்களையுடைய அனு
மாரேசுகமாயிருக்க கடவீரென்றுசொல்லி கொண்
டேபோக அதுகண்ட சூரியகுமாரனுன சுக்ரீபன்
சாம்புவந்தர் வணக்கத்தையுடைய குமுதன அரக்
கரைக்கொலைசெய்த சுமித்தன் மகாவிவேகியர் இந்த
ரணரங்கன் நீலன்மற்றமுள்ள வானரவீரரன்றிரவி
ருலேவிலகி இல்லாதவர்களால்அவர்களுடனே தோ
ரணங்கட்டியும் பெரிய அயோத்திபா புரியிலுள்ள
வர்கள் அழகுமிக்க பெண்களுந் தேவர்களுமவேத
ங்கள தங்கள்நான்கு முணர்ந்த பிராமணர்களும்
ஒரே மனதான அன்பிலேலே பிரியமாட்டாதவர்க

வாய்ராமருடைய திவ்யமானதிருவடி களிலேகொண்டபத்திலே அந்தபழையதான பட்டணமெல்லாம்பாழாகவிளைந்து சூழ்ந்தவர அவர்கள் கோட்டைவாசலைவிட்டுக்கடந்து போனார்கள் அப்படியாகும்போது இராமனிடத்தே கொண்டபத்தியினுலேவைர்ந்தக்காதையாய் வெறுத்தவர்களால்சொலதுதலாலே அவர்கள் பிறந்த நாள் முதலுள்ள அயோத்தியானது முத்தமிழிலுள்ளவருள் அகத்திய முனிவர்கொண்ட கையாலேமொண்டு குடித்தமுன்னுளிலேவற்றிய காணமிருந்த மணலையுடையகடலைப்போலிருந்தது பின்பு இராமர்க்கையுடன் கூடி பெருகிவருகிற நதியிலேபோய்த் தீர்த்தமாடுகிறவிடத்திலேநீராடி வெளியே கரையிலேறினவுடனேபூவிலிருக்கின்ற நான்முகக்கடவுள் மகாவேகத்தில்விருந்து அநேகபிரசாதத்தையுடைய விமானங்களுடனே அழகியதான ஆகாசமுகட்டிலே வந்துதோன்றிய அய்யனே மெய்யனே துய்யனே விளங்குமவின்றுவோர்கையனே இனி உமமுடையதிவ்யதேகத்துடன்வந்தருளவேண்டுமென்று வணங்கிசொல்லுதுகேட்டு ராமரானவர் முன்னே தன்னைசாருகதிபண்ணுந்தேவர்கள் துன்பத்தை நோக்குதற்காகவைகத்திலேலீலையாகப் பிறந்தவாயை அங்கேதனக்குநேரில்லாத அந்தசாயுநதியிலே கழித்து விட்டு தம்முடைய தம்பிமாருடனே பரிசுத்தமானசாயுநதியைவிட்டுப்பின்பு ஒருதன்மையாய் சேரும்போது சம்மர்தாதிகளை வென்றவேலாயுதத்தைக்கொண்டசாமகம ராசனுலேகாவல் செய்யப்பட்ட பிரதானசேவகர்கள் அப்பியாசிக்கின்ற நான்குவேதவளுந்தங்களுடைய நாலுருவும் ஒரு வடிவுகோண்டதுபோலாகபின்பு செழுமையையுடைய முத்துவிளைப்பழிக்கபபட்டசாயுநதிதீர்த்தத்திலேசகலரும் குளிச்சியாக கொண்டவர்களாய் முழுகிக் கூடி நெருங்கிபின்பு பிரியமாட்டாத விசனத்துடன் வந்தவானரவீரர்களெல்லாம் பழபதங்கள்தெய்வலோகத்தைக்கண்டு கிற்காமர் கண்டுநிற்கதம்மை வணங்கொன்கு முகக்கடவுளைபார்த்து மேகங்கள்மோதுகின்ற கொடிகள்கட்டின அயோத்திமா நகரத்திலேகூட்டங்கள்கொண்டுவாசஞ்செய்தவர்களெல்லாரும் அன்புடனே வாழ்ந்திருக்கதக்க வீடுகளைமைக்கவேண்டுமென்னநீலமேகநிறங்கொண்டுவிளங்காநின்றதிவ்ய சரீரத்தைகொண்ட சக்கிரவர்த்தி திருமகன அருளிச்செய்வதைக் கேட்டுவீணைநாதத்தைசெய்யும் வண்டுகள்மொய்த்த செந்தாமரைமலரின்மேலேரி நான்பிரமதேவன் எலலாத தருமங்களும்விளங்குகின்ற கிருபைக்கடலானவர் அருளிச்செய்தபடியே அயோத்தியாபுரி யாசிகளுக்கெல்லாம்விளங்காநின்றசந்தானமென்னும்வொருபெரிய பட்டணத்தை யுண்டுபண்ணிநான் அப்படியேஅமலனைகடவுள் அங்கே அவர்களிருக்கப்பட்டபட்டணம் வுண்டுபண்ணிபினபு அயோத்தியாபுரியிலுன்ளவர்களெல்லாம் நவமணி போல்நிறங் கொண்டு தெளிந்த நீரையுடையசாயுவென்கிற நதியிலேமூழ்கிதேவவடிவுகொண்டு கணக்கில்லாமல் வந்துலாவுகின்றசெம் பொன்னுகவி மானத்தின் மேலேறிக்கொண்டு போய்விசாலமாக விளங்கின்ற சந்தனைமென்னும் பட்டணத்திலே கிலேகொண்டு வந்தார்கள் பின்புதிருவாழியைக்கையிலேகொண்டசுவாமியானவர் அதிக மகிழ்ச்சியுடனே பூவின்மேற்கடவுளோநாம் பிரமதேவன் வேதங்களை கொண்டுவாழ்த்தமுகடா மாணிக்கமாலை மேற்கொண்ட இந்திரன் துதிசெய்து வாழ்த்தினவுடனே சிவகணங்களெல்லாம்போற்ற தேவர்கள்வாழி சோபனங்கள் சொல்ல ராமர் வைகுந்த பதவியடைந்தார்.

அறுசீர்க்கழிநெடிலாசிரிய விருத்தம்.

கல்மறைமுனிவர்வாழ்த்தக் கரிகைபாகங்கதிமிலெபெறமன்னர்செங்கோ, நீணிலந்தன்னில்வாழ்க
அலைகடலிலங்கைமுதாரக்கர்வேறருகதவை வெச்சிலை நல்வலலநாதச்செந்தமிழ்வாழ்வென்றே

இனிபவர்காதைமுற்று எழுதினோர்வியர்தோர்கற்றோர்
அனைபதன்னைச்செல்வோர்க் கரும்பொருள்கொடுத்துகேட்போர்
வனபநற்புவியின் மீதோ காவலர்புகழ்சூழ்ந்து
வினையபு மறந்தவேலை விண்ணவபதத்தச்சேர்வார்.

மகாவிர்தம்-முற்றுப்பெற்றது